562

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.

16 AUG 1920



திருச்சினாப்பள்ளி

திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 10. | ஜூலை 1920. | மலர் 1.

## பத்திராதிபர் குறிப்புகள்.

பத்தாவது கொத்துத்தோன்றி முதல் மலர் அரும்பு விடுகிறது; ஆனால் இதழ்கள் விரியாமல் முன்போலவே சுருங்கிக் கிடக்கிறது. இன்னும் இப்படியே சுருங்கிக்

கிடக்கும்போ[illegible]மோ அறிகிலோம். அல்லது கொஞ்சங்கொஞ்சமாய் [illegible]வதங்கி மலர்களை பிறப்பிக்கத் தக்க சக்தி பூ[illegible]த்துக்கு இல்லாதுபோகுமோ, என்னமோ?

16128

* * *

சென்ற வருடத்தில் வசூலான சந்தாத்தொகை, நன்கொடை, பழைய பிரதிகள் விற்றதில் வந்த வரும்படி முதலிய மொத்த வருமானம் ரூ. 215–3–6. ஆனால் அச்சுக்கூலியும், காகிதவிலையும் ரூ. 201–2–0. தபாற் செலவு ரூ. 52–6–3; ஆக மொத்தச் செலவு ரூ. 253-8-3 வரவைவிட செலவு மேலிட்டதனால் இந்த வருஷத் துவக்கத்தில் பத்திரிகைக்குள்ள கடன் ரூ. 38–4–9. இந்தக் கடனையும் உத்தரித்து இன்னும் வேண்டிய செலவையும் கையேற்றுக்கொள்ளும்படி சந்தாதார் முன்வருவார்களா?

* * *

நமது பத்திரிகையின் நோக்கம் உபாத்திமாரின் வேலையைக் குறைப்பதன்று; அந்த வேலையின் மேன்மையையுணர்த்தி, உபாத்திமாரின் அறிவை வளர்த்து, அவர்களிடத்தில் உற்சாகத்தை எழுப்புவதேயாம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் சந்தாதாரின் உதவி அவசியம். சந்தாதாரின் பக்கம் பெருகினால் சந்தாதாரின் தொகையும் பெருகுமென்று நம்புகிறோம். ஏன்?

* * *

பத்திரிகையின் பயனைப்பெறும் பழைய மாணவர் ஏனையோருக்கும் அதை எடுத்துக் காட்டி நன்மைபுரியுமாறு பிரார்த்திக்கின்றோம்.

நமது மாகாணத்தில் கீழ்தரப்பாடசாலைகள் அதிகரித்து அவைகளில் வந்து படிக்கக்கூடிய சகல சிறுவர்களும் வரும்படி கட்டாயப்படுத்துவதற்காக ஓர் சட்டம் சட்ட நிரூபண சபையாரால் கவனிக்கப்பட்டு வருகிறது.



அந்தச் சட்டம் சீக்கிரத்தில் அமலுக்கு வருமென்று நம்பலாம். ஆனால் அப்பாடசாலைகளில் அச்சிறுவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியரின் உற்சாகமும் அதிகரிக்காவிட்டால் என்ன பயன்? இந்த உற்சாகத்தை அதிகரிப்பதற்காகத்தான் நமது பத்திரிகை முயலுகிறது. இந்த முயற்சியானது சித்திபெறும்படி சந்தாதாரும் நம்மோடு ஒன்றித்து முயலுவார்களாக!

* * *

மேற்கூறிய சட்டத்தை சென்னை பப்ளிஸிடி பீரோ பிரசுரித்தபடி இங்கு பிரசுரிக்கிறோம்.

16 AUG 1920

---

## சென்னை எலிமெண்டரி எடுகேஷன் பில்.

**எழுதப்படிக்க கற்றுக்கொடுப்பதற்காக அநேக பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்த வேண்டியதைப்பற்றிய ஒரு சட்டம்.**

இவ்விராஜதானியிலுள்ள பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்பிக்கும் விஷயங்களில், சில விசேஷமான ஏற்பாடுகள் செய்யவேண்டியதைப்பற்றிய ஒரு சட்டத்தை (பில்) சட்ட நிரூபண சபையாருடைய ஆலோசனைக்காக ஸர்க்காரார் இப்பொழுது கொண்டுவந்திருக்கிறார்கள்.

இவ்விராஜதானியிலுள்ள ஆண்மக்களில் (புருஷர்களில்) 100-க்கு 20-பேருக்கும், பெண் பிள்ளைகளில் 100-க்கு 2-பேருக்குந்தான் எழுதப் படிக்கத் தெரியுமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எல்லா பிள்ளைகளும் பெண்களும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளத்தக்க ஏற்பாடுகள் நாம், கூடிய சீக்கிரம் செய்யவேண்டுமென்று, அநேக வருஷங்களாக, ஜனங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வேற்பாடுகள் செய்யவேண்டிய விஷயத்தில் ஸர்க்காரார்க்கும் அதிக விருப்பமுண்டு. ஆனால் இது சீக்கிரத்திலேயே நிறைவேற்ற முடியாத

காரியம் என்று ஸர்க்காரார் சொல்லுகிறார்கள். அநேக கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லை, தூரத்திலுள்ள இதர கிராமத்து பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகள் போக முடியாது. ஒரே காலத்தில் எல்லாக கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதென்பது முடியாத காரியம். அதற்குத் தக்க உபாத்தியாயர்கள் கிடையாது. பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காகவும் உபாத்தியாயர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காகவும், ஸர்க்கார் வருமானத்திலிருந்து செலவுசெய்ய போதுமான பணம் இல்லை. அதினால்தான் ஒரே காலத்தில், எல்லாப் பிள்ளைகளுக்கும் படிப்புக்காக தகுந்த ஏற்பாடுகள் செய்வதென்பது முடியாத காரியமாயிருக்கிறது. ஆனாலும், எவ்வளவு முடியுமோ அவ்வளவும் ஸர்க்காரார் செய்யத் தயாராயிருக்கிறார்கள். எவ்வளவு சீக்கிரமாக, பள்ளிக்கூடங்களை அதிகரிக்கச் செய்யக்கூடுமோ, எவ்வளவு சீக்கிரமாக உபாத்தியாயர்களை அதிகமாக தேர்ச்சியடையச் செய்யக்கூடுமோ அதாவது கல்வி கற்பிக்கப் பழக்கக்கூடுமோ, வருஷா வருஷம் எவ்வளவு பணம் கல்விக்காக அதிகமாக செலவுக்கு உதவக்கூடுமோ, அவ்வளவும் ஸர்க்காரார செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

அம்மாதிரியே ஸர்க்காரார் அநேக வருஷங்களாக செய்துகொண்டு வருகிறார்கள். இந்த விஷயம் கீழே காட்டியுள்ள எண்களினால் நன்றாய் விளங்கும்.

| வருஷம். | இவ்விராஜதானியிலுள்ள எலிமென்டரி பள்ளிக்கூடங்களின் எண். | பழக்கப்பட்ட உபாத்தியாயர்களின் எண். | பள்ளிக்கூடம் போகும் | |
|---|---|---|---|---|
| | | | பிள்ளைகளின் எண். | பெண்களின் எண். |
| 1900 ... | 21,000 ... | 7,100 ... | 598,700 | 39,200 |
| 1910 ... | 24,300 ... | 14,400 ... | 858,300 | 176,300 |
| 1919 ... | 32,000 ... | 22,100 .. | 1,257,800 | 322,300 |



தற்காலம் பள்ளிக்கூடங்களுக்குப்போகும் பிள்ளைகளின் எண்ணும் ஷை பள்ளிக்கூடங்களில் கல்விகற்பிக்கும் உபாத்தியாயர்களெண்ணும், ஷை பள்ளிக்கூடங்களுக்காக செலவு செய்யும் பணத்தொகையும், 20 வருஷங்களுக்குமுன் இருந்ததைக்காட்டிலும் இப்பொழுது அதிகமாயிருக்கிறதென்பது மேலே காட்டியுள்ள எண்களினால் நன்றாய் விளங்கும். அப்படியிருந்தும் இப்பொழுது, 5 வயதிலிருந்து, 10 வயது வரையிலுமுள்ள பிள்ளைகளில், 6 பேருக்கு, 1 பிள்ளையாகத்தான் பள்ளிக்கூடம் போகின்றன. ஆகையினால்தான், அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டுமென்றும், அநேகரை உபாத்தியாயர்களாக தேர்ச்சியடையச் செய்யவேண்டுமென்றும், ஷை விஷயங்களில் பணம், இன்னும் அதிகமாகச் செலவு செய்யவேண்டுமென்றும், ஸர்க்காரார், தீர்மானித்து, இந்த புதிய சட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள். புதிய சட்டத்தின் நோக்கமும் அதினால் நிறைவேறக்கூடிய முக்கிய விஷயங்களும் கீழே விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது :—

## 1. பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய பணத்திற்கு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டியது.

கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, குறைந்த சம்பளத்திலிருக்கும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை அதிகரிக்கச் செய்வது முதலிய அநேக விஷயங்களில் ஸர்க்காரார் தங்களுடைய வருமானத்திலிருந்து செலவு செய்யவேண்டுமென்று அநேகர் ஸர்க்காரரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இம்மாதிரி விஷயங்களில், ஸர்க்காரார் பணத்தை அதிகமாக செலவு செய்துவிட்டால் பிள்ளைகளுக்கு கல்விகற்பிப்பதற்காகச் செலவு செய்ய, போதுமான பணம் இராது என்ற ஒரு எண்ணம் தோன்றியது. ஆகையினால்தான், ஷை பள்ளிக்கூடங்களுடைய செலவுக்கு போதுமான பணம் கொடுத்தல், ஒரு சட்டத்தையுண்டுபண்ண ஸர்க்காரார் ஆவலாயிருப்பது. இப்புதிய சட்டத்தில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன :—

பள்ளிக்கூடங்களின் செலவுக்காக, முனிஸிபாலிடியாரும், தாலூக் போர்டார்களும், ஸர்க்கார் அனுமதியின் பேரில், ஒரு வரி போட்டு வசூல் செய்யலாம் (சுங்கம் விதிக்கலாம்.) அந்த வரி, முனிஸிபாலிடிகளில் போடும் சொத்து வரி, அல்லது கம்பெனி வரி, அல்லது உத்தியோக வரி இவைகளுக்கு நாலில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது. இதர கிராமங்களில் ஷை வரி, நிலத்தீர்வையில் அல்லது, நிலக்குத்தகை மதிப்பில் 16-ல் ஒரு பங்குக்கு (வீசம் பங்குக்கு) அதிகமாயிருக்கக்கூடாது. ஷை வரியை மேலே குறிப்பிட்டபடி வசூல் செய்வதா, அல்லது குறைந்த ரேட்டாக வசூல் செய்வதா என்பதைப்பற்றி, முனிஸிபாலிடியாரும் தாலூக் போர்டாரும் தீர்மானம் செய்யவேண்டும். இம்மாதிரி, வரி வசூல் செய்யுமிடங்களிலெல்லாம் ஷை முனிஸிபாலிடியார்களுக்கும் தாலூக் போர்டார்களுக்கும், அவர்கள் வசூல் செய்யும் தொகைக்கு சரியான ஒரு தொகையை ஸர்க்காரார் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஸர்க்காரார் அவ்வரியின் தொகையைக் காட்டிலும் அதிகமாகக் கூடக் கொடுக்கலாம். இம்மாதிரி கொடுக்கப்போகும் பணத்தின் கணக்கில் இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் பணத்தின் தொகையைச் சேர்க்கமாட்டார்கள். அது வேறு. இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் பணத் தொகையை நிறுத்திவிடாமல், அதையும் தனியாகக் கொடுத்துக்கொண்டே வருவார்கள். உதாரணமாக இம்மாதிரி பள்ளிக்கூடங்களுக்காக ஒரு தாலூக் போர்ட் வரிபோடுகிறார்கள், என்பதை கவனிப்போம். இவ்விஷயத்தில் ஸர்க்காரார் எவ்வளவு கொடுப்பார்கள். (2) அதோடு, தாலூக் போர்டாரால் வசூல் செய்யப்படும் தொகைக்கு சரியான, அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு தொகையையும் கொடுப்பார்கள். தாலூக் போர்ட், ஷை வரியில் 20,000 ரூபாய் வசூல் செய்தால், அப்பொழுது ஸர்க்காரார் முன் கொடுத்துக்கொண்டு வருவதைத் தவிர்த்து தனியாக வேறு 20,000 ரூபாய் கொடுப்பார்கள். ஆகையினால், இப்பொழுது கிடைப்பதைக்



காட்டிலும் 40,000 ரூபாய், அதிகமாக ஷை பள்ளிக்கூடங்களின் பொருட்டு செலவு செய்ய தாலூக் போர்டார்களுக்கு இனிமேல் கிடைக்கும்.

## 2. பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி அவர்களின் பெற்றோர்களைப் பலவந்தம் செய்யவேண்டும்.

பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய பணத்தின் ஏற்பாடு செய்தபிற்பாடு இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டியது. பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி அவர்களின் பெற்றோர்களை, ஸர்க்காரார் பலவந்தம் செய்யவேண்டுமென்று அநேகர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளின் கணக்குக்கேற்றபடி வேண்டிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்திய பிறகு, முனிஸிபாலிடியார் அல்லது தாலூக் போர்டார்கள், அப்பள்ளிக்கூடங்களுக்கு சுற்றுப் பக்கங்களில் 2 மைலுக்குள் உள்ள பிள்ளைகளையெல்லாம் அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி கட்டாயம் செய்யலாம். அவ்வுத்திரவு, ஆண்பிள்ளைகளைமட்டும் குறிக்கலாம், அல்லது ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகளாகிய இருவர்களையும் குறிக்கலாம். பெற்றோர்கள் அவர்களுடைய பிள்ளைகளை, பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்களா என்பதைப்பற்றி கவனிக்க, முனிஸிபாலிடியார், அல்லது தாலூக் போர்டார்கள், ஒரு கமிட்டி (ஆலோசனை சபை) ஒன்றை ஏற்படுத்தலாம். அக்கமிட்டியார், பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகளையனுப்பாத பெற்றோர்களைப்பற்றி மாஜிஸ்ட்ரேட்டார்களிடம் ரிப்போர்ட்டு செய்யலாம; அப்பொழுதுகூட பிள்ளைகளையனுப்பாதிருந்தால் அப்பெற்றோர்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டார் அபராதம் விதிக்கக்கூடும். ஆனால், கிறீஸ்துவமத விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கும பள்ளிக்கூடங்களுக்கு இந்துமதப் பிள்ளைகளையாவது, இந்துமத விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களுக்கு துலுக்க (முகமதிய) பிள்ளைகளையாவது, போகும்படி கட்டாயம் செய்யக்கூடாது.

## 3. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கல்வி சபை.

கடைசியாக, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கல்வி சபை புதிய சட்டத்தினால் ஏற்படுத்தப்படும். முதலில், ஜில்லா கலெக்டர் அச்சபைக்கு தலைவராயிருப்பார் (பிரிஸிடெண்டாயிருப்பார்). ஆனால் அச்சபையில், எவரையாவது அம்மாதிரி தலைவராக ஸர்க்காரார் நியமிக்கலாம்; அல்லது அவர்களுள் ஒருவரை தலைவராக தெரிந்தெடுக்க, ஸர்க்காரார் அச்சபையார்களுக்கே உத்திரவு கொடுக்கலாம். பள்ளிக்கூடங்களை பரீக்ஷிக்கிற பெரிய இன்ஸ்பெக்டரும், அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டரும் அச்சபைக்கு மெம்பர்களாயிருப்பார்கள். ஜில்லா போர்டார்கள் அச்சபைக்கு இரண்டு மெம்பர்களை அனுப்பலாம். ஒவ்வொரு தாலூக் போர்டும் முனிஸிபாலிடியும் ஒவ்வொன்று அல்லது அதற்கு மேற்பட்ட மெம்பர்களை அச்சபைக்கு தெரிந்தெடுத்தனுப்பலாம். அதோடு, ஸர்க்காரார் அச்சபைக்கு குறிப்பிட்ட சிலரை மெம்பர்களாக நியமிக்கலாம். பிரத்தியேகமாக சிறு அதாவது எலிமென்டரி பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டிருக்கும் கூட்டத்தார்களுக்கு ஸர்க்காரார் ஷை சபைக்கு சில பிரதிநிதிகளை அனுப்ப சுதந்திரம் கொடுக்கலாம்.

இச்சபையார் கல்வி இலாகாவாருடனும் முனிஸிபாலிடியாருடனும் தாலூக் போர்டாருடனும் கலந்து யோசனை செய்து, இப்பொழுது இருக்கிற பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்தம் செய்யவும், வேறு புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். அவர்கள், லாயக்கானவர்கள் அநேகரை உபாத்தியாயர்களாக பழக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்களால் பார்க்கப்பட்டு வந்த வேலைகளில் சிலவற்றையும் இச்சபையார் கவனிப்பார்கள். ஸர்க்காராரிடமிருந்து பண உதவி பெறவேண்டிய பள்ளிக்கூடங்கள் இன்னவை என்பதை இவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். ஸர்க்காரிடமிருந்து ஷை பள்ளிக்கூடங்களுக்கு கொடுக்கவேண்டிய "கிரான்ட்" (grant)



பணத்தை இவர்கள் வாங்கிக்கொள்வார்கள். பள்ளிக்கூடங்களை பார்வையிட்டு அவற்றின் நிலைமையைப்பற்றி கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் இச்சபையார்க்கு தெரிவிப்பார்கள். அவற்றையெல்லாம் கவனித்தபிறகு, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் எவ்வளவு பணம் உதவியாகக் கொடுக்கவேண்டுமென்பதை இவர்கள் தீர்மானிப்பார்கள்.

பொதுவாக இந்த புதிய சட்டத்தின் குணமென்னவென்றால், பின்வருமாறு :—

புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதினாலும் ஏற்கனவே இருக்கிற பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்தம் செய்வதினாலும், செலவு அதிகமாகும். அதற்கேற்ற வருமானம் வேண்டும் ஷை காரியங்களை நடத்த தாலூக் போர்டாரும் முனிஸிபாலிடியாரும் இஷ்டப்பட்டால், அவர்களுக்கு இதற்காக ஒரு தனி வரிப்போட சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரிப்போட்டால் ஸர்க்காராரும், அவ்வரிக்கு சமமான ஒரு பணத் தொகையை கொடுத்துதவுவதோடு இத்தனை நாட்களாக கொடுத்துக் கொண்டுவரும் பணத்தையும் கொடுத்துக்கொண்டு வருவார்கள். ஸர்க்காரார், மேலே குறித்ததைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்தாலும் கொடுக்கலாம். தாலூக் போர்டார் அல்லது முனிஸிபாலிடியார் அம்மாதிரி வரிபோட்டு அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினால் அவர்கள், அவ்விடங்களிலுள்ள பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு உத்திரவிடலாம்.

பிறகு, முனிஸிபாலிடியார், தாலூக் போர்டார், ஜில்லா போர்டார், முதலிய கூட்டத்தார்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாலாகிய, ஜில்லா கல்விச்சபை, என்ற சபைகள் ஏற்படுத்தப்படும். இப்பொழுது கல்வி இலாகாவார்களால் கவனிக்கப்பட்டுவரும் விஷயங்களில் அநேகம் இச்சபையார்களால் கவனிக்கப்படும். எந்தெந்தப் பள்ளிக்கூடங்களுக்கு ஸர்க்கார் ஒத்தாசை அல்லது

உதவி செய்யவேண்டுமென்பதையும் அதை எவ்விதமாக (எவ்வளவு பண உதவி) செய்யவேண்டுமென்பதையும், தீர்மானித்து அதிகாரம் செலுத்தவேண்டிய சுதந்திரம் இச்சபையாருக்கு உண்டு. உபாத்தியாயர்களாக அநேகர்களை பழக்குவதற்கும், புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும், ஏற்கனவே இருக்கிற பள்ளிக்கூடங்களை சீர்திருத்தம் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை இச்சபையார்கள்தான் செய்யவேண்டும்.

இந்த புதிய சட்டம் இப்பொழுது சட்ட நிருபண சபையாரினால் கவனிக்கப்பட்டுவருகிறது.

---

## வினாக் கணக்குகள்.

கணித சாஸ்திரம் பயிலும் சிறுவர்கள் செய்யும் அப்பியாசங்களை விதிக்கணக்குகளென்றும் வினாக்கணக்குகளென்றும் பிரிக்கலாம். விதிக்கணக்குகள் என்றால் வெறும் எண்களைக் கூட்டுவது, பெருக்குவது, உத்தம பொது அளவு கண்டுபிடிப்பது முதலிய வித்தைகள். வினாக் கணக்குகளென்றாலோ பொருள்களின் சம்மந்தமாய் உலக ஜீவியத்தில் நாம் அறியவேண்டிய எண்ணிக்கை, விலை, பரிமாணம் முதலியவற்றைக் கண்டுபிடிப்பது. வினாக்கணக்குகளின்றி விதிக்கணக்குகள் மாத்திரம் சிறுவர்கள் போடச்செய்தால், இதுவும் தங்கள் விதிதானோ என்று அவர்கள் மலைத்துக் களைத்துப்போக நேரிடும். கணித சாஸ்திரத்தில் ஆசையும் பிரியமும் சந்தோஷமும் உண்டுபண்ணுவது வினாக்கணக்குகளே.

ஆகவே, துவக்கமுதல் முடிவுபரியந்தம் கணிதப் பாடத்தில் வினாக்கணக்குகள் போட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். யாதொரு விதியைக் கற்பித்தானவுடனே எப்படி அந்த விதி நமது ஜீவியத்தில் பிரயோசனப் படுமென்று காட்டவேண்டும். இதற்காகக் கொடுக்கும்



கணக்குகள் சுருக்கமாயும் பிள்ளைகளின் அநுபோகத்தை ஒட்டியதாயும் இருக்கவேண்டும். பிள்ளைகளின் அறிவின்மையைச் சோதிப்பதல்ல, அவர்களின் அறிவை விர்த்தி செய்வதே இவைகளின் நோக்கமாயிருக்கவேண்டும்.

வினாக்கணக்குகளைச் செய்யுமுன் பிள்ளைகள் யோசனை செய்வது முக்கியம்; யோசித்து, கணக்கில் கேட்ட வினாவுக்கு விடை சொல்ல என்னென்ன காரியங்கள் கண்டுபிடிப்பது அவசியம், அக்காரியங்களை எதிலிருந்து அறியலாம், என்று படிப்படியாய்த் தெளிவாய் மனக் கண் முன் பார்த்தபின்தான் கணக்கை எழுதிச் செய்யப் பிரயத்தனப்படவேண்டும். இப்படிச் செய்தால்தான் அறிவும் விர்த்தியாகும், அந்த அறிவை அந்தந்த சந்தர்ப்பத்துக்குத் தக்கது உபயோகிக்கும் சக்தியும் ஏற்படும். வினாக் கணக்குகளுக்கு விடை சொல்வது பற்றாது, அந்த விடையைக் கண்டுபிடிப்பதற்காக உபயோகிக்கும் வழிகளை விவரமாய்ச் சொல்லவும் பழகவேண்டும்.

உதாரணமாக, 3-வது வாய்ப்பாட்டைப் பிள்ளைகள் நன்றாய்க் கற்றுக்கொண்டபின் அடியிற்கண்ட வினாக் கணக்குகளைப் போடலாம்.

(a) பொருள்களை எண்ணுவதாலும், கட்டங்கள் வரைந்து கணிப்பதாலும் 3-வது வாய்ப்பாட்டைப் பிள்ளைகள் சரியாயும் விரைவாயும் சொல்லக் கற்றுக்கொள்ளட்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| 3 | 6 | 9 | 12 | 15 | 18 | 21 | 24 | 27 |

(b) வினாக் கணக்குகள் :

1. ஒரு பையனுக்கு 3 பழமாக 4 பையன்களுக்குக் கொடுக்க எத்தனை பழம் வேண்டும்?

[முதலில் பிள்ளைகள் கொஞ்சம் யோசிக்கட்டும், பின், விடை சொல்லட்டும்.

சரியாய் விடை சொன்ன பிள்ளைகள் விடை கண்டு பிடித்த விதத்தை விவரிக்கட்டும்.

விதத்தைப் பொருள்கள் மூலமாவது, கட்டங்கள் வரைந்தாவது விளக்கட்டும்.

இப்படியே பொருள்களிடமாய்ப் பெற்ற அறிவைப் பொருள்கள் சம்மந்தமாய் உபயோகிக்கப் பழகவேண்டும்.]

2. ஒரு கூறில் 3 கொய்யா இருக்கிறது ; 5 கூறில் எத்தனை கொய்யா?

3. ஒரு பாத்தியில் 3 செடிகள் ; ஒரு செடியில் 6 புஷ்பங்கள் ; பாத்தியிலுள்ள புஷ்பங்கள் எத்தனை?

[கொத்து 7 மலர் 3-ல் இம்மாதிரியான கணக்குகள் காண்க ; பெருக்கல் கணக்குகளைக் கற்பிக்கும்போதே வகுத்தல் கணக்குகளையும் கற்பிக்கத்தகும்.]

4. 12 பழங்களிருக்கின்றன ; பையனுக்கு 3 பழமாக எத்தனை பையன்களுக்குக் கொடுக்கலாம்? அல்லது 4 பையன்களுக்குக் கொடுத்தால் ஒவ்வொரு பையனுக்கு எத்தனை பழம் கிடைக்கும்?

[இம்மாதிரியே 2, 3-ம் கணக்குகளையும் வகுத்தலாக மாற்றிக்கொள்ள.]

(c) மேற்கண்ட மாதிரிக் கணக்குகள் முதலாவது ஸ்டாண்டர்ட் முடிவில் அல்லது இரண்டாவது ஸ்டாண்டர்ட் துவக்கத்தில் கொடுக்கலாம். உயர்ந்த வகுப்புகளில் இதைவிடப் பெரிய தொகைகளடங்கிய வினாக்களைப் போட்டாலும், செய்யவேண்டிய வழியை யோசித்த



பின் தான் கற்பலகையில் எழுதிச்செய்யப் பழகவேண்டும். எழுதுவது சுருக்கமாயும் தெளிவாயும் படிப்படியாயும் இருக்கும்படி கவனிக்க.

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின் கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடது பக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

### 1. சந்தா நேயர்களுக்கோர் வேண்டுகோள்.

அன்பார்ந்த நேயர்களே,

தற்போது பழைய மாணவரிற் பலரும் நம் பூங்கொத்தில், வியாசங்கள், பாடக்குறிப்புகள், பற்பல கேள்விகள், ஷை கேள்விகளுக்குத் தகுந்த விடைகள் முதலிய பலவும் எழுத முன் வந்திருப்பது, நம்மலரை ஆவலுடன் நுகர்ந்து வரும் நம் நேயர்களுக்கு நாம் சொல்லாமலே தெரியவரும். இதே மாதிரி ஏனைய மாணவரும் தங்களாலானமட்டும் பிரயாசை யெடுத்து வியாசம் முதலியன எழுதி நம்மலரை இன்னும் அதிக நறுமணம் வீசும்படி செய்வது, நம்மில் ஒவ்வொருவருடைய கடமை என்று உணர வேண்டும்.

ஆனால் வியாசம் முதலியன எழுதுவதுமட்டும் நமது கடமையென்று நாம் வீணே இருந்துவிடலாகாது. ஏனெனில் நமது பூங்கொத்தின் பல மலர்களில் நமது மலரை நுகர்பவர்கள் (சந்தா

தாரர்) குறைவாய் இருப்பதைப்பற்றி, சங்கைக்குரிய நம் பத்திராதிபர் பன்முறையும் முறையிட்டிருப்பதை நம் நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென நம்புகின்றோம்.

சந்தாதாரர்கள் அதிகமாயிருந்தால், நமது மலரில் இதழ்கள் அதிகமாகி நம்மில் ஒவ்வொருவரும் வியாசம் முதலியன எழுத இடந்தருமென்பதும்; நம்மலரைப் பற்றி அடிக்கடி பல பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்ய ஏற்படும் செலவுகளுக்கும், இன்னும் மற்ற செலவுகளுக்கும் ஏராளமாய் சந்தா பணம் கிடைக்குமென்பதும் நம் நேயர்களறிவார்கள்.

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தக்க பிரயாசையெடுத்து சந்தாதாரரை அதிகப்படுத்தவேண்டும். இது விஷயத்தில் நாம் எடுக்கும் பிரயாசையை கடவுள் ஆசிர்வதிப்பாராக. இப்படிச் செய்துகொண்டு நற்றமிழில் நாம் வியாசங்கள் எழுதினால் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்பதற் கொக்குமென்பதை நாம் கூறவேண்டுவதின்றும்.

இங்ஙனம் தங்களன்பன்,
A. ஜேசுதாசன், பழையமாணவன்,
தேவாரம்.

## II. ஆசிரியர்க்கு மரியாதை.

அருமையான ஆசியாக்கண்டத்தில் ஐரோப்பிய யுத்தத்தில் அணுவளவேனும் அஞ்சாத தீரத்தை யுண்டாக்கிய அகண்ட மாமேருவைத் தனக்கு வேலியாகக் கொண்டதும் ஆழி சூழ்ந்ததும், அதிக செழிப்புமுள்ள இந்தியாவின் பெரும்பாலர்கள் மற்ற நாடுகளிலுள்ளவர்களைப் பார்க்கிலும் நல்லொழுக்கத்தில் விர்த்தியடைந்து பெரியோர்களுக்கு வணக்கஞ் செய்து குருபக்தி, ராஜபக்தி, இவைகளில் மிகவுஞ் சிறந்தவர்களென்று கனம் காருண்ய கவர்ன்மெண்டாராலேயே பெயர் பெற்றிருக்கின்றனர்.

இவ்வாறு பெயர் பூண்டிருந்தும், அவை மேலும் மேலும் விர்த்தியடையாமல், அழகிய பூவிற்குப் புறவிதழிருந்து அதன் மேலான அழகைக் கெடுக்கிற தன்மைபோலும், யாவரும் விரும்



பித் தன் கவலையெல்லாம் அதன் மேலே செலுத்திக் கேட்கத் தரும் இன்பமான சங்கீதங்களில் ஒரு பழிப்பான சொல்லிருந்து அதன் மேன்மையைக் கெடுப்பதுபோலும், வெயிற்காலங்களில் மானிடர்கள் யாவரும் கற்பகச்சோலையில் இளைப்பாறி அதன் வனப்பை மெச்சிக்கொள்வதுபோக, காகங்கள் கூடி அச்சிறப்பைக் கெடுக்குமாறு போலும் நம் அழகிய நாட்டில் பற்பல இடங்களிலும், கற்றோர்கள் கூட, கிஞ்சித்தேனும் உபாத்திமார்களையும் ஏனைய உத்தியோகஸ்தர்களையும் மதியாதிருப்பது பரிதாபத்துக்குரியதாமே இத் தீச்செயல்கள் ஆரம்பப் படிப்பின்ன குறைவென்பது புல்லறிவாளனாகிய எனக்குத் தோன்றுகின்றது.

எப்படியென்றால் நம்மிடம் ஒப்பித்திருக்கும் சிறுவர்களின் இருதயம் மெழுகைப்போல் இளகக்கூடியதாயிருப்பதால் நாம் அவர்கள் மனதைக் கவர்ந்து எவ்விதவுருவமாக்கலாமோ அவ்வித உருவமாக்கலாமே. அப்படிக்கில்லாமல், சிறுவர்களைத் தங்கள் ளர் இச்சைப்பிரகாரம் விட்டுவிட்டதாலல்லவோ, இப்போது நம்மையும் மதியாமலிருக்கிறார்கள். அரிய நண்பர்களே! இனிமேல் நாம் கொஞ்சம் பிரயாசையெடுத்து நம் மனதிற்கேற்ற நல்ல உருவாக்குவோமாக.

ஆனால், நாம் பெறும் சம்பளம் போதாதென யாவரும் அறிந்த விஷயமே. இருந்தாலும் பொறுமையுள்ள ஊழியன் கடைசிவரைத் தன் கடமையைப் பொறுமையாய் நிறைவேற்றிய பின், கணையாழியைப் பரிசாக அடைந்து ஆனந்தித்த தகைமையைப்போல், நாமும் வல்லபானுக்கு நம்மிடம் ஒப்பிக்கப்பட்ட பிள்ளைகளைப்பற்றிய கணக்கு மறுமையில் ஒப்பிக்க வேண்டியிருப்பதால், பொது நன்மையைக் கோரி உண்மையாயுழைத்து நற்புத்தியைப் புகட்டப் பிரயாசப்பட்டால், நாமும் நல்ல ஊதியமடைகிற காலத்தைப் பெறுவோம். இது நிற்க,

பயின்று கொண்டிருக்கும் சிறுவர்கள் கலாசாலையிலுள்ளிருக்கும்போது தான் தன்னுடைய உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிவதுபோல் பாசாங்கு செய்கிறார்கள். ஒரு லீவு நாளில் உபாத்தியாயரைத் தெருவில் கண்டாலோ, எவனோ என்று நினைத்துப் போகிறார்கள். இதுவுமல்லாமல் பயின்று வெளியேறியவர்

களோ! சொல்லவேண்டியதில்லை. இத்தகைமையுடையவர்களுக்கு, உபாத்தியாயர் என்றால் யார்? அவரால் நாம் என்ன ஊதியமடைகிறோம் அடைந்தோம்? என்னும் காரணம் அறியாதவிதமே.

ஆகையால் நண்பர்களே! நாமே நமக்கு மரியாதை தேடிக்கொள்ளவேண்டுமாகையால், அரசனெவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்றவாறு நாம் நமது துரிச்சைப்படி நடக்காமல் வொட்டாமல், நாம் பிள்ளைகள் முன்பு மரியாதையைக் காட்டி அதன்படியே அவர்களும் நடக்குமாறு கற்பிப்பது மிகவும் நலமெனச் சிற்றறிவுடையோனாகிய எனக்குப் புலப்படுகிறது. இதினும் மேலாய் எடுத்துரைத்துச் சீர்திருத்துவீர்களென்று நம்புகிறேன்.

M. மிக்கேல், பழையமாணவன்,
அபிஷேகப்பட்டி.

## III. இன்னுமொரு விஞ்ஞாபனம்.

நமது போதனா விஷயப் பூங்கொத்தானது, இவ்வருஷத்தில்தான் மாதந்தோறும் தவறாது மலர்ந்து, நறும் வாசனையை வீசினது. ஆயினும் அதற்குச் சந்தாதாரர்கள் போதாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கின்றது. இன்னும் அதனுடைய வாசனை கெடாதபடி செய்ய, சந்தாதாரர்களாகிய நாம், நற்சுகம் வீசும் இம்மலரினது அருமையை ஏனையோர்களுக்கு எடுத்துப்பகர்ந்து, அவர்களும் அதை முகர்ந்து ஆனந்திக்கும்படி செய்ய நம்மாலான முயற்சியை இவ்வருஷத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், மற்றும் நன்கொடைகள் கொடுத்துதவும்பொருட்டுப் பிரயத்தனங்கள்செய்ய வேண்டுமென்றும் விரும்பி நிற்கின்றனன். இதைப் பழைய உடன்மாணவ நண்பர்கள் அதிகமாய்க் கவனிப்பார்களாக.

இங்ஙனம்,
**J. மரியவியாகப்பன்**
பாடசாலைச் சங்கத்தலைவர்.

Printed and Published by Rev. Br. Joseph s.j., Superintendent,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1920.

631

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| | | |
|---|---|---|
| கொத்து **10.** | ஆகஸ்டு **1920.** | மலர் **2.** |

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்ற சஞ்சிகையில் நாம் பிரசுரித்திருந்த ஆரம்பப் படிப்பு மசோதாவைச் சட்ட நிருபண சபையாரிற் சிலர் பரிசோதனை செய்ததில், அந்த மசோதாவில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுத்தியிருக்கின்றதாம். கிராமாந்தரப்

18-8
16

பள்ளிக்கூடச் செலவுகளுக்காக விசேஷ வரி நிலத்தீர்வை செலுத்துபவர்களிடம் மாத்திரமல்ல, வரி செலுத்தக்கூடிய ஏனையோரிடமும் வசூலிக்கப்படவேண்டுமென்பது ஒரு மாற்றமாம். பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி பலவந்தம் செய்யும் இடங்களிலெல்லாம் இலவசமாயும் கல்வி கற்பிக்க வேண்டுமென்பது இன்னொரு மாற்றமாம். ஜில்லாக் கல்விச் சபையின் அங்கத்தினராயிருக்க உரிமையுள்ளவர் யாவரென்று தீர்மானிப்பதும் வித்தியாசமாம். இந்த மாற்றங்களெல்லாம் முன்னையைவிட அநுகூலமாகவே தோன்றுகிறது. ஷை மசோதாவைச் சட்டமாக்குமுன் இன்னும் சில மாற்றங்கள் நேரலாம். கடைசியில் ஷை மசோதா சட்டமாகிவிடுவது திட்டம் என்கலாம்.

* * *

சுருக்கத்தில் ஆரம்பப்படிப்பானது கட்டாயமாயும் இலவசமாயும் பல இடங்களில் கற்பிக்கப்படத் தடையில்லை. ஆனால் கற்பிக்கப்போகிறவர்கள் யாரென்பதைத்தான் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது. கற்பிப்பவர்களின் உற்சாகத்துக்குத் தக்கதுதான் படிப்பு விர்த்தியாகும். மற்றப்படி விசேஷ வரியும் கல்விச் சங்கமும் பெரிய நன்மை பயப்பதரிது. ஆகவே கல்வி கற்பிக்கப் புகுந்த சகலரும் மெய்யான தேசாபிமானிகளானால் தாங்கள் இறங்கிய துறையில் முற்ற மூழ்கித்தான் தீரவேண்டும்.

* * *

உபாத்திமைத் தொழிலானது சகலரும் செய்யக்கூடிய தொழிலல்ல. உபாத்திமைத் தொழிலில் சாமர்த்தியம் உபாத்திமாரோடு பிறக்கிறதேயல்லாமல், பிறந்தபின் அவர்களுக்கு உண்டாவதில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படி சொல்வது சரியாகத் தோன்றவில்லை. உண்மையில் ஷை சாமர்த்தியம் சிலரிடத்தில் பயிற்சியினால் உண்டாகிறது. சுபாவத்தினாலாவது பயிற்சியினாலாவது இந்தச் சாமர்த்தியத்தை அடையாதவர்கள் உபாத்திமைத் தொழிலைச் சரியாய்ச் செய்யக்கூடா



தென்பது சொல்லாமலே விளங்கும். ஆகிலும் போதனா முறைப் பாடசாலையில் இரண்டு வருஷம் இருந்த சகலரும் இத்தொழிலை நிறைவேற்றத் தகுந்தவர்கள் என்று சிலர் எண்ணுகிறார்கள். இது பிசகு. போதனா முறைப் பாடசாலையில் இருப்பது பற்றாது; அதில் பயிலுவது அவசியம். பயிலுவதென்றால் பாடம் போதிப்பதைப் பார்ப்பதும் பாடங்களைக் கேட்பதுமல்ல; சொந்தப் பிரயாசையால் யோசித்தும் செய்தும் கற்றுக்கொள்வது. இந்தப் பிரயாசையில்லாவிட்டால் பயிற்சியுமில்லை. இதனால்தான் போதனா முறைப் பாடசாலையில் இருந்து வெளியாகிறவர்களெல்லாம் சாமர்த்தியமுள்ள உபாத்திமாரென்று சொல்வது பிசகு. போதனா முறைப் பாடசாலையானது விற்பனைக்குச் சரக்கு தயார்செய்யும் ஆலையல்ல. ஆகிலும் அப்பாடசாலைகளிலிருந்து வெளியேறும் சிலரைக் கவனித்தால் ஆலைகளிலிருந்து வரும் சரக்காய்த்தானிருப்பார்கள், அதாவது......

* * *

ஆனால் எல்லாரும் அப்படியல்ல. அப்படியல்லாதவர்கள்தான் மெய்யாகவே பயின்ற உபாத்திமார். போதனா முறைப் பாடசாலையிலிருந்தும் பயிலாத உபாத்திமார் சிலருண்டு. இவர்கள் இனியாவது பயிலத் துவக்கட்டும்; அதாவது, சொந்தப் பிரயாசையால் யோசித்தும் செய்தும் கற்றுக்கொள்ளட்டும்.

* * *

பயின்ற உபாத்திமார்முதலாய் சாமர்த்தியமுள்ள உபாத்திமாராயிருக்க வேண்டுமானால் அவர்கள் சதா படித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது அநுபோக சித்தாந்தம். சிறுவர்களுக்கு உபாத்திமார் ஊட்டும் ஞானத்தைத் தெளிந்த ஜலத்துக்கு ஒப்பிடலாம். படித்துக்கொண்டேயிருக்கும் உபாத்தியாரிடத்தில் இந்த ஜலம் எப்போதும் சுரந்துகொண்டேயிருப்பதால் சிறுவர்களுக்குப் பிரியமாயும் பிரயோசனமாயுமிருக்கும். ஏட்டைக் கட்டிவைத்துவிட்ட உபாத்தியாயரிடத்தில் இந்த ஜலம் சாக்கடையில் நிற்பதுபோல் ஓடாமல் நின்றுவிடு

கிறபடியால், சீக்கிரத்தில் அது நாற்றம் வீசி, சிறுவர்களுக்கு அருவருப்பையும், கடைசியில் கெடுதியையும் உண்டுபண்ணும். ஆகவே, நல்ல மனதுள்ள ஆசிரியர் தினந்தினம் ஏதாவது படித்துக்கொண்டேயிருக்க அப்பியாசப்படுதல் தகுதி.

---

## பாடக்கிரமங்கள்.

எலிமென்டரி பாடசாலைகளில் சாதாரணமாய் நடத்தப்படும் பாடங்களில் இன்னின்ன பாகங்களை இன்னின்ன வரிசையாய் நடத்தவேண்டுமென்று தீர்மானிப்பது அந்தந்தப் பாடசாலைகளின் அதிகாரிகளாகவேயிருப்பது அவசியம். அந்தந்த இடங்களுக்கு ஏற்றதும் பிள்ளைகளுக்குத் தேவையானதுமான விஷயங்கள் எவையென்றும், உபாத்திமாரின் திறமை எம்மட்டும் என்றும் ஏனையோர் அறிவது கஷ்டம். இதனால்தான் சர்க்காரார் முதலாய் பாடக்கிரமங்களைத் திட்டமாய்க் குறிப்பதில்லை; மேலும் அந்தந்தப் பாடசாலை அதிகாரிகள் தங்களுக்குத் தகுந்த பாடக்கிரமங்களை ஏற்படுத்திக்கொள்ளும்படி உற்சாகப்படுத்தித் தூண்டுகிறார்கள். ஆகிலும் ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள பாடக்கிரமம் இன்னொரு பள்ளிக்கூடத்திலுள்ள பாடக்கிரமத்தைச் சரிப்படுத்துவதற்கு உதவியாகலாம். இந்த உதவி செய்வதற்காக நமது மாதிரிப் பாடசாலையில் நடக்கும் பாடக்கிரமங்களை அநேகருடைய விருப்பப்படி வெளிப்படுத்துகிறோம். இதே பாடக்கிரமங்களை மற்றப் பாடசாலைகளில் ஏற்படுத்துவதற்காகவல்ல, சரியான பாடக்கிரமங்கள் ஏற்படுத்துவதற்கு ஓர் உதவியாக மாத்திரம் இவைகளைப் பிரசுரிக்கிறோம். இங்கு பிரசுரிக்கப்போகும் பாடக்கிரமங்களில் சிலது முந்தியே பிரசுரமாகியிருக்கிறது. ஆகிலும் நாளாவட்டத்தில் அநுபோகத்திற்கிசைய சிற்சில மாற்றங்கள் அவைகளில் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பிரசுரமாகும் பாடக்கிரமங்களை முன் பிரசுரமானவைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்த பாடக்கிரமங்கள் தயாரிப்பதற்கு உதவியாகும்.

---



## பாடக்கிரமம். I.

### இடத்தையும் எண்களையும் குறித்த வேலை.
### (Space & Number Work.)

## I Standard.

I Course (June to Mid-August) :—

1 முதல் 9 வரைக்கும் எண்ணிக்கை.

1 முதல் 9 வரை எண்ணும்பொழுது

2-ஒன்றைவிட ஒன்று அதிகம்.

3-இரண்டைவிட ஒன்று அதிகம். இவ்விதமாய் ஒவ்வொரு எண்ணும் முந்தின எண்ணைவிட ஒன்று ஜாஸ்தி என்பதை பிள்ளைகள் தெரிந்துகொள்ளும்படி செய்தல்.

9-இலிருந்து 1-வரைக்கும் தலை கீழாக எண்ணும்பொழுது ஒவ்வொரு எண்ணும் முன் சொல்லிய எண்ணைவிட ஒன்று குறைவு என்பதை அறிதல்.

1-இலிருந்து 9 வரைக்கும் கூட்டல், கழித்தல்.

1 முதல் 9 வரையிலுள்ள ஒவ்வொரு எண்ணைப்பற்றிய தனிப்பாடம் (இந்திய ப்ராக்டிகல் அர்த்மெடிக். உபாத்தியாயர்—முதல் புஸ்தகத்தைப் பார்க்க.)

II Course (Mid-August to October) :—

10-க்கு குறைந்த பாக்டர்கள் (Factors) உண்டான எண்கள் :—4, 6, 8, 9 இவைகளின் பாக்டர்களை அறிதல். (9 வரைக்கும் பெருக்கல் வகுத்தல்.)

10 என்னும் எண். அதன் பாகங்கள் i.e. அதின் பலவித சேர்க்கைகள் (எவைகளை கூட்டினால் 10 வருமோ அவை). அதன் பாக்டர்கள்.

அரையைப்பற்றிய சுலபமான பாடம்.

15 வரையில் எண்ணுதல்.

1 முதல் 15 வரையில் கூட்டல் கழித்தல்.

15-க்குள் உள்ள ஒவ்வொரு எண்ணின் பல பாகங்கள் i.e. சேர்க்கைகள்.

15 க்குள்பட்ட பாக்டர் உண்டான எண்களின் பாக்டர்களை அறிதல் (பெருக்கல், வகுத்தல்.)

III Course (October to Mid-November.):—

20 வரையில் எண்ணிக்கை.

20 வரையிலுள்ள எண்களை இலக்கத்தால் குறித்தல்.

20 வரையில் கூட்டல் கழித்தல். ஒவ்வொரு எண்ணின் பலவித சேர்க்கைகள்.

IV Course (Mid-November to mid-December):—

20-க்குள் பாக்டர் உண்டான எண்களின் பாக்டர்களை அறிதல் (பெருக்கல், வகுத்தல் அப்பியாசங்கள்.)

கொடுத்த எண்ணிலிருந்து 2, 3 விட்டு விட்டு நேராகவும், தலைகீழாகவும் எண்ணல்.

20 வரையிலுள்ள எண்களின் அரை பாகங்களை அறிதல்.

V Course (Mid-January to March):—

25 வரையில் எண்ணிக்கை.

25-க்குள் கூட்டல் கழித்தல்.

ஒவ்வொரு எண்ணின் பலவித சேர்க்கைகள.

பாக்டர் உண்டான எண்களின் பாக்டர்களை அறிதல். (பெருக்கல், வகுத்தல் சம்பந்தமான அப்பியாசங்கள்.)

ஒவ்வொரு வஸ்துவும் ஓர் இடத்தை அடைக்கிறது.

VI Course (March to Mid-April):—

25 வரையில் எழுத்தால் எழுதுதல்.

நீளம், அகலம், உயரம் இவைகளின் அபிப்பிராயத்தை பாடசாலை கட்டடத்தின் மூலமாயும், அங்குள்ள மேஜை முதலிய மற்றப்பொருள்கள் மூலமாயும் கற்பித்தல்.

## II Standard.

### I Course.

1-முதல் 50 வரையில் எண்மானம், எண்குறிப்பு. 50-க்குள் கூட்டல், கழித்தல் அப்பியாசங்கள். ஒவ்வொரு எண்ணின் பல பாகங்கள் அல்லது சேர்க்கைகள். கொடுத்த எண்ணிலிருந்து 2, 3, ஆக் விட்டுவிட்டு நேராகவும் தலைகீழாகவும் எண்ணுதல். 2-வது 3-வது வாய்ப்பாடுகள். ($2\times12=24$; $3\times12=36$.)



### II Course.

75 வரையில் எண்மானம், எண் குறிப்பு, கூட்டல், கழித்தல் அப்பியாசங்கள். 4-வது 5-வது வாய்ப்பாடுகள். புள்ளி—கோடு.

### III Course.

120 வரையில் எண்மானம், எண்குறிப்பு, கூட்டல் கழித்தல் அப்பியாசங்கள். 6-வது வாய்ப்பாடு. $\frac{1}{4}$-ப்பற்றிய பாடம். நேர்கோடு—குறித்த பொருளின் நீளம் அகலம் உயரம் ஆழம் இவைகளைக் காட்டல்.

### IV Course.

125-வரையில் எண்மானம், எண்குறிப்பு, கூட்டல், கழித்தல் அப்பியாசங்கள். 125 வரையில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$ இவை சம்பந்தமான அப்பியாசங்கள். சுழல்வது. அடிக்கோலின் அபிப்பிராயம். அடிக்கோலைக்கொண்டு பாடசாலையிலுள்ள நீள அகலத்தை அளந்து சொல்லுதல்.

### V Course.

150 வரையில் எண்மானம், எண்குறிப்பு, கூட்டல், கழித்தல் அப்பியாசங்கள். அணா, $\frac{1}{2}$ அணா $\frac{1}{4}$ அணா, $\frac{1}{8}$ ரூ. $\frac{1}{4}$ ரூ. $\frac{1}{2}$ ரூ. ரூபாய் இவைகளின் அபிப்பிராயம். பாடசாலையிலுள்ள பொருள்களின் நேர்கோண அமைப்பைக் காட்டுதல்.

### VI Course.

200 வரையில் எண்மானம், எண்குறிப்பு, கூட்டல், கழித்தல் அப்பியாசங்கள். 200 வரையில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$ இவை சம்பந்தமான அப்பியாசங்கள். பாடம் திருப்புதல்.

## III Standard.

### I Course.

250 வரையில் எண்மானம், எண் குறிப்பு. கூட்டல் கழித்தல் அப்பியாசங்கள். (கூட்டல் வழியாக கழித்தல் கற்பித்தல்.)

250 வரையில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$ இவை சம்பந்தமான அப்பியாசங்கள். 7-வது வாய்ப்பாடு சம்பந்தமான அப்பியாசங்கள். பலவித நேர் கோடுகள்.

### II Course.

500 வரையில் எண்மானம், எண் குறிப்பு. கூட்டல் கழித்தல் அப்பியாசங்கள். $\frac{3}{4}$ பாகத்தின் அபிப்பிராயம். 8-வது வாய்ப்பாடு சம்பந்தமான அப்பியாசங்கள்.

கொடுக்கப்படும் அளவுக்கு கோடுகள் வரைதல்.

### III Course.

750 வரையில் எண்மானம், எண் குறிப்பு. கூட்டல் கழித்தல் அப்பியாசங்கள். $\frac{1}{8}$ பாகத்தின் அபிப்பிராயம். 9-வது வாய்ப்பாடு சம்பந்தமான அப்பியாசங்கள். கோணங்களைப்பற்றிய பாடங்கள்.

### IV Course.

1000 வரையில் எண் குறிப்பு, எண்மானம். கூட்டல் கழித்தல் சம்பந்தமான விருக் கணக்குகள். 1000 வரையில் $\frac{3}{4}, \frac{1}{2}, \frac{1}{4}, \frac{1}{8}$ இவை சம்பந்தமான சுலபமான அப்பியாசங்கள்.

10-வது வாய்ப்பாடு சம்பந்தமான அப்பியாசம். ஒற்றைப்படை இரட்டைப்படை எண்களை அறியும் விதம். சதுர பொருள்கள்.

### V Course.

கூட்டல், கழித்தல் இவை சம்பந்தமான சிறு விருக் கணக்குகள். 11-வது, 12-வது வாய்ப்பாடுகள் சம்பந்தமான கணக்குகள். சதுரப் பொருள்களின் அளவுகளை அடிக்கோலால் அறிந்துசொல்லுதல்.

### VI Course.

வாங்கின விலை, விற்ற விலை, லாபம், நஷ்டம் இவைகளின் விளக்கம் (முழு ரூபாய்கள் மட்டும்). பாடம் திருப்புதல்.

## IV Standard.

### I Course.

10000 வரையில் எண்மானமும் எண் குறிப்பும்; கூட்டல் கழித்தல் சம்மந்தமான விருக்கணக்குகள். (கழித்தலை கூட்டல் மூலமாய்க் கற்பித்தல்).



ஒரு ஸ்தான வகுத்தல்; குறு வகுத்தல்.

13, 14 வாய்ப்பாடுகள் சம்மந்தமான கணக்குகள் $\frac{1}{2}$ வாய்ப்பாடு.

புள்ளி, கோடு, செங்குத்துக்கோடு, படுக்கைக்கோடு இவைகளைப்பற்றிய விரிவான பாடங்கள்.

அடிக்கோலின் வர்ணனை.

### II Course.

100000 வரையில் எண்மானமும் எண் குறிப்பும். 15, 16 வாய்ப்பாடுகள். இரண்டு ஸ்தானப் பெருக்கல், வகுத்தல் சம்மந்தமான அப்பியாசங்கள். காரண எண்கள். காரண எண்களால் பெருக்கல். பலவிதக் கோடுகளை வரைதல். சமதூரக் கோடுகள்.

### III Course.

மூன்று ஸ்தானப் பெருக்கல்; கூட்டல், கழித்தல், பெருக்கல் சம்மந்தமான ப்ராப்ளங்கள். நெடும் வகுத்தல். இந்திய நாணய இனமாற்றல். $\frac{1}{4}$ வாய்ப்பாடு. பலவிதமான கோணங்கள். கோணங்களை ஒட்டிய அனுபவ அப்பியாஸங்கள்.

### IV Course.

இந்திய நாணயக் கூட்டல், கழித்தல், காரண எண்களால் வகுத்தல். இந்திய நாணயப் பெருக்கல், வகுத்தல். சம சதுரம், நீண்ட சதுரம் இவைகளின் விளக்கம்.

### V Course.

இந்திய நாணயக் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் சம்மந்தமான அப்பியாஸங்கள். நிறுத்தலளவு சம்மந்தமான இனமாற்றல். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல். (சிறு அப்பியாஸங்கள்). சதுர உருவங்கள், நீண்ட சதுர உருவங்கள், இவைகளை வரைதல்.

### VI Course.

முகத்தலளவு, நீட்டலளவு, கால அளவு இவை சம்மந்தமான இனமாற்றல். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் (சிறு அப்பியாஸங்கள்.

$\frac{1}{8}$ வாய்ப்பாடு. வியாபார சம்மந்தமான சிறு கணக்குகள். Revision.

## V Standard.

### I Course.

8 ஸ்தானங்களடங்கிய எண்களின் எண்மானம், எண் குறிப்பு. நான்கு சாதாரண விதிகள் சம்பந்தமான பல வகைக் கணக்குகள்.

(1) ஒன்றின்கீழ் ஒன்றாய் எழுதாமல் தொடர் கூட்டல், தொடர் கழித்தல்.

(2) கொடுத்த எண்ணை 9, 99, 999 இவைகளால் சுருக்கமான வழியில் பெருக்கல்.

(3) சுருக்கமான வழியில் பெருக்கல் (5, 10, 25, 50, 125, 250, 625) இவைகளால் பெருக்கல்.

(4) காரண எண்களால் பெருக்கல்.

(5) காரண எண்களால் வகுத்தல்

(6) கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் சம்பந்தமான ப்ராப்ளங்கள்.

அடி, அங்குலம், ஸென்டிமீடர், மில்லிமீடர் இவைகளின் அபிப்பிராயம். பிள்ளைகள் தாமாகவே அடிக்கோல் செய்துகொள்தல். கொடுக்கப்பட்ட கோடுகளை அளத்தல் (கண் உத்தேசம், அடிக்கோல்). கொடுக்கப்பட்ட அளவுகளை கோடுகளால் காண்பித்தல்.

### II Course.

இந்திய நாணயம், இங்கிலீஷ் நாணயம், இந்திய நிறையளவு, முகத்தலளவு, நீட்டலளவு இவைகளை அநுசரித்த மிச்ரம சதுரங்கம். (Compound rules.). ஒற்றைக் கோட்டு உருவம்—வட்டம், அதன் பாகங்கள், நடுப்புள்ளி, அரைவிட்டம், விட்டம், அரை வட்டம், சுற்றளவு முதலியன. காம்பஸின் வர்ணனை. காம்பஸைக் கொண்டு வட்டம் வரைதல்.

### III Course.

எண்ணலளவு, இங்கிலீஷ் கால் அளவு இவைகளை அநுசரித்த மிச்ரம சதுரங்கம். தசாம்ச பின்னத்தின் அபிப்பிராயம், தசாம்ச பின்னக்கூட்டல், கழித்தல்.



தசாம்ச பின்ன சம்பந்தமான விஞக் கணக்குகள். கோணம்: வகைகள், கோண அளவுகோலின் வர்ணனை. பலவிதமான கோணங்களை வரைதல். கொடுக்கப்பட்ட அளவுள்ள கோணங்களை வரைதல்.

### IV Course.

ஒன்றின் பிரிவுகள், பாகங்கள், பின்னங்கள் (வித்தியாசம்). பின்னங்கள் எழுதும் வகை. பகுதி, தொகுதி இவைகளின் விளக்கம். ஒரே பகுதி எண்களையுடைய பின்னங்களின் கூட்டல், கழித்தல். ஒரே பின்னம் பல ரூபத்திலிருத்தல். வித்தியாசமான பகுதிகளுடைய பல பின்னங்களை ஒரே பகுதியுடைய பின்னங்களாக மாற்றுதல். வித்தியாசமான பகுதி எண்களுடைய பின்னங்களின் கூட்டல் கழித்தல்.

*N. B.*—பின்ன பாடத்தை போதிக்க 'கட்டம் வரைந்து போதிக்கும் முறையை' அதிகமாக அநுசரித்தல் வேண்டும்.

### V. Course.

பண்டமாற்றல், வரவு செலவு, பிரிவினை, பட்டி, வாணிகம் இவை சம்பந்தமான ப்ராப்ளங்கள். முக்கோணங்களும், வகைகளும், லக்ஷணங்களும்.

### VI Course.

பின்னங்களடங்கிய விஞக்கணக்குகள். சராசரிக் கணக்கு. சிறு வட்டிக் கணக்கு. நான்கு பக்கத்து உருவங்கள், சமசதுரம், நீண்ட சதுரம் இவைகளின் விளக்கம். இவ்வுருவங்களுள்ள இடத்திற்கு அல்லது வஸ்துவிற்கு பரப்பளவு கண்டுபிடித்தல்.

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின் கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடது பக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்

தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

## உபாத்தியாயரும் சம்பளமும்.

சாதாரணமாய்க் கீழ்தர வகுப்புப் பாடசாலை உபாத்தியாயர்களுக்களிக்கப்படும் சம்பளம் மிகவும் சொற்பமானதென்பதை யாவருமறிந்ததே. அதிலும் மனிதனுக்கு உண்ண உடுக்க இன்னும் பல வழிகளில் அத்தியாவசியமான பற்பல பொருட்கள், பல காரணங்களை முன்னிட்டு, அபாரமான விலைகளாய் விற்கப்படும் தற்காலத்தில், இச்சம்பளமானது இன்னும் சொற்பத் தொகை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! இதன் விஷயமாய் உபாத்தியாயர்களிற் பலருக்குப் பலவிதமான அபிப்பிராயங்கள் உண்டானதும், உண்டாகிறதும் சகஜந்தான். அன்னோர்களிற் சிலர், "போதிய பணமிருந்தாலல்லோ, மனமும் (ஊக்கமும்) இருக்குமென்றும், தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் ஊக்கம் குன்றுவதற்குக் காரணம் பணக் குறைவே என்றும், ஒருவனுக்கே போதாத ஒரு உபாத்தியாயரின் சம்பளந்தானா, ஒரு குடும்பத்தைத் தாங்கப் போதுமென்றும், வேலையின் கஷ்டத்துக்குற்ற கூலி இல்லை" என்றும் சிந்திப்பாரும் உளர். இவர்களின் கோட்பாட்டுக்கிசைந்த வண்ணம் "ஆமாமா" வெனக் "கூட்டத்துடன் கோவிந்தா" என்றதுபோல் தாளம் போடுவாரும் உளர் பலர். இவைகளுக்கு மறுப்பாய் "பணம் குறைவு என்றாலும் உன் ஊக்கத்தைக் குறைத்து வேலையைக் கெடுக்காதே" என்று சொல்வாருமுளர் சிலர். சரியாய் யோசிக்குங்கால் "ஊக்கத்தைக் குறைக்காதே" என்னும் வாக்கியமானது ஆமோதிக்கத்தக்கதே!!

ஒருவன் தன் உடம்பைத் தாராளமாயும் தன் இஷ்டப்படியும் மூடிக்கொள்ளுவதற்குத் தக்க அளவோடு கூடிய சட்டையொன்று தைக்க, நான்கு கெஜம் துணி அவசரமெனக் காணும் பட்சத்தில் அவன் வாங்கவேண்டியது 4 கெஜம் துணியே. நான்கு கெஜ மாத்திரமல்ல, சிலவேளை ஏது காரணத்தாலோ, அச்சட்டை கிழிந்துபோகுங்கால் அதைத் திருத்திக்கொள்ள (செப்பனிட அல்லது ஒட்டுப்போட்டுக்கொள்ள) உதவும்படியாய் இன்னும், கால் கெஜம் வாங்கிக்கொள்வதும் உத்தமம்தான். இதற்கு மாறாய், தனக்கு இஷ்டமில்லாமையினாலோ, அல்லது, வேறு காரணத்தாலோ நான்கு கெஜத்துக்குப் பதிலாய் 3 கெஜம் வாங்கி, பிற்பாடு பார்த்துக்கொள்ளலாமென்று



போய், சட்டையைத் தைத்து மாட்டிவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். குறைந்த அளவுள்ள துணியை வாங்கினால், தான் நினைத்தவண்ணம் அச்சட்டை திருப்தியாயில்லாமல், திருப்தியற்றதாய்ப் போகும் என்று முன்னதாகவே அறிந்திருந்த இவன், இப்போது சட்டையை மாட்டும்போது அது திருப்தியற்றதாய் இருப்பதைப்பற்றி இவன் ஆச்சரியப்படவேண்டிய நியாயம் இல்லை. இவன் திருப்தியற்றிருப்பதற்குக் காரணம் சட்டையா, தையற்காரனா, அல்லது, தைக்கக் கொடுத்தவனா? பின் சொல்லப்பட்டவனே இதற்கு ஜவாப்தாரியாவானென்பதிலோ ஐயமுமில்லை. ஏனெனில் குறைந்த துணியை வாங்கினால் குறைவுபடும் என்று தெரிந்தும் அதைப் பாராட்டாமல் அவன் அவ்வழியில் பிரவேசித்தது, அவனுடைய பிசகன்றோ. தன் மனமொப்பச் செய்துவிட்டு, இப்போது திருப்தியில்லாததால் சட்டையை வைத்துக்கொண்டு "ஐயோ சட்டையே, சட்டையே!" என்றால் முடியுமா? இத்தன்மைபோல் உபாத்தித் தொழிலுக்களிக்கப்படும் சம்பளம் குறைவுற்றதென்றும், "கறக்கிறது உழக்குப் பால், உதைக்கிறது பல்லுப்போக" என்றதுபோல் இருக்கிறதென்றும், இவ்வுத்தியோகத்தில் வேறு வரும்படி இல்லை என்றும் இப்போது முறையிடுபவர்களாகிய நாம், நாம் உபாத்திமைத் தொழிலுக்குப் போகாமுன்னே வெள்ளிடைமலர்போல் இதை யறிந்தவர்கள்தானே. ஆகவே, உபாத்திமைத் தொழிலுக்குட்பட்டால் பணம் பெருகுவது பூச்சியந்தானே, அல்லது பணம் குறைவாய் இருப்பதால் ஊக்கம் எங்கிருந்துண்டாகும் என்று சிந்தித்த ஒருவன், அவ்வண்ணம் சொற்பச் சம்பளத்தையும் ஷை கஷ்டங்களையும் அநுபவிக்காதபடி, உபாத்திமைத் தொழிலில் அமராமல், தன் தாராளம்போல் செய்யக்கூடிய தனங் கிடைக்கும் வேறோர் மார்க்கத்தை, ஆரம்பத்திலேயே பார்த்திருந்திருக்கலாம். பார்த்திருக்கவேண்டியதும் ஒழுங்கு. மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 20 ரூபாயாகிலும் கிடைத்தால்தான், தான் திருப்தியாய் வாழலாம் என்று எண்ணிய ஒருவன், அச்சம்பளம் கிடைக்கக்கூடிய அப்படிப்பட்ட வேலையையே தேடவேண்டுமேயொழிய, அதற்குக் குறைந்த சம்பளம் கிடைக்கும் உத்தியோகத்தில் வந்தமர்ந்து குறை சொல்ல நியாயம் உண்டோ? இதுமட்டுமல்ல, நான்கு கெஜம் துணி வாங்கவேண்டிய ஒருவன், அச்சட்டைக்கு ஊனம் உண்டாகும் காலத்தில், அதைச் சரிப்படுத்தக் கஷ்டமில்லாதபடி மேலதிகமாய்க் காற்கெஜம் வாங்கிவைத்துக்கொள்வது சிரேஷ்டமென மேலே சொன்னபடி, 20 ரூபாய் கிடைக்கக்கூடிய உத்தியோகமாத்திரமல்ல, இன்னும் வேண்டுமானால், இவன் பிற்காலத்தில் கஷ்டமுறாவண்ணம், மாதம் 5 ரூபாய் மீதி வைக்

கும்படியான 25 ரூ. சம்பளத்தையும் தேடியிருந்திருக்கலாம், அதுவும் புத்திசாலித்தனம்தான்.

இரண்டாவது:—வேறொருவன், முன் சொன்னதுபோல் தனக்குச் சட்டை தைக்க, 4 கெஜம் துணி அவசியமென்றும், குறைந்தால் சட்டை அவ்வளவாக திருப்தியுள்ளதாயிராதென்பதையும், நன்றாய்க் கண்டுபிடிக்கிறான். ஆனால் இஷ்டமில்லாமையாலோ, தன் கையிலுள்ள குறையினாலோ, அல்லது வேறு காரணத்தாலோ நான்குக்குப்பதில் 3 கெஜம் வாங்கி சட்டை தைத்துப் போடும்போது, தான் முன் நினைத்தபடி குறைவுற்றிருக்கிறதையும் கண்டுபிடிக்கிறான்; என்றாலும் "நாம்தானே நம் முழு மனதுடன் ஒப்புக்கொண்டோம், அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும், புறக்கணித்த லழகல்ல," என மனப்பூரணத்துடன் தரித்துக்கொள்ளுகிறான். ஏன்? ஏனெனில் இவன், மனதுடன் இக்காரியத்துக்குட்பட்டதாலல்லவா? ஆ! இவன் புத்தியுள்ளவனும், உண்மையுள்ளவனுமேயாம்.

இப்போது சொல்லப்பட்ட உதாரணத்தின் கருத்து உள்ளங்கை நெல்லிக்கனியே! அதாவது, உபாத்திமைத் தொழிலில் சேருமுன்னமே, அதில் அமர்வதினால் "குறைந்த சம்பளம், வேலைக்கஷ்டம், முதலியவைகள் உண்டாகுமென்று தெரிந்திருந்தும் அதனின்று விலகிக்கொள்ளாதபடி, சகலத்துக்கும் உட்பட்டு ஊக்கத்துடன் உழைப்போம் என்ற தைரிய மனது கொண்டல்லவா அவ்வேலையில் பிரவேசித்தோம். ஆதலால் யாதோர் தனலாபத்தையும் அடைய முடியாத இவ்வேலையைச் செய்ய ஊக்கம் எங்கேயிருந்துவரும் என்று கண்டிருந்த நாம் அத்தொழிலை, மனப்பூரணமாய் ஏற்றுக்கொண்டபின்" அது சொள்ளை இது சொட்டை, அப்படி இப்படி, ஆ ஊ என்று சொல்வதில் யாது பயன்? அதற்கு மாறாய், கஷ்டங்கள் உண்டென்று தெரிந்தும் நமது மனச்சாட்சியுடன் (செய்யவேண்டிய வேலை விதிப்பிரகாரம் செய்வோமென்னும் உறுதிமொழிப்படி) உட்பட்டபடியால், நாம் சம்பளத்தைப் பாராதபடி ஊக்கத்துடன், (உண்மையுடன்) உழைக்கவேண்டியது உபாத்தியாயர்களின் கடமை என்பதைச்சொல்ல எவரும் பின் வாங்கார். இதில்தான் உபாத்தியாயருடைய பிறர்சிநேகம் பரோபகாரச்சிந்தை முதலிய தர்ம குணமுள்ள புண்ணியங்களடங்குகின்றன. தன இலாபத்தைக் கருதாது, பிறர்சிநேகத்துக்காக உள்ளதைக்கொண்டு, (நமது தரித்திரத்தையும் எண்ணுதபடி) தன்னைத்தானே பரித்தியாகம் (சொல்லவேண்டுமானால் பலி) செய்துகொள்கிறோம் என்னும் இந்த மேலான சிந்தனையொன்றே நம்மை ஊக்கத்துடன் உழைக்கச்செய்கிறது. இதைக்கொண்டறியவேண்டியது



என்னவெனில், உபாத்தியாயரின் ஊக்கக்குறைவுக்குக் காரணம் மனமேயொழிய பணமல்லவென்பதை எவ்விதத்திலும் ஒத்துக்கொள்வதென்பதே. இதற்கு மாறாய், இத்தொழிலை முழுமனதுடன் ஒப்புக்கொண்டுவிட்டு அதில் உள்ள கஷ்டங்களை முன்னிட்டு, உத்தம உபாத்தியாயர், தன் வேலையில் அனுசரிக்கவேண்டிய விதிப்படி நடவாமல், தன் வேலையை ஊக்கம்குன்றிப் பராமுகம்பண்ணினால் மெய்யாகவே இப்படிப்பட்டவர்கள், துரோகிகளும், பொதுச் சொத்தை வீணில் வாங்கி வயிறு வளர்த்து விளையம் செய்யும் சண்டாளர்களுமாவார்கள்!

நான் சில வருடங்களுக்குமுன் திருச்சியில் உபாத்தியாயராயிருந்தகாலத்தில், அக்காலத்தில் சர்க்கில் இன்ஸ்பெக்டராகவிருந்த கனம் சாம்பியன் துரையவர்கள் ஷை திருச்சி சர்க்கார் போதனாமுறைசாலையில் இதைப்பற்றின விஷயமாகவே வெகு தெளிவாய் ஆங்கிலத்தில் உபந்நியாசித்தார். உபாத்தியாயர்களின் சம்பளம் மிகவும் குறைவு என்பதை மிகவும் அனுதாபத்துடன் ஒத்துக்கொள்ளாமலில்லை. ஆயினும் காலக்கிரமத்தில் அக்குறைவு நீக்கப்படும் என்றும், அக்குறைவுஇருந்தாலும் உபாத்தியாயர்கள் அடையும் புண்ணியங்களுக்களவில்லை என்றும், இதை வெறுத்து குறைந்த சம்பளத்தில் இருக்க மனமில்லாதவர்கள், தங்கள் வேலையை அறைகுறையாய்ச் செய்வதைவிட, அவ்வேலையை விட்டுவிட்டேகுவது நலமென்றும் செப்பினர். நாமே யோசிக்கலாம். A-என்பவனிடம் B-என்பவன் வேலையில் அமர வரும்போது, B-செய்யவேண்டிய வேலையின் தன்மை, நேரம், அதற்குள்ள சம்பளம் முதலியவைகளைத் தெளிவாய் எடுத்துரைக்கிறான் என்றாவது அல்லது A-யினிடம் வேலைக்குப்போனால் இன்னமாதிரியான ஒழுங்குக்குக் கட்டுப்படவேண்டுமென்று B-க்கு முன்னதாக தெரிந்திருக்கிறதாகவாவது வைத்துக்கொள்வோம். B உடன்பட்டு வேலை செய்கிறான். செய்யும்போது வேலைக்கஷ்டம், நேரம், கூலிக்குறைவு இவைகளைச் சிந்திக்கிறான். சிந்தனைசெய்து இவ்வேலைக்குக் கூலி சொற்பம்தானே. ஏன் அதை அவன் சொன்னபடி நுணுநுணுக்கமாய்ப் பார்க்கவேண்டும் என்று பராமுகம் செய்வானாகில் A-என்பவன் என்ன செய்வான், அடே மடையசாம்பராணி, முட்டுக்கெட்ட மூதேவியே, உன் மண்டையில் உள்ள மூளை களிமண்ணு, என்று சொல்வானல்லவா? B-என்பவன் அவ்விதம் செய்யாமல், வேலையைச் சரியாய்ச் செய்துகொண்டே கஷ்டங்களைத் தெரிவிப்பானேயாகில் தனக்குச் சாதகத்தைத் தேடிக்கொள்வான். மேலும் A-என்பவனே B-யின் கஷ்டமறிந்து கொடுப்பான். கடைசியாய் இவ்வியாசத்தின் முழுச் சங்கதியையும் சுருக்கிச் சொல்ல

வேண்டுமானால் நாம் மனப்பூரணமாய் ஒத்துக்கொண்ட வேலையை ஊக்கத்துடன் செய்யவேண்டியதே.

"இது என்னடா தர்மசங்கடமாயிருக்கிறது" என்று ஏங்கலாம் ஒருவர், "வெட்டு ஒன்று துண்டு இரண்" டெனப் பேசிவிட்டார் என்று எண்ணலாம் மற்றொருவர், "இவனுக்குக் கையிற் கொஞ்சம் பசையுண்டுபோலிருக்கிறது, அதனால்தான் இப்படிப் பேசுகிறான்" என்று யோசிக்கலாம் வேறொருவர். "வேலைக்குற்ற கூலி இல்லாததினாலல்லவா ஊக்கம் குறைவுறுகிறது என்றது அதர்மமா" என்று சிந்திக்கலாம் இன்னொருவர். யான் இங்கு எழுதியதில் அப்படி தர்ம சங்கடமும் படபடப்பும் இல்லை, ஒரே பேச்சுமில்லை. நானும் அன்றன்றுள்ள எங்களப்பம் என்னும் மொழிக்குக்கூட இலாயக்கில்லாதவர்களிலொருவனே. இவ்வியாசத்தின் தலைப்பில் காட்டியவண்ணம் நம்முடைய சம்பளம் சொற்பமாயிருப்பதால் நமக்குச் சகாயம் கிடைக்கவேண்டிய வழியையும் தேடவேண்டியதுதான். ஆழத்தில் காலைவிட்டுக் கஷ்டப்படும்போது தனக்குச் சகாயம் கிடைக்க எப்படிக் கூக்குரலிட்டொருவனழுவானோ, அதுபோல் நாமும் நம்முடைய குறைக்காகக் கூக்குரலிடவேண்டியதுதான். ஆயினும் (அப்படிக் கூக்குரலிட்டாலும்) இது இடீரென்று அன்று முளைத்துத் தளிர்த்து பலன்தரக்கூடியதல்லவே, காலக்கிரமத்தில் படிப்படியாய் ஆகவேண்டியதென்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். இடையில் நாம் எல்லோரும் உண்மையுடன் உழைத்து நமது குறைகளை நாம் எல்லோரும் ஒன்றுகூடி அடிக்கடி விண்ணப்பித்துக்கொண்டால் (ஆனால் கிளர்ச்சியில்லாதபடி) நமக்குக் கட்டாயம் சகாயம் கிடைக்குமென்பது சத்தியமே. சொல்லவேண்டுமானால், சம்பள விஷயமாய் முன்னிருந்ததுபோலல்லாமல், இப்போது எவ்வளவோ அநுகூலமானவிதமாய் மாறுபாடடைந்திருக்கிறது. இது சந்தோஷத்துக்குரியதே. ஆகவே நாம் ஊக்கம் குன்றுவதற்குக் காரணம் பணமல்லவென்பதை இப்போதாகிலும் நமது சகோதரர்கள் கண்டுபிடிக்காமற் போகார்கள். முடிவாய் நண்பர்களனைவரும், தளரா மனதுடன் பிறர் சிநேகத்தை முன்னிட்டும், 'கடவுள் மெய்வருந்தக் கூலிதரும்' என்னும் வாக்கியத்தைக் கடைப்பிடித்தும், கடவுள் ஆசீர் பெருகும்படியாயும் சம்பளத்தைக் கருதாது ஊக்கமுள்ள உபாத்தியாயர்களாய் நடந்து வருவார்களாக.

பூர்வ மாணவர்களுளொருவனான

P. ஆரோக்கியம்,

(மாண்டலே).

Printed and Published by Rev. Br. Joseph, S. J. Superintendent
St, Joseph's Industrial School Press, Trichinopoly.

355

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY. 1920



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 10. | செப்டெம்பர் 1920. | மலர் 3.

## பத்திராதிபர் குறிப்புகள்.

கல்வி இலாகாத் தலைவர் அவர்கள் சமீபத்தில் வெளியிட்ட உத்தரவு ஒன்றில், உபாத்திமார் தாங்கள் பள்ளிக்கூடங்களில் படித்துக்கொடுக்கும் நேரம்போக மற்ற நேரங்களில் வாடிக்கையாய் அநேக மணிநேரம் வேறு

மாணவர்க்குத் தனிப்பாடம் சொல்லிக்கொடுக்கும் வழக்கத்தைக் கூடியமட்டும் நிறுத்தவேணுமென்று வற்புறுத்துகிறார். இப்படி ஒழிந்தநேரங்களில் வேலைசெய்வது அவர்கள் அமர்ந்திருக்கும் பள்ளிக்கூடப் பாடங்களைத் தகுந்தவிதமாய் ஆயத்தம் செய்வதற்கும் உற்சாகமாய்ப் போதிப்பதற்கும் தடையாயிருக்குமென்பது அவர் கருத்து.

***     ***     ***

இந்த உத்தரவைப்பற்றி விசாரிக்கும்படி சென்னை உபாத்திமைச் சங்கத்தார் கூடிய ஒரு கூட்டமானது அக்கருத்துச் சரிதான் என்று ஏற்றுக்கொண்டபோதிலும், உபாத்திமாரின் தற்காலச் சம்பளக்குறைவினால் அந்த உத்தரவை முழுதும் நிறைவேற்றுவது கூடாதகாரியமென்று வருந்துகிறது. ஆகவே, உபாத்திமாரின் சம்பளத்தை உயர்த்தியபின்தான் இந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரலாமென்று அபிப்பிராயப்படுகிறது.

***     ***     ***

நாமும் இப்படியே அபிப்பிராயப்படுகிறோம். எனினும், உபாத்திமாரின் சம்பள உயர்வைப்பற்றி நமது தாற்பரியம் எவ்வளவோ அவ்வளவு அவர்களுடைய வேலைத் திருத்தத்தைப்பற்றியும் தாற்பரியம் கொண்டிருக்கிறோம். உபாத்திமார் தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் செய்யும் வேலைக்கு அவர்கள் தற்காலத்தில் பெறும் சம்பளம் போதுமானதென்று பிறர் சொல்லவிடாமற் பார்ப்பது உபாத்திமாரின் கடமை. உபாத்திமாரின் வேலைக்குத் தகுந்த சம்பளம் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்களென்று உபாத்திமைத் தொழிலின் கஷ்டத்தை அறியாத சிலர் சொல்வதற்கு அநேக உபாத்திமாரின் ஊக்கக் குறைவே காரணமாயில்லையா?

***     ***     ***

ஆகவே, ஊக்கமுள்ள உபாத்திமார் தங்கள் சம்பள உயர்வைப்பற்றி நினைக்கட்டும், பேசட்டும், கூட்டங்கள் கூட்டட்டும், தங்கள் தீர்மானங்களை வற்புறுத்தட்டும். ஊக்கமற்ற உபாத்திமார் இங்ஙனம் செய்வது வெட்கக்கேடு.



***     ***     ***

போதிய சம்பளமில்லாமல் ஊக்கம் எங்கிருந்து வரும் என்றாலோ, முதலாவது நல்லமனதிலிருந்துவரும் என்றும் அப்படி வரச்செய்வது தங்களால் இயலாதென்று நினைக்கிறவர்கள் ஊதியம்பெறக்கூடிய வேறே வழியைத் தேடிக்கொள்ள வேணுமேயொழிய தங்கள் தொழிலின் மேன்மையைத் தங்கள் சம்பளத் தாழ்வு மட்டும் தாழ்த்திவிடக் கூடாதென்றும் பதிலளிப்போம்.

---

## பாடக்கிரமம். II.

### சாதாரணமாய்த் தெரிந்திருக்கவேண்டியவை.

### (General Knowledge)

23 OCT 1920

## I Standard.

### I Course (June to Mid-August):—

#### A. பிராணிகள் (Animal life.)

**குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகள்:**—பசு, எருமை, ஆடு, நாய், பூனை இப்பிராணிகளின் உணவு, உண்ணும் விதம், தண்ணீர் குடிக்கும் விதம், சப்தம் இவைகளை அறிதல்.

பசுவின் கன்று, எருமையின் கன்று, ஆட்டுக்குட்டி, நாய்க்குட்டி, பூனைக்குட்டி இவைகளின் விளையாட்டுகள்.

அணில், குரங்கு இவைகளின் வாசஸ்தலம், உணவு, சலனம், சப்தம்.

**குறிப்பு:**—மேற்கண்ட பிராணிகளின் அங்கங்களைப்பற்றி சுருக்கமாய் வர்ணிக்குந் திறமையுண்டாக்குக.

II Course (Mid-August to October) :—

**பறவைகள் :**— காகம், கிளி, வாத்து, கோழி, கோழிக்குஞ்சுகள் இப்பறவைகளின் நிறம், இறக்கைகளின் நிறம், தோகைகளில் வித்தியாசம், பறக்கும் விதம் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

**ஊர்வன :**—பல்லி, ஓணான் இவைகளின் வாசஸ்தலம், அங்கங்கள், சலனம்.

III Course (October to Mid-November) :—

**மீன் :**—குளங்குட்டைகளுக்கு உல்லாசப் பிரயாணஞ்செய்து, மீன் நீந்தும்விதம், உண்ணும்விதம் இவைகளைக் கவனித்தல்.

நீர்த்தாளியில் சோறு, கொசுக்கள் இவைகளைப் போட்டு மீன்களை வளர்த்தல்.

**தவளை :**—தவளைக்குஞ்சுகள் : இவைகளின் நிறம், சப்தம், சலனம் இவைகளைக் குளங்குட்டைகளில் கவனித்தல்.

IV Course (Mid-November to Mid-December) :—

**பூச்சிகள் :**—தோட்டம், வயல், வெளி முதலிய இடங்களில் சஞ்சரிக்கும் பூச்சிகளுள் சிலவற்றை அறிதல். வண்ணாத்திப்பூச்சி, தட்டாரப்பூச்சி, வண்டு இவைகளின் நிறம், சலனம், உணவு இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

V Course (Mid-January to March) :—

**எறும்புகள் :**—எறும்புப் பட்டாளம் பல சேர்ந்துகொய், தங்கள் முட்டைகள் முதலிய துணிக்கைகளைப் பற்றிக்கொண்டு ஊர்ந்து செல்வதை உற்றுநோக்குதல்.

கரையான் புற்று, தேனடை, இவைகளைக் கவனித்தல்.



VI Course (March to Mid-April) :—

**நண்டு :**—நண்டு வளை யிருக்குமிடத்திற்கு பிள்ளைகளை அழைத்துச்சென்று அங்கு காணும் விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்தல்.

**B. தாவரம் (Plant life.)**

I Course.

காய்ந்தவிதை, ஊறவைத்தவிதை (மொச்சை, நெல்) இவ்விதைகளை நட்டு தண்ணீர் ஊற்ற சிறு செடிகளாகும். விதைகள் முளைக்க, தண்ணீர் அவசியம்.

II Course.

**வேர் :**—வேர்களின் உதவியால் செடிகள் நிற்கின்றன. (பரீக்ஷணங்களால் ரூபித்தல்.)

**பிரகாண்டத்தில் :**—குருத்துகளும், இலைகளும், மொட்டுகளும், புஷ்பங்களும், பழங்களும் உண்டு.

III Course.

**புஷ்பங்கள் :**—சில புஷ்பங்களை அறிதல். அவைகளின் நிறம், வாசனை இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

IV Course.

**புஷ்பங்கள் :**—புஷ்பங்களில் தேனிருப்பது, இத்தேனை அருந்த அவைகளில் பூச்சிகள் சஞ்சரித்தல்.

V Course.

**பழங்கள் :**—சில பழங்களை அறிதல்.

பழங்களில் ஒரு விதை அல்லது பல விதைகள் அடங்கியிருத்தல்.

விதைகளை விதைத்து செடிகள் முளைக்கச்செய்யல்.

VI Course.

பழைய பாடம்.

**C. இயற்கைத்தோற்றம் (Natural Phenomena.)**

I Course.

**சூரியன் :**—வடிவம், உதயம், அஸ்தமனம், காலை, பகல், மாலை.

II COURSE.

**மழையைப்பற்றி வர்ணித்தல்:**—தூற்றல், சிறு மழை, பெரு மழை, சுத்த மழை ஜலத்தையும் பூமியில் தங்கும் மழை ஜலத்தையும் உற்றுநோக்குதல்.

III COURSE.

**காற்று:**—காற்று வீசுந் திசையைக் கண்டுபிடிக்கும் வகை. (கொடி, இலைகள், புகை இவைகளின் சலனத்திலிருந்து) காற்றின் வேகம்.

IV COURSE.

நதி, குளம், குட்டை முதலிய விடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்து அலைகள், நீரோட்டம் இவைகளைக் கவனித்தல். அங்கு வசிக்கும் பிராணிகள், இவைகளின் சமீபத்தில் பயிராகும் தாவரங்கள்.

V COURSE.

**உலோகங்கள்:**—இரும்பு, தாமிரம் இவைகளின் நிறம், உபயோகம் முதலியவைகளைப்பற்றிய சம்பாஷணை.

**கரையும் பொருள்:**—உப்பு சர்க்கரை.

**கரையாப்பொருள்:**—சீமைச் சுண்ணாம்பு.

VI COURSE.

**நிலம்:**—மணல், களிமண், மண் இவைகளைப்பற்றிய சம்பாஷணை. பழைய பாடம்.

## II Standard.

### A. பிராணிகள். (Animal life).

I COURSE.

குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகள் 1. நாய், 2. பூனை, 3. பசு, 4. ஆடு இவைகளின் தேக அமைப்பு, பழக்க வழக்கங்கள், உபயோகங்கள்.

II COURSE.

**பறவைகள்:**—புறா, வாத்து, காக்கை இவைகளின் பழக்க வழக்கங்கள், உணவு இவைகளை அறிதல். கோழி, வான்கோழி, கின்னிக்கோழி இப்பறவைகளின் பழக்க வழக்கங்கள், கூடுகள், முட்டைகள் முதலியவைகளைப் பற்றிய சம்பாஷணை.



**ஊர்வன:**—அரணை, வீட்டுப்பல்லி, மரப்பல்லி இவைகளின் சலனம், தேக அமைப்பு, முதலியவைகளைப் பற்றிய சம்பாஷணை.

III COURSE.

**மீன்:**—நீரிலுள்ள மீன்களின் பரிமாணம், நிறம் முதலியவற்றைக் கவனித்தல். நீர்த்தாளியில் மீன்களை வளர்த்து பழக்க வழக்கங்களை அறிதல்.

**தவளை:**—தேக அமைப்பு, உணவு, சலனம் இவைகளைப்பற்றிய சம்பாஷணை. குளங் குட்டைகளிலுள்ள தவளை முட்டை, குஞ்சுகள் இவைகளை உற்றுநோக்குதல்.

IV COURSE.

**பூச்சிகள்:**—வெட்டுக்கிளி, கரப்பான் பூச்சி, ஈ, எறும்பு, வண்டு இவைகளைக் கவனித்து இவைகளின் ஸ்பரிசக் கருவிகள், கால்கள், சிறகுகள் சலனம், உணவு, உண்ணும் விதம் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

V COURSE.

நண்டு, சிலந்தி வசிக்குமிடம், சலனம், உணவு, நண்டு வளை, சிலந்தி வலை இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

VI COURSE.

**புழுக்கள்:**—மண்ணில் வசிக்கும் சில புழுக்களை அறிதல், அவைகளின் சலனம்.

### B. தாவரம். (Plant life).

I COURSE.

அவரை, சோளம் ஆமணக்கு (காய்ந்த விதை, ஊற வைத்த விதை) இவ்விதைகளை நட்டு தண்ணீர் ஊற்ற சிறு செடிகளாகும். முளைப்பதற்குத் தண்ணீர் அவசியம்.

II COURSE.

**வேர்:**—வேர்களை அறுத்துவிட்டால் செடி வளராது. ஈரத்தைநோக்கி வேர்கள் ஓடுகின்றன.

**பிரகாண்டத்தில்** :—குருத்துகளும், இலைகளும், மொட்டுகளும், புஷ்பங்களும், பழங்களும் அமைந்திருக்கும் இடங்கள்.

III COURSE.

**புஷ்பங்கள்**:—பூவரசு, பரங்கிபோன்ற தனிமையாக மலரும் புஷ்பங்கள், சம்பங்கி, அரளிபோன்ற கொத்துக் கொத்தாக மலரும் புஷ்பங்கள்.

IV COURSE.

**புஷ்பங்கள்** :—புஷ்பங்களில் தேனிருக்குமிடம், அத்தேனை பூச்சிகள் உண்ணும் விதம்.

V COURSE.

**புஷ்பங்கள்** :—செடிகளுக்கும் பிராணிகளுக்கும் அழகைத் தருகின்றன. புஷ்பங்களிலிருந்து பழம் உண்டாகிறது.

VI COURSE.

பழங்களில் விதையிருப்பது. சில பழங்களில் ஓரே விதை, சிலவற்றிற் பல.

**C.** இயற்கைத் தோற்றம். (**Natural Phenomena**).

I COURSE.

**சூரியன்** :—வடிவம், உதிக்கும் திசை, அஸ்தமிக்கும் திசை, சூரிய கிரணங்கள். சூரியனைப்பார்க்க புகைக் கண்ணாடி உபயோகித்தல். சந்திரன் தோற்றம்.

II COURSE.

**மேகங்கள்** :—நிறங்கள், காற்றால் மேகங்கள் சலன மடைதல், மழைகாலத்து மேகம்.

**மழை** :—விதம், மழை ஜலத்தின் உபயோகம்.

III COURSE.

**வானம்** :—தோற்றம், வானவில் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

**காற்று**:—இளங்காற்று, பெருங்காற்று, புயல்காற்று.

**சீதோஷ்ணம்**:—கோடைகாலத்து நாள், மாரிகாலத்து நாள், காற்றடிநாள், பனிகாலத்து நாள் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.



IV COURSE.

நதி, குளம், குட்டை முதலியவைகளில் வசிக்கும் பிராணிகள், சுற்றுப்புறங்களிலுள்ள தாவரங்கள் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

V COURSE.

**உலோகங்கள்** :—இரும்பு, தாமிரம், இவைகளைப் பற்றிய சம்பாஷணை.

செங்கல் காளவாய், குயவன் சூளை, இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

VI COURSE.

மணல், களிமண், கெட்டிமண், உதிர்மண் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

## III Standard.

**A.** பிராணிகள். (**Animal life.**)

I COURSE.

குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்க்கும் பிராணிகள் : பூனை, பூனையினம் - நாய், நாயினம் - முயல் முதலிய பிராணிகளின் தேக அமைப்பைப்பற்றிய சம்பாஷணை.

II COURSE.

**பறவைகள்** :—வாத்து, காகம், கிளி, கோழி இவைகளின் அலகுகள், பாதங்கள், சிறகு இறக்கைகள், நிறம் முதலியவைகளைப்பற்றி அறிதல். கூட்டங் கூட்டமாக பறந்து திரியும் பக்ஷிகள்.

**ஊர்வன** :—பல்லி, ஓணான், அரணை இவைகளின் அங்க அமைப்பு, சலனம், ஒத்துப்பார்த்தல்.

III COURSE.

**மீன்** :—துடுப்புகள், மீன்கள் அவைகளை உபயோகிக்கும் விதம். சுவாசிக்கும் விதம்.

**தவளை** :—நீந்தும் விதம், சுவாசிக்கும் விதம், தவளையின் கண்கள், காதுகள், வாய் - நாக்கு, சப்தம் இவைகளைபபற்றிய சம்பாஷணை. தவளை முட்டைகளையும் குஞ்சுகளையும் வளர்த்தல்.

### IV COURSE.

**பூச்சிகள்** :—வண்டின் தேக அமைப்பு. உளுத்த கட்டை, அழுகின வஸ்துக்கள் இவைகளில் பூச்சிகள் காணப்படுதல். தானியங்களை கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி சில தினங்கள் கழிந்தபின் அதில் பூச்சி புழுக்கள் காணப்படுதல்.

### V COURSE.

சிலந்திப்பூச்சி, நண்டு இவைகளின் அங்க அமைப்பு, வாசஸ்தலம், பழக்கவழக்கங்கள் முதலியவைகளைப்பற்றிய சம்பாஷணை.

### VI COURSE.

**புழுக்கள்** :—மண் புழுவின் தேக அமைப்பு, சலனம் இவைகளைப்பற்றிய சமபாஷணை. பழைய பாடம்.

## B. தாவரம். (Plant life.)

### I COURSE.

நனைந்த விதை, காய்ந்த விதை. விதையில் முளையுண்டு, முளையின் அடிப்பாகம் பூமியை நோக்கியும் மேல்பாகம் ஆகாயத்தை நோக்கியும் வளர்தல். கொதிநீரில் போடப்பட்ட விதை முளைக்காது.

### II COURSE.

**வேர்கள்** :—பூமியினுள் நாலா பக்கங்களிலும் பரவுதல், பூமியைப் பண்படுத்தவேண்டிய அவசியம். ஆணிவேரும், பக்கவேரும். இரண்டு செடிகளைப்பிடுங்கி தண்ணீருள்ள பாத்திரத்தில் ஒன்றை வேர் கீழாகவும், மற்றொன்றை வேர் மேலாகவும் வைத்துக் காணப்படும் விஷயங்களை காரணத்துடன் அறிதல்.

### III COURSE.

**பிரகாண்டம்** :—கிளைகள், இலைகள் முதலியவைகளைத் தாங்க அடிமரம் பருத்திருப்பது. (ஆல், தென்னை) வேருக்கும் அடிமரத்துக்கும் வித்தியாசம். கிளைகளில் இலைகள் பொருந்தியிருக்கும் விதம். (எருக்கு எதிர் எதிர்) (பூவரசு மாறி மாறி) சில இலைகள் தனித்தனியாகவும், சில கொத்துக்கொத்தாயும் அமைந்திருத்தல்.



### IV COURSE.

**புஷ்பங்கள்** :—பழங்கள் உற்பத்தியானவுடன் புஷ்பங்கள் வாடுதல். பாங்கி, அவரை, புடலை, பூவரசு, வெண்டை முதலிய புஷ்பங்களில் பழம், அல்லது வித்தாக மாறும் பாகத்தை உற்று நோக்குதல்.

### V COURSE.

**விதைகள்** :—விதைகளை அடக்கி வைத்துக்கொள்ளும்படி பழங்கள் பெட்டிபோல் உதவுகின்றன. புளி, அவரைக் குடும்பம், நிலக்கடலை, மா, தென்னை இவைகளின் பழங்கள் விதைகள் அல்லது நெற்றுகள், இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

### VI COURSE.

**பழங்கள்**:—கெட்டியான மேல்தோலையுடைய பழங்கள். மெல்லிய தோலையுடைய பழங்கள். உலர்ந்த தோலுள்ள பழங்கள். பழைய பாடம்.

## C. இயற்கைத் தோற்றம். (Natural phenomena.)

### I COURSE.

**சூரியன்** :—கிரணங்கள், செங்குத்துக் கிரணங்கள், சாய்ந்த கிரணங்கள். உதிக்கும் திசையில் வித்தியாசம்.

**சந்திரன்** :—வடிவம், சந்திர கலைகள், உதிக்கும் நேரம் வித்தியாசப்படுதல்.

### II COURSE.

**மேகங்கள்** :—பலவித மேகங்கள். அவற்றின் சலனம். மழை ஜலத்தின் வேலையைப்பற்றிய சம்பாஷணை.

புல் பூண்டு முதலிய தாவரங்கள், பிராணிகள் முதலியவைகளுக்கு உபயோகமாகிறது.

### III COURSE.

**காற்று** :—வீசும் திசையை அறிதல். திசைகள், உபதிசைகள்.

**சீதோஷ்ணம்** :—பொருள்கள் உஷ்ணம் அடைதல், குளிர்ச்சி அடைதல்.

IV. COURSE.

**தண்ணீர் :**—தண்ணீரின் குணங்களைப்பற்றிய சம்பாஷணை.

V COURSE.

**உலோகங்கள் :**—இரும்பு, தாமிரம், வெள்ளி இவைகளின் நிறம், உபயோகம் முதலியவைகளைப்பற்றிய சம்பாஷணை.

VI. COURSE.

**நிலம் :**—மணல், களிமண், பல நிறமுள்ள மண்கள், கெட்டி மண், உதிர் மண் இவைகளின் தன்மைகளைப்பற்றிய சம்பாஷணை. பழைய பாடம்.

**D.** நன்னடத்தை, அரசியல்.

**(Moral instruction and civics)**

I COURSE.

குடும்பத்தில் பிள்ளைகளின் கடமைகள். (கதைகள், உதாரணங்கள் மூலமாக சம்பாஷணை.)

II COURSE.

உடன்மாணவர்களுடன் பழகவேண்டிய மாதிரிகை.

III COURSE.

நமது சக்கரவர்த்தியைப்பற்றி அறிதல்.

IV COURSE.

துரைத்தனத்தாரின் நன்மைகள். கடிதப் போக்குவரவைப்பற்றிய சம்பாஷணை. (தபால்.)

V COURSE.

துரைத்தனத்தாரின் நன்மைகள். ரஸ்தாக்கள், ருப்புப்பாதைகள், கால்வாய்கள், பாலங்கள் இவைகளைப்பற்றிய சம்பாஷணை.

VI COURSE.

துரைத்தனத்தாரின் நன்மைகள். ஊர்க்காவல் (போலீஸ்). பழைய பாடம்.



# IV Standard.

## A. பிராணிகள் (Animal life.)

I COURSE.

குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகள். கீழ்க்கண்டவைகளின் பழக்கவழக்கங்களுக்குத் தக்கவாறு அவைகளின் அங்கங்கள் அமைந்திருக்கின்றன. பசு × எருமை, வெள்ளாடு × செம்மறி ஆடு, குதிரை × கழுதை, பன்றி, யானை மேற்கண்ட பிராணிகளினின்று கிடைக்கும் பொருள்களும் உபயோகங்களும்.

II COURSE.

**பறவைகள் :**—வாத்து, கோழி, காகம், பருந்து இவைகளின் அலகுகள், பாதங்கள் முதலியவற்றின் அமைப்பு; சில பறவைகளின் கூண்டுகள், முட்டைகள் இவைகளைப்பற்றிய சம்பாஷணை. ஓர் முட்டையின் பாகங்கள்.

**ஊர்வன :**—பாம்பின் தேக அமைப்பு, நகரும் விதம், உணவு.

III COURSE.

**மீன் :**—முட்டை, விலாங்கு, கொரவை, விரால், உழுவை, கெழுத்தி, கெண்டை, இவைகளைப்பற்றிய பொது அறிவு. தவளை ஜீவ சரித்திரம்.

IV COURSE.

**பூச்சிகள் :**—கரப்பான் பூச்சி, வண்ணாத்திப்பூச்சி, இவைகளின் தேக அமைப்பு; ஸ்பரிசக்கருவிகள், கண்கள், சிறகுகள், கால்கள் இவைகளை அறிதல்.

எறும்பு வளை, கறையான் புத்து, தேனடை, குளவிக் கூடு, கொசுக்கூட்டம் இவைகளைப்பற்றிய சம்பாஷணைகள்.

V COURSE.

**பூச்சிகள் :**—வண்ணாத்திப் பூச்சியின் ஜீவசரித்திரத்தை ஆராய்தல்,

### VI Course.

தேன், நத்தை, நத்தைக்கூடு இவைகளின் தேக அமைப்பும் பழக்க வழக்கங்களும்.

## B தாவரம் (Plant life.)

### I Course

விதை, விதையும் விதை முளைத்தலும், காய்ந்த வித்து, முளை கண்ட வித்து இவைகளை ஒத்துப்பார்த்தல். விதையில் ஜலம் செல்லும் வழி, விதை முளைக்க ஆகாயம் அவசியம்; விதைகள் எவ்வண்ணம் நடப்பட்டிருந்தபோதிலும் வேர் கீழ்நோக்கியும், பிரகாண்டம் மேல் நோக்கியும் வளரும். முளையின் பாகங்கள்: நெல், அவரை, ஆமணக்கு, மணிலாக்கொட்டை இவைகளை முளைக்கப்போட்டு உற்று நோக்குதல்.

### II Course.

**வேர்**:—ஆணிவேர்த் தாவரங்கள், சல்லிவேர்த் தாவரங்கள் இவைகளை ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்தல்.

### III Course.

சில வேர்கள், சில பட்டைகள், சில பழங்கள், முட்கள் நிறைந்த சில தாவரங்கள், சில மரக்கிளைகளை வெட்டி நட்டுப் பயிராக்குதல்.

### IV Course.

**இலைகள்**:—சூரிய வெளிச்சம் பெற இலைகள் செய்துகொள்ளும் ஏற்பாடுகள், வெளிச்சம் இருட்டு இவ்விடங்களில் பயிராகும் செடிகளின் வளர்ச்சியில் வித்தியாசம். இலை உதிர்தல்.

### V Course.

**புஷ்பங்கள்**:—புஷ்பத்தின் பாகங்கள் (ஊமத்தை, வெண்டை, பூவரசு, சப்பாத்தி,) ஒவ்வொரு பாகத்தின் அமைப்பும், அலுவலும்.

**பழங்கள்**:—பிஞ்சு, காய், பழம், வித்து இவைகளின் அமைப்பிலுள்ள வித்தியாசங்களை அறிதல்.



### VI Course.

**தாவரவர்க்க விருத்தி**:—விதை விதைத்தல், வெட்டி நடுதல், பூமிக்குள் வளரும் சில பிரகாண்டங்கள் (கருணை சேனை, வெங்காயம்) வரண்ட இடங்களில் காணப்படும் தாவரங்கள்.

## C. இயற்கைத் தோற்றம் (Natural Phenomena.)

### I Course.

**சூரியன்**:—காலை - மதியம், மாலை, இரவு - பகல் இவைகளின் கால அளவில் வித்தியாசம். சூரியன் உதிக்கும்திசை மாறி வருதல்; சூரிய உஷ்ணம் வேறுபடுதல். சந்திரகலைகள்.

### II Course.

**மேகம்**: மழை உண்டாகும் விதம், நீராவி, மழை காலம், கோடை காலம், பனி காலம்.

### III Course.

**காற்று** வீசும் திசையைக் கண்டுபிடிக்கும் விதங்கள்.

**சீதோஷ்ணம்**:—குளிர்காற்று, உஷ்ணக் காற்று, நதி, நீரோட்டம், அலை, மலை, ஆறு, ஏரி, கடல் அதன் பாகங்கள் இவைகளைப்பற்றிய அறிவு.

### IV Course.

தகரம், ஈயம், இவைகளின் தன்மை, உபயோகம், இரும்பு, பித்தளை, வெண்கலம், இவைகளின் தன்மை உபயோகம். துரு, துரு நீக்கும் விதம்.

### V Course.

சுக்கான்கல், சுண்ணாம்பு, கிளிஞ்சல், இவைகளைப் பற்றி யறிதல்.

### VI Course.

களிமண், வண்டல் மண், இவைகளின் தன்மையும், இவ்விடங்களில் விருத்தியாகும் தாவரங்களும்.

## D. நன்னடத்தை, அரசியல்.

## (Moral Instruction & Civics.)

### I Course.

குடும்பமும் குடும்ப தர்மங்களும், பிதாவின் அதிகாரம், குடும்பத்தினரின் கடமைகள், குடித்தனமும்-துரைத்தனமும், துரைத்தனத்தாரின் பொறுப்பு, குடிகளின் கடமைகள்.

### II Course.

**துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள்.**

கல்விப்பயிற்சி—பாடசாலைகள்.

நியாய விசாரணை—மத்தியஸ்தர்கள்.

பஞ்சாயத்துகள்—நியாயஸ்தலங்கள்.

### III Course.

ஊர்க்காவலும் அதன் நன்மைகளும்; இந்த வேலையைச் செய்வோர்கள்.

நாம் போடும் கடிதத்தின் விருத்தாந்தம், தபாற் தலைகளின் உபயோகம்.

### IV Course.

இருப்புப்பாதையின் உபயோகமும் நன்மைகளும். தர்ம வைத்திய சாலைகள்.

### V Course.

துரைத்தனத்தாருக்கு நாம் செய்யவேண்டிய உதவி. வரி கொடுக்கவேண்டியதின் அவசியம்.

### VI Course.

யூனியன், பஞ்சாயத்து, நகர பரிபாலன சங்கம்.

## E. பூகோளம். (Geography.)

### I Course.

ஸ்கேலை அநுசரித்து பிளான் வரைதல். பல அளவுள்ள பிளான்கள், பள்ளிக்கூடப் பிளான், பள்ளிக்கூடத்தின் எல்லைகள்.



### II Course.

திருச்சிப்பட்டணத்தின் எல்லைகள், இயற்கையமைப்பு, பிரிவுகள், அப்பிரிவுகளிலுள்ள முக்கிய கட்டிடங்கள்.

### III Course.

திருச்சி ஜில்லா :—எல்லை, இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், - மழை - விளைபொருள் - கைத்தொழில் - வியாபாரம் - போக்குவரவுக்குரிய சாதனங்கள்.

### IV Course.

திருச்சி ஜில்லாவின் தாலூக்காக்கள்; திருச்சி தாலூகா - லால்குடி தாலூகா - இவ்விரண்டு தாலூக்காக்களைப்பற்றிய விசேஷ அறிவு.

### V Course.

திருச்சி ஜில்லாவின் இதர தாலூக்காக்களைப்பற்றிய விவரம்.

### VI Course.

இந்தியா :—பொதுவிவரம் - எல்லை, இயற்கையமைப்பு, மலைப்பிரதேசம், பீடபூமிப்பிரதேசம், சமவெளிகள்.

நதிகள் :—கங்கை, பிரமபுத்திரா, சிந்து, சில தென்னிந்தியா நதிகள்.

## V Standard.-

## A. பிராணிகள். (Animal life.)

### I Course.

குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகள். கறண்டும் பிராணிகள் (எலி, அணில், முயல்) பூச்சி புழுக்களைத் தின்னும் பிராணிகள் (மூஞ்சூறு, வௌவால்.) இப்பிராணிகளுடைய அங்க அமைப்பு - பழக்க வழக்கங்கள்.

### II Course.

பறவைகள் :—பறவைகளின் தேக அமைப்பு.

சிறகுகள் :—இறகுகள் - பேறு இறகு, எலும்புக்கூடு.

வௌவாலுக்கும் பக்ஷிகளுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை.

ஊர்வன :—தென்னிந்தியாவில் காணப்படும் சில பாம்புகள். பாம்பின் தேக அமைப்பு - நகரும் விதம். உணவு : விஷப்பை.

ஓணான் - பல்லி - ஆமை - முதலை.

## III COURSE.

மீன் :—அதன் தேக அமைப்பு - உபயோகம் (ஆகாரம், எண்ணெய் எடுத்தல், எரு).

மீன்—திமிங்கலம் இவைகளைப்பற்றிய ஒற்றுமை வேற்றுமைப் பாடம்.

தவளை :—தேக அமைப்பு ; ஜீவசரித்திரம்.

தவளை—தேரை ஒற்றுமை வேற்றுமைப் பாடம்.

## IV COURSE.

பூச்சிகள் :—வாய் அமைப்பை அநுசரித்து பூச்சிகளின் இனங்கள்.

1. கடித்து அரைத்துத் தின்னும் பூச்சிகள். (வெட்டுக்கிளி).

2. உறுஞ்சும் பூச்சிகள் (வண்ணாத்திப்பூச்சி, கொசு, மூட்டைப்பூச்சி).

3. கடித்து உறுஞ்சும் பூச்சிகள் (எறும்பு, தேனீ, குளவி).

4. துளைக்கும் பூச்சிகள் (உளுவண்டு).

## V COURSE.

தேள், நண்டுத் தெறுக்கால், பூரான், மரவட்டை, நத்தை ஓடு, கிளிஞ்சல் ஓடு, முத்துச்சிப்பி.

## VI COURSE.

கடலில் வசிக்கும் பிராணிகள் :

கடற் பஞ்சு.

பவளம்.

சங்கு.



## B. தாவரம். (Plant life.)

## I COURSE.

விதை :—மேல்தோல் - அங்கு காணப்படும் களை - இலைக்கருப்புகள் - இளங்குருத்து - முளைக்கையில் காணப்படும் மாறுதல்கள்.

அரிசி, கோதுமை, உளுந்து, எள்ளு, ஆமணக்கு இவைகளில் அடங்கியிருக்கும் சத்து.

விதை முளைத்தலின் சங்கியை.

முளைக்கும் விதை சுவாசித்தல் : தாவர வளர்ச்சிக்கு பிராணவாயு தேவை.

## II COURSE.

வேர் :—வேரின் அலுவல்கள் : ஈரத்தை கிரஹிக்கும் சக்தி. மணற்பாங்கில் வளரும் தாவரங்களின் வேர் - சல்லி வேரின் தன்மை - சல்லி வேர்த் தாவரங்களால் ஆற்றங்கரைகள், தோப்புகள், காடுகள் முதலியவை பாதுகாக்கப்படுதல்.

ஆலமரம் - விழுதுகள் - உபயோகம்.

சதைப்பற்று வேர் (முள்ளங்கி, சர்க்கரைவள்ளி).

## III COURSE.

பிரகாண்டம் :—வகைகள் (நேராக நிற்பவை, படர்ந்து செல்பவை, தொத்தும் கொடிகள், பூமிக்குள் வளரும் பிரகாண்டங்கள்.)

மரத்தின் கடினமான பாகம்—மிருதுவான பாகம். ஆகாரம் செல்லும் வழி.

வீட்டுவேலை, தட்டுமுட்டு சாமான்கள், உழவுக் கருவிகள், வண்டி சாமான்கள் முதலியவைகளுக்கு உபயோகப்படும் சில மரங்கள்.

## IV COURSE.

இலைகள் :—இலையின் பாகங்கள், வடிவம், விளிம்பு. இலைகளுக்கு சூரிய வெளிச்சம் தேவை.

பிரகாண்டத்தில் இலைகள், சூரிய வெளிச்சத்தை அநுசரித்து, அமைந்திருக்கும் விதங்கள். இலைகள் நீராவி பரிமணித்தல்.

புல்லுருவி—காளான்.

### V Course.

புஷ்பங்கள் :—புஷ்பங்களின் பாகங்கள், அலுவல்கள், மகரந்தம் பிடித்தல்—சொந்த மகரந்தம், மாற்று மகரந்தம் - மகரந்தம் பிடிக்கும்வண்ணம், பூதளங்கள் பூச்சிகளைக் கவரும் விதம். (தும்பை, ஜவந்தி இவை போன்ற சிறிய புஷ்பங்கள் கூட்டங்கூட்டமாய் அமைந்திருத்தல்.)

விதை பிடித்தல் :—காற்றின் உதவியால் (நெல், சோளம், கம்பு).

மதுகரங்களால் (மா, பலா, புளி, ஆல், அரசு). பகலில் புஷ்பிப்பவை. இரவில் புஷ்பிப்பவை.

### VI Course.

விதைகள் பரவுதல். (காற்று, ஜலம், பிராணிகள்) தாவரங்களை விருத்திசெய்யும் வகைகள். பயிர்கள் நோய் பிடிக்காவண்ணம் பாதுகாக்கும் வகைகள். புஷ்பிக்காத தாவரங்கள்—Ferns, காளான், நிலப்பாசி, நீர்ப்பாசி, நாய்க்குடை.

## C. இயற்கைத்தோற்றம் (Natural Phenomena.)

### I Course.

சூரியன் : தோற்றம் - பூமியிலிருந்து தூரம் - உத்தராயணம் - தக்ஷிணாயனம் - தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் சூரிய வெளிச்சம் தேவை. சந்திரன் : அதன் சலனங்கள்.

### II Course.

மேகங்கள் : உண்டாகும் விதம் - ஆகாயத்தில் சஞ்சரித்தல்.



மழை : உண்டாகும் விதம் - மழைஜலத்தின் உபயோகம் - மழை அளக்கும் கருவி - மழைகாலத்தில் ஜனங்களுக்கு உண்டாகும் வியாதிகளும் சிகிச்சைகளும்.

காற்று : காற்று என்பது யாது? காற்றூடி இயந்திரம் - உஷ்ணக்காற்று, குளிர்காற்று, தரைக்காற்று, ஜலக்காற்று.

### III Course.

நதிகள் : மழைஜலத்தின் வேலை - நதிகளின் உற்பத்தி. ஆற்றுப்படுகை : நதிகள் வளைந்து செல்லுதல் - உபநதிகள் - கிளைநதிகள் - முகத்துவாரம் - நதி அரங்கம் - ஆறுகளின் உபயோகங்கள்.

### IV Course.

பூசாரம் : அடைமண், வண்டல்மண், களிமண், களர், கரிசல் இந்நிலங்களின் விவரங்களும் இவைகளில் பயிராகும் தாவரங்களும்.

### V Course.

உலோகங்கள் : பஞ்சலோகங்களின் தன்மை - உபயோகம்.

### VI Course.

வெண்கலம்—பித்தளை.

துத்தநாகம்—நிலக்கரி இவைகளைப்பற்றிய பாடங்கள்.

## D. நன்னடத்தை, அரசியல். (Moral Instruction & Civics.)

### I Course.

குடித்தனமும் துரைத்தனமும் :—மனிதரின் சிறிய பிரிவு - பெரிய பகுதி. துரைத்தனத்தின் அருமையும் பெருமையும்.

### II Course.

துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள் :—

ஆதாரப்படிப்பு—உயர்தரப்படிப்பு.

ஆதாரப்படிப்பின் நிர்வாஹம்.

நியாய விசாரணை—பஞ்சாயத்து.

கிராம நியாய விசாரணை—ஜில்லா நியாய விசாரணை.

## III Course.

துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள் :—

ஊர்க்காவலர்—அவர்களின் அலுவல்.

குற்றம்—குற்றவாளிகளைக் கண்டிக்கும் அதிகாரிகள்.

தேசக்காவல்—நிலப்படை—நீர்ப்படை.

தபால்—தந்தி—தபால் இலாகாவின் நன்மைகள்.

தந்தி கொடுக்கும் முறைகள்—நன்மைகள்.

## IV Course.

துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள் :—இருப்புப் பாதையின் உபயோகம்-தென்னிந்தியா இருப்புப்பாதை யைப்பற்றிய பொது விவரம். துரைத்தனத்திற்கு கட்டிடங்கள் அவசியம். பொது கட்டிடங்கள், சாலைகள், கால்வாய்கள், அணைக்கட்டுகள், பாலங்கள். (விவசாய சாதனங்கள்).

## V Course.

துரைத்தனத்தாருக்கு நாம் செய்யுமுதவி :—வரிகள் பல. நிலவரி, உப்பு வரி, சாராயவரி, ஏற்றுமதி, இறக்குமதி வரி, முத்திரைக் கடிதங்கள், வருமான வரி.—

கிராம பரிபாலனம்—ஜில்லா பரிபாலனம்.

## VI Course.

| | |
|---|---|
| தாலூகா போர்டுகள்.<br>ஜில்லா போர்டுகள். | } ப்ரதேச சுய ஆட்சி. |

மாகாண அரசாட்சி.

## E. பூகோளசாஸ்திரம் (Geography)

## I Course.

பூமி :—வடிவம், தட்டையல்ல, பரிமாணம், சலனம், தினகதி (இரவு பகல்) வருஷகதி (பருவங்கள்).



## II Course.

நிலம்-நீர் : பூமியின் மேற்பரப்பு, மேடு பள்ளங்கள், கோளார்த்தங்கள், கண்டங்கள், சமுத்திரங்கள், சமவெளிகள், குன்றுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் இவைகளின் உபயோகங்கள்.

## III Course.

கண்டங்கள் : ஆசியா : பொதுவிவரம் - இந்தியா - சீனா, ஜப்பான்.

ஐரோப்பா : பொதுவிவரம் - பிரிடிஷ் தீவுகள், இதன் பெருமைக்குக் காரணம். ருஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி.

ஆப்பிரிக்கா : பொது விவரம். நைல் காங்கோ ப்ரதேசம், ஸஹாரா பாலைவனம், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா - பொது விவரம்.

அமெரிக்கா : புது உலகம்—வடபாகம்-தென்பாகம், கனடா, ஐக்கிய மாகாணங்கள், சமுத்திரங்கள்.

இந்தியா: பொது விவரம்—எல்லை, இயற்கைப்பிரிவுகள், இமயமலை ப்ரதேசம், சிந்து கங்கா சமவெளி, தக்ஷிணம் (விந்தியமலை, கிழக்கு மலைத்தொடர், மேற்கு மலைத்தொடர்), கடற்கரைநாடுகள், பர்மா.

## IV Course.

சென்னைராஜதானி: பொது விவரம்—எல்லை, இயற்கைப் பிரிவுகள், இராஜாங்கப் பிரிவுகள்.

மலைகள்: மேற்குத்தொடர் மலை, கிழக்குத்தொடர் மலை, நீலகிரி மலை, பாலக்காட்டுக் கணவாய், ஆனைமலை.

நதிகள் : தென்னிந்திய நதிகளின் விசேஷ தன்மைகள்—கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, இந்நதிகளின் போக்கு, அரங்கங்கள் முதலியன, மற்ற ஆறுகள்.

ஏரிகள் : சில்கா, கொல்லேரு, பழவேற்காடு, திருவனந்தபுரத்துக்கழிகள்.

தீவுகள்: இலங்கைத்தீவு, இராமேஸ்வரம், அந்தமான் தீவு, லக்ஷத்தீவுகள்.

சீதோஷ்ணஸ்திதி - மழை: ஓர் இடத்தின் சீதோஷ்ணஸ்திதியை நிர்ணயிக்க வழிபாடுகள். பருவக்காற்று (மழைக்காற்று).

மலையாளக்கரை—சோழமண்டலக்கரை. இவ்விரண்டு இடங்களிலும் பெய்யும் மழை அளவை ஒத்துப் பார்த்தல். சீதோஷ்ணஸ்திதியிலிருந்து உண்டாகும் விசேஷங்கள். ஆறுகளின் வெள்ளத்தில் வித்தியாசம்.

கிழக்குக் கரையில் மழையில்லாமலிருக்கையில், அங்கு பாயும் ஆறுகளில் வெள்ளம்.

விவசாயத்திற்கு வேண்டிய கால்வாய்கள், கிணறுகள், குளங்கள், அணைக்கட்டுகள்.

## V Course.

சென்னைராஜதானி: விளைபொருள்கள், நன்செய், புன்செய், நெல், கரும்பு, புகையிலை, சோளம், கம்பு etc. எண்ணெய் வித்துகள், பருத்தி, காப்பி, தேயிலை முதலியவை பயிராவதற்கு ஏற்ற சாதனங்களும், பயிராகும் இடங்களும்.

காடுகளில் கிடைப்பவை—நமது மாகாணத்திலுள்ள காட்டு பிரதேசங்கள்.

உலோகங்கள்—மிருகங்கள்.

கைத்தொழில்—வியாபாரம்.

போக்குவரவு மார்க்கங்கள்—துறைமுகங்கள்.

நல்ல துறைமுகங்களின் லக்ஷணங்கள்.

## VI Course.

சென்னை ராஜதானி:—

ஜனத்தொகை.

பாஷை.

அரசாட்சி.

முக்கிய பட்டணங்களும் விசேஷங்களும்.

Printed and Published by Rev. Br. Joseph, S. J., Superintendent,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.



அல்லது எழுதலாம்; நன்றாய்ப் பேசவும், நன்றாய் எழுதவும் அறிவதே பாஷா ஞானம் எனப்படும். ஆனால் பேசவும் எழுதவும் அறிந்தவர்கள் பிறர் பேசுவதையும் எழுதுவதையும் கண்டுபிடிக்கவும் கூடியவர்களாயிருக்கவேண்டும். ஆகவே, யாரிடத்தில் பாஷா ஞானம் முற்றுப் பெற்றிருக்கிறதோ அவர்கள் பிறர் பேசும் பேச்சின் அர்த்தத்தைக் கிரகிக்கவும், தங்கள் கருத்தைப் பேச்சினால் விளக்கவும், பிறர் எழுதியதை வாசிக்கவும், தங்கள் வார்த்தைகளை எழுதவும் திறமைவாய்ந்தவர்கள். இந்தத் திறமையை மாணவரிடத்தில் உண்டாக்குவதே பாடசாலைகளில் பாஷை கற்பிப்பதின் நோக்கமாகும்.

பாஷைப் பாடத்தில் பற்பல பாகங்கள் உண்டென்பது இதனால் தெளிவாகிறது. பிறர் பேசும் பேச்சைக் கண்டுபிடிப்பது முதற்பாகம்; பிறர் சொல்லும் ஒவ்வொரு பதமும், வாக்கியமும், வாக்கியத்தொடரும் அதற்குரிய கருத்தை நமது புத்தியில் எழும்பச்செய்தால், நாம் அவர்களுடைய பேச்சைக் கண்டுபிடிக்கிறோம் என்கலாம். நமது கருத்தைத் தகுந்த பதங்களாலும், வாக்கியங்களாலும், வாக்கியத்தொடர்களாலும் பிறருக்கு வெளிப்படுத்துவது பாஷைப் பாடத்தில் இரண்டாம் பாகம்; இப்படி வெளிப்படுத்துவதற்கு பதங்களை அறிந்திருப்பது பற்றாது; அவைகளை இலக்கணப்படி வாக்கியங்களாய் அமைக்கவும், வாக்கியங்களை அலங்காரமாய் அடுக்கவும் அறிந்திருப்பதுமல்லாமல், சரியான உச்சரிப்போடு சந்தர்ப்பத்துக்கிசைந்த ஏற்றத்தாழ்வான குரலோடு சொல்லவும் அறியவேண்டும். பாஷைப் பாடத்தில் இன்னுமொரு பாகம் வாசித்தல் எனப்படும்; எழுத்துத்தொடர்களை பேசும் வார்த்தைகளோடு சம்மந்தப்படுத்துவதும், பேசுகிறதுபோல் சரியான உச்சரிப்போடும், தகுந்த குரலோடும் வாசிப்பதும் வாசகப் பாடத்தில் முதன்மையாய்க் கவனிக்கப்பாலது; இத்தோடு அர்த்தம் கண்டுபிடிப்பதும் சேர்ந்திருத்தல் நகுதி. கடைசியாய் நமது மனதிலுள்ளதைத் திருத்தமாயும் தெளிவாயும் எழுத்துமூலமாய் விளக்குவது பாஷைப் பாடத்தின் முடிவு. இந்த நாலு பாகமும் ஒருங்கே நடைபெற்றால்தான் பாஷைப் பாடம் சித்திபெறுதலாகும்.

இந்த நாலு பாகங்களையும் ஒன்றுசேர்த்து நடத்த இடங்கொடுப்பது அந்தந்த வகுப்பின் வாசகப் புத்தகம். வாசகப் புத்தகத்தின் உபயோகம் அதில் அடங்கியிருக்கும் விஷய ஞானமல்ல, ஆனால் பாஷை ஞானம். விஷய ஞானமும் பாஷா ஞானமும் ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்டிருந்தாலும் அது வேறே, இது வேறே; விஷயமறிந்தவர்கள் எல்லாரும் பாஷை தெரிந்தவர்களல்ல, பாஷை தெரிந்தவர்கள் எல்லாரும் விஷயமறிந்தவர்களல்ல. இந்த இரண்டு ஞானமும் கூடியமட்டும் ஒன்றையொன்று ஒட்டியதாயிருந்தால் நல்லது; அறிந்த விஷயத்தை தெளிந்த பாஷையால் விளக்குவதும், அழகிய பாஷைக்குப் பொருந்திய விஷயத்தைக் கொண்டிருப்பதும் தகுதி. ஆகிலும் வாசகப்பாடத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது பாஷையேயன்றி விஷயமல்ல; பாடத்தில் அடங்கிய விஷயமெல்லாம் பாஷை விர்த்திக்கு உதவியாகவேண்டும். இந்தக் கோட்பாடு மனதிலிருந்தால் வாசகப் பாடத்தைப் பற்பலவிதமாக நடத்தி பிள்ளைகளின் அருவருப்பைக் குறைத்து, விருப்பை அதிகரித்து அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களுடைய பாஷைத் திறமையை வளரச்செய்யலாம்.

பாஷைத்திறமை இருவிதம்: பேச்சுத்திறமை, எழுத்துத்திறமை. இருவிதத் திறமைக்கும் பதங்களின் அர்த்தக்கிரகிப்பும், இலக்கணப்பயிற்சியும், வாக்கியத்தொடர் அப்பியாசங்களும் அவசியம். ஆனால் பேச்சில் விசேஷித்துக் கவனிக்கவேண்டியது என்னவென்றால்: கருத்தை விரைவாய் வெளிப்படுத்துவது. எழுத்திலோ சரியாய் வெளிப்படுத்துவது. இன்னும் பேச்சுத்திறமைக்கும் எழுத்துத்திறமைக்கும் அஸ்திவாரம்போன்ற சில விஷயங்களுண்டு: பேச்சுத்திறமையில் உச்சரிப்பும், ஏற்றத்தாழ்வான குரலும் கவனிக்கத்தகும்; எழுத்துத்திறமைக்கு வெறும் வாசித்தலும் வெறும் எழுதுதலும் அடிப்படை. வெறும் வாசித்தலென்றால் ஓர் அட்சரக் கூட்டமானது எந்த வார்த்தையோடு சம்மந்தப்பட்டிருக்கிறதென்று கிரகிப்பது; வெறும் எழுதுதலென்றால் ஒரு வார்த்தையை எந்த அட்சரக் கூட்டத்தால் குறிக்கலாமென்று அறிந்து குறிப்பது. அஸ்திவாரமான இந்த



வாசித்தலும் எழுதுதலும் கற்றுக்கொண்டபின்தான் பாஷைத் திறமையின் பாகமென்று சொன்ன எழுத்துத் திறமை துவக்கும்; ஆனால் அதற்குமுன்னேயே பேச்சுத் திறமையை விர்த்திசெய்ய முடியும். எழுத்துத்திறமை துவக்கினவுடனே இரு திறமைகளும் ஒன்றுசேர்ந்து, ஒன்றுக்கொன்று உதவியாகி முழுப் பாஷா ஞானத்தை உண்டுபண்ணும். அப்போதுதான் பாடசாலைகளில் வாசகப் புத்தகங்கள் பாஷை கற்றுக்கொடுக்க வழியாகும். அதன்முன் புத்தகமில்லாமலே பாஷை கற்றுக்கொடுக்கத் துவக்கவேண்டும்.

---

## பாடக்கிரமம். III.

### தமிழ்ப்பாஷை.

[பாஷா ஞானம் இன்னதென்பதையும், அதில் அடங்கிய பாகங்கள் படிகள் முதலியவற்றையும் நன்குணர்ந்த உபாத்திமார் அடியிற்கண்ட சுருக்கமான குறிப்புகளிலிருந்து அநேக காரியங்களை யூகித்து அந்தந்த வகுப்புக்குத்தகுந்த பாடக்கிரமத்தை சந்தர்ப்பங்களுக்கேற்றபடி ஏற்படுத்திக்கொள்ளலாம். இப்படி ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவியாயிருப்பதே இக்குறிப்புகளின் நோக்கம்.]

### I Standard.

1. திருத்தமான உச்சரிப்போடும் இலக்கணப் பிழையில்லாமலும் தனித்தனி வாக்கியங்களாய்ச் சம்பாஷித்தல். சம்பாஷணைக்கு ஆதாரமாக, வாசகப் புத்தகத்தையொட்டிய பொருள்களும் படங்களுமே விசேஷமாய் உபயோகிக்கப்படவேண்டியது.

2. பிள்ளைகளுக்கு அர்த்தம் விளங்கக்கூடிய பதங்களைத் தத்தளிக்காமல் வாசிப்பதும், எழுத்துப்பிழையில்லாமல் எழுதுவதும். மகா-ள-ள-ஸ்ரீ S. G. தானியேல் இயற்றிய பாலர்பாடப் புத்தகத்தில் காட்டியிருக்கும் வழியைப் பின்பற்ற.

### II Standard.

1. திருத்தமான உச்சரிப்போடும் இலக்கணப் பிழையில்லாமலும் தனித்தனி வாக்கியங்களாயும் தொடர் வாக்கியங்களாயும் சம்பாஷித்தல். சம்பாஷணைக்கு

ஆதாரமாக, வாசகப் புத்தகத்தையொட்டிய பொருள்களும் படங்களும், கதை முதலிய விஷயங்களும் உதவும். படிப்படியாய், பற்பலவிதமான வாக்கியங்களை அமைப்பதில் மாணவர்களைப் பழக்கவேண்டும்; இதற்காக சுலபமான சில இலக்கண விதிகளை உபாத்தியாயர் மனதில் வைத்திருக்கத்தகும்.

2. பாடப் புத்தகத்தை எளிதில் வாசிப்பதும், அதில் அடங்கிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதும், அவைகளைப்பற்றிய கேள்விகளுக்குச் சரியான மறுமொழி சொல்வதும், செய்யுள் பாடங்களைப் பாராமல் ஒப்பிப்பதும்.

3. புத்தகத்தைப் பார்த்தெழுதுவதும், சொல்வதெழுதுவதும். எழுத்துத் திருத்தத்தைக் கவனிக்க.

## III Standard.

1. பட வாசிப்பும் பொருள் வாசிப்பும். படிப்படியாய், பலவித வாக்கியங்கள் அமைக்கப் பழகுதல்; இதற்காக, உபாத்தியாயர் சில இலக்கண விதிகளை மனதில் வைத்திருக்கத்தகும்.

2. பாடப் புத்தகத்தை எளிதாயும் ஏற்ற குரலோடும் அர்த்தம் கண்டுபிடித்து வாசித்தல். வாக்கியம் இன்னதென்று உணர்தல். வாக்கியங்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களாகப் பிரித்தல். பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் பொறுக்கி எடுத்தல். செய்யுள் பாடங்களைத் தகுந்த இராகத்தோடு பாராமல் சொல்லுதல்.

3. பார்த்தெழுதுவதும் சொல்வதெழுதுவதும். எழுத்துத் திருத்தத்தையும் அழகையும் கவனிக்க. கேள்விகளுக்குத் தனித்தனி வாக்கியங்களாகப் பதில் எழுதுதல்.

## IV Standard.

1. தொடர் வாக்கியங்களாய்ப் பற்பல பொருள்கள், சம்பவங்கள் முதலியவற்றைப்பற்றி பேசுதல். பேசும் விஷயங்கள் சாதாரணமாய்ப் பாடப் புத்தகத்தையொட்டியும், பேசும் நடை இலக்கணத்தின் பற்பல விதிகளுக்கு உதாரணங்களாயும் இருக்கவேண்டும். பற்பல விதமான அப்பியாசங்கள் தேவை.

2. பாடப் புத்தகத்தை அர்த்தத்தோடு வாசிப்பதுமல்லாமல், வாக்கியங்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், இவைகளின் அடைமொழிகளாகப் பிரிக்கவும், பற்பலவகையான வாக்கியங்களாக மாற்றவும் திறமையுண்டுபண்ணுதல். செய்யுள் பாடங்களைத் தகுந்த இராகத்தோடும் அபிநயத்தோடும் பாராமல் சொல்லுதல்.

3. பார்த்தெழுதுவது சொல்வதெழுதுவதுமல்லாமல், சொந்த வாக்கியங்களும், வாக்கியத் தொடர்களும் எழுதத் துவக்குதல். விஷயமும் நடையும் 1-ம் பாகத்தைப்போல்.

## V Standard.

1. பாடப் புத்தகம்: வாசிப்பு, அர்த்தம், இலக்கண அப்பியாசங்கள், வசனநடை அப்பியாசங்கள், செய்யுள் பாடுதல்.

2. இலக்கணம்: உதாரணங்கள்மூலமாய் இலக்கணத்தில் எளிதான சில சூத்திரங்களை அறிதல்.

3. வாக்கியத்தொடர்: பாடப் புத்தகத்தையும் இலக்கணத்தையும்சார்ந்த பற்பல அப்பியாசங்கள்.

## குறிப்பு.

(1) அந்தந்தப் பள்ளிக்கூடங்களிலும் வகுப்புகளிலும் உபயோகிக்கப்படும் பாடப் புத்தகத்திலுள்ள பாடங்களை ஒவ்வொரு மாதம், அல்லது கோர்ஸ் அல்லது டேர்மில் நடத்தக்கூடியது இவ்வளவென்று வருஷத் துவக்கத்திலேயே பிரித்துக்கொள்க.

(2) அப்படியே சம்பாஷணைக்கேற்ற படங்கள், பொருள்கள், விஷயங்கள் இவையென்பதையும் திட்டஞ்செய்துகொள்க.

(3) அடியிற்கண்ட இலக்கணச் சூத்திரங்களும் வாக்கியத்தொடர் அப்பியாசங்களும் 5-வது வகுப்பை உத்தேசித்து எழுதப்பட்டிருந்தபோதிலும், மற்ற வகுப்பு உபாத்திமாரும் பிள்ளைகளைப் பாஷையில் அப்பியசிக்கும்போது மனதில் வைத்திருக்கத்தகும்.

### A. இலக்கணச் சூத்திரங்கள்.

1. வாக்கியம், பதம், எழுத்து.
2. தனி வாக்கியம், தொடர் வாக்கியம்,
3. பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல்.
4. திணை, பால், எண், இடம், வேற்றுமை.
5. முக்காலமுற்று, ஈரெச்சம், ஏவலும் வியங்கோளும், வினைக்குறிப்பு.
6. செய்வினை செயப்பாட்டுவினை; வினையாலணையும்பெயர், தொழிற்பெயர்.
7. பகுபதம், பகாப்பதம்.
8. பகுதி, விகுதி, இடைநிலை.
9. உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து.
10. வழக்கமான எழுத்துப் புணர்ச்சிகள்.

### B வாக்கியத் தொடர் அப்பியாசங்கள்.

1. படித்த அல்லது படிக்கக்கேட்ட கதையைத் திரும்பச் சொல்லல்.
2. எதிரில் வைக்கப்பட்ட பொருளை அல்லது படத்தை விவரித்தல்.
3. சுருக்கிச்சொன்ன கதையைப் பெருக்கல்.
4. பிள்ளைகள் தாமாகவே சில கதைகளை அல்லது விஷயங்களை எழுதல்.
5. கொடுத்த சில வார்த்தைகளைக்கொண்டு சம்பவங்களை விவரித்தல்.
6. கடிதம் எழுதல்; மனுச்செய்தல்.
7. திருநாட்கள், பிரயாணங்கள் முதலியவற்றை வர்ணித்தல்.

---

Printed and Published by Rev. Br. Joseph, S. J., Superintendent,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

724
23 NOV 1920
R. C. BOARDING & TRAINING INSTITUTION TRICHY.

J. M. J.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 10. | நவம்பர் 1920. | மலர் 5. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

இந்தியாவில் ஆரம்பப் பாடசாலைகளைக் கவனித்தறியும்படி ஒரு மிஷனரி கமிட்டி ஏற்படுத்தப்பட்டுப் பற்பல சிறு கிராமங்களில் சுற்றித்திரிந்தது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தக் கமிட்டியின் அபிப்பிராயப்

படி நமது தேசப்பாடசாலைகள் ஜனசமூகை சேவைக்கு இன்னும் அதிகமாய்ப் பயன்படும்பொருட்டு வழிப்பாடுகள் தேடுவது அவசியமாம். அதாவது, பிள்ளைகளுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பது மாத்திரம் உபாத்திமாரின் நோக்கமாயிராமல், தங்களிடத்தில் படித்த பிள்ளைகள் பிற்காலத்தில் பிறருக்கு உதவிபுரிய ஆவலும் திறமையும் உள்ளவர்களாகும்படி அவர்களை இளமையிலேயே பயிற்றுவதும் உபாத்திமாரின் கடமையென்று உணரவேண்டும். இந்தக்கடமையை நிறைவேற்றுவதற்கு உபாத்திமாரே முதன்முதல் பரோபகார சிந்தையுடையவர்களாயிருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

* * *

சென்றமாதக்கடைசியில் நமது பாடசாலையைப் பரிசோதிப்பதற்காக, ஒன்பதாவது சர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்கள் முதல்விசையாக வந்தார்கள். பரிசோதனை முடிந்து திருப்தியாகவே திரும்பினார்களென்று ஊகிக்க இடமுண்டு. பாடசாலையைவிட்டுப் போகுமுன் அதில் பயிலும் மாணவருக்குச் சில புத்திமதி சொன்னார்கள். உபாத்திமாருடைய சம்பளக் குறைவைப்பற்றி வருந்தி அது உயரும்படி முயற்சியெடுப்பது அவசியந்தான் என்றார்கள். ஆகிலும் படித்துக்கொடுக்கும் தொழிலைக் கெடுதியாய்ச் செய்யாதபடியும் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றார்கள். கெட்டிக்காரனான சித்திரக்காரன் தனக்குத் தகுந்த சம்பளம் கிடைக்கவில்லையென்று தாறுமாறாய்ச் சித்தரித்து தன் பேரைக்கெடுத்துக் கொள்வானோ? ஆகிலும் சில உபாத்திமார் இக்காலத்தில் உற்சாகம் குன்றி தங்கள் வேலையை அறைகுறையாய்ச் செய்கிறார்கள். பெரியோர் பேரில் உள்ள வருத்தத்தைச் சிறிய பிள்ளைகளிடம் காட்டுவது தருமமா? இவ்வாறாக, உபாத்திமா



23 NOV 1920

ரிடம் அநுதாபங்காட்டி அவர்களை [illegible] அவர் சொல்லி முடிந்ததும் நாம் இ[illegible]ளாய் உபாத்திமாருக்கு அவசியமென்று எண்ணிப் போதித்து வந்த புத்தியையே அவரும் முக்கியமெனக்கருதி உரைத்ததால் அவருக்குநன்றி சொன்னோம்.

---

## பாடக்கிரமம் IV.

### கதையும் கைவேலைகளும்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். இந்தக் கண்களுக்கு ஒளி கொடுப்பது பொது அறிவு. இந்த மூன்று விஷயங்களையும் பிரயோசனமாய்க் கிரகித்துப் பிரயோகிக்கத் தூண்டுவது மனமகிழ்ச்சி. இந்த மனமகிழ்ச்சியைச் சிறுவரிடத்தில் பற்பலவழியாய் விர்த்தி செய்யலாம்; சாதாரணவழி: கதைசொல்லல், நடித்தல், பாடல், பற்பல கைவேலை. இதெல்லாம் ஒன்றுக்கொன்று சம்மந்தப்படுத்தினால் உத்தமம்: அதாவது, கதை கேட்டதினால் பிள்ளைகளுக்குண்டான மகிழ்ச்சியை அதை நடித்து, அல்லது பாடி, அல்லது சித்தரித்து, அல்லது களிமண் வேலை, குச்சி வைத்தல், விதை அடுக்குதல் முதலிய பல கைவேலைகளைச் செய்து வெளியிடப்பண்ணவேண்டும். கேட்ட கதையைத் திருப்பிச் சொல்வதிலேயே கதைப் பாடத்தின் பயன் அடங்கினதல்ல; திருப்பிச்சொல்ல முடியாவிட்டாலும் அதைக்கேட்பதில் பிள்ளைகளுக்குண்டாகும் சந்தோஷமே முக்கிய பயன். அந்தச் சந்தோஷத்தை வெளியிடப்பண்ணினால் அது அதிகரிக்கும். இந்த நோக்கத்தோடு கதைகளைத் தெரிந்தெடுத்து அவைகளுக்குத்தகுந்த நடித்தல், பாடல், கைவேலை முதலியவைகளை ஆராயவேண்டும்: ஒவ்வொரு கதையோடும் நடித்தலையும்

பாடலையும் கைவேலைகளையும் சம்மந்தப்படுத்தத் தேவையில்லை. கதை முக்கியம்; அத்தோடு கூடியமட்டும் வெளியடையாளங்களைச் சேர்த்துக்கொள்ள.

இந்தப்பாடம் நமது பாடசாலையில் முதல் மூன்று வகுப்புகளுக்கு மாத்திரம் ஏற்பட்டிருக்கிறது. மேல் வகுப்புகளில் இப்பாடத்தின் நோக்கத்தை வேறு வழியாய் நிறைவேற்றலாம்.

இதுவிஷயத்தில் நமது பாடசாலைப் பாடக்கிரமத்தைப்பற்றி நமது பூங்கொத்து 8, மலர் 1, 3, 4-களில் நாம் எழுதியுள்ளதைப் படித்து ஒவ்வொரு உபாத்தியாரும் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் இசைந்த கதைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும். ஒவ்வொரு வாரத்திலும் ஒரு கதையாவது சொல்லப்பட வேண்டுமென்பது நமது அபிப்பிராயம்.

---

## பாஷை கற்பித்தல்.

(ஓர் பாடக் குறிப்பு)

மகா-ள-ள-ஸ்ரீ T. S. கணபதி ஐயர் அவர்கள் எழுதியது.

நோக்கம்: வாக்கியம் வாசித்தல் (ஆரம்பபாடம்)

குறிப்பு:—சம்பாஷணை மூலமாகவே போதித்தல்

பீடிகை: பிள்ளைகள் **பேசட்டும்** (மேசையின் மீதுள்ள ஒரு பொருளைப்பற்றி) ஒவ்வொரு பையனும் நான் **பேசினேன்**; இரண்டு மூன்று பையன்கள் சேர்ந்து நாங்கள் **பேசினோம்** என்று சொல்லட்டும்.



| விஷயம் | முறை |
|---|---|
| **I** | |
| புதிய அறிவு: | |
| (1) நான் பேசி**னேன்.** நான் வாயினால் பேசி**னேன்** | கரும்பலகையில் கேள்வி மூலமாய் வரவழைத்த (1) இந்த வாக்கியத்தை எழுதி (2) வாக்கியத்தையும் எழுதி '**னேன்**' '**னோம்**' இதன் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளும்படி செய்க. |
| (2) நாங்கள் பேசி**னோம்** | |
| (3) நான்பேசு-**கிறேன்** நாங்கள் பேசு-**கிறோம்** | **கிறேன்**; **கிறோம்**: சம்பாஷித்து அபிப்பிராயம் அறியட்டும். |
| (4) நீ பேசு-**கிறாய்** | '**கிறாய்**' '**கிறீர்கள்**' '**னீர்கள்**':— பற்பல சம்பாஷணைக் கேள்விகளாலும், பிள்ளைகளை பேசச்செய்தும் விளக்கிக் காட்டவும். |
| (5) நீங்கள் பேசு-**கிறீர்கள்** | |
| (6) நீங்கள் பேசி-**னீர்கள்** | |
| **II** | |
| (7) ராமன் பேசு-கிறான்<br>(8) ராமன் பேசி-னான் } | (ராமன் என்பது யாராவது ஓர் பையனைக் குறிக்கும்) இந்த வாக்கியங்களின் அபிப்பிராயம அப்பையனுடைய சம்பாஷணையால் விளங்கும். |
| (9) ராமனும் கோபாலனும் பேசுகிறார்கள் | இரண்டு பையன்களுடைய சம்பாஷணையிலிருந்து 9-10 வாக்கியங்களில் '**கிறார்கள்**; **னார்கள்** அபிப்பிராயத்தை விளக்கிக் காட்டலாம். |
| (10) ராமனும் கோபாலனும் பேசினார்கள். | |

கரும்பலகைச் சுருக்கம் :

(1) பேசுகிறேன்—பேசுகிறோம்.

(2) பேசுகிறாய்—பேசுகிறீர்கள்.

(3) பேசுகிறான்—பேசுகிறார்கள்.

[**குறிப்பு**:—இந்தப் பாடம் பாஷை கற்பிக்கும் விதத்தை உதாகரிப்பதற்காக மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. சில உபாத்திமாருக்கு பாடத்திலுள்ள விஷயத்தையேயன்றி பாஷைகற்பிக்கத்தெரியாது; பாஷைகற்பிப்பதென்றால் என்னவென்று மலைப்பார்கள். அவர்களுக்கு இந்தப் பாடம் ஓர் மாதிரிப்பாடமாயிருக்கலாம். இதில் கற்பிக்கப்பட்டிருப்பது தமிழ்ப்பிள்ளைகளுக்கு அவ்வளவு வருத்தமில்லை; இதைவிட வருத்தமானதும் பிரயோசனமானதுமான பாஷை விவரங்களை எப்படி போதிக்கலாம் என்று இந்த உதாரணத்திலிருந்து உபாத்திமார் யூகித்துக்கொள்ளலாம்—பத்திராதிபர்.]

---

## கணக்கில் ஓர் பாடக்குறிப்பு.

(மகா-ா-ா-ஸ்ரீ T. S. கணபதி ஐயர் அவர்கள் எழுதியது.)

நோக்கம்:—(கூட்டல், ஆரம்பப்பாடம்.)

உபகரணம்:—மணிச்சட்டம்; குச்சுக்கட்டுகள்.

**பீடிகை**:—(1) 9-பொருள்களுடன் எத்தனை சேர்த்தால் 11-பொருள்கள் ஆகும் $9 + ? = 11$ ( $9 + 1 = 10$; $10 + 1 = 11$ என்று விடை வருவிக்க, அல்லது $9 + 2 = ?$ ( $9 + 1 = 10$ $10 + 1 = 11$ என்று விடை வருவிக்க.)

(2) $8 + 4 = ?$ ( $8 + 2 = 10$; $10 + 2 = 12$ என்ற விடை.)



(3) $7 + 5 = ?$ ( $7 + 3 = 10$; $10 + 2 = 12$ என்ற விடை.)

இதைப்போன்ற சில மனக்கணக்குகள் கொடுக்க:

புதிய அறிவு—

ஒரு ஜன்னலில் 17 கம்பிகளும் மற்றொன்றில் 15 கம்பிகளும் இருக்கின்றன. மொத்தக்கம்பிகள் எத்தனை?

```
 17
 15
----
 32
----
```

17 = 1 பத்து 7 ஒன்றுகள்
15 = 1 ,, 5 ,,

32 = 2 பத்துகள் 12 ஒன்றுகள்
12 ஒன்றுகள் = 1 பத்து 2 ஒன்றுகள்.
2 பத்துகள் + 12 ஒன்றுகள் = 3 பத்துகள் 2 ஒன்றுகள்.

**பரீட்சை**—ஒரு கட்டில் 18 எழுதுகோல்களும் மற்றொன்றில் 19 எழுதுகோல்களும் இருந்தால் மொத்தம் எவ்வளவு?

*N.B.*—இதை கோடுகள் வரைந்து அல்லது கட்டங்கள் போட்டு விளக்குக.

[இதில் கவனிக்கத்தக்கது: $17 + 15 = 20 + 12 = 30 + 2 = 32$. Cf. கொத்து 7, மலர் 2, பக்கம் 6.]

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடது பக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்

படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

## I. மானேஜர்கள் கூட்டம்.

1920-ஆம் செப்டெம்பர்-மீ 3-உ திருச்சிராப்பள்ளி முனிசிபாலிட்டி, இருதயபுரம் R. C. ஆரம்பப் பாடசாலையில், ஷை முனிசிபாலிட்டிக்குள்பட்ட அநேக Aided ஆரம்பப் பாடசாலை மானேஜர்களின் கூட்டம் ஒன்று, (திருச்சிராப்பள்ளி திருக்குடும்பப் போதனா பாடசாலையின் தலைமை ஆசிரியராகிய) சங். லூயிஸ் மிராந்த சுவாமியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடி பின்வரும் தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன :—

(1) நமது காருண்ய இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சம்பளக் கமிட்டியார், தற்கால விலைவாசிகளின் ஏற்றத்தைக் கருதியும், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், தன் மதிப்புள்ளவராகயிருந்து காலட்சேபம் செய்வதன்பொருட்டும் குறைந்தது ரூ. 30 சம்பளமாவது பெறவேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை, இக்கூட்டம் மகிழ்ச்சியுடன் பாராட்டுவதோடு, அது அவசியமாக செய்யத்தக்கது என்றும் உறுதிகொள்கிறது.

மற்றும், அவ்வாறு சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு, தற்காலம் Aided பாடசாலைகள், சர்க்காரிடமிருந்து பெறும் திரவியசகாயம் சற்றேனும் போதாதாகையால், ஷை Aided பாடசாலைகளுக்கு அடியிற் கண்டவண்ணம் திரவியசகாயம் கொடுத்து உதவவேண்டுமாய் மிகவும் வணக்கத்துடன் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது.

| | | |
|---|---|---|
| Elementary Higher Grade Trained Teacher | மாதம் ஒன்றுக்கு | 25 ரூ. கிராண்டு. |
| Elementary Lower Grade Trained Teacher | ,, | 20 ரூ. |
| Untrained Teacher | ,, | 15 ரூ. |

(2) இந்நாட்களில் வீட்டு வாடகையின் ஏற்றம் வெகு கொடுமையாயிருப்பதால், ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஏற்ற வசதி



யான ஓர் கட்டிடத்திற்கு அதிக வாடகை கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு நிர்வாகிப்பது மானேஜர்களுக்குப் பெருத்த கஷ்டத்தை உண்டாக்குகிறபடியால், ஒவ்வொரு பாடசாலைக்கும், அது அமைந்திருக்கும் இடம் (Locality) விஸ்தீரணம், இதர வசதிகள் இவைகளை அநுசரித்து வாடகையின் பொருட்டு திரவியசகாயம் செய்யவேண்டுமென்று மிகவும் வணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறது.

(3) பழைய ஏற்பாட்டின்படி, ஆரம்பப் பாடசாலைகளில் வழங்கிவந்த Transfer Certificates அனாவசியம் என்று ரத்து செய்யப்பட்ட நாள் முதற்கொண்டு, அக்காரணம்பற்றி ஷை பாடசாலைகளில் ஏற்பட்டுவரும் பிள்ளைகளின் ஒழுங்கீனம், அபிவிருத்திக் குறைவு இவைகளை நினைக்கும்பொழுது மிகவும் வருந்துகிறது. ஆகையால் இக்கூட்டம் மறுபடியும் ஷை Transfer Certificates-இன் பிரயோகத்தை ஆரம்பப் பாடசாலைகளில் அமுலுக்குக் கொண்டுவரும்பொருட்டு, மிகவும் வணக்கத்துடன் பிரார்த்தித்துக்கொள்கிறது.

(4) மேலே தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை, கல்விலாகா தலைவர், இன்ஸ்பெக்டர்கள் முதலியவர்களுக்கு வணக்கத்துடன் தெரிவிக்கும்படி இன்றைய அக்கிராசனாதிபதி அவர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறது.

---

## II. கதைப்பாட்டு.

நண்பர்களே! சகோதரர்களே!!

ஆரம்பக்கல்வி என்பதும் பாலர் வகுப்பு என்பதும் ஒன்றே அன்றோ? அப்படிப்பட்ட வகுப்பு உபாத்திமார்கள் தம் வகுப்புப் பிள்ளைகளை எம்மாதிரி கொண்டுவரவேண்டும் எவ்விதம் அவர்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டும் என்பது நம் சகோதரர் யாவருக்கும் தெரிந்த விஷயமே.

சிறு பிள்ளைகளுக்கு கதைகேட்பதிலும், பாட்டுக்கேட்பதிலும், தாங்களே பாடுவதிலும் மிகுந்த சந்தோஷம் உண்டென்றும், பெரியவர்கள் செய்வதைப்போல் தாங்களும் செய்யப் பிரியமுள்ளவர்களென்றும் தெரிந்திருக்கிறோம்.

ஆகையால் ஷை சிறு பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும் சன்மார்க்க நீதியையும் போதிக்க சிறு கதைகளும், பாட்டுகளும் சொல்லிக்கொடுத்தல் ஒவ்வொரு பாடசாலையிலும் வழங்கி வருகிறது. இதுதான் ஆரம்பக்கல்விக்கு முக்கிய துணையாகவும் பிள்ளைகளுக்கு உற்சாகமும் உபாத்தியாயரிடத்தில் பிரியமும் உண்டாக்கக் கூடியதென்று என் அனுபவத்தில் தெரிந்ததால் பின்வரும் கதை சம்பந்தமான பாட்டை யான் எழுதத்துணிந்தேன். இதில் குற்றங்குறைகளிருப்பினும் பொறுத்தருள்வீர்களாக.

### நரியும் மேளமும்.

(என் சேவல்போன இடம் என்ற சேவல்பாட்டு மெட்டு)

1. தோட்டத்திற்குள் குள்ளநரி ஒன்றுவந்ததுவாம்
தூரத்திலே ஒரு குருவி மேயக்கண்டதுவாம்
2. நாட்டத்துடன் அதன்மேலே நரியும் பாயும்போது
நாட்டியிருந்த மரத்தில் மத்தளம் காற்றடித்தபோது
3. சத்தங்கொள்ள நரியுமப்போ அண்ணாந்துபார்த்து
சந்தோஷமாய் கொழுத்த ஒருபிராணியென்று நினைத்து
4. எண்ணத்துடன் மேலே எகிறி மேளத்தைக் கீழ் தள்ளி
எக்கிக்கொண்டு மேளத்தோலை துண்டுதுண்டாய்க் கிழித்து
5. ஒன்றுமில்லாதது கண்டுகொண்ட ஆசையைவிட்டு
ஒன்றுமில்லா பொருளை நம்பி கொழுத்த குருவியைவிட்டு
6. ஓசைதனை கேட்டு நானும் கண்ட குருவியை விட்டேன்
ஓடிப்போன குருவியைநான் தேடி எப்படிப்பிடிப்பேன்
7. என்றுசொல்லி புலம்பிக்கொண்டு ஏமாந்து போயிற்றே
ஏதுமில்லா பொருளைநம்பி இருப்பதைத் தோர்க்காதே.

V. S. NATESA VAJAPAIYER,
3rd assistant teacher
Board Ely. school,
Satyamangalam.

---



## III. உபாத்தியாயரும் சம்பளமும்.

இவ்வருட ஆகஸ்டு மாத சஞ்சிகையில் P. ஆரோக்கியம் என்பவர் எழுதின வியாஸத்தில் உபாத்திமார்கள் தங்கள் சம்பளங்களைக்கருதாது ஊக்கத்துடன் உழைத்துவரவேணுமென்றும், எலிமெண்டரி ஸ்கூல் உபாத்திமார்களின் குறைவான சம்பளத்தை ஏற்கனவே அறிந்திருந்தும் அதற்கு உடன்பட்டவர்கள் அதினால் வரும் பலாபலனை அனுபவிக்கத்தான் வேண்டும் என்றும் பற்பல இடங்களில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். என்றாலும் நமது சம்பளம் உயர்வைப்பற்றி நாமும் அதிக பிரயாசை எடுத்து அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டாமா? “திண்ணையிலிருந்தால் தெய்வம் படிபோடுமா” என்றபடி நமது கஷ்டநஷ்டங்களை அடிக்கடி மேலாவிற்கு எடுத்துக்காட்டாவிடில் நம்மைக் கவனிப்பார் யாவர்? நம்மைக்காட்டிலும் அதிகச் சம்பளம் பெறுவோர்களாகிய சப்ரொஜிஸ்டரார், பள்ளிக்கூடங்களின் சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்கள் இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்களும் தங்களுக்குச் சம்பளம் உயரவேணுமென்று சதா கேட்டுக்கொண்டிருப்பது பத்திரிகைவாயிலாக நமக்குத் தெரிந்த விஷயமே. 1920 ௵ ஆகஸ்டு ௴ 26 ௳ வெளிவந்துள்ள சுதேசமித்திரனிலும், இதற்கு முன்னும் பின்னும் பல பத்திரிகைகளிலும் சப் ரொஜிஸ்டரார், ரெயில்வே சிப்பந்திகள், போலீஸ்காரர் இன்னும் மற்றவர்களின் சம்பள உயர்வைப்பற்றிக் காண்கிறோம். ஏன் ஷையார்கள் முதலில வேலையில் அமரும்போது தங்களுக்கேற்பட்ட சம்பளம் இவ்வளவுதான்; இதைக்கொண்டு தான் நாம் காலக்ஷேபம் பண்ணவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரிந்திராதோ? அப்படியிருந்தால் ஏன் அவர்கள் தங்கள் சம்பளம் உயரவேணுமென்று அடிக்கடி மேலாவைத் தூண்டிவருகிறார்கள்? அகவிலைகாரணத்தைப்பற்றியல்லவா இன்னும் தங்களுக்கு அதிகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். எல்லாருக்கும் சம்பளம் அதிகமாய் உயரும்போது உபாத்திமார்களுக்கு மட்டும் அவ்வாறு உயராதது என்னே பரிதாபம்? இதற்கு நம்மவர்களின் முயற்சியின்மையே காரணம். “காலத்திற்கேற்ற கோலம்” என்றபடி உலக அகவிலை காரணத்தினால் நாமும் அதற்குத் தகுந்த முயற்சி எடுக்காவிடின் நமது சம்பள உயர்வைப்

பற்றி நாம் நினைப்பது "இலவுகாத்த கிளியின் எண்ணம்போல்" தான் முடியுமென்பது நண்பர்களுக்குத் தெரியாத விஷயமல்ல.

ஆகையால் நாமும் அதற்குத் தகுந்த நம்மால் கூடிய பிரயாசைகள் எடுத்து நமது சம்பள உயர்வைப்பற்றிச் சிந்திக்க வேணுமென்று இதனுல் நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"முயற்சி திருவளிக்கும் அஃதின்மை
இன்மை புகுத்திவிடும்"

A. ஆசீர்வாதம்பிள்ளை,
பழயமாணவர்களிலொருவர்

---

## IV. உபாத்தியாயர்களுடைய சம்பளமும், வேலைக் குறைவுகளும்.

தற்காலத்தில் நமக்கு உபயோகமான ஜாமான்கள் யாவும் சென்ற 5, 6-வருஷங்களுக்குமுன் விற்கப்பட்ட விலைகளைக்காட்டிலும் மும்மடங்கு சாஸ்தியாய் விற்கப்படுவதை உத்தேசித்து சாதாரண அநுபோகத்தினுல் கீழ்தர எலிமெண்டரி பாடசாலைகளின் உபாத்தியாயர்களுக்களிக்கப்படும் சம்பளம் ரொம்பவும் சொற்பமானதென்பது யாவருக்கும் பட்டப் பகல்போல் வெட்ட வெளியாய் விளங்கின விஷயமே.

அப்படி இருந்திட்ட போதிலும், காருண்ய கடவுளானவர் நமக்கன்பாய் அளித்திருக்கும் உத்தியோகமாகிய உபாத்திமைத் தொழிலை நம் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும், நம்மால் கூடினமட்டும் அதிமிக சிரத்தையுடனும், உற்சாகத்துடனும், விடாமுயற்சியுடனும் தொடர்ந்து நடத்தி வருவதே நம்மைப் போன்ற உபாத்தியாயர்களின் பேராவலாய் இருக்கவேண்டுமென்பது எனது உண்மையான கோரிக்கை.

அப்படி இருக்கக்கொள்ள, சில உபாத்திமார் சொக்கனுக்குச் சட்டியளவு என்பதுபோல மாதா மாதம் எப்படியும் சம்பளம் கிடைத்துவிடுமென்று கல்லுளி மங்கான் போல் மாறுவேஷம் தரித்தும் ஒருவாறு தம் மனதைத் திருப்திகரம் செய்துகொண்டும் பாடசாலைக்குப்போய் சோம்பேறிகளாய் வெறுமனே சில நேரம் உட்கார்ந்திருப்பதும், அப்புறம் கடைகளுக்கும் வீதிகளுக்கும்போய், உல்லாசமாய் வீண்பேச்சுகள் பேசி வீண்காலம் கழித்துக்கொண்டிருப்பதும், இதர வருமானத்தைக் கவனித்து (பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பதுபோல்) பத்திரங்களும் கடைக்கணக்குகளும் இவைபோன்ற சிலதுகளையும் சதா எழுதிக்கொண்டிருப்பதும், நம் உத்தியோகத்துக்கு அழகல்ல (உத்தியோகம் புருஷலக்ஷணம்.)



உல்லாசமாயும், வேடிக்கையாயும் பேசிக்கொண்டிருந்துவிட்டு, திரும்பவும் பாடசாலைக்குவந்து, சர்நாடக காலத்தைப்போல் இக்காலத்திலும், ஏதோ கனவு கண்டதுபோல், பிள்ளைகளைப் பாடம் கேட்கிறதும், தெரியாதபோனால் அவைகளைப் பிள்ளைகளுக்கு விவரித்துப் புகட்டுகிறதற்குப் பதிலாய், ஒருவித லாகிரி வஸ்துகளை உபயோகித்த குடிகாரர்களைப்போல் மதிமயங்கிப் புத்திசேதி, கோபாவேஷங்கொண்டு பிள்ளைகளைக் கண்மூடித்தனமாய் அடிக்கிறதும், அன்னவர்களின் அழகா? நம் தொழிலுக்கு லாயக்கா? நம் உத்தியோகத்துக்கு லட்சணமா? என்பதையும் நாம் சிறுபத்தில் என்ன விதமாய்ப் பயின்றோமென்பதையும் சற்றே யோசித்துப் பாருங்கள்.

இதுவுமல்லாமல் நம்மிடம் பயிலும் மாணவர்களில் சில தடவை அநேகம்பேர்கள் சிற்சில காரணங்களை முன்னிட்டு வராதிருந்தாலும்சரி, சிலதடவை பள்ளிக்கூடம் வைக்காதிருந்தாலும் சரி, வந்ததாகவும், வைத்ததாகவும் ரிக்கார்டுகளில் வீணுகப் பதிவு செய்துகொண்டு தங்கள் தங்கள் மானேஜரவர்களிடம் காட்டியும், மாத சராசரிக் கணக்கு முடித்திருந்தாலும்சரி முடிக்காதிருந்தாலும்சரி, அதற்குத் தக்காப்போல் சாக்குப்போக்கான சாதுர்யமான வார்த்தைகளைப் பேசிச் சம்பளம் பெற்றுக்கொள்வதும் ஒருவித சாமர்த்தியமான கண்கட்டி தொழில் என்று தம்மைத் தாமே மெச்சிக்கொண்டு சில உபாத்தியாயர்கள் செய்து வருகிறார்கள். இது சாமர்த்தியமல்ல, அசாமர்த்தியமே என்று உண்மையாய்க் கூறுகின்றனன்.

இப்படி நடத்திவருகிற உபாத்தியாயர்களின் உண்மையான பவுஷுகள் வருஷக்கிராண்டுப் பரீட்சை செய்யும் கனம் சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களால். நேரில் கொடூர வார்த்தைகளால் குத்தும்படி சொல்லப்பட்டும், கனம் தங்கிய மானேஜர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டும், இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் ரிமார்க்கு செய்யப்பட்டுமிருப்பது அவரவர்களுடைய மனதுக்கே ஸ்பஷ்டமாய்த் தெரியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சொல்லாமலே விளங்கும்.

மேற்கண்ட விவரங்களை நான் முன்னால் கண்டறிந்திருந்தபோதிலும் இவ்வருஷம் பெரியகுளம் ரேஞ்சு, சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டராகிய மகா-ள-ள-ஸ்ரீ யம். எஸ். நடேசய்யரவர்களுடன், என் வேண்டுகோளின்படி ஷெ யாரவர்களின் மாடல் கணக்குகளைப் பார்க்கவேண்டி சில பள்ளிக்கூடங்களுக்குப் போயிருந்த சமயத்தில் நான் நேரில் பார்த்ததுமல்லாமல் ஷெ இன்ஸ்பெக்டரவர்களுடன் திரும்புகாலில் சம்பாஷித்துக் கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் அவரே ஆதியோடந்தமாய் எடுத்துப் புகன்றனர். இவற்றையெல்லாம் மனதில்கொண்டு அரிய நற்குணமாகிய பிறர்சிநேகம், பரோபகாரம், என்பதை முன்னிட்டு சிற்றறிவுடையோனாகிய நான் மிகவும் பணிவுடன் இப்பத்திரிகையில் வெளிப்படுத்தியிருக்கின்றனன்.

இதுநிற்க ஷெ. யம். எஸ். அவர்கள் நாம் வாங்கும் சம்பளத்துக்குத் தகுந்தபடி உண்மையாயும் எதார்த்தமாயும் நம்மாலியன்றமட்டும் உழைக்காவிட்டால், கடவுள் நம்மை சும்மா விடுவாரா? விலைமதிக்கப்படாத ரத்தின முத்தாகிய நம் ஆன்மாவானது நம் சரீரத்தை விட்டுப் பிரிந்தமாத்திரத்தில்தானே, காருண்ய கடவுளானவர் நம்மைக் கண்டிப்பாய்க் கணக்குக் கேட்பாரோ, அதற்கு என்ன பதிலுரைப்போம் என்றும் இது போன்ற சில புத்திமதிகளை எடுத்துப் புகன்றதோடு முக்கியமாய் பாடசாலை விஷயமாயும் உலக விஷயமாயும் கூறிய புத்திமதிகளானது ரொம்பவும் மெச்சத்தக்கதே. மேலும் தந்திரமாயும் சாதுரியமாயும் சாமர்த்தியமாயும் வற்புறுத்தி (பயமுறுத்தி)



ஒருவரிடமும் யாதொரு பொருள்களைப் பெற்றுக்கொள்ளப்படாதென்றும் உடனே முன்மாதிரி காட்டினார்.

கனம் யம். எஸ். அவர்கள் இன்ஸ்பெக்ஷனுக்காக சிறு கிராமங்களுக்குப் போயிருந்த சமயத்தில் வண்டிமாடுகளுக்கு வேண்டிய ஆகாரங்களை சொந்த விலை கொடுத்து வாங்கவேண்டுமென்றும் உபாத்தியாயர்களிடமிருந்தாவது சமுசாரிகளிடமிருந்தாவது வாங்கப்படாதென்றும் ஷெ இன்ஸ்பெக்டரவர்கள் தம்முடன் வந்த வண்டிக்காரனையும் பியூனையும் கண்டித்தது இப்போதுதான் என் காதில் சப்தித்ததுபோல் இருக்கின்றது. இது நிற்க ஷெ யம். எஸ். அவர்கள் யாதொரு தயவு தாக்ஷணியமின்றி பாட ஜாப்தாவில் ஏற்பட்ட ஒழுங்குப்படி ஒரு பாடமும் விடாது பரீக்ஷித்து உள்ளதை உள்ளபடியே எழுதுவதில் கை தேர்ந்த நிபுணரென்றே சொல்லவேண்டும்.

அப்பால் அவருக்குத் திருப்திகரமுள்ள பள்ளிக்கூடங்களைப் பற்றி அதிமிக சந்தோஷப்படுகிறார் என்பதையும், அதிருப்திகரமுள்ள பள்ளிக்கூடங்களைப்பற்றி வெறுப்புக்கொள்ளுகிறாரென்பதையும் அவருடைய சாதுர்யமான வார்த்தைகளால் தெரியப்படுத்தியுளர்.

ஆகையால் இதில் காட்டிய சில புத்திமதிகள் நம் உபாத்தியாயர்களுக்கு விசேஷ முன்மாதிரி மேல்வரிச்சட்டமாய் இருக்குமென்றெண்ணி அறிவில் சிறியோனாகிய யான் மிகவும் பணிவுடன் பகர்ந்து வெளிப்படுத்தியுள்ளேன்.

இங்ஙனம்,

பூர்வ மாணவர்களிலொருவனாகிய,

**A. அந்தோனி மீக்கேல்,**

வங்காருகவண்டன்பட்டி.

---

## V. பத்திரிகை நேயர்களுக்கோர் விக்ஞாபனம்.

இருமைக்கு மெய்த்துணையை எண்ணி இயன்றுவரும் எனது அன்பார்ந்த நேயர்களே அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! வியப்பு! வியப்பு!

என்ன? நமது 10-வது கொத்து 4-வது மலரை நுகர்ந்த நம்மனையோருக்கும் சொல்லாமலே விளங்கியிருக்குமென்பதை யான் சொல்லவும் வேண்டுமோ? நமது மலரானது 18, 19-ம் வருஷத்தில் வருஷத்திற்கு 4 ஆகவும், 19-ம் வருஷத்தின் மத்தியில் இரு திங்கட்கோர் முறையும் அதன் இறுதியில் மாதமோர் முறையும் போதிய நறுமணத்தோடு கூடிய இதழ்களுடன் மலர்ந்து வெளி வந்தது 19-வது வருஷத்தில் வாசித்து வெளியேறிய மாணவரின் சிரத்தையென்று நமது மலரோ வெளிப்படுத்தவில்லையா? இவ்வாறிருக்க இவ்விருபதாம் வருஷத்தின் ஆரம்பத்திலேயே நமது மலரானது இதழ்கள் குறைந்து சிறுத்து வாடியதுபோல் வெளிவருவதற்குச் சென்ற வருஷத்தில் வெளியேறிய மாணவரின் அநுபோக முதிர்ச்சியும் இவ்வருஷத்திய மாணவரின் நன்றிமறத்தலுமே காரணமாகுமோ? எப்பொருளினும் மேலானதாகிய கல்விச் செல்வத்தைப் பரவச் செய்யும் மார்க்கத்தை தாய் பாடசாலையினின்று பெற்றுக்கொண்ட நாம் அதற்குப் பிரதி நன்றியாகவும் சொற்ப ஆறுதலாகவும் முக்கியமாய் சொல்லுமிடத்து ஒவ்வொருவரும் பத்திரிகையால் அடையும் பெரும் பயனை உத்தேசித்தும், ஏன் ஒவ்வொருவரும் ஒவ்வோர் சந்தாதாரைச் சேர்த்து அனுப்பக்கூடாது?

“நன்றிமறப்பது நன்றன்று நன்றல்லா
தன்றே மறப்பது நன்று”

என்பதையுன்னி நமது தாய்ப் பாடசாலையை நினைத்தாவது மேற்சொன்ன உதவியை நாம் ஒவ்வொருவரும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்லியதை பெரியோர்கள் மன்னித்து பத்திரிகை விரிந்து நம்மனையோருக்கும் பயனளிக்குமாறு கட்டாயம் பிரயாசப்பட்டு ஒவ்வோர் சந்தாதார் சேர்த்து அனுப்புவோமாக.

இங்ஙனம்,

**R. ஆரோக்கியசாமி,**

பெரியவர்சீலி.

---

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1902.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY
10 DEC 1920



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 10. | டிசம்பர் 1920. | மலர் 6. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

உபாத்திமைத் தொழிலுக்கும் மற்றத் தொழில்களுக்கும் பொதுவான சில காரியங்கள் உண்டு; அவைகளில் ஒன்று சம்பளம். இந்தப் பொதுவான காரியங்

கள் கவனிக்கப்படவேண்டியதுதான்; ஆனால் அவை களைக் கவனிப்பது நமது பூங்கொத்தின் முக்கிய நோக்க மல்ல. அதன்பேருக்கிசைந்தபடி, போதனா விஷயங்களை அதாவது உபாத்திமைத் தொழிலுக்குச் சிறப்பாயுள்ள காரியங்களைக் கவனிப்பதுதான் அதன் நோக்கம். இத னால்தான் உபாத்திமைத் தொழிலின் மேன்மையையும் அதை நன்றாய் நிறைவேற்றுவதற்கான பல வழிகளையும் அது வற்புறுத்தி உபாத்திமாரின் ஊக்கத்தை எழுப்பி அவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறதேயன்றி, அவர்க ளுடைய சம்பள விஷயங்களில் அதிகமாய்த் தலைகொடுத் துக்கொள்கிறதில்லை. ஆனால் சம்பளத்தைப்பற்றி நமது பத்திரிகையின் அபிப்பிராயம் இன்னதென்று சிற்சில சமயங்களில் வெளியிட்டிருக்கிறது. சம்பள உயர்வுக்காக வல்ல, உபாத்திமாரின் வேலையில் அவர்களுக்கு உதவி செய்வதற்காகவே என்று அது பூக்கத் தொடங்கினது; எந்த நோக்கத்தோடு தொடங்கினதோ அதையே முற்ற முடிக்கும்.

* * *

சென்ற மாதம் 20, 21-ம் தேதிகளில் ஸ்ரீரங்கம் ரேஞ்சு எலிமெண்டரி உபாத்தியாயர் மகாநாடு ஒன்று ஷை தீவில் கூடிற்று. இதில் சம்பள விஷயங்கள் மாத் திரமல்ல, போதனா விஷயங்களும் சில கவனிக்கப்பட் டன. நமது போதனாப் பாடசாலையிலிருந்தும் இந்த மகாநாட்டுக்கு உபாத்திமார் போயிருந்தனர்.

---

## பாடக்கிரமம் V.

### சித்திரம்.

ஆரம்பப் பாடசாலைகளில் சித்திரம் கற்பிப்பதின் நோக்கம் சிறுவர்களைக் கைதேர்ந்த சித்திரக்காரர்களாக்கு வதன்று; ஆனால் அவர்கள் பார்க்கும் அல்லது ரூபிகரிக்



கும் பொருட்களை வார்த்தைகளால் வர்ணிப்பதற்குப் பதி லாய்க் கோடுகளால் வர்ணிப்பது. இந்தப் பழக்கம் சிலரைக் கைதேர்ந்த சித்திரக்காரர்களாக்க உதவலாம்; ஆனால் எல்லாருக்கும் அநேக விதத்தில் பிரயோசனமாய் முடியும். பிள்ளைகள் எழுதும் சித்திரம் அவர்கள் அநு போகத்தையொட்டிய பொருள்களைச் சார்ந்ததாயும், படிக்கும் பாட சம்மந்தமாயும், உபாத்தியாயரின் திறமைக் குத் தகுந்ததாயுமிருக்கவேண்டும். ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வித்தியாசப்படும்; நமது பள்ளிக் கூடத்துப் பாடக்கிரமம் மற்றப் பள்ளிக்கூடங்களில் பாடக் கிரமங்கள் தயாரிப்பதற்கு ஓர் உதவியாயிருக்கலாம்.

மிகவும் சிறிய பிள்ளைகள் மணலில் எழுதிப் பழக லாம். முதல் மூன்று வகுப்புகளில் சிலேட்டிலும் கரும் பலகையிலும் எழுதலாம். நான்காம் ஐந்தாம் வகுப்பு களில் தோட்டாக் காகிதத்தில் சீமைச் சுண்ணாம்பைக் கொண்டும், வெள்ளைக் கடுதாசியில் காரீயப் பென்சலைக் கொண்டும் எழுதலாம். ஒவ்வொன்றிலும் நன்றாய் எழு தத் தெரிந்தபிறகுதான் அடுத்ததில் எழுதப் பழக்க வேண்டும்.

நான்காம் வகுப்புக்குமுன் ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே எழுதச் செய்தால் போதும்; பல பொருள் கள் சேர்ந்த கூட்டுச் சித்திரங்கள் மேல் வகுப்புகளிலே மாத்திரம் கொஞ்சம் துவக்கலாம்.

### I STANDARD.

1. உருவப்படம் வரையும்போது அந்த உருவத் தின் எல்லைக்கோடுகளை வரையாமல் சீமைச் சுண்ணாம்பி னால் தேய்த்து உருவத்தை உண்டாக்கவேண்டும். (கட் டிச்சித்திரம்—Mass Drawing) இந்தச் சித்திரம் நன் றாய்த் தெரிந்தபிறகு எல்லைக்கோட்டு உருவம் எழுதப் பழக்கவேண்டும்; அப்படி எழுதுகிற சித்திரத்தை விரைவில் எழுதவும் பழக்கவேண்டும்.

2. எல்லைக்கோட்டுருவம் நேர்கோட்டால் வரைந்து காட்டக்கூடுமானதாக இருக்கவேண்டும். உதாரணமாக:—மேஜை, படம், பெட்டி, கொடி, வீடு, வாளி, உரல், டம்ளர், தபால்பெட்டி, புனல், காப்பிக்கொட்டை அரைக்கும் யந்திரம், அலமாரி, கம்பம், மடக்கு நாற்காலி, ஏணி, தட்டான் பட்டறை, குடை, கைபிடிக்குச்சி, மடக்கு மேஜை, தராசு, மிருகங்களின் தலைகள், பக்ஷிகளின் தலைகள், ஊரும் ஜந்துக்களின் தலைகள் முதலியன.

## II STANDARD.

நேர்கோட்டு உருவம், சாய்வுகோட்டு உருவம், வட்டக்கோட்டு உருவம், வளைவுகோட்டு உருவம் முதலியவற்றைக் கற்பிக்கவேண்டும். உதாரணமாக:—மண் எண்ணெய் விளக்கு, லாந்தர், மைக்கூடு, சீசா, பந்து, பம்பரம், விசிறி, வாளி, டம்ளர், உரல், புனல், ஆற்றின் பாலம், பட்டம், கொடை, மணி, பூட்டு, சாவி, மைல்கல், தொப்பி, துடுப்பு, மிருகத்தின் தலைகள், கால்கள், பக்ஷியின் தலைகள், கால்கள், ஊரும் ஜந்துக்களின் தலைகள் முதலியன.

## III STANDARD.

கத்தி, அரிவாள், குடம், பானை, சட்டி, திருகை பெஞ்சு, கரும் பலகை, அதின் சட்டம், கடியாரம், மாங்காய், பாகற்காய், வாழைக்காய், கத்தரிக்காய், கரும்புத் துண்டு, ஆல இலை, மாவிலை, சுரைக்காய், பந்தடிக்கும் துடுப்பு, சீசா, ஜாடி, மிருகங்கள், பக்ஷிகளினுடையவும் ஊரும் ஜந்துக்களினுடையவும் முழு உருவங்கள்.

## IV STANDARD.

வாழைக்காய், வாழைப்பூ, வாழை இலை, கூஜா, மண்வெட்டி, கோடாரி, அம்மி, செம்பு, லோட்டா, செப்புக்குடம், டீக்கோப்பை, அதன் தட்டு, சோடாப்புட்டி, அகப்பை, கிளிக்கூடு, கண்ணாடி மைக்கூடு, மண் எண்



ணெய்த் தகரம், எண்ணெய் இழுக்கும் தகரக் குழாய், மூக்குக் கண்ணாடி, ஸ்க்ரூ ஆணி, பீப்பாய், தேங்காய், அவரையிலை, கொட்டைமுத்து இலை, பரங்கிப்பூ, மிருகங்கள், பக்ஷிகள், ஊரும் ஜந்துக்கள்;

அளவு சித்திரம் (Scale drawing), தாலூகா படம், ஜில்லாப்படம் முதலிய அப்பியாசங்கள்.

## V STANDARD.

வெண்டையிலை, தாமரைப்பூ, அதன் மொட்டு, அதன் இலை, ரோஜாப்பூ, அதன் மொட்டு, இலை, பூவரசம்பூ, அதன் மொட்டு, இலை, இளநீர், கொட்டை முந்திரிப்பழம், முள்ளங்கி, வாழை மரம், தென்னை மரம், பனை மரம், ஈச்ச மரம், இஞ்சி மரம், தேங்காய் மூடி, அரசு இலை, பூவாளி பாக்குவெட்டி, கத்தரிக்கோல், ஆணிவேர், சல்லி வேர், வில்முடுக்கி, மிருகங்கள், பக்ஷிகள், ஊரும ஜந்துக்கள்.

சென்னை ராஜதானிப்படம், சந்திரகலைகள், சூரிய, சந்திர கிரகணங்கள் என்னும் பூகோள சம்பந்தமான படங்கள்.

குறிப்பு:—முதல் மூன்று வகுப்புகளிலும் சித்திரப்பாடத்தை, களிமண், வேலைமுதலிய கிண்டர் கார்டன் தொழில்களோடு சம்மந்தப்படுத்திக்கொள்வது நல்லது.

சித்திரம் போதிக்க மிருகங்கள் பக்ஷிகள், ஊருஞ் ஜந்துக்கள் அகப்படாவிட்டால், அகப்படும்போது பாடம்செய்து காட்சிசாலையில் வைத்துக்கொள்ளவேண்டும். பொருட்கள் அகப்படாவிட்டால் களிமண்ணால்ச் செய்து காட்சிசாலையில் வைத்திருக்கவேண்டும். அப்படிப் பொருட்கள் செய்யத் திறமையில்லாத உபாத்திமார்கள் தாய்ப்பள்ளிக்கூடத்திற்கு ஆர்டர் செய்தால், தயார் செய்து அனுப்பப்படும்.

**S. கந்தசாமிபிள்ளை.**

## இயற்கைப்பாடத்தில் ஓர் பாடக்குறிப்பு.

(மகா-ள-ள-ஸ்ரீ T. S. கணபதி ஐயர் அவர்கள் எழுதியது.)

**நோக்கம்:** தோட்ட மண்ணில் கலந்துள்ள பொருள்களைக் கண்டறியச்செய்தல்.

| பரீக்ஷணம். | உற்றுநோக்கல். | கிரஹித்தல். |
|---|---|---|
| ஓர் அகன்ற பாத்திரத்தில் கொஞ்சம் மண்ணைப்போட்டுத் தண்ணீர் ஊற்றிக் கலக்குக. | செத்தை குப்பை குச்சுகள் முதலிய தாவரப் பொருள்கள் மிதக்கும். | தோட்ட மண்ணில் தாவரப் பொருள்கள் சேர்ந்திருக்கும். |
| கலங்கல் நீரை வேறு பாத்திரத்தில் வடிக்க. | குழம்பாய் தண்ணீர் இருக்கிறது. | மண் சேர்ந்து இருப்பது. |
| பலமுறை தண்ணீர் ஊற்றிக் கரைத்து பாத்திரத்தில் வடிக்க. | ஷை ஆனால் வரவர குழம்பு குறைந்து வருகிறது. | ஷை |
| மணல் அடியில் தங்கும் வரை தண்ணீர் ஊற்றி நீரை மாற்றி வருக. | தண்ணீர் குழம்பாய் இராமல் வரவர தெளிவாய்க் கொண்டு வருகிறது. | கலந்திருந்த மண் வேறாகி விட்டபடியால், கலங்கல் அற்றுப் போய்விட்டது. |
| அடியில் தங்கியிருக்கும் மணலை தனியாகவும், குழம்பு நீரைத் தனியாகவும் வைத்து, குழம்பு நீரைத் தெளிய வைத்து இறுக்க. | குழம்பு நீரின் அடியில் படைப்படையாய் மண் சேர்ந்திருக்கிறது. | ஆதலால் களிமண் சேர்ந்திருக்கிறது. மணல் சேராமலிருக்கிறது. |



க. ப. சு. தோட்ட மண்.

(1) தாவரப்பொருள்.

(2) களிமண்.

(3) மணல்.

குறிப்பு:—(1) விஷயத்தில் பரீக்ஷணத்தையும், முறையில் உற்றுநோக்கல் கிரஹத்தில் இவைகளையும் எழுதலாம்.

(2) பரீக்ஷணத்தைப் பிள்ளைகளைக்கொண்டு செய்வித்து, கேள்விகள் மூலமாய் உற்றுநோக்கல் கிரஹித்தல் இவைகளை நடத்தலாம்

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடது பக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

### I. வெள்ளம்.

திருச்சினாப்பள்ளியில் நவம்பர்-மீ 24, 25-உயில் பெய்த மழையால் திருச்சிக்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் இருக்கிற ஏரிகள் ஒன்றொன்றும் உடைத்துக்கொண்டு 15 அடி தண்ணீர் வந்து, திருச்சியிலிருந்து மதுரைக்குப் போகிற இருப்புப் பாதையையும் உடைத்து திருச்சிப்பட்டணத்தில் புகுந்து, புத்தூர் பாண்டமங்கலம் வாத்துக்காரத் தெருவு சிந்தாமணியையும் திருச்சியைச் சுற்றி 10 மைல் தூரத்திலுள்ள கிராமங்களையும் திருச்சியிலிருந்து கரூருக்குப் போகிற இருப்புப் பாதையையும் உடைத்துக்கொண்டு காவேரி ஆற்றில் போய்ச் சேர்ந்தது.

அந்த வெள்ளத்தில் வந்தது கூரை வீடுகள், வைக்கோல் போர்கள், ஆடுமாடுகள், சாமான் தட்டுமுட்டுகள், மரங்கள் முதலியன. அந்தத் தண்ணீர் அடங்க 3 நாள் பிடித்தது. 3 நாள் வரையில் இருபக்கத்திலும் ரயில் போகவில்லை. சென்னைக்கு மாத்திரம் திருச்சிவரையில் நேரா நேரம் தவறிப்போய்க்கொண்டிருந்தது. சில கிராமங்களிலிருந்துமாத்திரம் ஜனங்களை தோணியில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். அந்தக் கிராமங்களிலுள்ள வீடுவாசல்கள் தரையோடு தரையாகப் போயின; நஞ்சை நிலமெல்லாம் மண்மேடாக ஆயின.

S. கந்தசாமிபிள்ளை.

---

## II. இலக்கண போதனை.

இலக்கண (இலைக்குணை) மானது நாய்க்குத்தான் தெரியும், நமது மாணவர்கட்குத் தெரியாதென்பதோடு, கற்பிக்கப்படவுமில்லை என்று சொல்லாமல், தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த நமக்கு—நம் மக்கட்கு—மாணவர்கட்கு அத்தமிழில் அறிவுமுண்டாக்கல் (தெரிந்திருத்தல்) அதியாவசியமாதலால், உபாத்தியாயர்களாகிய நாம் நமது கால அட்டவணையில் இலக்கணத்திற்கென ஒரு நேரம் குறிப்பிட்டு கற்பிக்காவிடினும் தமிழ்ப்பாடம் நடக்கும் நேரத்தில் கடைசியில் ஒரு ஐந்து நிமிஷ நேரம் எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு இலக்கணம் (போதிக்கிறோம்) என்று சொல்லாமலும், இலக்கணமென்பது ஒரு பாடமென்னும் பாரம் அவர்களை வருத்தாமலும், பாட சம்பந்தமாகவே இலக்கணத்தை சம்பந்தப்படுத்திப் போதித்தல் நம் கடமையாம்.

நம் மாணவர்கட்கு இலக்கண போதனையை, இலக்கணப் பாடம் என்று தெரிவிக்காமலே கற்பித்ததற்கு உதவியாக ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் "படத்தைப் பார்த்துப் பாடம் படித்தல்" என்ற வரிசையில் சில புத்தகங்கள், விளையாட்டாகத் தோன்றுமாறு எழுதி வெளியிட்டிருப்பது நேயர்களறிந்ததே. இதனை ஓர் உபபாடமாக வைத்து ஒரு சிறிது நேரம் இதற்கெனக் குறிப்பிட்டுப் போதித்தலும் சாலச்



சிறந்ததெனலாம். எனினும், ஆரம்பத்தில் பிள்ளைகளைப் பல பெயர்களைச் சொல்லச்செய்து, இவ்வொவ்வொரு வார்த்தையும்—சொல்லும்—பெயர்களைக் குறிப்பதால் **பெயர்ச்சொல்** என்று விளக்கி, பாடத்தில் வரும் வாக்கியங்களைச் சொல்லியோ, கரும்பலகையில் எழுதியோ, அதிலுள்ள பெயர்ச்சொற்களை (வார்த்தைகளை)ச்சொல்லச் செய்யலாம். பெரிய வகுப்புகளாயின் பலவகைப் பொருள், இடம், காலம் முதலிய பெயர்களை விளக்கிக் கற்பித்தல் உசிதம்.

இரண்டாவது வினைச்சொற்களைக் கற்பித்தலும், வினைச்சொல் என்பதை விளக்கிக் காட்டுதலும் மிக்க அவசியம். காரணம் தெரியாமல் காரியஞ் செய்யின், மாணவர்களின் மனத்தில் பதிவது—பதியச்செய்வது முடியாத காரியம். ஆகையால் வினைச்சொல் என்பது தொழிலை—வேலையைக் குறிக்கும என்று கிளிப்பிள்ளையைப்போல் நாமே சொல்லிவிடாமல், அவர்களுக்குத் தெரிந்த விஷயங்களிலிருந்து விளக்கி அவர்களிடமிருந்தே வினை என்றால் வேலை அல்லது தொழில் என்றும், வினைச்சொல் என்பது வேலை அதாவது தொழிலைக் குறிக்கும் சொல் என்றும், கவனசக்தி—யோசனைசக்தியை விருத்திசெய்து வருவித்தபிறகே, வினைச்சொல் இன்னின்ன என்று கற்பிக்க முயலவேண்டும். ஆகையால், அவ்விளக்க விவரத்தினை எனது சிற்றறிவிற்கெட்டியவாறு கீழே விவரிக்கின்றேன்:—

உபாத்தியாயர்: பிள்ளைகளே! ஆத்திச்சூடியில் நீங்கள் படித்துள்ள "தூக்கிவினை செய்" என்னும் வாக்கியத்தின் கருத்து என்ன?

பிள்ளைகள்: "தூக்கிவினைசெய்" என்றால், எக்காரியத்தையும் எத்தொழிலையும் வியாபாரி, நிறுத்துக்கொடுக்கும் தனது வியாபாரப் பொருளைத் தராசுத் தட்டிலிட்டு, நிறை கல்லும் பொருளும் சமமாயிருக்கின்றதாவெனத் தராசின் விட்டத்தைத் தூக்கிப்பிடித்துப் பார்த்துக் கொடுக்கின்றதுபோல், எத்தொழிலையும் நாம் நமது மனமாகிய தராசைக்கொண்டு தூக்கிப்பார்த்து இக்காரியம் செய்யலாமா செய்யக்கூடாதாவென்று பார்த்தே செய்யவேண்டுமென்பது கருத்து.

உபா: எதைச் செய்யவேண்டுமென்பது கருத்து?

பிள்ளை: எந்த வேலையையும் செய்யவேண்டுமென்பது கருத்து.

உபா: எந்த வேலையையுமென்பதற்கு, அந்த வாக்கியத்திலுள்ள வார்த்தையென்ன?

பிள்: எந்த வேலையையுமென்பதற்கு வினை என்ற வார்த்தை ஏற்பட்டிருக்கின்றது.

உபா: ஆகவே, வினையென்றால் மட்டுமென்ன?

பிள்: வினை என்றால் வேலை என்று பொருள்.

உபா: ஆதலால், வேலையென்பதை வேறு என்ன விதமாகவும் சொல்லலாம்?

பிள்: வேலையென்பதை வினையென்றும் திரும்பிச் சொல்லலாம்.

உபா: "சேணியன் சேலை நெய்தான்" என்பதில், வேலை என்று சொல்லும் வினையைக்குறிக்கும் வார்த்தை எது?

பிள்: "நெய்தான்" என்னும் வார்த்தை வேலையைக் குறிக்கும்.

உபா: "நெய்தான்" என்னும் வார்த்தை வேலையைக்குறிக்கும் என்பதற்குப் பதிலாக எவ்விதம் சொல்லலாம்?

பிள்: "நெய்தான்" என்னும் வார்த்தை வினையைக் குறிக்கும் என்று சொல்லலாம்.

உபா: "சேணியன் சேலை நெய்தான்" என்பதைத் தனித் தனியாய் எத்தனைதரம் சொல்லுகிறீர்கள்?

பிள்: சேணியன்-சேலை-நெய்தான்" என்று மூன்றுதரம் சொல்லுகிறோம்.

உபா: ஆகவே, அது எத்தனை சொல்?

பிள்: அது மூன்று சொல்.

உபா: "நெய்தான்" என்பது எத்தனை சொல்?

பிள்: "நெய்தான்" என்பது ஒரு சொல்.



உபா: ஆகையால், 'நெய்தான்' என்பது என்ன சொல்?

பிள்: 'நெய்தான்' என்பது வினைச்சொல்.

உபா: 'தச்சன் பெட்டி செய்தான்' என்பதில் வினைச் சொல் எது?

பிள்: "செய்தான்" என்பது வினைச்சொல்.

குறிப்பு:—I. அப்பியாசங்கள.

1. குயவன் பானை வனைந்தான்.
2. கொல்லன் அரிவாள் அடித்தான்.
3. வலைஞன் மீன் பிடித்தான்.
4. முத்து நாயை அடித்தான்.
5. கிருஷ்ணமூர்த்தி சித்திரம் எழுதினான்.

II. பரீக்ஷை:—

**உபாத்தியாயர்**: இதுவரையில் நீங்கள் கவனித்ததிலிருந்து, வினைச் சொல் என்பது என்னவென்று தெரிந்துகொண்டீர்கள்? அதைப் பலவிதமாய்க் கூறுங்கள்!

**பிள்ளைகள்**: வினைச்சொல் என்பது ஒரு காரியம்.—தொழில்—வேலை என்பவைகளைக் குறிக்கும் சொல் என்று தெரிந்துகொண்டோம்.

P. பரிமணப்பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர்,
போர்டு ஸ்கூல், உத்தமசேரி.

---

## III. இந்திய நாணயக் கூட்டல், கழித்தல்.

இவ்வியாஸத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில், இந்திய நாணயக் (ரூ. அ. பை.) கூட்டல் கழித்தல்களில் நாம் சாதாரணமாய் வழங்கிவரும் முறைகளுடன், கீழ்க்கண்ட முறைகளையும்

அநுசரிப்பதால் ஏதாவது பலன் கிடைக்கக்கூடுமோ என்பதை நமது சகோதரர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டே.

வழக்கமாய் இக்கூட்டலை நாம் எப்படி நடத்துகிறோம்? எவ்வளவு பைசாக்கள் சேர்ந்தால் அணாவாகிறதென்றும், எவ்வளவு அணாக்கள் சேர்ந்தால் ரூபாயாகிறதென்றும் (அல்லது, ரூபாய்க்கு அணாக்கள் இவ்வளவு, அணாவுக்கு பைசாக்கள் இவ்வளவு) பிள்ளைகளுக்கு விளக்கியபின் இக்கூட்டலை ஆரம்பிக்கிறோம். ஆரம்பிக்கையில் முதலில் பைசாக்களை எல்லாம் மொத்தமாய்க் கூட்டி, கூட்டி வந்த தொகையை 12-ஆல் வகுத்தபின், வகுத்து வந்த மீதியைப் பைசாக்கலத்தில் போட்டுவிட்டு, வகுத்து வந்த ஈவாகிய அணாவை, கணக்கிலுள்ள அணாக்களுடன் கூட்டி, கூட்டிவந்த தொகையை, 16-ஆல் வகுத்து, வகுத்து வந்த மீதியை அணாக்கலத்தில் போட்டுவிட்டு, வகுத்து வந்த ஈவாகிய ரூபாயை, ரூபாயுடன் கூட்டிக்கொள்ளுகிறோம். பைசா, அணாக்களை, 12, 16 இவைகளால் முறையே வகுப்பதின் காரணம் யாவருக்கும் தெளிவே—இது ஒரு வகை.

சில சமயங்களில் பைசாக் கலத்தில் 3 பை. 6 பை. 9 பை.களும் (காலணா, அரையணா, முக்காலணா), அணாக்கலத்தில் 4 அ., 8 அ. 12 அணாக்களும் (கால் ரூபாய், அரை ரூபாய், முக்கால் ரூபாய்) இருக்குமாகில் முன் சொன்னதுபோல் பைசாக்களைக் கூட்டி 12-ஆலும், அணாக்களைக் கூட்டி 16-ஆலும் வகுக்காதபடி, காலணாவும் அரையணாவும் முக்கால் அணா, முக்கால் அணாவும் முக்கால் அணாவும் ஒன்றரையணா என்று கூட்டி, அரையணாவாகிய 6 பைசாவைப், பைசாக்கலத்தில் குறிப்பிட்டுவிட்டு, அணாவை, அணாக்களுடன் தொடர்ந்து ரூபாயாகக் கூட்டுகிறார்கள். (கால் ரூபாயும் அரை ரூபாயும் முக்கால் ரூபாய், முக்காலும் அரையும் ஒன்றேகால் ..............) கூட்டி, அணாவை கீழே குறித்துவிட்டு, ரூபாயை, ரூபாயுடன் கூட்டிக்கொள்கிறார்கள். இதுவும் ஒருவகைதான். என்றாலும், கொடுக்கப்பட்ட தொகைகள் முன்சொல்லப்பட்டதுபோல் இருந்தாலொழிய (4 பை. + 5 பை. + 7 பை., 5 அ. + 7 அ. + 9 அ. இப்படியிருக்குமாகில்) மற்றப்படி இம்முறையானது கொஞ்சம் கஷ்டமானதே என்பதில் தடையில்லை.



இப்போது இங்கு சொல்லப்போவதுதான் விசேஷம். இதையும் சிலர் கையாடியிருந்திருக்கலாம். உதாரணமாக, கீழே கண்ட கணக்கை எடுத்துக்கொள்வோம்.

| ரூ. | அ. | பை. |
|---|---|---|
| 8 | 5 | 3 |
| 6 | 10 | 4 |
| 4 | 3 | 8 |
| 9 | 4 | 4 |
| 5 | 6 | 7 |
| 4 | 5 | 6 |
| 38 | 3 | 8 |

இதில் நாம் சாதாரணமாய்ச் செய்வதுபோல் பைசாக்களை மொத்தம் கூட்டி 12-ஆல் வகுக்காதபடி பின்கண்டபடி செய்வோம்: அதாவது, 6 பை.-யுடன் எவ்வளவு சேர்த்தால் 1 அணாவாகும்? இன்னும் 6 பை. சேர்த்தால் 1 அணாவாகும். இந்த ஆறு பைசாவை, அதற்கு மேலே இருக்கும் 7 பைசாவிலிருந்து எடுத்துக்கொண்டு, 7 என்னும் இடத்தில் போட்டிருக்கும் குறி மாதிரியாவது, அல்லது வேறே மாதிரியாவது குறித்துக்கொள்ளவும். அதாவது, அவ்விடத்திலுள்ள பைசாவையோ அல்லது அதில் கொஞ்சத்தையோ நாம் முன்சொன்ன தொகையுடன் கூட்டும்போது முழு அணாக் கிடைத்தது என்னும் குறிப்புக்காகவே. ஆகவே, 6 பை.-யுடன் 7 பை.-யில் உள்ள 6 பை. சேர்க்க, 1 அ. இந்த அணாவை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டியதில்லை. ஏனெனில் நாம் அங்கு குறிப்பிட்டிருக்கிறோம். 7 பை.-யில் 6 பை. போக மீதி 1 பைசா இருக்கிறதல்லவா, இதையும் அடுத்த பைசாவுடன் கூட்டவும்; அதாவது 1 பை. + 4 பை. = 5 பை., 5 பைசாவுடன் மேலேயிருக்கும் 8 பைசாவில், 7 பைசாக் கூட்ட 1 அணாவாகிறது. இங்கேயும் ஒரு முழு அணாக் கிடைத்தபடியால் 8 என்னும் இடத்தில் ஒரு குறி போடவும். எட்டுப் பைசாவில் 7 பை. கூட்டினதுபோக, மீதி 1 பை. இருக்கிறது; இதை மேலே உள்ள 4 பை.-யுடன் சேர்க்க 5 பை, 5 பை. + 3 பை., 8 பை.; இனி இது முழு அணாவாக வழியில்லை. ஆகவே நம்மிடம் மீதியான இந்த 8 பையை, பைசாக்கலத்தில் போடவும்.

இதுவரையில் சொல்லியது கஷ்டமாகவாவது அல்லது, தெளிவாய் இல்லாமலாவது இருக்குமானால் கீழே சொல்வதைக் கவனித்தலினால் இன்னும் சுலபமாகவே அறியலாம் அதாவது, 6 பை. + 7 பை. = 1 அ. 1 பை. இவ்விடத்தில் (7 இருக்கும் இடத்தில்) ஒரு குறி போட்டுக்கொள்ளவும். ஏனெனில் அங்கு ஒரு அணா என்று கணிப்பதற்கே. இந்த ஒரு அணா, ஒரு பையில் அணாவை விட்டுவிட்டு ஒரு பையை மாத்திரம் எடுத்துக்கொண்டு அதற்குமேல் உள்ள தொகைகளோடு கூட்டவும். 1 பை. + 4 பை. = 5 பை.; 5 பை. + 8 பை. = 1 அ. 1 பை. இவ்விடத்தில் (8 இருக்கும் இடத்தில்) ஒரு குறி போடவும். இங்கேயும் அணாவை விட்டுவிட்டு, பைசாவைமாத்திரம் மறுபடியும் மேலேயுள்ள பைசாக்களுடன் கூட்டவும், 1 பை. + 4 பை. 5 பை; 5 பை + 3 பை. = 8 பை. இனி அணாவாக வழியில்லை— ஆகவே, பைசாக் கலத்தில் மேற்சொன்ன 8 பைசாவைக் குறிக்கவும். பைசாக் கலத்தில் உள்ள சில எண்களுக்கும் பக்கத்தில் அணா எனனும் அர்த்தத்துக்காக குறிகள் வைத்தோமல்லவா, அப்படி நாம் வைத்த இரண்டு குறிகளும் இரண்டணா என்றர்த்தமாம் 3 குறிகள் இருந்தால் 3 அணா, இப்படியே...........

இதன்மேல், நமக்கு முன் கிடைத்த இரண்டணாக்களையும், கணக்கிலுள்ள அணாக்களுடன் கூட்டவும். இங்கும் மேற்சொன்னவிதமாய் அணாக்களைக் கூட்டும்போதே, எங்கெந்த இடங்களில் 16 அணாவுக்கு மேற்படுகிறதோ அந்த இடங்களில் ரூபாய் என்பதற்கடையாளமாய் × குறியொன்று வைத்துவிட்டு, அணாவைமாத்திரம் பிடித்துக்கொண்டு மேலே உள்ள அணாக்களுடன் கூட்டிக்கொண்டேபோகவும். (உ-ம்) பைசாவிலிருந்து கிடைத்த 2 அணாவை, அணாக் கலத்திலுள்ள 5 அணாவுடன் சேர்க்க, 7 அ.; 7 அ. + 6 அ. = 13 அ.; 13 அ. + 4 அ. = 1 ரூ. 1 அ. (இங்கே 4 அணாவுக்குப் பக்கத்தில் 1 குறி போடவும்) இந்த 1 ரூ. 1 அணாவில் ரூபாயை விட்டுவிட்டு, அணாவைமாத்திரம் கூட்டிக்கொண்டுபோகவும். 1 அணா + 3 அணா = 4 அணா; 4 அணா + 10 அணா = 14 அணா; 14 அணா + 5 அணா = 1 ரூ. 3 அணா. இங்கேயும் (5 அணாவுக்குப் பக்கத்தில்) குறி போடவும். ஏனெனில் இவ்விடத்தில் ஒரு முழு ரூபாய் கிடைத்



தது என்னும் குறிப்புக்காகவே. இனி அணாக்கலத்தில் நாம் ரூபாய்களாகப் பாவித்துக் குறித்த குறிகளை எண்ணி இவ்வளவு ரூபாய் என்று பார்த்து (அதாவது 2 ரூ.) அதை ரூபாயுடன் சேர்த்துக் கூட்டிக்கொள்ளவும்.

இதுவரையில் சொல்லப்பட்டதில் கவனிக்கவேண்டிய பொது விதி என்னவெனில்: பைசாக்களைக் கூட்டிக்கொண்டே போகும்போது முழு அணா எவ்விடத்தில் கிடைக்கிறதோ அவ்விடத்தில் ஓர் குறி போட்டுக்கொண்டு மீதியுள்ள பைசாவை மேலேயுள்ள பைசாக்களுடன் கூட்டி அணாவை நிறுத்திவிட்டு மறுபடியும் பைசாவைக் கூட்டிக்கொண்டு போகவும். கடைசியாய் உள்ள பைசாவுடன் முழு அணாவாக்க வழியில்லாததினால் அதுவே மீதியுள்ள பைசாவாகும். அப்படியே அணாக்களைக் கூட்டும்போதும், 16 அணா அதாவது ரூபாய் கிட்டியவுடன் அதைப் பிரித்துவிட்டு (அங்கு குறியிட்டு) அணாவைத் தொடர்ந்துபோகவும்.

இது நிற்க, கழித்தலைப்பற்றிக் கவனிப்போம்:—

| (உ-ம்.) | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| | 56 | 4 | 3 |
| | − 38 | 5 | 7 |
| | = 17 | 14 | 8 |

வழக்கமாய் இதைச் செய்யும்போது 7-பைசா கொடுக்க வேண்டிய இடத்தில், நம்மிடம் 3-பைசாமாத்திரம் இருப்பதால் அணாக்களில் 1-அணா எடுத்து மாற்றி அத்துடன் நம்மிடமுள்ள 3-பைசாவையும் கூட்டி, கூட்டிவந்த தொகையாகிய 15-பைசாவில் 7-பை. கொடுக்க மீதி 8-பை. எனக் குறிப்பிடுகிறோம். இப்படிச் செய்வதற்குப்பதிலாய்க் கீழ்க்கண்டபடி செய்து பார்ப்போம். அதாவது:— 7-பைசாக் கொடுக்கவேண்டியதற்கு நம்மிடமுள்ளது 3-பை. மாத்திரமே. ஆகவே இன்னும் 4-பை. வேண்டியிருக்கிறது. இந்த 4-பைசாவையும், நம்மிடத்திலுள்ள அணாக்களில் 1-அணா எடுத்து அதில் 4-பை. கொடுக்க மீதி

8-பை. என்பதைத் தெரிந்துகொள்வோமாக. அவ்வண்ணமே, [அணுவைக் கழிக்கும்போது, போதாத தொகைக்கு, ரூபாயில் 1-ரூபாய் எடுத்து மாற்றி அத்துடன் நம்மிடமுள்ள 3-அணுவை யும் சேர்த்து, மொத்தமாகிய 19-அணுவிலிருந்து 5-அணுவைக் கழிக்க 14-அணு, என்பதற்குப்பதிலாய்] 5-அணு கொடுக்க வேண்டிய இடத்தில் நமமிடமுள்ளது 3-அணுவே. ஆதலால் இன்னும் இரண்டணுத் தேவையாயுள்ளது, இந்த இரண்டணுவை, நம்மிடத்திலுள்ள ரூபாய்களில் 1-ரூபாயிலிருந்து (இரண்டணு வைக்) கொடுத்துவிட, மீதியுள்ளது 14-அணு அல்லவா? இதை அணுக்கலத்தில் குறிப்பிடவும்.

கடைசியாய் இதுவரையில் சொல்லப்பட்ட இம்முறையானது, ரூ. அ. பை., கூட்டல், கழித்தலை ஆரம்பிக்கும்போது, மிகவும் உபயோகம் உள்ளதென்பதற்கையமில்லை. மேலும் இன்னும் சிறு வகுத்தல் முதலாய்த் தெரியாதவர்கள் கற்றுக்கொள்வதற்கும் எளிதே. நானும், நாம் சாதாரணமாய் இதில் கையாடும் முறையை ஒரு வருஷத்திலும், இப்போது சொல்லப்பட்ட முறைப்படி மற்றோர் வருஷத்திலும், பிள்ளைகளைப் பழக்கியதில், அதிகமான பிள்ளைகள் இம்முறையில், சீக்கிரமாகவும் தப்பித மன்னியிலும் கூட்டல், கழித்தல்களைச் செய்யக்கூடியவர்களாய் இருந்தார்கள். மேலும் நீண்ட கூட்டல்களைக் கணக்குங்கால் இந்த வழி மிகவும் சுலபமானதே. இம்மாதிரியே மற்ற, பெருக்கல், நிறுத்தல், முகத்தல் அளவைகளையும் சம்மந்தப்படுத்தலாம். ஆயினும், ஒன்றைத்தான் கொள்ளவேண்டும், மற்றொன்றைத் தள்ளவேண்டும் என்பதும் நமது அபிப்பிராயமல்ல. ஆகவே நமது சகோதரர்கள் இப்போது சொல்லப்பட்ட முறையையும் அனுசரித்து, அதனால் பலன் கிடைக்கிறதோவெனத் தெரிந்து கொள்வதுடன், சாதாரணமாய்ச் செய்யும் பழக்கத்துடன் இப் பழக்கத்தையும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதினால் சில பிரயோஜனங்கள் உண்டாகாமற்போகாது என்பதையும் அறிவார்களாக.

P. ஆரோக்கியம்,
பூர்வமாணவன், மாண்டலே.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1920.

471

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY:



16128

திருச்சிறுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனு விஷயர் பூந்[illegible].

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 10. | ஜனவரி 1921. | மலர் 7. |
| --- | --- | --- |

## பத்திராதிபர் குறிப்புகள்.

இப்புது வருடத் துவக்கத்தில் சென்னையில் நடந்தேறிய மரியாயின் மகா சங்கத்தின்போது பேசித் தீர்மானிக்கப்பட்ட பல விஷயங்களுள் கத்தோலிக்கரின் கல்வி

விர்த்தியும் ஒன்று; இதை அதிமுக்கியமான விஷயங்களுள் ஒன்று என்று சொல்லத்தகும். கத்தோலிக்கர் தங்கள் வேதத்தை நன்குணர்ந்து அதன்படி ஒழுகுவதற்கும் பிறருக்கு அதன் மேன்மையையும் பயனையும் பிரத்தியட்சப்படுத்துவதற்கும் கல்வியானது பிரதான சாதனங்களில் ஒன்றாகும். கத்தோலிக்கருக்குள் கல்வி எவ்வளவு உயருமோ, அவ்வளவு அவர்களுடைய வேதமும் தழைத்தோங்கும். அவ்வேதத்தின் மேன்மையை மூடர்கள் உணரமாட்டார்கள்; அதன் பயனை அறிவிலிகள் அறியார்கள். இதனால்தான் ஜனங்கள் கல்வி அறிவில் உயரவேணுமென்பது கத்தோலிக்கு வேதத்தின் தாற்பரியம். தன்னால் விளைவிக்கக் கூடிய நன்மைகளையெல்லாம் பெறுவதற்கு அருகர்கள் கௌரவமுள்ள மானிடர்கள்தான் என்பது அவ்வேதத்தின் கொள்கை. இந்தக் கௌரவம் சிலரிடத்தில் இயற்கையாய் அல்லது தேவ வரமாய் அமையும். ஆகிலும் பொதுவில் இக்குணத்தை உண்டுபண்ணுவது மனிதனுடைய பிரயாசை. இந்தப் பிரயாசை சித்திபெறுவதற்குக் கல்வியறிவு சாதாரண சாதனம்.

* * *

கல்வி அபிவிர்த்திக்காகத் தேடவேண்டிய வழிபாடுகளில் ஒன்று இதற்காக ஓர் நிதி சேகரிப்பது என்று மேற்சொன்ன மகா சங்கம் தீர்மானித்தது. பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும், அதற்குவேண்டிய சாமான்கள் வாங்குவதற்கும், நல்ல உபாத்திமார்களுக்குப் போதிய சம்பளம்கொடுத்து ஆதரிப்பதற்கும், எளிய மாணவர்களுக்குத் தேவையான உதவி செய்வதற்கும் பணம் அவசியமென்று சொல்லாமல் விளங்கும். ஆனால் பணம் எங்கிருந்து வரும்? கல்வி விர்த்தியைப்பற்றி வாய்ச்சாலகமாய்ப் பேசுகிறவர்கள் இதைக் கவனிக்கட்டும்.

* * *

முந்திய காலத்தைப்போல் சர்க்காரால் நியமிக்கப்பட்ட விஷயங்களைமாத்திரம் பாடசாலைகளில் கற்பிப்பது உசிதமல்லவென்று ஒவ்வொரு பாடசாலைகளிலும் இடத்



துக்கும் சந்தர்ப்பத்துக்கும் தகுந்ததுபோல் பாடக்கிரமங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஷை பாடசாலைகளின் அதிகாரிகளும் ஆசிரியரும் தூண்டப்படுகிறார்கள். இதைப்பற்றி கனம் டைரெக்டர் அவர்கள் விசேஷ நிருபம் ஒன்று விடுத்திருக்கிறார். ஊக்கமும் உற்சாகமுமுள்ள உபாத்திமாருக்கு இந்த நிருபமானது சந்தோஷகரமான செய்தியாகும்.

* * *

நமது சந்தாதாரிற் பலர் ஒரு ரூபாய் மொத்தமாய்க் கொடுப்பதற்குக் கொஞ்சம் சிரமப்படலாம்; சமயா சமயம் நாலு அணா எட்டு அணா என்று பாகம் பாகமாய்க் கொடுக்கத் தயாராயிருக்கலாம். இப்பேர்ப்பட்டவர்கள் சமயா சமயம் தங்களால் கூடியதை அனுப்பிக்கொள்ளலாம்; வரவர நாம் கணக்கு வைத்துக்கொள்வோம்.

* * *

மேலும், V. P. வழியாக அனுப்பும் சகலமும் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று புது ஒழுங்கு வந்திருப்பதால், இனிமேலாக V. P. வழியாகப் பத்திரிகை பெற்றுக்கொள்பவர்களுக்குச் செலவு ஜாஸ்தியாகும். அப்படி இல்லாமல் முன்பணமாக அனுப்பிக்கொண்டால் ஒரு ரூபாயோடு சுருக்கமாய் முடிந்துவிடும். இந்த ரூபாயை மொத்தமாய் மணியார்டர் செய்யலாம்; அல்லது பாகம் பாகமாக தபால் முத்திரை வாங்கி அனுப்பிக்கொள்ளலாம். கடைசி நாள் மட்டும் காத்திராமல் எச்சமயத்திலும் அனுப்பலாம். இதெல்லாம் சந்தாதார் கவனிப்பதுமன்றி, ஏனையோருக்கும் சொல்லி அதிக சந்தாதார் சேர்க்கப் பிரயாசப்படும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாதாரின் தொகைக்குத் தக்கது பத்திரிகையும் விரியும்; பயனும் அதிகப்படும்.

## பாடக்கிரமம் VI.

### தேக அப்பியாசம்.

இந்த அப்பியாசங்களைச் செய்யும்போது ஒன்றிலிருந்து எட்டு வரையில் ஏற்றியும் மறுபடியும் எட்டிலிருந்து ஒன்றுவரையில் இறக்கியும் சொல்லிக்கொண்டே செய்க. மொத்த எண்கள் 16 ஆகும். முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரையில் இதே மாதிரி எண்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இந்த அப்பியாசங்களைக் கற்பிக்கும் உபாத்தியாயர் தாமே முதலில் கற்றுக்கொண்டபின் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும்.

### I STANDARD.

I. (a) 1. இடது கையை முன்பக்கம் தூக்கு.
2. முதல் நிலைமை.
(b) 1. வலது கையை முன்பக்கம் தூக்கு.
2. முதல் நிலைமை.
(c) 1. இடது கையையும் வலது கையையும் மாற்றி மாற்றிச் (alternate) செய்க.
2. முதல் நிலைமை.

II. (a) 1. இடது கையை இடது பக்கம் தூக்கு.
2. முதல் நிலைமை.
(b) 1. வலது கையை வலது பக்கம் தூக்கு.
2. முதல் நிலைமை.
(c) 1. இடது கையை இடது பக்கமாகவும், வலது கையை வலது பக்கமாகவும், மாற்றி மாற்றிச் (alternate) செய்க.
2. முதல் நிலைமை.

III. முழங்கையை மடித்து விரல்களை நீட்டி அவை பிடரியில் ஒன்றோடொன்று தொடுமாறு வைக்க.
(a) 1. இடது காலை முன்பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.
(b) 1. வலது காலை முன்பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.



(c) 1. இடது காலையும் வலது காலையும் முன் பக்கமாக மாற்றி மாற்றிச் (alternate) செய்க.
2. முதல் நிலைமை.

IV. (a) 1. இடது காலை இடது பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.
(b) 1. வலது காலை வலது பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.
(c) 1. இடது காலையும், வலது காலையும், இடது புறமாகவும் வலது புறமாவும் மாற்றி மாற்றிச் (alternate) செய்க.

V. (a) 1. இடது காலை பின் பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.
(b) 1. வலது காலை பின் பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.
(c) 1. இடது காலையும், வலது காலையும், பின் பக்கமாக மாற்றி மாற்றிச் செய்க.
2. முதல் நிலைமை.

VI. **இரு கைகளால் இடுப்பைப் பிடித்தல்.**
(a) 1. இடுப்பை முன் பக்கம் வளைத்தல்.
2. முதல் நிலைமை.
(b) 1. இடுப்பை பின் பக்கம் வளைத்தல்.
2. முதல் நிலைமை.
(c) 1. இடுப்பை முன் பக்கமாகவும் பின் பக்கமாகவும் மாற்றி மாற்றிச் செய்க.
2. முதல் நிலைமை.

VII. (a) 1. இடுப்பை இடது பக்கம் சாய்க்க.
2. முதல் நிலைமை.
(b) 1. இடுப்பை வலது பக்கம் சாய்க்க.
2. முதல் நிலைமை.
(c) 1. இடுப்பை இடது பக்கமாகவும், வலது பக்கமாகவும் மாற்றி மாற்றிச் செய்க.
2. முதல் நிலைமை.

## VIII. **மூச்சப்பியாசம்** (Breathing Exercise.)

1. மூச்சை மூக்கினால் உள்ளே இழு.
2. மூச்சை மூக்கினால் வெளியே விடு.

## II STANDARD.

I. (*a*) 1. இரு கைகளை இரு பக்கமாக தலைக்குமேல் நீட்டு.

2. முதல் நிலைமை.

(*b*) 1. இரு கைகளை முன் பக்கமாக தலைக்குமேல் நீட்டு.

2. முதல் நிலைமை.

(*c*) 1. இரு கைகளையும் பின்னால் நீட்டு.

2. முதல் நிலைமை.

II. **இரு கைகளால் இடுப்பைப் பிடித்தல்.**

(*a*) 1. இடது குதிகாலை மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.

(*b*) 1. வலது குதிகாலை மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.

(*c*) 1. இட, வல குதிகால்களை மாற்றி மாற்றிச் (alternate) செய்க.

2. முதல் நிலைமை.

(*d*) 1. இரு குதிகால்களையும் மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.

(*e*) 1. முழங்கால்களை வளைத்து குதிகால்களின் மேல் உட்கார்.

2. முதல் நிலைமை.

III. (*a*) 1. இடது கையை பின்னால் நீட்டி இரு குதிகால்களையும் மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.

(*b*) 1. வலது கையை பின்னால் நீட்டி இரு குதிகால்களையும் மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.



(*c*) 1. இடது கையையும் வலது கையையும் பின் பக்கமாக மாற்றி மாற்றி குதிகால்களைத் தூக்கிச் செய்க.

2. முதல் நிலைமை.

IV. (*a*) 1. இரு முழங் கையையும் மடித்து இடுப்பிற்குப் பின்னால் வைத்து முன்னால் சாய்.

2. முதல் நிலைமை.

(*b*) 1. இதே விதமாக பின்னால் சாய்.

2. முதல் நிலைமை.

(*c*) 1. இதே விதமாக முன்னும் பின்னும் மாற்றி மாற்றிச் செய்க.

2. முதல் நிலைமை.

V. (*a*) 1. இரு கைகளையும் இரு பக்கங்களில் நீட்டு.

2. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டு.

3. முதலில் செய்த மாதிரி செய் (1-வது அப்பியாசம் போல்.)

4. முதல் நிலைமை.

(*b*) 1. இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி குதிகால்களையும் மேலே தூக்கு.

2. முதல் நிலைமை.

VI. (*a*) 1. இரு கைகளையும் முன்னால் நீட்டு.

2. இரு முழங்கால்களையும் மடித்து கீழே உட்கார்.

3. முதலாவதுபோல்.

4. முதல் நிலைமை.

(*b*) 1. இரு முழங்கைகளையும் மடித்து புஜங்களில் பக்கவசமாக வைகக.

2. இடுப்பை முன்னால் சாய்த்தல்.

3. முதலாவது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(*c*) 1. இரு கைகளையும் முன்னால் நீட்டு.

2. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டி குதிகாலைத் தூக்கு.

3. முதலாவது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

### மூச்சப்பியாசம்.

VII. 1. மூச்சை மூக்கினால் உள் இழுத்தல்.
2. மூச்சை மூக்கினால் வெளி விடுதல்.

## III STANDARD.

I. (*a*) 1. இரு கைகளையும் இரு பக்கங்களில் நீட்டு.
2. இரு கைகளையும் முன்னால் நீட்டி குதிகாலை மேலே தூக்கு.
3. முதலாவது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(*b*) 1. இடது கையை மேலே நீட்டி, வலது கையை பின் பக்கம் நீட்டு.
2. முதல் நிலைமை.

(*c*) 1. இரு கைகளையும் முன் பக்கம் நீட்டு.
2. இடுப்பை முன்னால் வளைத்து இரு கையால் தரையைத் தொடுதல்.
3. முதலாவது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(*d*) 1. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டி முழங்கால்களை மடித்து உட்கார்.
2. முழங்கால்களை நிமிர்த்தி இரு கைகளை முன்னால் நீட்டு.
3. முதலாவது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

II. (*a*) 1. இடது கையை முன் பக்கமாக மேலே நீட்டி வலது கையை பின் பக்கமாக நீட்டி இரு குதிகால்களை மேலே தூக்கு.
2. முதல் நிலைமை.

(*b*) 1. வலது கையை முன் பக்கம் மேலே நீட்டி இடது கையை பின் பக்கம் நீட்டி குதிகாலை மேலே தூக்கு.
2. முதல் நிலைமை.



(*c*) 1. இரு பக்கத்திலும் *a*, *b* அப்பியாசத்தைப் போல் மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.
2. முதல் நிலைமை.

III. (*a*) 1. இரு கைகளையும் இரு பக்கங்களில் நீட்டி இடுப்பை முன்னால் சாய்த்தல்.
2. முதல் நிலைமை.

(*b*) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டு.
2. இரு கைகளையும் பின்பக்கமாக கீழ்நோக்கிச் சுற்றி முன்பக்கம் கொண்டுவந்து நீட்டு.
3. 2-வது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

IV. (*a*) 1. இரு கைகளையும் முழங்கையிலிருந்து மடித்து மார்புக்கு நேராக வைத்து முழங்கைகளை பக்கத்தில் சேர்.
2. இடது கையை தலைக்குமேல் நீட்டி வலது கையை கீழே தொங்கவிடு.
3. முதலாவது அப்பியாசம்போல்.
4, முதல் நிலைமை.

(*b*) 1. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டு.
2. இரு கைகளையும் முன்னால் சுற்றி தலைக்கு மேல் நீட்டு.
3. இரு பக்கத்திலும் கைகளை நீட்டு.
4. முதல் நிலைமை.

(*c*) 1. இரு முழங்கைகளையும் மடித்து இரு பக்கம் புஜத்தின்மேல் வை.
2. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டி இரு குதிகால்களை மேலே தூக்கு.
3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(*d*) 1. இரு முழங்கைகளையும் மடித்து மார்புக்குக் குறுக்காக வை.
2. இரு கைகளை இரு பக்கத்திலும் நீட்டி இரு குதிகால்களை மேலே தூக்கு.

3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

V. (a) 1. இரு கைகளையும் முன் பக்கம் நீட்டு.
2. இரு கைகளையும் பக்கங்களில் நீட்டி இரு முழங்கால்களை மடித்து குதிகாலில் உட்கார்.
3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளை தலைக்குமேல் நீட்டு.
2. இரு கைகளையும் பின்பக்கம் நீட்டி குதிகாலை மேலே தூக்கு.
3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

## IV STANDARD.

I. (a) 1. இரு கைகளால் இடுப்பை இரு பக்கங்களிலும் பிடி.
2. இரு குதிகால்களையும் மேலே தூக்கு.
3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளை மார்புக்கு நேராக செங்குத்தாய் வைத்து இரு முழங்கைகளையும் திரேகத்தோடு சேர்த்து வை.
2. இரு குதிகால்களையும் மேலே தூக்கு.
3. முதல் அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

II. (a) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டு.
2. இரு கைகளையும் பின்பக்கம் நீட்டு.
3. முதலாவது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளாலும் இரு பக்கத்து இடுப்பைப் பிடித்து $\frac{1}{4}$ வட்டம் இடது புறம் திரும்பு.
2. இரு கைகளையும் இரு பக்கத்தில் நீட்டி இரு குதிகால்களையும் மேலே தூக்கு.



3. வலது பக்கம் கால்வட்டம் திரும்பி நேராக நில்.
4. முதல் நிலைமை.

(c) 1. இரு கைகளாலும் இரு பக்கத்து இடுப்பைப் பிடித்து $\frac{1}{4}$ வட்டம் வலதுபுறம் திரும்பு.
2. இரு கைகளையும் இரு பக்கத்தில் நீட்டி இரு குதிகால்களையும் மேலே தூக்கு.
3. இடது பக்கம் கால்வட்டம் திரும்பி நேராக நில்.
4. முதல் நிலைமை.

III. (a) 1. இடது கையை முன்பக்கமாக தலைக்குமேல் நீட்டி வலது கையை பின்பக்கமாக நீட்டி இடது காலை முன்பக்கமாக எடுத்து வை.
2. முதல் நிலைமை.

(b) 1. வலது கையை முன்பக்கமாக தலைக்குமேல் நீட்டி இடது கையை பின்பக்கமாக நீட்டி வலது காலை முன்பக்கமாக எடுத்து வை.
2. முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசத்தை மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.
2. முதல் நிலைமை.

IV. (a) 1. இரு கைகளையும் பின்பக்கமாக நீட்டி இடதுகாலை முன்பக்கமாக எடுத்து வை.
2. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் பின்பக்கமாக நீட்டி வலது காலை முன்பக்கமாக எடுத்து வை.
2. முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசங்களை மாற்றி மாற்றி (ஆல்டர்நேட்) இடது பக்கமும் வலது பக்கமுமாகச் செய்.
2. முதல் நிலைமை.

V. (a) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டி, இடது காலை முன்பக்கம் எடுத்து வை.

2. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டி வலது காலை பின்பக்கம் எடுத்து வை.

2. முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசத்தை, இடம் வலமாக மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.

2. முதல் நிலைமை.

(d) 1. இரு கைகளையும் முன்னால் நீட்டி முழங்காலை மடித்து உட்கார்.

2. முழங்காலை நிமிர்த்தி இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டு.

3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

## V STANDARD.

I. (a) 1. இரு கைகளையும் பின்பக்கம் நீட்டி இடுப்பை முன்பக்கம் சாய்.

2. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டி இடது காலை முன்பக்கம் எடுத்து வை.

2. இரு குதிகால்களை மேலே தூக்குக.

3. இரு கைகளையும் பின்பக்கம் நீட்டி இரு குதிகால்களையும் கீழே தாழ்த்து.

4. முதல் நிலைமை.

II. (a) 1. இரு கைகளை இரு புஜங்களின் மேல்பக்கமாக மடித்து வை.

2. இடுப்பை இடதுபக்கம் சாய்.

3. முதலாவது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளை இரு புஜங்களின்மேல் இரு பக்கமாக மடித்து வை.

2. இடுப்பை வலதுபக்கம் சாய்.



3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசங்களை இடம் வலமாக மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.

2. முதல் நிலைமை.

III. (a) 1. இரு கைகளையும் இரு பக்கமாக நீட்டி இடதுகாலை இடதுபக்கம் எடுத்து வை

2. இரு குதிகால்களையும் மேலே தூக்கு.

3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் இருபக்கமாக நீட்டி வலதுகாலை வலதுபக்கம் எடுத்து வை.

2. இரு குதி கால்களையும் மேலே தூக்கு.

3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசங்களை இடம் வலமாக மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.

2. முதல் நிலைமை.

IV. (a) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டி இடது காலை முன்பக்கம் எடுத்து வை.

2. இரு கைகளை தலைக்குமேல் தூக்கி இரு குதிகால்களை மேலே தூக்கு.

3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் முன்பக்கம் நீட்டி வலது காலை பின்பக்கம் எடுத்து வை.

2. இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி இரு குதிகால்களை மேலே தூக்கு.

3. 1-வது அப்பியாசம்போல்.

4. முதல் நிலைமை.

V. (a) 1. இடுப்பை இரு கைகளால் இருபக்கமாக பிடி.

2. இடது முழங்காலை மடித்து மேலேதூக்கு.

3. 1-வது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(b) 1. இடுப்பை இரு கைகளால் இருபக்கமாக பிடி.
2. வலது முழங்காலை மடித்து மேலே தூக்கு.
3. 1-வது அப்பியாசம்போல்.
4 முதல் நிலைமை.

(c) 1. a, b என்கிற அப்பியாசங்களை இடம் வலமாக மாற்றி மாற்றிச் (ஆல்டர்நேட்) செய்.
2. முதல் நிலைமை.

VI. (a) 1. இடுப்பை இரு கைகளால் இருபக்கமாக பிடி.
2. இடுப்பை முன்பக்கம் சாய்.
3. இடுப்பை பின்பக்கம் சாய்.
4. முதல் நிலைமை.

(b) 1. இரு கைகளையும் தலைக்குமேல் நீட்டு.
2. இடது முழங்காலை வளைத்து மேலே தூக்கி வலது குதிகாலை மேலே தூக்கு.
3. 1-வது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

(c) 1. இரு கைகளை தலைக்குமேல் நீட்டு.
2. வலது முழங்காலை மடித்து மேலே தூக்கி இடது குதிகாலை மேலே தூக்கு.
3. 1-வது அப்பியாசம்போல்.
4. முதல் நிலைமை.

**குறிப்பு:**—மேலே காட்டிய அப்பியாசங்களோடு பற்பல விதமான விளையாட்டுகளையும் கற்பிப்பது வெகு உபயோகமாகும். இப்படி கற்பிக்கக்கூடிய விளையாட்டுகளுக்கு சிற்சில உதாரணங்கள் சமயாசமயங்களில் எழுதி வெளிப்படுத்துவோம்.

**S. கந்தசாமிபிள்ளை,**
Drill Master.



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடது பக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

## I. பாலிய மாணவ சங்கம்.

நம் தேயத்தில் பிரதம பாடசாலைகளை ஏற்படுத்தியிருப்பதின் நோக்கம் இதை வாசிக்கும் என் நேயர்கள் யாவரும் நன்குணர்ந்த விஷயமே எனினும், யானறிந்தமட்டும் எடுத்துக்கூற அவாவுற்றனன்.

சிறுவர்கள் தங்கள் பிற்கால ஜீவியத்திற்கு வேண்டியவைகளைப் பழகப் பிரதம பாடசாலை நல்ல ஒரு அஸ்திவாரமாயிருக்கின்றது. நிற்க, மேற்கூறிய பாடசாலையில்தான் சிறுவர்கள் நன்கு பேசவும், எழுதவும், வாசிக்கவும் இன்னும் இதர விஷயங்களைப் பயிலவும் துவக்குகின்றனர். கூறப்பட்ட விஷயங்களில் தேர்ச்சியடையப் பின்கூறும் மாணவ சங்கம் ஓர் நல்ல வழிப்பாடாகும். ஆனதுபற்றியே இதை நோக்கும் பிரதம ஆசிரிய நண்பர்களெல்லோரும் முன்சொல்லப்பட்ட விஷயத்தில் தகுந்த சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

ஆகவே, ஒவ்வொரு பாடசாலைகளிலும் சிறுவர்களுக்கென ஓர் சங்கம் ஏற்படுத்தவேண்டும். சங்கம் எப்படி ஏற்படுத்துவதென்றாலோ? அந்தந்தப் பாடசாலை மாணவர்களையே மெம்பர்களாகக்கொண்டு, ஆசிரியர்களையே அக்கிராசனாதிபதிகளாகக் கொள்வதே.

மேற்கூறப்பட்டவண்ணமே திட்டஞ்செய்து கூடி எந்த கட்டத்தையும்பற்றிப் பேசவோ? அல்லவே, அல்ல. இல்லையென்றால் பின் என்னதான் செய்ய?

என்ன செய்யவா? நிகழும் ஒவ்வொரு சங்கத்திலும் என்னென்ன விஷயங்கள் நடைபெறுமென்று அக்கிராசனாதிபதி முன்னறிவித்தவண்ணமே நடைபெறச் செய்க.

(a) ஒருவர் ஒரு விஷயத்தை வியாசம் எழுதிப்படித்தல்.

(b) ஒருவர் தம்முடைய வகுப்புச் செய்யுள்களில் சில பாடல்களை மனனம் செய்து கூடியமட்டும் இராகத்துடன் ஒப்பித்தல்.

(c) ஒருவர் ஒரு விஷயத்தை உபந்நியாசம் செய்தல்.

முறையே சில விஷயங்கள் நடைபெற, இறுதியில், இதரமெம்பர்களும் அக்கிராசனம் வகிப்பவர்களும், நடந்தேறிய விஷயங்களிலுள்ள குணதோஷங்களைக் கூறுதல். மேலும் அந்தந்தச் சங்கத்திலும் முன் தீர்மானம்பண்ணப்பட்டபடியே சந்தாப் பிரித்தல் முதலியன நடைபெறுதல்.

இவ்விதம் நடைபெறுவதனாலுண்டாகும் பயனை சொல்லாமலே விளங்கும் என்றாலும், யானறிந்தமட்டும் மாணவ சங்கமானது பிள்ளைகளை உற்சாகப்படுத்துகின்றது. அஃது எவ்வாறென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளலாம்.

பிள்ளைகள் வியாசம் எழுதி வாசிப்பதானது அன்னவர்களை வியாசமெழுதுவதில் தேர்ச்சியடையச் செய்கிறதுமன்றி, எழுத்தைத் திருத்தமாய் எழுதத் தூண்டுகிறது. அன்றியும் அவர்களுடைய யோசனை சக்தியும் விர்த்தியாக ஏதுவாயிருக்கிறது. பாட்டு ஒப்பித்தலானது பையன்களுடைய ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கிறதுந்தவிர, நல்ல பாடகர்களாக்கவும் உதவி செய்கின்றது. உபந்நியாசித்தலானது பிள்ளைகளைத் திருத்தமாயும், தெளிவாயும், நல்ல நடையிலும் பேசச் செய்கிறதுமாத்திரமல்ல, அவர்களை அதிக நல்ல பிரசங்கிகளாக்கவும் உதவுகிறது. இம்மட்டோ? அவாகள் சந்தாக் கொடுத்தலானது அன்னவர்களுடைய "ஈகை"க்குணத்தை வளரச் செய்கின்றது. சுருக்கச் சொல்லின், சிறுவர்களுக்கு தங்கள் பிற்கால ஜீவியத்திற்கு வேண்டியவை யாவும் கொடுத்து, மாணவர்களை நல்லொழுக்கத்திலும் வளரச் செய்கின்றது.

ஆகையால் இதை வாசிக்கும் என் அரிய பிரிய நேயர்களே, இச்சங்கத்தின் பயனை நன்குணர்ந்த நீங்கள், உடனே உங்கள் பாடசாலைகளில் மேற்கூறிய சங்கத்தைத் துவக்கி நடத்தி அதன் பயனைப் பிள்ளைகளடையும்படியாகக் கிருபைகூர்ந்தருள வேண்டுமெனக் கிருபையின் சமுத்திரமாகிய கருணைக் கடவுளைப் பிரார்த்திக்கின்றனன்.

M. வியாகப்பபிள்ளை,
பழையமாணவன்,
புளியங்குடி.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.
MAR 1921



திருச்சிறுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 10. | பெபுருவரி 1921. | மலர் 8.

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்னை ஆரம்பப்படிப்பு மசோதாவானது சட்டமாகி நாலு ஐந்து மாதங்களாகின்றன. இந்தச்சட்டம் அடுத்த ஏப்பிரல் மாதத்துவக்கத்திலிருந்து அமுலுக்கு வரப் போகிறதாக வதந்தி. அந்தச் சட்டத்தின் பற்பல பாகங்

களையொட்டிய விவரமான ஒழுங்குகள் திட்டம் செய்வதற்காக பன்னிரண்டு அங்கத்தினர் கூடிய ஓர் கூட்டமொன்று சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அந்த அங்கத்தினருள் ஒருவர் நமது பாடசாலையில் முன்னொருகாலம் தலைமை ஆசிரியராயிருந்த சங். அமலோற்பவநாத சுவாமிகள் என்றறிவது நேயர்களுக்குச் சந்தோஷமாயிருக்கலாம். மேற்சொன்ன கூட்டத்தார் வெகு சீக்கிரத்தில் சென்னையில் ஒன்றுகூடி ஒழுங்குகள் திட்டஞ்செய்து சர்க்காருக்கு அனுப்புவார்களாம்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பப்படிப்பு விஷயமாக ஆலோசனைச் சங்கத்தாரையும் தெரிந்தெடுப்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இந்தச் சங்கத்தாருள் திருச்சி ஜில்லாவில் ஒரு கத்தோலிக்கருக்கு இடம் கிடைக்குமென்றும் சொல்லுகிறார்கள்.

எல்லாம் முறையே தீர்மானமாகி, நமது தேசத்தில் ஆரம்பப்படிப்பு பரவி விர்த்தியாகி, நம்மவர்க்கு வெகு நன்மை பயக்கவேணுமென்று வெகுவாய் விரும்புகிறோம். பெரும் நன்மை விளையவேண்டுமானால் சர்க்கார்மாத்திரமல்ல, பொது ஜனங்களும் ஒத்துழைப்பது அவசியமென்று சொல்லாமலே விளங்கும்.

* * *

1919-ம் வருஷம் டிசம்பர் மாதப் பூங்கொத்தில், பென்ஷன் இல்லாத உபாத்திமாருக்கு ஒரு பாதுகாப்புநிதி (Provident Fund) ஏற்படுத்தும்படி சர்க்கார் முயற்சி செய்வதாகச் சொல்லியிருந்தோம். சமீபத்தில், அதைப் பற்றிய விதிமுறைகளை ஆராய்ந்து தீர்மானிக்கும்படி கல்வி இலாகாத் தலைவரை சர்க்கார் கேட்டிருக்கிறார்கள். 20-ரூபாய்க்குக் குறையாத மாத சம்பளம் பெறும் உபாத்திமார் இதில் கட்டாயம் சேரவேண்டுமாம்; ஏனையோர்



சேரக் கட்டாயமில்லை. ஆகிலும், சொற்ப சம்பளம் பெறும் உபாத்திமார்கள் இதில் சேரப் பிரியப்படுவார்களா? சேர்ந்தால், உபாத்திமைத் தொழிலில் நிலைநிற்க நேரிடும். அப்படி நிலைநிற்கத் துணிந்தவர்கள் எத்தனைபேர்?

* * *

கீழ்தரப்பாடசாலைகளில் சாதாரணமாய் நடத்திவரும் பாடங்களையொட்டிய கிரமங்கள் முந்திய சஞ்சிகைகளில் வெளியிட்டோம். அவைகளை அநுஷ்டித்து அநுபோகம் பெற்றவர்கள் இடத்துக்கும் மற்றச் சந்தர்ப்பங்களுக்கும் இசைய என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யலாமென்று கவனித்துக்கொள்க. இனி, சிற்சில மாதிரிப்பாடங்களும் அப்பியாசங்களும் வெளியிடுவோம். அதிகப் பயன் கொடுக்கக்கூடியதாய் அநேக விஷயங்களை வெளியிட வகையில்லாததைப்பற்றி விசனிக்கிறோம். பத்திரிகை விரியவழியில்லாததே இந்த விசனத்துக்குக் காரணம். சந்தாதார் அதிகப்படாவிட்டால் பத்திரிகை எப்படி விரியும்? விரியாவிட்டால், அதிகப்பயன் கொடுக்கக்கூடியதெங்ஙனம்?

## கணக்குப் பாடத்தில் ஓர் பாடக்குறிப்பு.

**நோக்கம்** :—எண்களின் பாதி கண்டுபிடிக்கும் அறிவைச் சுலபமான கடைக் கணக்குகள் செய்வதில் பிரயோகித்தல்.

**உபகரணம்** :—கால் அணா, அரை அணா, ஒரு அணா நாணயங்கள் ; பென்சில், குண்டூசி, கவர், ரவை முதலிய சிறு பொருள்கள்.

**முன்னறிவு** :—1 முதல் 100 வரையுள்ள எண்களின் பாதி கண்டுபிடித்தல். (கேள்விகள் மூலமாய் இந்த அறிவை ஞாபகப்படுத்த.)

| புதிய அறிவு. | முறை. |
|---|---|
| 1. கால் அணா, அரை அணா, முழு அணா இவைகளின் அபிப்பிராயம். | ஷை நாணயங்களைக்காட்ட. |
| 2. இவைகளின் சம்மந்தம்:<br>2 கால் அணா = 1 அரை அணா.<br>2 அரை அணா = 1 முழு அணா. | கேள்விகேட்டு விளக்கியபின் கரும் பலகையில் எழுத. |
| 3. முன்னறிவையும் புது அறிவையும் சேர்த்து உபயோகிக்கக்கூடிய வினைக் கணக்குகள். | |

### உதாரணம்.

| | |
|---|---|
| (a) ஒரு அணாவுக்கு நாலு பென்சில்; அரை அணாவுக்கு எத்தனை? | ஒரு அணாவில் பாதி அரை அணா; நாலில் பாதி இரண்டு. |
| (b) அரை அணாவுக்கு 36 குண்டூசி; கால் அணாவுக்கு எத்தனை? ஒரு அணாவுக்கு எத்தனை? | 36-ல் பாதி 18.<br>36-ன் இருமடங்கு 72. |
| (c) 12 கவர் 2 அணாவாம்; எனக்கு 3 கவர் வேண்டும்; எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்? | 12-ல் பாதி (6) = 1 அணா.<br>6-ல் பாதி (3) = அரை அணா. |
| (d) ஒரு அணாவுக்கு 8 ரவை என்றால் கால் அணாவுக்கு எத்தனை? | 8-ல் பாதி 4.<br>4-ல் பாதி 2. |

குறிப்பு:—1. மேற்கண்ட முறைப்பிரகாரம் படிப்படியாய் கணக்குகளைப் பிள்ளைகள் செய்து விளக்கும்படி பழக்கவேண்டும். இந்தக் கணக்குகளெல்லாம் வகுப்புக்குள் மாத்திரமல்ல, வகுப்புக்கு



வெளியேயும் உபயோகப்படுமென்பதைப் பிள்ளைகள் உணரும்படி ஒவ்வொரு கணக்கிலும் குறித்த நாணயங்களையும் பொருள்களையும் கொண்டு பிள்ளைகள் விளையாட்டுப்போல் வாங்கி விற்கட்டும்.

2. இதே முறையை அநுசரித்து, சாண், முழம், கெஜம்: இவைகளையொட்டிய கடைக்கணக்குகள் கற்றுக்கொடுக்க ஓர் பாடக்குறிப்பு எழுத. (இதை நமக்கு அனுப்பினால் நாம் பார்த்து பிரசுரிக்கத் தகுந்ததானால் பிரசுரிப்போம்.—பத்திராதிபர்.)

---

## கதையும் கதை நடித்தலும்.

(மகா-ள-ள-ஸ்ரீ S- குப்புசாமி ஐயரவர்கள் எழுதியது.)

### I. கதை.

### புதிய ஆடை அணிந்த அரசன்.

முன்னொருகாலத்தில் பாரசீக தேசத்தில் ஓர் சக்கரவர்த்தி இருந்தார். அவருக்கு புதிது புதிதான ஆடைகளை தரித்துக்கொள்வதில் பிரியம் அதிகம். இராஜாங்க சம்பந்தமான விஷயங்களைச் சற்றேனும் கவனியாமல், நாள் முழுதும் ஆடைகளை ஒழுங்குபடுத்துவதிலும், நிமிஷத்திற்கு நிமிஷம் தம் உடைகளை மாற்றிக்கொண்டிருப்பதிலும், பலமாதிரியான வஸ்திரங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருப்பதிலேயும் காலத்தைக் கழித்துவந்தார். மற்றும் இக்காரியத்தின் பொருட்டு ஏராளமான திரவியத்தையும் வீணாக்கிவந்தார். இதனால் மந்திரி முதலிய அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்கும், பெரும்பான்மையான குடிகளுக்கும், மன்னர்பால் அதிக வெறுப்பு ஏற்பட்டிருந்தது. எனினும் சக்கரவர்த்தியிடம் எவ்வாறு தெரிவிப்பது! அவரோ சீக்கிரத்தில் உணரக்கூடுமென்று வாளாயிருந்தனர்.

இப்படியிருக்கையில், அவ்விராஜ்யத்தின் ஓர் பகுதியில் வசித்து வந்த இரண்டு போக்கிரிகள், இச்சக்கரவர்த்தியின் 'ஆடைப் பித்தை'க் கேள்வியுற்று, இவரிடமிருந்து ஏராளமான பொருள் பறித்துச் செல்லலாமென்று தலை நகர் வந்து, சக்கரவர்த்தியை அடைந்தனர். அடைந்தவர்கள், தாங்கள் கைதேர்ந்த நேசவாளிகளென்றும், பல நிறங்களோடும் வெகு நாணயமான சரிகைகளோடும் கூடிய நயமான ஆடைகளைத் தயாரிக்கக்கூடுமென்றும், மற்றும் அவ்

வாடைகள், தம்மந்தஸ்திற்குத் தகுதியற்றவர்கள், மூடர், இவர்கள் கண்களுக்குப் புலப்படாமல், கபடமற்றவர்களுக்கு மாத்திரமே புலப்படுமென்றும் சொன்னார்கள்.

இவைகளைக் கேள்வியுற்ற மன்னர்பிரான், 'ஆ! அப்படியா! ஆடைகள் நயமாயிருப்பதோடு, இவ்வித அற்புதத்தன்மையையுமா வுடையது! என்று மகிழ்வடைந்து, தமக்கு அம்மாதிரியான ஆடைகளை உடனே தயாரிக்கும்படிக்கும், அதற்காகும் பெருந்தொகையை பொக்கிஷக்காரரிடமிருந்து பெறும்படிக்கும் உத்தரவளித்தார். அவ்வாறே, அப்போலி நெசவாளிகள், தங்களுக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டு, தங்களுக்கென்று அமைத்திருந்த விடுதிக்குச் சென்று, வேலைசெய்வதுபோல் பாசாங்கு செய்துகொண்டும், அடிக்கடி பணத்தேவையென்று அதிகப்பொருளும் பெற்றுவந்தார்கள்.

மன்னர் பிரானே, தாம் உடுத்தப்போகும் அவ்வாடைகளின் நேர்த்தியைப்பற்றியும், அவைகளின் அபூர்வ குணத்தைப்பற்றியும், அக் குணத்தைக்கொண்டு தம் உத்தியோகஸ்தர்களின் வாஸ்தவமான யோக்கியதையை அறியக்கூடும் என்பவைகளைப்பற்றியும் சிந்தித்துக் கொண்டேயிருந்தார்.

அந்நகரிலுள்ள ஜனங்களின் பெரும்பாலர், அவ்வாடையின் அபூர்வ சக்தியைப்பற்றி ஆச்சரியமடைந்து, ஒவ்வொருவரும் தாம் எவ்வளவு புத்தியும், யோக்கியதையும் உடையவரென்று பிறருக்குக் காட்டவும், பிறருடைய முட்டாள்தனத்தை அறியவும் கூடுமென்று எண்ணியிருந்தனர்.

அவ்வெத்தர்கள் அவ்வாடைகளைத் தயாரிக்க ஆரம்பித்த சில தினங்களுக்குப்பின்னர், அரசன், எம்மட்டும் வேலை நடந்திருக்கிறது என்பதை அறிய அவாக்கொண்டார். தாமே நேரில்போய் பார்க்கலாமென்று எண்ணினார். அவ்வாடையின் சக்தி ஞாபகத்திற்கு வந்தவுடன், தம் அந்தஸ்து, புத்தியின் தெளிவு இவைகளைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. தம்மைத்தாமே பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ள மனத்திடமின்றி, தம் உத்தியோகஸ்தர்களுள், மிக நம்பிக்கையுள்ள, பிரதம மந்திரியை அந்நெசவர்களிடம் அனுப்பினார்.

மந்திரி, அவர்களிருப்பிடஞ்சென்று, வெறுந் தறியில் சுறுசுறுப்பாக வேலை செய்வதுபோல் பாவனை செய்துகொண்டிருப்பவர்களைப்



பார்த்து தம் கண்ணுக்கு யாதொன்றும் புலனாகாததால் மயங்கி நின்றார். நெசவர்களோ சமீபத்தில்வந்து இழையின் நேர்த்தியைப் பார்க்கும்படி வேண்டினார்கள். மந்திரி, நாம் முட்டாளா! அல்லது நாம் அடைந்திருக்கும் பதவிக்குத் தகுதியற்றவனா! வென்று யோசித்து, நம் கண்ணுக்கு புலப்படுவதுபோல் பாசாங்கு செய்வதே உசிதமென்று தீர்மானித்தார்.

அவ்வாறே, அத்தறியினர்களைப்பார்த்து, வேலை வெகு நேர்த்தியாயிருக்கிறது, உங்களுக்கு வேண்டிய பட்டுவகைகளையும்அனுப்புகிறேன். சக்கரவர்த்தியிடம் இவைகளைப்பற்றி பேசுகிறேன் என்று புகழ்ந்து சொன்னார்.

அவ்வற்புத வாடையின் சிலாக்கியத்தை, மந்திரி மூலமாகக் கேள்வியுற்ற மன்னர், மற்றும் சில உத்தியோகஸ்தர்களை பார்வையிட்டு வரும்படி அனுப்பினார். அவர்களும், பிரதான மந்திரி அடைந்த அனுபவத்தையே அடைந்து, அவர் செய்தவாறே ஒவ்வொருவரும் அவ்வாடையை வெகுவாய் சிலாகித்துப் பேசினார்கள். ஆனால் இவ்வற்புத இரகசியத்தை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக்கொள்ளவில்லை.

முடிவில் சக்கரவர்த்தியே தம் உத்தியோகஸ்தர்களுடன் நேரில் சென்றார். அங்கு இவர்கள் கண்ணுற்றதை சொல்லத் தேவையில்லை. அரசர் பட்ட கவலையை அளவுபடுத்த முடியாது. சுற்றியுள்ளவர்களோ, தங்கள் யோக்கியதை வெளியாகி விடுமோவென ஐயுற்று, உடுப்பு வெகு நேர்த்தி! வெகு நேர்த்தி! என்று ஆரவாரித்தார்கள். இவ்வித சந்தர்ப்பத்தில், யாது செய்வதென்று கலங்கி, முடிவில், தமக்குப் புலப்படுகிறது என்று பாசாங்கு செய்வதே உத்தமம், அன்றேல் தம் பதவிக்கே ஹானிவந்துவிடுமென்று கலங்கி, வெளிப்படையாக, வெகு நேர்த்தி! வெகு சிலாக்கியம்! சீக்கிரம் அரண்மனைக்குக் கொண்டுவருகவென உத்தரவிட்டு ஏகினார்.

மறுதினம் அப்போலி நெசவர்கள், இரண்டு காலிப் பெட்டிகளைக் கொலுமண்டபத்திற்குக் கொணர்ந்து, வஸ்திரத்தை எடுத்துக் காட்டுவதுபோல் கைகளை ஆட்டியும், விரித்தும் பலவாறு வர்ணித்தார்கள். அச்சபையிலுள்ளோர் ஒருவருக்கேனும், இது புலனாகவில்லை. ஆனால் ஒருவரேனும் வாய்விட்டு, ஒன்றும் காணோமே

எனக்கூறவில்லை. அவரவர்கள் சாயம் வெளியாகி விடுமோவென்று பயந்தார்கள்போலும்.

கடைசியாக ஜூபிலி தினத்தன்று மன்னர் பிரான், அவ்வாடையை அணிவது என்று தீர்மானமாயிற்று. தீர்மானித்தவாறு, மன்னர் உள்ளாடையை தரித்துக்கொண்ட பின்னர், அவ்விரு போக்கிரிகளும், அந்நூதன ஆடைகளைத் தாங்களே அணிவிப்பதுபோல் பாசாங்கு செய்தார்கள். உடனே அங்கு கூடியிருந்த சகலரும், (தங்கள் கண்ணுக்கு மன்னர் உள்ளாடையுடன் தோற்றப்பட்ட போதிலும்) ஆடையின் நேர்த்தி என்ன! வர்ணங்களின் பளபளப்பு கண்களைப் பறிக்கின்றனவே! வென்று ஆர்ப்பரித்தார்கள். ஊர்வலமும் புறப்படலாயிற்று, சக்கரவர்த்தியும் தாம் புதிய ஆடை அணிந்து செல்வதாக நினைத்து, கௌரவமாக நடந்து செல்லுகிறார். அரசரின் ஆடைகளைத் தாங்கி வருவோர், உண்மையில் அவைகளைத் தாங்கி வருவதுபோல் பாசாங்கு செய்தார்கள், ஜனங்களின் ஆரவாரத்திற்குக் கேட்பானேன்.

இவ்வித ஆரவாரத்தோடு ஊர்வலம் சற்று தூரம் சென்றவுடன், அங்கு தன் தந்தையுடன் நின்றுகொண்டிருந்த ஓர் மாசற்ற சிறுவன், என்ன! ஜனங்கள் இவ்வாறு ஆச்சரியப்படுகிறார்களே! சக்கரவர்த்தி மேலாடையின்றி, உள்ளாடையுடன் மாத்திரம் செல்கிறாரே என்று கூவினான். உடனே அச்சிறுவனின் தந்தை, கபடமற்ற பாலனின் வார்த்தையை நம்புங்களென்று புகன்றான். இச்செய்தி எங்கும் பரவியது. வாஸ்தவந்தான், அரசர் மேலாடையின்றித்தானிருக்கிறார் என்று சகலரும் சாற்றினர். உடனே அரசர் தலைகுனிந்து வெட்கி, தனிமையாக அரண்மனைக்கேகினார். நாம் இதுகாறும் கொண்டிருந்த இவ்வாடையின் பித்தாலல்லவோ நாம் கெட்டோம், நம் கடமையை மறந்தோம், ஜனங்களின் சுக துக்கங்களை கவனித்திலோம். கேவலம் நம்மிச்சைப்படியே காலத்தைக் கழித்து வந்தோம்! அந்தோ! நம் குடிகள் எவ்வாறு நம்மை நிந்தித்தார்களோவென்று மிக மனக்கிலேசமடைந்து, அந்நிமிஷமுதற்கொண்டு, தன் ஆயுள்பரியந்தம், குடிகளின் நலத்தைக் கருதியே, தாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் அமையவேண்டும் என்ற பிரதிக்ஞையைக் கைக்கொண்டார்.



அவ்வாறே, தம் குடிகள்மீது வெகு பக்ஷத்துடன், அவர்களின் நலத்தையே கருதி, வெகுகாலம் ஆண்டு வந்தார். குடிகளும் அம்மன்னர்பால் வெகு பக்தி வினயத்துடனும் நடந்து, தங்கள் அதிபதியை வாழ்த்திவந்தார்கள்.

இது நிற்க, தங்களையும், தங்கள் மன்னர் பிரானையும் ஏமாற்றி, ஏராளமான பொருள் பறித்ததுமன்றி, சகலரையும் அவமானத்திற்குட்படுத்தின, அப்போக்கிரிகளை, சிறையிலடைத்துத் தக்க பாடம் கற்பித்தனர்.

N. B. இக்கதையை நடிப்பதற்கேற்ற நாடக ரூபமாக அடுத்த சஞ்சிகையில் பிரசுரிப்போம்.

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

### 1. குன்னூர் நாய்கடி ஆஸ்பத்திரி.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள ஜனங்களுக்கு நாய்கடி ஆஸ்பத்திரி குன்னூரில்மட்டும் உண்டு என்பது யாவருக்கும் தெரிந்தபோதிலும், சிலர் இதைக் கவனியாமல் போகிறார்களென்று யான் இம்மகுடத்தின் கீழ் எழுதலானேன். சிலருக்கு போதனை விஷயப் பூங்கொத்தில், எப்படி சுகாதார விஷயமாய் மலரலாமென்ற ஆக்ஷேபனை தோன்றலாம். ஆனால் ஒன்றுமறியாச் சிறியோனாகிய யான் எழுதத் துணிந்தது எப்படியெனில், கிராமாந்திரங்களில் உபாத்தியாயர்கள், பெரியோரிடத்தில் விஸ்தாரமாகக் கூறி ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி ஏற்பாடுசெய்தால் சீக்கிரம் சுகத்தை

யடையும்படி செய்யலாம். மேலும் சிறுவர்களுக்கு இது விஷயமாய் போதித்தால்தான், பிற்பாடு தாங்களே நேரில் போக ஆசையுண்டாகும்.

1. நாய்க்குப் பைத்தியம் என்று எப்படித் தெரியும்?

பைத்தியங்கொண்ட நாய்க்குத் தண்ணீரின்மேல் அருவருப்பு உண்டாகும். அக்காலத்தில் தண்ணீரைப்பற்றி நினைத்து ஆறாத் துயர்த்தை யனுபவிக்குமாம். அப்போர்க்கொத்த நாய் கடித்தால் மனிதனும் அவ்வியாதியை யடைகிறானும். ஆனால் உடனே அதன் தன்மை தெரியாவிடினும், ஒரு வாரம் முதல் ஆறு வாரத்திற்குள்ளாகத் தெரியும்.

2. கடிபட்டவர்கள் உடனே சமீபத்த ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும்; இல்லையேல் கர்பாலிக் திராவகத்தையாவது நைட்ரிக் திராவகத்தையாவது பஞ்சால் தொட்டு கடிபட்ட இடத்தில் வைக்கவேண்டும்.

3. கடித்தவுடனே நாயைக் கொன்றுபோடக்கூடாது. அதனைக் கட்டிவைத்து புல்லைத் தின்பது, தண்ணீரில் அருவருப்பு, ஆகார வெறுப்பு, ஊளையிடுதல், அழுதல், கண்டவரைக் கடிக்கப் போதல் முதலியவைகளை கவனித்தால், அதைக் கொன்று அதன் மூளையை (Bichromate Potash) பைக்ரோமேட் பொட்டாஷ் 20 கிரெயினும், (Glacial Acetic Acid) கிளேசியல் அஸட்டிக் திராவகம் $2\frac{3}{4}$ டிராம், தண்ணீர் $6\frac{1}{2}$ அவுன்ஸ் இந்த மூன்றும் சேர்ந்த திராவகத்தில் போட்டுக்கொண்டு குன்னூருக்குப் புறப்படவேண்டும்.

4. அவ்விடம் நோயின் தன்மையை அறிந்து சிகிச்சை செய்யப்படும். அம்மை குத்துவதுபோல் அடி வயிற்றில் 10 அல்லது 14 நாளைக்குக் குத்தினபிற்பாடு குணமாகிவிடும். இதுவரை குத்தப்பட்ட சுமார் 300 பேர்களில் ஒருவரும் இறந்ததில்லை. சிகிச்சைக்கு வருபவர்களுக்கு வசிக்க இடமும் படியும் போக வர ரயில் சார்ஜும் கொடுக்கிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்துடன் லீவும் கொடுக்கப்படுகிறது. சிகிச்சைக்கு கூடிய சீக்கிரம் வருதல் நலம்.



இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தவர்களில் ஒருவர் அடியில்கண்ட கும்மியைப் பாடியுள்ளார்:—

மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூருக்குப் போகும்வழி
மேட்டு வழி காட்டு வழியாகுமே பெண்ணே
சின்னச் சின்ன சக்கரத்தில் சிறப்பான வண்டி பூட்டி
சீக்கிரமாய்க் கொண்டுபோகப் பார்க்கிறாய் கண்ணே
ஐந்து மைல் தூரமட்டும் மனா வேகமாக ஓடி
அப்புறம் வண்டி நிறுத்திப்போடுறான் பெண்ணே
முன்சென்ற இன்ஜினைப் பின் கொணர்ந்து மாட்டிவிட்டு
முட்டி முட்டித் தள்ளுவதைச் சற்றே கவனி
ஒரு பக்கம் மலையுச்சி, மறு பக்கம் காணாறும்
ஓடுது உடும்புபோலப் பாரடி வண்டி
ஒணான் வளை புகுந்து ஓடுவதுபோல வண்டி
ஊடே பூடே குகை நுழைந்தோடுது கண்ணே
கன்னங் கருத்திருக்குங் கருங்குகைத்தாண்டி வெளி
காணுமட்டு மனஞ் சற்றே கோணுது பெண்ணே
சின்னச் சின்ன ஸ்டேஷன்களும் சிறப்பான பழங்களுஞ்
சிறுவர் விற்பதை நோக்கித் தேறடி கண்ணே
வாழைப்பழம் மாம்பழம் வளமான பலாப்பழம்
வாகுள ஆரஞ்சி நல்ல ஜாதிக்காய்ப் பழம்
கணவாயை நோக்கினாலோ கண்ணிரண்டும் போகுதம்மா
காலன் வந்தணுகுவது போலிருக்குதே
மட மடவென்று ஜலம் மலை மேலிருந்திறங்கி
மாட்சிமை உடனே விழுங் காட்சியைப் பாராய்
பல பல மரங்களும் பல வர்ணப் புஷ்பங்களும்
பார்த்திடக் கண்ணுக்கு வெகு நேர்த்தியாகுமே
மலைகளிரு பக்கமு மாட்சியாய்க் கர்ப்பூரமாம்
வானத்தை யளாவி நிற்கத் தோணுது பாரு
இத்தனை வியப்பிருந்து மிதமில்லை மனதுக்கே
யெப்போ குன்னூர் சேரலாமென் றேங்குதே கண்ணே.

பழைய மாணவர் D. மரியதாசை,
எட்மாஸ்டர், மேட்டுப்பாளையம்.

## II. எயிடெட் பாடசாலையும், போர்டு பாடசாலையும்.

எயிடெட் பாடசாலையா? அல்லது போர்ட் பாடசாலையா? படித்துக்கொடுப்பதில் மேலானது?

இக்கேள்விக்கு பின் காட்டப்படும் பதில் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானதாயிருந்தாலும் எலிமெண்டரி பாடசாலையைப்பற்றிமட்டும் கூறப்படுகிறது.

எலிமெண்டரி பாடசாலையை, கற்பிக்கும் விஷயத்தில் உதவி செய்தல், தூண்டுதல் என்னும் இரு விஷயங்களை உத்தேசித்து 3 வகையாய்ப் பிரிக்கலாம்.

1. பரோபகார சிந்தையுள்ள மானேஜர்களால் நடத்தப்படும் எயிடெட் பாடசாலை: இப்பாடசாலை மானேஜரை உபாத்திமார் அடிக்கடி பார்க்கவும், தங்கள் பள்ளிக்கூடக் குறைகளை இவரிடம் சொல்லவும், தெரியாத விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும், அவசியமான விஷயங்களை மானேஜரோ உபாத்திமார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சொல்லவும் ஏதுவாயிருக்கிறது. மேலும் பாடசாலை காரியங்களெல்லாம் அப்போதப்போது ஒழுங்காய் நடக்கின்றனவாவென்று மானேஜர் பார்த்துத் தூண்டுகிறார். இப்பாடசாலை மேலானதென்றொப்பிக்க என் சொற்ப அநுபோகத்திலுள்ள இரண்டு திருஷ்டாந்தங்களைச் சொல்லுகிறேன்.

(a) நான் திருச்சி உலக இரக்ஷகர் பாடசாலையிலும் இதைச் சேர்ந்த வேறு 2 பாடசாலைகளிலும் 9 வருஷத்திற்குமேல் வேலை பார்த்துவந்தேன். சங். T. ரோச் சுவாமியவர்கள் மானேஜ்மெண்டில் திருச்சி முனிசிப்பாலிட்டியிலும் சுற்றுக் கிராமங்களிலும் 15 பள்ளிக்கூடங்களிருக்கின்றன. சங். மானேஜருக்கு பல அரியகருமங்களிருப்பதால் அவருக்கு உதவியாக திருச்சி R. C. போதனா பாடசாலையின் பூர்வமாணவர்களின் திலகம்போலும், சங். மானேஜரவர்களின் பிரதிபிம்பம் (சாந்தம், அன்பு முதலியவற்றில்) போலும் ஜொலித்த சங். பிரான்சிஸ் (Rev. Br. M. Francis, S. H. J.) சகோதரரவர்களையும், சித்திரத்தில் சிறந்த புலியான Mr. S. மரிய மிக்கேல் பிள்ளையையும் சூப்பர்வைசர்களாக வைத்துக்கொண்டு மாதமொருமுறை சங். மனேஜரோ அரியபெரிய விஷயங்களைப் புகட்டுவ



துடன், அவ்வப்போது வேண்டிய விஷயங்களை சூப்பர்வைசரைக் கொண்டு உபாத்திமாருக்கு அறிவித்தும் வருஷத்தில் மும்முறை பிள்ளைகளைப் பரிக்ஷித்து முதன்மையானவர்களுக்குப் பரிசளித்தும் இன்னும் பல உபாயங்களாலும் உபாத்திமார்களின் வேலையைச் சுலபமாயும் பிரயோஜனமுள்ளதாயும் செய்ய உதவிசெய்தார்.

(b) இப்போது நானிருக்கும் பாடசாலை கத்தோலிக்குப் பாடசாலையாயிருந்தகாலத்தில் சங். A. லூர் துநாதர் சுவாமியவர்களால் நான் தலைமை உபாத்தியாயராய் நியமிக்கப்பட்டு இப்பாடசாலையை நடத்திவந்தேன். இவர் எங்களுக்கு வேண்டிய பல விஷயங்களைச் சம்பாஷித்துத் தெரிவிப்பதுடன் பாடசாலைக்குத் தினந்தோறும் 1 அல்லது 2-மணி நேரம் வந்து சில பாடங்களைப் பிள்ளைகளுக்குப் புகட்டிவந்தார். இப்பாடங்கள் பரீக்ஷாதிகாரிகளால் (Excellent) உத்தமமாயிருந்தது என்னும் ரிமார்க்கையும், பொதுவில் பள்ளிக்கூடமானது (Very Satisfactory) மிகவும் திருப்திகரமாயிருந்ததென்னும் ரிமார்க்கையும் (Very Creditable to the management) மானேஜ்மெண்டிற்கு மிகவும் புகழ்ச்சியானதென்னும் ரிமார்க்குகளையும் அடைந்ததுடன் திருக்காட்டுப்பள்ளி உபாத்திமைச் சங்கம் 1919-ம் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் அக்ராசனம் வகித்த கனம் சர்க்கிள் இன்ஸ்பெக்டராலும் மூவலூர் (மேகளத்தூர், மிக்கேல்பட்டி, தென்னூர்) சங். குருப்பிரசாதிகளாலும், ஏனைய அதிகாரிகளாலும் புகழ்ந்து பேசப்பட்டது.

2. தாலூக்கா போர்ட் (அல்லது முனிசிபல்) பாடசாலைகள்: இப்பாடசாலைகளின் மானேஜர்களாகிய கனம் T. B. பிரசிடெண்ட் (அல்லது மு. சேர்மென்) அவர்கள் அநேக பாடசாலைகளை வகித்திருப்பதால் அடிக்கடி உபாத்திமாரோடும் பிள்ளைகளோடும் பேசி அப்பாடசாலைகளின் குறைகளைத் தீர்க்க சமயம் கிடைக்காது. சந்தேகமான விஷயங்களைத் தெரிந்துகொள்ள எவ்வளவு தூரமானாலும் T. B. ஆபீசுக்குப் போகவேண்டியிருக்கிறது. அவ்விதமாய்ச் சில தடவை நானும் போயிருக்கிறேன். ஆயினும் எழுத்துமூலியமாய் சகல விஷயங்களும் நடக்கின்றன. அன்றியும் முற்கூறிய எயிடெட் பாடசாலைகளைப்போல் உபாத்திமார்களுக்கு வேண்டிய சௌகரியங்களில் பல இவைகளிலும் அமைத்துத் தூண்டிக்கொண்டு வருகிறார்கள்.

3. திண்ணைப் பள்ளிக்கூடம்போல் நடத்தும் எயிடெட் பாடசாலை: இப்பாடசாலையின் உபாத்திமார்கள் மற்றப் பாடசாலைகளின் உபாத்திமார்களைப்போல கவர்ன்மெண்ட் சூப்பர்வைசர் அவர்களாலும் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டரவர்களாலும் பலவிஷயங்கள் பொதுவில் கற்றுக்கொண்டாலும், அவ்வப்போது கல்வி விஷயத்தில் ஏற்பட்ட சந்தேகங்களையும் இடைஞ்சல்களையும் தீர்க்கவாவது அல்லது பாடங்களைச் செவ்வையாய் கற்பிக்க தூண்டுதல் செய்யவாவது தக்க ஆட்களில்லை. ஆகையால் இப்பாடசாலை முற்கூறிய ஷை பாடசாலைகளிலும் குறைவென்றே சொல்லலாம். உதாரணமாக ஓர் சிற்றூரில் 2 மானேஜர்கள் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள். ஒரு பாடசாலையில் 12 பிள்ளைகளும், ஒரு பாடசாலையில் 20 பிள்ளைகளும் படிக்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்கள் எப்படி ஒற்றுமையாய் நடக்கும்?

இங்ஙனம்,

**A. அடைக்கலசாமி பிள்ளை,**

பழையமாணவர்களிலொருவர்.

[தற்போது மேகளத்தூர் போர்ட் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்.]

---

## III. உபாத்தியாயரும் சம்பளமும்.

கடந்த நவம்பர் மாதப் பூங்கொத்தில் "உபாத்தியாயரும் சம்பளமும்" என்ற தலைப்பின் கீழ், கனம் A. ஆசீர்வாதம்பிள்ளையவர்கள் எழுதிய வியாஸத்தில், அடங்கிய விஷயமானது: ஆகஸ்ட் மாதத்தியக் கொத்தில் அதே தலைப்பின்கீழ் நான் வெளிப்படுத்திய வியாஸத்தின் கருத்துக்குச் சார்ந்ததாயிராமலிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ள மிகவும் விசனிக்கிறேன். என் வியாஸத்தின் நோக்கம் "மன ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டும்" என்பதேயொழிய "குறைந்த சம்பளம் உயர்த்தப்பட முயற்சிக்கக்கூடாது" என்பதல்ல. (1) என் வியாஸத்தில் பீடிகையாய்ச் சொல்லப்பட்ட முதல் 7 வரிகள். (2) 31-வது பக்கத்தில் "B என்பவன் அவ்விதம் செய்யாமல் வேலையைச் சரியாய்ச் செய்துகொண்டே கஷ்டங்களைத் தெரிவிப்பானேயாகில் தனக்குச் சாதகத்தைத் தேடிக்கொள்வான்." (3) 32-வது பக்கம் 13-வது வரி, "நம்



முடைய சம்பளம் சொற்பமாய் இருப்பதால் நமக்குச் சகாயம் கிடைக்கவேண்டிய வழியையும் தேடவேண்டியதுதான்." (4) "ஆழத்தில் காலைவிட்டுக் கஷ்டப்படும்போது......கூக்குரலிடவேண்டியதுதான்." (5) "நாம் எல்லோரும் உண்மையுடன் உழைத்து......விண்ணப்பித்துக்கொண்டால்...சத்தியமே" என்னும் முதலிய வாக்கியங்களை நமது நண்பர் மறுபடியும் கவனிப்பாரேயாகில் "உபாத்தியாயர்கள் தங்கள் சம்பள உயர்வைப்பற்றி முயற்சிக்கக்கூடாது" என்பது எனது நோக்கமல்லவென்பதையும், அதற்குமாறாய் "நாம் நமது நன்மையைப்பற்றி நமக்குச் சரியான அநுகூலம்கிடைக்கும் வரையில் விடாது முயற்சிக்கவேண்டும்" என்பது என் வியாஸத்தின் இரண்டாவது நோக்கமாய் இருக்கிறதென்பதையும் தெளிவாய்க் கண்டு பிடியாமற் போகார்.

"சம்பளத்தைக் கருதாது ஊக்கத்துடன் உழைத்துவர வேண்டும்" என்னும் வாக்கியத்தில் உள்ள "சம்பளத்தைக் கருதாது" என்னும் வார்த்தைக்கு அர்த்தம் தெற்றென யாவருக்கும் விளங்கியதே! இதில் விபரீதமான பொருள் ஒன்றுங் கிடையாது. அதாவது "நமது சம்பளம் இவ்வளவுதானே இதற்காக ஏன் இப்படி மண்டையை உடைத்துக்கொண்டு வித்தியா விதிப்படி படித்துக் கொடுக்கவேண்டும்" என்று எண்ணங்கொண்டு வேலையில் ஊக்கங்குன்றி பராமுகமாயிராமல், முன் சொன்னபடி நம்மாலான கூக்குரலிட்டு நமக்கு நியாயம் கிடைக்கும் வரையில் நமது வேலையை ஊக்கத்துடன் செய்யவேண்டுமென்னும் அர்த்தமேயொழிய "சம்பளத்தை எதிர்பாராது" (சம்பள உயர்வைப்பற்றி முயற்சிக்கக் கூடாது) என்பது பொருளல்லவென்பதையும் நண்பர் கவனிப்பாராக. ஊக்கத்தைப்பற்றினதே என் விஷயத்தின் அடிப்படையான நோக்கமேயொழிய மற்றப்படியல்ல.

"எலிமென்டெரி உபாத்தியாயர்களின் குறைந்த சம்பளத்தை அறிந்தும் அவர்கள் அதற்கு உடன்பட்டபின் அதன் பலாபலனை அநுபவிக்கத்தான்வேண்டும்" என்பதை இரயில்வே சிப்பந்திகள் போலீஸார்கள் இவர்கள் விஷயமாய்ச் சம்பந்தப்படுத்தி "ஏன் ஷையார்கள் தங்கள் வேலையின் சம்பளம் இவ்வளவென்று தெரிந்து உட்பட்டும் தற்போது தங்கள் சம்பளம் உயரவேண்டுமென மேலாவைத் தூண்டுகிறார்கள்" என்கிறார். சம்பள உயர்வைப்பற்றியே பேசக்கூடாது; இஷ்டமிருந்தால் செய், கஷ்டமிருந்தால் போ என்பதே என் வியாஸத்தின் கருத்தாயிருந்தால் நண்பர் மேலே கூறியது நியாயந்தான். ஆனால் அப்படி மனமொப்பி உட்பட்ட வேலையில் ஊக்கங் குன்றாதிருக்கவேண்டும் என்பதைத்தான் சொல்லியிருக்கி

றேனேயொழிய சம்பள உயர்வைப்பற்றி நாம் பிரயாசப்படக் கூடாது என்று சொல்ல வரவில்லை என்பதை நணபர் மீண்டும் கவனிப்பாராக. மேலும் சம்பள உயர்வைப்பற்றி முயற்சிக்கவேண்டுமென்பது வேறே, ஆனால் அதுவரையில் ஊக்கத்துடன் உழைக்க வேண்டுமென்பது வேறே. இவைகளில் பிந்தினதுதான் என் வியாஸத்தின் கருத்து. எனினும் இருவிஷயங்களையும் பேசியிருப்பதையும் நண்பர் கவனிப்பாராக.

கடைசியாய் நவம்பர் மாதக்கொத்தில் கனம் சங். பத்திராதிபரவர்கள் குறிப்பில் சர்க்கில் இன்ஸ்பெக்டரவர்கள் சொல்லிய சித்திரக்காரன் விஷயத்தைப்பற்றின கருத்தை ஒருவரும் ஆமோதியாமற் போகார்கள். என் வியாஸத்தைக் குற்றஞ்சாட்டி (அல்லது குணதோஷம் காட்டி) நண்பர் எழுதியிருக்கக்கூடும் என்று நான் எண்ணுவதாகவும் நண்பர்கள் நினைக்கவேண்டாம். உள்ளபடியே அந்த எண்ணங்கொள்ளவில்லை. ஆனால் என் வியாஸத்தின் கருத்து ஒன்றாய் இருக்க, நண்பர் எழுதியது வேறாயிருந்ததால், அதை மறுபடியும் நிவர்த்தி செய்துகொள்ளுமாறு இதை எழுதலாயிற்று. நமது சம்பள உயர்வைப்பற்றி செய்யவேண்டிய வேலை என்ன என்பதைப்பற்றி நான் எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில் நமது கொத்து கைக்குக் கிட்டியதால், நான் எண்ணங்கொண்ட வியாஸத்தை முழுதும் முடிக்க நேரப்படாமற்போயிற்று. எனினும் பத்திரிகை இடங்கொடுக்குமானால் இங்கு (மாண்டலேயில்) உபாத்தியாயர்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய அநுகூலங்களை அடைய என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்னும் சிறு விஷயம் பிரசுரிக்கப்படும்.

P. ஆரோக்கியம் பழைய மாணவர்,
**மாண்டலே.**

---

## பூர்வ மாணவர்க்கு அறிவிப்பு

நமது பாடசாலைச் சங்கத்தின் வருடாந்தரக்கூட்டம் இம்மாதம் 28-ம் வ திங்கட்கிழமை நடைபெறும். சர்க்கார் போதனாமுறைப் பாடசாலைத் தலைமையாசிரியர் உபந்நியாசிப்பார்கள்; நமது சர்க்கில் இன்ஸ்பெக்டர் அக்கிராசனம் வகிப்பார்கள்.

கூட்டம் முடிந்தபின் அடுத்த மூன்று நாட்களில் (அதாவது மார்ச்சு-மீ 1, 2, 3-ம் தேதிகளில்) உபாத்தியாயர்களின் தியானம் நடைபெறும்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சிநாப்பள்ளி.
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 10. | மார்ச்சு 1921. | மலர் 9. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது பாடசாலைச் சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் சென்ற மாதக் கடைசி நாளில் (28-வ) நடந்தேறியது. மற்ற வருஷங்களைவிட இவ்வருஷத்தில் அதிகமாக வெளி உபாத்திமார் கூட்டத்துக்கு வந்து சங்கத்தைக் கனப்படுத்தினார்கள்; கல்வி இலாகா

உத்தியோகஸ்தர்களில் பலரும், அர்ச். சூசையப்பர் கலாசாலைப் பெரிய ஆசிரியக் குருக்களில் சிலரும் விஜயம் செய்தனர். நமது மிஷன் அதிசிரேஷ்டரவர்கள் வரக்கூடாமற்போன அசந்தர்ப்பத்தைப்பற்றி ஒரு கடிதம் எழுதி தமக்குப்பதிலாக ஒரு சுவாமியாரை நியமித்து அனுப்பியிருந்தார்கள் ; நமது ஜில்லாச் சிரேஷ்டரவர்கள் வந்திருந்தார்கள் என்று சொல்லத் தேவையில்லை. எதிர்பார்த்திராத வண்ணம் அநேக கனவான்களும் உபாத்திமாரும் வந்து கூடியதால் நமது பெரிய சபாமண்டபத்தில் முதலாய் இடம் கொஞ்சம் தட்டுப்பாடாய் விட்டது.

சாயந்தரம் சரியாய் நாலுமணிக்குக் கூட்டம் துவக்கினது. நமது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ T. K. வெங்கட்டராம அய்யர் அவர்கள் M.A., L.T., சபாநாயகராய் வீற்றிருந்தார்கள். முதலாவதாக, நமது மாதிரிப்பாடசாலை மாணவர்கள் சில தேகாப்பியாச விநோத வித்தைகளைச் செய்து கூட்டத்தாரைக் களிப்பித்ததும், ஆடல்களுடனும் பாடல்களுடனும் சங். சபாநாயகர் அவர்களுக்கும், உபந்நியாசகருக்கும் மாலை சூட்டி, ஏனைய கனவான்களுக்கும் உபசாரம் செய்யப்பட்டது.

பிற்பாடு, சங்கத்தின் அங்கத்தினரிற் சிலர் செய்யுள்கள் பாடியும், வியாசம் வாசித்தும், உபந்நியாசம் சொல்லியும் தாங்கள் சாதாரணமாய்ச் சங்கத்தில் செய்துவரும் வேலையின்னதென்று திருஷ்டாந்தமாய்க் காட்டினார்கள். இந்த வேலை மிகவும் மெச்சத்தக்கதென்று சங். சபாநாயகரும் கூடியிருந்தவர்களும் சொல்லிக்கொண்டார்கள்.

மாதிரி அப்பியாசங்கள் முடிந்ததும், சங்கத்தின் வருஷாந்தர ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டு, புது உத்தியோகஸ்தர்கள் நியமனம் பெற்றார்கள். சென்றவருஷத்தில் மெச்சத்தக்க வேலை செய்தவர்களுக்கு அத்தாட்சி பத்திரங்களும் கொடுக்கப்பட்டன.

இதெல்லாமானபின், உபந்நியாசகரவர்கள் எழுந்து, இச்சங்கத்துக்காகத் தயாரித்திருந்த உபந்நியாசத்தைச் சொல்லத் தொடங்கினர். சகலரும் நிசப்தமாய்க் கவனத்துடன் உற்றுக் கேட்டார்கள். உபந்நியாசப்பொருள் : தாவரநூல். இந்த வருஷம் போதனாமுறைப் பரீட்சைக்கு கிராம சாஸ்திரத்தை விசேஷ விஷயமாய்



நியமித்திருப்பதாலும், தாவரநூல் கிராம சாஸ்திரத்தில் முக்கியமான பாகமென்பதாலும், இதைத் தெரிந்துகொண்டதாகச் சொன்னார். மேலும் உபந்நியாசகருக்குத் தாவரநூல்பேரில் ஓர்விதச் சுபாவப்பிரியம் ஏற்பட்டு அதைத் தீர்க்கக் கற்றுக்கொள்ளும்படி பட்ட பிரயாசையின் பலனாகவும், அந்நூலைத் தமது மாணவருக்குக் கற்பித்துவந்ததில் அடைந்த அநுபோகத்தின் பலனாகவும், சில விசேஷங்களை வெளிப்படுத்தும்படியாகவும் இச்சாஸ்திரத்தைப்பற்றி உபதேசிக்க முன்வந்தனர்போலும். அவர் உபதேசித்தது மிகத் தெளிவாயும், கேட்போர்க்கு மதுரமாயும் இருந்ததென்று பலபேரும் பேசிக்கொண்டார்கள். இச்சாஸ்திரத்தைப் போதிப்பதற்கு இப்போது வழங்கி வருவதைவிட அதிகச் சுலபமானதும் புத்திக்குப் பொருந்தியதுமான ஓர் நூதன பாடக்கிரமத்தைத் தெரியப்படுத்தி உதாரணார்த்தமாக அநேக பாடங்களை விதம்விதமான உபகரணங்களின் உதவியால் வியாக்கியானித்துக் காட்டினர்.

இந்த உபந்நியாச முடிவில் சபையோர் கரகோஷம் செய்ய, களம் அக்கிராசனாதிபதிகள் எழுந்து பிரசங்கிக்கலாயினர். உபந்நியாசகருக்கு வந்தனமும் புகழ்ச்சியும் கூறியபின்னர், தாவரநூல் சிறுவர்களுக்குப் போதிப்பதின் முக்கிய நோக்கம், அச்சிறுவர்கள் தங்களைச் சுற்றியுள்ள வஸ்துக்களைக் கவனித்து ஆராய்ச்சி செய்யப் பழக்குவதுதான் என்று விஸ்தரித்தனர் ; இப்பேர்ப்பட்ட பழக்கத்தினால் கிராமங்களுக்கும் தேசத்துக்குமே வரக்கூடிய நன்மைகளையும் எடுத்துக்காட்டினர். தாம் சொன்னதையெல்லாம் தமது அநுபோகத்தில் நேர்ந்த சில சம்பவங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினர். உபாத்திமாருக்குத் தாம் சொல்லவேண்டிய புத்திமதியாக, அவர்கள் பிறரால் எழுதப்பட்ட பாடக்கிரமங்களையே குருடர்போல் கடைப்பிடித்து அநுஷ்டிக்காமல், தாங்களாய் யோசனைசெய்து அந்தந்த இடங்களுக்கும் ஜன சமூகத்துக்கும் தேவையான விஷயங்களைப் போதிக்கும்படி வற்புறுத்தினர். மேலும் ஆரம்பப் பாடசாலை உபாத்திமார் ஏனைய உபாத்திமாரைவிட மேற்பட்டவர்களென்று சாதிப்பது தமக்குச் சரியெனத் தோன்றாதபோதிலும், அவர்கள் ஏனையோரைக் காட்டிலும் தேச விர்த்திக்கு அவசரமானவர்களென்பதால் எப்போதும் அவர்களுடைய உதவியை ஜனசமூகம்

நாடிநிற்கும் என்பதைச் சொல்லிக் காட்டி, அவர்கள் தங்கள் ஊதியத்துக்குத் தக்கதுமாத்திரம் உழைக்காமல் தங்கள் தொழிலின் மேன்மைக்கும் தேவைக்கும் தக்கபடி ஊக்கத்தோடு உழைத்துத் தேச நன்மையைக் கோரும்படி புத்தி சொன்னார். இப்படி உழைத்தால் தங்கள் ஊழியத்துக்குப் போதுமான ஊதியமும் அடைய இடமுண்டென்று நம்பிக்கை மொழியும் பகர்ந்தனர். கடைசியாய் இக்கூட்டத்தில் சங்கத்தின் அங்கத்தினர் நடத்திக் காட்டின அப்பியாசங்கள் தமக்கு எவ்வளவு திருப்தியாயிருந்ததென்பதையும் சொல்லிக் காட்டிப் பிரசங்கத்தை முடித்தனர்.

நாலு மணிக்குத் துவக்கிய கூட்டம் ஏழேகால் மணிக்கே முடிந்ததென்றாலும், கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் சலிப்புறாமல் உல்லாசமாய்த் தத்தம் இல்லத்துக்கேகினர். சங்கத்தை நடத்துபவருக்கு விசேஷ உதவியான மகா-ா-ா-ஸ்ரீ கணபதி ஐயர் அவர்கள் சகலருக்கும் சொன்ன நன்றியோடு நாமும் நமது மனமுவந்த வந்தனமுரைக்கிறோம்.

---

## கிராம சாஸ்திரம்.

போதனாமுறைப் பாடசாலைகளில் படித்துக்கொடுக்கும் பற்பல விஷயங்களுள் கிராம சாஸ்திரத்தையும் ஒரு விஷயமாக ஏற்படுத்தி அதற்காக ஒரு பாடக்கிரமத்தையும் திட்டம்செய்து கல்வி இலாகாத் தலைவரானவர் இரண்டு வருஷங்களுக்குமுன் சகல போதனாமுறைத் தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பியிருந்தார். அதுமுதல் இச் சாஸ்திரமும் ஷை பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டுவருகிறது.

ஆகிலும் இது ஓர் நூதன விஷயமல்ல; பேர்மாத்திரம் நூதனமேதவிர அதில் அடங்கிய பொருள்கள் அத்தனையும் வெவ்வேறு பேர்களுடன் முன்னமே போதிக்கப்பட்டுவந்தவைதான். இச் சாஸ்திரத்தில் மூன்று பாகங்கள் குறித்திருக்கிறது.

முதலாவது:—வானத்திலும், ஆகாயத்திலும், ஜலத்திலும், நிலத்திலும் இயற்கையாய்க் காணப்படும் தோற்றங்கள்.



இப்பாகத்தில், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்களின் விபரங்களும், மேகம்; மழை, சீதோஷணம், காற்று முதலியவைகளின் வியாக்கியானங்களும், நதிகள், ஏரிகள், ஊற்றுக்கள், பாறைகள் முதலியவற்றின் அறிவும், விவசாயத்தொழில், தோட்டவேலை முதலியவற்றைப்பற்றிய சில குறிப்புகளும் அடங்கியுள்ளன.

இரண்டாவது:—தாவர நூல். இதில் விதை, விதை முளைத்தல், தாவர வேர்கள், தாவரங்கள் நீராவி பார்ணமித்தல், தாவரங்கள் சுவாசித்தல், தாவரங்களுக்கும் வெளிச்சத்துக்குமுள்ள சம்மந்தங்கள், தாவரப்பிரகாண்டம், இலைகள். கிழங்குகள், மரக்கட்டைகள், கிளைகள், புஷ்பங்கள், பழங்கள், தாவரக் குடும்பங்கள், இலையுதிர்தல், மரங்கள் காடாய் வளர்தல் முதலிய விபரங்கள் கவனிக்கத் தக்கவை.

மூன்றாவது:—பிராணி நூல். இதில் பற்பல பிராணி வகைகள், அவைகளின் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் படிக்க வேண்டுமாம்.

இந்த மூன்று பாகங்களிலும் அடங்கிய விஷயங்கள் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டியவைதான். ஆனால் அந்தந்த இடங்களுக்குத் தகுந்ததுபோல் போதிக்கவேண்டிய பொருள்களைத் தெரிந்தெடுப்பது அவசியம். இப்பொருள் அடக்கத்தைக் கிராம சாஸ்திரம் என்பானேன்? இப்பொருள்களெல்லாம் மனிதனால் மாறுபாடடையாமல் சர்வேசுரனால் நேராய்ச் சிருஷ்டிக்கப்பட்டவை என்பதைக் காட்டவோ? ஆங்கிலத்தில் சொல்வதுபோல்: நகரங்களையுண்டாக்கியது மனிதன், கிராமத்தையுண்டாக்கியது கடவுள் (Man made the town; .God made the country) என்பதால் கடவுளே தாமாய்ச் செய்த பொருள்களைப்பற்றி விவரிக்கும் சாஸ்திரத்துக்குக் கிராம சாஸ்திரம் என்னும் பேரைச் சாஸ்திரிகள் அமைத்தனரோ? இப்படியே இருக்கலாம். எனினும் அந்தந்தக் கிராமத்தில் காணக்கூடிய காரியங்களையும், கிடைக்கக்கூடிய வஸ்துக்களையும்பற்றியே இச்சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தும்படியாகவும் கிராம சாஸ்திரம் என்னும் பேர் நன்கமையும் எனவும் சொல்லலாம்.

ஆகவே, சிறுவர்களைச் சுற்றியுள்ள இயற்கை விநோதங்களையும், இயற்கைப் பொருள்களையும் அச்சிறுவர்கள் பிரியத்தோடு கவனித்து யோசிக்கச் செய்வதற்கு உபாத்திமார் படிக்கும் கிராம சாஸ்திரம் உதவியாகவேண்டும். இப்படி உதவியாகவேண்டுமானால், புஸ்தக அறிவைவிட அநுபோக அறிவு சிரேஷ்டம். ஆதலால், இச்சாஸ்திரத்தைப் படிப்பது புஸ்தகங்களை வாசிப்பதனாலல்ல, ஆனால் படிக்கும் விஷயங்களை உற்று நோக்கித் தொட்டுப்பார்ப்பதால். என்ன விஷயங்களை இப்படி உற்று நோக்கித் தொட்டுப் பார்க்கவேண்டுமென்று உபாத்திமார் அறியும்படியாக இந்த விஷயங்களையொட்டிய சில கேள்விகளை அடியிற் பிரசுரிக்கிறோம். இவைகளை உதாரணமாகக்கொண்டு கிராம சாஸ்திரம் இன்னதென்று உபாத்திமார் அறிந்துகொள்ளலாம். இந்தக் கேள்விகளுக்கு விடைகள் சந்தாதார் எழுதியனுப்பினால் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். அல்லது நாமே எழுதிப் பிரசுரிக்கவேண்டுமா?

---

## கிராம சாஸ்திரத்தில் சில கேள்விகள்.

(மகா-௱-௱-ஸ்ரீ கணபதி ஐயர் அவர்கள் குறித்தது.)

### I இயற்கைத் தோற்றம்.

காரணங் கூறுக:—

I. சூரியன் உதிக்கும் திசையும், நேரமும் நாளுக்குநாள் வித்தியாசப்படுகிறது.

— அல்லது —

சந்திரன் உதிக்கும் திசையும், நேரமும் நாளுக்குநாள் வித்தியாசப்படுகிறது.

II. அமாவாசையயன்று சூரிய கிரஹணமும், பௌர்ணமியன்று சந்திர கிரஹணமும் சம்பவிக்கிறது; ஆனால் ஒவ்வொரு பௌர்ணமி, அமாவாசையிலும் சம்பவிப்பதில்லை.

— அல்லது —

மழையளவை அளக்கும் கருவியைத் தயாரித்து உபயோகித்துக் காட்டும்.



III. கருங்கல்லில் கலந்துள்ள பொருள்களொவ்வொன்றையும் பிரித்துக்காட்டும்.

— அல்லது —

மண்ணில் கலந்துள்ள பொருள்களொவ்வொன்றையும் பிரித்துக்காட்டும்.

IV. நிலத்துக்கு, நன்மை, தீமை இழைப்பவை என்னென்ன, தீமையை எப்படி ஒழிப்பது?

— அல்லது —

நிலத்தின் வகைகள்—ஒவ்வொன்றின் குணம்—உபயோகம் கூறுக.

V. ஏன்? காரணங் கூறுக:—

(1) ஆறுகள் வளைந்து வளைந்து ஓடுகின்றன?

(2) நிலத்தைச் சுற்றி தாவரங்கள் பயிர் செய்கிறார்கள்.

(3) தோப்புகளை அழிக்கக்கூடாதாம்.

(4) கோடை மழை பெய்யுமுன் தேகத்தில் வியர்வை உண்டாகிறது.

(5) இரவில் குளத்துத் தண்ணீர் வெப்பமாய் இருக்கிறது.

(6) "ஆடிப்பட்டம் தேடிவிதை."

### II தாவர நூல்.

பரிக்ஷணம் செய்க:—

I. வேர்கள் ஈரத்தை நோக்கி வளர்கின்றன.

— அல்லது —

ப்ரகாண்டத்துக்கு வெளிச்சத்தை நோக்கி வளரும் உணர்ச்சியுண்டு.

II. தாவரங்கள் பகலிலும இரவிலும் சுவாசிக்கின்றன.

— அல்லது —

இலைகள் நீராவியை ஏராளமாய் பரிணமிக்கின்றன.

— அல்லது —

தாவரம் கரிப்பொருளை ஏராளமாய் உட்கொள்ளும்.

III. ஓர் வெண்டைப் புஷ்பம் (அல்லது) ஓர் பாங்கிப் புஷ்பம். அல்லது) ஓர் ஊமத்தம்பூ—வலைந்து பாகங்களைக் குறிக்க.

IV. (1) ஆண் புஷ்பங்கள் ஒரு தாவரத்திலும்—அதே தாவரத்தின் பெண் புஷ்பங்கள் வேறு தாவரத்திலும்;

(2) ஆண் புஷ்பங்கள் ஒரு தாவரத்திலும், அதே தாவரத்தின் பெண் புஷ்பங்கள், அதே தாவரத்திலும்;

(3) ஆண் புஷ்பங்கள் ஒரு தாவரத்திலும், அதே தாவரத்தின் பெண் புஷ்பங்கள்—அதே புஷ்பத்திலும், காணப்படும். வகைக்கு இரண்டு உதாரணங்கள் கூறுக:

— அல்லது —

கூறுக:—

(1) இரண்டு வெடிக்கும் விதைகள்; இரண்டு காற்றால் பரவும் விதைகள்; இரண்டு ஒட்டிக்கொள்ளும் விதைகள்;

(2) ஒரு பழத்தில் ஒரே அறை; ஒரு பழத்தில் மூன்று அறைகள்; ஒரு பழத்தில் அநேக அறைகள் உள்ள பழங்களில் வகைக்கு ஒன்று.

(3) ஒரு அண்டாசயத்தால் பழம் ஆகும் இரண்டு பழங்கள்—பல அண்டாசயங்கள் சேர்ந்து பழமெனப்படும் இரண்டு பழங்கள்.

ஏன்? காரணங் கூறுக.

V. (1) நிலத்தைக் கொத்தி—எரு போட்டு—களை பிடுங்க வேண்டும்.

(2) ஆல், அத்தி பூக்கிறதில்லையாம்.

(3) துளிர்க்கும் துளிர் சிவப்பாயும், உதிரும் இலை பழுப்பாயும் இருக்கிறது.

(4) முந்திரிப் பழத்துக்கென்றால், கொட்டை வெளியிலே.

(5) நிலக்கடலை—வேரில் காய்க்கிறதாம்!

(6) பூந்தொட்டிகளினடியில் துவாரம் செய்யவேண்டும்.

(7) சில இலைகள் தூங்குகிறதாம்.

(8) சூரியனைக் கண்ட தாமரைபோல்.

(9) தாமரை இலை நீர்போல் தத்தளிக்கிறது.

— அல்லது —

(1) நெல்லி, ஆமணக்கு, நார்த்தை, பப்பாளி வேப்பிலை, அரசு—தனி இலையா? சேர்க்கை இலையா?



(2) தாமரை, சூரியகாந்தி, தும்பை, கத்திரி, பிலா, மா—தனிப்பூவா? சேர்க்கைப் பூக்களா?

(3) சோளம், *ஆமணக்கு, வேம்பு, தேங்காய், என்று பேரீச்சை—ஒற்றைப்பருப்பு விதையா? இரட்டைப்பருப்பு விதையா?

(4) சக்கலைவெள்ளி, வெண்காயம், உருளைக்கிழங்கு, முள்ளங்கி, கருணை, மஞ்சள்—வேரா? பிரகாண்டமா?

## III பிராணி நூல்.

I. கீழ்க்கண்ட ப்ராணிகளின் பழக்க வழக்கங்களுக்கேற்றவாறு அங்கங்கள் எப்படி அமைந்திருக்கின்றன?

குதிரை × கழுதை (அல்லது) ஆடு × மாடு அல்லது முயல் × எலி.

II. தவளை அல்லது வண்ணாத்திப் பூச்சி: ஜீவ சரித்திரம் வரைக.

III. மண் புழு, அட்டை, நத்தை, தேனீ, எறும்பு, வண்டு.—உண்ணும் உணவு, விதம் என்ன?

— அல்லது —

பாம்பு, பச்சை ஓந்தி, தவளை, கொக்கு, வாத்து:—உண்ணும் உணவு, விதம் என்ன?

IV. கூறுக:—

(1) பூச்சிகளைத் தின்னும் இரண்டு பிராணிகள்.

(2) வாலை அறுத்துக்கொண்டு தப்பிக்கும் இரண்டு பிராணிகள்.

(3) தோலினால் உணர்ச்சிகளையறியும் இரண்டு பிராணிகள்.

(4) வெளிக் காதுகளற்ற இரண்டு பிராணிகள்.

(5) சாகபட்சிணிகளான இரண்டு ஊர்வன.

(6) சாகபட்சிணிகளான இரண்டு பூச்சிகள்.

— அல்லது —

"பிராணிகளின் தோல்-எலும்பு-கொழுப்பு-குளம்பு-ரோமம்.—இவைகளால் வ்யாபாரப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன." பிராணிகளைக் கூறி விவரிக்க.

---

## திருச்சினாப்பள்ளி திருக்குடும்பப் போதனாமுறைப் பாடசாலைச் சங்கத்தின் பத்தாம் வருஷத்திய ரிப்போர்ட்டு.

எங்கள் பாடசாலையில் உபாத்திமைச் சங்கம் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதாவென்று தற்போது எங்கள் சங்கத்துக்குச் சபாநாயகராய் வீற்றிருக்கக் கருணைகூர்ந்த எங்கள் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் ஆபீஸிலிருந்து எங்கள் தலைமை ஆசிரியரைக் கேட்டுவந்த கேள்விக்கு விடையாக, இங்கே உபாத்திமைச் சங்கம் ஒன்றும் கிடையாது என்று எழுதி அனுப்பினதாகக் கேள்விப்படுகிறோம். அப்படியானால் இப்போது வருஷாந்தரக் கொண்டாட்டம் கொண்டாடும் சங்கமானது என்ன சங்கமென்று அறியும்படி ஷை கனம் இன்ஸ்பெக்டர் அவர்களும், ஏனையோரில் பலரும் ஆசைப்படலாம். இந்த ஆசைக்கு இசைவாக, எங்கள் சங்கத்தின் நோக்கம் இன்னதென்று சற்று விவரிப்பது தகுதியாகிறது.

எங்கள் முதல் ஒழுங்கில் சொல்லியிருக்கிறபடி, "இப்பாடசாலை மாணவர்கள் கல்வி விஷயமாய் விசேஷ சிரத்தையோடு உழைப்பதற்கென்று ஒன்றுகூடி பயில்வதே இச்சங்கத்தின் நோக்கம்." நாங்கள் படிக்கும் விஷயங்களை அதிக நுணுக்கமாய் அறியச்செய்வதற்கும், படிப்பின்பேரில் பிரியமும், உற்சாகமும் உண்டாக்குவதற்கும இச்சங்கம் ஒரு சாதனமாகிறது. இதில் நடைபெறும் பல அப்பியாசங்களைப் பாடம் படிப்பதுபோல் கடமைக்காகமாத்திரம் நிறைவேற்றாமல் மனப்பூர்வமான ஆவலோடு செய்துவருவதே சங்கத்தின் சரியான அங்கத்தினரின் இலட்சணம். இந்த ஆவலானது படிப்பு விஷயத்தில்மாத்திரமல்ல, இன்னும் சங்கீதம், சித்திரம், பிரதமசிகிச்சை முதலிய பரோபகாரத்துக்கு உதவியான பற்பல காரியங்களிலும் செல்லும்பொருட்டுச் சங்கத்தின் அங்கத்தினரில சிலர் கௌரவ சித்தாந்தத்தாரெனப் பேர் வகித்து, பற்பல வித்தைகளைப் பயிலுமாறு தூண்டப்படுகிறார்கள். இப்படியாக, எங்களிடத்தில் ஓர்வித



ஊக்கத்தையும், உற்சாகத்தையும் எழுப்புவதே இச்சங்கத்தின் கருத்து. கடந்த வருஷத்தில் இக்கருத்து எம்மட்டில் நிறைவேறினதென்பதை இனி விசாரிப்போம்.

I **சங்கக் கூட்டங்கள்** :—இவ்வருஷத்தில் நாங்கள் இருபதுவிசை கூட்டங்கள் கூடினோம். இத்தொகை முந்திய வருஷங்களைவிடக் குறைந்ததாயிருப்பது விசனிக்கத்தக்கது. இதனால் சங்கத்தின் அங்கத்தினர் சகலருக்கும் சரியான உற்சாகம் பிறக்கவில்லையென்று தெளிவாகிறது. ஆனால் இந்த உற்சாகக் குறை வருஷ முழுதும் இருந்துகொண்டேயிருக்கவில்லை. ஏனெனில் கடைசியான ஆறு மாதங்களில் முதல் ஆறு மாதங்களைவிட ஜாஸ்தியாகக் கூட்டங்கள் கூடின. இந்தக் கூட்டங்களில் உபந்நியாசித்தவர்களும், தர்க்கித்தவர்களும் தங்கள் வேலையை ஊக்கத்தோடு செய்தார்களென்று எங்கள் சங்கக்கூட்டக் குறிப்புப் புஸ்தகத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். பொதுவாய், அங்கத்தினரே சங்கத்தில் பேசி அப்பியசித்தார்கள். சிற்சில சமயங்களில்மாத்திரம எங்களுக்கு ஓர் மாதிரிகையாகவும் தூண்டுதலாகவும் எங்கள் ஆசிரியர்கள் உபந்நியாசித்தனர். ஆனால், எங்கள் ஆசிரியர்களே கூட்டங்களில அக்கிராசனம வகித்து உதவினார்கள். அவர்களும நாங்களும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்தோமெனினும், கூட்டங்கள் வகுப்புப் பாடங்களைப்போலில்லாமல், எங்களது பொது அறிவை விசாலிக்கச்செய்து, நாங்கள் சபையில் கூச்சமின்றி எழுந்து பேசக்கூடிய திறமையைப் பிறப்பித்தன.

II. **வாசகசாலை** :—போன வருஷத்தைப்போல், தினசரிப் பத்திரிகை ஒன்றும், வாரப் பத்திரிகை ஒன்றும், மாதப் பத்திரிகைகள் பலவும் வரவழைக்கிறோம்; வரவழைக்கிறதுமாத்திரமல்ல, எங்களுக்குக் குறிப்பிட்ட ஒழுங்குப்படி ஏறக்குறைய எல்லோருமே வாசகசாலை சென்று பற்பல காரியங்களை வாசித்து அறிவை விர்த்தி செய்கிறோம். எங்கள் வாசிப்பின் பலன், நாங்கள் எழுதும் வியாசங்களிலும், சொல்லும் உபந்நியாசங்களிலும் தோன்றுவதாக எங்கள் ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

எங்களது பாடசாலைப் பத்திரிகையும் மாதமொரு முறை தவறாது வெளிவருகிறது. இதில் முன்னையைவிட, பழைய மாணவரும், தற்கால மாணவரும் சிற்சில வியாசங்களை எழுதிப் பிரசுரிக்கிறோம்.

III. **கௌரவ சித்தாந்தம்** :—இந்தச் சித்தாந்தத்தார் படிப்புக் கூட்டம் ஒன்று ஏற்படுத்தி, பிறருக்குப் பயன்படக்கூடிய விஷயங்களைக் கற்றுவருகிறார்கள். சென்ற வருஷத்தில் முக்கியமாய்க் கற்றது: பிரதம சிட்சையில் ஓர் பாகம். ஆனால், இவர்கள் கற்றுக்கொள்வது பெரிய காரியமல்ல; தாங்கள் கற்றதைக்கொண்டு பிறருக்கு உதவிசெய்ய ஆவல்கொள்வதே பெரிய காரியம். இந்த ஆவலைப் பிறப்பித்து அதிகரிக்க முயற்சி செய்யப்படுகிறது. இந்த முயற்சிக்குத் தகுந்த பலன் திருப்திகரமானவிதமாய் வெளியில் தோன்றவில்லையென்றாலும், இந்த முயற்சியானது முற்றிலும் வீண் என்று சொல்வதற்கில்லை. நாளாவட்டத்தில பரோபகார ஆவலும், இதற்கு ஆதாரமாகிய கௌரவச் சிந்தையும் அங்கத்தவரிடம் அதிகரித்து அவர்களிடத்தில் பிரமாணிக்கம், ஊழியம் என்னும் நற்குணங்கள் விளங்கி பலன் அளிக்குமென்று நம்ப இடமுண்டு. இந்தச் சித்தாந்தத்தாரின் உற்சாகத்தை அதிகரிக்குமாறு, இந்த வருஷத்தில் இதில் பல பகுதிகள் ஏற்படுத்தி அவரவருக்குப் பிரியமான வேலையில் ஒவ்வொருவனையும் பயிற்றுவிக்க உத்தேசித்திருக்கிறோம். இது சித்திபெறுவதாக!

சென்ற வருஷத்தில் பற்பல வேலைகளில் விசேஷ திறமை காட்டியவர்களுக்கு இக்கூட்டத்தில் அத்தாட்சிப் பத்திரங்கள் அளிக்கப்படும். இது ஏனைய அங்கத்தவர்களிடத்திலும் உற்சாகத்தை எழுப்பி, எமது சங்கமானது நாளுக்குநாள் சகலத்திலும் விர்த்தியடையச்செய்யுமென்னும் நம்பிக்கையோடு எமது ரிப்போர்ட்டை முடிக்கிறோம்.

முடிக்குமுன், எங்களைக் கனப்படுத்தும்படி இன்று இங்கு வந்திருக்கும் கனவான்களுக்கும், சிரமத்தைக் கருதாது எங்களுக்கு உபந்நியாசஞ்செய்யச் சம்மதித்த



மகா-ள-ள-ஸ்ரீ J. கிருஷ்ணராவ் அவர்களுக்கும், நமது பல சோலிகளின் மத்தியில்முதலாய் எங்கள் கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்க நேரம் கண்டுபிடித்த எங்களது இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ T. K. வெங்கட்டராமய்யர் அவர்களுக்கும் எங்கள் மனமுவந்து நன்றிசொல்லுகிறோம்.

Trichy, 28—2—21.

(Sd.) **J. L. Miranda, S. J.** *Director.*
( „ ) **M. ஞானைநாதன்** : *President.*
( „ ) **J. மரியவியாகப்பன்** : *Secretary.*

---

## பற்பல வேலைகளில் விசேஷ திறமையும், ஊக்கமுங் காட்டியவர்கள்.

I. **வியாசம் எழுதுதல்** :—
J. மரியவியாகப்பன்; S. அந்தோனிசாமி.

II. **உபந்நியாசம் சொல்லுதல்** :—
P. ஆரோக்கியசாமி; மிக்கேல்மாதவடியான்.

III. **தோட்ட வேலை** :—
M. ஞானைநாதன்; P. லூர்துசாமி.

IV. **பிரதமசிட்சை** (காயங் கட்டுதல்):—
R. S. மரியவியாகுலம்; J. மரியவியாகப்பன்.

V. **சங்கீதம்** :—
A. ஜேசுவடியான்: C. முத்துசாமி.

VI. **சித்திரம்** :—
தேசபடம் வரைதல்: M. அடைக்கலம்.
பென்சில் சித்திரம்: V. துரைராஜ் சின்னப்பன்.
சாக்பீஸ் வேலை: C. முத்துசாமி.
வர்ண வேலை: V. மிக்கேல், S. மரியமிக்கேல்.

VII. **கிண்டர்கார்டன் வேலை** :—
M. மரிய ஆரோக்கியம்; S. ஞானைமிக்கேல்.

VIII. கைவேலை :—
S. மரியஆசை; V. ஆசைமரியான்.

IX. தேகாப்பியாசப் பயிற்சி :—
R. S. மரிய வியாகுலம்; S. அருள்தாஸ்.

---

## திருக்குடும்பப் போதனைமுறைப் பாடசாலைச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள்.

1921-ம் வருஷம் பெபுருவரி மாதம் 28-ம் தேதி.

---

நடத்துபவர் : சங். தலைமையாசிரியர்.

உதவியாக நடத்துபவர் :
மகா-ா-ா-ஸ்ரீ T. S. கணபதி ஐயர்.

தலைவர் : V. S. மரியமிக்கேல்.

காரியதரிசி : S. அருள்தாஸ்.

### ஆலோசனைக் கூட்டத்தார்.

V. மிக்கேல், S. சவரிமுத்து,
S. மரியசெங்கோல், V. துரைராஜ் சின்னப்பன்.

---

A. ஆசையப்பன், V. Y. சஞ்சீவி,
M. மரிய ஆரோக்கியம், M. அடைக்கலம்,
P. மாதவடியான், M. எட்வார்ட்,
S. மரியமிக்கேல்.

---

### மரண அறிக்கை.

1916-18-ம் வருஷத்தில் நமது போதனை பாடசாலையில் பயின்று பேர்பெற்ற A. கருணம்பர உபாத்தியாயர் சென்ற ஜனவரி மாதத்தில் பரலோக பிராப்தியடைந்த செய்தியறிந்து துக்கிக்கிறோம்.

R. I. P.

---



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

### மலையவிழ் உபாத்திமை தொழிற்சிறு நகோரம்
### கலையவிழ் பூங்கோத்தைக் கண்ணுற்றக்கால்

மண்ணுல கதனில் மாண்புறு முதியோர்
எண்ணு மெழுத்துங் கண்ணென உரைத்தார்
இளமையிற் கல்லென எழுதியும் விரித்தார்
வளமுறு மவ்வழி மனங்கொள் பெற்றோர்
கலைதரு மில்லங் கற்றிட சேர்த்த
மலர்நிகர் வதன மழலைகடறிய
நல்லாசிரியர் நவில்பெயர் பெற்ற
எல்லார் முன்னம் எழுந்தனன் சிறியன்
மனநசை யடக்க வசமெது மறியா
தினமது தாண்டவே செப்பிடத் துணிந்த
சேதியு மொன்றே ஓதிடக் கேளீர்
பூதலத்தவர்கள் புத்தியை யிழுத்து
பொருளைக் கவர்ந்து பொழுதையும் போக்கிட
அருளில் லிடமென அரும்பெயர் பூண்டு
கள்ளப் பத்திரிகை கட்பல உலவிடல்
காண்போ மவற்றின் கருத்தொன் றிருக்க
கைதனிற் கலைத்திட கைக்கெடிகாரம்
மெய்தனிற் பூச வினோலியா சோப்பு

சிங்கத்தை ஜெயிக்க சிட்டு லேகியம்
பொங்கிடத் தாது புஷ்டிலேகியம்
அறிந்தே கடைப்பொரு ளனைத்தையு மெழுதி
குறைந்த விலைக்கு கொடுப்போமென்றும்
இடம் நிறைதற்காய் ஏதோர் கதையை
துடற்சியா யெழுதியும் துகை பறித்திடுவது
பணத்தாவலல்லால் பார்தெரு ளுடைய
குணத்தை யினிது குறிப்ப தொன்பதோ?
இத்தையோ சிலவ ரினிதென் றோர்ந்து
மெத்தார் வத்தொடு வேண்டுவ தென்னே!
நிபமென் சொல்வேன் நியமஞ் சென்றவன்
விபரத்துடனே விலையும் கேட்டு
சிறந்த பொருளையே தேடிப் பெறுவான்
தெரிந்திதற் கேற்ப தீர்ப்பது முறையே
வேரிய போதனு விஷயப் பூங்கோத்தின்
சீரிய நோக்கம் தெரியும் தூக்கிட
நோக்குவிட் டோர்வழி நுழையா யெஞ்ஞான்றும்
வாக்கும் மனமும் மருவிடுமொன்றாய்
பார்க்குமிடத்து பாத்திமைத் தொழிலை
யார்க்கு முதவிசெய் தயர்வைப் போக்கும்
அடுத்தவற் கிதுபயன படுத்திக் காட்டும்
எடுத்த கருமம் முடித்திடத் தூண்டும்
என்னரு மித்ரர் பன்னு மிதனை
உன்னி யின்னலம் அன்னியற் கோதி
அவர்களு மிந்த அரும் பத்ரிகையை
கவர்ந்திடச் செய்தால் கடைவழிக் கேற்ற
அத்த னருளை மெத்தப் பெறுவர்.
எத்திசையும் பூங் கொத்துப் பெறுகவே!

**S. அருள்தாஸ்,**
போதனுமுறைப் பாடசாலைச் சங்கத் தொளொருவன்.

ST. JOSEPH'S' INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கோத்து 10. | ஏப்ரல் 1921. | மலர் 10. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

இந்த மாதத்திலிருந்து நமது மாகாண ஆரம்பப் படிப்புச்சட்டம் அமுலுக்கு வருகிறது. ஆரம்பப் படிப்பைக் கவனிக்கும்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஓர் சங்கம் ஏற்படுகிறது. இதில் சிலர் தங்கள் உத்தியோகத்தினிமித்த

றும், வேறு சிலர் சர்க்காரால் நியமனம் பெறுவதாலும் பெரும்பான்மையோர் பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தும் பற்பல பகுதியாரால் தெரிந்துகொள்ளப்படுவதினாலும் அங்கத்தினர் ஆகிறார்கள். இவர்கள் எல்லாரும் சுயநலம் பாராமல் ஒத்துழைத்து நமது மாகாணத்தில் ஆரம்பப் படிப்பை விர்த்திக்குக் கொண்டுவரும்படி வருந்துவார்களாக!

* * *

சென்ற செப்டெம்பர் மாதப் பூங்கொத்தில் "உபாத்திமார் தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் செய்யும் வேலைக்கு அவர்கள் தற்காலத்தில் பெறும் சம்பளம் போதுமானதென்று பிறர் சொல்லவிடாமற் பார்ப்பது உபாத்திமாருடைய கடமை" என்பதாய்க் குறித்திருந்தோம். இதை வாசித்த நமது சந்தா நேயர்களுள் ஒருவர் மனதில் உதிக்கும் கேள்வி என்னவென்றால், "அப்படிச் சொல்லவிடாமல் பார்த்துக்கொண்டிருந்தால் போதுமான சம்பளம் கிடைத்துவிடுமா?" இவர் உழைப்பது சம்பளத்துக்காக மாத்திரமோவென நாம் ஐயுறவேண்டியிருக்கிறது. ஆகினும் உழைப்பது சம்பளத்துக்காகவல்ல, சம்பளமே உழைப்புக்காகவென்று இவர் உணருகிறாரென்று நம்புகிறோம்.

"ஊக்கமாய் வேலைசெய்தால் வேலைக்குத்தகுந்த சம்பளம் கிடைக்கும்" என்று நாம் அபிப்பிராயப்படுவதாய் இவர் எண்ணுகிறார். இப்பேர்ப்பட்ட அபிப்பிராயத்தை நாம் வெளியிடவில்லை; நமது உட்கருத்தை இவர் எப்படி அறிந்தனரோ தெரியாது. ஆனால் நாம் வெளியிட்ட அபிப்பிராயம் ஒன்று உண்டு. அதாவது ஊக்கமாய் வேலைசெய்து கொண்டே சம்பளம் அதிகமாய்க் கேட்பது கௌரவம்; ஊக்கமில்லாத உபாத்திமார் இவ்விதம் கேட்பது வெட்கக்கேடு. மேலும் ஊக்கமாய் வேலை செய்வதுமாத்திரம் உபாத்திமாரின் சம்பளத்தை உயர்த்திவிடுமென்று நாம் எண்ணினதில்லை. ஆனதுபற்றியே, அதே செப்டெம்பர் மாதப் பூங்கொத்தில் "ஊக்கமுள்ள உபாத்திமார் தங்கள் சம்பள உயர்வைப்பற்றி நினைக்கட்டும், பேசட்டும், கூட்டங்



கள் கூட்டட்டும், தங்கள் தீர்மானங்களை வற்புறுத்தட்டும்" என்று போதித்தோம். நமது போதனையைச் செய்கையிலும் காட்டியிருக்கிறோம். உதாரணமாக நாம் அக்கிராசனம் வகித்த ஒரு கூட்டத்தைப்பற்றிய விபரங்களை சென்ற நவம்பர்மாதப் பூங்கொத்து 72-ம் பக்கத்தில் காண்க.

இதெல்லாம் சாவதானமாய்க் கவனித்திருப்பாராகில் மேற்கூறிய நமது நேயர் நமது கருத்துகள் ஒன்றுக்கொன்று முரணாயும், நமது வாக்கும் செய்கையும் வெவ்வேறாயும் இருக்கிறதென்று நம்மை நிந்திக்கத் துணிந்திருக்கமாட்டார். உபாத்திமாரின் சம்பளக் குறைவைப்பற்றி அவர் அடையும் வியாகுலத்தினிமித்தம் அவர் இவ்விதம் மதிமயங்கிப் பேசியிருப்பதால் அவரை மன்னித்துக்கொள்கிறோம்.

* * *

இதே மதிமயக்கத்தால் இன்னும் அதிக விந்தையாய்ப் பேசுகிறார். சந்தாதாரின் குறைவினால் நமது பத்திரிகை விரிய இடமில்லையென்று நாம் சொன்னதால், பத்திரிகையைப்பற்றியே நமது ஊக்கம் சந்தாதாரின் தொகைக்குத் தக்கது குறைந்திருப்பதாக இவர் மதிக்கிறார். நமது ஊக்கமல்ல, பத்திரிகையின் இதழ்களே குறைந்திருக்கின்றன. இதழ்கள் அதிகரிக்காததோ முற்றிலும் பணத்தைப் பொருத்ததாயிருக்கிறது. ஆனால் உபாத்திமாரின் ஊக்கமோ முற்றிலும் பணத்தைப் பொருத்ததன்று. போதிய சம்பளம் பெறும் உபாத்திமாரிடத்தில் ஊக்கம் குன்றியிருப்பதையும் பார்த்திருக்கிறோம்; போதிய சம்பளம் பெறாத உபாத்திமாரிடத்தில் ஊக்கம் மேலிட்டிருப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனதுபற்றியே ஊக்கக்குறைவால் உபாத்திமார் "தங்கள் தொழிலின் மேன்மையைத் தங்கள் சம்பளத் தாழ்வுமட்டும் ' தாழ்த்திவிடக்கூடாதென்று" கேட்டுக்கொண்டோம். தங்கள் ஆகாரத்தைத் தங்கள் சம்பளத்துக்குத் தக்கது குறைத்துவிடக்கூடாதென்று கேட்கவில்லை. சம்பளத்துக்குத் தக்கதுதான் ஆகாரம் கிடைக்கும். தங்களுக்குக் கிடைக்கும் ஆகாரம் தங்கள் வேலையை ஊக்கத்தோடு செய்ய இடங்கொடாது என்று நினைக்கிற உபாத்தி

மார் தங்கள் வேலையை விட்டுவிட்டுத் தங்களுக்கு அவசியமான ஆகாரத்தைப் பெறுவிக்கக்கூடிய வூதியம் கிடைக்கும் வேறு அலுவலைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று புத்தி சொன்னோம், இன்னும் சொல்லுகிறோம்.

இதையும் சாவதானமாய் யோசித்துப் பார்த்தால் நமது போதனைக்கும் நடத்தைக்கும் விருத்தமுண்டு என்று நமது நேயர் நம்மை அவமதிப்பது நமது போதனையையும் நடத்தையையும் அவர் கண்டுபிடிக்காததினாலேதான் என்று உணருவார்.

நாமும் ஒரு காரியத்தை உணரவேண்டுமென்று நமது நேயர் எண்ணுகிறார். அவர் எழுதுவது: "........உபாத்திமைத் தொழிலின் மேன்மைக்கும், தேச முன்னேற்றத்துக்கு அடிப்படையாகிய ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கும் மூலபுருஷரான ஆரம்ப ஆசிரியருக்கும் அவசியம் அவர்கள் பெறும் போதுமான சம்பளமே என்றும்...... போதுமான சம்பளமின்றி சரியான கல்வி காண முடியாதாதலால், போதுமான சம்பளத்தை முதலில் கொடுத்து, அதன்பிறகே சரியான கல்வியை எதிர்பார்க்கவேண்டுமென்பதையும்" நாம் உணரவேண்டுமாம். நமது நேயர் அடிக்கடி விடுக்கும் நிருபங்கள் நாம் இதை உணரும்படி கட்டாயப்படுத்துகின்றன. அவரைப்போலொத்த உபாத்திமாரிடமிருந்து போதுமான சம்பளமில்லாத இக்காலத்தில் சரியான கல்வியை எதிர்பார்க்க முடியாதென்று நாம் வாஸ்தவத்தில் உணருகிறோம். ஆனால் தேசமுன்னேற்றத்துக்கும் ஆரம்ப ஆசிரியருக்கும் அவசியமானது சம்பளம் ஒன்றே என்பதை நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம். போதுமான சம்பளம் பெறாததால் தங்கள் வேலையில் ஊக்கங்குன்றிய உபாத்திமார் ஆரம்ப ஆசிரியராயிருப்பதைவிட வேறு அலுவலைத் தெரிந்துகொள்வது தேச முன்னேற்றத்துக்கும் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கும் அதிகப் பிரயோசனமாயிருக்கும்.

* * *

பத்துப்பேர் சுறுசுறுப்பாய் வேலைசெய்யும் இடத்தில் சோம்பேறி ஒருவன் வந்துசேர்ந்தால், பதினொருபேர் செய்



யக்கூடிய வேலையல்ல, ஆனால் ஐந்தாறுபேர் செய்யக்கூடிய வேலைதான் முடியுமென்பது அநுபோகம். சோம்பேறியானவன் மற்றவர்கள் வேலைக்குத் தடையாயிருந்து மொத்த வேலையைக் குறைத்துவிடுவான். அப்படியே ஊக்கமற்ற உபாத்தியான் ஒருவன் ஊக்கமுள்ள உபாத்திமாருடைய வேலைக்கு இடையூறாயிருப்பான்.

ஊக்கமற்ற உபாத்தியான் யாவன்? பள்ளிக்கூடத்துக்கு எப்போதும் நேரந் தப்பிவருபவன் ஊக்கமற்றவன்; தான் அன்று என்ன பாடம் கற்பிக்கவேண்டியதென்பதை முன்னதாகவே யோசியாதவன் ஊக்கமற்றவன்; வாய்மொழியாய்ப் போதிக்கவேண்டியதை ஓர் புத்தகத்திலிருந்து வாசித்துவிடுகிறவன் ஊக்கமற்றவன்; தான் சிறுவனாயிருக்கும்போது படித்த ஏட்டைத்தவிர வேறு நூதனஏடுகள் ஏற்பட்டுள்ளனவென்பதை உணராதவன் ஊக்கமற்றவன்; ஒருவிசை சொல்லிக்கொடுத்ததைச் சிறுவர்கள் கிளிப்பிள்ளைகளைப்போல் ஒப்புவிக்கச் செய்வதே பாடம் நடத்துவது என்று எண்ணுகிறவன் ஊக்கமற்றவன்; இயற்கைப் பாடத்தை அல்லது பூகோளப் பாடத்தை வாசகப் பாடமாக மாற்றுகிறவன் ஊக்கமற்றவன். இன்னும் பற்பல விதமாய் ஊக்கமின்மை வெளியாகும். ஆனால் ஊக்கக்குணமோ ஓரே விதமாய் வெளியாகும். ஊக்கமுள்ளவர்கள் சதா யோசனைபண்ணுவது ஏதென்றால்: "மற்றவர்கள் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், சம்மானமளித்தாலும் வெறுமனே யனுப்பிறாலும், கடவுள் முன்பாக நாம் செய்யவேண்டியதைத் திருந்தச் செய்யவேண்டும்" என்பதே.

---

## கதையும் கதை நடித்தலும்.

(121-ம் பக்கத் தொடர்ச்சி.)

### II. கதை நடித்தல்.

#### புதிய ஆடை அணிந்த அரசன்.

[மகா-ா-ா-ஸ்ரீ S. குப்புசாமி ஐயர் எழுதியது.]

பாத்திரங்கள்.

1. அரசன்.
2. பிரதான மந்திரி, (முதல் மந்திரி).
3. அரண்மனை உத்தியோகஸ்தர்கள்.
4. இரண்டு மனிதர்கள்.
5. இரண்டு தந்திரிகள்.
6. காலாட்படை.
7. ஓர் சிறு குழந்தை.
8. தெரு ஜனங்கள்.

[இரண்டு மனிதர்கள் ஓர் தெருவில் சம்பாஷித்தல்.]

முதல் மனிதன்: என்ன! நமது அரசர் எப்பொழுதும் உடுப்பு அறையிலேயே இருக்கிறாராமே! அவருக்கு வேறு அலுவல் இல்லை போலும்.

இரண்டாம் மனிதன்: அது தெரியாதா உனக்கு. நமது அரசர் தினுசு தினுசான உடைகளை அணிந்துகொள்வதில் அதிகப் பிரியம் உடையவர். ஏராளமான திரவியத்தை இது விஷயமாக செலவு செய்கிறார். இராஜாங்க சம்பந்தமான விஷயங்களிலும் அவ்வளவு பணம் செலவிடுவதில்லை. தேசத்தைக் காப்பாற்றுவதற்கான சைன்யத்தின்பொருட்டுகூட அவ்வளவு பணம் செலவு செய்வதில்லை.

மு. ம.: ஆ! அப்படியா! இராஜ்யத்தின் ஜீவாதாரமாகிய சைன்யங்களைப்பற்றியுமா கவனிக்கிறதில்லை! பரிதாபம்! பரிதாபம்!

இ. ம.: என்ன செய்யலாம்? அரண்மனை மந்திரிகள் எல்லோரும் இதே கவலையாயிருக்கிறார்கள். தங்களுடைய அரசர் 'கொலு மண்டபத்தில் வீற்றிருந்து, குடிகளுடைய குறைகளைத் தீர்ப்பதிலேயே கருத்துள்ளவராயிருக்கிறார்' என்று ஜனங்கள் பெருமையாகப் பேசிக்கொள்ளாமல், அரசர் 'உடுப்பு அறையிலேயே தமதிஷ்டம்போல் களித்துக்கொண்டிருக்கிறார்' என்று ஏளனமாய்ப் பேசிக்கொள்கிறார்கள்.

மு. ம.: ஐயோ! பாவம்! இவருக்கு இவ்வுடுப்பு விஷயத்தில் எவ்வளவு பைத்தியம்! இது விஷயத்திலேயே இவர் யாரிடமாவது ஏமாந்துபோகப்போகிறார்.

இ. ம.: நம்மாலாகக்கூடியது ஒன்றுமில்லை. நாம் போவோம். (இருவரும் போதல்).



[இரண்டு தந்திரிகள் வருதல்]

முதல் தந்திரி: என்னப்பா - கையில் ஒரு காசுமில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை.

இரண்டாம் தந்திரி: கடன் கொடாரில்லாவிட்டால்—யாரையாவது.........

மு. த.: அதைத்தான் நானும் சொல்லவெண்ணினேன். பெரிய பேர்வழியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இ. த.: நான் முன்னமேயே வகை தேடிவிட்டேன்.

மு. த.: என்ன வகையப்பா?

இ. த.: இத்தேசத்து அரசனைப்பற்றி கேள்விப்பட்டதில்லையா?—அவருக்கு புதிது புதிதான ஆடையில் பிரியம் அதிகம்; பிரியம் என்றால் சாமானியப்பிரியமா! பைத்தியம் என்றே சொல்லலாம். நிமிஷத்திற்கு நிமிஷம் விதவிதமான ஆடைகளைத் தரித்துக் கொள்கிறார்.

மு. த.: சரி-சரி. இனி நல்ல வேட்டை சிக்கியது.—(யோசித்து)—நாமிருவரும் அரசரிடம் செல்வோம். அவரிடத்தில் நாம் கைதேர்ந்த நெசவாளிகள் என்று சொல்லி ஏராளமான தொகையைப் பறிக்கலாம்.

இ. த.: இரண்டுபேர் புத்தியும் ஒரேபுத்தியப்பா - இதைத்தான் நான் அப்பவே எண்ணிவிட்டேன். சரி, நாம் அங்கு போவோம்.

[அரச சபைக்குச் செல்லல். அரசர் கொலுவில் வீற்றிருத்தல். இரண்டு தந்தரிகளும் வந்து வணங்குதல்.]

அரசர்: யாரய்யா நீவிர்?

இ. த.: அரசே, நாங்கள் காஞ்சிமாநகர். நாங்கள் கைதேர்ந்த சேணியர்கள்.

அ.: ஆ! அப்படியா! வெகு நாணயமான உடைகள் நெய்வீர்களோ?

மு. த.: மகாராஜ், தங்களுடைய சாமர்த்தியத்தைத் தாங்களே சொல்லிக்கொள்ளக்கூடாது என்பார்கள். ஆனால் வேலைக்காரர்கள், தங்கள் சாமர்த்தியத்தைத் தாங்களே சொல்லிக்கொள்வது சகஜந்தானே மகாராஜ்.

அ.: ஆம், ஆம், அது சகஜந்தான். உங்களிடத்திலிருக்கும் விசேஷ சாமர்த்தியமென்ன?

இ. த.: மகராஜ்! நாங்கள் தங்கச் சரிகை, வெள்ளிச் சரிகை உடைகளைக்கொண்டு வெகு நாணயமானதும், பல வர்ணங்களோடு கூடியதும், அபூர்வமான சக்தியுடையதுமான வஸ்திரங்களை நெய்வோம்.

அ.: அபூர்வமான சக்தியுடையதா:

இரண்டு தந்திரிகளும்: ஆம் மகராஜ்! ஆம் மகராஜ்!

அ.: அதென்னய்யா?

மூ. த.: மண்டலாதிபதியே! எங்கள் ஆடையின் விசேஷமென்னவென்றால், 'தான் வகிக்கும் அந்தஸ்துக்கு லாயக்கில்லாதவர், கபடமுள்ளவர் இவர்கள் கண்களுக்கு அந்த வஸ்திரம் புலப்படாது.'

அரண்மனை உத்தியோகஸ்தர்: அப்படியா! நமது மகாராஜாவுக்கும் அம்மாதிரியான ஓர் ஆடை அவசியமே.

அ.: சேணியர்காள்! தக்ஷணமே தாமதமின்றி உங்களுடைய வேலையை ஆரம்பியுங்கள். வெகு சிலாக்கியமான வஸ்திரமாகவிருக்கட்டும். தொகை எவ்வளவானாலும் ஆகட்டும்.

மூ. த. உத்தரவுப்படி, மகா ராஜ்!

இ. த.: மன்னர் பெருமானே! நேர்த்தியான பல தினுசு பட்டுகளும், வெள்ளிச்சரிகை, தங்கச்சரிகை இவைகளும் தேவை.

அ.: பொக்கிஷக்காரரே, இவர்களுக்குத் தேவையானது உடனே அளிக்கப்படட்டும்.

பொ. உத். உத்தரவுப்படி, மகராஜ்! (சபை கலைதல்).

அரசன் (தனிமையாக): இவர்கள் தயாரித்து வரும் வஸ்திரங்கள் வெகு நேர்த்தியாயிருக்கும். மேலும் அவ்வஸ்திரங்களைக் கொண்டு, நமது அரண்மனையில் யாரார் அவரவர்களுடைய அந்தஸ்திற்கு அருகர், யாரார் அருகரல்லாதார் என்பதை அறியலாம். மற்றும் யாரார் கபடமுள்ளவர்களென்பதையு மறியலாம். அவ்வபூர்வ ஆடைகள் என்று தயாராகுமோ! அவை வருகிறவரையில் அதே கவலையாகவேயிருப்பேன்.



[இரண்டு தந்திரிகளும், தறிகளை வைத்துக்கொண்டு, நெய்வது போல் பாவனை செய்துகொண்டிருக்கிறார்கள்].

அ. (தனிமையாக): அந்த நூதன நெசவாளிகள் எவ்வளவு தூரம் வேலை செய்திருக்கிறார்களோ தெரியவில்லை. நாமே போய் பார்க்கலாமென்றாலோ, அவ்வஸ்திரத்தின் அபூர்வ சக்தியை எண்ணும்பொழுது சற்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஒருக்கால் நாம் நமது அந்தஸ்துக்குப் பாத்திரமில்லாதிருந்தால்...(யோசித்து)...சரி, இதுதான் நல்ல யோசனை: நம்முடைய மிக நம்பிக்கையுள்ள முதன் மந்திரியை அனுப்புவோம். அவரைவிட உண்மையுள்ள உத்தியோகஸ்தர் நமது ராஜாங்கத்தில் யாரிருக்கிறார்? அவரையே அனுப்புவோம்.

[முதல் மந்திரி நெசவாளிகளிடத்தில் செல்லுதல். அங்கு ஒன்றும் தென்படவில்லை. உடனே அவர் பிரமித்து.]

மூ. ம. (தனக்குள்): என்ன ஆச்சரியம்! தறியில் ஒரு நூலையும் காணோம். இதை வாய்விட்டு சொல்வோம் என்றாலோ, நம்முடைய அந்தஸ்துக்கு ஹானி ஏற்படும்போலிருக்கிறது. என்ன செய்வோம்!

இ. த.: மகா பிரபுவே! தறியின் சமீபத்தில் வந்து பாருங்கள். இழையின் நேர்த்தியையும், சரிகையின் நேர்த்தியையும், வர்ணத்தின் பிரகாசத்தையும் பாருங்கள்.

மூ. ம. (தனக்குள்): என்ன! நாம் ஒரு பெருங் கபடனா! அல்லது நம்முடைய அந்தஸ்துக்கு லாயக்கில்லாதவனா! ஒன்றும் புரியவில்லையே. சரி, சரி, நமது கண்ணுக்குப் புலப்படவில்லையென்று சொல்லிக்கொள்ளக்கூடாது. நேர்த்தியாகவிருக்கிறது என்றே பாசாங்கு செய்வோம்.

மூ. த. சுறு சுறுப்பாக வேலை செய்வதுபோல்: பிரபுவே! ஆடை மனதிற்கு திருப்திகரமாக விருக்கிறதா?

மூ. ம. (கண்ணாடியை நன்கு துடைத்துப் போட்டுக்கொண்டு): இது வெகு நல்ல மாதிரியான ஆடை, வெகு நேர்த்தியாக விருக்கிறது என்று அரசரிடம் சொல்கிறேன்.

மூ. த.: கையிலிருந்த சரிகை, பட்டு எல்லாம் செலவாகிவிட்டன. இன்னம் சில தினுசு பட்டுகளும், அதிகமான சரிகை தினுசுகளும் தேவை.

மு. ம.: வேண்டிய திரைகளையும், திரவியங்களையும் பொக்கிஷக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

[முதல் மந்திரி போதல்.]

அ.: பிரதான மந்திரி நூதன ஆடையைப்பற்றி வெகு சிலாக்கியமாகவே பேசுகிறார். அவர் உண்மையுள்ள உத்தியோகஸ்தர் என்பதற்கு ஆட்சேபனையில்லை. அதனாலல்லவோ இவர் அவ்வாடையின் நேர்த்தியை உணர்ந்தார். நம்மிடமுள்ள மற்றொரு உத்தியோகஸ்தனை அழைப்புவோம்.

[மற்றொரு அரண்மனை உத்தியோகஸ்தர், சேணியர்களிருக்குமிடம் சென்று, தறியைப்பார்த்தல்.]

அ. உத். (தனக்குள்): ஒன்றுந் தோன்றவில்லையே! யாதொன்றும் புலப்படவில்லையென்றால், உத்தியோகத்திற்கு ஆபத்து வந்துவிடுமே!

இ. த.: பிரபுவே! பிரதான மந்திரி வெகு திருப்திகரமாயிருக்கிறதென்று சொன்னார். தங்களுடைய அபிப்பிராயம் எப்படியோ?

அ. உத்.: [பரபரப்புடன் பார்ப்பதுபோல் பார்த்து] சேணியர்காள்! வெகு நேர்த்தியாகவிருக்கிறதே. அரசர் பார்த்தால் வெகு சந்தோஷப்படுவார்.

மு. த.: வேலை பூர்த்தியாய்விட்டது—பார்த்தீர்களா. இனி சக்கரவர்த்தியிடம் செல்லவேண்டியதுதான்.

அ. உத்: மகாராஜாவிடம் போய் உடனே நான் அறிவிக்கிறேன்.

[அரண்மனை உத்தியோகஸ்தர் மன்னரிடம் போதல்.]

அ. உத்.: அரசே! ஆடையின் நேர்த்தியை என்னென்று வர்ணிப்பது!

அ.: அப்படியா! இதோ நாம் புறப்பட்டுப் போய் அச்சித்திரவாடையை பார்வையிடுவோம்.

[அரசர் சில உத்தியோகஸ்தர்களுடன் அங்கு செல்லுதல்]

இரு. தந்திரிகள்: மகா ராஜாவே! ஆடையின் நேர்த்தியையும் பளபளப்பையும் பார்த்தீர்களா!

அ: [உற்றுப் பார்த்து ஒன்றுந் தோன்றாமல் பிரமித்து] (தனக்குள்): இது என்ன ஆச்சரியம்! நான் ஒரு கபடனு! வஞ்சகனு! சக்கரவர்த்தி ஸ்தானத்திற்கு தகுதியற்றவனு! இவர்கள் கண்களுக்கு புலப்படுவது, நமக்கு ஒன்றுந் தெரியவில்லையே! வெளியில் சொல்வதற்கு வெட்கமாயிருக்கிறதே!... (வெளிப்படையாக): ஆடை வெகு நேர்த்தி! என்ன காந்தி! நாம் இம்மாதிரியான ஆடை இதுவரையில் பார்த்ததேயில்லை.



ஓர் உத்.: வெகு நேர்த்தி! வெகு நேர்த்தி! சமீபத்தில் நடக்கப்போகும் ஊர்வலத்திற்கு, மகாராஜா, இந்நேர்த்தியான ஆடையையே அணிந்துகொள்ளலாம்.

உத்தியோகஸ்தர்கள் எல்லோரும்: நல்ல காரியம் மகாராஜ், நல்ல காரியம் மகாராஜ்.

[எல்லோரும் போதல். இரண்டு தந்திரிகளும் வந்தனமளித்தல்.]

[ஆரம்பத்தில் வந்த இரண்டு மனிதர்களும் பிரவேசித்தல்]

மு. ம.: இன்றையத்தினம் மகா ராஜாவின் ஜுபிலி கொண்டாட்ட நாள்.

இ. ம.: விசித்திர ஆடையை அணிந்துகொள்வார்போலும்.

மு. ம.: அச்சேணியர்கள், சற்று நேரத்தில் அரச சபைக்கு அவ்வாடைகளை எடுத்துவரப்போகிறார்களாம்.

இ. ம.: அதோ தூக்கமாட்டாமல் இரண்டு பெட்டிகளைத் தூக்கி வருகிறார்களே.

மு. ம.: அவர்கள்தான்; நாமும் போய் பார்ப்போம்.

[இரண்டு மனிதர்களும் அரண்மனைக்குச் சென்று, ஓர் புறமாகத் தனித்து நின்றுகொண்டு, சபையில் நடப்பதை கவனித்துக் கொண்டிருத்தல்.]

இரு. தந். (பெட்டிகளை வெகு சிரமப்பட்டு வந்ததுபோல் கீழே இறக்கி வைத்து): வந்தனம், மகாராஜ்!

அ.: சேணியர்காள்! சொற்பம் பாக்கியிருந்த வேலையும் பூர்த்தியாய்விட்டதா? எங்கே பார்ப்போம்.

[இரண்டு தந்திரிகளும் வெறும் பெட்டியிலிருந்து வஸ்திரங்களை எடுப்பதுபோல் பாவனை செய்தல். கொலுமண்டபத்திலுள்ளோர் அனைவரும் பிரமித்தல்.]

[இரண்டு மனிதர்களும் தனிமையாகப் பேசிக்கொள்ளுதல்].

மு. ம: என்ன! பெரும் மோசமாயிருக்கிறது. காலியான பெட்டியிலிருந்து, எதையோ எடுத்துக் காட்டுவதுபோல் பாவனை செய்துகொண்டேயிருக்கிறார்கள். நாம் என்ன வஞ்சகர்களா!

இ. ம: நாம் வஞ்சகருமல்ல, நம்முடைய ஸ்தானத்திற்கு அருகரல்லாதவர்களுமல்ல. நாம் உத்தியோகஞ் செய்து ஜீவிப்பவர்களா? நாம் சுகஜீவிகள்தானே.

மு. ம.: அவசரப்படுவானேன்? இதோ அரசரும் ஊர்வலத்திற்கு புறப்பட்டுவிடுவார். நடப்பதைக் கவனிப்போம்.

[ஊர்வலத்திற்கு எல்லோரும் புறப்படுதல். அரசர் புதிய ஆடை தரித்திருப்பதாகவெண்ணி, மேலாடை ஒன்றுமின்றி, உள்ளாடையுடன் மாத்திரம் புறப்படுதல்.]

இ. ம.: இதென்ன விந்தை! அரசர் ஆடையின்றி வெளிப் புறப்பட்டுவிட்டார்.

மு. ம: அவ்வாடையின் விசித்திர சக்தியால், நமது கண்ணுக்குப் புலப்படாமலிருக்கலாம். அவசரப்படுவானேன்?

எல்லா ஜனங்களும் [ஒன்றும் புலப்படாமலிருக்கையில், அரசரைப் புகழ்வதற்காக, வெளிப்படையாக]: எவ்வளவு நல்ல ஆடை! என்ன நேர்த்தி! என்ன பளபளப்பு! என்ன சரிகை! பிரகாசம் கண்ணைப் பறிக்கின்றதே!

மு. ம. (தனிமையாக): இவ்வளவு மனிதர்களும் நல்லவர்கள். நாம் இருவர்மட்டுந்தான் வஞ்சகர்களா!

ஓர் குழந்தை: எல்லா ஜனங்களும், அரசருடைய ஆடையைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்களே. அரசர் ஆடையின்றி அல்லவோ ஊர்வலத்தில் செல்லுகிறார்!

இ. ம.: மூட ஜனங்களே, இதோ கவனியுங்கள்! கபடமற்ற, மாசற்ற இருதயத்தையுடைய குழந்தை சொல்வதை கவனியுங்கள்.

எல்லோரும்: ஆம், ஆம். அரசர் ஆடையின்றியிருக்கிறார்.

[உடனே அரசன் மறைதல். எத்தர்கள் ஓட்டம்பிடித்தல். ஜனங்களுக்குள் குழப்பம்.]

மு. ம.: ஐயோ பாவம்! அரசன் வெட்கத்தால் மறைந்துவிட்டார். அந்த எத்தர்களும் ஓடிவிட்டார்கள்.

இ. ம.: ஆடையிலேயே பித்தாயிருந்ததின் பயனிது.



மு. ம: இனியாவது நமது அரசர் இவ்விநோதங்களில் காலத்தைக் கழிக்காமல், இராஜாங்க விஷயங்களிலேயே கவனத்தைச் செலுத்தி, குடிகளுக்கு வேண்டிய நலங்களைக் கருதுவாரென்று நம்புகிறோம்.

இ. ம.: இதுவே தேசத்திற்கு க்ஷேமம். ஈசன் அவ்வாறே அருள்புரிவாராக!

---

*N. B.*—இதை நடித்துக் காட்டும்பொழுது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சிற்சில பாட்டுக்களை அமைத்துக்கொள்ளவும்.

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

## I. நமது பத்திராதிபரும் உபாத்திமாரும்.

[இந்த நிருபத்தின் சில பாகங்கள் தப்பறையென்பது யோசித்து வாசிப்பவர்கள் சகலருக்கும் தெளிவாகும்; வேறு சில பாகங்களின் அர்த்தம் நமக்கே தெளிவில்லை. ஆனால் சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்கு நாம் உத்தரவாதியல்ல. (பத்திராதிபர்)]

நமது பூங்கோதையின், சென்ற செப்டெம்பர் மாதத்து மலரின் பத்திராதிபருடைய 3-வது குறிப்பில் உபாத்திமார் தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் செய்யும் வேலைக்கு, அவர்கள் தற்காலத்தில் பெறும் சம்பளம் போதுமானதென்று பிறர் சொல்லவிடாமற் பார்ப்பது உபாத்திமாரின் கடமை என்கின்றார். அப்படிச் சொல்லவிடாமற் பார்த்துக்கொண்டிருந்தால் போதுமான சம்பளம் கிடைத்துவிடுமோ? எனின், ஊக்கமாய் வேலை செய்தால் வேலைக்குத் தக்க

சம்பளம் கிடைக்கும் என்பர். தற்கால உலகில் எத்தனை பேருக்கு (ஆசிரியர்க்கு) வேலைக்குத்தக்க சம்பளம் கேட்காமலே கொடுக்கப்பட்டுவருகிறதென்றும், எத்தனைபேர் (ஆசிரியர்) அதற்காக ஆனந்த முறுகின்றனர் என்பதையும் வர்த்தமானப் பத்திரிகைகளில் பார்த்திருப்பாரானால் தெரியவரும்!

தகுந்த எருப்போட்டே விவசாயி தன் சாகுபடியின் பலனை எதிர்பார்க்கவேண்டுமென்பதற்கேற்க, போதுமான சம்பளங் கொடுத்தே உபாத்திமாரிடம் வேலை வாங்கவேண்டும் என்று பலதடவைகளில் நாம் வற்புறுத்தியும் "ஏழை சொல் அம்பலமேறாது" என்பதற்கிணங்கவே, மேலே கூறியபடி உழைத்தே கேட்கவேண்டுமென்று வாதம் புரிந்துவந்த பத்திராதிபரவர்கள், மேலே குறிப்பிட்ட பிரசுரத்தின் அவரது 2-வது குறிப்பில் 'பாடசாலை நேரம் ஒழிந்த வேளைகளில் மாணவர்க்குத் தனிப்பாடம் சொல்லிக்கொடுப்பதால் பிறகு இவர்கள் ஊக்கமாய் உற்சாகமாய்ப் போதிப்பதற்குப் பாடங்களை ஆயத்தப்படுத்துவதற்கு இடையூறாயிருக்குமென்று இவ்வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்ற டைரெக்டரவர்களின் கருத்துக்கு சென்னை உபாத்திமைச் சங்கத்தார் கூடி அக்கருத்தை ஒப்புக்கொள்ளினும் "உபாத்திமாரின் தற்கால சம்பளக் குறைவினால் அந்த உத்தரவை முழுதும் நிறைவேற்றுவது கூடாத காரியமென வருந்துவதை முன்னிட்டு "நாமும் இப்படியே அபிப்பிராயப்படுகிறோம்" என்பவர், தனிப்பாடம் சொல்லிக்கொடுப்பதை நிறுத்திவிட்டு அந்த நேரத்தில் 'பள்ளிக்கூடப் பாடங்களைத் தகுந்த விதமாய் ஆயத்தம் செய்வதற்கும் உற்சாகமாய்ப் போதிப்பதற்கும் தயார்செய்து தங்கள் வேலையை நன்றாய்ச் செய்தாலே தங்கள் சம்பளத்தைப் போதுமானபடி உயர்த்தப் பெறுவார்கள் என்றும், 1920-௵ நவம்பர் மாதத்துக்கென வெளிவந்துள்ள மலரின் 72-ம் பக்கத்தில் மானேஜர்கள் கூட்டங்கூடித் தங்கள் குறைகளைப்பற்றி சில தீர்மானங்கள் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த நமது பூங்கொத்து மலரின் பிறந்தகமாகிய ஆர். வி. போதனாமுறைப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் (பத்திராதிபர்போலும்) அவர்களும், நாம் சரியாய் வேலைசெய்தாலே தணிக்கைக்கு வரும் டைரெக்டர், இன்ஸ்பெக்டர் முதலிய பரீக்ஷாதி



காரிகள் நமது வேலையின் திறமையைப் பார்த்துவிட்டு அவர்களே நமது தற்கால நிலைமைக்கேற்ப அதிக உதவி கிடைக்குமாறு சிபார்சு செய்வார்கள் என்றும் நாமே கேட்கத் தேவையில்லையென்றும் ஏன் சொல்லப்படாதோ—சொல்லியிருக்கப்படாதோ? இதிலிருந்தே,

"தேம்படுபனையின் திரள் பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெறவளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே".

என்ற ஆன்றோர் கருத்தைமாற்றி 'நிழலாகும்' என்பதுபோல், உருவத்தைக்கொண்டு 'தன் குஞ்சு பொன் குஞ்சு'—'தன்னினம் தன்னைக் காக்கும்' என்பவைகட்கேற்ப தமது கருத்தை நிர்ணயிக்கிறவராகிறாரென்பது விளங்கும்! நிற்க.

'போதிய சம்பளமில்லாமல் ஊக்கம் எங்கிருந்து வரும்' என்று நாம் கேட்டிருந்ததற்கு, 5-வது குறிப்பில் "முதலாவது நல்லமனதிலிருந்து வரும்" என்கிறார். நல்லமனம எங்கிருந்துவரும் என்பேம்! மனதானது குடும்பக்கவலையிலும் கஷ்டத்திலும் ஈடுபடாமலிருந்தாலே நல்லமனதாகும். அவ்விதம் ஈடுபட்டிருந்தால் நல்லமனது எங்கிருந்துவரும்? அப்படி வரச்செய்வது தங்களால் இயலாதென்று நினைக்கிறவர்கள் ஊதியம் பெறக்கூடிய வேறுவழியைத் தேடிக்கொள்ள வேணுமேயொழிய தங்கள் தொழிலின் மேன்மையைக் தங்கள் சம்பளத்தாழ்வுமட்டும் தாழ்த்திவிடக்கூடாதென்றும் பதிலளிப்போம்" என்பதில், 'தங்கள் தொழிலின் மேன்மையைத் தங்கள் சம்பளத்தாழ்வுமட்டும் தாழ்த்திவிடக்கூடாது' என்று கூறுகிற பத்திராதிபரவர்கள், தம்மால் வெளியாகும் 'போதனாவிஷயப் பூங்கொத்து' என்ற பத்திரிகையின் மேன்மையை, சென்ற அக்டோபர் மாதப் பத்திரிகையின் ஆரம்பத்தில் 'சந்தாதாரின் தொகை அதிகரிக்காததால் நமது பத்திரிகையும் விரிய இடமில்லை' என்று சொல்லி, சந்தாதாரின் குறைவுமட்டும் தாழ்த்திவிட்டதும் என்னே! இவரது வாக்கியத்தை செய்கையில் காட்டினாலன்றோ நன்றாயிருக்கும். இதிலிருந்தே இவரது வாக்கொன்றும் செய்கையொன்றும் புலப்படும்.

3-வது குறிப்பில்! 'உபாத்திமாரின் வேலைக்குத் தகுந்த சம்பளம், அவர்கள் பெற்றுக்கொள்ளுகிறார்களென்றும், உபாத்திமைத் தொழிலின் கஷ்டத்தை அறியாத சிலர் சொல்வதற்கு அநேக

உபாத்திமாரின் ஊக்கக் குறைவே காரணமாயில்லையா?'' என்று இவரே கூறிவிட்டு, 5-வது குறிப்பில் 'தங்கள் தொழிலின் மேன்மையைத் தங்கள் சம்பளத்தாழ்வுமட்டும் தாழ்த்திவிடக்கூடாதென்று, 'உபாத்திமைத் தொழிலின் மேன்மையை அறியாத சிலர் சொல்வதைப்போல், முன்னுக்குப்பின் முரணாகக்கூறுவதும் விந்தையாயிருப்பதை அறிஞர்கள் உய்த்துணர்வார்களாக!

வடார்க்காடு ஜில்லா நாட்டறம்பள்ளி விவேகாநந்த சபை, ஐக்கிய நாணயச்சங்கம் முதலிய பொது ஜனசேவை சபைகளின் காரியதரிசியும், சென்ற 1920-ம் வருஷம் மே மாதத்தில் கொடுமுடியில் நடந்த தென்னிந்திய க்ஷத்திரிய ஜன சமூக ஊழியச்சங்கத்தில் தலைமை வகித்தவருமாகிய ஸ்ரீமான் நாட்டறம் பள்ளி சி. சாமுண்டி கண்டரவர்கள் தமது உபந்நியாசத்தில் நமது அபிவிர்த்தி, தினம் ஒருவேளை கஞ்சிக்குப் போதுமான வருமானமற்ற உபாத்தியாயர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது என்பதில், நமக்குக் கிடைக்கும் கல்வியின் அளவு வியக்தமானதே, என்று கூறியிருப்பதை, பசியை வெறுத்து உலகப்பற்றைத் துறந்து சுவாமியாராயிருக்கும் நமது பூங்கொத்துப் பத்திராதிபரவர்கள் உணர்ந்து, இனியேனும் தமது பத்திரிகையின் மேன்மைக்குச் சந்தாதார் அவசியம்போல், உபாத்திமைத் தொழிலின் மேன்மைக்கும், தேச முன்னேற்றத்திற்கு அடிப்படையாகிய ஆரம்பக்கல்வியின் அபிவிர்த்திக்கும் மூலபுருஷரான ஆரம்ப ஆசிரியர்க்கும் அவசியம், அவர்கள் பெறும் போதுமான சம்பளமே என்றும், பணமில்லாமல் பத்திரிகை வெளிவர முடியாததுபோல், போதுமான சம்பளமின்றி சரியான கல்வி காணமுடியாததலால், போதுமான சம்பளத்தை முதலிற் கொடுத்து, அதன்பிறகே சரியான கல்வியை எதிர்பார்க்கவேண்டுமென்பதையும் உணருவாரென எண்ணுகின்றேன்.

முறையே நேர்ந்த ஆரம்ப ஆசிரியர் மகாநாடுகளின் காரியங்களால், இவ்விஷயத்தை உடனுக்குடனே அனுப்பத் தாமதப்படலாயிற்றென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**பரிமணப்பல்லவராயர்.**
**ஆரம்ப ஆசிரியன்.**

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

Registered No. M. 1534.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷய பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 10. | மே 1921. | மலர் 11.

## பத்திராதிபர் குறிப்புகள்.

ஆரம்பப் படிப்பு உபாத்திமார் ஏனைய உபாத்திமாரைவிட மேற்பட்டவர்களா அல்லவா என்பதைப் பற்றி வெகுவாய தர்க்கித்து நமது நிருபர்களில் ஒருவர் நீண்ட ஓர் நிருபம் விடுத்திருக்கின்றனர். ஆரம்ப ஆசிரியருக்குப் புகழ்ச்சியாய் அவர் சொல்வதெல்லாம் இந்த

விஷயத்தைப்பற்றி இக்காலத்தில் எழுதப்படும் எந்த வியாசத்திலும், பேசப்படும் எந்தப் பேச்சிலும், நமது நேயர்கள் அடிக்கடி படித்தும் கேட்டும் இருப்பார்கள். இந்தப் புகழ்ச்சியெல்லாம் கூடி ஆரம்ப ஆசிரியரின் தொழில் இகழப்படத்தக்கதல்லவென்றும், அவர்களுடைய உழைப்பு அத்தியாவசியமானதென்றும் காட்டுமேயொழிய ஆரம்ப ஆசிரியர் மற்ற ஆசிரியரைவிட மேலானவர்களென்று எண்பிக்காது. ஆரம்பப் படிப்பே மேற்படிப்புக்கு அஸ்திவாரமென்பது மெய்தான்; ஆனால் ஆரம்பப் படிப்பு மேற்படிப்பைவிட மேலானதல்ல. ஆரம்பப் படிப்பு பரவுவது தேச நன்மைக்கு வழியாகுமென்பது வாஸ்தவந்தான்; ஆனால் மேற் படிப்பில்லாமல் தேச நன்மை எவ்வளவுதூரம் விர்த்தியடையும்? ஆகவே, ஆரம்ப ஆசிரியர் மேலோ? ஏனைய ஆசிரியர் மேலோ? இது விஷயத்தில் மேல், கீழ், என்று பேசுவது யுக்தமன்று. நமது அவயவங்களில் கைமேலோ? கால்மேலோ? எல்லாம் மனுஷ உறுப்புகள்தான்; எல்லாம் நமக்குத் தேவைதான். அப்படியே, எல்லா ஆசிரியரும் மேலான தொழிலைச் செய்பவர்கள்தான்; எல்லா ஆசிரியரும் நமக்கு வேண்டியவர்கள்தான்.

* * *

உபாத்திமைத் தொழிலைச் செய்யத் துவக்குகிறவர்கள் அநேகர்; ஆனால் அதைச் செய்வதில் நிலைநிற்பவர்கள் சிலரேயாவர். துவக்கின வேலையை நடுவாந்தரத்தில் விட்டுவிடுவதற்கு, சிற்சில சமயங்களில் சிற்சிலருக்குச் சரியான முகாந்தரம் அமையலாம். ஆனால் பொதுவாக இப்படி விட்டுவிடுகிறவர்கள் தங்கள் தொழிலின் உயரத்தையும் ஆழத்தையும் விசாலத்தையும் உணராதவர்கள். இதன் உயரம் என்பது இதன் மேன்மை; இந்த மேன்மை எத்தன்மைத்தென்றால் உபாத்திமைத் தொழிலைவிட மேலான தொழில் வேறில்லை என்பது ஜன சமூகக்கொள்கை. இதன் ஆழம் என்பது இதை நிறைவேற்றும் திறமை; இத்திறமை இவ்வளவு அவ்வள



வோடு நின்றுபோகாமல் அதனினும் அதிகப்படத்தக்க வாய்மையுடையது. இதன் விசாலமென்பது இதனால் தனக்கும் பிறருக்கும் வரக்கூடிய பயன்; இப்பயனோர் எல்லைக்குள் அடங்கியதல்ல. இது வைதீகப் பயன் மாத்திரமன்று; இலௌகீகப் பயனுமாகும். தம் வேலையை நன்றாயறிந்த உபாத்தியாயர் தமக்கு ஊழியம் பெறுவிக்கத்தக்க அநேக வழிகளைத் தெரிந்துகொள்ள வல்லவன். தம் வேலையைச் சரியாய் நிறைவேற்றும் உபாத்தியாயர் பிறருடைய மனதைக் கவர்ந்துகொண்டு அவர்களிடமிருந்து மரியாதையும் சம்மானமும் அடைந்துகொள்ளக்கூடும். தமக்குக் கிடைக்கும் சம்பளம் சொற்பமேயாயினும் தாம் பிறருக்குச் செய்யும் நன்மைக்களவாக் கைம்மாறும் பெறுவதற்கு லாயக்குடையவராவார்.

* * *

ஆனால் இத்தொழிலின் உயரத்தையும் ஆழத்தையும் விசாலத்தையும் மனதில் உணர்ந்து இதைக் கைபாடும் உபாத்திமார் எத்தனைபேர்! இப்படி உணராதவர்களின் மனம் சதா கவலையிலடிபட்டு அல்லற்படுவதற்குக் கேட்பானேன்? இவர்கள் தங்கள் தொழிலைக் கைவிட்டுவிடுவதும் ஆச்சரியமா? ஆனால் தங்கள் தொழிலைக் கடைப்பிடித்து நிற்பவர்களைப்பற்றி ஆச்சரியப்படலாம். ஏனெனில் இவர்கள் ஆச்சரியமானவிதமாகத் தங்கள் தொழிலின் விசேஷத்தை உணருகிறார்கள்.

* * *

சென்ற வருஷம் ஜனவரிமாதப் பூங்கொத்தில் நாம் பிரசுரித்திருந்த படிப்புப் பரிசோதனைச் சர்க்கிள்கள் இந்த வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து இன்னும் அதிகப்பட்டிருக்கின்றன. இதன்முன் ஒன்றாய்ச் சேர்த்திருந்த சில ஜில்லாக்களை தனித்தனியாய்ப் பிரித்துவிட்டார்கள். முன்னிருந்த 13 சர்க்கிள்களுக்குப் பதிலாக இனிமேல் 16 சர்க்கிள்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமாய் ஏற்படப்போவதாக வதந்தி.

* * *

நமது சந்தாநேயர்கள் புது வருஷ சந்தாவை அடுத்தமாத முடிவுக்குள் முன் பணமாக அனுப்பிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். V. P. வழியாய் பத்திரிகை அனுப்புவதில் ரெஜிஸ்டர் செலவுக்காக 2 அணாவும், கமிஷனுக்காக 2 அணாவுமாக மொத்தம் 4 அணா அதிகமாய்க் கொடுக்கவேண்டிவரும். இந்தச் செலவைக் குறைத்துக் கொள்ளும்படி, ஒவ்வொருவரும் ரூபாய் ஒன்றுமாத்திரம் மணியார்டர் செய்துவிட்டால் உத்தமம்.

---

## விஞக்கணக்குகள்.

கணிதப்பாடத்தில் விஞக்கணக்கு எவ்வளவு முக்கியமென்றும் அதைக் கற்றுக்கொடுப்பது எவ்விதம் என்றும் சில குறிப்புகள் சென்ற ஜூலைமாதக் கொத்து 10-ம் பக்கத்தில் காண்க. இதில் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது ஒவ்வொரு கணக்கையும்பற்றி பிள்ளைகள் யோசிக்கச் செய்வதே. சிலமாதிரிக் கணக்குகள் போட்டு அதேமாதிரி வேறு சில கணக்குகளைக் கொடுப்பது உசிதமல்ல. ஒவ்வொரு, கணக்கையும் பிள்ளைகள் புத்தியை உபயோகித்துச் செய்யப் பழக்கவேண்டும். இதற்காக ஒவ்வொரு கணக்கையும்பற்றிய சில கேள்விகளை முன்னமே தயாரித்துக்கொள்வது நல்லது. உதாரணமாக, காரண எண்கள் கொண்டு வகுக்கும் வழியை விஞக்கணக்குகளில் விளக்குவது நோக்கமென்று வைத்துக்கொள்வோம். இதை யொட்டிய உபகரணங்களைச் சேகரித்தபின் சில கேள்விகள் தயாரிக்கவேண்டும்.

1. தூத்துக்குடிக்கும் சென்னபட்டணத்துக்கும் உள்ள தூரம் 440 மைல்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஓடிக்கொண்டேயிருக்கும் புகைவண்டி எத்தனாவது தடவை பிரயாணம் செய்து முடிக்கும்போது 17600 மைல் ஓடியிருக்கும்?

**கேள்விகள்** :—(a) கேட்டிருப்பதைக் கண்டுபிடிக்க என்ன செய்யவேண்டும்? ஏன்? (b) காரண எண்களால்



வகுப்பானேன்? (c) எப்படி வகுத்தாலும் விடை சமமாய்த்தானிருக்கும் என்பதை விளக்கு.

2. 3646 அங். நீளமுள்ள கட்டையிலிருந்து 128 அங். நீளமுள்ளதாய் எத்தனை துண்டுகள் வெட்டலாம்? மீதியாயிருக்கும் துண்டின் நீளமென்ன?

**கேள்விகள்** :—(a) என்னென்ன காரண எண்களைக் கொண்டு வகுப்பாய்? (b) மீதம் கண்டுபிடிக்கும் விதத்தை விளக்கு.

3. காரண எண்கள்கொண்டு ஒரு பையன் வகுத்தல் கணக்குச் செய்தான். உபாத்தியார் பார்க்குமுன் பாதியைக் கலைத்துவிட்டான். கற்பலகையில் காணப்படுவது பின் கண்டது மாத்திரந்தான்.

மீதி 3

மீதி 4

∴ மொத்த மீதி 35.

இதிலிருந்து அவன் முதலாவது என்ன காரண எண் கொண்டு வகுத்தானென்று கண்டுபிடி.

**கேள்வி** :—கணக்கில் கேட்டிருப்பதைக் கண்டுபிடிக்க முடியுமா? எப்படி முடியும்?

*N. B.*—இவ்விதமாக ஒவ்வொரு கணக்கையும் எப்படி செய்ய வேண்டுமென்று வாய்மொழியாய் விவரித்தபின்தான் பிள்ளைகள் கற்பலகையில் எழுதிச் செய்யத்தகும்.

---

## சிறுவர்க்கான விளையாட்டுகள்.

(S. கந்தசாமிபிள்ளை உபாத்தியாயர் எழுதியது.)

### I. நெருப்புக்கேட்கும் விளையாட்டு.

பிள்ளைகளை வட்டமாக நிறுத்தி ஒரு பையன் கையில் ஒரு அடி நீளமுள்ள குச்சி ஒன்றைக் கொடுத்து வட்டத்தின் உள்புறம், "நெருப்புக் கொடுங்கள், நெருப்புக் கொடுங்கள்" என்று சொல்லிக்கொண்டு சுற்றிவரவேண்

டிபது. அப்பொழுது வட்டமாக நிற்கிற பிள்ளைகள், மூலைக்கோடு பாய்வதுபோல் ஒருவருக்கொருவர் நேருக்கு நேராகப் பாயவேண்டும். அப்படிப் பாயும்பொழுது ஓடுகிற பையனின் இடம் காலியாகவிருந்தால் நெருப்புக் கேட்டுக்கொண்டிருக்கிற பையன் வட்டத்தின் மத்தியில் குச்சியைப் போட்டுவிட்டு அந்த காலியிடத்துக்குப் போய் நிற்கவேண்டும். அப்பொழுது ஒரு பையன் இடமில்லாமல் நிற்பான். அவன் அந்தக் குச்சியை எடுத்துக்கொண்டு, முதலில் சுற்றின பையனைப்போல் சுற்றவேண்டும். அதே மாதிரியே விளையாடி முடிக்கவேண்டும்.

### நரியும் வாத்தும் என்ற விளையாட்டு.

பிள்ளைகள் $1\frac{1}{2}$ அடிக்கு ஒருவராக, கைகளைக் கோர்த்துக்கொண்டு, வட்டமாய் நிற்கவேண்டும். அந்தப் பிள்ளைகளில் இருவரைத் தனியாக எடுத்து ஒரு பையனை வாத்தாகவும், மற்றொரு பையனை நரியாகவும் பேரிட்டு, கைகளைக் கோர்த்துக்கொண்டு வட்டமாய் நிற்கிற பிள்ளைகளைக் கூண்டாகப் பாவித்து, வாத்து என்கிற பையனை கூண்டின் மத்தியில், அதாவது வட்டத்துக்குள் நிறுத்தி, நரியென்கிற பையனைக் கூண்டுக்கு வெளியே நிறுத்தவும். ஆட்டம் துவக்கு (Ready) என்று சொன்னவுடன் நரி என்கிற பையன் வட்டத்தைச் சுற்றிக்கொண்டு எந்தப் பக்கத்தில் இடமிருக்கிறதோ அந்த இடத்தைப்பார்த்து கை கோர்த்திருப்பதைப் பிரிக்காமல், இரு கைக்கு கீழாகப் புகுந்து கூண்டுக்குள் இருக்கிற வாத்தைப் பிடிக்கப் பார்க்கவேண்டும். அப்பொழுது வாத்து என்கிற பையன் நரியென்கிற பையனிடம் அகப்படாமல் இரு கைகளுக்குக் கீழாய்ப் புகுந்து, வெளியே போகவேண்டியது. இதே மாதிரி வாத்து என்கிற பையனை நரியென்கிற பையன் பிடிக்கிறவரையில், இருவரும் உள்ளேயும் வெளியேயும் ஓடிக்கொண்டிருக்கவேண்டும். கை கோர்த்து நிற்பவர்கள் நரியென்கிற பையனுக்கு உள்ளேயும் வெளியேயும் போக இடம் கொடுக்கக்கூடாது; வாத்து என்கிற பையனுக்கு தாராளமாய் இடம் கொடுக்கவும்.

---



## சிறுவர்களுக்கு நல்லொழுக்கம் படிப்பித்தல்.

(ஓர் உபாத்தினியால் எழுதப்பட்டது.)

நல்லொழுக்கமானது உலகத்திலுள்ள சமஸ்த கோடானுகோடி ஜனங்களிடத்திலும் விளங்கவேண்டியது அத்தியாவசியம். ஏனெனில் இதுவே அவர்களுடைய பலவிதமான சுபாவ குணங்களையும் நாட்டங்களையும் சீர்ப்படுத்தி அவர்களை யோக்கியமுள்ள மனிதராக்கும். இதுவே அவர்கள் தங்கள்மட்டிலும், பள்ளிக்கூடத்திலும், வீட்டிலும் மற்றெவ்விடங்களிலும், எந்த நேரத்திலும் தங்கள் கடமைகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கவும், மேரை, மரியாதை, ஒழுக்குள்ளவர்களாய் ஜீவிக்கவும், அவர்களை ஏவித்தூண்டும். நல்லொழுக்கமற்றவர்கள் ஒழுங்காய் ஜீவிப்பது கூடாத காரியம்.

நல்லொழுக்கமுள்ள மைந்தன் தன் தந்தைக்கு ஆபரணமாவான்; உபாத்தியாயருக்கு மகிமைக்கிரீடமாவான். சுற்றிலுமுள்ளவர்களுக்கு நன்மாதிரியும், சந்தோஷமுமாயிருப்பான். அவனிடத்தில் அன்பு, அடக்கம், மேரை, சாந்தம், பொறுமை, உண்மை, நேர்மை, சிரவணம், பிறர்நேசம் முதலிய சுகுணங்கள் பொருந்தியிருக்கும். எப்போதும் முக மலர்ச்சியும், சந்தோஷ சமாதானமும் அவனிடம் துலங்கும். சோம்பல் அவனைத் தீண்டுவதில்லை. ஆனால் எப்போதும் அவனிடம் அமரிக்கை விளங்கும். ஆ! இப்பேர்ப்பட்ட மைந்தனைப் பார்ப்பது தகப்பனுக்கு எவ்வளவு ஆறுதல்! எவ்வளவு பெருமை! இவன் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்று, புகழும், பேரும், கீர்த்தியுமடைந்து, சிறப்புற்று வாழ்வான். இவனோடிருப்பது சுற்றிலுமிருப்பவர்களுக்கு பேரானந்தமாயிருக்கும்.

ஆனால் சன்மார்க்கமற்றவனோவெனில் யாவராலும் இகழப்பட்டு, மானமழிந்து, மதிகெட்டு, சீர்குலைந்து, தன் வாழ்நாள் முழுதும நிர்ப்பாக்கியனாகவே ஜீவிப்பான். மனசமாதானத்தையும், மனத்திருப்தியையும், அவன்

ஒருபோதும் சுகியான். பெற்றோர்க்கு சிறுமையும், பிறருக்குத் துர்மாதிரிகையுமாவான். சன்மார்க்கமின்றி அவன் கற்ற கல்வியெல்லாம் வீணும் வியர்த்தமுமாகும். இதினிமித்தமே,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்

என்று திருக்குறளில் பாடியிருக்கிறது.

இச்சன்மார்க்கத்தைப் பிள்ளைகளுக்குப் புகட்டுவது யார்? இது பெற்றோருடைய முக்கிய கடமைகளில் ஒன்றென்றாலும் சிறுவர்களுக்கு கல்வியறிவை ஊட்டும் உபாத்திமார்களுக்கும் அதிக பெரிய கடமையென்பது நிச்சயம். சன்மார்ககமின்றி அவர்கள் கற்றுக்கொடுக்கும் கல்வியும், எந்த அறிவும் வீணும் வியாத்தமுமாகும். கல்வியின் முக்கிய நோக்கம் சன்மார்க்கமேயன்றி வேறல்ல. ஆனால் எத்தனையோ உபாத்திமார்கள் இக்கடமையை முழுதும் அசட்டைசெய்து, படிப்பொன்றே பிரதானமென்றெண்ணி அதற்காக வருந்திப் பாடுபட்டு, அல்லும் பகலும் உழைப்பதைப் பார்ப்பது மிகவும் பரிதாபத்துக்குரிய காரியம.

பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் பயிற்றுவதற்கு அநேக உபாயங்கள் உண்டென்றாலும் உபாத்திமார்களுடைய நன்மாதிரிகையே எல்லாவற்றிற்கும் முதலில் நிற்கும். உபாத்திமார்களே பிள்ளைகளின் நல்லொழுக்கத்திற்கு கண்ணாடியாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் பட்சம், நியாயம, உறுதி, மனமகிழ்ச்சி, சுத்தம், ஒழுங்கு, சுறுசுறுப்பு முதலான நற்குணங்கள் பூரணமாயிருக்கவேண்டும. பிள்ளைகளின் சன்மார்கக விருத்திக்கு உபாத்திமார்கள் நேரே சொல்லும் புத்திமதிகளைக்காட்டிலும் அவர்களுடைய நன்மாதிரிகையே அதிக அநுகூலமானது. உபாத்தியாயா எப்படியோ பிள்ளைகளும அப்படியே. நிச்சயமாகவே உபாத்திமார்களுடைய குணங்களெல்லாம பிள்ளைகளிடத்திலும் பிரதிபிம்பிக்கும். ஆதலால் உபாத்திமார்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும்.



ஓர் பள்ளிக்கூடத்திலுள்ள உபாத்திமார்களெல்லாம் ஒரே சரீரத்தின் அவயவங்களென்றெண்ணி, எல்லாரும் ஒரே இருதயமும், ஒரே மனமும், ஒரே சித்தமும் உள்ளவர்களாய் ஒன்றித்து உழைக்கவேண்டும். தங்களுக்குள் பேசிப் புழங்குவதிலும், ஒருவருக்கொருவர் உதவிசெய்வதிலும் மிகுந்த பிறர்சிநேகம், தயை, தாக்ஷணியம் பொருந்தியவர்களாயிருத்தல் அவசியம். ஒருவருக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களையும் நன்மை தின்மைகளையும் தங்களுடையதாகப் பாவித்து, அவர்களுடைய கஷ்டங்களை நீக்கவும், நன்மைகளைக் கண்டு சந்தோஷிக்கவும் வேண்டும். ஒருபோதும் தங்களுக்குள் விசேஷமாய்ப் பிள்ளைகளுக்குமுன் வாக்குவாதம், தர்க்கம் செய்யாமலும், யாதொரு கடும் சொல் சொல்லாமலும், வெறுப்புக் காண்பிக்காமலும், கோபங்கொள்ளாமலும், கூடப்பிறந்த சகோதரர்போல் நடந்துகொள்ளவேண்டியது. மேலும் ஒவ்வொருவரும் சுயநலம், சுயமகிமையைத் தேடாமல், பிறர்நலத்தையும், மகிமையையும், பள்ளிக்கூடத்தின் பொது நன்மையையும் மாத்திரமே தேடி உழைப்பார்களேயாகில், ஓ! இது பிள்ளைகளுக்கு எவ்வளவோ உன்னத மாதிரிகை! எவ்வளவு ஆசையோடு இதைப் பின்பற்றத் தேடுவார்கள்! விசேஷமாய்ச் சிறு பிள்ளைகளிடத்தில் இயற்கையாகவே பிறரைப் பின்பற்றல் என்னும் ஓர் விசேஷ குணம் உண்டென்பதால் உபாத்திமாருடைய நற்குணங்களை இவர்களும் படித்து அநுசரிப்பதில் வெகு சுறுசுறுப்புள்ளவர்களாயிருப்பார்கள். உபாத்திமார்கள் தாங்களே நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்கவேணுமென்பதைக் கவனியாமல நடப்பார்களானால் பிள்ளைகள் அவர்களுடைய குறைகளைப்பற்றி தங்களுக்குள்ளே பேசி நகைத்துக்கொள்வார்கள். இதுதான் கண்ட பலன். இப்பேர்ப்பட்டவர்கள் உபாத்திமைத்தொழிலைத் தெரிந்துகொள்ளாதிருந்தால் நலமாயிருக்கும். ஏனெனில் இவர்கள் பிள்ளைகளுக்கு நன்மைகுப்பதிலாய் தின்மையையே செய்கிறார்கள்.

உபாத்திமார் குறிக்கப்பட்ட நேரத்தில் வகுப்புக்கு வருவதையும், மணிப்பிரகாரம் பாடங்களைத் துவக்கி முடிப்பதையும், கால அட்டவணைப்பிரகாரம் பள்ளிக்கூடத்தில் பாடங்கள் நடப்பதையும் பார்க்கையில், பிள்ளைகளும் அப்படியே காலக்கிரமம் தவறாமல் நடக்க ஆசைகொள்வார்கள். இப்படியே மணிச்சத்தம் கேட்ட உடனே எல்லாரும் தீவிரமாய்க் கீழ்ப்படிவதைப் பார்க்கும்போது, பிள்ளைகளும் அப்படியே செய்வார்கள் என்பது நிச்சயம்.

மேலும் உதவி உபாத்திமார்கள் தலைமை உபாத்தியாயருக்கு சிரவணத்தோடும், மரியாதையோடும், பட்சத்தோடும், துரிதத்தோடும், கீழ்ப்படிவதைப் பார்க்கும்போது, பிள்ளைகள் தாங்களும் தங்களுக்கு மேற்பட்டவர்களிடத்தில் அப்படி நடந்துகொள்ளவேணுமென்று கண்டுகொள்வார்கள்.

இதுதவிர நல்லொழுக்கத்திற்குச் சம்மந்தமான கதைகளைச் சிறுவருக்குச் சொல்லுவதும், வாசிப்பதும், நல்லொழுக்க ஒழுங்குகளில் சில வரிகளைச் சமயத்துக்குச் சமயம் வாசித்து வியாக்கியானிப்பதும் அதிக பிரயோஜனமாயிருக்கும்.

ஆனால் பிள்ளைகளின் சன்மார்க்கம் பள்ளிக்கூடத்தோடு முடிந்துபோவதில்லை. அவர்கள் பள்ளிக்கூடத்தைவிட்டு குடும்ப சகிதமாய் பல குடும்பங்களின் மத்தியில் வாழத் துவக்கும்போது, அது முன்னையைவிட அதிக அவசியம். இதைப் பிள்ளைகளிடம் உண்டாக்குவதற்கு உபாத்திமார்களுக்குள் விளங்கும் ஒற்றுமையும், சிநேகமும், ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்யும் குணமும் நேர்த்தியான வழிபாடென்றாலும், ஓர் பள்ளிக்கூடத்து உபாத்திமார்கள் அவர்களைச் சார்ந்த வேறு பள்ளிக்கூடத்து உபாத்திமார்களுக்குக் காட்டும் அன்பும், அவர்களுடைய நன்மை தின்மைகளில் பகிர்ந்து கொள்வதும், அவர்களைக்குறித்து நன்மையாகப் பேசுவதும், அவர்களுக்கு வேண்டிய அவசரங்களில் நல்ல



மனதோடு உதவி செய்வதுமாகிய இக்குணங்கள் அதிக வல்லமையும், நேர்த்தியுமான உபாயங்களென்பதில் சந்தேகமில்லை. இது பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, சுற்றிலுமுள்ள ஜனங்களுக்கும் அதிக நன்மையை விளைவிக்கும் என்பது திண்ணம்.

இப்படியாக சிறுவம் துவக்கி, கல்வியறிவோடு சன்மார்க்கத்தையும் கற்றுக்கொண்டு போகும் பிள்ளைகள் பெரியவர்களான பிறகு இவ்வொழுக்குகளை மறவாமல் அநுசரித்து, சுற்றிலுமுள்ளவர்களுக்கு நன்மாதிரிகையாக ஜீவிப்பார்களென்பது நிச்சயம். அவர்களுக்கு இவ்வளவு நன்மையை ஊட்டின உபாத்திமார்கள் இவ்வுலகத்தில் மனத்திருப்தியும், சந்தோஷமும் அநுபவிப்பதோடு மறு உலகத்தில் மேலான சம்பாவனையும், பாக்கியமும் பெற்று நித்திய சமாதானத்திலும் சந்தோஷத்திலும் வாழ்வார்கள்.

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்தென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

### I. உபாத்தியாயரின் வேலையும், மகிமையும்.

(இ-ம்.) கப்பல் பாட்டுப்படி.

ஏலேலோ ஏலிலேலோ - ஏலேலோ - ஏலிலேலோ
ஏலேலோ ஏலிலேலோ.
தாலமெனும் சாகரத்தில் - புவி - சாகரத்தில்
பாலனெனுங் கப்பல்தனை,
சீலகுரு சிரியனெனும் - நல்லா - சிரியனெனும்
மாலுமிதான் நடத்திடவே.

(முடுகு) 1. சோரூம் ஐம்புலனை சேர்த்து நிறுத்தி
சிரிய பரம்பொருளை சிந்தையில் அதித்து
† ஓராறும் ஒன்றும் உள்ளத்தில் பதித்து
ஒழுக்கம் உடைமையென்றுள்ளத்திற் பூட்டி
ஆங்காரம் லோபித்தனம் போசனப்பிரியம்
அதிமோகமொடு கோபம் தற்பெருமை சோம்பல்
நீங்காத காய்மகாரம் நிந்தையுடன் கோளு
நீடும் பொய் கொலைகளவு நிறைந்த பேராசை
இத்தனையிடையூறெனும் பாறையில மோதாமல்
ஏராளங் கல்வியைச் சரக்காக ஏற்றி *
ஏகுதையா உற்சாகமுடன் - கல்விரதம் - உற்சாகமுடன்
ஏகுதையா எவ்வுலகும் மெச்ச (ஏ.)

2. எய்துகருமத்துக் கேற்றநற்கூலி
இல்லாதிருந்தாலும் இதயஞ் சோராமல்
உள்ளத்துக் கற்ப விரோதமில்லாமல்
ஒப்பிட்டு கூலிக்கு வேலை கொள்ளாமல்
செய்கருமந்தன்னை திருந்தச் செய்யென்று
செப்புமுதுமொழி சிந்தையிற்கொண்டு
ஒப்பில்லா ஒருவன் தன் ஊழியனாக
உழைக்க மனத்தில் விழைவதுகொண்டு
தன்றொழில் தன்னைத்தன தான்யமான
சம்பத்தாகக் கொண்டுதள்ளவே கப்பல்
பறக்குதையா வெகுவிரைவாய் - பெருமையுடன் - வெகு
[விரைவாய்
பெருமையெனும் புகைபுகைந்து. (ஏ.)

---

† ஓராறும் ஒன்றும் என்பதை, தலையான புண்ணியங்கள் ஏழு. (அ-து) ஆத்ம சம்பந்தமான தர்மக் கிரிகைகள் ஏழு. (அ-து) சரீர சம்பந்தமான தர்மக் கிரிகைகள் ஏழு எனவுங் கொள்ளலாம்.

* ஏற்றி, என்றதனால் இறந்தகாலமாய்க் கருதாது (படிப்படியாய் ஓயாது தொடரும் வேலையாதலின்)• நிகழ்காலமாய்க் கொள்க.

S. அருள்நால்,
போதனுமுறைப் பாடசாலை சங்கத்தவனொருவன்.

---



## II. போர்டு பாடசாலைகளும், அதன் மானேஜர்களும்.

நமது போதனுவிஷயப் பூங்கொத்தின், சென்ற பெபுருவரி மாதத் தில் மலரின் 124-ம் பக்கத்தில் 'எயிடெட் பாடசாலையும் போர்டு பாட சாலையும்' என்ற தலைப்பையுடைய, நண்பர் அடைக்கலசாமிபிள்ளை அவர்கள் எழுதியிருக்கும், மூன்றுவித பாடசாலைகளில் போர்டு பாட சாலைகளைப்பற்றி எனது அனுபவத்தில் தெரிந்த இன்னும் இரண்டொரு குறைகளையும், நமது பூங்கொத்துக்குப் புலப்படுத்த விரும்புகிறேன். அதாவது :—

போர்டு பாடசாலைகளின் மானேஜர்கள் 'அநேக பாடசாலைகளை வகித்திருப்பதால்' மட்டும் 'அடிக்கடி உபாத்திமாரோடும் பிள்ளைகளோடும் அப்பாடசாலைகளின் குறைகளைத்தீர்க்க சமயங் கிடைக்காது' என்பதுமட்டுமல்ல. இம்மானேஜர்களாகிய பிரஸிடெண்டுகள் அதிகாரிகளாகவுமிருக்கின்றார்கள். இவர்கள் தங்களது, ரிவினியூ டிவிஷன், மாஜிஸ்திரேட்டு ஆகிய வேலைகளோடு, தாலூகா போர்டையும் கவனிக்கவேண்டியிருக்கின்றது. இவைமட்டுமல்லாமல், இன்னும் எத்தனையோ காரியங்கள் இடையில் நேரிடக்கூடும். இத்தனை காரியங் களையும் வகித்துள்ள ஒருவர், 'அடிக்கடி உபாத்திமாரோடும் பிள்ளைகளோடும் பேசி அப்பாடசாலைகளின் குறைகளைத் தெரிந்துகொள்ளவே சமயம் வாய்க்காது' என்று திண்ணமாய்ச் சொல்வதோடு, தீர்க்கவும் முடியாதெனலாம். பின், காரியங்கள் நடவாமலாயிருக்கின்றன வெனின், பரீட்சாதிகாரிகளும் தங்கள் ஆபீஸ் குமாஸ்தாக்களும் தெரி விப்பவைகளையே வேதவாக்காய் வைத்துக்கொண்டு, அவை சரியோ சரியில்லாததோ எனினும் முடிவுசெய்துவிடுகின்றனர். இதன்மேல் ஆசிரியர்கள் நேரில் போய்ப் பார்ப்பினும், அவ்வேதவாக்கின்படியே அவ்வாசிரியர்களை நடத்துகின்றார்களெனின், ஏழை ஆரம்ப ஆசிரியர் கள்—பாபம் என்செய்வார்கள்! உத்தியோகப் பற்றில்லாத பிரஸி டெண்டுகளும், தங்களுக்குப் பரீட்சாதிகாரிகளால் கிடைக்கும் வேத வாக்கையே, பயபக்தி விசுவாசத்தோடும், ஏழை ஆசிரியர்களை அவ் வேதவாக்கின் விஷயமாய்க் கேட்காமலும் விசாரிக்காமலும் தங்கள் அதிகாரத்தை உபயோகித்துவிடுகின்றனர். சொன்னால் எவ்வளவோ சொல்லலாம்.

தற்போது, திரிச்சிராப்பள்ளி தாலூகா போர்டின் வைஸ் பிரஸிடெண்டாயிருக்கும், எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராகிய கனம். எஸ். கே. தெய்வசிகாமணி, பி. ஏ., எல். டி. அவர்களைத் தாலூகா போர்டு வைஸ்பிரஸிடெண்டாய் நியமித்திருப்பது ஏழை எலிமெண்டரி உபாத்திமார்களின் பாக்கியமே பாக்கியம்! அவர்களை நியமித்தற்குத் தோன்றாத் துணையாயிருந்த தேவனைத் துதியாத நாவுள் நாவுகளேயல்ல.

கனம் சிகாமணியவர்களைக் காண, ஆரம்ப ஆசிரியர் எந்த நேரத்தில்—இடத்தில் சென்று கண்டாலும், இப்போது முடியாது—சாவகாசமில்லை—சற்றுப்பொறு என்னும் வார்த்தைகளை வரச்செய்யாத வன்மையடைத்த தண்ணருளாளர். தமக்கு என்ன காரியமிருந்தாலும், தாமும் ஆசிரியர் பதவியிலிருப்பதாலும், ஏழை எலிமெண்டரி ஆசிரியரின் நிலைமையை நன்குணர்ந்தவராதலாலும் அக்குறைகளை மிகப் பொறுமையோடும்—சாந்தத்தோடும்—அன்போடும் கேட்டு, அவர்கட்குத் தைரியமோ—சமாதானமோ சொல்லிவிட்டுத் தான் தமது காரியங்களை ஆரம்பிப்பாரெனின், அன்பே உருவமாயமைந்த அக்கருணையாளரது தகைமையை எவ்வாறு கூறுவது!

ஆகவே, இத்தகைய இன்னருள் புண்ணியரின் வைஸ்பிரஸிடெண்டு பதவி இன்னும் இரண்டொரு மாதத்திற்குத்தான் உள்ளது என 'காற்று விசாலமாக' என்பதுபோல் கேள்விப்பட்டது எவ்வளவு உண்மையோ எனினும், எல்லாவற்றிற்கும் இன்றியமையாததும்-அடிப்படையானதுமான ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு ஆதாரமான தாலூகாபோர்டு (ஜில்லா கல்விச்சபை)க்கு, அன்னவரே மறுபடியும் மறுபடியுமாக எப்பொழுதும் நியமிக்கப்படவேண்டுமென்று எல்லாம் வல்ல தேவனைத் துதிக்கின்றேன். ஏனைய ஆரம்ப ஆசிரியரும் ஏனையோரும் துதிப்பார்களென்பதும் திண்ணம். துதிக்குமாறே அனைவரையும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**P. பரிமணப்பல்லவராயர்,**
ஆரம்ப ஆசிரியன்.

---



## III. கல்விக் கமிட்டி மெம்பர்.

நமது போதனாவிஷயப் பூங்கொத்துக்கு யான் 15-3-1921-ல் அனுப்பிய "போர்டு பாடசாலைகளும், அதன் மானேஜர்களும்" என்ற விஷயத்தின் இறுதியில் கூறியிருக்கிறபடி கல்விக் கமிட்டிக்கும், ஏழை எலிமெண்டரி உபாத்திமார் சொல்லும் குறைகளை மிக்க அன்போடு கேட்டு நிவர்த்தித்தும் அன்போடு புத்திமதிகள் சொல்லியும் கல்வியபிவிருத்திக்கெனவே ஜெனித்திருக்கும், திருச்சி தாலூகா போர்டு வைஸ் பிரஸிடெண்டும் எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டருமாகிய ஸ்ரீமான் எஸ். கே. தெய்வசிகாமணி, பி. ஏ., எல். டி. அவர்களை நியமித்திருப்பதுபற்றி அவர்களின் அன்பைப் பெற்று அனுபவித்திருக்கும் ஆரம்ப ஆசிரியரின் சார்பாக நமது பூங்கொத்து மூலமாய்ச் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**P. பரிமணப்பல்லவராயர்.**

---

## IV. மூடனும், தேங்காயும்.

(இராகம் தந்தம் தனதனனா).

1. ஒரு ஊரில் ஓர் மூடன்
ஒண்டியாகப் போகையிலே
போகுமந்த வழிதனிலே
பொத்தென்று தேங்காய் விழுந்தது.

2. பழமென்றுமே ஆவலுடன்
பதை பதைத்துக் கடித்தானும்
அதனால் பற்களுடைந்துமே
அவஸ்தையாகி கஸ்திப்பட்டான்.

3. ஆகையினால் தோழர்களே
ஆலோசனை நல்லதாமே.

இப்பாட்டை என் சிற்றறிவுக்கு எட்டியவாறு பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு நானே தெரிந்தெடுத்து இங்கு கூறலானேன். நான் ஆரம்பத்திலேயே பாலர்களுக்கு உபாத்தியாயராக இருந்து வருகிறபடியால் அநேகமாய் சிறுவர்களுக்கு கதை கேட்பதிலும் பாட்டுகள்

கேட்பதிலும் பிரியம் அதிகமாய் இருப்பதை அநுபோகத்தில் கண்டிருக்கிறேன். என்னிடம் பயிலும் சிறுவர்களுக்கு ஒரு கதையைச் சொன்ன அடுத்த நாள் அதைப் பாட்டாகப் பாடாவிடில் உற்சாகம் குறைந்துபோகிறது. இதனால் நான் என்னிடம் பயிலும் சிறுவர்களை பாட்டுகளின் மூலமாய்த்தான் அதிகமாக உற்சாகப்படுத்தி வருகிறேன். என் நண்பர்களும் இங்ஙனமே செய்வார்களானால் சிறுவர்களுக்கு உற்சாகம் அதிகமாய் உண்டாகும் என்பதற்கு சந்தேகமில்லை.

இங்ஙனம்

பழைய மாணவர்களில் ஒருவராகிய

சின்னப்பன்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

Registered No. M. 1534.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி

திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ருபாய் 1.

கொத்து 10. | ஜூன் 1921. | மலர் 12.

## பத்திராதிபர் குறிப்புகள்.

அநேக ஜில்லாக்களில் ஆரம்பக் கல்விச்சங்கங்கள் கூட்டங்கள் கூடி வேலை துவக்கிவிட்டன. இதுவரையில் ஆரம்பப் பாடசாலைகள் சம்மந்தமாய் இன்ஸ்பெக்டர்கள் வகித்துவந்த அநேக அதிகாரங்கள் இச்சங்கங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் ஆரம்

பப்.பாடசாலைகளை அங்கீகரிப்பதும், அவைகளுக்கு உப காரநிதி நியமிப்பதும் இச்சங்கங்களுடைய அலுவல். இதைவிட முக்கியமாய், ஆரம்பப் படிப்பு பரவுவதற்காக பாடசாலைகளை அதிகப்படுத்துவதும், தகுந்த உபாத்தி மார் கிடைப்பதற்கான வழிபாடுகளைக் கண்டுபிடிப்பதும் இச்சங்கங்களின் கடமை. ஆனால், படித்துக்கொடுக்க வேண்டிய விஷயங்களைத் தீர்மானிப்பது இச்சங்கங்களின் கடமையென்று குறிக்கப்படாதது ஏனோ??

* * *

பிள்ளைகளைப் படிக்கவைப்பதென்றால், நாள் போகப் போக, பணச் செலவும் அதிகரிக்கிறது. உயர்தரப் பாட சாலைகளில், சம்பளத்தை ஜாஸ்தியாக்குகிறார்கள்; கீழ் தரப் பாடசாலைகளுக்காக பொதுஜனத்து வரியையும் ஜாஸ்திப்படுத்தப்போகிறார்களாம். பணச்செலவு செய் வது ஏழைகளுக்குக் கூடாதகாரியம். ஆஸ்திக்காரர்களுக் குக் கூடியகாரியமென்றாலும் சிலருக்கு மன வருத்தமான காரியம். ஆனால் மனவருத்தத்துக்கு முகாந்தரமில்லை. நமது தேச விர்த்திக்காகச் செய்யவேண்டிய மறறச் செல வுகளைவிட படிப்புக்காகச் செய்யப்படும் செலவு அதிக பயனைக் கொடுப்பதாகும். சரியானவிதமாய்ப் படிப்பிக் கப்பட்டால், நமது பிள்ளைகள் அதிக நம்பிக்கைக்குரிய வர்களாயும், நிலையுள்ளவர்களாயும், சந்தர்ப்பத்துக்குத் தகுந்த சமயோஜிதவல்லவர்களாயும் ஆவார்கள். நமது தேசம் திருந்துவதற்கு இதைவிட வேறு மேலான சாத னம் எது?

* * *

உபாத்திமாரின் பிரதான இலட்சணம் படித்துக் கொடுக்கும் திறமையன்று, அவர்களின் குணவிசய விசே ஷமேயாகும். உபாத்திமாரின் நற்குணமே பிள்ளைகளின் குணத்தைச் சீர்ப்படுத்த வல்லது. இப்போப்பட்ட நற் குணத்தோடு சேர்ந்திருந்தால்தான் படித்துக்கொடுக்கும் திறமையும் பயன்படுவதாகும். படித்துகொடுக்கும் திற மையில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதேதென்றால் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி பாடங்களைப் போதிப்



பது. சாதாரண உபாத்திமார் பிறர் எழுதிய பாடங்களை
எழுதியபடி மாற்றமின்றிப் போதிக்கக் கூசமாட்டார்கள்.
திறமையுள்ள உபாத்திமாரோ தாங்களாய் எழுதிய
பாடத்தைமுதலாய் சந்தர்ப்பத்துக்கிசைய மாற்றிப்
போதிக்கவும் பின்வாங்கமாட்டார்கள். இப்படி போதிக்க
வேண்டுமானால் உபாத்தியாயர் தமது மாணுக்கரின் தன்
மையை நன்குணர்ந்தவராயிருக்கவேண்டும். மாணுக்கரின்
தன்மையையும் தமது குணத்தையும் எப்போதும் கவ
னித்துநடப்பவரோ சரியான உபாத்தியாயராவார்.

* * *

கிராமந்தரப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் பிற்
காலத்தொழிலுக்கு உதவியான பயிற்சி பயிற்றப்பட
வேண்டுமென்று எங்கும் பேசிக்கொள்ளுகிறார்கள். பிற்
காலத்தொழில் இன்னதென்று தீர்மானிப்பதெப்படி?
சிறுவர்கள் கொஞ்சம் வளர்ந்தபின்தான் அவர்கள் எத்
தொழிலுக்குத் தகுந்தவர்களென்று தீர்மானிக்கலாம்.
அதற்குமுன், அந்தந்தக் கிராமங்களின் பற்பல தொழில்
களைப்பற்றிய பொது அறிவும், எத்தொழிலுக்கும் உதவக்
கூடிய கைப்பழக்கமும் சிறுவர்களுக்குப் பிரயோசனமா
யிருக்கும்.

* * *

இந்த மலரோடு பத்தாவது கொத்து முடிவாகி
றது. அடுத்த மலரோடு துவக்கும் பதினோராவது
கொத்துச் சந்தாவை முன்பணமாய் அனுப்பிக்கொள்ளும்
படி சந்தாநேயரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

## சங்கீதம் கற்பித்தல்.

சிறுவர் பாடசாலைகளில் கதையோடு சம்மந்தப்
பட்ட பாடல்கள் பல படிப்பிக்கப்பட்டு வருகின்றன.
ஆனால் இப்பாடல்களாலும் இன்னும் பொதுவில் சங்கீ
தம் கற்பிப்பதாலும் சிறுவர்களுக்கு எவ்வளவு நன்மை
செய்கிறார்கள் என்று உபாத்திமார் உணரவேண்டும்.
பழையகாலத்தில் நாகரீகம் பெற்றோங்கிய ஜனங்கள் சங்

கீத வித்தையை வெகுவாய் மதித்து வந்திருக்கிறார்கள். மேல் தேசத்துக் கிரேக்கருக்குள் சங்கீதம் கற்பது தேச நன்மைக்கு இன்றியமையாதது என்று எண்ணப்பட்டு வந்தது; கீழ் தேசத்துச் சீனருக்குள் ஓர் தேசம் செம்மையாயிருக்கிறதாவென்பதை அத்தேசத்துச் சனங்கள் பாடும் விதத்திலிருந்து தெரிந்துகொள்ளலாமென்று சுலோகம் வழங்கிவந்தது. வாஸ்தவத்தில் சங்கீதமானது சரியாய்க் கற்பிக்கப்பட்டால் சிறுவரிடத்தில் ஞானச் சந்தோஷத்தை எழுப்பி அவர்களை ஒழுங்குக் கிரமத்தின் பேரில் பற்றுதலுள்ளவர்களாக்கும்; இதனால்தான் அவர்கள் வாழும் தேசமும் நன்மையடைந்து செழிப்புறும்.

நமது தேசத்தில் சங்கீத வித்தை விருத்தியடைந்து பல நன்மையைச் செய்ததென்பதற்கு ஐயமில்லை. ஆனால் இந்த வித்தையைக் கற்றுக் களிப்படைந்தவர்கள் ஆங்காங்கு சிலரே யாவர். அதுவும் பலர்சேர்ந்து ஒரே பாட்டைப்பாடும் வழக்கம் அதிகமாயில்லை; தனியாகப் பாடும் பாட்டே சிறப்புப் பெற்றிருக்கிறது. ஆகிலும் நமது பாடசாலைகளில் சிறுவர்கள் தனியாக மாத்திரமல்ல, மற்றவர்களோடு சேர்ந்து ஒரே குரல்போல் பாடுவதற்கும் கற்றுக்கொடுக்கலாம். பஜனைக்கூட்டங்கள், கோலாட்ட விளையாட்டுகள், பலர் சேர்ந்து செய்யும் கைவேலைகள் முதலிய சந்தர்ப்பங்கள் பொதுப் பாட்டுப் பாடுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் ஏதுக்கள். இத்தோடு விசேஷ திறமைகாட்டும் சிறுவர்கள் தனிப்பாட்டுகள் பாடுவதற்கும் உற்சாகப்படுத்தப்படவேண்டும்.

நன்றாய்ப் பாடுவதற்கு நல்ல குரல்மாத்திரம் போதாது, பாட்டின் சிறப்பை உணரக்கூடிய காதுகளும் அவசியம். உபாத்தியாயர் பாடும் பாட்டுகளைக் கேட்டு மகிழும்படி முதல் முதல் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். பிற்பாடு கழுதைபோல் கத்தாமலும் ஆந்தைபோல் கீச்சென்று கதறுமலும், சரியானகுரல் எடுத்துப்பாடும்படி கற்பிக்கவேண்டும்.

ஓர் புதுப்பாட்டுக் கற்பிக்கவேண்டுமானால், முதலில் அப்பாட்டின் வார்த்தைகளைப் பிள்ளைகள் கண்டுபிடித்



துப் பாடம்பண்ணவேண்டும். பாடமானபின், உபாத்தியாயர் பாட்டின் முதல் அடி முழுமையும் ஒருவிசை பாடிக்காட்டவேண்டும். அதன்பின் அதைப் பாகம் பாகமாகப் பிரித்து உபாத்தியாயர் பாடாமலே பிள்ளைகள் பொதுவாயும் தனியாயும் பாடச்செய்யவேண்டும். கடைசியாய் அடி முழுமையும் பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து பாடட்டும். இப்படியே மற்ற அடிகளும் படிப்படியாய்க் கற்பிக்கபடவேண்டும். சில பையன்கள் மாத்திரம் பாடம்பண்ண, மற்றவர்கள் அவர்களோடு சேர்ந்து ஆ! ஊ! என்று இழுக்கச் செய்வதும், எப்போதும் வாத்தியப் பெட்டியொன்றை உபயோகிப்பதும், பிள்ளைகள் தைரியமாய்ப் பாடக் கற்றுக்கொள்வதற்குத் தடையாகும்.

சங்கீதமானது பிரயோசனமான பாடம் மாத்திரமல்ல, மனோகரமான ஓர் இளைப்பாற்றியுமாகும். இந்த நன்மையான மனோகரத்தைச் சுகித்தநுபவிக்கக் கற்ற சிறுவர்கள் பிற்காலத்தில் ஈனமான சந்தோஷத்தைத் தேடிப் போவது அருமை.

## சிறுவர்க்கான விளையாட்டுகள்.

S. கந்தசாமிபிள்ளை உபாத்தியாயர் எழுதியது.

### III நச்சி இழுத்தல்.

இரு பிள்ளைகள் எதிர் எதிராக பாதங்கள் பதிய முழங்காலை மேலே நிமிர்த்தி உட்காரவேண்டும். பிறகு 4 அடி நீளமுள்ள ஒரு மூங்கிற் குச்சியை பாதங்களுக்கு மேல் இருபேரும் கைகளால் பிடித்துக்கொள்ளவேண்டும். "(go)" என்று சொன்னவுடன் பூமியை விட்டு மேலே எழும்பாமல் தங்கள் முழுப் பலத்தோடு அவரவர்கள் பக்கமாக இழுக்கவேண்டியது.

### IV கோட்டைவிட்டு வெளிப்படுத்தல்.

ஒன்றுக்கொன்று 20 அடித்தூரமாய் 40 அடி நீளமுள்ள இரண்டு சமதூரக் கோடுகள் தரையில் இழுக்க. 20 அடி அகலமுள்ள இடைவெளியின் மத்தியில் இருவரி

சையாக பிள்ளைகள் எதிர் எதிராக நிற்கவேண்டும். ('go') என்று சொன்னவுடன் ஒவ்வொரு பையனும் தள்ளிக் கொண்டு எதிரேயுள்ள கோட்டைக்கடந்து செல்ல வேண்டும். குறிப்பிட்ட நேரம் கொடுத்து ("Time") என்று சொல்லவும். அந்த நேரத்துக்குள் எந்தெந்தப்பிள்ளைகள் எதிரிகளைத் தள்ளிக்கொண்டு கோட்டைக் கடந்திருந்தார்களோ அவர்கள்தான் ஜெயம் அடைந்தவர்கள்.

### V ஓநாயும் ஆடுகளும்.

பிள்ளைகளுக்கு தகுந்தபடி வட்டம்போட்டு, அந்த வட்டத்துக் கோட்டுக்குள் அவர்களை நிறுத்தி, வட்டத்துக்கு வெளியே பிள்ளைகள் வராமல் இருக்கச் செய்ய வேண்டும். பிறகு மற்றொரு பையனைத் தனியாக வட்டத்துக்கு வெளியே நிறுத்தவேண்டும். வட்டத்துக்குள் இருக்கிற பிள்ளைகளுக்கு ஆடுகள் என்றும், வெளியிலிருக்கிற பையனுக்கு ஓநாய் என்றும் பெயரிட்டு விளையாட்டை ஆரம்பிக்கவும். வெளியிலிருக்கிற பையன் வட்டத்துக்குள் போய் அவன் கையில் அகப்பட்ட பிள்ளைகளை இழுத்துக்கொண்டு வெளியே வரவேண்டும். இதே மாதிரி எல்லாப்பிள்ளைகளையும் வெளியே கொண்டுவருமளவும் ஆட்டமாடி முடிக்கவேண்டும்.

### VI சாட்டை விளையாட்டு.

பிள்ளைகள் முழங்காலை மடித்து இருகைகளையும் பின்னால் கோர்த்துக்கொண்டு வட்டமாக உட்கார்ந்திருக்க வேண்டும். அதில் ஒரு பையன் கையில் துணியால் திரித்த சாட்டையை எடுத்துக்கொண்டு வட்டத்தைச் சுற்றிச் சுற்றி ஓடவேண்டும். ஓடும்போதே அவனுக்கு இஷ்டமான பையனுக்கு பின்னால் சாட்டையை வைத்துவிட்டு ஓடவேண்டும். அதற்குள் அவன் அறிந்து வைத்த சாட்டையை எடுத்துக்கொண்டு, வைத்த பையனை அடிக்க ஓடவேண்டும். வைத்த பையனோ அடிபடாமல் துணி வைக்கப்பட்டவனுடைய இடத்தில் உட்காரவேண்டும். இதேமாதிரி ஆட்டத்தை ஆடி முடிக்கவும்.



## சப்தசாஸ்திரமும், வாசிப்பும்.

பழையகாலத்தில் சிறுவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுக்கும்போது முதலில் எழுத்துக்களின் பெயரை "ஆனா, ஆவன்னா, ஈனா, ஈயன்னா" என்று போதிப்பது வழக்கம். இக்காலத்திலோ ஒவ்வொரு எழுத்தின் சப்தத்தைமாத்திரம் "அ", "ஆ", "இ", "ஈ" என்று போதிக்கிறார்கள். எழுத்தின் பெயரைப் போதித்தாலும் சரி, சப்தத்தைப் போதித்தாலும் சரி அந்தந்த எழுத்தைப் பார்த்தவுடனே அததற்குரிய ஒலியைப் பிள்ளைகள் உச்சரிக்க அப்பியாசப்படுவதே நோக்கம். இந்த நோக்கம் சித்திபெறுவதற்கு மூன்று காரியம் அவசியம். முதலில் அந்தந்த ஒலியைக் கேட்டு ஒவ்வொன்றுக்குமுள்ள வித்தியாசத்தை உணரவேண்டும். இரண்டாவது: அந்தந்த ஒலியைத் திருத்தமாயும் தெளிவாயும் உச்சரிக்கவேண்டும். மூன்றாவது: அந்தந்த ஒலியைக் குறிக்கும் அடையாள அட்சரத்தை அறியவேண்டும்.

கடைசியாகச் சொன்னதே வாசித்தல் என்னப்படும். முந்திய இரண்டும் இதற்கு உதவியாகும். இவைகளைப் பற்றிய அறிவை நன்கு புகட்டும்படி "சப்தசாஸ்திரம்" (Phonics) என்னும் நூதனப் பெயரையுடைய ஓர் கலையை நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த சப்தசாஸ்திரத்தை ஓர் விசேஷ படிப்பாகப் பெரிய கலாசாலைகளில் போதிக்கிறார்கள். ஆனால் சிறுவர் பாடசாலைகளிலோ இந்தச் சாஸ்திரம் போதிக்கப்படவேண்டியதில்லை. உபாத்திமார் இதை அறிந்து தங்கள் பிள்ளைகளுக்கு வாசிக்கக் கற்றுக்கொடுப்பதில் அதை உதவிக்கொண்டால் போதும். இதில் அறியவேண்டியது அந்தந்தப் பாஷையில் ஜனங்கள் உபயோகிக்கும் சப்த ஜாபிதாவும், அந்தச் சப்தங்களை ஒலிக்கும் அங்க அமைப்புமேயாகும்.

ஆனால் சிறுவர்கள் கொஞ்சமாவது வாசித்துப் பழகினபின்தான் அந்தச்சாஸ்திரம் உபயோகப்படும். குறுகியதும் சுலபமானதுமான சில வார்த்தைகளைப் பார்த்து

அவைகளின் உச்சரிப்பைச் சொல்ல அறிந்தபின்தான் அந்த வார்த்தைகளிலுள்ள எழுத்துக்களின் சப்தத்தைப் போதிக்கத்தகும். இப்படி சப்தத்தையறிந்த எழுத்துகளாலாகிய வேறு வார்த்தைகளையும் பிள்ளைகள் தாங்களாய் வாசிப்பதற்கும் அவர்களை அப்பியாசப்படுத்த வேண்டும். இம்முறையை அநுசரித்தே மகா-ள-ள-ஸ்ரீ S. G. டானியேல் தமது முதல் வாசகப் புத்தகத்தை இயற்றியிருக்கிறார்.

தற்காலத்தில் அநேக கிராமாந்தரப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுவதாலும், எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கில வார்த்தைகளை வாசிக்கவாவது கற்றுக்கொடுத்தல் பிரயோசனமாயிருக்குமென்பதாலும் மேற்படி முறைப்படி ஆங்கில எழுத்துகளைக் கற்பிப்பதற்கு உபயோகமாக, பின்வரும் குறிப்புகளை வரைகிறோம்.

வாசிக்கக் கற்பதற்குமுன் பேசக் கற்பது இயற்கை ஒழுங்கு. ஆதலால்தான் துவக்கத்தில் பிள்ளைகள் கையில் பாடப் புத்தகத்தைக் கொடாமல் வாய்மொழியாகமாத்திரம் சம்பாஷிக்கவேண்டியது. இப்படி சம்பாஷிப்பதால் சில வார்த்தைகளைப் பிள்ளைகள் கற்றபின் அவ்வார்த்தைகளை எழுதி அவைகளைப் பார்த்து உச்சரிக்கச் செய்யவேண்டும். அதே எழுத்து அதே இடத்தில் திரும்பித் திரும்பி வருவதாகிய சில வார்த்தைகளை உச்சரிக்கக் கற்றபின் அந்த எழுத்தின் தனி ஒலியைக் கற்பிக்கத்தகும். ஆங்கில பாஷையில் ஒருமைக்கும் பன்மைக்கும், தன்மைக்கும் படர்க்கைக்குமுள்ள வித்தியாசம் பொதுவில் "s" என்னும் ஒலியால் குறிக்கப்படும். இந்த ஒலியின் அடையாளமாகிய "s" என்னும் எழுத்தையே முதலில் கற்பிப்பது நல்லது.

உதாரணமாக: hand, hands; run, runs. முதலிய வார்த்தைகளை எழுதி உச்சரிக்க. எந்த ஒலி திரும்பித் திரும்பி வருகிறதென்று கவனிக்கச் செய்க. அந்த ஒலியைக் குறிக்கும்படி என்ன அடையாளம்போடப்பட்டிருக்கிறதென்று உற்றுநோக்கச் செய்க. இனி அந்த ஒலி



யைக்கொண்டு துவக்குகிற சில வார்த்தைகளை எழுதிக் கற்பிக்க. இனி அந்த அடையாளத்தைக் கண்டவுடன் அந்த ஒலியைப் பிறப்பிக்கும்படி பிள்ளைகளைப் பழக்க. இந்த ஒலியைக் குறிக்கும் எழுத்தை மனதில் பதிப்பிக்கும்படி அதற்கு "எஸ்" என்னும் பேர் கொடுத்துப் படிப்பிப்பதில் குற்றமுடைத்தென்பதாகத் தோன்றவில்லை. "ஸ்" என்ற வெறும் ஒலியைக் கற்பதைவிட "எஸ்" என்னும் பெயரைக் கற்றுக்கொள்வது எளிது.

இதன்பின் கற்பிக்கத்தக்க எழுத்துக்கள் முறையே m, f, t, n, p, l, b, v, w, r, d, h, j, k என்பவையென்று சிறுவர்களுக்குப் படிப்பித்து அநுபோகப்பட்ட ஒருவர் சொல்லுகிறார். இந்த எழுத்துக்களெல்லாம் ஒரு வார்த்தைக்கு முதலில் ஒரே திட்டமான ஒலியோடு ஒலிக்கும். அவைகளை உச்சரிப்பதற்கும் எழுதுவதற்கும் உள்ள வருத்தத்துக்குத்தக்கது வரிசைக்கிரமமாய் அடுக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட எழுத்துக்களுக்குப்பின் c, g என்னும் எழுத்துக்களைக் கற்பிக்கலாம். இவைகளின் ஒலி இடத்துக்குத் தக்கது வித்தியாசப்படும். c என்னும் எழுத்து e, i, y என்னும் உயிரெழுத்துக்களுக்குமுன் s போலவும், மற்ற இடங்களில் k போலவும் ஒலிக்கும். g என்னும் எழுத்து a, o, u, l, r என்னும் எழுத்துகளுக்குமுன் வல்லினமாகவும் மற்ற இடங்களில் மெல்லினமாகவும் ஒலிக்கும். ஆனால் இந்த விதிகளெல்லாம் முதல்வகுப்புப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டியதில்லை. c என்பது சாதாரணமாய் k போல் ஒலிக்கும் என்பதை அறியச் செய்தால் போதும்.

x, y, z என்னும் எழுத்துக்கள் முதல்வகுப்புப் பிள்ளைகளுக்கு அவ்வளவு உபயோகமில்லை.

ஆங்கிலத்து மெய்யெழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பதைப்பற்றிச் சொல்லியாயிற்று. உயிரெழுத்துக்களைத் தனித்தனியாய்க் கற்றுக்கொடுப்பது உசிதமல்ல. ஏனெனில் ஒரே மெய்யெழுத்து இடத்துக்குத் தக்கது பலவிதமாய் ஒலிக்கும். உதாரணமாக: hand, came, fall முத

லிய வார்த்தைகளில் a என்னும் எழுத்து எவ்வளவு வித்
தியாசமாய் ஒலிக்கிறது! ஆகையால இந்த எழுத்தைத்
தனியாய்க் கற்பிக்காமல் அது ஒரே ஒலியோடு ஒலிக்கிற
சில எழுத்துக்கூட்டங்களைக் கற்பிப்பது உசிதம். அப்
படியே மற்ற உயிரெழுத்துக்களையும்.

உதாரணமாக: "i" என்பதைக் கற்பிப்பதற்கு
"ing" என்னும் எழுத்துக் கூட்டத்தை எடுத்துக்
கொண்டு playing, singing, walking முதலிய வார்த்
தைகளிலிருந்து "ing" என்பதின் ஒலியைக் கற்று,
அந்த ஒலியுள்ள வேறே வார்த்தைகளையும் வாசிக்கப்
பழக்க.

இதன்பின் கற்பிக்கக்கூடிய எழுத்துக் கூட்டங்க
ளாவன: (ing), an, in, at, er, en, an, ick, ea, ai முத
லியன. இந்த எழுத்துக் கூட்டங்களை முன் படித்த
மெய்யெழுத்துக்களோடு சேர்ப்பதால் 700 வார்த்தைகள்
கற்றுக்கொள்ளலாமென்று ஓர் அமேரிக்க சாஸ்திரியார்
கணக்கிட்டிருக்கிறார். உதாரணமாக: fan, pin, cat,
her, hen, can, sick, eat, aid முதலியன.

இப்படியாகத் தனிச் சத்தங்களைச் சேர்த்து வாசிக்
கப் பழக்குவதற்கு அட்டையில் எழுதப்பட்ட எழுத்துக்
களை உபயோகிக்கலாம். ஒரு அட்டையில் மெய்யெழுத்
துக்களைத் தனித்தனியாயும் வேறொரு அட்டையில்
மேலே சொல்லப்பட்டதைப்போன்ற எழுத்துக் கூட்
டங்களையும் வரைந்து ஒன்றோடொன்றைச் சேர்ப்பதால்
உண்டாகும் வார்த்தைகளைக் கற்பிக்கலாம்.

இம்முறைப்படி வாசிக்கக் கற்பது துவக்கத்தில்
தொந்தரைபோலவும் தாமதமான வழிபோலவும்
தோன்றலாம். ஆனால் நாள் போகப்போக, பிள்ளைகள்
தாங்களாய் அநேக வார்த்தைகளை வாசிப்பதற்கு வல்ல
வர்கள் ஆவார்களாகையால், இந்த முறைப்படி கற்பதற்
கும் அவர்களுக்கு ஆவல் உண்டாகும்.

மேலே சொல்லியதெல்லாம் சாதாரண வாசகப்
பாடத்தை நடத்தும் முறையல்ல. வெறும் வாசிப்புக்
கென்று ஏற்பட்ட பிரத்தியேகமான பாடத்தை நடத்தும்



முறை. அர்த்தத்தோடு வாசகப் புத்தகத்தைப் படிப்
பது வேறே பாடம்; எந்தப் புஸ்தகத்தையும் வெறும்
வாசிப்பாக வாசிக்கப் பழகுவது வேறே பாடம். இரண்
டையும் சில சமயங்களில் சேர்த்து நடத்தலாம். ஆனால்
இவைகள் தனித்தனிப் பாடங்கள் என்பதை மறந்து
போககூடாது. இதைப்பற்றிய தெளிவான விபரங்
களைச் சென்ற அக்டோபர் மாதப் பூங்கொத்தில் காண்க

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்வி
களுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்
கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள்
இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம்
இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும்
எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிரா
யங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

## I பாடங்களை ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்திப் போதித்தல்.

இவ்விஷயம் 12-3-1921ல் திருவெறும்பூரில் நடந்த எலிமெண்
டரி உபாத்தியாயர் சங்க மீட்டிங்கில் என்னால் தயார் செய்யப்பட்டு
வாசிக்கப்பட்டது.

நாம் இன்று எடுத்துக்கொண்ட "பாடங்களை ஒன்றுக்கொன்று
சம்பந்தப்படுத்திப் போதித்தல்" என்பதை விளக்குதற் பொருட்டு,
இரண்டொரு உதாரணங்களை 'பிரத்தியக்ஷப் பிரமாணத்தைக்கொண்டு
போதித்தல்' என்பதற்கிணங்க எடுத்துக்கொள்ளுவோம்.

நாம் இம்மண்ணுலகில் உயிர் வாழ்ந்திருப்பதற்கு அத்தியாவசிய
மான காற்றை எடுத்துக்கொள்ளுவோம். அந்தத் தனிப்பட்ட காற்
றைமட்டும் எடுத்துக்கொள்ளுவோம். அந்தத் தனிப்பட்ட காற்றை
மட்டும் நாம் உட்கொள்ளவுமில்லை, வெளிவிடவுமில்லை யென்பதும்
ஊகித்துணரின் விளங்கும். இந்தக் காற்றில் தண்ணீரும் கலந்துள்ள

தென்பது தெரிந்ததே. இதன் உண்மை, நாம் மூச்சுவிடும் காற்றை ஒரு கற்பலகையில் படும்படி செய்வதால், அதில் ஈரம் உண்டாகிறது; அதனால் அதில் தண்ணீர் கலந்திருக்கிறதென்னும் உண்மை விளங்கும். இதிலிருந்தே நாம் உட்கொள்ளும் காற்றிலும் தண்ணீர் கலந்தேயிருக்கிறதென்பதும், தண்ணீரின் சம்பந்தம் உட்கொள்ளும் காற்றுக்கும் அவசியம் என்பதும் விளங்கும்.

இரண்டாவதாக தண்ணீரை எடுத்துக் கொள்ளுவோம். பலவித நதிகளிலும் குளங்களிலும் ஸ்நானம் செய்தல் மிக சிரேஷ்டமென்று முன்னோர்கள் ஏற்படுத்தியிருப்பதும், ஒவ்வொவ்வொரு இடத்திலுள்ள ஜலமும் ஒவ்வொரு குணமுள்ளதென்று கூறியிருப்பதும், அவ்வொவ்வொரு வகை ஜலத்திலும் ஒவ்வொரு குணமுள்ள தாதுப் பொருள்கள் சேர்ந்திருப்பதும் உண்மையாகும். எங்கெங்கிருக்கும் ஜலமெல்லாம் ஓரே வகையேயெனின், ஓரிடத்து ஜலத்தையே உபயோகித்துக்கொண்டிருந்தவர்கள், மற்றோர் புதிய இடத்து ஜலத்தை உபயோகப்படுத்தின், தமது தேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்கின்றனர். காரணமென்ன? அவ்வவ்விடத்திலுள்ள தண்ணீரில் கலந்துள்ள, அவ்வவ்விடத்திலுள்ள தாதுப் பொருள்களின் குணங்களேயாம். ஆகவே, நாம் உட்கொள்ளும் தண்ணீரில் தாதுப் பொருள்கள் கலந்தேயிருக்கின்றனவென்பதும் விளங்கும். ஆங்காங்கு சீதோஷ்ணத்திற்குத் தகுந்தவாறு அமைந்திருக்கும் தாதுப் பொருள்கள் கலவாதிருப்பின், சீதோஷணத்திற்கும் தண்ணீருக்கும் மாறுதலுண்டாகி—சம்பந்தாசம்பந்தமில்லாது கெடுதியை விளைவிக்குமென்றும் ஊகிக்கலாம்.

மூன்றாவதாக ஆகாரத்தை எடுத்துக்கொள்ளுவோம். அன்னத்தை மட்டும் இலையில் வட்டித்து அருந்தச் சொன்னால் அருந்துவோருண்டா? அதற்குக் கலப்பு வஸ்துவாகக் குழம்போ, ரஸமோ, தயிர் மோரோ ஏதோ ஒன்றேனும் அவசியம் வேண்டியிருக்கிறது. இவைகளிலொன்றிருப்பினும், அதற்கும் ஓர் பதார்த்தமாவது வேண்டியிருக்கிறது. இல்லையேல் இந்நா அவ்வன்னத்தை அருந்துதற்கு ஏற்றுக்கொள்ள மிக்க ஆட்சேபம் செய்கின்றது—கஷ்டப்படுகின்றது—முணுமுணுக்கின்றது.



இப்போது கூறியுள்ளவைகளைப்போல், நாம் நமது சிறு குழந்தைகட்குப் போதிக்கும் பாடங்களும் அவர்கட்கு அவ்விதந்தானே இருக்குமென்பதை நாம் முதலில் உணரவேண்டும். உணர்ந்த பின், ஒவ்வொரு உரைப் பாடத்தையும், அதற்கு மட்டுமுள்ள விஷயத்தை ஏதோ, 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது' போல் இல்லாமல், ஏறத் தாழ—முதன் முதல் ஆரம்பித்த பாடத்தை அனுசரித்ததாகவே மற்றைய பாடங்களையும் நாம் நமது ஆகாரத்திற்கு, ஏதேதற்குப் புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு முதலியவற்றைத் தகுந்தவாறு சம்பந்தப்படுத்துகிறோமோ, அவ்விதம் சம்பந்தப்படுத்திப் போதித்தாலே, நமது நாவில் அத்தகைய ஆகாரங்கள் செல்வதுபோல், மாணவர்களின் மனமாகிய நாவிலும், நாம் உண்பிக்கும் பாடங்களாகிய ஆகாரங்கள் செல்லுமென்பதைக் கவனித்தல் அத்தியாவசியமாகும்.

உதாரணமாக, முதல்முதலில் காலையில் வந்தவுடன் வாசக பாடம் ஆரம்பிக்கிறோமென்று வைத்துக்கொள்வோம். அதில், நமது அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களாகிய கனம் எஸ். ஜீ. டானியேல், பீ. ஏ. அவர்களின் மூன்றாம் புத்தகத்தில் 13-ம் பாடமாகிய "புத்தி சாலிப் பையன்" என்ற பாடத்தை நடத்தியதாக வைத்துக்கொள்வோம். அதற்கு அடுத்து நடத்தவேண்டிய பாடங்களாகிய (முறையே):

1. பார்த்தெழுதல் (நோட்டில்).—அப்பாடத்தில் உள்ள சில வரிகளைப் பார்த்து எழுதச் செய்தல்.
2. சொல்வதெழுதல் (நோட்டில்).—படித்துப் பார்த்ததும் எழுதினதும் ஞாபகமிருக்கிறதாவெனப் பரீக்ஷிக்கிறதற்காகவும், பார்த்து எழுதினதையே-சொல்லி எழுதச் செய்யல்.
3. பொது அறிவு.—சர்க்கரை உண்டாக்கிய கரும்பைப்பற்றி.
4. இயற்கையறிவு.—தராசின் விட்டம், தட்டு ஆகியவையின் இரும்பு, பித்தளை உலோகங்கள்.
5. சுகாதாரம்.—தராசு, சர்க்கரை வைத்திருக்கும் பாத்திரம், கடைக்காரன், கடை இவற்றின் சுத்தம்.

6. அரசியல்.—அளவுகளைக் கவனிக்கவேண்டிய (கிராம) அதிகாரி.

7. கணிதம்.—(1) ஒரு வீசை சர்க்கரை 12-அணா வீதம், ஒரு வியாபாரி 28 வீசை வாங்கினால் எத்தனை அணா கொடுக்கவேண்டும்?

(2) ஒரு வீசை 40-பலமென்றால் 9-வீசைக்கு எத்தனை பலமிருக்கும்?

(3) 160-வீசையுள்ள ஒரு பெரிய எடை சர்க்கரையை மொத்தமாக வாங்கி 8-பேர் எடுத்துக் கொண்டால், ஆளுக்கு எத்தனை வீசை வரும்?

[முதலியபல.

8. சித்திரம்.—தராசு, (கரும்பும் சர்க்கரை செய்யவேண்டிய உபகரணங்களும்).

9. கிண்டர்கார்ட்டன் தொழில்கள்.—குச்சிவைத்தல்-தராசு.

ஆக இவ்விதமாகவே நாம் நடத்தினால் எல்லாப்பாடங்களின் பொருள்களும் ஒரே * கதை அல்லது பாடத்தின் சம்பந்தமாகவே வருதல் பிள்ளைகட்கு ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு பாடம் ஆரம்பிக்கும்போதும், சம்பந்தப்பட்ட பொருள், முதற்பாடமாகிய வாசகத்தின் சம்பந்தமென்பதை நாம் குழந்தைகட்கு உணர்த்தித்—தெரிவித்துக்கொண்டே போவோமாயின், பிள்ளைகளுக்குண்டாகும் குதூகலத்தைக் கூறுவதற்கு முடியாததாயிருக்குமென்பது எனது அநுபவமாகும்.

* குறிப்பு:—சம்பந்தப்படுத்தும் பாடங்கட்கு, மூலாதாரமாயுள்ள பாடத்தை முதன்முதலில் நடத்தவேண்டியது அவசியம். மூலாதாரமான பாடம், ஒரு நாளின் மத்தியிலிருக்குமாயின், அப்பாடத்திற்கு முந்திய பாடங்கட்குச் சம்பந்தமில்லாது போகிறது. சம்பந்தப்படும்படியாகக் கிரமப்படுத்திக்கொண்டாலும், பிள்ளைகட்கு சம்பந்தா சம்பந்தம் தெரியாதும்போய்விடும். அதனால் உற்சாகமில்லாதும் போய்விடும். பின்னால் வரும் பாடத்தின் சம்பந்தமென்றால், பின்னால் வருவதின் முழு தாற்பர்யமும் முன்னால் தெரிவதற்கில்லை. தெரியாமற்போமாயின், முன் கூறியதுபோல் உற்சாகமும், பாடத்தில்



ஊக்கமும் கவனமும் இல்லாதுபோகும். சம்பந்தப்படுத்துதலிலும் அர்த்தமேயில்லை.

ஆகவே, மூலாதாரமான பாடம் முதலில் நடத்தவேண்டுமாதலால், சிலர் கதையை மூலாதாரமாகக்கொள்ளுகின்றனர். முதலில் அதாவது: ஒரு தினத்தில் பாடங்கள் நடத்த ஆரம்பிக்கும் ஆரம்பத்தில் பிள்ளைகட்கு, அவர்களின் புத்தி சுறுசுறுப்பாயிருக்கும் காலை நேரத்தில்—முதல் மணியில் முக்கியமான தமிழ் (வாசகபாடம்), கணிதம் நடத்தவேண்டுமாதலால், கதையை நடத்துதல் உசிதமாயிராதென்று எண்ணுகின்றேன்.

ஆகையால், முதன்முதலில் வாசகபாடத்தையே நடத்துவது உசிதமாதலால், அதை மூலாதாரமாய்—அதன் சம்பந்தமாகவே மற்றப் பாடங்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்துதல் உசிதத்திலும் உசிதமென்பதும் உணரக்கூடியது.

வாசக பாடத்துடனேயே மற்றப் பாடங்களையும் சம்பந்தப்படுத்திப் போதிக்கும்போது அப்பாடங்கள், வரிசைப்படுத்தியிருக்கும் பாடக்கிரமத்தின், வரிசைக்கிரமமாக ஒத்துவராதென்பதும், முன் பின்னாகவே போதிக்க நேருமாதலால், பாடக்கிரமத்தின்படி போதிப்பதற்கு முரணாக ஏற்படுமென்பதும் விளங்கும்.

ஆகவே, சம்பந்தப்படுத்திப் போதித்தலைப் பாடக்கிரமத்திற்கும், பாடக்கிரமத்தை—சம்பந்தப்படுத்திப் போதிப்பதற்கும் இணங்க நடத்துவதும் இயலாத விஷயமென்பதும் உணரக்கூடியது. இவ்விரு வகையில் 'மத்தளத்திற்கு இருபுறமும் இடி' என்பதைப்போல், ஆசிரியர்கள் பரீக்ஷாதிகாரிகளின் தனிப்பட்ட முறைகளால் அவர்களின் அதிகாரத்தில் இடிபடுவதும்—பட நேருவதும் ஆச்சரியமாகாது.

இக்குறிப்பு, உபாத்திமார் சங்கத்தில் வாசித்த இவ்வியாசத்தை நமது பூங்கொத்துக்கு அனுப்ப எழுதுங்கால் தனியாக எழுதிச் சேர்க்கப்பட்டதாகும்.

P. பரிமணப்பல்லவராயர்,
ஆரம்ப ஆசிரியர்.

## II. கணக்குப்பாடத்தில் பாடக்குறிப்பு.

(1)

**நோக்கம்** :— எண்களின் பாதி, கால் கண்டுபிடிக்கும் அறிவை அவை மான கடைக்கணக்குகள் செய்வதில் பிரயோகித்தல்.

**உபகரணங்கள்** :—1 சாண் ஸ்கேல், 1 முழ ஸ்கேல், 1 கெஜக்கோல், பட்டுக்கயிறு, துணி, மாத்துண்டு.

**முன்னறிவு** :—1 முதல் 200 வரையிலுள்ள எண்களின் பாதி, கால் கண்டுபிடித்தல். (கேள்விகள் மூலமாய் ஞாபகப்படுத்தல்.)

**புதியவறிவு** :—(1) சாண், முழம், கெஜம் இவைகளின் அபிப்பிராயம். (ஷை ஸ்கேல்களைக் காட்டிக் கற்பித்தல்.)

(2) அளவைகளின் சம்மந்தம்.

| | |
|---|---|
| 2 சாண் = 1 முழம். | 1 சாண் = $\frac{1}{4}$ கெஜம். |
| 2 முழம் = 1 கெஜம். | 1 முழம் = $\frac{1}{2}$ கெஜம். |
| 4 சாண் 1 கெஜம். | |

(கேள்விகள் கேட்டு விளக்கியபின் கரும்பலகையில் எழுதல்.)

(3) முன்னறிவையும் புதிய அறிவையும் சேர்த்து உபயோகிக்கக்கூடிய விடுக்கணக்குகள்.

**உதாரணம்** :—(*a*) 1 கெஜம் துணி 8 அணா வீதம் 1 முழத்துணி விலையென்ன?

(1 முழம்-1கெஜத்தில் பாதி; 8 அணாவில் பாதி-4 அணா)

(*b*) 1 கெஜம் பட்டுக்கயிறு 2 அணா வீதம் 1 சாண் கயிறு விலையென்ன?

(1 கெஜத்தில் பாதி-1 முழம்; 1 முழத்தில் பாதி-1 சாண்.)
(2 அணாவில் பாதி-1 அணா; 1 அணாவில் பாதி-அரையணா.)

(*c*) 1 முழம் மாத்துண்டு 2 அணா வீதம் 1 சாண் மாத்துண்டு விலையென்ன? 1 கெஜம் மாத்துண்டு விலையென்ன?

(1 முழத்தில் பாதி-1 சாண்; 2 அணாவில் பாதி-1 அணா முழத்தின் இருமடங்கு 1 கெஜம்; 2 அணாவின் இருமடங்கு 4 அணா.)

(*d*) 12 அணாவுக்கு 1 கெஜம் துணியென்றால் 1 சாண் துணி விலையென்ன?

(1 கெஜத்தில் கால்-1 சாண்; 12 அணாவில் கால்-3 அணா.)

(*e*) 8 அணாவுக்கு 1 கெஜம் மாத்துண்டு; 1 முழம் விலையென்ன?

(1 கெஜத்தில் பாதி- 1 முழம்; 8 அணாவில்பாதி-4 அணா.)

K. ஆரோக்கியசாமி.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

Registered No. M. 1534

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி

திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா நபாய் 1.

| கொத்து 11. | ஜூலை 1921. | மலர் 1. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்னை ஆரம்பப் படிப்புச் சட்டத்தின் முக்கிய சாராம்சம் என்னவெனில், இதுவரையில் ஆரம்பப்படிப்பு விஷயமாய் கல்வி இலாகாத் தலைவர் வகித்துவந்த அதிகாரம், அந்தந்த ஜில்லாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்

விச்சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் பரீக்ஷாதிகாரிகள் கல்வி இலாகாத் தலைவரோடு நடத்திவந்த காரியாதிகளை இனி அந்தந்தக் கல்விச்சங்கங்களோடு நடத்திவருவார்கள். புதுப்பள்ளிக்கூடங்களை அங்கீகரிப்பது, உபகாரச் சம்பளம் நிர்ணயிப்பது, பகிர்ந்துகொடுப்பது முதலிய அலுவல்கள் இனிக் கல்விச்சங்கங்களைப் பொருத்தது.

* * *

சென்ற மார்ச்சுமாதத்தில் சென்னை இராஜதானியில் பொறுக்கியெடுக்கப்பட்ட அங்கத்தினர் கூடிய கூட்டத்தில் ஆரம்பப் படிப்புச் சட்டத்தையொட்டியதாய்த் தீர்மானித்த புது ஒழுங்குகள் வெளிவந்திருக்கிறது. ஆனால் இவ்வொழுங்குகள் இன்னும் சர்க்கார் அங்கீகாரம் பெறவில்லை; பெற்று வெளிவந்தபின் அவைகளை விவரமாய் ஆராய்வோம்.

* * *

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஆண்பிள்ளைகள் வாசிக்கும் ஆரம்பப் பாடசாலைகளில் சென்ற மூன்று வருஷங்களில் படித்துவந்த மாணவரின் தொகை பின்வருமாறு:—

| வகுப்பு. | 1918-ம௵. | 1919-ம௵. | 1920-ம௵. |
|---|---|---|---|
| I. | 23,311 | 20,753 | 21,220 |
| II. | 11,131 | 9,722 | 9,449 |
| III. | 8,658 | 7,601 | 7,090 |
| IV. | 6,784 | 5,840 | 5,714 |
| V. | 1,647 | 1,319 | 1,303 |
| VI. | 180 | 153 | 212 |
| VII. | 62 | 70 | 68 |
| VIII. | 30 | 26 | 18 |
| மொத்தம். | 51,803 | 45,484 | 45,074 |



இத்தொகைகளை ஷை ஜில்லாவின் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் அவர்கள் பிரசுரித்திருக்கிறார்கள்; இதிலிருந்து, உபகாரச் சம்பளம் கொடுப்பதில் உபாத்திமாரின் தொகையைமாத்திரம் கவனிப்பது ஆரம்பப் படிப்பு பரவுவதற்கு உதவியாகாதென யூகிக்கலாமா? மற்ற ஜில்லாக்களிலும் இந்த மூன்று வருஷங்களில் மாணவரின் தொகை அதிகப்பட்டிருக்கிறதா குறைந்திருக்கிறதா என்பதை அறிய ஆசிக்கிறோம்.

* * *

சுய ஆட்சி சுய ஆட்சி என்று எங்கும் சப்திக்கும் இக்காலத்தில் நமது சிறுவர்களுக்குத் தொழிற் படிப்பு முக்கியமா? நற்குணப் பயிற்சி முக்கியமா? எதைப்பற்றி ஆரம்பப்பாடசாலைகளில் அதிகமாய்க் கவனிக்கத்தகும்? சுய ஆட்சியென்றால் நம் இஷ்டப்படி செய்யும் சுதந்தரமல்ல, நாம் செய்யவேண்டியதை விக்கினமின்றிச் செய்வதற்கான சுதந்தரம் என்பது நமது சிறுவர்கள் மனதில் உறுத்தும்படி பிரயாசிக்கவேண்டும். இப்படி வற்புறுத்தப்பட்டால் நமது சிறுவர்களால் நமது தேசத்து நன்மை பலுகிப் பெருகும். அப்படியில்லாவிடில், வெறும் யந்திரங்களே மலியும்; தங்களைத்தானே ஆண்டு நடத்தச் சக்தியற்ற யந்திரங்களால் தேசத்துக்கு என்ன நன்மை?

* * *

சென்ற ஜூன் மாதம் முடிய, நமது பூக்கொத்தின் வரவைவிட ரூ. 90-6-3 செலவு ஜாஸ்தியாயிருக்கிறது. இந்த ஜூலை மாதத்தில் ரூ. 9 மாத்திரம் வசூலாயிருக்கிறது. இதை நமது சந்தா நேயர்களும் முக்கியமாய் நமது பழைய மாணவரும் கவனிப்பார்களா? சந்தாதார் தங்கள் சந்தாவை முன்பணமாய் அனுப்பிக்கொள்ளும்படியாகவும், இன்னும் அநேக சந்தாதாரர்களைப் புதிதாய்ச் சேர்க்கப் பிரயாசப்படும்படியாகவும் மிகவாய் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

## நமது தேசத்து ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிர்த்தி.

தற்காலத்தில் நமது தேசத்தில் ஆரம்பப் படிப்பு விர்த்தியைப்பற்றி எவரும் பேசுவார்கள். ஆனால் ஆரம்பப் படிப்பு என்றால் இன்னதென்று சற்று சாவதானமாய் யோசித்து அறிந்தவர்கள் எத்தனைபேர்! ஆரம்பப் படிப்பைப் பற்றி எவரும் பேசினாலும், அதிகமாய்ப் பேசுபவர்கள் ஆரம்பப் பாடசாலைகளில் கற்பிக்கும் உபாத்திமார்தான். இவர்களுக்காவது ஆரம்பப் படிப்பு என்றால் இன்னதென்று தெரியுமா? சிலர் தங்கள் சம்பள உயர்வைப்பற்றி வெகு சாதுரியமாய் வாயாடுவார்கள்; ஆனால் தங்கள் தொழிலின் மேன்மை இத்தன்மைத்து என்பதைச் சரியாய் உணரார்கள்; அத்தொழிலை ஏற்றுக் கொண்டதால் தங்களுக்கு ஏற்பட்ட உத்தரவாதத்தையோ முற்றிலும் மறந்துவிடுவார்கள்.

இத்தகைய உபாத்திமார் வெகு சொற்பந்தான் என்று வைத்துக்கொண்டாலும், ஆரம்பப் படிப்பின் நோக்கத்தைச் சிறிது ஆராய்வது சகலருக்கும் உபயோகமாயிருக்கலாம்.

ஆரம்பப் படிப்பின் நோக்கம் வேறே, உயர்தரப் படிப்பின் நோக்கம் வேறே என்று சொல்வதற்கில்லை. இரண்டுவிதப் படிப்பும் மாணாக்கர் மனித ஜீவியத்தை மனிதத்தனமாய் ஜீவிப்பதற்கு உதவியாக ஏற்பட்டவை. ஆனால் உயர்தரப் படிப்பு முடிந்தவுடனே மாணாக்கர் அனைவோரும பள்ளிக்கூட ஜீவியத்தை விட்டு உலக ஜீவியம் ஜீவிக்கத் தொடங்குவார்கள். ஆரம்பப் படிப்பு முடிந்தவுடனே மற்றத்தேசங்களில் அநேகமாய் மாணாக்கர் தங்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ளுவா எனினும் நமது தேசத்திலோ இப்படி மேற்கொள்ளுவது நிச்சயமில்லை. மற்றத் தேசங்களில பலவிதத் தொழில்கள் அபிவிர்த்தி பெற்று நடந்தேறிவருவதால் அந்தந்தத் தொழிலைச் சிறுவர்கள் அல்லது அவர்களுடைய பெற்றோர்



முன்னதாகவே தெரிந்துகொண்டு தாங்கள் தெரிந்துகொண்டதற்குத் தகுந்தபடி ஆரம்பப் பாடசாலைக்கோ, உயர்தரப் பாடசாலைக்கோ போய் அந்தந்தப் பாடசாலைகளில் படிப்பை முடித்தவுடனே உலக ஜீவியத்தில் பிரவேசிக்கிறார்கள். நமது தேசத்திலோ ஆரம்பப் பாடசாலைக்குப் போகிறவர்களெல்லாம் ஒருவிதத் தொழிலுக்கும் உயர்தரப் பாடசாலைக்குப் போகிறவர்கள் வேறுவிதத் தொழிலுக்கும் ஏற்கனவே குறிக்கப்பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. சிலர் ஆரம்பப் படிப்பை முடித்தபின்தான் தாங்கள் உயர்தரப் பாடசாலைக்குப் போகலாமா என்பதைப்பற்றி நினைப்பார்கள்; வேறு சிலர் உயர்தரப் பாடசாலையில படிக்கத் துவக்கினாலும் இடையில் அதை விட்டு உயர்தரப் படிப்புத் தேவையில்லாத கலைகளில் காலங்கழிப்பார்கள். இப்படியெல்லாம் சம்பவிப்பதற்கு நமது தேசத்துத் தற்கால நிலைமையே இடங்கொடுக்கிறது.

ஆதலால் இன்னும் சில காலம் வரையில் ஆரம்ப உபாத்திமாரின் நோக்கம் இரு பிரிவு உள்ளதாயிருக்கும்; தங்களிடம பயிலும் மாணவர் சாதாரண ஜீவியத்தை உடனே கைக்கொள்ள அல்லது உயர்தரப் படிப்பை எளிதாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டிய சக்தியை விர்த்தி செய்ய முயலுவதே உபாத்திமாருடைய வேலை.

இப்பேர்ப்பட்ட சக்தியை விர்த்தி செய்வதற்கு வழிபாடு யாது? இக்காலத்தில் அநேகர் சாதிப்பதுபோல், யாதொரு தொழிலுக்கு அவசியமான கண்பழக்கமும் கைப்பழக்கமும் உண்டாக்கக்கூடிய அப்பியாசங்களை மாத்திரம் மாணவர் அநுஷ்டிக்கப் பண்ணுவதல்ல; ஆனால எத்தொழிலுக்கும் எப்படிப்புக்கும் அவசியமான புத்தியைத் தட்டி எழுப்பி வேலை செய்யப் பண்ணுவதே. ஆகவே கண்பழக்கமும் கைப்பழக்கமும் வருவிக்கக்கூடிய அப்பியாசங்களிலே முதலாய் சிறுவர்கள் தங்கள் சொந்தப்புத்தியைப் பிரயோகிக்கும்படி அவர்களைத் தூண்டுவதே உபாத்திமாரின் கருத்தாயிருக்கவேண்டும். புத்தி

யைப் பிரயோகிக்காத யந்திரங்கள்போல் சிறுவர்களைப் பயிற்றுவது சிறுவர்களுக்குச் சிறுதுகாலம் பயன்படுவதாகத் தோன்றினும், முடிவில் அதனால் அவர்களுக்கும் நன்மை வராது, தேச விர்த்திக்கும் அது ஏதுவாயிராது.

சுயபுத்தியைப் பிரயோகிக்கக் கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் யாதொரு தொழிலைத் துவக்கவாவது மேல் படிப்புக்குப் போகவாவது அருகர்கள் ஆவார்கள். ஆரம்பப் படிப்பின் நோக்கம நிறைவேறும் பொருட்டு என்னென்ன விஷயங்கள் கற்றுக்கொடுப்பது நல்லது? சென்னை ஆரம்பப் படிப்புச் சட்டத்தை ஒட்டினதாய் நூதனமாய் ஏற்படுத்திய ஒழுங்கில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது:—

“ஆரம்பப்படிப்பு என்றால் யாதொரு சுதேச பாஷையில் வாசித்தல், எழுதல், கணிதம், சித்திரம், இயற்கைப் பாடம், தேகாப்பியாசமும், பெண்களுக்குத் தையல் வேலையும் கற்றுககொடுப்பதே. இவைகளைத்தவிர நகவழி, பிரதமசிக்ஷை, பூகோளம், தேச சரித்திரம், துரைத்தன விளக்கம், ஆங்கிலபாஷை, தொழில் அநுபோகம, முதலியவற்றையும் சேர்த்துக் கற்பிக்கலாம்”

இதில் குறித்த விஷயங்கள் சகலமும் ஆரம்பப் பாடசாலைகளில் கற்பிக்கத்தகுந்ததே. ஆனால் எல்லாவற்றையும் எல்லா உபாத்திமாரும் எல்லாப்பிள்ளைகளுக்கும் கற்பித்தல் யுக்தமுமன்று, சாத்தியமுமன்று. பல காரியங்களை அறிவதினாலே மாத்திரம் புத்தி விர்த்தியடைவதில்லை; அன்றியும் காரியத்தை ஆழ்ந்து யோசித்தால்தான் புத்தி விர்த்தியாகும. ஆகையால் சிறுவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்கும் விஷயத்தைவிட அதைக் கற்றுக்கொடுக்கும் விதமே நன்மையை அல்லது தின்மையை விளைவிக்கும். “கீழ்வகுப்புகளில் ‘கிண்டர் கார்ட்டன்’ முறையை அநுசரித்துப் போதிக்கவேண்டும்” என்று மேற்கண்ட ஒழுங்கில் சொல்லியிருக்கிறது. சகல வகுப்புகளிலும் பிள்ளைகள் தங்கள் தத்துவங்களைச்



சரியாய்ப் பிரயோகிக்கப் பண்ணக்கூடிய விதமாய்ப் போதிக்கவேண்டும்.

கற்பிக்கும் விஷயமும், கற்பிக்கும் முறையும் சிறுவர்களை மேல்படிப்புக்கு அல்லது தொழில் அநுஷ்டானத்துக்கு அருகர்களாக்கவேண்டும். ஆகவே நமது தேசத்தில் தற்காலத்தில் “எலிமெண்டரி” பாடசாலைகளுக்கும் “செக்கண்டரி” பாடசாலைகளின் கீழ் வகுப்புகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு விதப் பாடசாலையிலிருந்து மற்றொருவிதப் பாடசாலையில் வருத்தமின்றி பிள்ளைகள் சேரக்கூடியதாயிருக்கவேண்டும். இருவிதப்பாடசாலைப் படிப்புகளையும் இடையொன்று நிறுத்திவிட்டாலும் சிறுவர்கள் யாதொரு தொழிலை அநுஷ்டிக்கக் கூடியதாயுமிருக்கவேண்டும்.

இப்படியிருக்கவேண்டுமானால், பிள்ளைகள் தங்கள் சுய பாஷையை நன்றாய் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதும, சாதாரண கணித விதிகளை அறிந்து அப்பியாசித்திருப்பதும், சொற்ப பொது அறிவும, கொஞ்சம் கைப்பழக்கமும் தேவை; இத்தோடு இங்கிலீஷ் பாஷையும் துவக்கியிருப்பதும் அவசியம.

இந்த விஷயங்களைப்பற்றிய பாடக்கிரமங்கள் அநேகம் வழங்கி வருகின்றன. ஆனால் பாடக்கிரமங்களுக்கு இசைவாய்ப் பாடங்களும் நடத்தவேண்டும். வெகு திறமை வாய்ந்த ஆசிரியர் பிறர் உதவியில்லாமலே ஷை பாடங்களை நடத்துவார்கள். ஆனால் சாதாரண உபாத்திமார் யாதொரு புத்தகத்தை ஆதாரமாகக்கொண்டே பாடம் நடத்தக்கூடும்; இதற்கேற்ற புத்தகங்கள் அநேகமில்லாவிடினும் கொஞ்சமாவது இருக்கின்றன. ஒவ்வொரு உபாத்திமாரும் தங்கள் அநுபோகத்தில் அறிந்த சிற்சில புத்தகங்களைப்பற்றிய குறிப்புகள் எழுதியனுப்புவார்களானால் ஏனைய உபாத்திமாருக்குப் பிரயோசனமாகி நமது தேசத்தில் ஆரம்பப் படிப்பு விர்த்தியாக ஏதுவாகும.

## கூட்டுறவுச் சங்கத்தைப்பற்றிய வினாவிடைகள்.

[ஆரம்பப்பாடசாலைச் சிறுவர்கள் பள்ளிக்கூடம் விடுமுன் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிய சில விவரங்களைப் பொதுவாய் அறிந்திருப்பது பிரயோசனமாயிருக்கும்; சில உபாத்திமாரும் இக்கூட்டங்களின் காரியதரிசிகளாகவோ வேறு உத்தியோகஸ்தர்களாகவோ உழைத்து வருகிறார்கள். உபாத்திமாருக்கும் மாணவருக்கும் உதவியாக சென்னை பப்ளிசிட்டி பீரோவால் வெளிப்படுத்தப்பட்ட வினாவிடைகளைப் பிரசுரிக்கிறோம். பத்திராதிபர்.]

(1) கேள்வி:—கூட்டுறவுச் சங்கங்களை ஸர்க்கார் ஏற்படுத்துவதின் நோக்கம் என்ன?

பதில்:—கூட்டுறவுச்சங்கங்களை சர்க்கார் ஏற்படுத்துவதின் நோக்கமாவது, ஜனங்களுக்கு நன்மை செய்வதே. கூட்டுறவுச் சங்கங்களாலே, ஜனங்களுக்கு ஏழ்மைத் தன்மை நீங்கி, பணம் அதிகரித்து, அவர்கள் காரியங்களைச் செவ்வையாயும் புத்திசாலித்தனமாயும் பார்த்துக்கொள்ளச் சாதகம் ஏற்படும் என்று ஸர்க்கார் நினைக்கின்றனர்.

(2) கேள்வி:—கூட்டுறவுச்சங்க இலாகா (கோவாபரேடிவ் டிபார்டுமெண்டு) விற்குச் செலவிடப்படும் பணம் ஸர்க்காருக்கு எப்படிக் கிடைக்கின்றது?

பதில்:—ஜனங்கள் கட்டும் வரியிலிருந்துதான், அவ்விலாகா செலவிற்குப் பணம் கிடைப்பது.

(3) கேள்வி:—கோவாபரேடிவ் இலாகா விஷயமாய் ஸர்க்கார் செலவிடும் பணத்தினாலே ஸர்க்காருக்கு ஏதாகிலும் ஆதாயமுண்டா?

பதில்:—கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஸர்க்காருக்கு வரும்படி ஒன்றும் இல்லை.

(4) கேள்வி:—அப்படியானால் ஸர்க்கார் தற்காலத்தில் கோவாபரேடிவ் இலாகா விஷயமாய் ஆயிரக்கணக்காய்ச் செலவிடும் தொகை வியர்த்தமாகவா போய்விடுகிறது? ஒரு பலனும் கிடையாதா?



பதில்:—கோவாபரேடிவ் இலாகா விஷயமாய்ச் செலவிடப்படும் பணம் வியர்த்தமில்லை. ஏனென்றால், கோவாபரேடிவ் இலாகா உத்தியோகஸ்தர்கள், ஜனங்களை ஏழ்மைத்தனமிராமலிருந்துவரவும், தங்கள் காரியங்களைச் செவ்வையாகவும், புத்திசாலித்தனமாகவும் செய்துகொண்டு, ஏழ்மைத்தன்மை நீங்கி, பணக்காரர்களாகச் செய்துவிடப் பிரயத்தனப்படுகிறார்கள். இக்காரணம் பற்றியே, ஜனங்களின் நன்மையை உத்தேசித்து, (கோவாபரேடிவ்) கூட்டுறவுச் சங்கங்களை ஜனங்கள் எப்படி ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும் என்றும், அவைகளை எப்படி பராமரித்துவர வேண்டுமென்றும் ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டுவது அவசியம் என்று ஸர்க்காரும் ஜனங்களும் தெரிந்துகொண்டு, ஜனங்களிடமிருந்து வசூலாகும் வரிப்பணத்தைச் செலவிடுகின்றனர்.

(5) கேள்வி:—கூட்டுறவுச்சங்கத்தில் மெம்பர் ஆவதினாலே, அம்மெம்பர்களுக்கு என்ன என்ன சுவதந்திரமும் ஹக்கும் உண்டு?

பதில்:—கூட்டுறவுச்சங்கத்தில் மெம்பராயிருக்கும் ஒவ்வொருவரும், அச்சங்கம் கூடும்போதெல்லாம், சங்கத்தைப்பற்றிய விஷயங்களை எடுத்துப்பேச அதிகாரம் உண்டு. வருஷத்திற்கு ஒரு தடவைக்குக் குறையாமல் கூட்டுறவுச் சங்கங்கள் மகாஸபை ஒன்று கூட்டவேண்டுவது அவசியம். அச்சபைகளில் மெம்பர்கள் சங்கம் நிர்வாகசபையார் செய்திருக்கப்பட்ட காரியங்களைப் பரிசீலனை செய்து, சங்கத்தைப் பரிபாலித்துவரத் தகுந்த பஞ்சாயத்தார்களைத் தேர் தெடுத்து நேமிக்க அதிகாரம், மெம்பர்களுக்கு உண்டு. இதர மெம் பர்கள் ஒருவரை நிர்வாகஸபைக்கு பஞ்சாயத்துதாரராகக் கோரிக் கொண்டால், அவர் அப்படி பஞ்சாயத்தாராக வரலாம். கூட்டுறவுச் சங்கத்தினாலே என்ன பலன் கிடைக்குமோ, அந்த பலனை மெம்பர்கள் அனுபவிக்க பாத்தியம் உண்டு. கூட்டுறவுச் சங்கத்திற்கு வரும் ஆதாயத்திலும் ஒவ்வொரு மெம்பருக்கும் வீதம் கிடைக்கும். இவ் வகையான அதிகாரங்கள் இருப்பதும் தவிர, கூட்டுறவுச்சங்கத்து மெம்பர்கள் செய்யவேண்டிய கடமைகளும் சில உண்டு. கூட்டுற வுச் சங்கத்தை நிர்வகித்துவரும் பஞ்சாயத்தார்கள் சரிவரச் சங் கத்தை நடத்திவராமல், சங்கத்திற்கு நஷ்டம் உண்டாக்கிவிட்டால்,

சங்கத்தில் மெம்பராயிருக்கப்பட்ட ஒவ்வொரு மெம்பரும் அப்படி உண்டாகும் நஷ்டத்தை ஈடு பண்ணிக்கொடுக்கக் கடமைப்பட்டவர். ஆனால், கூட்டுறவுச்சங்கங்களில் நஷ்டம் ஏற்படுவது வெகு அபூர்வம். இந்த ராஜதானியில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தின நாள் முதல் இதுவரையில் ஒருவித நஷ்டமும் நேர்ந்திருப்பதில்லை. கூட்டுறவுச் சங்கத்திற்கு மெம்பராயிருக்கப்பட்டவர்கள், சங்கத்தை நிர்வகித்து வரத் தகுந்தபடி யோக்கியமான பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுப்பார்களேயாகில், அச்சங்கத்திற்கு நஷ்டம் உண்டாகாது என்று திடமாய் நம்பியிருக்கலாம்.

(6) **கேள்வி**:—கூட்டுறவுச் சங்கம் என்ன காரணங்களினாலே அபிவிருத்தியடைய இடமுண்டு? எந்த காரணங்களினாலே அச்சங்கம் அழிந்துபோகும்?

**பதில்**:— கூட்டுறவுச்சங்கத்தின் மெம்பர்கள், சங்கத்தை அபிவிருத்திசெய்ய சிரமமெடுப்பவர்களாயிருந்து, விவேகம் பொருந்தி, நாணயம் வாய்ந்து, சுயநலம் கருதாமல் இருந்து வருவார்களாகில், அவர்கள் சங்கம் அபிவிருத்தியடையும். அப்படியன்றி, அம்மெம்பர்கள் சோம்பேறித்தனம் மிகுந்து, நாணயமின்றி, சுயநலம் கருதி, விவேகமின்றி சங்கத்தை நடத்திவருவார்களாகில், அவர்கள் சங்கம் மேலோங்காமல் அழிந்துபோம்.

(7) **கேள்வி**:—கூட்டுறவுச்சங்கங்களில் மெம்பர்களாலேயும், மெம்பர்களல்லாத இதரர்களாலேயும் போடப்படும் "டெபாஸிட்டு" பணங்களை வாபசு செய்ய யார் உத்தரவாதிகள்? அப்படி டெபாஸிட்டாக வைக்கப்படும் பணம் எப்பொழுதாகிலும் திருப்பி வாங்க முடியாமல் நஷ்டமாய்ப் போய்விடுமோ?

**பதில்**:—டெபாஸிட் தொகைகளை வாபசு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கமே பொதுவாய்க் கடமைப்பட்டிருப்பது. டெபாஸிட்டுத் தொகைகள் திருப்பி வாங்கமுடியாமல் ஒருபொழுதும் நஷ்டமாகமாட்டாது, ஏனென்றால் வருஷாவருஷம் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஏற்படும் லாபத்திலே பாதித்தொகை அச்சங்கத்



திற்கு காப்புதனமாக (ரிசர்வு பண்டாக) ஒதுக்கிவைக்கப்பட்டுவருகின்றது. ஆகவே, கொஞ்சம் வருஷங்களுக்குள்ளேயே, காப்புதனம் இப்படி அதிகரித்து பெருந்தொகையாய்ச் சேர்ந்துவிடும். சங்கத்திற்கு ஏதாகிலும் நஷ்டம் நேர்ந்துவிட்டால் இந்தக் காப்புதனத்திலிருந்து நஷ்டத்தை ஈடுபண்ணிக்கொள்ள டெபாஸிட் செய்யும் ஒவ்வொருவருக்கும் பாத்தியமுண்டு. இந்தக் காப்புதனத்திலிருந்து டெபாஸிட்டுத் தொகையை ஈடுபண்ணுவதற்குப் போதாமல் நஷ்டம் ஏராளமாயிருந்துவிட்டால் அப்படிப் போதாமல், போகும்தொகையைச் சங்கத்தின் மெம்பர்கள் யாவரும் ஈடுபண்ணிக்கொடுக்க வேண்டியது மெம்பர்களின் கடமையாகும். ஒரு கூட்டுறவுச்சங்கத்தில் எவ்வளவு ஜாஸ்தியாய் டெபாஸிட்டாய் பணம்போடலாமோ அது சங்கத்திற்குள்ள பணத்தைக்காட்டிலும் ஒருபொழுதும் அதிகமாய் இருக்க முடியாது. எப்பொழுதும் டெபாஸிட்டு செய்யப்படும் தொகை சங்க ஸொத்தைவிட மிகக் குறைவாகவே இருக்கும். சங்கம் கடன்வாங்குவதாயிருந்தாலும், அப்படிக் கடன்வாங்கும் தொகையும் சங்கத்திற்கு இருக்கப்பட்ட பூரா ஸொத்தைவிட மிகக் குறைவாகவே இருக்கும். ஆகையினாலே டெபாஸிட் தொகைக்கு ஒருநாளும் மோசம்வராது என்று டெபாஸிட்டு செய்பவர்கள் நிச்சயமாய் நம்பி இருக்கலாம். தவிரவும், எப்பொழுதும் டெபாஸிட்டுத் தொகையை வாங்கமுடியும். தவிரவும், கோவாபரேடிவ் இலாகா உத்தியோகஸ்தர்கள் டெபாஸிட்டு செய்பவர்களை, சில்லரையாய் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில், தங்கள் பணத்தை டெபாஸிட்டாய் வைக்கும்படிச் சொல்லுவதில்லை. கூட்டுறவுச் சங்கத்திற்கெல்லாம் அதிகாரியாயிருக்கும் "கூட்டுறவு ஸெண்டிரல் பாங்கிலேயே" டெபாஸிட்டு செய்யும்படி யுக்தி சொல்லிக்கொடுக்கின்றனர். இந்த ஸெண்டிரல் பாங்கிகளிலிருந்துதான் சில்லரையாய் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வாங்குகின்றன. ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, சில்லரைச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதாயிருந்தால், சங்கத்தின் பூரா ஸொத்தின் பொறுமானத்திற்கு மிகக் குறைவாகத்தான் கடன் கொடுபட்டுவருகிறதே தவிர, ஏராளமாய் அச்சங்கங்களுக்கு கடன் கொடுப்பதில்லை. ஆகையினாலே, கடன் வாங்கியிருக்கும் சங்கங்களிலிருந்து, கடனைத்திரும்பி வசூல் செய்வது சிரமமில்லை. ஆனதுபற்றி, டெபாஸிட்டாய் போடப்பட்டிருக்கும் தொகை

களைத் திருப்பிக்கொடுப்பதில் ஒரு கஷ்டமும் கிடையாது. டிபாஸிட் தொகை மோசம்போகாமல் திருப்பி வாங்கிவிடமுடியும் என்பதை நிச்சயமாய்ச் சொல்லலாம்.

(8) **கேள்வி:**—கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்படுமானால், அந்த நஷ்டத்தை ஈடுபண்ணுவது சங்கத்தின் மெம்பர்களுடைய கடமை என்றால், அச்சங்கத்திற்கு ஒருவர் மெம்பராதல் அபாயகரமானதல்லவோ?

பதில்:—இல்லவே இல்லை. கூட்டுறவுச்சங்கத்தின் மெம்பர்கள், அச்சங்கத்தைப் பரிபாலித்துவரத் தகுந்தபடி யோக்கியமான பஞ்சாயத்தார்களை நேமிப்பார்களாகில், அவர்களுடைய சங்கத்திற்கு பிரமாத நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. இந்த ராஜதானியில் இதுவரையில் அப்படி பெருத்த நஷ்டமும் நேர்ந்துவிடவில்லை. கூட்டுறவுச் சங்கத்திற்கு மெம்பர்களாயிருப்பவர்கள்தான், பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். எவரெவர்கள் யோக்கியமாய்ச் சங்கத்தை நடத்தி, சங்கத்திற்கு நஷ்டம் உண்டாகாமல் பரிபாலித்து வரக்கூடியவர்களோ அவர்களையே பஞ்சாயத்தார்களாக நேமிக்கவேண்டியது மெம்பர்களின் பொறுப்பு. மேலும் கோவாபரேடிவ் இலாகாவைச் சேர்ந்த பரிசோதகர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அடிக்கடி பரிசோதனை செய்கின்றனர். அவர்கள், வேண்டும்போதெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர நடைபெறும்படி ஆலோசனை சொல்ல எப்பொழுதும் தயாராக இருக்கின்றனர். தவிரவும், ஒரு தாலூகாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவையும் ஒருங்கு சேர்ந்து ஐக்கிய பந்தமாய் ஒரு "யூனியன்" என்கிற ஐக்கியச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, தாலூகாவிலுள்ள சங்கங்களையெல்லாம் மேல் பரிசோதனை செய்துவர, "ஸூபர்வைஸர்கள்" என்னும் பரிசோதகர்களை அவ் ஐக்கிய சங்கத்தின் மூலமாய் ஏற்படுத்தி, அப்பரிசோதகர்களைவிட்டு, தாலூகாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குவழக்குகளைப் பரிசோதித்துப் பார்க்கச் சொல்லி, தப்புக்கள் வராமல் காத்துக்கொள்ளும்படிக்கும், தப்புக்கள் நடந்துவிட்டால் அவைகளைத் திருத்தி, இனிமேல் அப்பிசகுகள் ஏற்படாமல் ஜாக்கிரதை செய்யும்படிக்கும் ஏற்பாடு செய்யக்கூடும்.

(இன்னும் வரும்.)



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

## I. கணக்குப்பாடத்தில் பாடக்குறிப்பு.

(2)

**நோக்கம்:**—சாண், முழம் இவைகளின் சம்மந்தமாய் கடைக்கணக்குகள் கற்பித்தல்.

**உபகரணம்:**—கெஜக்கோல், நாடா, கயிறு, எந்திரம் முதலியன.

**முன்னறிவு:**—சாண், முழம், கெஜம் இவைகளை எவ்வகையில் உபயோகிப்பது. (கேள்வி மூலமாய் விளக்குதல்).

**புதிய அறிவு:**—(1) சாண், முழம், கெஜம் இவற்றின் அபிப்பிராயம். (ஒவ்வொரு பிள்ளைகளின் சாணையும் முழத்தையும் காட்டச்செய்து, கெஜக்கோலையும் காட்டுக).

(2) மேற்கண்டவைகளின் சம்மந்தம்.

2 சாண் = 1 முழம்.

2 முழம் = 1 கெஜம்.

(கெஜக்கோலைக்கொடுத்து அளந்துபார்க்கச்செய்து விளக்குதல்).

(3) முன்னறிவையும் புதிய அறிவையும் சேர்த்து உபயோகிக்கக்கூடிய சுலபமான கடைக்கணக்குகள்.

(a) 4 கெஜம் பட்டின் விலை 16 ரூ. 1 சாண் பட்டின் விலை எவ்வளவு? (4 கெஜம் = 8 முழம்.)

4 கெஜம் அல்லது 8 முழம் = 16 சாண்.

4 கெஜம் அல்லது 16 சாண் பட்டின் விலை = 16 ரூ.

∴ 1 சாண் பட்டின் விலை = ரூ. 16 ÷ 16 = (ரூ. 1.)

(b) 1 சாண் மல் 4 அணா, 3 கெஜம் மல் விலையென்ன?

(3 கெஜம் = 12 சாண்,
16 அணா = 1 ரூ.
1 சாண் மல் விலை = 4 அணா.
3 கெஜம் அல்லது 12 சாண் = 4 அணா × 12
(= ரூ. 3.)

(c) 1 சாண் பட்டுக்கயிறு 1 அணா. 2 முழம் 1 சாண் விலையென்ன?

(2 முழம், ஒரு சாண் = 5 சாண்.
1 சாண் பட்டுக்கயிறு விலை = 1 அணா.
2 முழம், ஒரு சாண் அல்லது 5 சாண் = 1 அணா × 5
(= 5 அணா.)

(d) 1 முழம் நாடா 2 அணா; 8 முழம் 1 சாண் விலை என்ன?

(8 முழம், 1 சாண் = 17 சாண்.)
1 முழம் நாடா விலை = 2 அணா.
8 முழம் நாடா விலை = 8 × 2 அணா = 16 அணா = 1 ரூ.
1 முழம் = 2 சாண்.
½ முழம் = 1 சாண் = 2 அணா ÷ 2 = 1 அணா.
∴ 8 முழம், 1 சாண் விலை = ரூ. 1—1—0

(e) 6 கெஜம், 1 முழப் பட்டின் விலை ரூ. 26. 1 முழப் பட்டின் விலையென்ன?

(6 கெஜம், 1 முழம் = 13 முழம்
13 முழப் பட்டின் விலை = ரூ. 26.
∴ 1 முழம் ,, ,, = ரூ. 26 ÷ 13 = ரூ. 2.

*N. B.*—மேற்கண்ட விஷயங்கள் ஒவ்வொன்றையும் பிரித்துப் பிரித்து விளக்கிக் கரும்பலகையில் எழுதுக.

A. அருலமாதன்.



## II. கதையும் பாட்டும்.

பிரிய நேயர்களே, கீழ் வருபனவற்றை எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு எடுத்துக்காட்டியும், ஒரு கதையைத் தெரிந்தெடுத்து அதைப் பாட்டாகப்பாடியும், எழுதத்துணிந்தேன். இதில் குற்றங் குறைகளிருப்பினும் நேயர்கள் பொறுத்தருள்வீர்களாக.

### 1. கீழ்தர பாடசாலைகளில் கதையும் பாட்டும் ஒரு பாடமாக ஏற்பட்டிருப்பதின் நோக்கம் என்ன?

1. சிறுவர்களை சந்தோஷிப்பிப்பதே முதல் நோக்கமாம்.
2. சிறுவர்களுக்குக் கதை கேட்பதிலும் பாட்டு கேட்பதிலும் தாங்களே பாடுவதிலும் ஆசை. அதை நிவர்த்திசெய்கிறது.
3. சிறுவர்களுக்கு உற்சாகத்தையும், சன்மார்க்கத்தையும், ஊட்டுகிறது.
4. புத்தியையும் யோசனைசக்தியையும் விருத்திபண்ணுகிறது.
5. பிள்ளைகளின் கவனசக்தியையும் ஞாபகசக்தியையும் விருத்தி செய்கிறது.
6. சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயரை பிள்ளைகள் நேசிக்கும்படி ஏற்படுகிறது.

மேற்கண்ட நோக்கங்கள் நிவர்த்தியாவதற்காகவே கதைப் பாட்டை ஓர் பாடமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

### 2. கதை.

தெய்வமிகமேழல்.

அரியபுரம் என்ற ஊரில் கந்தசாமி என்று ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவர் ஒரு நாள் அதிகப் பணமெடுத்துக்கொண்டு பிரயாணம் செய்யும்போது, ஒரு காட்டு வழி போக நேரிட்டது. அவ்விடத்தில் அதிக மழை பெய்யவே, அதனால் அவர் உடைகளெல்லாம் நனைந்து போனதால் கடவுளை நிந்திக்கலானார். "ஆ! கடவுளே! உமக்குக் கண்ணில்லையா? நான் படும் கஷ்டம் தெரியவில்லையா? மழையை நிறுத்தக் கூடாதா? உம்மை ஜீவகாருண்ணியமுள்ளவனென்று சொல்லுகிறார்களே. இது பொய்தானே" என்று சொல்லிக்கொண்டு போகும்போது, கள்ளனொருவன் திடீரென்றெழுந்து வெடியால் சுட்டான். வெடி எழும்பவில்லை. கந்தசாமி குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் சென்றார். பிறகு "ஆ! கடவுளை நாம் நொந்துகொண்டோமே. மழை பெய்ததினாலல்லவா வெடி எழும்பவில்லை! அதனாலல்லவா நம் உயிரும் பணமும் தப்பினோம்?" என்று உணர்ந்து அன்று முதல் கடவுளை பயபக்தியோடு வணங்கி வந்தான்.

## 3. பாட்டு.

('எல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்னும் மெட்டு.)

1. அரிய புரம் என்ற ஊரில்
அன்பான கந்தசாமி
ஆஸ்திக்காரன் என்று அவன்
ஆண்டு வந்தான் பூமி.

2. இரண்டுபணம் எடுத்து அவன்
செல்லுகையில் வழியில்
காடு ஒன்று குறுகியங்கு
கடுமழை பொழிய.

3. கடவுளையவன் நொந்துகொண்டு
காட்டுவழி செல்ல,
காத்திருக்கும் கள்ளனவன்
கண்டு கொண்டான்பாரும்.

4. விரைந்துசென்ற கந்தன்தனை,
வெடியால் சுடவே,
மழையினால் வெடியது
மங்கிப் போகவே.

5. இரும்புபோல வேந்தனவன்
தாவியை நடத்தி
மழை பெய்ததால், கடவுளை நாம்
நொந்து கொண்டோமே.

6. மாரி பொழியா விட்டால்
மாண்டிருப்போமே,
என்று அவன் எண்ணி எண்ணி
கடவுள் வழி பட்டான்.

7. ஆகையினால் பிள்ளைகளே
அகங்காரம் கொள்ளாமல்,
தெய்வசிகமேல் என்றும் செய்புவி
என்றும் கவனிப்போம்.

இங்ஙனம்.
பழைய மாணவர்களில் ஒருவராகிய
M. சவரிமுத்து,
தாட்டன்பட்டி.

26-5-21.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

1151

17 SEP 1921
J. M.

Registered No. M. 1534.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனை விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 11. | ஆகஸ்டு 1921. | மலர் 2. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

சர்க்கார் பள்ளிக்கூடங்களைவிட சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களுக்கு மொத்தத்தில் செலவாகும் பணத் தொகை குறைந்தேயிருக்கிறதாம்; இதனால் சர்க்கார் ஆட்களில் சிலர் பொறாமை கொள்கிறார்களாம். ஆனால் சர்க்

கார் பள்ளிக்கூடங்களைவிட சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் அநேகமாய் வெகு நன்றாய் நடைபெற்று வருவதில்லையா? இவைகளுக்காக சர்க்கார் கையைப் பொறுத்த பணம் எவ்வளவு சொற்பம்! இப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடங்களை அதிகப்படுத்த முயலுவதால் சர்க்காருக்குப் பண லாபமேயொழிய நஷ்டமில்லை; படிப்பு விர்த்திக்கும் அநுகூலமேயொழிய பிரதிகூலமில்லை. அப்படியானால் இவைகளைப்பற்றிப் பொறாமை கொள்பவர்கள் வாஸ்தவத்தில் தேசாபிமானிகளா???

சீன தேசத்தில் போக்கின் மாகாணத்தைச் சேர்ந்த கத்தோலிக்குப் பாடசாலைகளைச் சர்க்கார் பாடசாலைகளாகப் பாவித்து அவைகளை நடத்தும் குருவானவருக்குச் சர்க்கார் அதிகாரிகளின் சுதந்தரமெல்லாம் கொடுக்கப்பட்டிருப்பதாக வதந்தி. தேச நன்மைக்குச் சாதனமாகிய இப்பெருந்தன்மை நம்மவர்களிடத்தில் எப்போது உதிக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

1919-20-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் அதிகப்பட்ட

| | | |
|---|---|---|
| காலேஜுகள் | ... | 7 |
| உயர்தரப் பாடசாலைகள் | ... | 127 |
| நடுத்தரப் பாடசாலைகள் | ... | 415 |
| ஆரம்பப் பாடசாலைகள் | ... | 5073 |
| விசேஷ பாடசாலைகள் | ... | 389 |
| அதிகப்பட்ட மாணவரின் தொகை | ... | 269,648. |
| அதிகப்பட்ட செலவு | ரூ. | 1,90,33,887 |
| இதில் மாகாணப் பணத்திலிருந்து | ரூ. | 88,36,604 |
| ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து | ரூ. | 39,00,776 |
| சம்பள வாயிலாக | ரூ. | 14,14,755 |
| இதர வருமானத்தால் | ரூ. | 48,81,952 |

இந்த இதர வருமானத்தை அதிகரிப்பதற்காக பரோபகார சிந்தையுள்ள இந்தியரில் அநேகர் முன்னுக்கு வந்தால் தேசத்துக்கு எவ்வளவு நன்மை!

* * *



பூங்கொத்துச் சந்தாதார்களில் 1921—22-ம் வருஷச் சந்தாவை இன்னும் செலுத்தாதவர்கள் அதைக் கூடிய சீக்கிரம் முன்பணமாக அனுப்பிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அல்லது V. P. வழியாகப் பத்திரிகை பெற்றுக்கொள்வார்களா?

* * *

இந்த வருஷம் மார்ச்சு மாதம் நடந்த உபாத்திமைப் பரீட்சைக்கு புதுமாணவர்களாக நமது பாடசாலையிலிருந்து போனவர்கள் 52 பேர்; இவர்களில் 32 பேர் மாத்திரம் தேர்ச்சியடைந்தார்கள். இவ்வளவு கேவலமான தொகையைப்பற்றி இந்த மாணவர்களை அறிந்த எவரும் ஆச்சரியப்படமாட்டார்கள். முந்திய வருஷங்களிலெல்லாம் ஏறக்குறைய எல்லாரும் தேர்ச்சியடைந்ததால், இந்த மாணவர்கள் தாங்கள் உழைத்தாலும் உழைக்காவிட்டாலும் தேர்ச்சியடையலாமென்று எண்ணினவர்கள்போல் தோன்றினார்கள். இதைப்பற்றித் தலைமை ஆசிரியர் அடிக்கடி எச்சரித்து வந்தார். சொந்த உழைப்பே காரிய சித்திக்கு முக்கிய சாதனமென்பதை இந்தப் பரீட்சை திருஷ்டாந்தமாய்க் காட்டிவிட்டது.

* * *

## கூட்டுறவுச் சங்கத்தைப்பற்றிய வினாவிடைகள்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

(9) **கேள்வி:**—கூட்டுறவுச் சங்கங்களாகிற கோவாபரேடிவ் செண்டரல் பாங்கிகளிலும், கூட்டுறவு சம்பந்தமில்லாத ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளிலும், ஜனங்கள் டெபாஸிட்டாக பணம் போட்டுவருகின்றனரே. இவ்விரண்டு வகை பாங்கிகளில், எந்த பாங்கியில் பணத்தை டெபாஸிட்டு செய்வது நல்லது? என்ன காரணத்தினாலே?

**பதில்:**—ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கிகளில் சில நல்லது. சில நல்லதில்லை. அதைப்போல, கோவாபரேடிவ் சங்கங்களிலும் நல்

லவை சில, கெட்டவையும் சில; ஆகிலும், கோவாபரேடிவ் ஸம்பந்தமான ஸெண்டிரல் பாங்கிகளில் பணத்தை டெபாஸிட் செய்வது ஒரு விதத்தில் நல்லது. ஏனென்றால், இந்த கோவாபரேடிவ் ஸெண்டிரல் பாங்கிகள், கூட்டுறவுச் சங்கங்களுக்கன்றி வேறொருவருக்கும் கடன் கொடுப்பதே இல்லை. மேலும், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதிலும், ஒவ்வொரு சங்கத்திற்கும் பூரா ஸொத்தின் பொறுமானத்திற்கு வெகுக் குறைவான தொகைதான் கடனாகக் கொடுபடவேண்டும் என்கிற ஒரு விதியும் உண்டு. அப்படிக் குறைவாய்க் கடன் கொடுப்பதிலும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் மெம்பர்களும், சங்கத்திற்காக வாங்கப்படும் கடன் தொகையைத் திருப்பிக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடனைத் திருப்பி வசூல் செய்வதில் ஒரு காலதிலும் சிரமமே கிடையாது. ஆகையினாலே, கோவாபரேடிவ் ஸெண்டிரல் பாங்கிகளில் டெபாஸிட்டாய் போடப்படும் பணத்தைத் திருப்பிவாங்குவதில் சிரமமில்லை. பணத்திற்கு மோசமுமில்லை.

**(10) கேள்வி:—கூட்டுறவுச் சங்கங்களை நிர்வாகம் செய்ய நேமிக்கப்படும் பஞ்சாயத்தார்கள் ஒன்றாய்க்கூடி சங்கத்தின் பணத்தை துர்விநியோகப்படுத்தி சங்கத்தை மோசம் செய்துவிட்டால், அவர்கள் செய்யும் மோசத்தைக் கண்டுபிடிப்பது எப்படி? அவர்களைத் தகுந்தபடி தண்டிப்பதும் எப்படி?**

**பதில்:**—கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பராயிருப்பவர்கள் தான் முதல் முதலில் அச்சங்கத்தைப் பரிபாலித்துவர, யோக்கியமான பஞ்சாயத்தார்களையே தேர்ந்தெடுக்கவேண்டுவது அவசியமான காரியம். ஒரு கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கத்தின் மெம்பர்கள் அநேகமாய் அந்தக் கிராமத்தார்களே. ஆகையால், எவர்கள் யோக்கியமானவர்கள், எவர்கள் அயோக்கியர்கள் என்பது கிராமத்து மெம்பர்களுக்குத் தெரியும். ஆகையினாலே அந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பஞ்சாயத்தார்களை யோக்கியமானபடி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கவேண்டுவது முதலில் செய்யவேண்டிய காரியம். இதற்கு அடுத்தபடியாய் மெம்பர்கள் செய்யவேண்டுவது யாதெனில், வருஷப் பிரதிவருஷம் நடக்கவேண்டிய சங்கத்தின் மீட்டிங்குகளில், சங்கத்தை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்தார்கள் என்ன என்ன காரியங்கள் நடத்திவந்திருக்கின்றனர் என்று மெம்பர்கள் கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். இதுவும்தவிர, ஸர்க்காராலே நியமிக்கப்பட்ட கோவாப்ரேடிவ்இலாகா இன்ஸ்பெக்டர்களும், கோவாபரேடிவ் யூனியனைச் சேர்ந்த ஸுபர்வைஸர்களும், கோவாபரேடிவ் சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் செய்யும் காரியங்களைப் பரிசோதனை செய்துவருகின்றனர். இப்படிப் பரிசோதனை செய்வதினாலே, பஞ்சாயத்தார்கள் கூட்டுறவுச் சங்கத்தின் பணத்தை மோசம் செய்வதாய் ஏற்பட்டுவிட்டால், அப்பஞ்சாயத்தார்களைக்கொண்டே மோசம் செய்யப்பட்ட பணத்தை ஈடுபண்ணிவிடும்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும், கோவாபரேடிவ் யூனியனைச் சேர்ந்த தலைவர்களும் ஏற்பாடு செய்துவிடுவார்கள். இது முடியாமற்போய்விட்டால், பஞ்சாயத்தார் பேரில் கோர்ட்டு மூலமாய் நடவடிக்கை நடத்தி சங்கத்தின் பணத்தை வசூல்செய்துவிடக்கூடும்.



**(11) கேள்வி:—ஒரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன் வாங்கினவர்களிடமிருந்து கடன் தொகையைத் திருப்பி வசூல் செய்வது எப்படி?**

**பதில்:**—கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன் கொடுப்பதாயிருந்தால, எவர் எவர் நாணயஸ்தர்களோ, எவர் எவர்கள், நல்ல காரியங்களுக்குக் கடன்வாங்கி, அதை பாடுபட்டுத் திருப்பிக்கொடுக்க முயலுபவர்களோ, அவர்களுக்குத்தான் கடன்கொடுக்க வேண்டுவது பஞ்சாயத்தார்களின் முதல் கடமையாகும். இப்படி யோக்கியமாய்ப் பாடுபட்டு வேலை செய்துவரும் யோக்கியர்கள் கடன் வாங்கிக்கொண்டால், அவர்கள் எந்தத்தேதியில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமோ, அந்தத்தேதியில் அநேகமாய் தாங்கள் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். கடன் வாங்கினவர்கள் குறித்த தினத்தில் வாங்கின கடனைத் திருப்பிக்கொடாமல் ஆலசியம் செய்துவந்தால், பஞ்சாயத்தார்களும், கூட்டுறவு ஐக்கியச் சங்கத்தின் பரிசோதகர்களும், ஸர்க்காராலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர்களும், கடன்வாங்கி திருப்பிக்கொடுக்க ஆலசியம் செய்து

வருபவர்களைச் சீக்கிரம் வாங்கின கடனைத் திருப்பிக்கொடுத்துவிடும்படித் தூண்டுகோல் போட்டுவருவார்கள். இப்படித் தூண்டுகோல் போட்டும் வாங்கின கடனைத் திருப்பிக்கொடாமற்போனால், கடன் வாங்கினவர்பேரில் ஸிவில் கோர்ட்டில் வியாச்சியம் செய்தாவது கடனைத் திருப்பி வசூல் செய்துவிடலாம். அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரியான கோவாபரேடிவ் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் அவர்கள் மத்தியஸ்தம்செய்து கடனை வசூல் செய்துகொடுக்கும்படி மனு செய்துகொள்ளலாம். அப்படி மத்தியஸ்தம் செய்ய மனுசெய்து கொண்டால் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்தரார் செய்யும் உத்தரவை ஸிவில் கோர்ட்டுகளில் நிறைவேற்றிவிடலாம். அல்லது சில ஸந்தர்ப்பங்களில் ரிவினியூ இலாகா உத்தியோகஸ்தர்கள்கூட நிறைவேற்றிப் பணத்தை வசூல் செய்துவிடலாம்.

(12) **கேள்வி:—கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுத்துவருவதைத் தவிர, இன்னம் என்ன காரியங்கள் செய்துவருகின்றன?**

பதில்:—கூட்டுறவுச் சங்கங்கள், மெம்பர்களுக்கு, அநேகவித சாதகங்களைச் செய்துவரவேண்டுமென்கிற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, சில ஜனங்களுக்குக் கடனாகப் பணம் தேவையாயிருந்தால், அவர்கள் எல்லாரும் ஐக்கியமாய்ச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்திக்கொண்டு, அச்சங்கத்தின் மூலமாய், சங்கத்தின் மெம்பர்களுக்குப் பிரத்தியேகமாய் வேண்டியிருக்கும் கடன் தொகையைப் பூராவாக மொத்தமாய்க் கடன் வாங்கிக்கொண்டு, அத்தொகையிலிருந்து மெம்பர்களுக்குத் தனித்தனியே கடன்கொடுக்க ஏற்பாடு செய்துகொள்ளுவதானால், அக்கூட்டுறவுச் சங்கத்திற்கு வேண்டிய தொகை தாழ்ந்த வட்டிக்கு ஸாலமாய்க் கிடைக்கக்கூடும். அப்படிக் கிடைக்கும் தொகையை, சங்கத்தின் மெம்பர்களுக்குத் தாழ்ந்த வட்டிக்கு ஸாலமாய்க் கொடுக்கக்கூடும். இப்படி இவ்விராஜதானியில் நடந்துவருகிறது இப்பொழுது ஸகஜமாயிருக்கிறது. இந்தமாதிரியாகவே, இன்னம் சில ஜனங்களுக்கு எருவுக்காகப் பிண்ணாக்காவது மீன் எருவாவது வாங்கவேண்டுமென்று பிரியப்பட்டால், அவர்கள் ஒருங்குசேர்ந்து



ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, அச்சங்கத்தின் மூலமாய்த் தங்களுக்கு வேண்டிய எரு வகைகளைத் தருவித்துக்கொள்வதானால், அவர்களுக்கு உயர்ந்த எருவை, அக்கம்பக்கத்தைவிடக் குறைந்த விலைக்கு மொத்தமாய் வாங்கிக்கொண்டு, அதைத் தனித்தனியே ஒவ்வொரு மெம்பரும் பங்கிட்டுக்கொள்ளலாம். கூட்டுறவுச் சங்கமில்லாமல் ஒவ்வொருவனும் தனித்தனியாய் வாங்குவதற்குச் செலவாகும் பணத்தைவிட, குறைந்த விலைக்கு, கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாய் மொத்தமாய் வாங்கிப் பங்கிட்டுக்கொள்ளுதல் லாபகரமாயிருந்துவருகிறது என்பதும் தெரியவந்திருக்கிறது. இம்மாதிரி, பட்டணங்களிலுள்ள ஜனங்கள் ஒருங்குசேர்ந்து கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தித் தங்களுக்கு வேண்டிய அரிசி, சர்க்கரை, முதலான இதர சாமான்களை அச்சங்கத்தின் மூலமாய் மொத்தமாய் வாங்கிக்கொண்டு, அவைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளுவது லாபகரமாகவே இருக்கிறது. இதுவும் தவிர, நெல், பருத்தி, நிலக்கடலை முதலிய சரக்குகளை விற்பனை செய்யவேண்டியிருந்தால், அச்சரக்குகளை வைத்திருக்கும் ஒவ்வொருவனும் தனித்தனியே தன் தன் சரக்கை விற்பதைக்காட்டிலும், எல்லாரும் ஒருங்கு சேர்ந்து, கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, அச்சங்கத்தின் மூலமாய்த் தங்கள் சரக்குகளை விற்கும் பக்ஷத்தில், ஏககாலத்தில் ஏராளமான சரக்கு விற்றமுதலாகி, அதிக லாபமும் கிடைத்துவரக்கூடும். மேலும், விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளையும் இன்னம் விலை அதிகமாயுள்ள இதர என்ஜின் முதலிய கருவிகளையும் வாங்கவேண்டுமானால், ஜனங்கள் ஒருங்கு சேர்ந்து, கூட்டுறவுச்சங்கமாகி, அதன்மூலமாய் விலையுயர்ந்த மேற்படி சாமான்களைத் தருவிப்பதே லாபகரமாயிருந்து வருகிறது என்பதை ஜனங்கள் தெரிந்துகொண்டிருக்கின்றனர். இப்படி விலைபெற்ற என்ஜின் முதலிய கருவிகளை வாங்குவதினாலே, அக்கருவிகள் சங்கத்திற்குச் சொந்தமானவைகளாகின்றன. ஒரு மெம்பரும், அவைகள் பிரத்தியேகமாய்த் தன்னுடையது என்று சொல்லமுடியாது. சங்கத்தின் மெம்பர்களுக்குத் தேவையானபோது, சௌகரியப்படி, மெம்பர்கள் அக்கருவிகளை உபயோகப்படுத்திக்கொள்ளும்படி வாடகைக்குவிட்டு, பணம் வசூல் செய்துகொள்ளக்கூடும். அப்படிச் செய்வதினாலே, சங்கத்தின் மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் அக்கருவிகள் உபயோகமாகிவரும். இப்படி நடந்துகொள்ளாமற் போனால்,

பிரத்தியேகமாய் ஒவ்வொரு நபரும் விலை உயர்ந்த மேற்படி கருவிகளை வாங்கி உபயோகிப்பது அசாத்தியமான காரியமாகும்.

கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும் சாதகங்கள் இன்னமும் உண்டு. சில தேசங்களில் ஜனங்கள் ஒன்றுய்க்கூடி கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய சாமான்களை அத்தொழிற்சாலைகளில் உண்டாக்கிக்கொள்ளுகின்றனர். அதுவும் தவிர தாங்கள் செய்யும் சாமான்களை விற்பனைக்கும் அனுப்புகின்றனர். இவ்விதமாக, ஒரு கிராமத்திலுள்ள குடியானவர்கள் ஒருங்குசேர்ந்து, பருத்திக்கொட்டை எடுக்கும் இயந்திரம் ஒன்றை யாவது, நெல் குத்துவதற்கு உபயோகமான நெல் மெஷினையாவது வாங்கி, தங்கள் பருத்தியைக் கொட்டை எடுத்தும், நெல்லைக்குத்தி அரிசியாக்கியும் வியாபாரத்திற்கு அனுப்பக்கூடும். இப்படிக்குத்தான், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நீடாமங்கலம் என்னும் ஊரில் குடித்தனக்காரர்கள் ஒருங்கு சேர்ந்து, எலும்பைப் பொடியாக்கும் இயந்திரம் ஒன்று வாங்கிக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய எலும்பு எருவை, அவ்வியந்திரத்தினுல் உண்டாக்கிக்கொள்ளுகின்றனர். ஆகவே, இந்த இராஜதானியில், ஜனங்களுக்குப் பணம் கடன் கொடுப்பதற்குமாத்திரமன்று, மேற்சொல்லியபடி இன்னம் அநேகம் விஷயங்களுக்குச் சாதகமாகும்படி, கூட்டுறவுச் சங்கங்கள் அநேகம் புதிது புதிதாய் ஏற்பட்டுவருகின்றன. இப்படி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டு வருவதினுலே, குடித்தனக்காரர்களுக்கும், கூலிவேலை செய்து பிழைப்பவர்களுக்கும் ஏராளமாய் லாபம் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும், அச்சங்கங்களால் சென்னையில் செய்து வந்திருக்கப்பட்ட காரியங்களைப் பற்றியும், இன்னம் ஏதாகிலும் இதர விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமானுல், கூட்டுறவுச் சங்கங்கள் விஷயமான ஸமாச்சாரங்களை எல்லாம் விளக்கி, கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் அவர்கள் இங்கிலீஷிலும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய இதர பாஷைகளிலும் ஒரு புஸ்தகம் சமீபத்தில் பிரசுரம் செய்யப் போகிறுர். ஒரு புஸ்தகத்தின் விலை ஐந்து அணுதான். அந்தப் புஸ்தகம் உமக்கு ஒன்று வேண்டுவதானுல்,



சென்னை, எழும்பூர், கம்மாண்டர்-இன்-சீவ் ரோட்டிலிருக்கும் விக்டோரியா பில்டிங்ஸில் உள்ள பப்ளிஸிடி பீரோவிற்கு எழுதிக்கொள்ளவும். புஸ்தகம் அச்சுப்போட்டுப் பிரசுரமானதும், உமக்கு ஒரு காப்பி வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

---

## சிறியவோர் கதை.

முத்தம்மாள் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி ஓர் மரத்தடியில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். திடீரென்று ஏதோ ஒரு சப்தம் கேட்டதால் சற்றே பராமுகமாகித் திரும்பிப் பார்க்கையில் முத்துமாலையைக் காணும். எங்கும் பார்த்தாள்; கையால் மணலைக் கிள்றினுள்; அரிப்புக்கொண்டுவந்து அரித்தாள். பாதி நாள் தேடியும் மாலை அகப்படவில்லை. என்ன மாயமாய் மறைந்தது?

ஒருவாரம் கழிந்தது. அவளுடைய தமையன் முத்துசாமி ஓர் அணிலைப் பிடிப்பதற்காக மரத்தின்மேல் ஏறினுன். அங்கே இலையடர்ந்த ஓர் கிளையில் ஏதோ ஜொலித்துக் கொண்டிருந்தது. கிளையை அசைத்தான். பொத்தென்று ஏதோ முத்தம்மாள் பாதத்தில் விழுந்தது. முத்தம்மாள் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தாள். தமையன் கீழே இறங்கினுன். அவனுக்குப் பின்னுல் அணில்பிள்ளையொன்று துள்ளிக்கொண்டு வந்து முத்தம்மாள் கையிலிருந்த முத்துமாலையை இரண்டொரு நிமிஷம் கவனமாய் நோக்கிக் கொண்டே நின்றபின் திரும்பவும் மரத்தில் குதித்தது.

"ஆ!" இந்த அணில்தான் முத்துமாலையைத் திருடியிருக்கவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே முத்துசாமி அணிலுக்குப் பின்னுல் மரத்தில் தாவினுன்.

"ஐயோ பாவம்! விட்டு விடு. என்னுடைய மாலை ஓர் நூதன பழத்தின் கொட்டைகளென்று அந்த அணில் நினைத்திருக்கவேண்டும்!" என்றுள் முத்தம்மாள்.

---

## விசித்திரக் கணிதம்.

### A

$1 \times 8 + 1 = 9$

$12 \times 8 + 2 = 98$

$123 \times 8 + 3 = 987$

$1234 \times 8 + 4 = 9876$

$12345 \times 8 + 5 = 98765$

$123456 \times 8 + 6 = 987654$

$1234567 \times 8 + 7 = 9876543$

$12345678 \times 8 + 8 = 98765432$

$123456789 \times 8 + 9 = 987654321$

### B

$1 \times 9 + 2 = 11$

$12 \times 9 + 3 = 111$

$123 \times 9 + 4 = 1111$

$1234 \times 9 + 5 = 11111$

$12345 \times 9 + 6 = 111111$

$123456 \times 9 + 7 = 1111111$

$1234567 \times 9 + 8 = 11111111$

$12345678 \times 9 + 9 = 111111111$

$123456789 \times 9 + 10 = 1111111111$

### C

$9 \times 9 + 7 = 88$

$98 \times 9 + 6 = 888$

$987 \times 9 + 5 = 8888$

$9876 \times 9 + 4 = 88888$

$98765 \times 9 + 3 = 888888$

$987654 \times 9 + 2 = 8888888$

$9876543 \times 9 + 1 = 88888888$

$98765432 \times 9 + 0 = 888888888$



## பூகோளப்பாட சம்பந்தமான சில தப்பெண்ணங்கள்.

(1) ஒரு பிரதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியை அறிவதென்றால், அத்தேசத்தில் ஆகாயம் வெப்பமுள்ளதா குளிர்ந்ததா என்று தெரிந்துகொண்டால் போதும் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் சீதோஷ்ண ஸ்திதியைச் சரியாய் அறியவேண்டுமானால் ஆகாயத்தின் வெப்பம் அல்லது குளிர்ச்சியை மாத்திரம் அளப்பது போதாது; ஆகாயத்தின் அமுக்கையும், அதில் அடங்கிய ஈரத்தையும், பெய்யும் மழையையும், அடிக்கும் வெயிலையும், நடமாடும் காற்றையும் கவனிக்கத்தகும்.

(2) காற்று எதனால் உண்டாகிறது? உஷ்ணமான ஆகாயம் மேலே எழும்பும்போது குளிர்ந்த ஆகாயம் காலியான இடத்தை அடைக்கத்தேடுவதால் உண்டாகிறதென்று நினைப்பார் சிலர். ஆனால் உஷ்ணமான ஆகாயம் ஏன் எழும்பவேண்டும்? ஆகாயம் உஷ்ணம் அடையும்போது அதன் அமுக்குக் குறைகிறது; அதைச் சுற்றியுள்ள ஆகாயத்தின் அமுக்கு உஷ்ணமான ஆகாயத்தின் அமுக்கைவிட அதிகப் பலமானதால் உஷ்ணமான ஆகாயத்தை நாலாபக்கத்திலும் தள்ளுகிறது. குளிர்ந்த ஆகாயம் செய்யும் இச்செய்கையைத்தான் நாம் காற்று என்று உணருகிறோம்.

(3) மலைப்பிரதேசங்களில் காற்றடிக்கும் பக்கத்தில் மற்றப் பக்கத்தைவிட ஜாஸ்தியான மழை பெய்வதின் காரணம் என்ன? மேலே எழும்பும் ஆகாயத்திலுள்ள நீராவியானது மலையிலுள்ள பனிக்கட்டியின்மேல் படுவதால் அல்லது மேலேயுள்ள குளிர்ந்த ஆகாயத்தோடு கலப்பதால் தண்ணீராகி மழையாக வருஷிக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் மேலே எழும்பும் ஆகாயமானது பனியைவிட அல்லது மலைவாயுவைவிடக் குளிர்ந்திருப்பது சகஜம். ஆகையால் தரைக்காற்று மலைக்காற்றோடு கலப்பதால் அல்ல, அது மேலே எழும்பும்போது லேசாகி விரிவதனால்தான் குளிர்ச்சியடைந்து நீராவியை மழையாக விடு

கிறது என்று சொல்லவேண்டும். அப்படியே, மறுபக்கத்தில் ஆகாயம் கீழே இறங்கும்போது உஷ்ணமடைவதால் நீராவியை மழையாக விடாமல் தனக்குள் அடக்கிக்கொள்ளும் சக்தி ஆகாயத்துக்கு ஏற்படுகிறது.

---

## சிறுவர்க்கான விளையாட்டுகள்.

### (1) அணில் ஓட்டம்.

சிறுவர்கள் ஒரு கையை விரித்துவைத்துக்கொண்டு கண்களை மூடி அவரவர் மேஜையின்மேல் தலைசாய்ந்து உட்கார்ந்திருக்க. அணில் என்று குறிக்கப்பட்ட ஒரு சிறுவன் யாதொரு பழத்தின் கொட்டையை உட்கார்ந்திருக்கும் சிறுவர்களில் ஒருவனின் கையில் திடீரென்று வைத்துவிட்டு விரைவாக ஓட, கொட்டை வைக்கப்பட்ட சிறுவன் உடனே எழுந்து அணிலைத் துரத்திக்கொண்டு செல்ல. அணில் அகப்படாமல் தப்பித்து அச் சிறுவனுடைய இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டால், அச் சிறுவன் அணிலாக மாறுகிறான். இப்படியே மாற்றி மாற்றி விளையாட.

### (2) கரடி பிடித்தல்.

பள்ளிக்கூடத்தில் அல்லது விளையாடும் இடத்தில் கரடி என்று பாவிக்கப்படும் சிறுவன் மறைவாக ஒளிந்துகொள்ள. மற்றச் சிறுவர்கள் குறிக்கப்பட்ட ஓர் இடத்தில் முகத்தைத் திருப்பிக்கொண்டு கூடிநிற்க. ஒன்றுமுதல் ஐம்பது அல்லது நூறுவரை எண்ணினவுடனே அவர்கள் பிரிந்து கரடியைப் பிடிக்க ஓடவேண்டும். யார் கண்ணுக்காவது கரடி தென்பட்டுவிட்டால் "கரடி அகப்பட்டுவிட்டது" என்று கத்திக்கொண்டு குறிக்கப்பட்ட இடத்தை நோக்கி ஓட, மற்றவர்களும் அவனைத் தொடர்ந்து செல்லவேண்டும். இதற்குள் கரடி எழுந்து ஓடுகிறவர்களைப் பிடிக்க முயலவேண்டும். கரடி யாரையாவது தொட்டுவிட்டால் அந்தப் பையன் கரடியாக மாறுகிறான். இப்படியே மாற்றி மாற்றி விளையாட.

---



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

### I. ஆரம்பப் பாடசாலைகளில் தேசபக்தியும், நல்லொழுக்கமும்.

சுதேசமித்திரன் 19-5-21 பிரசுரத்தின் 5-ம் பக்கத்தில் 'ஆரம்ப நடுத்தரக் கல்விக் கமிட்டி' என்ற தலைப்பின்கீழ் "பீகார் ஒரிஸ்ஸா" மாகாணத்தில் ஆரம்பக் கல்வியையும் நடுத்தரக் கல்வியைப் பற்றியும் நியமிக்கப்பட்ட கமிட்டியார் கேட்டிருக்கும் கேள்விகள் நமது மாகாணத்திற்கும் பொருந்துமாதலால், கீழ்வரும் விடையை எழுத விரும்புகிறேன்.

1. 'தற்காலமிருக்கும் கல்வி முறை தேசபக்தியை வளர்க்கக் கூடியதாகவும், தேசீய உணர்ச்சியை' எழுப்பக்கூடியதாயில்லாவிடினும், ஆரம்பப் பாடசாலைகள் சம்பந்தப்பட்டமட்டில் இராஜ பக்தியையும் ஒருவாறு கடவுள் பக்தியையும் எழுப்பக் கூடியதாயிருக்கிறதென்பதை அநேகமாக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு நாளும் காலை ஸ்தோத்திரம் நடப்பதைக்கொண்டு சொல்லலாம்.

2. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தப்பட்டமட்டில், பள்ளிக்கூடங்களில் விசேஷ தீய ஒழுக்கங்கள் நடைபெற்றுவருவதாகச் சொல்வதற்கில்லை. உபாத்தியாயர்கள், மாணவர்கள் தீயவழியில் செல்லாமலிருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தும், கண்காணித்தும் வருகின்றனரென்றும் சொல்லலாம்.

3. ஆரம்பப் பாடசாலை சம்பந்தப்பட்டவரையில், நாட்டுப்புற மாணவர்கள் சுருட்டு பிடிப்பதாகச் சொல்வதற்கில்லையெனலாம்.

நகர்ப்புற மாணவர்களும் [illegible] மாணவர்களும் சுருட்டுப்பிடிப்பதைத் தடுக்க சட்டஞ் செய்வதைவிடப் பொது அறிவுப் பாடங்கள், பாடபுத்தகங்கள், சிறுவர்க்கேற்ற புத்தகங்கள் ஆகியவற்றில் அதன் பயிர்கள், பொருள்கள் மூலமாய் அதன் கெடுதல்களை நன்குபடும்படி தெளிவாகக் கட்டாயமாகப் போதித்து வந்தோமானால் அந்நிய வழக்கம் நீங்குமெனலாம்.

4. உபாத்தியாயர், பெரியோர் முதலியவர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளும் தன்மையும், சிக்கனமாய் வாழுந்தன்மையும் மாணவர்களுக்குள் பரவவும், ஆடம்பரம், தற்பெருமை இவைகளால் நேரும் தீமைகளும், இவைகள் இல்லாமையால் நேரும் நன்மைகளும், பிற்கால வாழ்வில் நேரும் இன்ப துன்பங்கள் முதலியவற்றாலும் நேரக்கூடிய நன்மை தீமைகளும், முன் ஜாக்கிரதை முதலியவைகளைப் பற்றிப் போதிக்கவும் சுயதேச சரித்திர பூர்வமான கதைகள், மதசம்பந்தமான நூல்களிலுள்ள கதைகள் ஆகியவற்றைப் புத்தகங்களாக ஏற்படுத்திப் பாடபுத்தகங்களாகவும், சிறுவர்க்கேற்ற இதர புத்தகங்களாகவும் வைத்து நடத்தியும், பொதுவாகப் போதித்து வரவும் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டால் மரியாதை, சிக்கனம் முதலியவற்றை உண்டாக்குமெனலாம்.

சுயதேசத்தில் பக்தியாளர்களாய் முன்னர் இருந்தவர்கள் அடைந்த நன்மை, பெருமை, புகழ் ஆகிய சரித்திரங்களும்; தேசிய உணர்ச்சியைத் தன் சுய உணர்ச்சி, தன் குடும்ப உணர்ச்சி, தன் நாட்டு (ஊர்) உணர்ச்சி, தன்தேச உணர்ச்சி ஆக படிப்படியாகப் பொதுவாகவும், முற்கால சுய தேசத்துச் சரித்திரங்களைப் பெரும்பான்மையாகவும், பிற தேசத்துச் சரித்திரங்களை உதாரணமாகச் சிறுபான்மையாகவும் முற்கூறியவாறு புத்தகங்களில் சம்பந்தப்படுத்தி நடத்தியும் பொதுவாகப் போதித்தும் வரின் தேசபக்தி, தேசிய உணர்ச்சி ஆகியவைகளையும், இனிப் பிற்காலப் பிரஜைகளாக வரப்போகும் சிறுவர்கட்குப் போதிக்க ஏற்பாடு செய்தால், குறிப்பிட்ட நோக்கங்கள் நிறைவேறுவதற்கு ஏற்ற வழிகளாகுமெனலாம்.

P. பரிமணப் பல்லவராயர்,

1921-௵ ஜூன்-௴ 4-௳ ஆரம்ப ஆசிரியர்.

---



## 1921-ம் ௵ மார்ச்சு-௴ நடந்த உபாத்திமைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற நமது பாடசாலை மாணவர்கள்.

### Higher Grade.

| | | P. C. மார்க். |
|---|---|---|
| 1. | R. S. மரியவியாகுலம் | 60 |
| 2. | M. ஆசைநாதன் | 50 |
| 3. | S. ஞானசிகாமணி | 44 |
| 4. | S. மரியசெல்வம் | 37 |
| 5. | V. பிச்சை சவரிமுத்து | 45 |
| 6. | J. மரியவியாகப்பன் | 50 |
| 7. | R. சீனிவாசன் | 48 |
| 8. | M. ஞானப்பிரகாசம் | 48 |
| 9. | D. மரியதாஸ் | 54 |
| 10. | S. முடியப்பன் | 37 |

### Lower Grade.

| | | |
|---|---|---|
| 1. | T. ஆசைமிக்கேல் | 49 |
| 2. | A. ஞானப்பிரகாசம் | 48 |
| 3. | M. S. முத்து | 52 |
| 4. | V. துரைசாமி | 47 |
| 5. | S. ஞானசுந்தரம் | 47 |
| 6. | A. ஜேசுவடியான் | 62 |
| 7. | A. சந்தியாகு | 42 |
| 8. | V. A. சந்தியாகு | 47 |
| 9. | M. ஆசை | 54 |
| 10. | S. ராயப்பன் | 44 |
| 11. | M. S. மாசில்லாமணி | 42 |
| 12. | M. அந்தோனி | 57 |
| 13. | R. ஜெபமாலை | 45 |
| 14. | S. தம்புசாமி | 52 |
| 15. | S. அந்தோனிசாமி | 62 |
| 16. | P. ஆரோக்கியசாமி | 61 |
| 17. | G. ஆரோக்கியம் | 55 |
| 18. | S. ஊர்து | 56 |
| 19. | A. அந்தோனிமுத்து | 55 |
| 20. | S. டேவிட் | 53 |
| 21. | P. ஊர்துசாமி | 42 |
| 22. | M. சஞ்சீவி | 56 |
| 23. | A. M. இருதயம் | 46 |

---

## 1922-௵ மார்ச்சு-௴ நடக்கும் பரீட்சையில் கணக்குப் பரீட்சைமாத்திரம் எழுதித் தேறவேண்டியவர்கள்.

### Higher Grade.

1. S. மரியஆசை
2. G. ஆசையப்பன்
3. S. ஜேசுதாஸன்

### Lower Grade.

1. G. சவரிமுத்து
2. I. ராயப்பன்
3. P. சிங்கராயன்
4. B. பிரான்சிஸ்
5. M. அந்தோனிமுத்து
6. V. குசைமரியாள்
7. S. மதர்சேர்நிரம்
8. A. மிக்கேல்மாதவடியாள்
9. S. வியாகப்பன்
10. A. ஆரோக்கியம்
11. M. மரியசவரி
12. A. மதலைமுத்து.

**கிராம சாஸ்திரத்தில்மாத்திரம் தேறவேண்டியவர்.**

D. சவரிமுத்து.

**அடுத்தவருஷத்தில் எல்லாப் பாடங்களிலும் சர்க்கார் பரீட்சை எழுதவேண்டியவர்கள்.**

### Higher Grade.

1. G. மரியபொன்னையா
2. A. S. அருளப்பன்

### Lower Grade.

1. K. ஞானப்பிரகாசம்
2. D. இருதயம்
3. A. வியாகுலம்.

குறிப்பு :—போதனாமுறை பயிலுவதற்காக உபகாரச் சம்பளம் பெறும் மாணவர்கள் எழுதிக்கொடுத்த பத்திரத்தின்படி, பயிற்சி முடிந்த வருஷத்தில்மாத்திரமல்ல, அந்த வருஷத்தில் தேறாவிட்டால், அப்படித் தேறுமட்டும் அடுத்தவருகிற பரீட்சைகள் எழுதுவது கடன். (Madras Ed. Rules. Appendix 23)

(Sd.) J. L. MIRANDA, S.J.
HEADMASTER,
R. C. Bg. & Tg. School,
*Trichinopoly.*

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.—1921.

Registered No. M. 1534.

J. M. J.

**R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.**



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 11. | செப்டெம்பர் 1921. | மலர் 3.

## பத்திராதிபர் குறிப்புகள்.

ஆரம்பப்படிப்பு பரவுவதற்காக நமது தேசத்தில் பாடசாலைகளை அதிகப்படுத்த முயலுகிறார்கள்; பாடசாலைகள் அதிகரித்தாலும் தகுந்த ஆசிரியர் கிடையாவிட்டால் படிப்பு பரவுவதற்கு வழியில்லையாகையால் ஆசிரியரையும் பயிற்றுவிப்பதற்குப் பிரயத்தனம் செய்கிறார்கள். ஆனால்

பயிலுவதற்கு உபாத்திமாரும், படிப்பதற்கு மாணாக்கரும்
தகுந்தவர்களாயும் அதிகத் தொகையாயும் வராவிட்டால்
படிப்பு எவ்விதம் பரவும்? கண்டவர்களையெல்லாம்
உபாத்திவேலைக்கென்று பழக்குவது படிப்பு விர்த்திக்கு
அநுகூலமா? சிறுவர்களைமாத்திரம் படிக்கும்படி கட்டா
யப்படுத்தி, பெரியவர்களையெல்லாம் விட்டுவிட்டால், நமது
தேசத்தில் படிப்பு பரவுவதற்கு இன்னும் எவ்வளவு காலம்
பிடிக்கும்! தகுந்தவர்களைமாத்திரம் உபாத்திமைத்தொழிலை
நடத்தச் செய்யவும், பெரியவர்களும்கூட படிக்கும்படி செய்
யவும் வழிவகைகளில்லையா?

***

சென்ற மாதத்தில் கூடிய திருச்சி ஜில்லாக் கல்விச்
சங்கக் கூட்டத்தில் படிப்பில் பின்னடைந்திருக்கும்
வகுப்பினர் இன்னொன்று தீர்மானித்தபின், இவ்வகுப்பி
னர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் பின்னடைந்த
வர்களாகவே மதிக்கப்படவேண்டுமென்று தீர்மானத்தோடு
சேர்க்கப்பட்டது. இப்படி சேர்த்ததற்கு முகாந்தரமென்ன
வென்றால், சிலர் கிறிஸ்துவேதத்தைச் சேர்ந்தவுடனே தங்
கள் வகுப்பினரை விட்டுப் பிரிந்து வேறே வகுப்பினராகி
விடுவதாக எண்ணுகிறார்கள். இது தப்பெண்ணம். கிறிஸ்து
வேதம் ஒரு மதமேயொழிய ஜாதியல்ல. எந்த ஜாதியாரும்
இந்த மதத்தில் சேரலாம். கிறிஸ்துவர்கள் என்று ஒரு மதத்
தாருண்டு; கிறிஸ்துவர்களென்று ஒரு ஜாதியார் உலகத்தி
லும் கிடையாது, இந்தியாவிலும் இருக்கக்கூடாது.

***

சென்ற மாதக்கடைசியில் நமது பாடசாலை இன்ஸ்
பெக்ஷன் நடந்தது. கனம் இன்ஸ்பெக்டர், அசிஸ்டெண்டு-
இன்ஸ்பெக்டர், சப்-அசிஸ்டெண்டு-இன்ஸ்பெக்டர் ஆகிய
மூவரும் வந்திருந்தார்கள். இன்ஸ்பெக்ஷன் முடிவில்
விடை பெற்றுக்கொள்ளும்போது, மாணவருக்கு ஏதாவது
சொல்லும்படி தலைமை யாசிரியர் கனம் இன்ஸ்பெக்டரைக்
கேட்டுக்கொள்ள, இன்ஸ்பெக்டர் அசிஸ்டெண்டு இன்ஸ்
பெக்டரைக் கேட்டுக்கொண்டார். இவர் எழுந்து பேசிய



தின் சாராம்சம் பின்வருமாறு. திருச்சி திருக்குடும்பப்
போதனாமுறைப் பாடசாலையில் பயிலுபவர்கள் மற்றவர்கள்
பெறக்கூடாத சில விசேஷ படிப்பினைகள் பெறுகிறார்கள்
என்கலாம். ஆனால் மற்றப் பாடசாலைகளிலும் இப்பாட
சாலையிலும் அடையக்கூடிய பொதுப்படிப்பினைகளிலே
முதலாய் சாதாரணமாய் இப்பாடசாலை மாணவர் ஏனை
யோரைவிட அதிகத் தேர்ச்சியடைந்திருப்பதாக அவர்
அநுபோகமாம். இதற்குக் காரணம் இப்பாடசாலை மாண
வருக்கு வற்புறுத்தப்படும் ஊக்கமும் உற்சாகமும் என்க
லாம். ஆனால் இந்த ஊக்கமும் உற்சாகமும் உபாத்திமாரின்
சம்பள விஷயத்தைக் கவனிக்குங்கால், கொஞ்சம் கொஞ்ச
மாய்க் குறையக்கூடும். ஆகிலும் அப்படி குறைய விடக்
கூடாது. உபாத்திமாரின் சம்பளம் உயரவேண்டுமென்று
எல்லாரும் விரும்புகிறார்கள். ஆனால் சர்க்காரிடத்திலாவது
இதர மானேஜர்களிடத்திலாவது பணக்குறைவே சம்பள
உயர்வுக்குத் தடையாயிருக்கிறது. இந்தக் குறைவை
நிவர்த்திசெய்வதற்கு பொது ஜனங்கள் முன்னுக்கு வர
வேண்டும். ஆகையால் பொது ஜனங்கள் உபாத்திமா
ருடைய வேலையை மதிக்கப்பண்ணவேண்டும். வியாபாரி
கள் தங்கள் சரக்கை விற்கும்படி அதன் மேன்மையை என்
னென்ன விதமாய் எடுத்துக் காட்டுகிறார்கள்! அப்படியே
உபாத்திமாரும் தங்கள் வேலையால் வரும் நன்மையின்
மேன்மையைப் பொது ஜனங்கள் உணரப்பண்ணவேண்
டும்; பொது ஜனங்களைத் தங்கள் வசப்படுத்தவேண்டும்;
அவர்களுக்குத் தங்களால் ஆகவேண்டிய உதவிகள் எல்லாம்
செய்யத் தயாராயிருக்கவேண்டும். அப்படியானால் பொது
ஜனங்களும் உபாத்திமாருக்குத் தங்களால் ஆன உதவி செய்
யும்படி முன்னுக்கு வருவார்கள். படிப்பு வரி ஏதாவது
புதிதாய் ஏற்படுத்தினால் முறைப்பாடில்லாமல் கொடுப்பார்
கள்; இவ்விதமாய் உபாத்திமாரின் சம்பளம் உயரக்கூடும்.
ஆகவே தங்கள் சம்பளம் உயரவேண்டுமென்று உபாத்தி
மார் மெய்யாகவே ஆசித்தால் தங்கள் ஊக்கத்தையும் உற்
சாகத்தையும் ஒருபோதும் கைவிடலாகாது.

***

இந்த ஜூலை மாதத்தோடு துவக்குகிற வருஷத்திற்காக பூங்கொத்துச் சந்தா இன்னும் செலுத்தாதவர்களுக்கும் பத்திரிகை அனுப்பிக்கொண்டே வருகிறோம். ஆனால் அவர்கள் எப்போது சந்தாவை அனுப்புவார்கள்? கூடிய சீக்கிரம் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். மூன்று மாதம் காக்கவைப்பது தருமமல்ல. அல்லது V. P.-யில் அனுப்பினால் பெற்றுக்கொள்வதாக நமக்கு எழுதியனுப்பட்டும். ஆனால் V. P. ரூ. 1-2-0-க்கு அனுப்பப்படும்; ஏனென்றால் ரிஜிஸ்டர்பண்ணாமல் V. P.-யில் அனுப்ப முடியாது.

---

## படிப்பில் பிள்ளைகளின் கவனத்தை இழுக்கக்கூடிய வழி வகைகள்

(ஓர் உபாத்தினியால் எழுதப்பட்டது.)

சாதாரணமாய் மனிதன் தான் செய்துவரும் கைவேலையிலும், மன உழைப்பிலும், கொஞ்சம் கொஞ்சமாய் வெறுப்படைகிறான். அல்லது அவைகளைக் கவனமின்றிச் செய்கிறான். இப்படிப்பட்ட சமயங்களில் அவன் தன் கடமையை உணருவதற்கு யாதோர் வைதீக அல்லது இலௌகிக நன்மையை, அல்லது தண்டனையை ஞாபகப்படுத்திக்கொள்வது அல்லது பிறரால் ஞாபகப்படுத்தப்படுவது ஒரு பெரிய உதவியாகும். இது விஷயம் யாவரும் அனுபோகத்தில் அறிந்ததே. இப்படியே, பல சமயங்களில் பிள்ளைகள் படிப்பில் பிரியமற்று, கவனமில்லாமலிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இதையறிந்த நாம் அதைப்பற்றிக் கவனியாது, வாடிக்கை முறைப்படி பாடங்களை நடத்துவது, நமக்கும், பிள்ளைகளுக்கும், பெருத்த நஷ்டமே. ஆதலால் பிள்ளைகள் கவனமின்றியிருப்பதற்குள்ள காரணங்களென்னவென்றும், அவர்களின் கவனத்தை இழுக்க என்ன முறையைக் கையாடலாமென்றும், எனது சொற்ப அனுபோகத்தைக்கொண்டு அறிந்தமட்டும் தெரிவிக்கிறேன்.



உபாத்திமார் தக்க முஸ்திப்பின்றி தங்கள் பற்பல அலுவலினால் களைத்து வகுப்புக்கு வருவது பிள்ளைகள் கவனியாமலிருப்பதற்கு ஓர் காரணமாம். அவர்கள் இன்ன பாடத்தை இன்னின்ன முறையை அநுசரித்து இவ்வளவு நேரத்தில் முடிக்கவேண்டுமென்ற திட்டத்துடன் வருவார்களாகில் உற்சாகம் சுறுசுறுப்புள்ளவர்களாய்த் தமாஷுடன் வகுப்பின் முன் நின்று பாடம் நடத்துவார்கள். அப்பொழுது பிள்ளைகள் கவனக்குறைவாய் இருப்பது அருமையாயிருக்கும். ஆகலால் ஒரோர் சமயம் ஏதோ விக்கினம் நேரிடும் பட்சத்தில், முன் சொல்லிக்கொடுத்த பாடத்தில் சில கேள்விகளைக் கொடுத்து வாய்மொழியாய் அல்லது எழுத்து மூலியமாய்ச் சொல்லச் செய்யலாம்.

நெடுநேரம் ஒரு பாடத்தை நடத்துதல் இன்னொரு காரணம். சில சமயங்களில் சில பாடங்களில் பிள்ளைகள் குறைவாயிருக்கிறார்களென்று குறிக்கப்பட்ட நேரத்திற்கு அதிகமாய் நடத்துகையில், பிள்ளைகள் அங்குமிங்கும் பார்த்து தலையைச் சொரிந்துகொண்டு கொட்டாவி விட ஆரம்பிக்கிறார்கள். இச்சமயங்களில் பிள்ளைகளை எழுந்திருக்கச்செய்து நடத்தும் பாடத்திற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு வர்த்தமானம், கதை சொல்வதினால் அல்லது பாட்டுப்பாடச் செய்வதினால் இரண்டொரு நிமிஷத்திற்குள் அவர்கள் கவனத்தை இழுக்கக்கூடியதாயிருக்கிறது.

உஷ்ண மிகுதி மற்றோர் காரணம். இக்காரணத்தினால் கவனமற்றிருப்பதாகத் தெரிந்தால் நெருங்கியிருப்பவர்களை விசாலப்படுத்துவதும், ஒருவருக்கொருவர் இடம் விட்டு நின்று, தங்கள் அப்பியாச நோட்டுகளால் இரண்டொரு நிமிஷம் விசிறிக்கொள்ளச் செய்வதும், காற்றோட்டமான வெளியிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் இரண்டொரு நிமிஷம் கழித்துக் கூட்டிக்கொண்டுவருவதும் பாடத்தைக் கவனிக்கச் செய்யத்தக்க ஏதுக்களாம். சிலர் வெளியிடத்திற்குக் கூட்டிப்போவதினால் நேரம் வீணாகுமென்று சொல்வார்களாக்கும். தச்சன் தன் ஆயுதத்தைத் தீட்டிக்கொள்ளும் நேரம் வீண் நேரமென்று நினைப்பானா? அப்படி நினைத்துத் தீட்டாதிருப்பானாகில்,

அவனுடைய வேலை சுளுவாய் முடியாது. ஆதலால் மேற்சொல்லிய முறையுமன்றி பிள்ளைகளிருக்கிற அறையின் பக்கத்தில் சாந்து பூசப்பட்ட தாழ்வாரம் இருக்கும்பட்சத்தில் அவ்விடத்தில் தண்ணீரை ஊற்றி ஆகாயம் குளிரச்செய்யலாம். தாழ்வாரத்தில் தண்ணீர் ஊற்றுவதும் அல்லது தெளிப்பதும் பிள்ளைகளுக்கு ஆனந்தமே. அதின்பின் பிள்ளைகள் கவனமுள்ளவர்களாயிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

தெரிந்த ஒன்றிரண்டு பிள்ளைகளை மாத்திரம் கேள்வி கேட்டு, மற்றவர்களைக் கவனியாதிருப்பதும் ஓர் காரணமாகும். இம்முகாந்தரத்தால் கவனக்குறை ஏற்பட்டதென்று கண்டால் உபாத்திமார் தங்களிடத்தைவிட்டு, பிள்ளைகளுக்கு முன்னால் சமீபத்தில் வந்து, பிள்ளைகளுக்குத் தெரிந்ததும், பாடத்திற்குச் சம்பந்தப்பட்டதுமான சில கேள்விகளை அங்குமிங்கும் கேட்பது நல்ல வழியாம்.

பிள்ளைகளுக்கு தெரிந்த விஷயங்களைக்கொண்டு, தெரியாத விஷயங்களைக் கற்றுக்கொடாதிருத்தலும் ஒரு காரணமாயிருக்கும். உதாரணமாக, பருவக்காற்றைப்பற்றி ஒரு பாடம் நடத்தவேண்டியபோது, கண்ணுக்குக் காணமுடியாத ஆகாயத்தின் பெயரை வரவழைத்தவுடனே புதிதாய் ஆறும் வகுப்புக்கு வந்த பிள்ளைகள் கவனக் குறைவாய்க் காணப்பட்டார்கள். உடனே அவர்களது கஷ்டத்தை உணர்ந்து, பின்வருமாறு சம்பாஷித்தோம், டிசம்பர், ஜனவரி மாதத்தில் இராக்காலத்தில் ஜன்னல் கதவுகளைச் சாத்திக்கொண்டு படுத்திருக்கிறோம்; காலையில் எழுந்தவுடன் ஜன்னல்களைத் திறக்கும்பொழுது வெளியிலிருந்து எப்படிப்பட்ட காற்று வருகிறதாக உணருவோமென்றும், அதே சமயத்தில் வேறொருவர் அறைக்கு வெளியில் ஜன்னலின் அருகாமையில் நின்றால் எப்படிப்பட்ட காற்றை உணருவாரென்றும் கேட்டவிடத்தில், அறைக்குள்ளிருக்கும் நாம் மிக்க குளிர்ச்சியான காற்றையும், வெளியிலிருப்பவர்கள் சற்று வெப்பமானதும், நாற்றமுள்ளதுமான காற்றையும் பெறுவாரென்று சொன்னார்கள். மேலும் வீடுகள் நெருப்புப்பற்றி எரியும்போது அகோரமாய் காற்று அடிக்கிறது ஏன்? படிப்பற்ற பல பெண்கள் வீடு நெருப்புப் பற்றும்



போது காற்றும் வந்து குடியைக் கெடுக்கிறதே என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அங்குள்ள வாயுவெல்லாம் நெருப்புப்பற்றி எரிகையில் செலவாய்ப்போகிறது. ஆகையால் பக்கத்திலுள்ள ஆகாயம் மகா வேகத்துடன் அந்த இடத்தை நிரப்ப ஓடிவருகிறது. அதினால் மென்மேலும், நெருப்பு அதிகமாய்ப் பற்றவும், முன்னிலும் நாலா திக்குகளிலிருந்து அதிகமான ஆகாயம் அதிக வேகத்துடன் வரவும் வழியாகிறது. இதைச் சொன்னவிதத்தில் நெருப்புப் பற்றுகிறவிடத்தில் நானும், பிள்ளைகளும், இருப்பதாகப் பாவித்துக்கொண்டோம். பிள்ளைகளுடைய கண்களும், முகங்களும் மிக்க கவனமும், உற்சாகமுமுள்ளவையாய்க் காணப்பட்டன. பின் நான் நினைத்த பாடம் அனுகூலமாய் முடிய, பிள்ளைகளும் வாயுவின் வேலையை அறிந்து ஆச்சரியமடைந்தார்கள்.

சில சமயங்களில் அப்பியாசக் கணக்குகள் செய்யக் கொடுத்திருக்கையில் பிள்ளைகள் யாதொரு முயற்சியின்றி ஒரு கணக்கை நெடுநேரம் செய்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். அச்சமயங்களில் எல்லோரையும் எழுந்து நின்று செய்யவும், முதலில் செய்தவர்கள்மாத்திரம் உட்காரவும் செய்விப்பது ஒருவித தூண்டுகோலாகும். இக்கணக்கில் சலிப்பிருக்குமாகில், பெஞ்சைவிட்டு உபாத்திமாருக்கு முன்னால் (சொற்பப் பிள்ளைகளிருக்கும்பட்சத்தில் அல்லது விசாலமான இடமிருக்குமாகில் வளைந்து) நிற்கச்செய்து பல மனக்கணக்குகளைக் கொடுத்து, சுறுசுறுப்பாய்ச் செய்யு சுருக்க வழிகளைக் காட்டி, குறிக்கப்பட்ட நேரத்தில் பிள்ளைகள் எழுதவும், காட்டவும் செய்து, பிசகாய்ச் செய்தவர்களைக் கடைசியிலும், சரியாய்ச் செய்தவர்களை முதலிலுமாக இடம் மாற்றுதலும், மிகவும் கவனம் சுறுசுறுப்பை உண்டாக்கக்கூடியதே. இதையும் பலமுறை அநுசரித்து அநுகூலம் அடைந்திருக்கிறேன்.

(நான் பார்த்தவரையில்) பூமி சாஸ்திரப் பாடம் எலெமெண்டரிப் பாடசாலைக்குப் புதிதாய் வருகிற பிள்ளைகளுக்கு மிகவும் கஷ்டமாயிருப்பதால் முதன்முதல் அதைப்பற்றி ஏதாகிலும் முன்னறிவு கேட்டால் அவர்கள் முகத்தில்

பிரியமினம் இருப்பதாகத் தோன்றும். அப்போது அவர்களை உற்சாகப்படுத்தி, குறிக்கப்பட்ட பாடத்தைப் படத்தில் காட்டி அந்த இடத்தின் பெயரைச் சொல்லி ட்ரெயினில் அல்லது கப்பலில் ஏறிக்கொண்டு, அங்கங்கே என்ன இருக்கிறது? ஏன்? என்ன விசேஷம்? இவைமுதலியவைகளைக் கண்டுபிடிக்கப் பயணம் செய்வோமென்று அவர்களோடு அந்த இடத்திலிருப்பதாக ரூபிகரித்துக்கொண்டு நடத்தலாம். புதிய பெயர் சொல்லும்பொழுது இந்த இடத்திற்கு அல்லது இந்த மலை, இந்த நதிக்கு ஒரு நல்ல பெயருண்டு; அது உங்களுக்குச் சொல்லுகிறேனென்று அந்தந்தப் பெயரையும் அந்தந்த விசேஷங்களையும் சிறப்பித்துச் சொல்லலாம். மாட்டியிருக்கும் படம், புஸ்தகத்திலுள்ள படம் இவைகளில் அவர்கள் படித்துள்ள பாகங்களைக் காட்டும்படி செய்யலாம். யார் முதலில் எடுத்துக் காட்டுகிறதென்று பந்தயம் போட்டுக்கொண்டு காட்டச்செய்யலாம். இவைபோன்ற வழிகள் இழுக்க ஏற்றவையென்று என் சொற்ப அநுபோகத்தில் அறிந்திருக்கிறேன். சிலர் இம்முறைகளைத் தானே பூமி சாஸ்திரப் பாடங்களில் உபயோகிக்கிறோம்; இவை கவனத்தை இழுக்கக்கூடிய விசேஷித்த முறைகள் என்று எப்படி சொல்லக்கூடுமென்று ஆக்ஷேபிக்கலாம். இம்முறையையே எப்பொழுதும் கையாடவேணுமென்பது என் நோக்கமல்ல. பிள்ளைகள் படிப்பில் கவனமின்றி இருப்பதாக அறியும்பொழுதுமாத்திரம் சமயத்திற்குத்தக்கவாறு இம்முறைகளையும், இதைப்போன்ற வேறு வழிகளையும் உபயோகித்தல் நன்றென்று அறிகிறேன். ஏனெனில் இவ்வித முறையையே எப்பொழுதும் கையாடினால் சொற்ப காலத்தில் அதிக விஷயம் கற்றுக்கொடுக்கமுடியாது. மேலும் பிள்ளைகளுக்கு அப்பாடத்தில் பிரியம் உண்டாகிவிட்டால், அதைப்பற்றி மென்மேலும் அதிக விஷயங்களை அறிய ஆசைப்படுவார்கள்; அச்சமயங்களில் சொற்ப விஷயத்திற்கு அதிக கதைபேசுதல் வெறுப்புக்கிடமாகும்.

இயற்கைப்பாடம் நடத்தும்போது, இயற்கைப் பொருளைப் பிள்ளைகள் கையில் கொடுத்துப் பார்த்துச் சொல்லுங்களென்றால், எல்லாப்பிள்ளைகளும் சொல்வது அருமை.



இயற்கைப்பொருளின் அறிவில்லாத பிள்ளைகள் தங்கள் கையிலுள்ள பொருளைப் பார்த்தும் சொல்லக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஏதோ உபாத்தியாயர் சொல்லுகிறாரென்று சோம்பியிருக்கலாம். ஆதலால் பிள்ளைகளின் தன்மையை உணர்ந்து பிள்ளைகளோடு தானும் ஒரு பிள்ளையாயிருந்து மேற்படி பொருளைப்பற்றி என்ன விஷயம் சொல்லிக்கொடுக்கவேணுமோ அதற்குச் சம்பந்தமான பாகங்களைத் தனித்தனியே சொல்லி, பிள்ளைகளோடு கவனித்தல், அந்தந்த அமைப்பின் காரணத்தையும், பிரயோஜனத்தையும், அவர்களே சொல்லும்படி தக்க கேள்விகள், உதாரணங்களைக் கொண்டு வருவித்தல் கவனப்படுத்த நல்ல வழியே. இவ்வித முறைப்படி இரண்டொரு பாடம் நடத்தியபின் வேறே இயற்கைப் பொருளைப்பற்றி நாம் நடத்த, வகுப்புக்குப் பொருளைக் கொண்டுவந்தவுடன் பிள்ளைகளின் கண்களும், கவனமும், அப்பொருளின்மேலிருப்பதாகப் பலதடவை பார்த்திருக்கிறேன். இப்பொழுது பிள்ளைகள் பொருளை நன்றாய்க் கவனித்து முன் படித்துள்ள பொருளுக்கும், இதற்கும் என்ன ஒற்றுமை, வேற்றுமை என்று மளமளவென்று சொல்லக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

தக்க தேக அப்பியாசமில்லாமையாலும் வகுப்பு துவக்குவதற்குமுன் நெடுநேரம் உட்கார்ந்துகொண்டு படித்தமையாலும், பிள்ளைகள் பாடத்தில் கவனமின்றி இருக்கப் பலதடவை பார்த்திருக்கிறேன். அச்சமயங்களில் எழுந்திரு, உட்காரு என்ற கட்டளையைச் சிலதடவை சுறுசுறுப்பாய்க் கொடுத்து உட்கார்ந்திருக்கும்போது உட்காரு என்றும், எழுந்து நிற்கும்போது, எழுந்திரு என்றும் சொல்ல, கவனமுள்ள பிள்ளைகள் ஒன்றிரண்டு தவிர, மற்றவர்கள் கட்டளைக்கு விரோதமான கிரிகைகள் செய்திருப்பார்கள். கவனமுள்ளவர்கள் அவர்களைப் பார்த்துச் சிரிக்க, வெட்கப்பட்டு அடுத்தசமயம் அக்கட்டளையைக் கவனித்துச் செய்வார்கள். இதன்பின், நடத்தும் பாடம் என்னவென்று கவனிப்பதால், நான் நினைத்த பாடத்தை நடத்தி அநுகூலமடைந்திருக்கிறேன்.

கடைசியாய் இதைப்பற்றி இன்னும் பல காரியம் சொல்லலாமென்றாலும், இத்துடன் நிறுத்தி, உபாத்திமா

ருடைய விடா உழைப்பினாலேயே, பிள்ளைகளின் கவனத்தை வெகு சுலுவாய் இழுத்து அதிக நன்மை செய்யலாமென்று நான் உணர்ந்திருப்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேற்படி முறைகளிற் பல ஒருவருஷமளவாய், டிரோயினிங் ஸ்கூலில் உபாத்தியாயரிடம் படித்தவையே. அவைகளைச் சமயத்திற்குத் தக்கவாறு உபயோகித்துக் கொண்டதினால், நானும் பிள்ளைகளும் நல்ல பலனடைந்தோம்.

---

## விசித்திரக்கணிதம்.

### D

| | | |
|---|---|---|
| 1 × 1 | = | 1 |
| 11 × 11 | = | 121 |
| 111 × 111 | = | 12321 |
| 1111 × 1111 | = | 1234321 |
| 11111 × 11111 | = | 123454321 |
| 111111 × 111111 | = | 12345654321 |
| 1111111 × 1111111 | = | 1234567654321 |
| 11111111 × 11111111 | = | 123456787654321 |
| 111111111 × 111111111 | = | 12345678987654321 |

### E

| | | |
|---|---|---|
| 1 × 8 + 1 | = | 9 |
| 11 × 8 + 11 | = | 99 |
| 111 × 8 + 111 | = | 999 |
| 1111 × 8 + 1111 | = | 9999 |
| 11111 × 8 + 11111 | = | 99999 |
| 111111 × 8 + 111111 | = | 999999 |
| 1111111 × 8 + 1111111 | = | 9999999 |

### F

| | | |
|---|---|---|
| 7 × 9 | = | 63 |
| 77 × 99 | = | 7623 |
| 777 × 999 | = | 776223 |
| 7777 × 9999 | = | 77762223 |
| 77777 × 99999 | = | 7777622223 |



N.B.—சென்ற சஞ்சிகையில் பிரசுரித்ததும் இன்னும் பிரசுரிக்கப்போவதுமான இவ்வித விசித்திரக் கணக்குகளால் என்ன பிரயோஜனம்? உபாத்திமார் தங்கள் தொழிலைச் செய்வதில் இவைகளை எவ்விதமாயாவது உபயோகிக்க முடியுமா? (பத்திராதிபர்.)

---

## சந்தாதார் பக்கம்.

*[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் சேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]*

---

## I. கல்வியைப்பற்றி ஓர் வியாஸம்.

**கல்வி என்றால் என்ன?**

நம்முடைய அறிவை விர்த்தியண்ணி நமக்குக் கீர்த்தியும் புகழும் தரும்படியாய் பெரியோர்கள் எழுதிய நூல்களிலிருந்தும், மற்றும் படிப்பிற் சிறந்த வித்வசிரோன்மணிகளிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ளும் ஓர் புத்தி.

இருவகைக் கல்வியுண்டு. புகழப்படும் கல்வி, புகழப்படாத கல்வி.

புகழப்படும் கல்வி என்னவென்றால்,

"கற்கக்கசடற கற்பவை
நிற்க, அதற்குத்தக."

என்றபடி நாம் எவ்வளவுக்கு அதிகமாயோ, அல்லது குறைவாயோ, படித்தபோதிலும் அதற்குத் தகுந்தபடி நடப்போமேயானால் நமக்குச் சீரும் சிறப்புமுண்டாகும்.

புகழப்படாத கல்வி என்னவென்றால்,

நாம் எவ்வளவுக்கு அதிகமாயோ, அல்லது குறைவாயோ படித்தபோதிலும் அதற்குத் தகுந்தபடி நடக்காதேபோனால் நமக்கு இழிவேயொழிய மற்றப்படியல்ல.

கல்வி கற்கிறதற்குரிய காலம். .

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கொப்ப, நாம் நம் இளம் பிராயத்தில் கல்வி கற்றல் அவசியம். ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது. ஆகவே நாம் இக்காலத்திலேயே படிக்க வேண்டும்.

**இதன் பிரயோஜனம்.**

கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு.

கல்வியால் புத்தியை விர்த்தியாக்கலாம்.

பொருளும், புகழும் பெறலாம்.

மகிமைக்குரிய சாதனங்கள் யாவையும் பெறலாம்.

புதியமாணவர்
**P. M. அந்தோனிமுத்து.**

---

## II. மாறுதல்.

ஏறக்குறைய 5 வருஷமாய் பொள்ளாச்சி ரேஞ்சில், ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராயிருந்து, ஆரம்ப ஆசிரியர்களின் நன்மையைக் கோறி, இரவும் பகலும் விடாமுயற்சியுடன் உழைத்து, ஆசிரியரின் பல குறைகளை நீக்கி, போர்டு பாடசாலை ஆசிரியரின் சம்பளக் குறைவைப் பற்றி பல தடவைகளில் தாலூகா போர்டில் வாதாடியவரும், அது விஷயமாய் அதிகாரிகளுடனும், மெம்பர்களுடனும், நியாயத்தைப் பேசியவரும், அன்பு, பொறுமை, இரக்கம், கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்கள், ஒழுங்கே அமையப்பட்டு, தம் நடத்தையால் மாதிரிகையாய் நடந்து காட்டியவருமான, ஸ்ரீமான் T. R. ராஜரத்னம் அவர்களை இவ்ரேஞ்சிலிருந்து திருச்சிறுப்பள்ளி ரேஞ்சுக்கு மாற்றிவிட்டதை யோசிக்க யோசிக்க ஆரம்ப ஆசிரியர்களின் மனம் நீங்காத வியாகுலமடைகிறது. துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் செய்வது இராஜன் கடமை. அதுபோல் ஆரம்ப ஆசிரியர் விஷயமாய் பல கூட்டங்களில் பரிதாப நிலைமையைப்பற்றி உபந்நியாசித்தவரும், ஆசிரியரைப்பற்றி குறை கூறியவர்களைக் கண்டித்தவரும், ஆசிரியரின் கஷ்டத்தை அறிந்து பொருள் உதவி செய்து பல கஷ்டப்பட்டவருமானவர் நம் ராஜன். இன்ஸ்பெக்டர் மன்னா முதல் ஏழைவரையில் ரத்தினத்தை விரும்பாருண்டோ? இல்லை. அதுபோல் தனவந்தர்முதல் ஏழைகளீராகவும், மாணுக்கர்முதல் ஆசிரியர் ஈராகவும், கிராமங்களிலும் பட்டணங்களிலும் இவ்ரத்தினமாகிய இன்ஸ்பெக்டரை விரும்பாதார் இல்லை. அன்னவரின் மாறுதலையறிந்தவர்கள் அடையும் வியாகுலமும் சொல்லமுடியாது. ஆகையால் ராஜரத்னம் என்ற நாமம் இவருக்கே பொருந்தும்.



**வேண்டுகோள் :**

1. பொள்ளாச்சி ரேஞ்சில், ஆரம்ப ஆசிரியர் விஷயத்தில் மேற்கூறிய குணத்துடன் இருந்ததுபோல் என் சகோதரர்களாகிய திருச்சி ரேஞ்சு ஆசிரியர்கள் விஷயத்திலும் நடந்து நன்மதிப்பை அடையக் கோறுகிறேன்.

2. அன்னவருக்கு பிரிவு உபசாரம் வாசித்துக்கொடுத்த பொள்ளாச்சி R. C. ஸ்கூல் மானேஜர், சங். அந்தோனி சுவாமி, பல ஆண் பெண் ஆசிரியர்கள் மாணுக்கர்கள் இவர்கள் மத்தியில் தாம் கூறிய வாக்கைக் கடைப்பிடித்து அதன்படி நடக்கவேண்டுமாயும் கோறுகிறேன்.

3. போர்டு, முனிசிபல் உபாத்தியாயர்கள் நடத்திய டீ பார்ட்டியில் வாசித்த உபசாரப் பத்திரத்திற்குக் கொடுத்த பதிலையும் காப்பாற்றக் கோறுகிறேன்.

4. கடைசியாய் 10 வருஷம் தாம் பயின்ற திருச்சிறுப்பள்ளி St. Joseph's College, ஆசிரியர் மத்தியில் இப்போது உத்தியோகம் செய்வதால் தம் ஆசிரியர்களாகிய அவர்களிடமுள்ள மேலான குணத்தையே கடைப்பிடித்து நடந்து இன்னம் அதிக நன்மதிப்பை அடையவேண்டுமாய் நடந்துகொள்ளவும் கோறுகிறேன்.

இவ்விதமான புகழையடையவும் நீடூழி வாழவும் சர்வேசுரன் இவரை ஆசீர்வதிப்பாராகவும்.

தனி,
23-8-21.

**A. C. சின்னப்பத்தேவன்,**
ஹெட்மாஸ்டர்,
போர்டு எலிமெண்டரிப் பாடசாலை, தனி.
உடுமல்பேட்டை உபாத்திமைச்
சங்கத்தின் காரியதரிசி.

---

## III. உப்பைப்பற்றிய பாடக்குறிப்பு.

**நோக்கம்.** பிள்ளைகளின் அறிவை விர்த்தி செய்தல்.

**உபகரணம்.** ஜலம், உப்பு, உப்பளப்படம்.

I. **பீடிகை.** காலைச்சாப்பாட்டைப்பற்றி பிள்ளைகளுடன் சம்பாஷித்து உப்பைப்பற்றி கேள்வியின்மூலம் வருவித்தல். ருசி கொடுக்கும் பதார்த்தம் சர்க்கரை என்று வருவித்தல்.

II. (*a*) **பாடம்.** உப்பு: தன்மை. 1. கடின பதார்த்தம். 2. நிறம்: வெள்ளை, கருப்பு. 3. கரையும். 4. ருசி கரிக்கும் குணம்; உப்பைப் பரிசோதித்து கருப்பு உப்புக்கு காரணம் ஜலத்தில் கரைத்துக் காட்டுதல், வாயில் போட்டு பார்க்கும்படி செய்து ருசியை விவரித்தல்; அறுசுவையில் ஒன்று என்பதைப் போதித்தல்.

(*b*) **உபயோகம்.** 1. சாப்பாட்டுக்கு. 2. ஊறுகாய் போட. 3. சிறந்த மருந்துக்கும் உதவும். [பிள்ளைகளை கேள்வி கேட்டு ஷை விஷயங்களை வருவித்தல்.]

(*c*) **கிடைக்கும் வழி.** 1. உப்பள விபாம். 2. கிணற்று நீர். 3. சமுத்திர நீர். 4. உப்புக் கனி. 5. ஏரி. [உப்புப் பூ படத்தைக் காட்டியும் உப்பளப்படம் வரைந்து காட்டியும் கேள்வியின் மூலமாயும் வருவித்தல்.]

III. **பரீக்ஷை.** நடந்த பாடத்தைப்பற்றி கேள்வி கேட்டு மனதில் விஷயங்களை பதியச் செய்தல். முடிவு.

31-8-21.

**காசிம் முகம்மத்கான்,**
முதல் உதவி தமிழ் ஆசிரியன்
போர்டு பஞ்சமர் ஸ்கூல்,
பாளையங்கோட்டை.

---

## IV. கதைப்பாட்டுகள்.

### 1. குருடன் விளக்குப் பிடித்தது.

சக, சக, கபமகரி
பாபா, மகரி, பமகரிச

கண்ணில் லாத ஒரு குருடன்
கையி லே ஒரு லாந்தருடன்
எண்ணெய்க் குடத்தை தலையினிலே
எடுத்துச் சென்றான் இரவினிலே.

வேக மாக நடந்திடவே
விளையாடும் பிள்ளைகள் பார்த்திடவே
ஓகோ! உமக்கோ கண்ணில்லை
உமக்கேன் விளக்கென் றார்சொல்லை



நன்றாய் குருடன் கேட்டவுடன்
நலமாய் அவர்க்குத் தேட்டமுன்
என்ன ருமை மக்களேநீர்
என்மேல் இடறி விழுந்திடுவீர்.

என்ற குருடன் சொல்கேட்டு
ஏகி னாகள் வெட்கப்பட்டு
என்றும் பெரியோர்முன் தணிவாக
எதிர்க்கா திருப்போம் பணிவாக.

### 2. கோழியும் அதன் குஞ்சுகளும்.

பாட்டு, ஷை மெட்டு.

கோழி ஒன்று கொக்கரித்து
குஞ்சுக ளைதன் அருகழைத்து
எந்தன் அருமை மக்களேநீர்
என்னை விட்டு அகலாதீர்

எனவே செய்தது அதுதிட்டம்
இதிலோர் குஞ்சு தனதிஷ்டம்
போலே தனித்து வெளிசெல்ல
மேலே பருந்து தூக்கிக்கொல்ல

அய்யோ பாவம் அப்பருந்து
அதற்கிந்த குஞ்சு நல்விருந்து!
நமக்கும் இதுபோல் பாலர்களே
நடக்கும் ஆகையால் சிலர்களே

நம்தாய் சொற்படி யே நடப்போம்
நன்றாய் பாடங் களை படிப்போம்.

நாம் நாடகம், or டிராமா பார்க்கும்போது மென்மேலும், கதையின் சாமர்த்தியத்தையும், புதிய ஆக்ட்டர்ஸ்களையும் அறிய அவாவுகின்றோம். இவை எப்போது உயர்த்தப்படுமென கண் இமைக்காது உற்று நோக்கியவண்ண மிருக்கின்றோம். இவ்விதச் சந்தர்ப்பங்களில், நம் பொறுமைக்கு மதிப்பு இருக்கிறதா? நம்மினும் சிறியவர்களுக்கு எப்படியிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

பேசத்தெரியாது, “உம்” என்று சொல்லும் பாலர்முதலாய் கதை சொல்வதை ஓயாது—உம், உம் என்று கேட்கின்றனர். கதை சொல்பவர் ஓய்ந்தாலும் அப்பாலர்களால் தூண்டப்படுவார்கள்.

நாம் கதை சொல்லும்போது கேட்கும் சிறுவர்களைக்குறித்தே தந்திரமாய் சொன்னாலும், தம்மையென்றறிந்து நகுகின்றனர்.

தாய், தன் பையனுக்கும் சொல்லப்படும்—கதையில், "கண்ணன் தினம் வெண்ணெய் தின்பான்" என்று சொன்னால், பையன் தாயை நோக்கி, நீங்கள் ஏன் தினம் எனக்கு வெண்ணெய் கொடுப்பதில்லை, என்று கேட்கிறான். அதாவது, கதையிலுள்ள நியாயம் தனக்கும் வேண்டுமோம்.

சுருக்கிச் சொல்லுமிடத்து,

1. சிறுவர்களுக்கு கதை கேட்பதில், விருப்பமுண்டு.
2. கேட்ட கதையின் கருத்தை அறிகிறார்கள்.
3. கேட்ட கதையின் கருத்தை அனுசரிக்கிறார்கள்.

இம்முகாந்தரங்களை முன்னிட்டும், "பிள்ளைகள் உற்சாகமற்றிருக்கும்போதும், அவர்கள் புத்திக்குக் கடின வேலை கொடுத்தபின்னும், பிள்ளைகள் சற்று இளைப்பாறுதற்கும், உற்சாகமாயிருப்பதற்குமான, (இக்) கதையை, அவர்கள் விருப்பப்படி விட்டு, இவ்வழி அதிக வியர்த்தமாகாதிருக்க யாதோர் நீதியைப் போதிப்பதுடன், அடுத்த பாடத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதை முன்னிட்டும்,

1. சிறுவர்களுக்கு கதை அவஸ்யம்.
2. கதையில் நீதி இருத்தல் அவஸ்யம்.
3. ஷை, நீதி நியாயமாயிருத்தல் அவஸ்யம்.

(இப்பூங்கொத்தில், 67, 175-ம் பக்கங்களில் நமது, நேயர்களால் விளக்கப்பட்டிருத்தலால், இத்துடன் நிறுத்துகிறேன்.

மேற்கண்ட காரணங்களைமுன்னிட்டு முதியோர் கூறிய, 2 கதைகளுக்கிசைந்த 2 பாடல்கள் தயாரித்திருக்கிறேன்.

"பாருக்குணல் லோர்மு னேபித்தர் பன்மொழி பகர்ந்திடும் செயல்போலவும்" என்றபடி, ஈண்டியான் பிதற்றியதில், அன்னம் நீரைப்பிரித்து பாலைமட்டு மருந்துதற்போல், நேயர்கள், சாரத்தை நுகர்ந்து, அசாரத்தை விடுவொன வேண்டினன்.

இங்ஙனம்,
போதனாபாடசாலை மாணவர்களில் ஒருவன்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

Registered No. M. 1534.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY
22 OCT 1921



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும் : வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 11. | அக்டோபர் 1921. | மலர் 4.

## பத்திராதிபர் குறிப்புகள்.

இத்தேசத்தில் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளில், மதவிஷயமான படிப்பு யாதொன்றும் இல்லாதிருந்தது பெரிய குறையாம்; இதைப்பற்றி இப்போது தேசாபிமானிகளில் சிலர் முறைப்படுகிறார்களாம். இவர்க

ளுடைய முறைப்பாட்டைக்கேட்டு மேற்சொன்ன குறையை நிவர்த்திசெய்ய சர்க்காருக்கு ஆவல் பிறந்திருக்கிறதாம். இந்த ஆவலால் தூண்டப்பட்டு, அடியிற்கண்ட மூன்று அநுமதிகளைத் தாராள மனதோடு கொடுக்க, சர்க்கார் துணிந்திருக்கிறதாம்:—

1. பாடசாலைக் கட்டிடங்களில் மதவிஷயமான பாடங்கள் நடத்தவும் ஜெபங்கள் சொல்லவும்,

2. மதவிஷயமான பாடங்களைக் கற்றுக்கொடுப்போமென்று தாங்களாய் முன்னுக்குவரும் உபாத்திமாரை ஏற்றுக்கொள்ளவும்

3. பெற்றோர்கள் எழுத்துமூலமாய்க் கேட்டுக்கொண்டால் அவர்களுடைய பிள்ளைகளை மதவிஷயமான பாடங்களைப் படிப்பதற்குக் கட்டாயப்படுத்துவதோடு அப்பாடங்களைப் படிப்பதில் செலவழிக்கும் நேரத்தை ஏனைய பாடங்களைப் படிப்பதுபோல் பள்ளிக்கூட வேலைநேரத்துக்குட்படுத்தவும்.

இந்த மூன்று அநுமதிகளையும் கொடுப்பதால் இனி மேற்கூறிய குறை இல்லாதொழியுமென்று சர்க்கார் நம்புகிறதுபோலும்.

* * *

ஆனால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் எத்தனை மதங்களைக் கற்றுக்கொடுப்பது? ஒவ்வொரு மதத்திலும் (கத்தோலிக்கு மதம் நீங்கலாக) எத்தனை பிரிவுகளை அங்கீகரித்துக்கொள்வது? ஒரு பிரிவைச்சேர்ந்த உபாத்தியாயரை மற்றப் பிரிவார் ஏற்றுக்கொள்வார்களா? ஒவ்வொரு பிரிவாரின் பாடங்களையும் மேல்பார்த்து நடத்துவிக்க தலைமை உபாத்தியாயருக்குச் சாத்தியப்படுமா? சில பிள்ளைகள் மதவிஷயமான பாடங்களைப் பள்ளிக்கூட நேரத்தில் படிக்கும்படி கட்டாயப்படுத்தியும் வேறு சிலரை அப்படிப்பிலிருந்து விடுவித்தும்விடுவதால் ஏற்படும் அலங்கோலங்களைப் பரிகரிப்பது எப்படி? ஒரே பாடசாலையில் ஒன்றுக்கொன்று விரோதமான கொள்கைகளைப் போதிப்பதால் வாக்குவாதங்களும், சண்டைகளும் உண்டாகாதபடி தடுப்பதற்கு என்ன உபாயங்களைப் பிரயோகிப்பது?



இவைமுதலான விஷயங்களைக் கவனித்து முடிவுகட்டிய பின்தான் மேற்கண்ட அநுமதிகளைச் சர்க்கார் கொடுக்கத் துணிவார்களென்று நம்புகிறோம்.

* * *

## முதல் வகுப்பில் தமிழ் வாசிப்பு

நமது பாடசாலைப் பாடக்கிரமத்தில் சொல்லியிருப்பதுபோல், முதல்வகுப்பில் படித்த பிள்ளைகள் தங்களுக்கு அர்த்தம் விளங்கக்கூடிய பதங்களைத் தத்தளிக்காமல் வாசிக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும். ஆனால் இது இந்த வகுப்பில் தமிழ் வாசிப்புப் பாடத்தின் முழு நோக்கமல்ல. தங்களுக்கு அர்த்தம் விளங்கக்கூடிய பதங்களைத் தத்தளிக்காமல் வாசிக்கக்கூடிய பிள்ளைகள் தமிழ் எழுத்துச்சுவடியிலுள்ள சகல எழுத்துக்களின் உருவங்களையும் பார்த்தவுடன் அறிந்து, அததற்குரிய சப்தங்களைப் பிசகின்றி உச்சரிக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும். இப்படி உச்சரிக்கக்கூடுமானால், தமிழ்ப் பாஷையில் எழுதப்பட்ட எந்தப் புத்தகத்தையும் எடுத்தவுடனே வெறும்வாசிப்பாக (அதாவது அர்த்தம் விளங்கினாலும் சரி, விளங்காவிட்டாலும் சரி) திருத்தமான உச்சரிப்போடு வாசிக்கவுங்கூடும். இப்படியே சிறுவர்கள் வாசிக்கக்கூடியவர்களாக முதலாவது வகுப்பைவிட்டு இரண்டாவது வகுப்புக்குப் போவார்களானால், இனி வெறும் வாசிப்பில் காலத்தை வீணாய்ப் போக்காமல் தமிழ்ப் பாஷையை நுணுக்கமாய்ப் படிப்பதில் காலத்தைச் செலவழித்து எவ்வளவு பயனடையலாம்! இவ்வளவு பயனையும் பிள்ளைகள் அடையும்படி ஆசிக்கிற உபாத்தியாயர் தமது பாடக்கிரமத்தில் குறித்திருப்பதை மாத்திரமல்ல, நாம் முன் கூறியபடி, தமிழ்ப்பாஷையின் சகல எழுத்துக்களையும் தமது பிள்ளைகளுக்கு முழுதும் கற்பித்தனுப்பக் கருத்துக்கொண்டிருத்தல் அவசியம். சில வார்த்தைகளைமாத்திரம் வாசிக்கப் பழக்குவது போதாது; எந்த வார்த்தையையும் வாசிக்கப் பழக்கவேண்டும். இது ஆங்கிலம் முதலிய பாஷைகளில் சாத்தியப்படாது; இப்பாஷைகளிலுள்ள எழுத்துக்களையெல்லாம் அறிந்தாலும், எல்லா வார்த்தைகளையும் வாசிக்கமுடியாது. இதனால்

தான் அந்தப் பாஷைகளில் வார்த்தைகளை வாசிக்கப் பழக்குவதே முதல்வகுப்பின் முழு நோக்கம்; அதற்கென்றே அநுசரிக்கவேண்டிய முறைகளும் வழங்கிவருகின்றன. ஆனால் தமிழ் வாசிப்புக் கற்றுக்கொடுக்கும் முறையோ வார்த்தைகளைக் கற்றுக்கொடுப்பதற்கல்ல, எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பதற்குச் சாதனமாகவேண்டும். ஆதலால் ஆங்கில வாசிப்புக் கற்றுக்கொடுக்கும் முறையையே யாதொரு மாற்றமின்றி தமிழ் வாசிப்புக்கும் உபயோகிப்பது தகுதியன்று. சரியான முறையைக் கண்டுபிடிக்கவேண்டுமானால், சரியான நோக்கம் இன்னதென்பதை உபாத்தியாயர் மனதில் தெளிவாய்க் கொண்டிருப்பது இன்றியமையாதது.

இந்தச் சரியான நோக்கம் யாதென்று சொல்லியாயிற்று. அதாவது, முதல்வகுப்புப் படித்துமுடித்த பிள்ளைகள் எந்தத் தமிழ்ப் புத்தகத்தையும் வாசிக்கக்கூடியவிதமாய், தமிஷ்ப்பாஷையின் எழுத்துச்சுவடி முழுவதும் அறிந்து அந்தந்த எழுத்தின் உருவங்களைக் கண்டவுடனே அதின் சப்தத்தைத் திருத்தமாயும், தத்தளிப்பின்றியும் உச்சரிக்கவேண்டும். இந்த நோக்கம் பலிப்பதற்காக, கையாடவேண்டிய முறை என்ன?

பழையகாலத்து வழக்கப்படி, எழுத்துகளை எழுத்துச்சுவடி வரிசைப்படி கற்பித்தபின்தான் பதங்களை வாசிக்கப் பழக்குவது தகுதியான முறையன்று. ஏனென்றால் இம்முறைப்படி எழுத்துக்களைக் கற்பதற்கும், அவ்வெழுத்துக்களை வார்த்தைகளில் கண்டுபிடித்து உச்சரிப்பதற்கும் வெகுகாலம் பிடிப்பதோடு, அப்பாடம் சிறுவர்களுக்குப் பிரியமற்ற பாடமுமாகும். ஆதலால் சிறுவர்கள் பிரியத்தோடும், துரிதத்தோடும் எழுத்துக்களைக் கற்று எந்த வார்த்தையையும் தத்தளிப்பின்றி வாசிக்கும் சக்தியைக் கொடுக்கக்கூடிய நூதன முறையொன்றைக் கையாடவேண்டும்.

எந்த முறையானாலும், தெரிந்ததிலிருந்து தெரியாததைப் படிப்பிக்கவேணுமென்னும் பொது விதியை மறந்து



விடக்கூடாது. இந்த விதி மனதிலிருந்தால், தமிழ் வாசிப்புப் போதிப்பதில் மூன்றுபடிகளைக் கவனிக்கத்தகும்.

1. தெரிந்த பொருள்களின் பேர்களாகிய பதங்களை வாசித்தல்.
2. வாசித்த பதங்களிலுள்ள எழுத்துக்களைக் கற்றறிதல்.
3. கற்றறிந்த எழுத்துக்களை வேறு பதங்களில் கண்டறிதல்.

இந்தப் படிகளெல்லாம் அடங்கிய பாடம் போதிப்பதற்கு புஸ்தகத்தைவிட கரும்பலகையே உசிதமான சாதனம். அந்தந்த இடங்களிலுள்ள பிள்ளைகளுக்குத் தெரிந்த பொருள்கள் வெவ்வேறாய் இருக்கலாம்; இந்த வித்தியாசத்துக்குத்தக்கது வெவ்வேறு பதங்களை வெவ்வேறு உபாத்திமார் தெரிந்தெடுத்துப் போதிக்கவேண்டும். பதங்களிலுள்ள எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு, பற்பல அளவுள்ளதாயும் பற்பல வர்ணங்களாலும் எழுத்துக்களை எழுதுவதற்கும் கரும்பலகையே சாதனம். கடைசியாய், முன் படித்த எழுத்துக்கள் அடங்கியதாய் அநேக பதங்களை வாசிக்கப் பழக்கவும் கரும்பலகையை உபயோகிப்பதே தகுந்த வழி.

ஆனால் கரும்பலகையைச் சரியாய் உபயோகிக்கவேண்டுமானால், ஒவ்வொரு உபாத்தியாரும் தாம் போதிக்கவேண்டிய பாடத்தை முன்னதாகவே நினைத்துப் பார்த்துத் தயாரிக்கவேண்டும். இப்படி தயாரிப்பதற்கு புஸ்தகங்கள் உதவியாயிருக்கலாம். முதல் வகுப்புக்காக வழங்கிவரும் பல புஸ்தகங்களில் மகா-ா-ா-ஸ்ரீ S. G. தானியேல் என்பவர் எழுதிய புஸ்தகம் சிரேஷ்டமானது.

இவருடைய புஸ்தகத்தில் தமிழ் எழுத்துக்களை என்ன வரிசைக்கிரமமாயும் எவ்வளவு சுருக்கமாயும் போதிக்கலாமென்று காட்டியிருக்கிறது. இலேசாய் எழுதவும், உச்சரிக்கவுங்கூடிய எழுத்துக்களைக்கொண்டு துவக்கி படிப்படியாயும், உருவத்தில் ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்ட எழுத்துக்களை ஒன்றுசேர்த்து எளிதாயும், அச்சராப்பியாசம் செய்யும் வழி இப்புத்தகத்தில் குறித்திருக்கிறது. மேலும், பதவாசிப்புக்கும் ஏற்ற சில அப்பியாசங்

கள் இதில் காணலாம். அவைகளை மாதிரியாகக்கொண்டு இன்னும் அநேக அப்பியாசங்களை ஒவ்வொரு உபாத்திமாரும் சேர்த்துக்கொள்ளலாம்.

இந்த முதற்புத்தகத்தோடு சேர்ந்த அநுபந்தத்தில் எழுத்துப் போதிக்கும் முறையும், பாடக்குறிப்பு எழுதும் வகையும் விரிவாய்க் காட்டியிருக்கிறது. இந்த இரண்டு புத்தகங்களையும் கவனமாய்ப் படிப்பது உபாத்திமாருக்கு வெகு பிரயோசனமாயிருக்கும். ஆனால் பிள்ளைகளை வாசிக்கப் பழக்குவதற்கு இப்புத்தகத்தைப் பிள்ளைகள் உபயோகிப்பதைவிட உபாத்தியாயரோ கரும்பலகையை அதிகமாய் உபயோகிக்கவேண்டும்.

பிள்ளைகள் கொஞ்சம் வாசிக்கப் பழகினவுடன் ஒவ்வொரு பாடத்திலும் முந்திய பாடங்களில் கற்றுக்கொண்ட எழுத்துக்களைத் த்னித்தும் பதங்களிலும் வாசிக்கும்படி உபாத்தியாயரால் முன்னதாகவே தயாரிக்கப்பட்ட அப்பியாசங்கள் கொடுப்பது அவசியம். இந்த அப்பியாசங்களில் எழுத்துக்களை அசைகளாகப் பிரித்து வாசிக்கும்போது, மகா-ள-ள-ஸ்ரீ S. G. தானியேல் தமது புத்தக முகவுரையில் குறிக்கும் குறிப்பை மனதில் வைத்திருக்கத்தகும். அதாவது: மெய்யெழுத்துக்களை பிள்ளைகள் தனி அசைகளாக "இம்" "இக்" "இச்" என்று உச்சரிக்காமல் அவைகளை எப்பொழுதும் முந்தின உயிர் அல்லது உயிர் மெய்யெழுத்தோடு சேர்த்தே உச்சரிக்கச்செய்யவேண்டும்.

எழுத்துக்களைக் கற்றுக்கொள்வதற்காக, பதங்களை உபயோகிப்பதுபோல் சிறு சிறு வாக்கியங்களையும் உபயோகிக்கலாம். வருஷக்கடைசியில், எளிதான கதைப் புத்தகங்களைப் பிள்ளைகள் வாசிக்கப் பழக்கலாம். ஆரம்பத்தில் உபாத்தியாயர் யாதொரு கதையை வெகு உற்சாகத்தோடு சொன்னபின் அக்கதை எழுதப்பட்டிருக்கும் புத்தகத்தைப் பிள்ளைகள் கையில் கொடுத்தால் அவர்கள் ஆவலோடு அதைப் படிப்பார்கள். இவ்வித அப்பியாசமும் முதல்வகுப்புத் தமிழ் வாசிப்பின் முழு நோக்கம் நிறைவேறுவதற்கு அநுகூலமாகும்.

---



## சிறுவர்க்கான ஓர் விளையாட்டு.

### S. கந்தசாமிபிள்ளை அவர்கள் எழுதியது.

பிள்ளைகளை நான்கு சமபாகமாக நான்கு பக்கமும் சதுரமாக, முழங்காலை மடித்து இருகைகளால் இடுப்பைப் பிடித்துக்கொண்டு எதிர் எதிராக உட்காரவைக்கவேண்டும். அந்த நான்கு வரிசைக்கு A, B, C, D, என்று பெயர் கொடுத்து, A வரிசையில் ஒரு பையனையும், B வரிசையில் ஒரு பையனையும், Go என்று சொன்னவுடன் எதிராக குதித்து சதுரத்தின் மத்தியில் வரச்செய்யவும். இருபேரும் ஒருவரொருவர் கையைப் பிடித்துக்கொண்டு A வரிசைப் பையன் B பக்கமாகவும், B வரிசைப் பையன் A பக்கமாகவும் முழங்கால் மடித்தபடியே குதிக்கவேண்டும். இவ்விதமாக 4 தடவை குதித்தபிறகு Go என்று சொல்லி அவர்கள் முன் இருந்த இடத்திற்கே போய்ச் சேரும்படி செய்க. இதேவிதமாக நான்கு வரிசையிலுமுள்ள பிள்ளைகளையும் அப்பியாசப்படுத்தி ஆட்டத்தை முடிக்கவேண்டும்.

---

## ஆரம்ப ஆசிரியர்.

### (மகா-ள-ள-ஸ்ரீ S. துப்புசாமி அய்யர் அவர்கள் எழுதியது.)

'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி, அவனுக்கு மிளைத்தவன் பள்ளிக்கூடத்து வாத்தியார்' என்ற சொல் நமது தேச முழுதும் வழங்கிவருகிறதை நேயர் அனைவரும் அறிவர். இவ்விதச் சொல் பிறந்திருப்பதற்கு பல காரணங்களிருப்பினும், அக்காரணங்களை சகலரும் அறிந்திருக்கக்கூடுமாகையால், அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக்கூறாமல், முக்கியமானதை மாத்திரம் குறிக்க விரும்புகிறேன்.

'ஏதோ எழுதப்படிக்கத் தெரிந்திருப்பதோடு, பிள்ளைகளை அடக்கி ஆளுவதற்கு இயற்கையாய் ஏற்பட்டுள்ள சக்தி, பொறுமை இவை மட்டும் ஆரம்ப ஆசிரியர்களுக்குப் போதுமான யோக்கியதை' யென்று கல்வியின் உண்மையையும் பயனையும் அறியாதவர்கள் எண்ணுகின்றனர். அந்தோ! இவர்கள்மட்டுமா! ஆசிரிய சமூகத்திலுள்ள

பெரும்பான்மையோர்கூட இவ்வெண்ணத்தையே கொண்டுள்ளார். இக்காரணத்தின் பொருட்டேதான், ஜனசமூகத்தில் நம்மை நாமே கேவலப்படுத்திக்கொள்ளுகிறோம். மற்றும் மேற்கூறிய முதற்காரணத்தை மெய்ப்பிப்பதற்கேற்ப, பள்ளியிலிருந்து நீங்கியவுடனே அநேக சிறுவர்கள் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்துவிடுகிறார்கள். அமரும்பொழுது இத்தொழிலிலே நிலைத்திருக்கலாம் என்றாவது எண்ணுகிறார்களா? அவ்வெண்ணமாவதிருந்தால் மேற்கண்ட வேலையை சற்று ஊக்கத்துடன் இயற்ற மார்க்கமுண்டாகும். அதுவுமில்லை, 'ஒரு அலுவலும் கிடைக்காததற்கு இதில் இருப்போம்' என்று எண்ணி, ஒருவித ஊக்கமுமின்றி பேருக்கு ஆசிரியராக இருந்துகொண்டு, இதரத் துறைகளில் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இறங்கின துறையில் ஊக்கமில்லாதவர்களுக்கு பிரயத்தனப்படும் துறையில் இடமேது? வேறு தொழில் கிடைக்கிறவரையில் சொற்பகாலந்தானே இங்கிருப்போம் என்றெண்ணி, எடுத்துக்கொண்ட வேலையை யாதொரு ஊக்கமுமின்றி இயற்றுகிற இப்போலி ஆசிரியர்கள் எவ்விஷயத்திலும் ஊக்கம் அற்றுப்போய், எண்ணியிருந்த வேறு அலுவல்களும் கைகூடாமல், ஆசிரியர்களாகவே இருக்கும்படி நேரிட்டுவிடுகிறது. இப்பொழுது அவர்கள் எத்தகைய ஆசிரியர்களாகவிருக்கக்கூடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. (படிப்பவர்கள் எதற்கும் விலக்கு விதி உண்டென்பதை மறக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்). இம்மாதிரியான ஆசிரியர்கள் அமையும்வரையில் ஆசிரிய சமூகத்திற்கு கௌரதை ஏற்பட மார்க்கமேயில்லை. வைத்தியர்களும், வக்கீல்களும் அவரவர் துறையில் இறங்கும்பொழுது முன்னதாகவே தம் தம் துறையில் இறங்குவதென்று சங்கல்பித்துக்கொண்டு, அவரவர்களுக்கேற்ற பயிற்சியைப் பெற்று, தங்கள் அலுவல்களைப் பெருமையுடன் இயற்றி, ஜனசமூகத்தில் நன்கு போற்றப்படுகிறார்கள்.

அவ்வண்ணமே உபாத்திமைத் தொழிலில் அமர்வது என்று சங்கற்பித்து, தான் மேற்கொண்ட தொழிலைச் சரிவர இயற்றுவதற்கு வேண்டியவண்ணம், கற்கவேண்டிய



வைகளைக் கற்று, தக்க பயிற்சியையும் அடைந்து, அதன்படி நிறைவேற்றுகிறவராகவிருக்குமொருவர், ஜனசமூகத்தில் ஒரு வக்கீலைவிடவாவது, வைத்தியனைவிடவாவது தாழ்ந்தவராகக் கருதப்படமாட்டார். மற்றும் ஒரு வக்கீல் சொத்தைப்பற்றினமட்டிலும், வைத்தியர் சுகத்தைப்பற்றினமட்டிலும் உதவியாயிருக்க, ஆசிரியரோ, 'புத்தி,' 'ஆத்மா,' 'சரீரசுகம்' இம்மூன்று விஷயங்களின் அபிவிருத்தியிலும் ஈடுபட்டிருக்கிறார். எவ்விதத் தொழிலை மேற்கொள்பவரும், அந்தத் தொழிலுக்கேற்ற பயிற்சியை அடையாவிடின், அவர் அத்தொழிலை செவ்வனே நிறைவேற்ற முடியாது என்பதை எவரும் மறுக்க முடியாது. உதாரணமாக, வியாதிகளின் விவரங்களைப்பற்றியும், ஔஷதங்களின் தன்மையையும்பற்றியும் அறியாத ஒருவர் எவ்வாறு வைத்தியராகக்கூடும். அதுபோலவே ஆசிரியராக இருப்பதற்கேற்ற பயிற்சியை அடையாத ஒருவர் எவ்வாறு நல்லாசிரியராக இருக்கக்கூடும்?

ஆனால் 'ஆயிரம்பேரைக் கொன்றவர் அரைவைத்தியர்' என்பதுபோல், வைத்திய சாஸ்திரத்தின் ஒரு பகுதியையேனும் அறியாதவரும், வியாதிகளின் குணகுணங்களை அறியாதவரும், மூலிகைகளின் பெயரைக்கூட அறியாதவருமாகி எத்தனைபேர்கள் வைத்தியர்கள் என்று உலகில் உலாவிவருகிறார்கள். அவர்களால் உலகத்திற்கு ஏற்படும் உபகாரத்தை சொல்லத்தேவையில்லை. இம்மாதிரியாகவே பேருக்கு ஆசிரியர்கள் என்று அநேகர் இருக்கிறார்கள்.

எப்படி பயிற்சிபெறாத வைத்தியர்களுள், இரண்டொருவர் வியாதிகளைச் சிகிச்சை செய்வதில் சமர்த்தர்களாக ஆகிறார்களோ, அதுபோல ஏற்ற பயிற்சியில்லாத ஆசிரியர்களும் இரண்டொருவர் நல்லாசிரியராகவிருக்கக்கூடும். எனினும் ஒரு புத்தியுள்ள தகப்பன், தன் மகனை, அவனுக்கு ஏற்பட்டுள்ள வியாதியை சொஸ்தப்படுத்த இப்பேர்ப்பட்ட வைத்தியர்களிடம் ஒப்படைக்கமாட்டார். இவ்வண்ணமே மனோபிவிருத்தியின்பொருட்டு அவர் தன் மகனை இப்பேர்ப்பட்ட ஆசிரியர்களிடம் ஒப்படைக்கவும் மாட்டார்.

எப்படி ஓர் வைத்தியர், வியாதியஸ்தனுடைய வியாதி, அதற்கேற்ற மருந்து, அம்மருந்தின் குணாகுணங்கள், அவைகளை உபயோகிப்பதற்குவேண்டிய கருவிகள், காலங்கள் இவைகளை நன்கறிந்து தக்கபடி சிகிச்சை செய்கிறாரோ அதுபோலவும், எப்படி ஒரு தொழிலாளி, தான் செய்ய வேண்டிய வேலை, அதற்கேற்ற ஜாமான், கருவிகள், அவைகளை உபயோகப்படுத்தும் விதம் இவைகளை நன்கறிந்து தன் தொழிலை நிறைவேற்றுகிறாரோ, அதுபோலவும், நல்லாசிரியர்களாகவிருக்கவேண்டியவர், தம்முடைய நோக்கம், தாம் கற்பிக்கும் பையனுடைய மனோபாவம், கற்பிக்க வேண்டிய விஷயங்கள், அவைகளைக் கற்பிக்கும் முறை இவைகளை நன்கறிந்து தம் மேன்மையான கடமையைச் செலுத்தவேண்டும். ஆசிரியர் அறியவேண்டிய மேற்சொன்ன விஷயங்களைப்பற்றியும், மற்றும் வேறு சில விஷயங்களைப்பற்றியும் நமது பூங்கொத்தின் வாயிலாக காலக்ரமத்தில் வெளியிடலாம் என்ற உத்தேசம். இவ்வெண்ணம் இனிதே நிறைவேறும்படி ஈசன் அருள்புரிவாராக!

---

## சந்தாதார் பக்கம்.

*[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதுங் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]*

---

## I. ஆரம்பப் பாடசாலைகளில் சுகவழி போதித்தல்.

எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் உடற்கூறு சாஸ்திரத்தையும் சுகவழியையும் போதிக்க, பாட புத்தகங்களை எழுதச் செய்யவேண்டுமென்று டாக்டர் ஸி. பி. இராமராவ் அவர்கள் சொன்னதின்பேரில்



புதிதாக வந்திருக்கும் கல்வியிலாகா மந்திரியாகிய கனம் பாத்ரோ அவர்கள், பாடபுத்தகங்களை எழுதத் தகுதியானவரை நியமனஞ் செய்வதாகச் சொல்லியிருப்பதை 2-9-21 சுதேச மித்திரனில் 'சென்னை சட்டசபை' என்ற தலைப்பின்கீழ் பார்த்திருக்கலாம். சுகவழியைப் பற்றி பாடபுத்தகம் எழுதச் செய்யும் விஷயத்தில், நல்லாசிரியன் என்னும் மாதாந்தத் தமிழ் பத்திரிகையின் 14-ம் சம்புடத்து 257-ம் பக்கத்தில் வெளிவந்துள்ள "வைத்திய வாசகபாடம்" என்னும் விஷயத்தினையும், உடற்கூறுசாஸ்திரத்தையும் சம்மந்தப்படுத்தும் விஷயத்தில், சிலவருடங்கட்குமுன் தஞ்சைஜில்லா பாடசாலைகளின் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டராயிருந்த மிஸ்டர் வாஸ் என்பவரால் எழுதப்பட்டு, திரிசிராப்பள்ளி செயின்ட் ஜோஸப் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரசில் பதிப்பிக்கப்பெற்ற பாட புத்தகங்களையும் கவனிக்கும்படி டாக்டர் ஸி. பி இராமராவ் அவர்களையும், கனம் பாத்ரோ அவர்களையும், பாட புத்தகம் எழுத இனி நியமிக்கப்படுவோரையும் ஆரம்பப் பாடசாலைகளின் சம்பந்தமாக வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**P. பரிமணப் பல்லவராயன்,**
ஓர் ஆரம்ப ஆசிரியன்.

---

## II. போதனாமுறை பயின்ற நல்லாசிரியன்.

போதனாமுறையென்பதில் இருபதங்கள் அடங்கியுள்ளன. ஒன்று போதனை, மற்றொன்று முறை என்பதாம். போதனை என்பது ஒரு விஷயத்தை மற்றொருவர் மனதில் நன்றாய்ப் பதியும்படி சொல்லுதல். முறையென்பது கிரமம் அல்லது ஒழுங்கு இவைபோன்ற பல அர்த்தங்கள் பொருந்தத்தக்கது. ஆகையால் போதனாமுறை என்பதென்னவெனில், கற்றுக்கொடுக்கும் விஷயத்தை மாணவர் மனதில் எவ்வாறு பதிப்பிப்பது என்பதைப்பற்றிய சுலபமான வழியை அறியவும் அதனைக் கையாடவும் உபகருவியாகிய ஓர் அரியநூலாகும். இதனைக் கற்றலும் ஓர் வித்தையே. இவ்வித்தையை ஐயந்திரிபெற அறிந்து தெய்வபக்தி, நல்லொழுக்கம், நீதி, எப்போதும் படிக்கவேண்டுமென்னும் ஆசை முதலிய நற்குணங்கள் வாய்ந்த ஆசிரியனே போதனாமுறை பயின்ற நல்லாசிரியன் ஆவார்.

தெய்வபக்தியானது உபாத்தியாயருக்கு இன்றியமையாத ஓர் அரியகுணமாய் ஏற்படவேண்டும். ஏனெனில் "விசும்பிற் றுளி வீழினல்லான் மற்றாங்கே பசும் புற்றலை காண்பதரிது" என்று முதற்பாவலர் கூறுவதுபோல, வானத்தினின்று மழைத்துளி விழாவிட்டால் பசும்புல்லைப் பார்ப்பது எப்படி அருமையோ, அப்படியே உபாத்தியாயருக்கு தெய்வகடாட்சம் இல்லாவிட்டால் அவர்கள் தொடங்கும் வேலையானது சித்திபெறமாட்டாது. இதை எண்ணியே சிறந்த புலவர்களெல்லாம் தாங்கள் பாடும் முதல் பாட்டை தேவ தோஸ்திரப் பாடலாக பாடியிருக்கிறார்கள். கடவுளை ஸ்துத்தியம்பண்ணாதேபோனால் படித்துத்தான் என்ன பிரயோஜனம் என்பதாய் திருவள்ளுவநாயனாரும் "கற்றதனாலாயபயனென்கொல் வாலறிவன் நற்றாடொழாரெனின்" என்று கூறியுள்ளார். ஆகவே தெய்வபக்தியானது நல்லாசிரியனின் முதற்குணமாயிருக்கவேண்டும்.

சட்டியில் உள்ளதுதானே அகப்பையில் வரும் என்பதுபோல உபாத்தியாயரிடம் நல்லொழுக்கம் இல்லாவிட்டால் பிள்ளைகளுக்கு அவர் எவ்விதம் நல்லொழுக்கத்தைப் புகட்டக்கூடும். இதுவிஷயத்தில் உபாத்தியாயர் மணிகட்டிய ஆட்டுக்குச் சமானமாயிருக்கிறார். மணிகட்டிய ஆடு எவ்வழிச் செல்லுமோ அவ்வழியே ஏனைய ஆடுகளும் செல்லும். இன்னும் உபாத்தியாயர் பிள்ளைகளின் முன்மாதிரிகையாகும் காப்பியின் பாரத்தைப்போலுமிருக்கிறார். காப்பி பாரத்தில் முதல் வரியைப்போல் மற்ற வரியை எழுத ஆரம்பிக்கிறார்கள். அதுபோல உபாத்தியாயருடைய குணாகுணங்களையே மாணவர்கள் கண்டுபாவிப்பார்கள். ஒரு பள்ளிக்கூடத்தை சீர்திருத்தவோ அல்லது கெடுக்கவோ உபாத்தியாயரின் ஒழுக்கமே போதும். பன்றியோடு கூடிய கன்றும் மலம் தின்கும், பூவுடன் கூடிய நாறும் மணம்பெறும் என்பது பெரியோரின் அநுபவசித்தாந்தம். உபாத்தியாயர் எப்படியோ மாணவரும் அப்படியே என்பது ஆங்கிலப்பழமொழி. இதனால் நல்லொழுக்கமானது உபாத்தியாயரின் இரண்டாவது குணமாய் அமையவேண்டும்.

மூன்றாவதாக, உபாத்தியாயர் நீதியுடையவராயிருத்தல் வேண்டும்; அதாவது நடுநிலைமை கோணாதவராயிருக்கவேண்டும். ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் உபாத்தியாயரோ அவைகளை விசாரித்து துஷ்ட நிக்ரகம் சிஷ்டபரிபாலனம்



செய்யவேண்டியவராயிருக்கிறார். இதில் பிள்ளைகளின் வயதையும், திடகாத்திரத்தையும், பெற்றோர்கள், பாடசாலையின் நிலைமை ஆகிய யாவற்றையும் கவனித்து சமயோஜிதமாய் தண்டனை ஏற்படுத்தவேண்டும். ஆனால் பாரபட்சமென்பது கிஞ்சித்தும் இருக்கக்கூடாது. உபாத்தியாயர் பிள்ளைகளைக் கண்டிப்பதோ அல்லது நேசிப்பதோ பாரபட்சமாயிருக்குமானால், சிலர் உபாத்தியாயரைப் பகைக்கவும் வெறுக்கவும்கூடும். இதனால் உபாத்தியாயரின் வார்த்தைகளை பிள்ளைகள் அலட்சியம் செய்வார்கள். சில உபாத்தியாயர்கள் பிள்ளைகளை மிதமிஞ்சினவிதமாய்க் கண்டிப்பார்கள். இதனால் பிள்ளைகளின் சரீர சௌக்கியத்திற்கே சில சமயங்களில் அபாயம் ஏற்பட்டுவிடுகிறது. இன்னும் சில உபாத்தியாயர்கள் பிள்ளைகளைக் கண்டியாமலே விட்டுவிடுகிறார்கள். இதுவுந் தப்பிதம். ஆனால் நல்லாசிரியனானவர் பிள்ளைகளை சமயோஜிதமாயும் நீதியாயும் கண்டிக்கவும் நேசிக்கவும் வேண்டும். பிள்ளைகளோடு புழங்கும் எவ்விஷயத்திலும் பாரபட்சமில்லாமல் நீதியாயிருப்பவரோ உத்தம ஆசிரியர்.

நான்காவதாக, "ஓதாமலொருநாளுமிருக்கவேண்டாம்" என்றபடி உபாத்தியாயர் எந்நாளும் வாசிக்கிறவராயிருக்கவேண்டும். உபாத்தியாயரின் ஏகபிரதிக்கினை "ஆசி, வாசி, யோசி, உபதேசி" என்பதே. அதாவது எப்போதும் படிக்க ஆசைப்படவேண்டும். அப்படி ஆசித்ததை வாசிக்கவேண்டும். வாசித்த விஷயத்தை யோசித்து மனதில் தரித்துக்கொள்ளவேண்டும். கடைசியாய் அவற்றைப் பிள்ளைகளுக்கு உபதேசிக்கவேண்டும். மலையளவு கற்றிருந்தால்மாத்திரம் கடுகளவு போதிக்கக்கூடுமென்பது ஆன்றோர் வாக்கு. சிலர் பெட்டிநிரம்பப் பணமும் மூளை நிரம்பப் புத்தியும் கையைக் கெட்டிக்கொண்டு யாதொரு முயற்சியும் செய்யாமலிருந்தால் வந்துவிடுமென்று நினைக்கலாம். இது வீண் மனோரதம். இன்னும் சிலர் இவைகளை ஒரு வரம் என்று சொல்லுவார்கள். அப்படி முயற்சியில்லாமல் வரமாயிருக்குமாகில் பதினாயிரத்தில் ஒருவருக்கு அல்லது லட்சத்தில் ஒருவருக்கிருப்பதும் வெகு அபூர்வம். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்று எண்ணிக்கொண்டு கண்ட கண்ட புஸ்தகங்களையெல்லாம் வாசிப்பது நல்லாசிரியருக்கு அழகல்ல. சிறந்த கிரந்த கர்த்தாக்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களை அடிக்கடி வாசித்து கல்வியை விர்த்திசெய்து

கொள்ளவேண்டும். சாதாரண பாடசாலைகளிலும் சாஸ்திர பாடசாலைகளிலும் படிக்கிற படிப்பெல்லாம் பிரதம சிக்ஷையாகவே இருக்கின்றன. அவைகளைத் தற்பயிற்சியினால் விர்த்திப்பு செய்துகொள்ள வேண்டும். உலகத்தில் பாஷையிலாயினும் சாஸ்திரத்திலாயினும் இன்னும் மற்ற வித்தைகளிலாயினும் நன்றாய்த் தேர்ச்சி பெற்றவர்களெல்லாம் முக்கியமாய்த் தற்பயிற்சியால் (Self-culture) தேறினவர்கள்தாம். தற்பயிற்சி செய்வதில் பழைய பாடங்களைத் திரும்பத் திரும்ப வாசிப்பது அதிக பிரயோஜனம். நல்லாசிரியரும் இவ்விஷயத்தில் தம் மாணவரை அதிகமாய் வற்புறுத்தவேண்டியது. உதாரணமாக மதுரையில் கூடியிருந்த கீர்த்திபெற்ற தமிழ் வித்வான்களின் சங்கத்தில் ஒருவருக்குச் சீத்தலைச் சாத்தனார் என்று பெயர்; ஏனெனில் அவருக்கு ஞாபக சக்தி சொற்பமாயிருந்ததால் திரும்பத் திரும்ப வாசிப்பர். ஆகிலும் மனதில் பதியவில்லையென்று அதற்கு தண்டனையாக வாசிக்குந்தோறும் முறைக்கொரு அடி எழுத்தாணியால் சிரசில் அடித்து, தலை எப்போதும் சீ வடிந்துகொண்டிருந்ததாம். ஷை சங்கத்தில்தானே குடவுளுந்தர் என்று இன்னொரு வித்வான் இருந்தார். அவர் ஒரு பாட்டை திரும்பத் திரும்பச் சொல்லிப் படிக்குமுன் ஒவ்வொரு உளுந்தாய்ப்போட்டு ஒரு குடம் நிறைத்துவிடுவாராம். ஆகிலும் விடாமுயற்சியாய்த் திரும்பத் திரும்ப வாசித்து கல்வியில் தேர்ந்து அரிய சாமர்த்தியமடைந்தாராம்.

கடைசியாக, நல்லாசிரியனானவர் தான் வருஷமுழுதும் நடத்தவேண்டிய பாடத்தை மொத்தமாய் எழுதி அவைகளில் மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் அல்லது குறிக்கப்பட்ட சில கெடுவுக்குள் எவ்வளவு நடத்துவதென்று திட்டம்செய்து பிரித்து எழுதிக்கொள்ள வேண்டும். அவைகளை நடத்தியபிறகு அந்தந்தக் காலங்களின் முடிவில் பரீட்சைகள் வைத்து சோதிக்கவேண்டும். இப்படிப்பட்ட பரீட்சைகளிலிருந்து பிள்ளைகளின் தேர்ச்சி எவ்வளவென்று கண்டுபிடித்துக்கொள்ளலாம். மேலே சொல்லிய பாடக்கிரமங்களை வரையறை செய்யும்போது அது சம்பந்தமாய் எழுதியுள்ள பல புஸ்தகங்களையும் வாசித்து உபாத்தியாயர் தமது பாடக்குறிப்பு நோட்டில் எழுதிக்கொள்ளவேண்டும். இவைகளை போதிப்பதற்கு ஏற்ற உபகரணங்களும், தகுந்த முறைகளும் எவையென்று அவ்வப்போது உபாத்தி-



யாயருக்கு உண்டாகும் சமயோஜித புத்தியைக்கொண்டு எழுதியும், ஷை சாமான்களை சேகரித்து, மியூசியம் தோட்டம் முதலியவைகளை விர்த்திப்பு செய்துகொள்ளலாம். இத்தகைய நற்குணங்கள் மலிந்து, குவிந்து, நிறைந்திருக்கும் உபாத்தியாயரே போதனாமுறையில் பண்பட்ட நல்லாசிரியனாவார். இப்படிப்பட்ட நல்லாசிரியர்கள் நம் தாய் நாடாகிய இவ்விந்தியாநாட்டில் நாளுக்குநாள் அதிகரித்து அஞ்ஞானத்தையோட்டி மெஞ்ஞானத்தைப் புகட்டுவார்களாக. தேசீய நன்மைக்காக உண்மையாகவே உழைக்கும் நல்லாசிரியர்களுக்கு ஆயுள் தீர்க்கமாகுக. சகல சௌக்கியங்களும் எல்லாச் செல்வங்களும் இனிது அபிவிர்த்தியாகுக; என திருவருளைச் சிந்திக்கின்றோம்.

M. மரியசிலுவை முதலியார்,
பழைய மாணவர்.

---

## III. குருபக்தி புகட்டல்.

மாணவர்களே நீங்கள் எப்போதும் குருவிடம் பக்தி (அச்சமும் அன்பும்) வைக்கவேண்டும். இன்றேல் நீங்கள் மெய்யான கல்வியறிவு பெறுவது கஷ்டமே. நம்முன்னோர்களெல்லாம் அவ்வாறு குருவுக்கு தொண்டுபுரிந்துகொண்டு கல்வி கற்றதனாலேயே இருமைக்கும் பயன்படத்தக்க கல்வியைக் கற்று மேதாவிகளாய் விளங்கினதோடு க்ஷேமமாகவே தங்கள் வாழ்நாளைக்கழித்து வந்தார்கள். ஏறக்குறைய நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் வரையிலுங்கூட, நாட்டில் குருபக்தி குன்றாதிருந்து வந்தது. உபாத்திமார்களும் மாணவர்களைத் தங்கள் மக்கள்போல் மதித்து அவர்களுடைய கல்விமட்டுமல்ல, ஒழுக்கம், நன்னடக்கை யாவற்றையும் கண்ணுங்கருத்துமாகக் கவனித்து ஒழுங்குப்படுத்தி வந்தார்கள்.

அதிலும் வயிறு வளர்க்கமட்டுமே உதவும் இங்கிலீஷ் கற்பிக்கும் உபாத்திமாரிடமேனும் அச்சமட்டுமாவது காட்டுகிறீர்கள். நமது தாய்ப் பாஷையையும் மதாசார ஒழுக்கங்களையும் அரிய முன்னோர் நீதி நூல்களையும் கற்பித்து உங்கள் ஜன்மம் நற்பயன் பெறுமாறு உதவிபுரியும் உபாத்திமார்களைக் கடவுளாகப் பாவிக்கவேண்டும். இதற்காகவே இவர்களுக்குச் சாதாரணமாய் உபாத்தியாயர் என்னாது

குரு என்று பெயரிடப்பட்டது. இதைவிட்டு இவர்களைச் சுத்தமாகவே, அலட்சியம் செய்கிறீர்கள். அந்தோ! இது கல்வியாலாய பயனை நீங்களடையாவண்ணம் செய்துவிடுமேயென்று விசனிக்கிறோம்.

இப்பொழுதோ மாணவர்களுக்குக் குருவென்ற மதிப்பேயில்லை. உபாத்தியாயர்களும் தங்கள் பெறும் சம்பளத்திற்கு பாடப் புத்தகத்திலுள்ளவற்றை ஒருமுறை மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதோடு தங்கள் கடமை கழிந்ததென்று கருதுகிறார்கள். ஆகவே, கல்வியும் திருப்தியற்றதாகவும் வயிற்றுப் பிழைப்புக்குத் தவிர வேறொன்றுக்கும் பயனில்லாததாகவும் இருக்கிறது.

நண்பர்களே, உங்கள் நன்மையைக் கோரிக் கூறும் இதை அலட்சியம் செய்யாதீர்கள். இதைக் கவனத்தில் வைத்துக் குருவினிடமும், தாய்ப்பாஷையினிடமும் பூரண பக்தி வையுங்கள்.

கல்வி கற்பது வயிறு வளர்ப்பதற்குமட்டும் என்று கருதாதீர்கள் என்று முன்னமே கூறினோம். உலக வாழ்க்கைக்குப் பொருளீட்டல் அவசியம் என்றாலும், கல்வி கற்பது முக்கியமாக அறிவை விசாலப்படுத்தி ஆண்டவன் அருளைப் பெறுவதற்கு உதவியாகும். ஆகையால் மறுமைப் பயனைப் பெறுவதற்கு அவசியமான கல்வியைக் கற்காதவன் ஒருபோதும் கல்வி கற்றதனாலாய பயனை யடையமாட்டான்.

[உபாத்திமார் தங்கள் தொழிலின் மேன்மையையுணர்ந்து அதற்குத்தக்கபடி உழைத்து வருவது, குருபக்தி அதிகரிப்பதற்கு இன்றியமையாதது.—பத்திராதிபர்.]

D. **காசிம் முகமத்கான்,**
முதல் உதவி தமிழ் ஆசிரியன்,
போர்டு பஞ்சமா ஸ்கூல், பாளையங்கோட்டை.

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.—1921.

**Registered No. M. 1534.**

J. M. J.

**R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.**



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| | | |
|---|---|---|
| கொத்து 11. | நவம்பர் 1921. | மலர் 5. |

24 NOV 1921

## பத்திராதிபர் குறிப்புகள்.

உபகாரச் சம்பளம் பெறும் ஆரம்பப் பாடசாலை உபாத்திமார் பொதுவாய் சர்க்கார் பாடசாலை உபாத்திமாரை விடக் குறைவான சம்பளமே பெறும்படி நேர்,

கிறது. இதற்குக் காரணம் கேட்டால், முந்திய பாடசாலை மானேஜர்களின் பண நிதி போதாமலிருப்பதுதான் என்பர். இதை நிவர்த்திசெய்யவேண்டுமானால் சர்க்கார் இப்போது கொடுக்கும் சொற்ப உபகாரச் சம்பளத்தைவிட ஜாஸ்தியாகக் கொடுக்கத் துணியவேண்டும். இப்படி கொடுத்தால் சர்க்காருக்கு பணச்செலவு அதிகரியாமல் குறைவாகுமென்று திண்ணமாய்ச் சொல்லலாம். ஏனெனில், உபகாரச் சம்பளம் ஜாஸ்தியானால் அநேகர் புதுப் பாடசாலைகள் துவக்க முன்னுக்கு வருவார்கள். இவர்கள் துவக்கும் பாடசாலைகளுக்காக முழுச் செலவுமல்ல, அதில் ஒரு பாகம் மாத்திரம் சர்க்கார் உபகாரச் சம்பளமாய்க் கொடுக்கவேண்டும். உபகாரச் சம்பளம் இப்போதிருப்பது போல் குறைந்தே நின்றால் புதுப் பாடசாலைகள் துவக்க அநேகர் துணியமாட்டார்கள்; இன்னும் சொல்லவேண்டுமானால் உள்ள பள்ளிக்கூடங்களையும் அநேகர் நடத்த முடியாமல் எடுத்துவிடுவார்கள். அப்போது இப்பாடசாலைச் செலவுகளெல்லாம் சர்க்கார் கையை முழுதும் பொறுக்கும். முழுச் செலவு கொடுப்பதைவிட செலவில் ஓர் பாகம் மாத்திரம் கொடுப்பது சர்க்கார் பணச்செலவை அதிகரிக்குமா? குறைக்குமா?

* * *

அநேகர் முறைப்பட்டதினிமித்தம் உபகாரச் சம்பளத்தை அதிகரிப்பதற்குச் சர்க்காருக்கு ஆசை பிறந்திருப்பதாகத் தோன்றுகிறது. என்ன ஒழுங்குப்படி அதிகரிப்பது என்பதைப்பற்றிப் பலருடைய அபிப்பிராயங்களையும் கேட்டு கனம் டைரெக்டரவர்கள் சென்ற செப்டெம்பர்-மீ 19-உ ஓர் நிருபம் விடுத்திருக்கின்றனர்.

* * *

சர்க்கார் பாடசாலைகளில் உபாத்திமாருக்கு நிர்ணயிக்கும் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பாகமாவது ஏனைய பாடசாலைகளுக்கு உபகாரச் சம்பளமாய்க் கொடுப்பது உசிதமென்று நமக்குத் தோன்றுகிறது. இன்னும் அந்தந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவரின் தொகைக்கும் முக்கியமாய்ப் படிப்பில் தாழ்ந்த வகுப்பினரின் தொகைக்



கும் தக்கதும், ஒவ்வொரு பாடசாலையின் அபிவிர்த்திக்கும் தக்கதும், உபகாரச் சம்பளத்தை உயர்த்துவதும், நன்மை விளைவிக்கும் என்று அநுபோகத்தையிட்டுச் சொல்லக் கூடியதாயிருக்கிறது.

* * *

உபாத்திமாருக்கு இப்போது கொடுக்கும் சம்பளம் போதுமா? இக்காலத்திய அகவிலையைக் கவனித்தால் போதாதென்றே சொல்லவேண்டும். ஒரு சிறு குடும்பம் கஷ்டமின்றிச் சீவிப்பதற்கு 25 ரூபாய்க்குக் குறைந்த தொகை பற்றாதென்றே சொல்லலாம். ஆகையால் உபாத்திமாரின் குறைந்த சம்பளம் 25 ரூபாயாவது இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் உபாத்திமார் தங்கள் வேலையின் மேன்மையையுணர்ந்து அதற்கிசைய உழைத்தால்தான் இந்தச் சம்பளம் பெற யோக்கியர்களாகலாம்.

* * *

சில உபாத்திமாருக்கு உயர்ந்த சம்பளமும், வேறு சிலருக்கு குறைந்த சம்பளமும் ஏற்படுத்துவதில், அவரவர்களுடைய உழைப்பை மாத்திரமல்ல, படிப்பையும் அநுபோகத்தையும் கவனிக்கத்தகும் சென்னைக் கல்வி இலாகா ஒழுங்குகளில் கவனித்திருப்பது அந்தந்தப் பாடசாலைகளில் படித்துக்கொடுக்கும் உபாத்திமாரின் எண்ணிக்கையேயாம். இது சரியா?

* * *

இன்னும் அந்தந்த இடங்களின் அகவிலைக்குத் தக்கது வெவ்வேறு சம்பளமும் ஏற்படுத்துவது உசிதமாகாதா?

* * *

இதெல்லாம் ஆராய்ந்து பார்த்தே இனி சர்க்கார் கொடுக்கும் உபகாரச சம்பளத்தை ஓர் விதமாய் ஒழுங்குப் படுத்துவார்களென்று நம்புகிறோம். அப்படி ஒழுங்குப் படுத்துமட்டும் உபாத்திமார் தாங்கள் இறங்கிய துறையில் மனந்தளராமல் உழைத்து தங்கள் தொழிலைப்பற்றி பொது ஜனங்களின் மதிப்பை அதிகரிப்பார்களாக.

சென்ற மாதக் கடைசியில் கனம் பொருந்திய சென்னைக் கவர்னர் துரையவர்கள் திருச்சிக்கு விஜயஞ்செய்தபோது இந்த ஜில்லாக் கல்விச் சங்கமானது அவருக்கு வந்தனோபசாரமளித்து அந்தச் சங்கம் செய்யவேண்டியிருந்த வேலைகளைப்பற்றி விஸ்தரித்தது. மேலும் கவர்னர் அவர்களும் லேடி வில்லிங்டனும் பட்டணத்திலுள்ள பெரிய கலாசாலைகளைப்போய்ப் பார்த்தார்கள். லேடி வில்லிங்டன் தனிமையாக பெண்கள் பாடசாலைக்குப் போனதுமன்றி நமது போதனாமுறைப் பாடசாலைக்கும் வந்தார்கள். ஆரம்பப் படிப்பு விர்த்திக்காக நாம் வருஷா வருஷம் 50-க்குக் குறையாமல் உபாத்திமாரைப் பயிற்றுவித்து அனுப்புவதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுக்கொண்டார்கள்.

*** *** ***

சிம்லாவில் நடந்த இந்திய ஆலோசனைக் கூட்டத்தில் மத விஷயமாயும் நன்னடக்கை விஷயமாயும் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் மாத்திரமல்ல, உபகாரச் சம்பளம் பெறும் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயப் படிப்பு ஏற்படுத்தும்படி ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாம். ஆனால் இதைப்பற்றி அந்தந்த மாகாணத்திலுள்ள பொதுஜனப் பிரதிநிதிகள் தீர்மானித்துக்கொள்ளட்டுமென்று விட்டுவிட்டார்களாம். ஷை தீர்மானத்தை எதிர்த்தவர் காசிப் பட்டணத்து சமஸ்கிருத கலாசாலைத் தலைவராகிய கனம் கங்காநாதஜா என்பவர். அவர் சொன்னதென்னவென்றால்: "மதாபிமானிகளானவர்கள் ஓதினால் ஒழிய மதப் படிப்பினால் உலகத்துக்கு யாதொரு பயனில்லையென்பது அநுபோகம். மதாபிமானிகளோ இந்தியாவில் அதிகமில்லை. இந்த மேலான வேலையை மூடர்கள் வசம் ஒப்புவிக்கக்கூடாது."

*** *** ***



24 NOV 1921

## தமிழ் எழுதக் கற்பித்தல்.

தமிழ் எழுதக் கற்பித்தல் என்றால், யாதொரு கருத்தைத் தமிழ்ப்பாஷையில் திருத்தமாயும் தெளிவாயும் எழுத்தினால் வெளிப்படுத்தும் விதத்தைப் போதித்தல் என்றும், அல்லது தமிழ் அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைத் தனித்தும் கூட்டங் கூட்டமாயும் சரியாய் வரையப் பழக்குவது என்றும் அர்த்தங்கொள்ளும். முந்திய அர்த்தத்திலல்ல, பிந்திய அர்த்தத்திலேயே தமிழ் எழுதக் கற்பித்தலைப்பற்றி இங்கு ஆராய்வோம். சென்ற மாதச் சஞ்சிகையில் வாசித்தலைப்பற்றி ஆராய்ந்தபோது, பொருள் விளங்க வாசிப்பதைப்பற்றியல்ல, ஆனால் வெறும் வாசிப்பைப்பற்றி ஆராய்ந்ததுபோல, இப்போது வெறும் எழுதுதலைப்பற்றிக் கவனிப்போம். வெறும் எழுதுதல் என்பது பொருள்பட எழுதுவதற்கு ஆதாரமாகும். ஆகிலும் வெறும் எழுதுதலைத் தனியே கவனிப்பது வெகு பிரயோஜனமாயிருக்கும்.

தமிழ்ப் பாஷையில் வழங்கிவரும் ஒவ்வொரு சப்தத்தையும் அததற்குரிய அடையாளத்தால் குறிப்பதே வெறும் எழுதுதல் என்பதாகும். இப்படி எழுதவேண்டுமானால் ஒவ்வொரு சப்தத்தையும் குறிக்கும் அடையாளம் இன்னின்னதென்று முதலில் அறிந்திருக்கவேண்டும். இந்த அறிவு வாசக பாடத்தின் பயனாகும். ஆகவே, வாசகப்பாடத்தை ஆதாரமாகக்கொண்டே எழுதப் பழக்கத்தகும். ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கப் படித்தவுடனே அதன் உருவத்தை நுணுக்கமாய்க் கவனிக்கவேண்டும். அந்த உருவம் என்னென்ன கோடுகளாலாகியது, நேர்கோடுகள் எவை, வளைவு கோடுகள் எவை, படுக்கைக்கோடுகளா, செங்குத்துக் கோடுகளா, வளைவு கோடுகள் என்னென்ன மாதிரி என்னும் விபரங்களையெல்லாம் பிள்ளைகள் தெளிவாய்க் கண்டறியச் செய்யவேண்டும். இந்த அறிவை உறுத்தி ஸ்திரப்படுத்துவதற்காக, குச்சி வைத்தல், விதை அடுக்குதல் முதலிய தொழில்களை உதவிக்கொள்ளலாம். இவ்விதமாய் ஓர் எழுத்தின் உருவம் நன்றாய்ப் பிடிபட்ட

பின் அதை வரைவதற்குக் கைப்பழக்கம் உண்டாக்கவேண்டும். மணலிலும், கற்பலகையிலும், காகிதத்திலும் எழுதப் பழக்கலாம். எழுத்துக்களைத் திருத்தமாயும் அழகாயும் அமைப்பதற்கு முதலில் மூன்று கோடுகள், பின் இரண்டு கோடுகள் மத்தியில் எழுதச் செய்யவேண்டும். கடைசியாய் வரிக்கோடுகள் மாத்திரம் போட்டும், இன்னும் வரிக்கோடுகள் முதலாய் இல்லாமலும் எழுதச் செய்யவேண்டும்.

தனித்தனி எழுத்துக்களைக் கொஞ்சம் எழுதப் பழக்கியபின், அவ்வெழுத்துக்களாலாகிய பதங்களையும், பதங்களாலாகிய வாக்கியங்களையும் எழுதப் பழக்குவது எளிதாயிருக்கும். இதற்காக உபாத்தியாயர் கரும்பலகையில் எழுதுவதை மேல்வரிச் சட்டமாகக்கொள்ளலாம்; பின், கரும்பலகையிலோ, காகிதத்திலோ உபாத்தியார் ஒரு வரி எழுதிக்கொடுத்தபடி பிள்ளைகள் அதன்கீழ் எழுதச்செய்யலாம்; இன்னும் அச்சடித்த காப்பி புஸ்தகங்களைக் கையாடலாம். கடைசியாய் வாசகப் புஸ்தகத்தையே பார்த்தெழுதும் அப்பியாசங்கள் கொடுக்கலாம். இந்த அப்பியாசங்களெல்லாம் கைப்பழக்கத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டவை.

இப்படி கைப்பழக்கம் கொஞ்சம் வந்தவுடன் சொல்வதெழுதுவது என்னும் அப்பியாசம் துவக்கவேண்டும். இந்த அப்பியாசத்தின் நோக்கம் ஏதென்றால், காதால் கேட்டு மனதிலுணர்ந்த சப்தத்தை அதற்குரிய அடையாளத்தால் குறிப்பது. இதுவே எழுதப் பழக்குவதில் முக்கியமான அப்பியாசம்.

இந்த அப்பியாசம் நடத்தும் முறை தமிழ்ப்பாஷைக்குத் தகுந்ததாயிருக்கவேண்டும். ஆங்கில பாஷைக்குத் தகுந்ததாய் எழுதப்பட்ட முறைகளைக் கண்ணை மூடிக்கொண்டு அநுஷ்டிப்பதால் காலநஷ்டம் ஏற்பட்டு அப்பியாசம் குறைந்துபோகும். யாதொரு ஆங்கில வார்த்தையைச் சொல்வதைக் கேட்டு எழுதவேண்டுமானால், அந்த வார்த்தையில் அடங்கிய சப்தங்களைக் கேட்பது போதாது; அதில் அடங்கிய எழுத்துக்கள் இன்னின்னதென்று அறிய



வேண்டும். தமிழ் வார்த்தையைக் கேட்டு சப்தங்களை அறிந்தால் அந்தச் சப்தங்களுக்கு இசைந்த இன்னின்ன எழுத்துக்கள்தான் அதில் அடங்கியுள்ளனவென்று உடனே தெரியும். ஆகவே ஆங்கில வார்த்தையைக் காதால் கேட்பதோடு அதைக் குறிக்கும் எழுத்துக் கூட்டங்களைக் கண்ணால் பார்த்திருப்பது அதை எழுதுவதற்கு உதவியும் சில சமயங்களில் அவசியமுமாகும். இதனால்தான் ஆங்கில பாஷையில் டிக்டேஷன் கொடுக்குமுன், கொடுக்கப்போகும் வாக்கியங்களை அல்லது சில கடின வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதியோ, புஸ்தகத்தில் வாசிக்கச்செய்தோ, ஆயத்தம்பண்ணுவார்கள். அப்பாஷையில் இந்த அப்பியாசத்தின் நோக்கம் தனித்தனி எழுத்துக்களை எழுதுவதல்ல, முழுப் பதங்களை எழுதுவது.

ஆனால் தமிழ்ப்பாஷையிலோ ஒவ்வொரு பதத்தின் தனித்தனி சப்தங்களுக்குத் தனித்தனி அடையாளங்கள் இருப்பதால், தனித்தனி எழுத்துக்களை எழுதுவதே முழுப் பதங்களை எழுதுவதற்குச் சமானமாகும். இவ்விதமாய் தமிழ்ப்பதங்களை எழுதக் கற்பதற்கு ஆங்கில பதங்களை எழுதுவதைவிட பிரயாசையும் நேரமும் குறையும். ஆகவே, தமிழ்ப்பாஷையில் சொல்வதெழுதல் என்னும் அப்பியாசம் கொடுக்கும்போது, நாம் சொல்லும் பதங்களின் சரியான உச்சரிப்பானது பிள்ளைகள் காதில் தெளிவாய்ச் சப்திக்கவே, பிள்ளைகள் தாங்கள் கேட்டு மனதில் உணரும் அந்தந்த சப்தத்துக்குச் சரியான குறிகளை விரைவில் வரையப் பழக்கவேண்டும்; காது கேட்பதை கையானது உடனே எழுதச்செய்யவேண்டும். பார்த்தெழுதுவதற்கும் சொல்வதெழுதுவதற்கும் பாரதூர வித்தியாசம் உண்டென்பதை மனதில் வைத்திருக்கவேண்டும். பார்த்தெழுதுவதின் முதல் நோக்கம் எழுத்துக்களின் உருவங்களைக் கவனித்து சித்திரம்போல் வரையக் கற்பதால் கண்ணையும் கையையும் சம்மந்தப்படுத்துவது: சொல்வதெழுதுவதின் நோக்கமோ காதையும் கையையும் சம்மந்தப்படுத்துவது. ஆகவே நாம் சொல்வதைப் பிள்ளைகள் கவனமாய்க் கேட்டு அந்தந்த சப்தக் குறிகளையும் கவன

மாய் எழுதச் செய்வதிலேதான் சொல்வதெழுதுவது என்னும் அப்பியாசம் அடங்கியிருக்கிறது.

இதற்காக வெகுநேரம் ஆயத்தம் செய்வதில் செலவழிக்கத் தேவையில்லை. நாம் சொல்லும் பதங்களின் அர்த்தத்தைப் பிள்ளைகள் அறிந்திருந்தால் இந்த அப்பியாசத்தில் பிரியம் வைப்பார்கள் என்பது வாஸ்தவந்தான்; ஆனால் அர்த்தம் அறியாத பதங்களையும் பிள்ளைகள் எழுதப் பழக்குவது எளிது. அடிக்கடி இந்த அப்பியாசம் செய்வித்தால், பெரியவர்கள் எழுதவேண்டிய கடிதங்கள் பத்திரங்கள் முதலியவற்றை அவர்கள் வாயால் சொல்லச் சொல்ல சிறுவர்கள் அவைகளை அவர்களுக்கு எழுதிக் கொடுக்க வல்லவர்களாவார்கள்.

அந்த அப்பியாசங்களைத் திருத்தவேண்டிய விதத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம். சாதாரணமாய் உபாத்திமார் திருத்தும்விதம் ஏதென்றால், தப்பிதமான எழுத்துக்களைச் சுட்டிக்காட்டி சரியான எழுத்துக்களை தாங்களே எடுத்துக்காட்டியோ, அல்லது புஸ்தகத்தில் வாசிக்கச் செய்தோ, தப்பிதமான பதங்களை ஐந்தாறுதடவை சரியாய் எழுதச்செய்கிறார்கள். இது முற்றிலும் ஆங்கில முறை. பதங்களைச் சரியாய் எழுதுவது ஆங்கில அப்பியாசத்தின் நோக்கம். எழுத்துக்களைச் சரியாய் எழுதச் செய்வதே தமிழ் அப்பியாசத்தின் நோக்கமாயிருக்கவேண்டும். ஆகையால் சிறுவன் எழுதிய எழுத்துக்கும் அவன் உச்சரிக்கக் கேட்ட எழுத்துக்குமுள்ள வித்தியாசத்தை அவன் உணரச்செய்யவேண்டும். இதற்காக அவன் எழுதியதை அவனே வாசிக்கச்செய்து, அவன் எழுதியதற்கும் அவன் கேட்டதற்கும் உள்ள வித்தியாசத்தை அவனே கவனிக்கச்செய்யவேண்டும். தப்பிதமான எழுத்துக்களை அவனே திருத்திக்கொள்ளச் செய்வது போதும். திரும்பி ஐந்தாறுதடவை பதங்களை எழுதுவது நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அவசியமில்லை.

வெறும் வாசிப்பைப்பற்றி போன சஞ்சிகையில் சொன்னதையும், வெறும் எழுதலைப்பற்றி இங்கே



சொன்னதையும், படிப்பவர்கள் இந்த முறை யந்திர முறையேயன்றி புத்தியை விர்த்திசெய்கிற முறையல்லவென்று நினைக்கலாம். இது ஓர் விதத்தில் வாஸ்தவந்தான். ஆனால், யந்திரங்கள்போல் பிள்ளைகள் வாசிப்பதும் எழுதுவதுந்தான், புத்தியை விர்த்திசெய்யக்கூடிய பாஷா ஞானத்துக்கு அடிப்படை. இவ்விதப் பழக்கமில்லாததினால்தான் மேல் வகுப்புகளில் பாஷைப்பாடம் நடத்துவது கஷ்டமாயும் வீண் காலப்போக்காயும் முடிகிறது. இந்த யந்திரப் பழக்கம் வந்துவிட்டால் பாஷை அறிவு எவ்வளவு நுணுக்கமாயும் பிரயோசனமுள்ளதாயும் புகட்டலாம் என்பதைக் கவனிக்க.

---

## விசித்திரக் கணிதம்.

### G

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | × | 7 | = | 49 |
| 67 | × | 67 | = | 4489 |
| 667 | × | 667 | = | 444889 |
| 6667 | × | 6667 | = | 44448889 |
| 66667 | × | 66667 | = | 4444488889 |

### H

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | × | 4 | = | 16 |
| 34 | × | 34 | = | 1156 |
| 334 | × | 334 | = | 111556 |
| 3334 | × | 3334 | = | 11115556 |
| 33334 | × | 33334 | = | 1111155556 |

### J

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | × | 9 | = | 81 |
| 99 | × | 99 | = | 9801 |
| 999 | × | 999 | = | 998001 |
| 9999 | × | 9999 | = | 99980001 |
| 99999 | × | 99999 | = | 9999800001 |

---

## நரியும் கொக்கும்.

(தெரிந்த கதையை நடித்துக்காட்டல்.)

### முதல் காட்சி.

(ஓர் மரத்தடியில் கொக்கும் நரியும் உட்கார்ந்திருந்து சம்பாஷித்தல்.)

நரி: என்ன பாழான இடம் இது! ஜனசஞ்சாரமற்ற காடு என்றால் இதுதான். நான் முன்னிருந்த காட்டில் ஒவ்வொருநாளும் யாராவது என்னை விருந்துக்கு அழைப்பார்கள்; இங்கேயோ நான் யாரென்று கேட்பாரில்லை.

கொக்கு: அப்படியானால் நீர் என்னை நாளைக்கு விருந்துக்குக் கூப்பிடும். அடுத்த நாள் நான் உம்மை அழைக்கிறேன்.

நரி: நீர் வருவீரா? எவ்வளவு சந்தோஷம்! நாளை மத்தியானம் நான் உமக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். மறந்துபோகவேண்டாம்.

கொக்கு: இல்லை; மறக்கமாட்டேன்.

[இருவரும் ஒருவர்க்கொருவர் உபசாரஞ் செய்து பிரிந்துபோதல்.]

### இரண்டாம் காட்சி.

(நரியின் வாசஸ்தலத்தில் நரி தனித்திருக்கிறது.)

நரி: இந்தக் கொக்குக்காக நான் இன்று வேட்டைக்குப் போகவேண்டுமா? வேண்டாம், வேண்டாம். நேற்று நான் தின்று மீந்த மாமிசம் இருக்கிறது; அதை எடுத்து ஒருமாதிரிப் புரட்டல்போல் செய்துவைக்கிறேன்.

[மாமிசத்தை எடுத்துத் தயார் செய்கிறது.]

எனக்கோ பசியாயிருக்கிறது. இந்த மாமிசத்தை நானே முழுதும் புசிக்கவேண்டும். என்ன உபாயம் செய்யலாம்? [யோசிக்கிறது] நல்ல யோசனை! (ஓர் தட்டுவசியை எடுத்துக்கொண்டு வருகிறது) இந்த வசியில் மாமிசத்தை வைத்தால் கொக்குப்பிள்ளையின் நீண்ட அலகைக்கொண்டு ஒரு துண்டுமுதலாய் எடுக்கமுடியாது. நான் நன்றாய்ச் சாப்பிடலாம்.

[யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது; நரி எழும்பிப்போய் கொக்கை அழைத்துவருகிறது.]



நேரம் தவறாமல் வந்துவிட்டீரே. சாப்பாடு தயாராயிருக்கிறது. உட்காரும்.

[தட்டு வசியின் ஒரு பக்கத்தில் நரியும் எதிர்த்த பக்கத்தில் கொக்கும் உட்கார்ந்து சாப்பிடத் துவக்குகிறார்கள். நரி ஆத்திரத்தோடு மாமிசத்தைக் கடித்து உண்கிறது. கொக்கு ஒன்றும் எடுக்கமுடியாமல் திகைக்கிறது. நரி சாப்பிட்டானபின்.]

கொக்கு: எவ்வளவு நேர்த்தியான விருந்து! நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வருவேனென்று சொல்லியிருக்கிறீர். மறந்துபோகவேண்டாம்.

நரி: சந்தேகமில்லாமல் வருவேன்.

கொக்கு: இப்போது வந்தனம்.

[கொக்கு போய்விடுகிறது. நரி சந்தோஷத்தோடு படுத்துக்கொண்டு கொட்டாவிவிடுகிறது.]

### மூன்றாம் காட்சி.

[கொக்கானது தனியே யோசனைசெய்துகொண்டிருக்கிறது.]

கொக்கு: நேற்று எனக்கிருந்த வருத்தத்தை நரி உணரும்படி செய்யவேண்டும். என்ன செய்யலாம்?—ஆம், ஆம்! [நீண்ட வாயுள்ள ஓர் பாத்திரத்தை எடுத்துவந்து] கொஞ்சம் சூப் செய்து இந்தப் பாத்திரத்தில் விட்டுவைத்தால் நரியார் சாப்பிடுகிறதைப் பார்க்கலாம்.

[சூப் தயாரித்து, பாத்திரத்தில் வைத்துக் காத்திருக்கிறது; நரி ஓட்டமாய் வருகிறது.]

நரி: நான் பிந்திப் போகவில்லையே?

கொக்கு: இல்லை, இல்லை; சரியாய் வந்துவிட்டீர். உட்காரும்.

[கொக்கு தன் நீண்ட அலகைப் பாத்திரத்துக்குள் விட்டுக் குடிக்க ஆரம்பிக்கிறது. நரியோ பாத்திரத்தின் மேல் வடிந்துவிழும் இரண்டொரு துளிகளை நக்குகிறது.]

கொக்கு: நல்லது; நீர் செய்த வேடிக்கைக்கு வட்டியும் முதலும் வாங்கிக்கொண்டீரா? போய்வாரும். [நரி வெட்கி ஓடுகிறது.]

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின் கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதுங் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

## I. ஓர் வேண்டுகோள்.

என் அருமை ஆரம்ப ஆசிரிய நண்பர்காள்! பல பாலர் தோட்டங்களை (Kindergarten Schools) நடத்தவும், மேல்பார்வை செய்யவும், தோட்டக்காரர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பெரிய தோட்டத்திற்குத் தாம் மேலதிகாரியாயிருந்த காலத்தில் தமக்கு மிகவும் பிரியமானதோர் பூச்செடியை நட்டுத் தண்ணீர் ஊற்றிவர, அப்பூச்செடியானது நாளுக்குநாள் தினே தினே வளர, தாம் அத்தோட்டத்தைவிட்டு அகன்று புதியதோர் தோட்டத்தின் விசாரணைக்கர்த்தனாய் ஏற்பட்டாலும், ஒரு காலத்தில் தான் நட்ட செடியிலிருந்து நறுமணங்கமழும் அழகிய பல பூங்கொத்துகள் உற்பத்தியாவது நட்டவனுக்குப் பெருமையன்றோ.

இத்தென்னிந்தியாவின்கண் அமைந்துள்ள பல தோட்டக்காரர்கள் இதுகாறும் மலர்ந்த (10) பத்துக் கொத்துகளின் எல்லா மலர்களின் நறுமணத்தையும் சுகித்தநுபவித்தார்கள். இன்னும் உண்டாகும் கொத்துக்களின் மலர்களையும் பெற்றுக்கொள்ள ஆசிக்கிறார்கள். இது செடியை நட்டவருக்கு இரட்டைப் பெருமையன்றோ? இப்பெருமைக்குரித்தானவர் யார்? அவர் எந்தத் தோட்டத்தின் மேலதிகாரியாய் இருந்தார்? அத்தோட்டத்தி



லுள்ள பூங்கொத்து யாது? எனக் கேட்பீர்களோ? அவர் கனம் அமலோற்பவ சுவர்மியவர்களே. திருச்சி கத்தோலிக்கு ஆண்பிள்ளைகளின் நார்மல் பாடசாலைக்கு (R. C. Boarding and Training Institution) ஹெட்மாஸ்டராயிருந்து போதனா விஷயப் பூங்கொத்தென்ற பத்திரிகையைத் துவக்கினார். இப்போதனா விஷயப் பூங்கொத்தானது ஊக்கமது கைவிடேல் என்பதை அரணாகக்கொண்ட தற்காலமுள்ள பத்திராதிபர் கனம் J. L. மிராந்தா சுவாமியவர்களின் கண்காணிப்பிலிருப்பதால், இன்னும் க்ஷீண திசையடையாமல் நாளுக்குநாள் வளர்பிறைச் சந்திரனைப்போல், விர்த்தியாகிக்கொண்டிருக்கிறது. மேலும் நம் பத்திராதிபரவர்களின் விடாமுயற்சியால் வித்யா இலாகாவில் அப்போதைக்கப்போது ஏற்படும் புதிய ஒழுங்குகளும் சீர்திருத்தங்களும் பூங்கொத்தின் வாயிலாய்ப் பிரசுரிக்கப்படுவதால் பத்திராதிபருக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். ஒரு கை தட்டினால் எவ்வளவு ஓசை உண்டாகும்? ஒரு மரமும் தோப்பாகுமா? ஆகாதே. ஆதலால் இச்சென்னை இராஜதானியில் கல்வியின் அபிவிர்த்தி விஷயமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட 12 நபர்களில் ஒருவரும், தூத்துக்குடி நடுத்தரக் கலாசாலையின் தலைமை உபாத்தியாயரும், திருநெல்வேலி ஜில்லாக் கல்விச் சங்கத்திலும் ஒரு மெம்பரான பெருமை தங்கிய கனம் அமலோற்பவ சுவாமியவர்கள் தமது பல அலுவல்களின் மத்தியில் சிரமம் பாராமல் மாதந்தோறும் தாம் ஏற்படுத்தின பூங்கொத்திற்கு விஷயதானம் செய்வாரானால் குப்பைமேடு கோபுரமாவதுபோலும், பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ் பொற்றொடி மகளிரு மைந்தருங்கூடி நெற்பொலி நெடுநகராயினுமாகும் என்பது போலும் சிறந்த சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதே போல் பெருமையுற்றிலங்கும். மேலும் கல்விச் சங்கங்களில் நடக்கும் முக்கிய விஷயங்கள் பூங்கொத்தின் மலர்களின் வாயிலாய் வெளிவருமானால் ஆரம்ப ஆசிரியர்கள் இப்பூங்கொத்தைக் கனமாய் மதித்து வெகுவாய் ஆதரிப்பார்கள். ஆதலால் கனம் அமலோற்பவ சுவாமியவர்கள் பூங்கொத்தைத் தமது கண்மணி போல் பாவிக்கும்படியான நல்ல மனதும், நீடிய ஆயுளும், நற்

சுகமும், சர்வஜீவ தயாபரக் கடவுள் ஈந்தருள்வாராக. எமது அருமை ஆசிரிய நண்பர்காள் இக்கருத்துக்கள் இனிதே நிறைவேறும்படி நீவிர் பிரார்த்திக்குமாறு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

M. மரியசிலுவை முதலியார்,
பழையமாணவர்.

---

## II. கதையும் பாட்டும்.

பிரிய நேயர்களே, கீழ்வரும் கதையையும், பாட்டையும், II வகுப்புக்குக் கற்பித்தல் நலம்.

### கதை.

*கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.*

பூர்வகாலத்தில் காளமேகம் என்னும் படித்தவர் ஒருவர் இருந்தார். அவர் எதையும் வாயால் சொன்னாலும் பலிக்கும். ஆனால் அவர் கண்ணுக்கு அழகாகவும் இருக்கமாட்டார். நல்ல வேஷ்டியும் கட்டமாட்டார். இக்காரணத்தால் மூடர் சிலர் அவரைப் பரிகாசம் செய்வதுண்டு. இவர் ஒரு நாள் வீதிவழியே செல்லுகையில் வேம்பு என்னப்பட்ட ஒரு மூடஸ்திரி: இஃது யார்? விளக்குமாற்றுக் கட்டைபோல இருக்கிறதே, என்றாள். அதைக் கேட்டு காளமேகம் கோபங்கொண்டு நீ கூட்டக் கூட்ட அதிகக் குப்பை உண்டாகும் என்றார். அப்படியே அவள் வீடுவாசலெல்லாம் குப்பை ஆகிவிட்டது. அதனால் அவள் வீட்டு வேலை ஒன்றுஞ் செய்ய முடியாமற் போயிற்று. அன்னம் புசிக்கக்வும் கூடவில்லை. அதனால் அவள் தன் குற்றத்தை உணர்ந்து காளமேகம் என்பவரிடம் போய் பொறுத்தல் கேட்க, அவர் மனமிரங்கி குப்பை நீங்கக்கடவது என்றார்; உடனே குப்பை எல்லாம் நீங்கி விட்டது. அன்று முதல் அவள் படித்தவர்களிடத்தில் மரியாதையாய் நடந்துகொள்வாள். இக்கதையால் "கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்" என்னும் நீதி நன்கு விளங்குகின்றது.



### பாட்டு.

(பாண்டவர்தூதா) அல்லது (ஆண்டிப்பண்டாரம்) என்றமெட்டு.

பூர்வ காலத்தில் காள
மேகம் என்பவர் அவர்

(1) சகலகலை கனையும்
சாஸ்திரமாய்ப் படித்து
சான்றோராய் விளங்கிவந்தார்
சாற்றுகிறேன் கேளுங்களேன். (பூர்வ)

(2) வாயாலெதைச் சொன்னாலும்
வாஸ்தவமாய்ப் பலிக்கும்
ஆனால் கண் அழகில்லார்
அழகு கந்தை கட்டமாட்டார். (பூர்வ)

(3) வீதிவழி செல்லுகையில்
வேம்பொருத்தி என்னசொல்வாள்
விளக்குமாற்றுக் கட்டைபோல
போகிறது ஆரோ என்றாள். (பூர்வ)

(4) அவர் காதில் கேட்டிடவே
அதிககோபம் கொண்டவராய்
ஆனமட்டும் கூட்டகூட்ட
அதிக குப்பை வளருமென்றார். (பூர்வ)

(5) அன்னமது உண்ணும்போதும்
அதிககுப்பை ஆனதினால்
அவள் செய்த குற்றம் தானுணர்ந்து
செய்தி என்ன செய்தாளோ. (பூர்வ)

(6) காளமேகம் என்பரிடம்
கடும்பிழையை பொறுக்கவேண்டி
காலில் விழுந்திடவே
கண்டதூசி நீங்குமென்றார். (பூர்வ)

(7) பாலர்களே நமக்கொரு
பாங்கான நல் பாடமாம்
படித்த பெரியவரை
பழிப்பது பிசகாமே. (பூர்வ)

இங்ஙனம்,

M. சவரிமுத்து உபாத்தியாயர்,
தாட்டன்பட்டி, R. C. S.

## III. இராஜா வாழ்த்துப் பாடல்கள்.

டிசம்பர்-மீ 12-ம் உ பாடத்தக்கவை.

[பனிகாரப் பாண்டியனே, என்ற மெட்டு.]

1 வாரும் வாரும் நேசர்களே—வந்து பாரும் வைபவத்தை
கோரும் கோரு மண்டபத்தைக்—கூறுங் கூறுங் கண்டவற்றை
2 டில்லி நகர் டர்பாரிலே—டிசம்பர் பன்னிரண்டிலே
பட்ட முடி வைபவத்தைப்பற்றி—என்ன சொல்வேன் மேலே
3 பார்தலத்தையாளுஞ் ஜார்ஜிப்—பார்த்திபனைப் போற்றிடுவோ
மேதினியில் பல்வருஷம்— நீடித்திட வேண்டிடுவோம். [ம்

[ஆறுமுகவடிவேலவனே, என்ற மெட்டு.]

1 ஆர்வ நெடுங் கடலாடை யவனியை
யாண்டிடுஞ் ஜார்ஜரசன் புவி
யாண்டிடுஞ் ஜார்ஜரசன் புகழ்
நீண்டிடுஞ் ஜார்ஜரசன்
பொன் சிவிகையிலே வரும்
பொன் சிவிகையிலே வருங் காட்சியைப்
பார்க்கப் புறப்பட்டு வந்திடுவீர்
பொன் சிவிகையிலே.........

2 தேச தேச மகராஜாக்கள் போற்றிடுந்
தீராதி தீரனிவர் மகா
தீராதி தீரனிவர் வெகு
தேர்ந்த அரசனிவர்
வள் கெம்பு வைடூரியம்
வள் கெம்பு வைடூரியம் வைத்திலங்குமரி
யாசனமேறிடுவர்
வள் கெம்பு வைடூரியம்.........

3 யானைமீதேறி யரி புலியானை
யடக்கிடுந் தீர னிவர் பெரும்
பார்தலமாளுமிவர் ஞாலம்
போற்றிடும் பூவ னிவர்
புவி சக்ரவாளக் குடை
புவி சக்ரவாளக் குடை ஏந்திப் பிடித்திடும்
பூரண ராஜனிவர்
புவி சக்ரவாளக் குடை.........

Br. சந்தியாகு, பழைய மாணவர்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

282

Registered No. M. 1534.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 11. | டிசம்பர் 1921. | மலர் 6. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

கனம் சென்னை கவர்னர் அவர்கள் திருச்சிக்கு விஜயம் செய்தபோது ஷை ஜில்லாக் கல்விச் சங்கத்தார் வாசித்த வந்தனோபசாரப் பத்திரிகையை இக்கொத்தில்

அச்சிட்டிருக்கிறோம். அதற்கு கவர்னர் அவர்கள் கூறிய பதிலில் முக்கியமாய்ச் சொன்னதென்னவெனில் :

(1) ஆரம்பப் பாடசாலைகளை நடத்தும் ஸ்தல ஸ்தாபனங்களோடும் ஏனைய மானேஜர்களோடும் கல்விச் சங்கங்கள் எவ்வளவு ஒத்துழைக்குமோ அவ்வளவு ஆரம்பப் படிப்பு பரவும்.

(2) உபாத்திமாரின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமானால், அல்லது படிப்பு விர்த்திக்காக வேறே ஜாஸ்தி செலவுகள் செய்யவேண்டுமானால், படிப்பு வரி விதிப்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

(3) அதிகச் செலவு பிடிக்காததும் ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தகுந்ததுமான கட்டடப் பிளான்கள் சில தேர்ந்த சிற்பாசிரியர்கள் கூடித் தயார் செய்கிறார்களாம்.

* * *

பாடசாலைக் கட்டடங்களுக்கு செலவு எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு நல்லது. ஆனால் கட்டடங்கள் தகுந்ததாயும், நீடிக்கக்கூடியதாயும் இருக்கவேண்டும். அல்லாவிடில் செலவைக் குறைத்துப் பயனென்ன? மொத்தத்தில் செலவு ஜாஸ்தியாகவே முடியக்கூடும்.

* * *

உபாத்திமாரின் சம்பளத்தை உயர்த்தவும், ஏனைய செலவுகள் செய்யவும் குடிகள் கொடுக்கும் வரியை அதிகரிப்பதைத் தவிர வேறு வழி கிடையாதோ?

* * *

பாடசாலைகள் துவக்கி நடத்த எத்தனைபேர் முன்வருவார்களோ அவ்வளவுக்கு பொது நிதியிலிருந்து படிப்புக்காகச் செய்யவேண்டிய செலவு குறையும். அப்படி அதிகம் பேர் முன்வரவேண்டுமானால், அவர்களுக்குப் பொது



நிதியிலிருந்து அதிகமாய் உதவி செய்யவேண்டும். இந்த உதவி எவ்வளவாயிருந்தாலும் கடைசியில் பொது நிதிக்கு லாபமாகவே முடியுமென்பது திண்ணம்.

* * *

நமது பூங்கொத்து மலர்களின் இதழ்கள் அதிகரித்தால் தாவிளையென்று சில பழைய மாணவர் சொல்லிக் கொள்ளுகிறார்களாம். நமது எண்ணமும் அதுவே. ஆனால் அந்த எண்ணம் நிறைவேறும்படி பழைய மாணவர் நம்மோடு ஒத்துழைக்கக் காணோம். அநேகர் சந்தாத்தொகையைச் செலுத்துவதில்லை. V. P. வழியாய் அனுப்பினாலோ பத்திரிகையைத் திருப்பிவிடுகிறார்கள். இதுவரையில் சேர்ந்த சந்தாத் தொகையைக்கொண்டு, சென்ற வருஷக் கடனை அடைத்துவிட்டோம். மீதிப் பணம் இந்த ஆறு மாதச் செலவுக்குத்தான் போதுமானது. இன்னும் ஆறு மாதத்துக்குக் கடன் வாங்கவேண்டியதுதான். இந்தக் கஷ்டத்தில் இதழ்கள் அதிகரிப்பதற்கு வழியென்ன?

* * *

பழைய மாணவர்கள் தங்கள் சந்தாத் தொகையை ஒழுங்காய்ச் செலுத்துவதோடு ஏனையோரில் பலரையும் சந்தாதாராய்ச் சேர்க்க முயலவேண்டும். சந்தாத்தொகையை மொத்தமாய்க் கொடுக்கமுடியாவிட்டால், கூடியபோதெல்லாம் தபால் முத்திரை வாங்கி அனுப்பினாலும் போதும். ஒரு வருஷத்துக்குள் ஒரு ரூபாய்க் கொடுத்தால் போதும்; அதுவும் முன்பணமாயிருக்கவேண்டும். அல்லாவிட்டால், V. P-இல் அனுப்ப நேரிடும்; அப்போது சந்தாவுக்காக ரூ. 1-ம் தபாலாபீசுக்காரருக்கு 4 அணாவும் செலுத்தவேண்டிவரும். V. P-களைத் திருப்பிவிடுவதால் பத்திரிகையை நஷ்டத்துக்குட்படுத்துகிறார்கள். இதெல்லாம் பழையமாணவர் கவனிக்கிறார்களா?

* * *

# வந்தனோபசாரப் பத்திரிகை.

(மகா-ா-ா-ஸ்ரீ S. ஜேசுதாஸ்பிள்ளை அவர்கள் மொழிபெயர்த்தது

சென்னை மாகாண ஆட்சித்தலைவர்
அதிமேன்மை தங்கிய வெல்லிங்டன் பிரபுவுக்கு.

மேன்மை தங்கிய பிரபுவே!

திருச்சி ஜில்லா கல்விச்சங்கத்தின் அங்கத்தினர்களாகிய நாங்கள் புராதன சரித்திர பிரசித்தி பெற்றதும் நவீன கல்விகளையெல்லாம் கைக்கொண்டதுமான இந்நகர்க்கு தங்களையும், தங்கள் பெருமாட்டியாரையும் உளம்பூரித்து அழைக்கின்றோம்.

எங்கள் சபை ஏற்பட்டு ஐந்து மாதங்கள் மாத்திரம் ஆகியும், முதிர்ந்த அநேக சபைகளின் வரவேற்பைவிட எவ்வகையிலும் எங்கள் வரவேற்பு குறைவுற்றதாய் எண்ணப்படமாட்டாது.

1920-ம் வருஷத்து பிரதம கல்வி சட்டத்தால் உற்பத்தியான இச்சபை தென் இந்திய கல்வி சரித்திரத்தில் ஓர் நூதன துவக்கமாகக் குறிப்பிடப்படுவது மேன்மையுற்ற தங்கள் சமூகத்துக்கு தெரிந்த விஷயம். திருத்த சட்டத்தின்கீழ் இந்தியா கல்வி மந்திரி பொறுப்பின் கீழ் மாற்றப்பட்டும், ஒவ்வோர் ஜில்லாவின் ஸ்தல அமைப்பு, அவசியம் இவற்றைப் பொருத்தமான ஆரம்பப் படிப்பை ஒழுங்குபடுத்தும் வேலை ஷை சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இச்சபை தற்போதே துவக்கமுற்றிருப்பதால் இங்கு எடுத்துரைக்கப்படக்கூடிய அபிவிர்த்தியாவது அல்லது யாதொரு பெரிய சம்பவமாவது இல்லாதிருந்தாலும், ஆறு கூட்டங்கள் நடைபெற்றும் அவைகளில் துவக்கத்துக்குரிய அதிக வேலை செய்யப்பட்டும் இருக்கிறது. இக்கூட்டங்களில் ஆஜரானவர்களின் தொகையையும், அவைகளில் ஏற்பட்ட விவாதங்களையுங்கொண்டு அங்கத்தினர் இதில் மிகச் சிரத்தையுற்றிருப்பதும், பொது ஜன கல்வி விஷயமாய் அவர்கள் பிரயாசை எடுத்துக்கொள்வதும் நன்கு விளங்கும்.



எங்களுக்கு ஏற்பட்டுள்ள வேலை அதிக விஸ்தாரமானதும் அதிக ஆழமானதுமாம். தற்போது இந்த ஜில்லாவில் ஆண்களுக்கு 1288 பள்ளிக்கூடங்களும், பெண்களுக்கு 78 பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டுள்ளன. ஆக, கூடுதல் 1,366 பள்ளிக்கூடங்களில் 42,357 பையன்களும், 8718 பெண்களும் கல்விபயின்று வருகின்றனர். 22 லட்சம் ஜனத்தொகையுள்ளதும் பள்ளிக்கூடத்துக்கு போகத் தகுந்தபிள்ளைகள் 3 லட்சம் உள்ளதுமான இந்த ஜில்லாவில் அரை லட்சம் பிள்ளைகள்மாத்திரம் கல்வி கற்கின்றனர். இவ்விஷயம் உடனே கவனிக்கப்படத்தக்கது.

இங்கிலாந்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கிறீஸ்துவப் பள்ளிக்கூடம் அல்லது சர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடம் இருந்துவருவதுபோல எங்கள் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஸ்தல ஸ்தாபன அல்லது சர்க்கார் உதவி பெற்றுள்ள ஆரம்பப் பாடசாலை நடைபெற நாங்கள் விரும்புகிறோம். ஆரம்பப்படிப்பு சர்க்கார் நிதியின் முக்கிய பங்கை அடையவேண்டுமென்பது மாறக்கூடாத கொள்கையாகிவிட்டது. இனியாவது கல்விஇலாக்கா மந்திரி ஆரம்ப கல்வி அபிவிர்த்திக்காக அதிக தொகை காட்டுவார் என்று நம்புகிறோம்.

எந்தக் கல்வி ஸ்தாபனமும் அல்லது எந்தக் கல்வி வேலையும் நல்ல அப்பியாசம் பெற்றவரும் நல்ல சம்பளத்தில் ஏற்பட்டுள்ளவருமான உபாத்தியாயரின்றி நடைபெறாது.

அதிருப்தியுடன் வேலைசெய்யும் உபாத்திமாரைக்கொண்டு ஆரம்ப கல்விஇலாகாவை நடத்துவது விரும்பக்கூடாத விஷயமானதுபற்றி ஆரம்பப்பாடசாலை உபாத்திமாருக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டியது அவசியமென்று நாங்கள் வாதிக்கிறோம்.

நாங்கள் கவனிக்கவேண்டிய அடுத்த விஷயம் பள்ளிக்கூடக் கட்டட அபிவிர்த்தியைப்பற்றியே. மிச்சமான பள்ளிக்கூடங்கள் கேவலமாகவும் சுகாதாரத்துக்குத் தகுதியற்றதாயும் இருக்கின்றன. அவைகள் மூலதனத்தைப் பொறுத்து திருத்தப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது.

தொழிற்பயிற்சி அல்லது காரணப்புடிப்பின் பிரயோசனம் பொதுவாய் உணரப்படுவதால் உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் எந்தத் தொழிற்பயிற்சியும் நெசவுதொழிலும் வரவர ஸ்தாபிக்கப்படவேண்டியது. குடிகளுக்குரிய கல்வி ஸ்திரமற்றதாக இருக்

கும் வரையில் சர்வகலாசாலைக்குரிய கல்வியும் விர்த்திக்கு வராதென்பதை நாங்கள் வற்புறுத்துகிறோம். பலமும் முதிர்ச்சியுமான ஆரம்பகல்வியின்மேலே உயரும் ஓர் சர்வகலாசாலையை எம்நகர் கூடிய சீக்கிரத்தில் பெற்று பெருமை வாய்ந்து விளங்குமென முன் நோக்குகின்றோம். இந்நகர் அதன் சுகமுள்ள சீதோஷ்ணஸ்திதியாலும், மூன்று பெரிய கல்லூரிகளாலும் அநேக உயர்தர கல்விசாலைகளாலும், பக்கத்தில் அமைந்துள்ள புண்ணியநதி காவேரியின் பெருக்காலும், எல்லாவற்றிற்கும் மேலாக ரெயில் பாதைகள் வெகு மத்திய ஸ்தானம் வகிப்பதாலும், சர்வகலாசாலை கல்விமுயற்சி ஸ்தாபனமாக மிகவும் தகுதியுற்று விளங்குகிறதென்பது எங்கள் அபிப்பிராயம்.

மேன்மைதங்கிய சக்கரவர்த்தி 1912-ஷ த்தில் கல்கத்தா சர்வகலாசாலையின் உபசாரவார்த்தைகளுக்கு பதில் அளிக்கையில் பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்: "இந்நாடு எங்குபார்த்தாலும் கல்விசாலைகளாலும் கல்லூரிகளாலும் நிறைந்திருக்கவும் அவைகளினின்று ராஜபக்தியும் ஆண்மைத்தன்மையும், பிரஜானுகூலமும் வாய்ந்துள்ள பிரஜைகள் அவர்களின் சொந்தக் கைத்தொழில்களையும் விவசாயத்தையும் இன்னும் ஜீவியத்துக்கான எல்லா வேலைகளையும் செய்ய வல்லவராக வெளிப்பட நாம் விரும்புகின்றோம்." இந்த பெருமைவாய்ந்த சொற்கள் எங்கள் செவிகளில் இன்னும் தொனிப்பதுமன்றி எம்முடைய இலக்குமாகும். அப்பேர்ப்பட்ட இலக்கை அடைய தங்களுடைய மேன்மைதங்கிய சர்க்கார் எங்களெல்லோருக்கும் அவசியமான உதவிபுரிந்து வழியைக் காட்டுமென்று உறுதிகொண்டுளோம். மேன்மைதங்கிய சக்கரவர்த்தி முன்நிழலாகக் காண்பித்த அந்த உயர்ந்த லக்குக்கு நாங்கள் வந்துசேர அவசியமான எங்கள் முயற்சிகளுக்கு தாங்கள் யோசனைகூறி தங்கள் கிருபாகடாக்ஷத்தை எங்கள்மேல் நிறுத்த யாம் பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு நாங்கள் மனப்பூர்வ இராஜபக்தியுள்ளவர்கள் என்றும், தாங்களும் தங்கள் பெருமாட்டியாரும் இந்நகர்க்கு எழுந்தருளியதற்கு எங்கள் வந்தனத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கிறோமென்றும் நாங்கள் வற்புறுத்தி கூறுகின்றோம்.

இப்படிக்கு.

திருச்சி.
29-11-21.

தங்களின் மேன்மையுற்ற ஸ்தானத்துக்கு அதிக
கீழ்ப்படிதலுள்ள ஊழியர்
திருச்சிஜில்லா கல்விச்சங்க அங்கத்தினர்.



# பின்னங் கற்பிப்பதற்கு அஸ்திவாரப் பாடங்கள்.

பின்னங்கள் என்றால் என்னவென்றும், அவைகளைக் குறிக்கும் விதம் எப்படியென்றும், அவைகளைக் கூட்டவும் கழிக்கவும் பெருக்கவும் வகுக்கவும் பொதுவான விதிகள் யாவையென்றும் சிறுவர்கள் கண்டுபிடிக்கக் கூடியமட்டும் கண்டுணரச் செய்வதுதான் பின்னக் கணக்குக் கற்பிப்பதற்கு அஸ்திவாரம். இந்த அஸ்திவாரமில்லாமல் மேல் வகுப்புகளில் பின்னங் கற்பிப்பது கண் எனப்படும் அறிவல்ல, கண்கட்டிவித்தையேயாகும். ஒரு கோட்டுக்கு மேலும் கீழும் எண்களை எழுதுவதும், எண்களைத் தாறுமாறாய் அடிப்பதும் சிறுவர்களுக்கு விந்தையாய்த் தோன்றும்; சுருக்கல் கணக்குச் செய்வதே பின்னங் கற்பதின் உன்னத பயனாகக் காணும். ஆனால் பின்னக் கணக்கு வெறும் விந்தையல்ல; கற்பலகை வேலைக்கு மாத்திரம் பயன்படுவதல்ல. பின்னம் என்னும் எண்ணம் பகுத்தறிவின் நுட்பம்; அதைக் கையாடும் திறமை உலக வாழ்வில் அவசியம். இவையெல்லாம் பிள்ளைகளுக்கு வற்புறுத்துவதற்கு உதவியாக அடியிற்கண்ட குறிப்புகளை வரைகிறோம்.

## (1)

பின்னம் இன்னதென்று கற்பிக்குமுன்னமே பின்னங்களைப் பிள்ளைகள் கணக்குகளில் உபயோகிக்கச்செய்ய வேண்டும். அளவைசம்மந்தமான கணக்குகளில் அவைகளை உபயோகிப்பது மிகவும் எளிது. அடிக்கோலைக் கொண்டு பற்பல பொருள்களை அளக்கும்போது முழு அங்குலங்களோடு மீந்த அங்குலங்கள் அரை, கால், முக்கால் முதலியவைகளைக் கவனிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு அங்குலமும் நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட அடிக்கோல் இதற்குப் பெரும் உதவி. இப்படி அளந்து பழகினபின், அரை, கால், முக்கால் அங்குலங்களைக் கூட்டவும் கழிக்கவும் செய்யலாம். உதாரணமாக:

2 அங். + $1\frac{1}{2}$ அங். = $3\frac{1}{2}$ அங்.
$2\frac{1}{2}$ அங். + 1 அங். = $3\frac{1}{2}$ அங்.
$2\frac{1}{2}$ அங். + $1\frac{1}{2}$ அங். = 4 அங்.
2 அங். + $1\frac{1}{4}$ அங். = $3\frac{1}{4}$ அங்.
$2\frac{1}{4}$ அங். + 1 அங். = $3\frac{1}{4}$ அங்.
$2\frac{1}{2}$ அங். + $1\frac{1}{4}$ அங். = $3\frac{3}{4}$ அங்.
$2\frac{3}{4}$ அங். + $1\frac{1}{4}$ அங். = 4 அங்.

முதலிய கூட்டல்களை அடிக்கோலைக் கையாடி சிறுவர்கள் தாங்களாய்க் கண்டுபிடித்துச் செய்யலாம். அப்படியே,

$4\frac{1}{2}$ அங். − 2 அங். = $2\frac{1}{2}$ அங்.
$4\frac{1}{2}$ அங். − $2\frac{1}{2}$ அங். = 2 அங்.

முதலிய கழித்தல்களையும் பிள்ளைகள் செய்யலாம். இன்னும் கூட்டலைப்போலவே,

$1\frac{1}{2}$ அங். × 2 = 3 அங்.
$2\frac{1}{4}$ அங். × 3 = $6\frac{3}{4}$ அங்.

முதலிய சுலபமான பெருக்கல்களையும் கற்றுக்கொடுக்கலாம்.

இத்தோடு, ஓர் துண்டு நூல், நாடா, காகிதம் முதலியவற்றை இரண்டு சமபாகமாக அல்லது நாலு சமபாகமாக மடித்து, அவைகளில் அரை, கால், முக்கால், என்பது இன்னதென்று பிள்ளைகள் உணரச்செய்யலாம்.

மேற்கண்ட அப்பியாசங்களெல்லாம் கை வேலையாகவும் வாய்மொழியாகவும் செய்யவேணுமே தவிர, கரும்பலகைக் கணக்காகச் செய்யவொண்ணாது.

அங்குல சம்பந்தமாய் உணர்ந்த பின்னங்களை அடி, கெஜம் முதலிய மற்ற அளவுகள் சம்மந்தமாக உணர்வது எளிதே. இதிலிருந்து பலம், தோலா முதலிய நிறுத்தலளவை சம்மந்தமாயும், படி, ஆழாக்கு முதலிய முகத்தலளவை சம்மந்தமாயும், நாள், மணி முதலிய கால அளவை சம்மந்தமாயும், கடைசியாய் ரூபாய், அணா முதலிய நாணய சம்மந்தமாயும் படிப்படியாய்க் கண்டுணர்வது சாத்தியமாகும். இந்த அப்பியாசங்களெல்லாம் சேர்ந்து பின்னப் பாடத்துக்குப் பலமான அஸ்திவாரமாகும்.

(இன்னும் வரும்.)



## சிறுவர்க்கான சிறுகதை.

அண்ணனும் தம்பியுமான இரு சிறுவர்கள் ஒருநாள் ஒரு சிறு வடையைப்பற்றிச் சண்டைபோட்டுக்கொண்டார்கள். "அது என்னுடைய வடை" என்று இளையவன் சொல்ல, "இல்லை, என்னுடையது" என்று மூத்தவன் கத்தினான். "தருகிறாயா, தரவில்லையா?" என்று இளையவன் கோபாவேசமாய் மூத்தவன்மேல் பாய்ந்து கையை மடக்கி அடிக்க ஆரம்பித்தான்.

அச்சமயத்தில் சிறுவர்களுக்குப் பிரியமான ஓர் கிழவனார் திடீரென்று தோன்றி இளையவனைப்பார்த்து "யாரை அப்பா, அடிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அண்ணனை" என்றான் பையன்

கிழவனார் கண்ணைத் தடவி உற்றுநோக்குபவர்போல் பாவித்து "இல்லை; அண்ணனை அல்ல; யாரையென்று உண்மையாய்ச் சொல்" என்று திரும்பவும் கேட்டார்.

"அண்ணனைத்தான்" என்று பையன் திரும்பவும் சொன்னான்.

"அண்ணனையா அடிக்கிறாய்? பொய்சொல்லாதே. அண்ணனையா?"

"என் வடையை வைத்திருக்கிறானே!" என்று பையன் ஆத்திரமாய் மொழிந்தான்.

"ஆ! அந்த வடைதான் உன் அண்ணனோ? அதை வைத்திருக்கிற பையன் யாரோ எவரோவென்று பாராமல் உதைக்கிறாயோ? கேவலம்! அந்த வடையும் சிறுவடை; இப்போது நொறுங்கிப்போய் தரையில் பொடிப் பொடியாய்க்கிடக்கிறது. எடுத்துச்சாப்பிடு" என்று சொல்லிவிட்டுப் பெரியவர் மறைந்துவிட்டார்.

சிறுவன் என்னசெய்வான்!

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின் கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதுங் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

### I. பயிர் உண்டுபண்ணும் விதமும், அதற்கு அவசியமானவைகளும்.

வெண்டை, கொத்தவரை முதலிய செடிகளை நாம் எப்படிப் பயிர் பண்ணுகிறோம்? முதலில் பயிர் பண்ணுவதற்கு போதுமான இடத்தைக் கவனிக்கிறோமல்லவா? இந்த இடம் நிழலில் இல்லாமலிருக்கவேண்டும். குளம், கிணறு, குட்டை முதலியவைகள் சமீபத்திலிருக்கிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். இப்படித் தெரிந்தெடுத்த ஸ்தலத்தை கீழ்மண் மேல்மண்ணாகக் கொத்திவிடுகிறோம். பிறகு பாத்தி கட்டி விதைகளைத் தெளிக்கிறோம், அல்லது ஊனுகிறோம். இப்படிப் பயிர்செய்யும் காலத்தையும் கவனி. கோடைகாலத்தில் இப்படி செய்கிறோமேயல்லாது குளிர்காலத்தில் இல்லை. இப்பயிர் வளர்ந்துவரவேண்டுமானால் நாம் பிறகு செய்யவேண்டியதென்ன? வாரா வாரம் தண்ணீர் பாய்ச்சியும், களைபறித்தும் விடுகிறோம். இப்படிச் செய்வதிலிருந்து, பயிர் உண்டாவதற்கு எந்தக் காரணங்கள் மிகவும் அவசியமென்று தெரிகிறது? எவைகளில்லாவிட்டால் பயிர் என்பதே உண்டாகாது?

பயிர் பண்ணும் பூமி கல் தரையாயிருந்தால் கொத்துவதற்கும் உழுவதற்கும் யோக்கியமாயிருக்குமா? பயிர் பண்ணும் ஸ்தலம் சூரிய உஷ்ணம் நன்றாய்ப்படாமல் நிழலிலிருந்தால் பயிர் நன்றாய் கிளம்புமா? விதை ஊன்றும் காலம் குளிர்காலமாயிருந்தால் பயிர் செழித்து வளருமா? தண்ணீர் காலாகாலங்களில்



பாய்ச்சாவிட்டால் பயிர் பட்டுப்போகாதா? ஆகையால் பயிர் உண்டாவதற்கு மூன்று காரணங்கள் அவசியம் என்று தெரிகிறது:-

(1) மேல் மண்.
(2) போதுமான தண்ணீர்.
(3) போதுமான உஷ்ணம்.

பாலசுப்ரமணிய ஐயர்,
சர்க்கார் போதனாமுறைப் பாடசாலை,
திருச்சி.

---

### II. செட்டுத்தனம். (Economy)

கருணையங் கடவுளால் நமக்குக் கொடுத்தருளப்பட்ட ஆஸ்திபாஸ்திகளை வீணாக்காமல் நம்முடைய பிரயோஜனத்துக்காக புத்திசாலித்தனமாய் உபயோகிப்பதே செட்டு அல்லது சிக்கனம் என்று சொல்லப்படும். கடவுள் நமக்குக் கொடுத்த ஆஸ்திபாஸ்திகள் பலவிதமுண்டு. அவைகளில் முக்கியமானவை பணமும், குடியிருக்கும் வீடும், புழங்கும் சாமான்களும் துணிமணி நகைநட்டு முதலியவைகளுமாம். இவைகளில் முதலாவதும் வெகு வெகு முக்கியமானதும் பணமாம்.

பணம். "அஃகமும் காசும் சிக்கனத் தேடு." அதாவது, வீணான பல செலவுகள் செய்யாமல் தானியத்தையும் பணத்தையும் தேடிக்கொள் என்று ஒளவை பிராட்டியார் கூறுவதுபோல், செட்டுத்தனமுள்ளவர்கள் பொருளைப் போற்றி வாழவேண்டும். அப்படிக்கின்றி ஆனமுதலில் அதிகம் செலவானால் பின்னால் உண்டாகும் துன்பங்கள் அநேகமுள்ளன. சிலர் ஒரு பைசாவை லக்ஷியம் செய்கிறதில்லை. ஒரு பைசாதானேயென்று வெகு இழப்பமாய்ச் சொல்லக்கூடும். இப்படிப்பட்டவர்கள் ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை என்பதை உணரவில்லையென்றே சொல்லவேண்டும். அவர்கள் அலக்ஷியம்பண்ணும் ஒவ்வொரு பைசாவையும் வேறாய் யெடுத்துப் போட்டுப்பார்த்தால் சில வருஷங்களுக்குள் சிறுதுளி பெருவெள்ளம் ஆவதுபோல் நாம் எதிர் பார்க்காவண்ணம் பெரிய தொகையாய்விடும். அற்பமாகிய எறும்புகள் ஊரக் கல்லும் தேயுமானதால் சொற்பமென்று எண்ணி அடிக்கடி செலவிடும் வீணான பல செலவுகள் பெரியதொரு பொக்கிஷத்தை இழத்தலாகுமென்பதை செட்டுத்தனமாயிருக்க விரும்புவோர் மறக்கலாகாது. பைசாக்கள்தான் ரூபாய்களாகின்றன. நாம் ஒவ்வொரு பைசாக்களைப்பற்றியும் வேலையுள்ளவர்களாயிருந்தால்

ரூபாய்கள் தங்களைப்பற்றித் தாங்களே கவலையுள்ளவைகளாகுமென்று ஒரு சிறந்த மேதாவி சொல்லியிருக்கிறார். நாம் செலவிடும் ஒவ்வொரு பைசாவும் பிரயோஜனமான விஷயத்திற்கு செலவிடப்படுகிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். செல்வமானது செல்வவானிடமிருந்து செல்வோம் செல்வோமென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறபடியால், ஆறிடும் மேடும் மடுவும்போல இவனையறியாமலே தரித்திரதிசையில் கொண்டு வந்துவிடும். உடைமையும் வறுமையு மொருவழி நில்லாததலால் செட்டுத்தனத்தை ஆசிப்பவர்கள் பின்னால் வரும் சில விதிகளை அநுசரிப்பார்களானால் தரித்திரம் அவர்களிடம் தரித்திராமல் மேலும் மேலும் பணம் விர்த்திப்படைந்து முன்னேற்றமடைவார்கள்.

1. **வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.** வரவு செலவுக் கணக்குகளை காலதாமதம் செய்யாமல் உடனைக்குடனே பதிந்துகொள்ளவேண்டும். இப்படிக் கணக்குகள் வைப்பதில் நாள்வழிக் குறிப்பும் (தினசரி டாப்பு) பேரேடுகளும் (தனித்தனிக் கணக்குகள்) ஏற்படுவது உத்தமம். பேரேடுகளின் உதவியால் ஒவ்வொருவகைக்கும் எவ்வளவு செலவிடப்படுகிறதென்றும், அவ்வகைகளிலிருந்து எவ்வளவு கிடைக்கிறதென்றும் தெரிந்துகொள்ளலாம். தினசரி டாப்பின் உதவியால் மொத்த வரவு செலவு நாள்தோறும் அல்லது மாதந்தோறும் எவ்வளவாகிறதென்று கண்டுகொள்ளலாம்.

2. **வரவுக்கு மிஞ்சி செலவு செய்யக்கூடாது.** அரைப் பணத்திலே கலியாணம், அதிலே கொஞ்சம் வாண வேடிக்கை என்பதுபோல் சொற்ப சம்பளக்காரன் சொற்பமாய்ச் செலவிட்டு அதிலும் கொஞ்சம் மீத வைக்கவேண்டும். "வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை" என்பதைக் கடைப்பிடித்து தன்னால் கூடியமட்டும் செட்டாய்ச் செலவு செய்துகொள்ளவேண்டும். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்வானானால் கொஞ்சக் காலத்திற்கெல்லாம் அவன் பெரிய கடனாளியாகி கடன் பட்டையோ கடைகெட்டையோவென்று உலகம் பழிக்கும்படியான கேவல நிலைமைக்கு வந்துவிடுவான். சிலர் தம்முன்னோர்கள் தேடிவைத்துப்போன திரண்ட ஆஸ்தியை வைத்துக்கொண்டு விர்த்தி பண்ண முடியாமலும் வருவாய்க்குத் தக்க செலவு செய்யாமல் அதிகமாய்ச் செலவு செய்வார்களானால் அவர்கள் எதிர்பாராவண்ணம் வெகு சீக்கிரத்தில் தரித்திர தசையை அடைவார்கள். இதனாலேயே செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கித் தின்கக் காணாதென உலகில் ஓர் முதுமொழியும் வழங்குகிறது



வளவனாயினும் அளவறிந்தளித்துண் என்றபடி குபேரசம்பத்துடையவனாயினும் தன் வருமானத்திற்கு அதிகம் செலவிடாமல் மேலும் மேலும் விர்த்திப்பு செய்துகொள்ளவேண்டும்.

3. **கடன் வாங்கக்கூடாது.** சிலர் விவாக முதலிய சுப காரியங்களுக்காகிலும், வியாதி மரண முதலிய அசுப காரியங்களுக்கென்கிலும் வீடு, நகை நட்டு, உடுப்புகள் வாங்குவதற்காகவும் வேண்டிய பணம் தங்களிடம் இல்லாதபோது பின்னுக்கு அதிகமான வருமானம் கிடைக்குமென்று மனோராஜ்யம்பண்ணி கடன் வாங்குவதுண்டு. அப்படிக் கடன் வாங்கிச் செலவு செய்தபிறகு, அவர்கள் கிடைக்குமென்றெண்ணின வருமானம் ஏதோ ஓர் காரணத்தால் தடைபடுமாயின் அவர் கதி அதோகதியாய் விடும். எறும்பும் வானம்பாடியும் என்ற கதையில் கொஞ்சங் கொஞ்சமாய்த் தானியங்களைச் சேர்த்துவைத்த ஓர் எறும்பினிடத்தில் அதிகம் சம்பாதிக்கக்கூடிய ஒரு வானம்பாடி நல்ல காலத்தில் ஊதாரித்தனமாயிருந்துவிட்டு, மழை காலத்தில் ஒன்றுமகப்படாமல் எறும்பினிடத்தில் கடன் கேட்க அதற்கு எறும்பு: உனக்குக் கடன் கொடுத்தால், அதைத் திரும்ப உன்னால் எப்படிக் கொடுக்கமுடியும்? முன் உனக்குத் தானியங்கள் அகப்பட்ட காலத்தில் கவலையீனமாயிருந்ததுபோலவே, பின்னுமிருப்பாய். தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பதாய் முன்போல் செலவழிப்பாய். செலவழித்த கை நிற்குமா? ஆதலால் வாங்கின கடனை நீ கொடுப்பது மிகவும் கஷ்டமென்று சொல்லி விரட்டிவிட்டது. இதனால் கடன் வாங்குவற்கு முன்னும் பின்னும் படும் கஷ்டம் செப்பத்தரமன்று. சீதையைச் சிறை கொண்டுபோன இராவணன் மீது இராமர் படையெடுத்து வெற்றி கொள்ளும்போது இராவணன் பட்ட துக்கத்துக்குக் கங்குகரை கிடையாது. அவன் துக்கசாகரத்தி லமிழ்ந்தியிருப்பதை விவரிக்கக் கடன் கொண்டார் நெஞ்சத்தை ஒப்பிட்டிருப்பது

"விடன் கொண்ட மீனைப்போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற்
பற்றிய தேரை போலும்
திடன்கொண்ட ராமபாணம்
செருக்களத் துற்றபோது
கடன் கொண்டார் நெஞ்சம்போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்"

என்ற செய்யுளால் அறியக்கிடக்கின்றது. ஆதலால் கடனுண்டு வாழாமை காண்டலினிது என்னும் நீதி வாக்கியத்தை நாம் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும்.

4. **மாதந்தோறும் ஏதாவது மிதம் வைக்கவேண்டும்.**—உன்னையறியாமல் வழக்கத்திற்கு விரோதமாய் ஏதாவது புதிய செலவுகள் ஏற்படக்கூடும். ஒன்றில் நீ வியாதியாய் விழக்கூடும், அல்லது தள்ளொண்ணு விருந்தாடிகள் உன் இல்லம் ஏகக்கூடும், அல்லது என்றுமில்லாத பெரிய திருநாள் பெருநாள்கள் புதிதாய் உன் ஊரில் ஏற்படக்கூடும். உன் வியாபாரம் கொண்டகைத்தொழில் முதலியவைகளில் பிரதிகூலங்களுமுண்டாகக் கூடும். வருங்காலத் துன்பங்கள் எவ்வகையன்று யாரும் திட்டமாய்ச் சொல்லமுடியாததாகலால் உனக்குப் பணம் கிடைக்கும்போதெல்லாம் ஏதாவது மிதம் வைக்கவேண்டும். முட்டிக்கொண்டு குனிவதைவிட வெள்ளம் வருமுன் அணைபோட்டாற்போல மாதம் மாதம் கட்டாயம் ஏதாவது சேமித்துவைக்கப் பிரயாசப்படு.

5. **நீ வாங்கின பொருள்களுக்கு உடனுக்குடனே அதன் விலையைச் செலுத்திவிடு.**—தோட்டக்காரன் கோட்டத்திலுள்ள களைகளை உடனுக்குடனே பிடுங்காமல் வளரவிட்டுக்கொண்டே போவானானால், அவன் இறைக்கும் தண்ணீர் யாவும் செடிகளுக்கு அதிகம் பிரயோஜனமில்லாமல் அவைகள் நாளாவட்டத்தில் குன்றிப்போகவும் அதற்கு மாறாய் களைகள் விர்த்தியாகவும் ஏதுவாயிருத்தலால் அவன் பட்ட பிரயாசை யாவும் வீணாய்ப் போகும். அதுபோல நாம் பல இடங்களில் வாங்கின சாமான்களுக்கு உடனுக்குடனே கூலி கொடுக்காதேபோனால் மாதக் கடைசியில் நாம் வாங்கிய சம்பளத்தை பல சில்லரைக் கடன்களுக்குக் கொடுத்துவிட்டு முக்கியமான செலவுகளுக்குக் கடன் வாங்கவேண்டிவரும். ஆகையால் வாங்கிய சாமான்களின் விலையை உடனுக்குடனே செலுத்திவிடு.

6. **பிசினித்தனம் பண்ணாதே.**—செட்டாய்ச் செலவு செய்ய வேண்டுமென்று எண்ணிக்கொண்டு தனக்குச் சரியான சாப்பாடு எடுத்துக்கொள்ளாவிட்டால் தேசபலம் குறைந்து ஜீவனுக்கே அபாயத்தை விளைவிக்கும். அழுகிப்போன பதார்த்தங்கள் கொஞ்சம் மோசமான சாமான்கள் சொற்ப விலைக்குக் கிடைப்பதால் அவைகளை சிலர் வாங்கக்கூடும், இது பிசினிக்கு இரட்டைச் செலவு என்பதை யொக்கும். ஏனெனில் அவைகளால் வியாதி பெலக்குறைவு முதலிய அநேக துன்பங்கள் உண்டாகும். அதி



னால் ஏராளமான பணச்செலவு ஏற்படும். ஆதலால் அத்தியாவசியமான செலவுகளைக் கட்டாயம் செய்யவேண்டும். இது செட்டிமைத்தனத்திற்கு விரோதமல்ல.

பணத்தினால் குடியிருக்கும் வீடும், புழங்கும் ஜாமான்களும், அணிமணி நகைநட்டு முதலிய யாவும் கிடைக்குமாதலால், அதைக் கையாடவேண்டிய விபரம் மேலே சொல்லியாயிற்று. இன்னும் குடியிருக்கும் வீட்டைப்பற்றிய விஷயமாய் பெரிய பெரிய மாடமாளிகை கூடகோபுரங்கள் கட்டுவதில் உன் பணத்தைச் செலவிடாதே. "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்னும் முதியோர் வாக்கை ஆதாரமாகக்கொண்டு உன் அந்தஸ்துக்கேற்ற வீடு நிலம் முதலியவைகளை வாங்கி உபயோகித்துக்கொள். கடன் வாங்கி நிலம் வீடுகள் வாங்குவதை முற்றிலும் தவிர்த்துவிடு.

புழங்கும் ஜாமான்களின் விஷயமாய் மலிவான காலங்களில் உனக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு வாங்கிவைத்துக் கொள்:—உதாரணமாக, அறுப்புக்காலத்தில் உனக்கு வேண்டிய நெல்லை வாங்கிக்கொள். மிளகாய், புளி, வெங்காயம் முதலிய ஜாமான்கள் சிலகாலங்களில் மலிவாய் அகப்படும், அந்தக்காலங்களில் அவைகளை வாங்கிக்கொள். . விலை கிராக்கியாயிருக்கும் சமயங்களில் அவைகளை வாங்காதே. ஆகையால் செட்டுத்தனமாயிருப்பவர்கள் விவேகமாயிருக்கவேண்டும். சிலர் தங்கள் வீடுகளில் ஏராளமான தவசதானியம் முன்னாலேயே சேகரித்து வைத்திருப்பதால் தாராளமாய் உபயோகிக்கக்கூடும். அப்படி உபயோகிப்பது செட்டுத்தனமன்று. அப்படிப்பட்டவர்கள் சொற்பமாய்த்தான் வாங்கிக்கொள்ளவேண்டும். அவைகளை உபயோகிப்பதில் விசேஷ சாமர்த்தியம் அவசியம். காய்கனிகள் அதிகமாயிருக்கும்போது சீக்கிரம் கெட்டுப்போகக்கூடியவைகளை முதல் முதல் உபயோகிக்கவேண்டும். அடுப்பில் வேலை முடிந்ததும் நெருப்பை எரியவிடாமல் கரியைச் சேகரித்துக்கொள்ள வேண்டும். கெட்டுப்போகக்கூடிய பதார்த்தங்களை அதிகமாய் வாங்கக்கூடாது. ருசியான பதார்த்தங்களைவிட தேக சௌக்கியத்திற்கு ஏற்ற பதார்த்தங்களை வாங்கவேண்டும். இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் புத்தியைச் சரியானவிதமாய் உபயோகிப்பதோடு அநுபவமுள்ளவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அணிமணி நகைநட்டுகள் விஷயமாய்க் கவனிக்குங்கால் கண்ணுக்குப் பகட்டானதும் வீண் டம்பமானதுமான உடைகளை அல்லது ஆபரணங்களை வாங்கக்கூடாது. தன் அந்தஸ்துக்கு

அவசியமான உடுப்புகள் துணி மலிவான காலங்கள் பார்த்து வாங்கிக்கொள்ளவேண்டும். சட்டைகள் தைக்குங்காலத்தில் மீதியான சிறு துண்டுகளைச் சேகரித்து வைத்துக்கொண்டால் அச்சட்டைகள் கிழியும்போது அதைத் தைத்துக்கொள்ளலாம். பழைய துணிகளையும் எறிந்துவிடக்கூடாது. அநேக சமயங்களில் அவைகள் வெகு பிரயோஜனமாயிருக்கும். ஆகையால் பழைய துணிக்கென்று ஒரு பெட்டியும் வைத்துக்கொள்ளவேண்டும். துணிகளை வண்ணானுக்குப் போடுமுன் அவைகள் கிழிந்திருந்தால் தைத்துப்போடவேண்டும். வண்ணானிடமிருந்து வெள்ளைகள் வந்ததும் கிழித்திருக்கிறதா இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டும். ஒரு ஜாமான் விலைக்கு வாங்குமுன் அதன் விலையைத் தீர விசாரித்து வாங்கவேண்டும், ஏமாந்துபோகக்கூடாது.

கடைசியாய்ச் செட்டிமைத்தனமானது ஒரு மனிதன் வருங்காலத் துன்பங்களுக் காதரவாயிருக்கும். அது மனிதனுக்குச் சுயாதீனத்தைக் கொடுக்கிறது. செட்டிமைத்தனத்தில் ஒருவன் பழகுவதினால் தன் புத்தி சாமர்த்தியத்தை உபயோகிப்பதில் தேர்ந்த அநுபோகசாலியாகிறான். கரும்பு தின்னக் கூலி கொடுப்பாருண்டோ? இல்லையே. அதுபோல செட்டிமைத்தனத்தினால் உண்டாகும் ஏராளமான நன்மைகளை உணர்ந்து மனிதர் யாவரும் அந்த நன்மைகளையடைய எல்லாம் வல்ல அமலநாதன் கிருபை புரிவாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

M. மரியசிலுவை முதலியார்,
பழையமாணவர்.

---

## III. ஓர் வேண்டுகோள்.

நமது ஆகஸ்ட், செப்டெம்பர், நவம்பர் மாத பூங்கொத்துகளில், விசித்திரக்கணித மென்னும் வினோத வாசனையை நுகர்ந்தேன். அது சிறுவர்களுக்கு பயன்படுவதெங்ஙனமென, பற்பல விதத்தில் யோசித்தும், ஒன்றும் புலப்படவில்லை. இவ்விஷயத்தில் நானே என் புல்லறிவால், இது ஒரு பயனுமாகாதென தீர்த்துவிடுவது அடாதமுறையாதலால், அதன் பிரயோஜனம் இன்னதென பூங்கொத்தின் வாயிலாவாக வெளிப்படுத்த வேண்டுகிறேன். கனம் பத்திராதிபரவர்கள் கேள்விக்கு பதிலை எதிர்பார்த்திருந்தேன். நாளதுவரையிலும் ஒன்றுங் காண்கிலேன்.

இங்ஙனம்,
போதனாமுறைப் பாடசாலை மாணவருள்ளொருவன்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1921.

Registered No. M. 1534.

J. M. J

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| | | |
|---|---|---|
| கொத்து 11. | ஜனவரி 1922. | மலர் 7. |

## பத்திராதிபர் குறிப்புகள்.

இப்புது வருடத்தில் நமது சந்தா நேயருக்கும் நமது பத்திரிகையை வாசிக்கும் சகலருக்கும் சுபம் உண்டாகப் பிரார்த்திக்கிறோம். நமது பத்திரிகையின் பிரயோஜனமும இவ்வருஷத்தில் அதிகரிக்குமாறு விரும்புகிறோம்.

ஆரம்பக் கல்வி பரம்பி நன்மை பயக்கவேணுமென்று ஆசிக்கும் சகலரும் நம்மோடு ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம். விஷயதானமும் பொருளுதவியும் நமது நோக்கம் நிறைவேறுவதற்கு வழியாகும்.

⁂ ⁂ ⁂

இவ்வருஷத் துவக்கத்தில் நமது பொக்கிஷத்தில் இருப்பு ரூ. 17-4-0 மாத்திரந்தான் என்று அறிவது உற்சாகத்தைக் குறைக்குமோ? அதிகரிக்குமோ? குறைத்தால் பயனில்லை; அதிகரித்தால் பயனுண்டு. எவ்வனம்?

⁂ ⁂ ⁂

விஷயதானம் செய்ய அநேகர் துணிந்தால் நலம். விஷயங்களைப்பற்றி இன்னும் அநேகர் கேள்விகேட்கத் துணிந்தால் அதிலும் நலம். வேறு கேள்வி கேட்கத் தெரியாதவர்களும இன்னின்ன விஷயங்களைப்பற்றித் தாங்கள் அறிய ஆசிப்பதாய் நமக்கு அறிவித்தால் போதும். இந்த ஆசையும் இலலாதவர்களும் உபாத்திமார்தானே? அல்லது தங்கள் தொழில் விஷயமாய்ச் சகலத்தையும் கசடறக் கற்றறிந்த பரம ஞானிகளோ?

⁂ ⁂ ⁂

சர்க்கார் உதவிபெறும் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் தொகையை நிர்ணயிப்பதில் உபாத்திமாரின் எண்ணிக்கையையும் யோக்கியாபத்திரத்தையும் மாத்திரம் கவனிப்பது போதுமா, மாணாக்கரின் எண்ணிக்கையையும் அபிவிருத்தியையும் கவனிப்பதும் அவசியமா? மாணாக்கரின் அபிவிருத்தியை அவ்வளவாய்க் கவனிக்கத் தேவையில்லையென்று அநேக வருஷங்களுக்கு முன்னும், எண்ணிக்கையையும் கவனிக்கவேண்டாமென்று இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னும் சர்க்கார் தீர்மானித்துவிட்டார்கள். இந்தத் தீர்மானத்தினால் ஐரோப்பாக் கண்டத்து ஆரம்பப் பாடசாலைகளுக்கு யாதொரு மோசம் வராததுமன்றி அவைகளில் கல்வி உயர்வும் தோன்றியிருக்க



லாம். ஆனால் இந்திய பாடசாலைகளுக்கு இந்தத் தீர்மானத்தினால் நன்மையா தின்மையா மொத்தத்தில் விளைந்தது. என்பதைக் கவனித்தவர்கள் கவனித்தமட்டும் தெரியப்படுத்துவார்களா?

⁂ ⁂ ⁂

அப்படியே உபாத்திமாரின் எண்ணிக்கையையும் அவர்களின் யோக்கியதாபத்திரங்களையும் மாத்திரம் பார்த்து உதவி செய்வது ஆரம்பப் படிப்பு பரம்புவதற்கும் விர்த்தியடைவதற்கும் எம்மட்டும் உதவியாகும் என்பதையும், அல்லது தடையாயிருக்கிறது என்பதையும் கவனித்தவர்களும், கவனித்தபடி வெளிப்படுத்தினால் பிரயோஜனமாயிருக்கும்.

⁂ ⁂ ⁂

ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் சிறுவர்களிடம் சம்பளம் வசூல் செய்யாவிடில் ஆரம்பப் படிப்பு அதிகமாய்ப் பரம்பும் என்று அநேக முனிஸிபாலிட்டிகளும் ஜில்லாப் போர்டுகளும் சர்க்காருக்கு அறிவித்ததின்பேரில் சர்க்கார் வெகு தயவாய் ஷை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இஷ்டமானால் தங்களால் நடத்தப்படும் ஆரம்பப் பாடசாலைகளில் சம்பளம் வசூல் செய்யாமல் விட்டுவிடலாமென்று உத்தரவு கொடுத்திருக்கிறதாம். ஆனால் ஷை ஸ்தலஸ்தாபனங்கள் இதுவரையில் ஆரம்பக் கல்விக்காக வருஷந்தோறும் ஒதுக்கிவைத்த தொகையோடு சம்பள வசூல் செய்தால் எவ்வளவு தொகை சேருமோ, அவ்வளவு தொகை கூட்டிவைக்கவேணுமென்று நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படாத இதரப் பள்ளிக்கூடங்களில் சம்பள விஷயத்தைப்பற்றி யாதொரு மாற்றமும் ஏற்படவில்லை.

⁂ ⁂ ⁂

## ஆரம்ப ஆசிரியர்.

(58-ம் பக்கத்தொடர்ச்சி.)

(மகா-ள-ள-ஸ்ரீ S. துப்புசாமி அய்யர் அவர்கள் எழுதியது.)

'நல்லாசிரியர், தம்முடைய நோக்கம், தாம் கற்பிக்கும் பையனுடைய மனோபாவம், கற்பிக்கவேண்டிய விஷயங்கள், கற்பிக்கும் முறை இவைகளை நன்கறிந்து தம் மேன்மையான கடமையைச் செலுத்தவேண்டும்' என்று கொத்து 11. மலர் 4-இல் கூறியுள்ளோம்.

'உபாத்தியாயரின் நோக்கம்' என்ற விஷயத்தை ஆராயப்புகுங்கால் கல்வியின் உண்மையான பொருளை அறிதல் அவசியம். இவ்விஷயம் நமது பூங்கொத்தில், அநேக மலர்களில் தோன்றியிருக்கிறது. (கொத்து 9. மலர் 4-5 இவைகளிலும் மற்ற மலர்களிலும் காணலாம்.) ஆகையால் அவ்விஷயத்தைக் குறித்து மறுபடியும் கூறுவது அனாவசியம். ஆதலால் நாம் இப்பொழுது 'பையனுடைய மனோபாவம்' என்பதைச் சற்று ஆராய்வோம்.

ஒரு நல்ல தச்சன் வேலை ஆரம்பிக்குமுன், தான், வேலைக்கு உபயோகிக்கும் மரத்தின் தன்மையைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். அதுபோலவே ஆசிரியரும் தாம் போதிக்கப்புகுமுன், தம் மாணவருடைய மனோபாவத்தின் தன்மையை அறியவேண்டியது அத்தியாவசியம். இவ்வுணர்ச்சி ஆசிரியர்களுள் சொற்பகாலமாகத்தான் உண்டாயிருக்கிறது.

இப்பொழுது நாம், ஆசிரியர் செம்மைப்படுத்தவேண்டிய பாத்திரம் சிறுவரின் மனது எனவும், அவ்வாறு செய்ய உதவும் கருவிகள் பாடசாலையின் பாடக்கிரமத்திலுள்ள பல பாடங்கள் எனவும் கொள்வோம். ஆகவே, நாம், சாதாரணமாக பாஷை, கணிதம், பூகோளசாஸ்திரம், சரித்திரம் இவைகளைக் கற்பிக்கிறோம் என்று சொல்வதைவிட, அப்பாடங்களைக் கற்றறிய சிறுவரின் மனதைச் செம்மைப்படுத்துகிறோம் என்பது சாலப்பொருந்தும்.



மனதைச் செம்மைப்படுத்தும்பொருட்டு, ஓர் ஆசிரியர், தாமாகவே, பிள்ளைகளின் மனதில் அறிவைச் செலுத்திவிடமுடியாது; ஆனால் அவர்கள் அறிவை யடையும்வண்ணம் செய்யக்கூடும். இவ்வுண்மையை உணராத சில ஆசிரியர், தாம் எவ்வளவோ சிரமப்பட்டுக் கற்பித்தும், பிள்ளைகள், சோதிக்கும்பொழுது ஏற்றவாறு விடை கூற சக்தியற்றவர்களாகவிருக்கிறார்களே என சலிப்பும் ஆச்சரியமும் அடைவதுண்டு. மாணாக்கரின் ஒத்துழைப்பின்றி, ஆசிரியர் எவ்வளவு முயற்சியெடுத்துக்கொண்டபோதிலும் அவர் போதனை ஈடேறாது.

ஆகையால் மாணாக்கரின் ஒத்துழைப்பைப் பெறும்பொருட்டு நல்லாசிரியர் செய்யவேண்டியது யாது?

அவர் கற்பிக்கும் விஷயங்கள் பிள்ளைகளின் மனதைக் கவர்ந்து, உற்சாகத்தை ஊட்டக்கூடியவைகளாகவுமிருப்பதுதான்.

மேலும், விஷயங்களைப் பிள்ளைகள் மனப்பாடமாக அறிந்துவிட்டால், அவர்கள் அவ்விஷயங்களை அறிந்ததாக சிலர் எண்ணுகிறார்கள். இங்ஙனமெண்ணுவது அவர்களின் அறியாமையே. உதாரணமாக 'நல்வழி'யிலுள்ள ஓர் செய்யுளை மனப்பாடமாக சொல்லக்கூடிய பையன், அச்செய்யுளில் அடங்கியுள்ள விஷயங்களை அறியாமலிருந்தால், அவன் அவ்வாறு சொல்லும்பொழுதே ஓர்வித உற்சாகமுமின்றி, தான் யாது சொல்கிறோம் என்பதை அறியாமலும் ஏதோ சொல்லிமுடிப்பான். மற்றும் சொற்பநேரத்திற்குள் அதையும் மறந்துவிடுவான். அதனால் அவனுக்கு ஓர்விதப் பயனுமுண்டாகாது. மனப்பயிற்சியும் ஏற்படாது.

ஆகையால் தம் மாணாக்கர்களுக்கு வாஸ்தவமான அறிவை யூட்ட விரும்பும் ஆசிரியர், பிள்ளைகளுக்கு ருசிகரமான விஷயம் யாதென்றறிந்து, அவ்விஷயத்தை உற்சாகத்துடன் கிரகிக்கும்வண்ணம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதற்கு முதலில் மாணாக்கரின் மனோபாவத்தை நன்கறிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு அறிவதற்கு, தம்முடைய சிறு பிராயத்தில் தம் மனோபாவம் எவ்வாறு இருந்ததென்பதையும், எவ்வெவ் விஷயங்களில் உற்சாகமும் எவ்வெவ்விஷயங்களில் அருவருப்பும் இருந்தது என்கிற சில விஷயங்களையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இது சுலபமான காரியமன்று; ஏனென்றால், சிறுவராயிருந்த காலமுதல் இந்நாளைக்குள்ளாக ஒருவருடைய மனோபாவங்கள் எவ்வளவோ மாறுதல்கள் அடைந்திருக்கக்கூடும். சிறுவராயிருந்தபொழுது அவருக்கிருந்த மனோபாவத்தை ஞாபகப்படுத்திக்கொள்வது சிரமந்தான். மேலும், ஒரு விஷயத்தைப் போதிக்க ஆரம்பிக்குமுன், அவ்விஷயத்திலுள்ள பல பாகங்களை, தமது ஆசிரியர் தமக்கு எவ்வாறு விளங்கவைத்தார் என்பதை ஒருவாறு ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். எந்தப் பாகம் தமக்குக் கஷ்டமாயிருந்தது என்பதையும் உணரலாம். இவ்வாறு செய்வதால், தாம், இப்பொழுது அப்பாகங்களை எவ்வாறு சுலபமாக விளங்கவைப்பது என்பது புலப்படும். இங்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். அநேக ஆசிரியர்கள் மாணாக்கர்களாயிருந்தபொழுது, தாம், பற்பல விஷயங்களின் பொருளை அறியாமலே மனப்பாடமாக அறிந்திருந்து, பிறகு அநுபவத்தினால் தாமாகவே அவைகளின் பொருளை உணர்ந்திருக்கக்கூடும். உதாரணமாக, ஓர் ஆசிரியர், தம் சிறு பிராயத்தில் 'ஓர் எண்ணை 48-இன் காரண எண்களால் பெருக்க, முதலில் 4-ஆல்பெருக்கி, பிறகு 12-ஆல் பெருக்கவேண்டும், என்று மனப்பாடமாக அறிந்திருந்து, பிறகு காலக்கிரமத்தில் அதன் பொருளை உணர்ந்திருக்கக்கூடும். அம்மாதிரியே தமது மாணாக்கர்களையும் குருட்டுத்தனமாக செய்யச்சொல்லாமல், 4, 12 இவைகளால் ஏன் பெருக்கவேண்டும்? 4-ஆல் பெருக்கிவந்தது யாது? அதை ஏன் 12-ஆல் பெருக்கவேண்டும் என்கிற விஷயங்களைப் பிள்ளைகளுக்கு நன்கு விளங்கவைக்கவேண்டும்.

ஆனால் எப்பொழுதும், ஆசிரியர், தமது சிறு பிராயத்தின் மனோபாவத்தை முற்றிலும் அநுசரித்தே விஷயங்களை நடத்திவிடுவது உசிதமாகாது. விஷயங்களுடைய



ருசிபாவங்கள் பற்பல பிள்ளைகளின் மனோபாவங்களுக்கு ஏற்றவாறு வித்தியாசப்படும். ஆதலால் பொதுவில் சிறுவர்களின் மனது எத்தன்மை வாய்ந்தது, எப்படிப்பட்ட விஷயங்களை நாடிச்செல்லும், அவைகளைப்பற்றி அவர்கள் எவ்வாறு உணருவார்கள் என்ற பற்பல விஷயங்கள் சம்பந்தமான சிற்சில பொது விதிகளை அறிந்திருப்பது மேல். இவைகளைப்பற்றி கல்வித்துறையில் நன்குழைத்த அநேக நிபுணர்கள், சிறுவர்களின் மனோபாவங்களை, நன்கு கவனித்தறிந்து, அநுபவத்தில் அவர்கள் கண்ட உண்மைகளை அநேக புத்தகங்கள் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

இத்தகைய புத்தகங்கள் அநேகமிருப்பினும், ஆசிரியர் தம்மிடத்திலுள்ள சிறுவர்களுடன் நன்கு பழகி, அவர்களுடைய மனோபாவங்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்து, அதற்கேற்ப, தம் முறைகளை அமைத்துக்கொள்வதுதான் உத்தமம்.

சிறுவர்களின் மனோபாவங்கள், அதனால் அவர்களிடத்தில் காணப்படும் இயற்கைக் குண விசேஷங்கள், இவைகளைப்பற்றி நமது பூங்கொத்தின் சங். கனம். பத்திராதிபர் பல மலர்களில் 'ஒழுக்கப்பயிற்சி' என்ற தலைப்பின் கீழ் மிகத் தெளிவாக விடுத்துள்ளார். எனினும் இரண்டொரு விஷயங்களைமட்டும் குறிப்பதற்குமுன், அநுபவமில்லாத சில ஆசிரியர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம்.

அதாவது, சிறுவருடைய மனோபாவங்கள், ருசிபாவங்கள் முதலியவை, ஒரு மனிதனுடைய மனோபாவங்கள் ருசிபாவங்கள் இவைகளையே ஒத்திருக்கும் ஆனால் வயதுக்கேற்றவாறு சற்று குறைவாகமட்டுமிருக்கும் என்ற தப்பெண்ணத்தைச் சிலர் கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே சில ஆசிரியர், தாங்கள் அறிந்தவைகளையெல்லாம், மாணாக்கர்கள் அறிந்துவிட வேண்டுமென்று எண்ணுகிறார்கள். சிலர் தாம் அறிந்திருப்பது சாமர்த்தியமெனக்கொண்டு, சிறுவர்களின் அறியாமையின் பொருட்டு, அவர்களைப் பரிகாசம் பண்ணுவதுமுண்டு. இப்படிச் செய்வது சிறுவர்க

ளும் தங்களைப்போல் 6 அடி உயரம் வளரவில்லையே என்று கேலி பண்ணுவதை ஒக்கும். இத்தகையர், சிறுவர்களின் மனோபாவங்கள் எத்தகைமை வாய்ந்தவை, எவ்வளவு தேர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதை உணர்கிறதில்லை.

இது நிற்க, 6, 7-வயதுள்ள குழந்தைகளின் மனோபாவங்களை அநுசரித்து அவர்களிடம் தோன்றும் 3 இயற்கைக் குணங்களைமட்டும் இங்கு கூறுவோம்.

**I. சுறுசுறுப்பாயிருத்தல்:**—மேற்கண்ட பிராயமுள்ள சிறுவர்கள், தங்கள் அவயவங்களின் உபயோகத்தைச் சமீபத்தில் தான் சரியானபடி உபயோகிக்க அறிந்திருக்கிறபடியால், ஓடியாடி அவைகளுக்கு அதிக வேலை கொடுக்க ஆசிக்கிறார்கள். இதுபோலவே சரியானபடி பேசப்பழகி அதிககால மாகாததால் கூச்சலிட்டு ஏதாவது பேசிக்கொண்டிருப்பதற்கு விரும்புகிறார்கள். விளையாட்டு ஸ்தலத்தில் அவர்கள், எவ்வாறு ஓடியாடிக் களித்துக் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

எப்படி அவர்கள் ஓடியாடுவதில் அதிகப் பிரியப்படுகிறார்களோ, அதுபோலவே, ஓடியாடித் திரிகிற பிராணிகளிடத்திலும், சலித்துக்கொண்டிருக்கிற வஸ்துக்களிடத்திலும் பிரியம் அதிகம். இதனாலல்லவோ சிறுவர்கள், அழகான ஓர் குரங்கின் படத்தைப் பார்ப்பதைவிட, குரங்கையே பார்க்க அதிகமாக விரும்புகிறார்கள்.

**II. பிடியங்களை உற்றுநோக்கி பிறர் செய்வதைப்போல் நடிக்க ஆசித்தல்:**—பெரியவர்கள் செய்யும் காரியங்களை, சிறுவர் விளையாட்டுகளில் நடித்துக் காட்டுதலைக் கவனியுங்கள்.

**III. புதிது புதிதான விஷயங்களை அறிய அவாக்கொள்ளுதல்:**—பெரியவர்கள் எப்பொழுதும் தங்கள் தங்கள் காரியங்களையே கவனித்துக்கொண்டிருக்க, சிறுவர்களுக்குத் தங்கள் காரியங்களைக் கவனிக்கவேண்டும் என்ற பொறுப்பு அதிகமாக ஏற்பட்டிராததலால், தங்களைச் சுற்றிலுமுள்ள புதிது புதிதான காரியங்களில் கவனத்தைச் செலுத்துவார்கள்.



மேற்கூறிய சிறுவர்களின் மூன்று இயற்கைக் குணங்களையும், நல்லாசிரியர், தமது போதனையில் தக்கவாறு உபயோகித்து மேலான பலனை அடையலாம்.

உதாரணமாக, சுறுசுறுப்பாயிருத்தல் என்கிற முதல் குணத்தைக்கொண்டு, பிள்ளைகளை எப்பொழுதும் தங்கள் எவ்வித அலுவல்களிலும் சுறுசுறுப்பாயிருக்கச் செய்யலாம். சித்திரம், எழுத்து, உருவங்கள் அமைத்தல் முதலியவைகளில் கைத்திறமையைத் தாராளமாக உபயோகிக்கச் செய்யலாம். பேசுவதில் அதிகப் பிரியமுள்ளவர்களைக் கதையால் அவர்கள் காணும் பல விஷயங்களைக் குறித்துச் சம்பாஷிக்கச் செய்யலாம். சலிக்கின்ற பொருள்களில் அதிகப் பிரியமுடையவர்களாதலால், சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம், பற்பல படங்களுக்கு பதிலாக பிராணிகளையோ, பொருள்களையோ உபயோகிக்கலாம்.

இரண்டாவது குணத்தைக்கொண்டு, எழுத்துப்பாடத்தில் அச்சுக்காப்பியை உபயோகிக்காமல், தாம் மாதிரியாக எழுதிக் காட்டி அதைப்போலவே எழுதச் செய்யலாம். மற்றும் சகல நல்லொழுக்கங்களிலும், தாம் மாதிரியாக நடந்து காட்டி சிறுவர்களையும் அவ்வழியிலேயே நடக்கும்படி தூண்டலாம்.

மூன்றாவதான குணத்தைக்கொண்டு எல்லாப் பாடங்களிலும் மனதைக் கவர்ந்து அறிவை விருத்தி செய்யக் கூடிய புதிது புதிதான கேள்விகளைக் கேட்கலாம்.

ஆசிரியருக்குப் பலனை உண்டாக்கக்கூடிய மேற்கூறிய குணங்கள், அநேக சமயங்களில் பின் கூறுமாப்போல் கெடுதல்களையும் உண்டாக்கும். அவ்வாறு கெடுதல் ஏற்படாவண்ணம் காத்தல் ஆசிரியரின் பொறுப்பு.

ஒரு குறித்த காரியத்தின் நோக்கத்தை நிதானத்துடன் கவனியாமல், பரபரப்பாயிருந்து அக்காரியத்தில் தவறிவிடக்கூடும். அவ்வாறு தவறிவிடாவண்ணம் ஆசிரியர், அவர்கள் செய்யும் காரியங்களின் காரண காரியங்களை உணர்ந்து செய்யும்படி திருத்தவேண்டும்.

பிள்ளைகள் விஷயங்களை உற்று நோக்கியபோதிலும், அவர்கள் காணும் விஷயங்களின் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தை அறியாமல் வீண் நேரத்தைப் போக்கிக்கொண்டே போவார்கள். காரண காரியங்களின் தன்மையே தெரியாது. உதாரணமாக, அவர்களுக்கெதிரிலுள்ள ஓர் படத்திலுள்ள பல பாகங்களைப்பற்றி பல கேள்விகள் கேட்டுக்கொண்டே போவார்கள். அவர்கள் அடுத்த பாகத்திலுள்ளதை அறியவேண்டிய அவாவினால் முன் சொல்லிய பாகத்தின் விவரத்தை மறந்துவிடுவார்கள்.

ஆதலால் அவர்களின் கவனத்தை அவ்வாறு சிதறவிடாமல், ஒவ்வொரு பாகமாக விளக்கிக்கொண்டு போகும்பொழுது ஒன்றுககொன்றுள்ள பரஸ்பர சம்பந்தத்தை அவர்கள் மனதில் நன்கு வற்புறுத்திக்கொண்டே போகவேண்டும்.

மேலும் புதிது புதிதான விஷயங்களைக் கற்கவேண்டும் என்ற அவாவினால் குறிப்பில்லாத எண்ணமுடையவராயிருப்பார்கள்.

அவர்கள் காணும் அநேக விஷயங்களைப்பற்றி அறிய ஆவல்கொள்ளுவார்கள். இதனால் ஒன்றைப்பற்றிய தெளிவான விவரத்தையாவது அறிகிறதில்லை.

அவ்வாறின்றி, சிறுவர்கள் காணும் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களைத் தெளியவைக்கவேண்டும்.

ஆகவே இப்பொழுது, ஆசிரியர் செம்மைப்படுத்தவேண்டிய பாத்திரமாகிய சிறுவர்களின் மனதைப்பற்றி ஒருவாறு கூறினோம். சிறுவரின் மனது, தச்சன் செம்மைப்படுத்தவேண்டிய பொருளாகிய மரத்தைப் போல் அசேதன வஸ்துவல்ல. அது சுறுசுறுப்பாயிருத்தல், நூதன விஷயங்களை அறிதல் இவைபோன்ற பல குணங்களை வாய்ந்தது என்பதை நன்கு மனதிற்கொண்டு, அம்மனது நன்கு பயிற்சியடையும் வண்ணம், ஆசிரியர் சிறுவர்களின் மனோபாவங்களுக்கேற்றவாறு, விஷயங்களையும், போதனைமுறையையும் அமைத்துக்கொண்டு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், சாமர்த்தியத்துடனும் தம் மேன்மையான கடமையைச் செலுத்துவாராக.

---



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின் கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதுங் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு, காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

---

## I. மூன்று வினாக்கள்.

அன்பார்ந்த நேயர்காள்,

கீழ் கூறியுள்ள வினாக்களை யான் அநேகரின் ஆலோசனைக்கு விடுவித்ததில், அவர்களின் அபிப்பிராயத்திற்கும் என்னுடைய அபிப்பிராயத்திற்கும் ஒத்துவரவில்லை. ஆகையால் இங்கு எழுதப்பட்ட வினாக்களுக்கு, பத்திராதிபரவர்களும் ஏனைய மலர்களைச் சூடிச் சதா வாசனை சுகித்தனுபவிக்கும் ஆசிரியர்களும் தக்க விடையளித்து எனது சந்தேகத்தை நிவர்த்திப்பார்களென யான் முழு மன நம்பிக்கையுடன் எழுதலானேன்.

அவ்வினாக்கள்.

1. எலிமெண்டரிப் பாடசாலைகளில் ஆங்கிலப் பாஷை கற்பித்தல் அவசியமா? கடமையா? அவசியம், கடமை என்றால் தக்க காரணங்களும், அவசியமுமில்லை கடமையுமில்லை என்றால் தக்க ஆதாரமும் தேவை.

2. மத விஷயமானவைகளைப் போதிக்க, பயிலும் எல்லாவிதமான மத உபாத்திமார்களும் பயிற்றுவிக்கப்படுகிறார்களா? அப்படிப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் அவர் ஓர் மதத்தைத்தானே போதிக்கக்கூடியவராயுமிருப்பர். அப்படியானால் ஒரு எலிமெண்டரிப் பாடசாலையில் இதர மதப் பிள்ளைகளைச் சேர்க்கலாமா? சேர்க்கக்கூடாதா? சேர்த்தால் அந்தந்த மதத்திற்கேற்ற உபாத்திமார்களை ஏற்படுத்தவேண்டுமோ? வேண்டாமா? அல்லது ஒரே உபாத்தியாயர் பல மதத்தையுமறிந்து அம்மதப்

பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டுமா? இஃது செய்யக் கூடியதா?

3. உபாத்திமார்களிடம் ஒப்படைத்திருக்கும் எல்லாப் பிள்ளைகளையும் மேல் வகுப்புக்குத் தகுந்தவர்களாக்கவேண்டியது தானே கடமை. அப்படியானால் பிள்ளைகளெல்லோரும் தகுதியுள்ளவர்களாவார்களா? உபாத்தியாயரும் அப்பேர்ப்பட்ட சக்தியுடையவராவாரா?

இப்படிக்கு,
J. மரிய வியாகப்பபிள்ளை,
முருகன்குரிச்சி.—பாளையங்கோட்டை.

## II. நல்லாசிரியரின் இலட்சணங்கள்.

[மெய்க்கடவுளென்றதனால், 1. தாமாயிருத்தல், 2. அனாதியாயிருத்தல், 3. சரீரமில்லாதிருத்தல், 4. சகலநன்மைச் சுரூபியாயிருத்தல், 5. எங்கும் வியாபித்திருத்தல், 6. எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருத்தல் இவ்வாறிலட்சணங்களு முடையவரென்றறிக.]

1. நல்லாசிரியர்கள் தம்மைச் சிருஷ்டித்த மெய்க்கடவுளையறிந்து, பயபக்தியுடன் நிதமுந்துதித்து வணங்குபவராயும், அவருக்குப் பிரியமான தம் வேலையை நல்ல மனதுடன், ஊக்கமாய், அவருக்காகவே செய்வேன் என்ற நோக்கமுடையவராயுமிருக்கவேண்டும்.

இங்ஙனமின்றி, "வகையற்றோற்கு வாத்தி வேலை" என்று சில அறிவிலிகள் கூறுவதை மெய்ப்படுத்துமாறு, வயிறு வளர்க்கவும், பொருள் தேடவும் நோக்கமாயிருத்தல் முற்றும் விரோதமாகும். இதனால் பொருள் தேடக்கூடாதென்பதல்ல. [வேலை செய்தவிடத்து வேலைக்குத் தக்கபடி கூசாது கேட்டு கூலி பெறுவது நியாயமே. அன்றியும் ஆரம்ப ஆசிரியரின் ஊக்கம் குறைந்தால், பொதுவாய் உலகமே ஊக்கக் குறைவடையுமென யோசிக்க இடமுண்டு. எப்படியெனில் ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பது யாருமறிந்த விஷயம். சிறுவர்களை இளமையிலேயே சகலவிதத்திலும் பழக்காவிட்டால், அவர்கள் பெரியவர்களானபிறகு பழகுவதெப்படி? உயர்தரப் பாடசாலை



கள் நிலைப்பதெப்படி? கல்வியே இல்லாவிட்டால், உலகம் ஊக்கங் குன்றுவதுடன் உருப்படாமலும்போம். பரிதாபகரமாகிய இதற்குக் காரணம், ஆரம்ப ஆசிரியரின் ஊக்கக் குறைவே. இவ்வூக்கங் குறைவுபடக் காரணம், குறைவான சம்பளமாகவிருந்தால், இக்குறையைத் தடுக்க முயல்வதும் நியாயமே.] கூலிக்கும் கூலியின் அளவுக்கேற்றபடியும், அஜாக்கிரதையாய் வேலை செய்யக் கூடாதென்பதே. இதைப்பற்றி தெளிவாக ஆரம்ப ஆசிரியரின் குறைகள் செவிடுபடுமாறு அனேக தடவைகளில் இப்பூங்கொத்து சப்தித்தது அறிந்த விஷயம்.

2. ஓர் நல்லாசிரியரிடத்துப் பயின்று, பல நூல்களைப் பார்த்து அதன்படி யொழுகுபவராயிருத்தல் வேண்டும். சோம்பலினாலோ, அல்லது எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தினாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ, ஆரம்ப ஆசிரியருக்கேற்ற சாதனமாகிய நமது பத்திரிகையை வாங்கி, வெகு பத்திரமாய், திறக்காமல் பெட்டியினுள் வைத்துவிடுவதுபோலவும்—அல்லது வேண்டாமென்று திருப்பி அனுப்பிவிடுவதுபோலவும், அவசியமான நூல்களை அலட்சியஞ்செய்வது, ஆசிரியற்கழகன்று.

3. கற்பிக்கும் விஷயங்களை மாணவன் எளிதில் உணர்ந்தறியும்படி போதிக்க, போதனாமுறையில் தேர்ச்சிபெற்றவராயிருத்தல்வேண்டும்.

4. பூமி தன்னைக் குடைந்து தோண்டுபவனையும் சுமப்பது போன்ற பொறுமையும், ஜீவகாருண்யமும், உறுதியான கல்வியறிவால் அவை யஞ்சாமையும், அடக்கியாளுந் திறமையும் மலிந்து காணப்படவேண்டும்.

5. ஒருபாற் கோடாமல், மாணாக்கர்களைச் சமமாய்ப் பாவித்துநடுவராயிருக்கவேண்டும். நடு நிலைமை வகிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உள. அவற்றுள் ஒன்று கவனிப்போம். ஒரு விஷயத்தின் உண்மையை நேரே பார்ப்பதினாலும், பிறர் சொல்லக் கேட்பதினாலும், யோசனா சக்தியினாலும் அறியலாம். சிற்சில சந்தர்ப்பங்களில் இம்முறைகள் வியர்த்தமாவதுமுண்டு. (உதாரணமாக, பூங்கொத்திலுள்ள "புதிய ஆடை அணிந்த அரசன்" கதை கவனிக்கத்தக்கது.)

6. ஒட்டகம் நாலைந்து நாட்களுக்கு வேண்டிய நீரை, முன்னதாகவே பருகி, பின் பிரயாணப்படுவதுபோல, ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு கற்பிக்கப்போகும் விஷயங்களை, ஏற்கனவே அளவிட்டுக் குறித்துக்கொள்ளும் முன் ஜாக்கிரதையுள்ளவராயிருக்கவேண்டும்.

நன்னூலிற் கண்ணாட்டிய கல்விச் சிரோன்மணிகள் இவ்வுறைகளை மறுக்காரென்பதென் துணிபெனினும், இதிற் குறைகளிருப்பின் சாக்கடை நீரையும் ஏற்கும் சாகரம்போல என்னை ஏற்றுக்கொள்ளக் கழல்தாழ்ந்தனன்.

S. அருள்தாஸ்,
போதனாமுறைப் பாடசாலை மாணவருள்ளொருவன்.

## III. (a) அதிக வெளிச்சத்தினால் கண்ணுக்கு உண்டாகும் கெடுதி.

கண்ணில் அதிகமாக வெளிச்சம் விழுந்தால் கண்ணிலுள்ள துவாரம் சுருங்கி சிறிது வெளிச்சத்தைமாத்திரம் உட்கொள்ளும் காலத்தில் கண்ணில் ஒருவித வலி ஏற்பட்டு ஜலம் வரும். அதனால் கண்ணுக்குக் கெடுதி நேரிடும். ஆகையால் நாம் வெயிலில் போகும்பொழுது சூரிய வெளிச்சம் நேராகக் கண்ணில் விழாமல் குடையினாலாவது, துணியினாலாவது கண்ணை மறைத்துக்கொள்ள வேண்டும். தீபத்தின் வெளிச்சத்தில் வாசிக்கும்காலத்தில் அந்த வெளிச்சம் புஸ்தகத்தின்மேல் நேரில் விழுந்து பிறகு கண்ணுக்குத் திரும்பிவரவேண்டும். ஆனதுபற்றி மேஜையின் மேல் வைக்கும் விளக்கிற்கு Dome என்று சொல்லப்பட்ட ஒரு மறைவை வைக்கிறார்கள். அப்படி வைப்பதினால் ஜ்வாலையின் வெளிச்சம் கீழ் உள்ள புஸ்தகத்தில் விழுகிறது. கண்ணில் நேரில் விழுகிறதில்லை.

## (b) குறைவான வெளிச்சத்தினால் கண்ணுக்கு உண்டாகும் கெடுதி.

குறைவான வெளிச்சத்தில் புஸ்தகத்தை வாசித்தால் கண்ணின் துவாரம் பெரிதாகினால்தான் போதுமான வெளிச்சம் கண்ணினுள் புகும். இப்படி செய்வதனால் கண்ணிற்கு அதிக வேலை ஏற்படும். ஆகையால் கண்ணில் வலி உண்டாகும். கண் சிறிதுகாலத்தில் கெட்டுவிடும். ஆகையால் மங்கின வெளிச்சத்திலும் ஸந்தியாகாலத்திலும் புஸ்தகங்களை வாசிக்கக்கூடாது. நடுங்கிக்கொண்டு எரியும் ஏற்றக்குறைவான வெளிச்சமும் கண்ணைக் கெடுக்கும். இந்த வெளிச்சத்தினால் கண்ணின் துவாரம் அடிக்கடி பருத்தும் சிறுத்தும் கண்ணில் வலியை உண்டுபண்ணும். பயாஸ்கோப் வேடிக்கையில் உண்டுபண்ணும் வெளிச்சம் இவ்விதமானது. ஆகையால் கண் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு, பின் சொல்லிய விதிகளை அனுசரிக்கவேண்டும்.



1. வெளிச்சம் அதிகமாகவும் இருக்கக்கூடாது, குறைவாகவும் இருக்கக்கூடாது. 2. வெளிச்சம் நேரில் கண்ணின்மேல் விழக்கூடாது. 3. முதுகு நிமிர்ந்து உட்கார்ந்து புஸ்தகத்தை மார்பின் எதிரில் கண்ணிற்கு சுமார் 10 அங்குல தூரத்தில் பிடிக்க வேண்டும். படுத்துக்கொண்டு வாசிப்பதால் வெளிச்சம் புஸ்தகத்தின்மேல் விழும், கண்ணில் நேரில் செல்லாது. கண்ணை வளைத்துப்பார்ப்பதால் கொஞ்சக்காலத்தில் பார்வை ஒரு பக்கமாய் ஏற்பட்டுவிடும். இந்தப் பார்வைக்கு ஒன்றரைக்கண் என்று சொல்லுகிறது. 4. வெகு சிறு எழுத்துக்களுள்ள புஸ்தகங்களை வாசிக்கக்கூடாது. அப்படிச்செய்வதால் கண்ணுக்கு அதிக வேலை ஏற்பட்டு வலி உண்டாகும். 5. புஸ்தகத்தை எப்பொழுதும் படித்துக்கொண்டிருக்கக்கூடாது. பெரிய வஸ்துக்களைத் தூரத்தில் பார்ப்பதுதான் கண்ணுக்கு இயல்பானது. அந்தவிதப் பழக்கம் கொடுக்காவிட்டால் கண் கெட்டுவிடும். 6. படிக்கும் அறைக்குள் விழும் வெளிச்சம் நாலுபக்கமும் பாவி விழவேண்டும், போதுமான வெளிச்சமாயுமிருக்கவேண்டும். 7. சூரிய வெளிச்சம் அறையின் வெளியிலுள்ள சுவரிலாவது, ஜலத்திலாவது விழுந்து நேரில், அறையினுள் வரக்கூடாது. 8. விளக்கின் வெளிச்சம் இடதுபக்கத்தில் இருக்கவேண்டும். வலதுகையின் நிழல் எழுதும்பொழுது கடிதத்தில் விழாது. தலைமேலிருந்து வெளிச்சம் கீழே வரலாம். படிக்கும்பொழுதும் தேகத்தின் நிழலும் புஸ்தகத்தில் விழாது.

T. R. பாலசுப்ரமணியன்,
சர்க்கார் போதனாமுறைப் பாடசாலை மாணவன்.

## சிறுவர்க்கான விளையாட்டுகள்.

### (4) பூமியைச்சுற்றி ஓடுதல்.

ஒரு பெரிய வட்டத்தின் நடுப்புள்ளியில் ஒரு சிறுவன் தனியே நிற்க. மற்றப்பிள்ளைகளை ஒன்று, இரண்டு, ஒன்று, இரண்டு என்று இரு கட்சிகளாகப் பிரிக்க. ஒன்றுகளெல்லாம் வட்டத்தைச்சுற்றி நடுப்புள்ளியைப் பார்த்தவண்ணமாய் முழங்காலிலிருக்க. இரண்டுகளெல்லாம் ஒன்றுகளின் தலையில் இரு கரங்களையும் விரித்து வைத்துக்கொண்டு பின்னால் நிற்க. ஒரு அடையாளம் கொடுத்தவுடனே இரண்டுகளெல்லாம் வெளி வட்டத்தைச் சுற்றி ஓட. இன்னொரு அடையாளம் கொடுத்தவுடனே ஓட்டத்தை நிறுத்தி ஒவ்வொருவரும் முழங்காலிலிருப்பவர்களின் தலையில் கை வைத்து நிற்கப் பிரயாசப்பட. இதற்குள் நடுப்புள்ளியில் தனியே நின்ற சிறுவனும் வெளியில்வந்து முழங்காலிலிருக்கும் யாதொரு சிறுவனின் தலையில் கை வைத்துக்கொண்டு நின்றுவிட்டால், ஓடினவர்களில் ஒருவன் தனியே நிற்க நேரிடும். அவன் நடுப்புள்ளியில்போய் நிற்க, ஆட்டம் முன்போல் திரும்பவும் துவக்கும்.

சிறிதுநேரத்துக்குப்பின், முழங்காலிலிருந்தவர்களெல்லாம் எழுந்து நின்று, ஓடினவர்களெல்லாம் முழங்காலிலிருந்து ஆட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

### (5) கோடிப்பந்தய ஓட்டம்.

சிறுவர்களை இரு கட்சிகளாகப் பிரிக்க. ஒவ்வொரு கட்சியிலும் முதல் பையன் ஒரு கொடி வைத்திருக்க. இரு கட்சிக்காரரும் எதிர் எதிராய் வரிசையாய் நிற்க. ஒரு அடையாளம் கொடுத்தவுடனே கொடி வைத்திருக்கிற பையன் தன் கட்சிக்காரர் நிற்கும் வரிசையைச் சுற்றி ஓடிவந்து இரண்டாவது பையன் கையில் கொடியைக்கொடுக்க. இரண்டாவது பையனும் முதல் பையனைப்போல் சுற்றி ஓடிவந்து மூன்றாவது பையன் கையில் கொடியைக் கொடுக்க. இப்படியே ஒருவனுக்குப்பின் ஒருவன் ஓடி எந்தக்கட்சி முதலில் முடிக்கிறதோ அதற்கே வெற்றி.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1922.

961

Registered No. M. 1534.

J. M. J

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 11. | பெப்ருவரி 1922. | மலர் 8.

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்ற ஜனவரி மாதம் 28-உ சனிக்கிழமையன்று திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆரம்ப ஆசிரியர் மகா நாடு முதல்விசையாகத் திருச்சினாப்பள்ளிப் பட்டணத்தில் கூடிற்று. டை ஜில்லாவிலுள்ள ஆரம்ப ஆசிரியரின்

தொகை இரண்டாயிரத்துக்குமேல் இருந்தாலும் இந்த மகா நாட்டில் கூடினவர்கள் இருநூற்றுச் சொச்சந்தான் இருக்கும். அவர்களைக் கூட்டுவதற்காக உழைத்தவர்கள் N. சுந்தரராஜுலு நாயுடு, K. நாக்ராஜன், P. பரிமணப் பல்லவராயர், T. K. பழனிசாமி முதலியவர்கள். இவர்களுடைய உழைப்புக்குத் தக்கது உபாத்திமார் வந்து சேரவில்லையென்றாலும் வந்தவர்கள் கூடின கூட்டம் அநுகூலமாய் முடிந்தது. இது முதல் கூட்டமானபடியால் அநேக உபாத்திமார் திடீரென வந்து கூடுவது கொஞ்சம் கஷ்டமாயிருந்திருக்கலாம். ஆகிலும், ஆரம்ப ஆசிரியரிடத்தில் பொதுவாய் ஊக்கமும் உற்சாகமுமில்லையென்று குறைகூறுவோரின் கூற்றுக்கு இதுவும் ஒரு சாட்சியமாகுமோ?

***  ***  ***

மேற்படி கூட்டத்தில் உபாத்திமாருடைய சம்பளமும் அந்தஸ்தும் உயராததற்குப் பல காரணங்களுள் ஒரு காரணம் உபாத்திமாரின் உற்சாகக் குறையேயென்று சிலர் பேசினர். உபசரணைக் கமிட்டித் தலைவர் அவர்கள் உபசரணைப் பிரசங்கத்தில் சுட்டிக்காட்டிய பல புத்திமதிகளுள் ஒன்றும் இதுதான். அவர் சொன்னது: "பெருமையும் சிறுமையும் தான்தரப் பெருமே...... பிறர்மீது குற்றம் கூறாது நம் ஒழுக்கத்தையே மென்மேலும் திருத்திக்கொள்ளல் நற்பயனை அளிக்குமெனக் கருதி யான் இன்னணம் கூறுகின்றேன்." நாமும் அன்னணமே கூறுகின்றோம். உபாத்திமார் தங்கள் சம்பளமும் அந்தஸ்தும் உயரும்படியாக முன்வந்து உழைத்து வருந்தட்டும்.

***  ***  ***

இந்த முதல் மகா நாட்டுக்கு வந்திருந்தவர்களுள் சென்னை மாகாணச் சங்கத்தின் காரியதரிசியும், தஞ்சாவூர் ஜில்லாச் சங்கத்துக் காரியதரிசியும் ஆரம்ப ஆசிரியரின் உற்சாகத்தை எழுப்புமாறு பேசினர். அக்கிராசனம் வகித்த மகா-ா-ா-ஸ்ரீ தேவசிகாமணி அவர்கள் ஆரம்பப் படிப்பு விர்த்திக்கான பல வழிபாடுகளைச் சாதுரியமாய் எடுத்துக்காட்டினர். அவ்வளவு பெருங் கருத்துகள்



சாதாரண ஆரம்ப ஆசிரியரின் தலைகளுக்குள் நுழையுமோவெனச் சந்தேகிக்கிறோம். ஆனால் அவை கொஞ்சம் கொஞ்சமாய் நுழைந்தாலன்றி ஆரம்ப ஆசிரியரின் அந்தஸ்து உயர்வதற்கில்லையென்று நினைக்கிறோம். அவர் முடிவுரையாய்ச் சொன்ன புத்திமதிப்படி ஆரம்ப ஆசிரியருக்கு இரண்டு கடமைகளுண்டு: ஒன்று தங்கள் அந்தஸ்தை உயர்த்துவது; மற்றொன்று தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சிறுவரின் நன்மையைக் கோருவது. இவைகளில் ஒன்றைக் கவனிப்பதில் இன்னொன்றை மறந்துவிடாதபடி உபாத்திமார் பார்த்துக்கொள்வது கடமை.

***  ***  ***

இந்த மகா நாட்டின் தீர்மானங்களை விவரமாய்ப் பிரசுரிப்பார்களென்று நம்புகிறோம். ஆரம்ப ஆசிரியரின் விருப்பங்களை மேலதிகாரிகளும் கவனிப்பார்களென்று நம்புகிறோம். அநேக ஆசிரியரை வைத்து நடத்தும் இரண்டு கத்தோலிக்குக் குருக்கள் இக்கூட்டத்துக்கு விஜயஞ்செய்து உபாத்திமார்பேரில் தங்களுக்குள்ள அநுதாபத்தைக் காட்டினார்களென்று குறிப்பது திருப்தியாயிருக்கிறது. பொதுவில் இக்கூட்டத்தினால் ஆரம்பப் படிப்பு விர்த்தியாவதோடு உபாத்திமாரின் நிலைமையும் சற்றாகிலும் உயருமென்று நம்புகிறோம். இதற்காக முயற்சி எடுத்தவர்களும் அந்த முயற்சிக்கு இசைந்து வந்தவர்களும் புகழ்ச்சிக்குரியவர்கள்.

---

## திருச்சிராப்பள்ளி ஜில்லா ஆரம்ப ஆசிரியர் முதலாவது மகாநாடு.

---

### திருசிரபுரம். 28-1-1922.

---

சபாநாயகர், திருச்சி S P. G. High School தலைமை ஆசிரியராகவும், திருச்சி தாலுக்கா போர்டு உப அக்கிராசனராகவும், ஜில்லா கல்விக் கவுன்சில் உப அக்கிராசனராகவும் விளங்குகின்ற ஸ்ரீமான் S. K. தேவசிகாமணி B.A., L.T., அவர்களின் முன்னுரைப் பிரசங்கம்.

**பிரதிநிதிகளே! கனவான்களே! சகோதரிகளே!**

இம் மகாநாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி செய்ததற்கு நான் உங்கள்பால் மிகவும் நன்றியுடையேன். என்னைவிட அதிகத் தேர்ச்சியுடையவர்களுக்கு இந்தப் பதவியை யளிப்பதற்குப்பதிலாக, எனக்கு நீங்கள் அதைத் தந்தது உங்களன்பை வெளிப்படுத்தும். எனக்கு ஆரம்பப்படிப்பு சம்பந்தமாய் நீண்ட பயிற்சியுமில்லை, தேர்ந்த ஆராய்ச்சியுமில்லை; அப்படியிருந்தும் நான் இந்த ஸ்தானத்தை ஒப்புக்கொண்டதற்குச் சில காரணங்கள் உண்டு. ஆரம்ப ஆசிரியர்களிடத்தில் யான் கொண்டுள்ள அன்பும், தாய்நாடு முழுவதும் ஆரம்பக்கல்வி பரவவேண்டுமென்ற நோக்கமும், நம்மால் இயன்ற அளவு அம்முயற்சிக்கு உதவவேண்டுமென்ற ஆசையும்தான் அக்காரணங்கள்.

ஓர் நல்ல தருணத்தில்தான் நம்முடைய மகாநாடு கூடுகிறதென்று சொல்லவேண்டும். இனி ஆரம்ப ஆசிரியரைப் புறக்கணித்து ஒதுக்கிவைப்பாரில்லை. ஆரம்ப ஆசிரியர்களின் அருமையை இப்பொழுது அரசாங்கத்தாரும் அறிகிறார்கள், மகாஜனங்களும் உணர்ந்துவருகிறார்கள். அவர்கள் உதவியின்றி நம் நாட்டில் கல்வி நடைபெறாது என்று யாவரும் நன்கறிவார்கள். அவர்களுடைய பதவியை உயர்த்தவும், அவர்களது வருவாயை மேம்படுத்தவும், அரசாங்கத்தார் முயற்சி செய்துவருகிறார்கள். அநேக பள்ளிக்கூடங்கள் அமைத்து அவைகளில் கட்டாயப்படிப்பும் இலவசப்படிப்பும் தரவேண்டும் என்று பல மகாநாடுகள் கூடித் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். நாம் இப்பொழுது இந்த மகாநாடு கூடித் தீர்மானிப்பது, காய்ச்சிய இரும்பைத் தட்டி நீட்டுவதுபோலாகும். மாட்சிமைதங்கிய இளவரசர் இப்பொழுது இந்தியாவில் வந்திருக்கிறார். இந்தியாவைப்பற்றியும் இந்தியர்களைப்பற்றியும் அநேக விஷயங்களையறிந்துகொண்டு போகத்தான் இங்கு வந்துள்ளார். அவருடைய கனந்தங்கிய தகப்பனாரின் ஆளுகையில் இருக்கும் நம் நாட்டிற்கு அவர் வந்திருப்பதே அதற்கு ஒரு சாக்ஷியாகும். அவருடைய தகப்பனார் பத்து வருஷங்களுக்கு முன்பு கல்கத்தாவில் ஆரம்பக் கல்வி விஷயமாய்ப்



பேசிய வார்த்தைகள் உங்கள் ஞாபகத்திலிருக்கலாம். அரசாங்கத்தாருக்கு ஆரம்பக்கல்வி விஷயமாய் உள்ள அக்கறையையும் பற்றுதலையும் அவ்வுரைகள் நன்கு புலப்படுத்தும். அம்மொழிகளைத் துணையாகக் கொண்டுதான் அத்துறைகளில் வேலைசெய்பவர்கள் தலையிடல் வேண்டும்.

இக்கூட்டங்கூடி தீர்மானங்கள் செய்வதற்கு இதுதான் ஓர் நல்ல சமயம். ஜனங்கள் எல்லாம் கல்வியில் அதிக ஊக்கங்காட்டிவருகிறார்கள். அரசாங்கத்தாரும் ஆரம்பக்கல்விக்காக அதிக பொருளுதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆரம்பக்கல்வியைப்பற்றி அன்பு உரைகள் வழங்கிய மாட்சிமிக்க ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் அருமைப் புத்திரராகிய இளவரசரோ நமது நாட்டில் உலவிவருகிறார். இதைத்தவிர இக்கூட்டங் கூடுவதற்கு வேறு எந்தச் சமயம் நமக்குக் கிடைக்கக்கூடும்? இப்பொழுது நாம் செய்யப்போகும் தீர்மானங்களை அரசாங்கத்தார் அநுதாபத்துடன் ஏற்றுக்கொண்டு வேண்டிய உதவிகளை ஆரம்ப ஆசிரியர்களுக்குச் செய்வார்களென்று உறுதியாய் நம்புகிறேன்.

இக்காலம் விசேஷித்த காலம். எங்கேபார்த்தாலும் மகாநாடுகளும் கூட்டங்களும் கூடும் காலம் இது. ஒவ்வொரு ஜாதியினரும், ஒவ்வொரு வகுப்பினரும், ஒவ்வொரு தொழிலினரும் வருஷத்திற்கு ஒரு முறையாவது பெருங் கூட்டங்கூடி, தங்கள் தங்களுக்குள்ள குறைகளைப் போக்கிக்கொள்ள முயற்சி செய்துவருகிறார்கள். தங்கள் உரிமையைப்பெறவும், தங்கள் குறைகளை ஒழிக்கவும் ஊக்கங்கொண்டு பல தீர்மானங்களைச் செய்துவருகிறார்கள். சில தீர்மானங்களை அநுபவத்துக்குக் கொண்டுவருகிறார்கள். வேறு சிலவற்றை சொல்லோடும், எழுத்தோடும் விட்டுவிடுகிறார்கள். பிரதிநிதிகளையனுப்பி அதிகாரிகளைப் பார்த்துத் தங்கள் குறைகளை எடுத்து அறிவிக்கச் செய்கிறார்கள். இம்மட்டோடு நில்லாது உலகம் அறியும்வண்ணம் பத்திரிகைகள் வாயிலாக விளம்பரஞ் செய்கிறார்கள். தாங்கள் எடுத்த காரியம் முடியுமளவும் இடைவிடாது கிளர்ச்சி செய்து, ஜெயமும் பெறுகிறார்கள். இடைவிடாது கிளர்ச்சி செய்வது எடுத்த காரி

யத்தை முடிப்பதற்கோர் நல்வழியென தோன்றுகிறது. ஆனால் ஆசிரியர்களின் மனநிலையோ வேறாயிருக்கும். ஏனையோர்கள் போல் தாங்களும் முன்னின்று முயற்சி செய்யவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இலேசில் வருவதில்லை. பலர் ஒன்றுகூடுவதென்பது பகீரதப் பிரயத்தனம்; அதிலும் ஊக்கத்துடன் கிளர்ச்சி செய்வது பிரமப்பிரயத்தனம். இந்த ஜில்லாவில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் யாவரும் இப்பொழுதுதான் முதல் முதல் ஒன்றுகூடியுள்ளார்கள் என்று நினைக்கிறேன். இதனால் பல நன்மைகள் உண்டாகக்கூடும் என்பது நிச்சயம். இத்தகையக கூட்டம் ஆண்டுகள்தோறும் கூடவேண்டும். அதற்கேற்ற கமிட்டி ஏற்படவேண்டும். ஜில்லாவில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களெல்லாம் அதற்கு வந்து சேரவேண்டும். அவ்வாறு கூடித் தங்களுக்கு உரிய உரிமைகளைப் பெறப் பெருங்கிளர்ச்சி செய்யவேண்டும். இவைகளுடன் நில்லாது, கல்வியை அபிவிர்த்தி செய்யக்கூடிய முறைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்லுதலில் பின்வாங்கலாகாது. "வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" "அழுதபிள்ளை பால் குடிக்கும் என்பது" யாவர் வாயிலுமுலவும் பழமொழிகளன்றோ? உங்களுக்கு வேண்டியவைகளைப்பற்றி நாலு பேர் அறிய கூக்குரலிட்டாலன்றி உங்களால் ஒன்றும் பெறமுடியாது. மற்றவர்களும் உங்களை மதியார்கள். நீங்கள் செய்யும் கிளர்ச்சி ஒழுங்குடையதாயும், உங்கட்கு ஏற்றதாயும், சாத்தியமானதாயும் இருத்தல் அவசியம். இம்முறைதான் உங்கள் இடறைக் களைந்து இன்பந்தரும் மருந்து.

ஆரம்ப ஆசிரியர்தான் எல்லாருக்கும் அடிப்படையான ஆசிரியர். அவர் ஸ்திதியைக் கண்டு உலகத்தில் பொருமைகொள்பவர் ஒருவருமில்லை. காலேஜ் வகுப்புகளுக்கு ஆசிரியராய் இருப்பவர்கள் தங்கள் தங்கள் பட்டத்திற்கேற்ற அங்கிகளை யணிந்துகொண்டு, ஒரு வாரத்திற்கு ஆறு அல்லது ஏழு உபந்நியாசங்களைச் செய்துவிட்டு, எஞ்சிய காலத்தை மேலும் மேலும் நூல்களைக் கற்பதிலும் உபந்நியாசங்கள் தயாரிப்பதிலும் சந்தோஷமாய்க் கழிப்பார்கள். அவர் தோழர் ஹைஸ்கூல் ஆசிரியர்கள் முற்றும் அவர்களைப் போன்றில்லை. இவர்களுக்கு உரிய வேலைகளை இவர்கள்



செய்து தீரவேண்டும். பாடக்குறிப்புகள் எழுதுவதுடன், பையன்கள் எழுதும் பயிற்சிப் புத்தகங்களைத் திருத்துதலும் இவர்கள் வேலையாகும். செய்யும் வேலை சீராயிருப்பதோடு, பரீக்ஷைகளில் ரிசல்ட்டும் செவ்வையாய் இருந்துவிட்டால், வருஷா வருஷம் சம்பளத்தில் கூட்டுத்தொகை கிடைப்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் பிரைமரி உபாத்தியாயரின் சம்பளமோ வளருவதேயில்லை. பன்னிரண்டு ரூபாய்தான் என்று வரையறுத்துவைத்திருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்களையும், சூப்பர்வைசர்களையும் திருப்திப்படுத்தவேண்டும். பெற்றோர்களின் பிரியத்தை நாடவேண்டும். இதற்குமேல் தன்னுடைய மானேஜர் ஆபீசு குமாஸ்தாக்களையும், தாலூகா போர்டு குமாஸ்தாக்களையும் அடிக்கடி கண்டுகொள்ளவேண்டும். தோட்டம் செப்பனிடுவது, காட்சிப் பொருள்களைச் சேகரிப்பதோடுகூட, ரிஜிஸ்டர் பதிவு செய்வதும், வரவு செலவு கணக்கு அனுப்புவதும் அவர்களை விட்டு நீங்கவில்லை. என்ன உழைத்தாலும் இவர்களைப் பிடித்த தரித்திரம் தொலையவில்லை. இவர்கள் பெறும் சம்பளம் எதற்குப் போதும்? மனைவி மக்களுக்கு மனமார உணவு கொடுக்கத்தான் போதுமா? போதாது. பண்டைநாளில் குசேலர் ஒருவர் இருந்தார் என்று படித்தோம். இக்காலத்திலோ குசேலர்கள் ஆரம்ப ஆசிரியர்கள்தான். ஒரு காலத்தில் ஊர் ஜனங்களே உபாத்தியாயர்களுக்கு உணவும் உடையும் உவந்து அளித்துவந்தார்கள். இப்பொழுதோ, 'வாய்த் தவிடும்போய் அடுப்பு அனலும் போனதுபோல்,' அதுவுங் கெட்டு இதுவுங்கெட்டு தவிக்கிறார்கள். கற்றவர்களைவிட கைப்பொருள் உடையவர்களுக்குத்தான் இக்காலத்தில் மதிப்பு அதிகம். இத்தகைய காரணங்களால் ஆரம்ப ஆசிரியர்கள் அடிமைக்குடிகளாகிவிட்டார்கள்.

வறுமைகாரணமாக வேறு தொழில்களையும் கைக்கொள்ளுகிறார்கள். கிராமங்களில் போஸ்ட்மாஸ்டர்களில் சிலர் அவர்களே. பொழுதுபட்டவுடன் விண்ணப்பங்கள் எழுத உட்கார்ந்துகொள்ளுகிறார்கள் சிலர். வேறு சிலர், ஒரு ஊரில் இரு கக்ஷிகள் இருந்தால், இவர்கள் ஒரு கக்ஷியில் சேர்ந்துகொண்டு வழக்குகளை வளர்த்து பணஞ்சம்பாதித்து வருகிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் அவர் படுந் துயரமும் அதிகம். சில பிள்ளைகளுக்குப் படிப்பதில் கருத்து இருக்காது. வேறு சில பிள்ளைகளுக்கு என்ன கதறினாலும், மூளையில் ஏறாது. சில பெற்றோர்களுக்கு பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப் பிரியம் இருக்காது. அப்படிக்கில்லாது அனுப்பினாலோ அப்பிள்ளை சர்வ மூடனாயிருப்பான். அவனை வைத்துக்கொண்டு இவர் என்ன சொல்லித்தர முடியும்? இவைகளினால் நாளுக்கு நாள் உற்சாகம் குறைந்து, முன்னுக்கு வருவதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது.

முதலாவதாக அவருடைய சம்பளத்தையும், சௌகரியங்களையும் கவனித்தல் வேண்டும். தாலூகா போர்டில் உள்ள உபாத்தியாயர்களுக்கு, அவர்கட்கு ஏற்பட்ட சம்பளத்தோடு காப்பிடேஷன் (Capitation) கிராண்டும் கிடைக்கிறது. பிரைவேட் பள்ளிக்கூடங்களில் இருக்கும் உபாத்தியர்யர்களின் சம்பளம் ஒழுங்காயிருக்காது. ஒருவருக்கு இருப்பதுபோல் மற்றொருவருக்கு இருக்காது. மானேஜர்களுக்கு பணவருவாய் அதிகமிருந்தால் இவர்களுக்கும் சம்பளம் அதிகமாய்க் கிடைக்கும். அவருக்கு வருவாய் குறைந்தாலோ இவர்கட்கும் குறையும். இது போதியதல்ல. இவர்களுடைய சம்பளம் உயரவேண்டும். அது உயரவேண்டுமானால் மானேஜர்கள் அதிகமாய்க் கொடுக்கவேண்டும். அவர்கள் அதிகமாய்க் கொடுக்கவேண்டுமானால் அரசாங்கத்தார் கிராண்டு இப்பொழுதைவிட அதிகமாய்க் கொடுக்கவேண்டும். தாலூகா போர்டாரை வருஷாவருஷம் அவர்களுக்குவரும் வரும்படியில், உபாத்தியாயர் சம்பளத்துக்கு இவ்வளவுவென்று திட்டவட்டமாய் எடுத்துவைக்கும்படிச் செய்யவேண்டியதவசியம். அப்படியெடுத்துவைப்பது இப்பொழுது எடுத்துவைப்பதைவிட எத்தனையோ மடங்கு அதிகமாயிருத்தல் வேண்டும். தற்காலத்திய போதனாமுறைக்கேற்ப சாமான்களை வாங்குவதற்கும், கட்டடங்களைக் கட்டுவதற்கும் ஏற்றவாறிருக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

---



## சிறுவர்க்கான கதைகள்.

### (4)

ஒரு சிறுவன் ஒருபோதும் தலை சீவுவதில்லை; முகங் கழுவுவதில்லை. அவனுடைய உடை அழுக்கடைந்ததாய், இங்குமங்கும் மை ஊற்றப்பட்டதாய், சில இடங்களில் கிழிந்து தொங்குவதாய்த் துலங்கும். புழுதியைப் புரட்டின கைகளும், கருந்தூசி பதிந்த நீண்ட நகங்களும் உடையவன். அவன் படிக்கும் அறையில் காகிதத்துண்டுகளும், மைச்சொட்டுகளும் வெள்ளி பூத்தாப்போல் பரவியிருக்கும்; இங்கொரு புஸ்தகமும், அங்கொரு கற்பலகையும், ஓரிடத்தில் பேனாவும், வேறோரிடத்தில் சீமைச் சுண்ணாம்பும் யாதொரு ஒழுங்கின்றிச் சிதறிக்கிடக்கும். ஓர் நாள் இவன் தன் அறைச் சுவரின்மேல் காலை நீட்டிக்கொண்டு தரையில் படுத்துக்கொண்டு கொட்டாவிவிட்டுக்கொண்டிருந்தான். திடீரென தூய வெண்மேகம்போன்ற ஆடையை அலங்காரமாய் அணிந்து, சந்திர பிம்பம்போன்ற சௌந்தரிய முகத்தோடு ஓர் தேவலோகப் பெண் தோன்றினாள். பையன் திடுக்கிட்டு வெட்கி எழுந்தான். அங் பெண்மணியானவள் ஜ்வாலித்தெரியும் தனது நேத்திரங்களை அவன்மேல் நிறுத்தி மெல்லிய குரலானாலும் சற்று அழுத்தமாய்ப் பேசிச் சொல்வாள்: "இதென்ன? சுத்த சம்மனசாகிய நான் இதை எப்படி சகிப்பேன்? நீ ஸ்நானஞ் செய்யவேண்டும்; உடையை மாற்றவேண்டும். ஆனால் முதலில் நான் உன் அறையைச் சுத்தம் செய்கிறேன். நீ வெளியேபோய் உன் தம்பியோடு சிறிது நேரம் நில்."

"எனக்குத் தம்பி கிடையாதே, அம்மா!"

"தம்பி இருக்கிறான்; அவனை நீ அறியாய்; உன்னை அவன் அறிவான், வெளியே போ."

பையன் வாய்திறவாமல் வெளியே போகின்றான். கொஞ்சத்துக்குள் ஓர் அணில்பிள்ளை மடமடவென்று ஓடிவந்து அவனைக் கண்டவுடன் திகைத்து நின்றது "நீதானா என் தம்பி?" என்று கேட்டான் சிறுவன். அணில் அவனை

ஏறிட்டுப்பார்த்து, உடனே தலையைத் திருப்பிக்கொண்டு "இல்லை, அப்பா, இல்லை; என்னுடைய போர்வை சுத்தமும் ஒழுங்கும் அமைந்தது; ஏன் என்னை இந்தக் கேள்வி கேட்டாய்?" என்று சொல்லிக்கொண்டே வந்தபடி மடமடவென்று ஓடிவிட்டது.

பையன் வெட்கி நின்றான். சிறிது நேரத்துக்கெல்லாம், ஓர் மாடப்புறா பறந்து வந்து பக்கத்தில் நின்ற ஓர் மரக்கிளையில் உட்கார்ந்தது. "நீதானா என் தம்பி?" என்று கேட்டான் சிறுவன்.

புறாவானது வானத்தை நோக்கித் தலையை நிமிர்த்தி "ஏன்? என் இறகுகளில் தூசி படிந்திருக்கிறதோ? என் அலகுகளில் நான் உண்ட உணவு மீந்து தங்கினதோ? பாலில் குளித்தாப்போல் தோன்றும் என்னை இந்தக்கேள்வி கேட்க, நீ எவ்விதம் துணிந்தாய்?" என்று சொல்லிக்கொண்டே சிறகையடித்து நேராய் உயர எழுந்து சென்றது.

பையன் தலையைக் கவிழ்ந்துகொண்டு நாணி நின்றான். அவன் காலடியில் ஓர் பூனை நிற்பதாய் உணர்ந்தான். தாழ்ந்த குரலோடு, "நீதானா என் தம்பி?" என்று கேட்டான் சிறுவன். பூனையோ கெம்பீரமாய் முதுகை வளைத்துக்கொண்டு: "கண்ணாடியில் உன் உருவத்தைப் போய்ப் பார்; உன் கேள்விக்கு அதுவே விடை. உன் மேனியில் தண்ணீர் விழுந்து எவ்வளவு நாளோ? நானோ சூரியக்கதிரில் நாள்முழுதும் முழுகிக் குளித்தேன். உன்னைப்போன்றவர்கள் எங்கள் குடும்பத்தில் கிடையாதப்பா!" என்று சொல்லி, வாலை ஆட்டிக்கொண்டு ஓடிவிட்டது.

அதுபோனவுடன் அதற்குப்பின்னால் உருமிக்கொண்டு ஓர் பன்றி தோன்றினது. அதனிடம் பையன் ஒன்றும் கேட்கவில்லை; தானாகவே அது பையனைப் பார்த்து "அண்ணா!" என்று உறுமினது.

"நான் உன் அண்ணனில்லை" என்று சொன்னான் சிறுவன். "அண்ணன்தான், அண்ணன்தான். நமது குடும்பச்சாயல் உம்மிடத்தில் எவ்வளவு நன்றாய் அமைந்



திருக்கிறது! இதைக் கண்டுபிடிப்பது யாருக்கு வருத்தம்? வாரும், வாரும்; குப்பையில்போய் புரளலாம்."

"குப்பையில் புரள எனக்குப் பிரியமில்லை," "யாரிடத்தில் சொல்லுகிறீர்? உமது முகத்தைப் பாரும், கையைப்பாரும், காலைப்பாரும், உடையைக்கவனியும். வாரும், அண்ணா, வாரும். இரவில் கொஞ்சம் தவிட்டைச் சாக்கடைத் தண்ணீரில் குழைத்து மூஞ்சியில் பூசிக்கொள்ளலாம்."

"எனக்குத் தவிடு வேண்டாம்" என்று சிறுவன் கதறியழத் தொடங்கினான்.

இச்சந்தர்ப்பத்தில் தேவலோக அணங்கு திரும்பவும் தோன்றிச் சொல்வாள் "உன் அறையைச் சீர்ப்படுத்திவிட்டேன். இனி நீ ஸ்நானம் செய்து, உடையை மாற்றவேண்டும். அதனபின் எப்போதும் சுத்தமான பிள்ளையாயிருக்கவேண்டும். இப்போது என்னோடு வருகிறாயா? உன் பழைய தம்பியோடு போகிறாயா?" சிறுவன் "உங்களோடு" என்று அலறி அவள் ஆடையைப் பற்றிக்கொண்டான். அவளும் அவனை அன்போடணைத்து அழைத்துக்கொண்டுபோய்விட்டாள்.

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

### I. சில அனுபவ அபிப்பிராயங்கள்.

[நமது "போதனா விஷயப் பூங்கொத்"தின் சென்ற ஜனவரி மாதத்து மலரில் பத்திரிகாசிரியர் கேட்டுக்கொண்டபடி இந்த அபிப்பிராயங்களை வெளியிடலானேன்.]

### (1) எயிடெட் ஸ்கூல்களுக்கு சர்க்கார் உதவி.

சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் தொகையை நிர்ணயிப்பதில் உபாத்திமாரின் எண்ணிக்கையையும் யோக்கியதாபத்திரத்தையும் மாத்திரம் கவனிப்பது” போதாது. அவ்விதமாயின் ‘மாணாக்கரின் அபிவிருத்தியை அவ்வளவாய்க் கவனிப்பதற்கு ஊக்கமுண்டாகாதெனலாம். இதற்குக் காரணம், சென்ற பல வருடங்களுக்குமுன், மாணாக்கரின் எண்ணிக்கையையும் அபிவிருத்தியையும் கவனித்து உதவிசெய்து வந்த காலத்து மாணாக்கரின் படிப்பு அபிவிருத்திக்கும், இவ்விரு வகையையும் கவனிக்காமல் உதவி செய்துவரும் சென்ற சில வருடங்களிலும் மாணாக்கர்கட்கு ஏற்பட்டிருக்கும் படிப்பின் அபிவிருத்தியையும் தன்மையையும் கவனித்தாலே போதும்.

முக்காலே மூன்றுவீசம் மாணவர்கள் கிராமத்தினர்களாக இருப்பதால், அவர்களுக்குத்—தற்போதைய பாடசாலைகள் சர்க்காரின் ஆதீனத்திற்குள், தற்கால முறையிலும் சட்டதிட்டத்திலும் வந்தபின் இருக்கும் தன்மையைப் பார்த்தால் பிரயோஜனமில்லையென்றே தெரியும். இது பிரஸ்தாபத் தீர்மானத்தின் தீங்கேயாகும். இந்நிர்ணயத்திலிருந்து உபாத்தியாயர்கள் மாணாக்கரின் அபிவிருத்தியையும் எண்ணிக்கையையும் அக்கறையாய்க் கவனிப்பதற்கு எதுவும் உற்சாகமும் இல்லையென்பதும் விளங்கும். மேலே சொல்லிய காரணங்கள் ஆரம்பப் படிப்பு பரவுவதற்கும் விர்த்தியடைவதற்கும் தடையாயிருக்கிறதென்பதும் தெரியும்.

### (2) சம்பள வசூலும் ஆரம்பப் படிப்பின் அபிவிர்த்தியும்.

‘ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் சிறுவர்களிடம் சம்பளம் வசூல் செய்யாவிடில் ஆரம்பப் படிப்பு அதிகமாய்ப் பரவும் என்று அநேக முனிஸிபாலிட்டிகளும் ஜில்லா போர்டுகளும் சர்க்காருக்கு அறிவித்த’தாகத் தெரிகிறது. அதன் நன்மை தீமைகள் பின்வரும் உதாரணத்தால் விளங்கும். திருச்சி தாலூகா உத்தமசேரிப் பாடசாலையில் பயிலும் சுமார் 60-பிள்ளைகளுக்குச் சம்பளமே இல்லாதிருந்தும் அவர்கள் மிகச் சிறுவர்களுங்கூடப் பெற்றோர்க்கு எவ்விதத்திலேனும் குடும்பவிஷயங்களில் உதவி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. ஒழிவுநேரத்தில்தான் பாட-



சாலைக்கு வருகின்றார்கள். பெற்றோர்க்கு என்னதான் இயம்பினும் இலவலேசமும் கல்வியில் சிரத்தையில்லாதிருக்கிறது. ஆனால் அவர்கள் பல வருடங்கட்குமுன் தாங்களே உபாத்திமார்களைத் தேடி, அவர்களுடைய காலட்சேபத்திற்குத் தகுந்த சம்பளம் கொடுத்துத் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைத்ததிலிருந்த சிரத்தை இப்போது இல்லையெனவேவேண்டும். காரணம், தங்கள் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லாததால் உபாத்தியாயரைக் கேட்பதற்கும் அவரோடு கலந்து உழைப்பதற்கும் காரணமில்லாமையே. சம்பளங் கொடுத்தால், சம்பளங் கொடுக்கிறோமே அதற்குத் தகுந்த பலனையடையவேண்டாமாவென்னும் அக்கறையிருக்கும். சம்பளங் கொடுப்பதுமில்லை, அக்கறையிருப்பதுமில்லை. தன் கையைவிட்டுக் காசுகொடுத்தாலன்றோ வருத்தமும் அக்கறையுமிருக்கும். மிகச்சில சுமார் 5-6 பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கவும்படுகிறது. அவர்களும் மிக ஏழைகளே; ஆனால் அவர்கள் மிகச் சொற்ப (2, 3-அணா) சம்பளம் கொடுக்கவும் வருந்துகின்றனர். சம்பளங் கொடுக்கத் தகுந்த அந்தஸ்துள்ளவர்களின் பிள்ளைகளுக்கு, அவர்கள் படிப்பில் பின்னடைந்தவர்கள் என்னும் காரணத்தால் வாங்கப்படுவதுமில்லை. அவர்களும் ஆசிரியர்களின் தற்கால நிலைமையை உத்தேசித்து உதவிசெய்வதும் அறிதே. சொற்ப சம்பளமுங் கொடுக்கச் சக்தியில்லாது நிறுத்திக்கொள்ளப்பட்ட பிள்ளைகளும், சம்பளங் கொடுக்காததால் வீட்டுக்கு அனுப்பிவிடப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களும் படிப்பில் முன்னடைந்தோர்களெனப்படுகிறது. இவ்வித வித்தியாசங்கள் எல்லாக் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் இருக்குமென்றே சொல்லலாம்.

ஆகவே, 6-முதல் 10-12, வயது வரையுள்ள பிள்ளைகள் பெற்றோர்க்கு உதவி செய்து சம்பாதித்துதான் காலட்சேபஞ் செய்யவேண்டுமென்பதும், அச்சிறு வயதிலேயே தங்கட்கு உதவி செய்யவும் சம்பாதிப்பதற்கெனவுமே பெறப்படவில்லையாகையால், குறிப்பிட்ட வயதில் சிறுவர்களை (இலவசமாய்க்) கட்டாயமாய்ப் படிக்கச் செய்தாலொழிய, சம்பளம் வசூல் செய்யாவிடில்மட்டும் ஆரம்பப் படிப்பு அபிவிர்த்தி அடையுமென்பது துர்லபமேயாகும்.

### (3) எயிடெட் ஸ்கூல்களும் இலவசப் படிப்பும்.

ஜில்லாப் போர்டுகளாலும் முனிசிபால்டிகளாலும் நடத்தப்படும் பாடசாலைகளில்மட்டும் சம்பளமில்லையென்று செய்தால், அந்த ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படாத இதரப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு (ப்போதுமான) சம்பளங் கொடுக்கப் பெற்றோர்கள் பின்னடையலாம். அதனால் உபாத்தியாயர்கள் ஆதரிக்கப்படாமற்போகவே, அப்பிள்ளைகட்கு ஆரம்பப் படிப்பின் அபிவிர்த்தி குறைய நேருவதோடு, அத்தகைய பள்ளிக்கூடங்கள் எடுபட்டுப்போகவுங் கூடும். அப்பொழுது ஸ்தல ஸ்தாபனத்தார் பிரஜைகளின் வேண்டுகோட்கிணங்கி, அவர்களிடமிருந்து வரி வாங்கப்படுவதால், ஆங்காங்கும் தங்கள் ஆதரவில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டியும். அதனால் தங்கட்கு அதிகச் செலவு ஏற்படவுங்கூடும்.

ஆதலால், இலவசப்படிப்பு ஏற்படுத்துகையில் உதவிபெறும் பள்ளிக்கூடங்கட்கு, இலவசப்படிப்புக்கு மூர்த்தி கொடுத்த உதவிக்குமேல் அதிகமாகக் கொடுப்பதாக நிர்ணயஞ் செய்து அம்மானேஜர்கட்கு உற்சாகமூட்டி, அவர்களின் உற்சாகக் குறைவையும் சோர்வையும் அகற்றவேண்டியது, ஆரம்பப் படிப்பின் அபிவிர்த்தியில் அக்கறைகொண்டோரின் கடமையாகும். இப்பொழுதே பெரும்பான்மையான உதவிபெறும் பாடசாலை மானேஜர்கட்கு அத்தகைய எண்ணம் உதித்திருக்கிறதென்பதையும் குறிப்பிடாதிருப்பதற்கில்லை.

இங்ஙனம்,
P. பரிமணப்பல்லவராயர்,
போர்டு ஸ்கூல், உத்தமச்சேரி.

## II. மூன்று விடைகள்.

1922-ம் ௵ ஜனவரி மாதத்து மலரில் சந்தாதார் பக்கத்தில் கேட்டுள்ள மூன்று கேள்விகளுக்கு என் புல்லறிவிற் கெட்டியபடி பதிலளிக்கத் துணிந்தேன். ஆயினும் பல கலைகளையும் பயின்ற பேரறிஞர் பலருக்கு சிலவேளை அவ்விடைகள் ஒவ்வாமலிருக்குமேயானாலும் பத்திராதிபரவர்கள் இவ்வருஷத்தில் நமது பூங்கொத்து நன்றாய் மலர்ந்து நறுமணம் வீசி தன் வேலையை



உற்சாகமாய் செய்யவேண்டுமானால் "அநேகர் விஷயதானம் செய்யவேண்டும். அநேகர் விஷயங்களைப்பற்றி கேள்வி கேட்டால், அதினும் நலம், அநேகர் பல விஷயங்களை அறிய ஆசிப்பதாய் பூங்கொத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும்" என்று தமது விருப்பத்தை வெளியிட்டார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்கி இவ்விடைகளை வெளியிடலானேன். ஆயினும் இவ்விடைகள் Mr. மரியமியாகப்ப பிள்ளையவர்கள் நோக்கத்திற்கு மாறாக இருந்தால் அவரும் என்னை மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. நாகரீகம் பெருத்து சுயராஜ்யம் கேட்கும் இக்காலத்தில் ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கில பாஷை கற்பித்தல் அவசியமே. ஏனெனில் ஆரம்ப பாடசாலையின் படிப்பைப் படித்து முடித்த சிறுவன், ஒன்று உயர்தரக்கல்வி கற்கவேண்டும் அல்லது தன் ஜீவன அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

உயர்தரக்கல்வி கற்பதற்கு இன்றியமையாத சாதனம் ஆங்கில பாஷையென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. அல்லது சிறுவன் தன் ஜீவன அந்தஸ்தை தெரிந்துகொண்டாலும் இக்காலத்தில் ஆங்கில பாஷையின் வாசனை முதலாய் அறியாமலிருந்தால் அவன் ஆரம்பப் படிப்பு கற்றதின் பிரயோசனமென்ன? ஏதோ சொற்ப அறிவாகிலும் ஆங்கில பாஷையில் இருப்பின் அவன் ஜீவியத்தில் வெகு பிரயோசனப்படும் என்பது திண்ணம்.

2. மதவிஷயமான காரியங்களைப் பள்ளிக்கூடங்களில் போதிப்பதில் பல கஷ்டங்கள் உண்டு. பல மதத்தைச்சேர்ந்த பிள்ளைகள் இருக்கிற பள்ளிக்கூடங்களில் பல மதங்களை போதிப்பதென்றால் கஷ்டமான காரியமே. ஆனால் கிறீஸ்துவ பள்ளிக்கூடங்களில் கிறிஸ்து மார்க்கத்தையும், இந்துப் பள்ளிக்கூடங்களில் இந்து மதத்தையும், மகமதிய பள்ளிக்கூடங்களில் மகமது மதத்தையுந்தானே போதிப்பார்கள். ஒரு பள்ளிக்கூடம் எந்த மதப் பள்ளிக்கூடமாயிருந்தாலும் சரி அதில் சேர வரும் பிள்ளைகள் எந்த மதத்தைச்சேர்ந்த பிள்ளைகளானாலும் சரி அவர்களைச்

சேர்க்கவேண்டும். ஆனல் அப்பிள்ளைகளுக்கு அப்பள்ளிக்கூடத்தில் போதிக்கும் மதவிஷயங்களை அறிந்துகொள்ள அவர்களுக்கு பிரியமில்லாவிட்டால், அவர்களுக்கு இஷ்டமான பள்ளிக்கூடத்திற்கு அவர்களே போகட்டும்.

அப்படிக்கின்றி ஒரு உபாத்தியாயர் பல மதங்களைப் போதிப்பதென்றாலும், ஒரே பள்ளிக்கூடத்தில் பல மதத்தைச் சேர்ந்த உபாத்திமார்களை ஏற்படுத்தி பல மதங்களைப் போதிப்பதென்றாலும் முடியாத காரியமே.

இது விஷயங்களைப்பற்றி கத்தோலிக்கர் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

* * *

3. உபாத்தியாயரிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளையும் மேல்வகுப்பிற்குத் தகுதியுள்ளவர்களாக்கவேண்டியது உபாத்தியாயர்களுடைய கடமைதான். பிள்ளைகள் எல்லாரும் அதற்குத் தகுதியுள்ளவர்களாகமாட்டார்கள் என்பதுவும் உண்மையே ஆனாலும் உபாத்திமார்கள் "நாம் என்னதான் பிரயாசை எடுத்தாலும் எல்லாரும் தகுதியுள்ளவர்களாகமாட்டார்களே" என்று சோர்வு அடைதல் கூடாது.

ஒரு பையன் ஒரு வகுப்பிற்கு புதிதாக வந்த இரண்டு மாதத்திற்குள் அப்பையன் படிப்பு விஷயமாய் எப்படி இருக்கிறான் என்று நாம் அறிந்துகொள்ளலாம். பிறகு மந்தமான பிள்ளைகளை அப்புறப்படுத்தாமல் அப்போதைக்கப்போது பொதுவிலும் தனியாயும் கொஞ்சம் கஷ்டப்பட்டு கவனித்து வந்தால் வருஷக் கடைசியில் அவர்களும் மேல் வகுப்பிற்கு தகுதியுள்ளவர்களாகக்கூடும். அப்படிச் செய்வதற்கு உபாத்திமார்களும் உபாத்திமைத் தொழிலின் மேன்மையை உணர்ந்து ஊக்கமும் பரோபகாரமும் உடையவர்களாக இருந்தால் அப்பேர்ப்பட்ட சமர்த்தராகவும் கூடும்.

V. வேதமாணிக்கம்,
கத்தோலிக் ஆரம்ப பாடசாலை ஆசிரியன்,
புழுங்கானத்தம்.

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.

Registered No. M. 1534.

J. M. J
R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.
24 MAR 1922



திருச்சினப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| கொத்து 11. | மார்ச்சு 1922. | மலர் 9. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்.

திருச்சினப்பள்ளியில் ஜனவரி மாதம் கூடிய ஆரம்ப ஆசிரியர் மகா நாட்டுக்கு வந்திருந்த உபாத்திமாரின் தொகை இருநூற்றுச் சொச்சந்தான் இருக்கும் என்று அக்கூட்டத்துச் சபாநாயகர் அவர்கள் ஓர் மதிப்பாய்க் கூறியதைக் கேட்டிருந்த நாம்

அவ்வாறே சென்ற சஞ்சிகையில் வரைந்துள்ளோம். ஆனால் டிக்கட்டுகள் விற்றதிலிருந்தும் வேறு விதமாயும் கணித்தபடி மிட்டத்தட்ட 500 உபாத்திமார் கூடியிருக்கவேண்டுமென்று மகா-ா-ா-ஸ்ரீ N. சுந்தரராஜுலு நாயுடு அவர்களிடமிருந்து அறிந்து சந்தோஷிக்கிறோம். மேற்படி கூட்டத்தில் சபாநாயகர் செய்த பிரசங்கத்தை நமது பூங்கொத்தில் பிரசுரிக்கத் துவக்கி இக்கொத்தில் முடித்துவிட்டோம். அக்கூட்டத்தின் தீர்மானங்கள் முதலியவற்றை ஏனையோரும் அறியும்படி கூட்டத்தை நடத்தியவர்கள் வெளியிடுவார்களென்று காத்திருக்கிறோம்.

***　　***　　***

நமது பாடசாலைச் சங்கத்தின் 11-வது வருஷாந்தரக் கூட்டம் சென்ற பெப்ரவரி மாதம் 11-உ கூடிற்று. திருச்சிராப்பள்ளி சர்க்கார் போதனா பாடசாலைத் தலைமையாசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ M. C. சுந்தரம் அய்யங்கார் B.A., L.T. அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். நமது மாணவர்களோடு, ஷை பாடசாலை மாணவர்களும், இன்னும் பல உபாத்திமாரும் உத்தியோகஸ்தரும் வந்திருந்தார்கள்.

வியாசம் எழுதுவதிலும் உபந்நியாசஞ் செய்வதிலும் செய்யுள் பாடுவதிலும் விசேஷ திறமை காட்டியவர்களும் பற்பல கைவேலைகளில் தேர்ச்சியடைந்தவர்களும் வெகுமதி பெற்றார்கள்- புது உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்தக் கூட்டத்தில் அங்கத்தினர் பூக்களையும் விதைகளையும் பற்றிய தாவர நூல் அறிவை பற்பல உதாரணங்களால் விளக்கி தங்களுக்குள் கல்விப்போட்டி போட்டுக்கொண்டார்கள். சபாநாய்கர் அவர்கள் கூட்டத்தில் நடந்த விஷயங்களை மெச்சிப்பேசி அங்கத்தினருக்குப் பயன்படக்கூடிய சில புத்திமதிகளைக் கூறி முடித்தார்கள்.

***　　***　　***

சர்க்கார் போதனாமுறைப் பரீட்சை இந்த மார்ச்சு மாதம் 22, 23, 24-ம் தேதிகளில் நடக்கும் நமது பாடசாலையிலிருந்து 58 புதிய மாணவரும் 10 பழைய மாணவரும் ஷை பரீட்சை எழுதப்போகிறார்கள். எல்லாருக்கும் அநுகூலம் கிடைப்பதாக!

***　　***　　***



சர்க்கார் உதவிபெறும் பாடசாலைகளில் படித்துக்கொடுக்கும் உபாத்திமாரின் கிராண்டு கொஞ்சம், வெகு கொஞ்சம், உயர்த்தப்பட்டிருக்கிறது. இனிமேலாக,

(1) பயிலாத உபாத்திமார்:

லோவர் கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்தவர்களானால் முன்னையைப்போல் வருஷம் ரூ. 48-ம்,

ஹையர் கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்தவர்களானால் ரூ. 72-ம்,

செக்கண்டரி கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்தவர்களானால் ரூ. 96-ம் பெறுவார்கள்.

(2) பயின்ற உபாத்திமார்:

லோவர் கிரேடானால் ரூ. 76-க்குப் பதிலாய் ரூ. 84-ம்,

ஹையர் கிரேடானால் ரூ. 92-க்குப் பதிலாய் ரூ 96-ம்,

செக்கண்டரி கிரேடானால் ரூ. 168-க்குப் பதிலாய் ரூ. 180-ம் பெறுவார்கள்.

ஆனால் உபாத்திமார் கிராண்டுக்காகச் சர்க்கார் அதிகமாய்க் கொடுத்திருக்கிற பணம் இராஜதானி முழுவதற்கும் 2 லட்சம் ரூபாய்கள் மாத்திரமே. ஆகையால் இந்தச் சொற்ப உயர்வுமுதலாய் குறைந்துவிடக்கூடும். இப்படியாய் நமது ஆரம்ப உபாத்திமாரின் நிலைமை இன்னும் பரிதாபத்துக்குரியதாகவே நிற்கிறது. இந்தப் பரிதாபத்தை நீக்கும்படி உபாத்திமாரின் உற்சாகமானது பொது ஜனங்களையும், பொது ஜனங்களின் அபிப்பிராயமானது சட்டசபையாரையும், சட்டசபையாரின் தீர்மானங்கள் சர்க்காரையும் பலவந்தப்படுத்தவேண்டியிருக்கிறது.

***　　***　　***

பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் ஆசியாக்கண்டத்திலுள்ளவர்களின் ஞான விர்த்திக்காகத் தமது சீவியமெல்லாம் செலவழித்த சேசுசபைக் குருவாகிய பிரான்சிஸ்கு சவேரியார்

என்னும் மகாத்துமாவுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுத்த சம்பவம் நடைபெற்று இம்மாதம் 12-௳ முன்னூறு வருடங்கள் பூர்த்தியாயின. இந்த உற்சவத்தை நமது போதனா பாடசாலையில் விசேஷ சிறப்போடு கொண்டாடினோம். இவர் செய்த பிரயாணங்களை விளக்கிக்காட்டும் தேச படமொன்று வெகு நேர்த்தியாய்ச் சித்தரிக்கப்பட்டிருந்தது. அவர் செய்த வேலைகளை வர்ணிக்கும்படி சிறந்த வியாசங்கள் வாசிக்கப்பட்டன. அவரைப் புகழ்ந்தேற்றும்படி பல பாடல்கள் பாடப்பட்டன. பாடசாலையெங்கும் அவருக்குத் தோத்திரமாக விசித்திர தீபங்கள் பொருத்தி அலங்கரிக்கப்பட்டிருந்தது. இம்மகாத்துமாவானவர் சுயநலங் கருதாது பிறருக்காகப் பட்ட பிரயாசை வருத்தமெல்லாம் நமது உபாத்திமாருக்கு ஓர் முன் மாதிரிகையாய்ப் பிரகாசிக்கக்கடவது!

***      ***      ***

## திருக்குடும்ப போதனாமுறை பாடசாலைச் சங்கத்தின் 11-ம் வருஷத்திய ரிப்போர்ட்.

இப்பாடசாலை சங்கத்தின் ஒழுங்குப்படி கடந்த 10 வருஷங்களாகப் பிரதி வருஷத்திலும், ஓர் பொதுக் கூட்டம் கூடிவந்தது போல், இவ்வருஷத்திலும் இன்று மகா-௱-௱-ஸ்ரீ G. T. S. M. C. சுந்தரம் அய்யங்கார், B. A., L. T. அவர்கள் அக்கிராசனம் வகிக்க, 11-ம் வருஷத்திய பொதுக் கூட்டம் கூடப்படுகிறது.

சென்ற வருஷத்திய பொதுக்கூட்டத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கனம் T. K. வெங்கட்ராம அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்கூட்டத்தில் சிலரால் சில உபந்நியாசங்கள் நடந்தன. அவ்வருஷத்தில் விசேஷவிதமாய் உற்சாகத்தைக் காட்டினவர்களுக்கு, வெகுமான பத்திரங்கள் அளிக்கப்பட்டன.

இச்சங்கத்தின் நோக்கம் கல்வி விஷயமாய், விசேஷ சிரத்தையோடு, நாங்கள் ஒன்றுகூடி உழைத்துப் பயில்வதுடன், பிரியத்தாலும், உற்சாகத்தாலும் எழும்பும் ஓர் சக்தியினால், வகுப்பில் படிக்கும் விஷயங்களை காரண காரியத்துடன் அறிந்துகொள்வதற்கு வேண்டிய பிரயாசை எடுத்துக்கொள்வதே.

சென்ற வருஷத்தில் இச்சங்கத்தின் நோக்கம், எங்களில் எம்மட்டும் சித்திபெற்றதெனக் கூறுவோம்.



ஷை சங்கத்தின் நோக்கம் சித்திபெறுவது பணத்தொகை, அல்லது அங்கத்தினரின் தொகையைப் பொறுத்ததன்று. கல்வி விஷயமாக நாங்கள் செய்த வேலையைப் பொறுத்ததாகும். அவ்வேலைகளாவன :—

1. சங்கக்கூட்டங்கள்: கடந்த ஒரு வருஷத்திற்குள் நடைபெற்ற கூட்டங்கள் பத்தொன்பது. இக்கூட்டங்களில், பதினாறு உபந்நியாசங்களும்; இரண்டு தர்க்கங்களும்; ஒரு வியாசமும் நடந்தன. அவைகளாவன :—இக்கூட்டங்களுக்கெல்லாம் அக்கிராசனம் வகித்தவர்கள் எங்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்களுடன் நாங்கள் பாடவிஷயங்களையும், பொது அறிவையும் விருத்திசெய்யவும்; சபைக் கோழைத்தன்மையின்றி எவ்வவையிலும் எழுந்து பேசும் சக்திக்காகவும் ஒத்துழைத்தோம். இவ்வுழைப்பின் தன்மையை ஷை சங்கத்தின் குறிப்புப் புத்தகத்திலறியலாம்.

2. வாசகசாலை: கடந்த வருஷத்தைப்போலவே, அநேகம் பத்திரிகைகள் வரவழைக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் எங்களுக்கு குறிப்பிட்ட ஒழுங்குப்படி, வாசகசாலை சென்று வாசித்துவருகிறோம். நிற்க;

இச்சங்கத்தின் நோக்கத்திற்கிசைய எங்களைப் பயிற்றியதுடன், எங்களுடன் சேர்ந்துழைத்த எம் ஆசிரியரவர்களுக்கு மனமுவந்த நன்றி செலுத்துகிறோம்.

மற்றும் இக்கூட்டத்தில் விளங்கும், கனம் சபாநாயகர் M. C. சுந்தரம் அய்யங்கார், B. A , L. T. அவர்களுக்கும், இக்கூட்டத்தைக் கனப்படுத்த வந்த பெரியோர்களுக்கும், மனமுவந்த நன்றி செலுத்துகிறோம்.

இங்ஙனம்,

TRICHINOPOLY, 11-2-1922.

(Sd.) J. L. Miranda, S. J., *Director.*
,, V. S. மரியமிக்கேல், *President.*
,, S. அருள்தாஸ், *Secretary.*

## மரண அறிக்கை.

நமது பாடசாலைச் சங்கத்துத் தலைவராக இவ்வருஷம் நியமனம் பெற்ற K. S. R. மரிய அருளானந்த உபாத்தியாயர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு இம்மாதம் 8-௳ இரவு பரலோகபிராப்தியானார். இவர் படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினவர். இவருடைய ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறுவதாக!

# திருச்சிராப்பள்ளி ஜில்லா ஆரம்ப ஆசிரியர் முதலாவது மகாநாடு.

## சபாநாயகரின் முன்னுரைப் பிரசங்கம்.

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம்முடைய ஜில்லாவில் உள்ள அநேக தாலுகா போர்டுகளின் பணம் ரஸ்தாக்கள் போடுவதிலும், கட்டிடங்கள் கட்டுவதிலும் செலவழிந்துவருகிறது. படிப்புக்குச் செலவழிப்பதற்கோ அவ்வளவு பொருள் இல்லை. படிப்பை நடத்துவதற்கு வேண்டிய பொருளை, சிறு வரி வாயிலாக (Education Cess) ஜனங்களிடம் இருந்து சேகரிப்பதற்கோ அவர்களுக்கு இன்னம் மனம் திரும்பவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மேற்கத்திய தேசங்களிலெல்லாம் ஆரம்ப ஆசிரியர் சம்பளம் பூராவும் சர்க்காரால் கொடுக்கப்பட்டு வருகிறது. தொழில்களிலெல்லாம் உபாத்திமைத்தொழில் சிறந்ததென்றும், வாழ்க்கையில் வருந்துபவர், உபாத்தியாயரைப்போல் (noblest of professions but sorriest of trades) வேறு ஒருவருமில்லையென்றும் அநேகர் அடிக்கடி கூறுவர். இந்தப் பழமொழியின் பின்பாகம் நம்முடைய நாட்டிற்கு அதிகப் பொருத்தமானது. பிறநாடுகளில் அவ்வாறில்லை. ஜர்மனி, ஜப்பான் முதலான நாடுகளில் ஆரம்ப ஆசிரியர்கள் மற்றவர்களை அண்டிப் பிழைக்கவேண்டியதில்லை தங்களுக்கென்று வீடு, தோட்டம், வருவாய் இல்லாத ஆசிரியரே கிடையாது. படிப்பும், போதிய பொருளும் அவர்களிடத்தில் சேர்ந்திருப்பதால் எல்லாரும் அவர்களை மதிக்கிறார்கள். அது காரணத்தால் அங்கே கல்வி எங்கும் பரவியுள்ளது. ஹைஸ்கூல் படிப்பிற்கும், காலேஜ் படிப்பிற்கும் ஆரம்பப்படிப்புதான் அடிப்படை. ஆதலால் அப்படிப்பைத் தரும் ஆசிரியர்கள் அவலப்படாமல் இருக்கும்படிச்செய்தல் சர்க்கார் கடமை. அவர்கள் மனம் திருப்தியடையும்படி உதவவேண்டும். கல்விசம்பந்தமாய் முதன்முதல் கவனிக்கப்படவேண்டிய ஆசிரியர்கள் இவர்களே. இது எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு முடிவாம்.

போர்டு ஸ்கூல்களில் உழைக்கும் உபாத்தியாயர்களின் சம்பளம் படிப்படியாய் உயரும்படி ஏற்படுத்தவேண்டும். பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர்களின் பரிசோதனையைப் பார்த்து, சம்



பளத்தை உயர்த்தவேண்டும். கட்டாயப்படிப்பை எல்லோரும் கைக்கொள்ளுமளவும், காப்பிடேஷன் (Capitation) கிராண்டையும் கொடுத்துவரல் அவசியம். பிரைமரி உபாத்தியார்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் 3-ல் 2-பங்கை மாகாண கிராண்டிலிருந்து மானேஜர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உபாத்தியாயர்களுக்குத் தாராளமாய்க் கொடுப்பார்கள். ஜனங்களுக்குக் கல்வியை உதவாமல் வேறு என்ன உதவி செய்தாலும் அதிகப் பயனைத் தராது. எவ்வளவு சீக்கிரத்தில் ஏற்படுத்தக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அடியிற்கண்ட சம்பளத்திட்டம் அநுபவத்திற்கு வரவேண்டும்.

| | |
|---|---|
| எலிமெண்டரி லோயர் | ... 25 — $\frac{1}{1}$ — 35 |
| எலிமெண்டரி ஹையர் | ... 30 — $\frac{2}{1}$ — 40 |
| சக்கண்டரி கிரேடு ... | ... 35 — $\frac{3}{1}$ — 50 |

இக்காலத்திய வாழ்க்கையின் கொடுமைகளைப் பலரும் அறிவர். அதிலும் சிறு ஊதியத்தைப் பெறும் ஆரப்ப ஆசிரியர்கள் என்ன செய்வார்கள். இனியும் தாமதிக்காமல் அவர்களின் சம்பளதிட்டத்தை மாற்றவேண்டும். நம் நாட்டில் ஆரம்பக் கல்வியை விர்த்திசெய்வதற்குச் செய்யவேண்டிய முதல்வேலை இதுதான். இரண்டாவதாக, கல்வி பரவவேண்டுமானால் அதைக் கட்டாயப்படிப்பாயும், இலவசப் படிப்பாயும் ஆக்கவேண்டும்.

மன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, வைசிராய் அவர்களின் சட்ட சபையில், காலம் சென்ற கனம் கோபாலகிருஷ்ண கோக்கிலே அவர்கள், ஆரம்பக் கல்வியைக் கட்டாயப் படிப்பாக ஆக்கவேண்டுமென்று ஒரு பிரோரேபளை கொண்டுவந்தார்கள். அதை யெல்லோரும் ஆமோதித்தார்கள். இந்திய அரசாங்கத்தாரும் அங்கீகரித்துக்கொண்டார்கள். பொருள் நிலையை உத்தேசித்து அமுலுக்கு வராமல் நின்றுவிட்டது. இலவசப் படிப்பிற்கு இன்னம் காலம் வரவில்லையென்கிறார்கள். ஏனெனில் பள்ளிக்கூடங்கள் இன்னம் பல ஊர்களில் கிடையாது. ஆதலால் இலவசப் படிப்பு சில ஊர்களுக்குத்தான் பயனைத்தரும், மற்ற ஊர்களுக்குத் தராதென்று யோசிக்கிறார்கள். இவ்வளவு காலமாயும் கட்டாயப் படிப்பைப்பற்றியும் இலவசப் படிப்பைப்பற்றியும் ஒரு முடிபுக்கு வரவில்லை.

இப்பொழுது இந்தியாவிலுள்ள கிராமங்களின் எண்ணிக்கை ஏழு லட்சம். பிள்ளைகளுக்கும் பெண்களுக்குமாக இருக்கும் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களின் தொகை 142,203. இவற்றுள்,

பட்டணங்களில்தான் அதிக பள்ளிக்கூடங்கள் உண்டு. இது சம்பந்தமாக உள்ள மற்றொரு அரிய விஷயத்தை மறந்துவிடலாகாது. பிரிட்டிஷ் இந்தியாவில் எலிமெண்டரி படிப்பு படிப்பவரின் எண்ணிக்கை நூற்றுக்கு 2·8 பேர், அதாவது: பையன்களுக்குள் நூற்றுக்கு 4·5-ம், பெண்களுக்குள் நூற்றுக்கு 0·95-ம். அமெரிக்காவில் உள்ள ஐக்கிய மாகாணங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 19·8. ஸ்காட்லண்டு நூற்றுக்கு 17·3. இங்கிலாந்து, வேல்ஸ் என்ற இரண்டு இடங்களிலும் நூற்றுக்கு 16·5. ஜர்மனியில் நூற்றுக்கு 13·9. ஜப்பானில் நூற்றுக்கு 13 0. நம்முடைய ஜில்லாவில் பையன்களுக்கு 1115 பள்ளிக்கூடங்கள் உண்டு. பெண்களுக்கு 78 பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகளில் படிக்கும் பையன்கள் 42357. பெண்கள் 8718. நம்முடைய ஜில்லாவின் ஜனத்தொகையின் மொத்தம் 22 இலட்சம். படிக்கும் பிள்ளைகளின் தொகை ½ இலட்சம். ஆக நூற்றுக்கு 2·2 பேர். இந்த எண்ணிக்கை பிரிட்டிஷ் இந்தியாவில் படிப்போர் எண்ணிக்கையைவிடச் சிறிது குறைவு. படியாதவர்கள் எண்ணிக்கை ஆண்களில் நூற்றுக்கு 89, பெண்களில் நூற்றுக்கு 99 ஆகும். இதில் மற்றொரு விஷயமும் கவனிக்கவேண்டும். படிப்பவர்களில் நூற்றுக்கு 90 பேர் அதிக தாழ்ந்த வகுப்பில் இருக்கிறார்கள். முதல் வகுப்போடு படித்துவிட்டுச் செல்வோர் சிலர். 3, 4-வது வகுப்போடு படித்துவிட்டு திரும்புவார் சிலர். இவர்கள் படித்தும் படிக்காமலும் விட்டுவிடுவதால் சீக்கிரத்தில் படித்ததையும் மறந்துவிடுகிறார்கள். இவர்களையும் படியாதவர்கள் எண்ணிக்கையில்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

1913-ம் வருஷம் இந்திய அரசாங்கத்தாரால் தீர்மானம் நிறைவேறிய பிறகு, இந்தியாவின் நிலை மாறிக்கொண்டே வருகிறது. தினம்தினம் மாறுதல் அடைந்துவருகிறது. சீர்திருத்தங்கள் வந்தன. கல்வி இலாகா, மந்திரியின் விசாரணைக்குள் வந்துளது. சட்ட சபைகளுக்கு பிரதிநிதிகள் தேர்ந்து எடுப்பதற்கும், ஜனங்களின் பொதுவான எண்ணங்களை வெளியிடுவதற்கும் கல்வி யவசியம். அப்பொழுதுதான் ஜனங்கள் சட்டத்தையறிந்துகொள்வதுடன் உண்மையாய் ஜனங்களுக்கு உழைக்கக்கூடியவர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். ஆதலால் அரசாங்கத்தார் தற்சமயம் முனிசிபல் எல்லைக்குள்ளாவது இலவசப் படிப்பையும், கட்டாயப் படிப்பையும் தரல்வேண்டும். முனிசிப்பல் பள்ளிக்கூடங்களில் மாத்திரம் இலவசப்படிப்பு கொடுத்தால் போதாது. பிரைவேட் மானேஜ்மெண்டில் இருக்கும் பள்ளிக்கூடங்களிலும்



அவ்வாறு செய்தல்வேண்டும். இல்லாவிட்டால் ஒரு பள்ளிக்கூடத்தில் சம்பளம் வாங்கியும், மற்றொன்றில் வாங்காமலும் இருந்தால், ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள் கதையாய் முடியும். பிரைவேட் மானேஜ்மெண்டிலிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் உதவி செய்யக்கூடிய பணம் முனிசிபாலிட்டியிலிருந்தால் சில வருஷங்களுக்கு இலவசப்படிப்பு கொடுக்கலாம். அப்பொழுதும் கட்டாயப்படிப்பு கொடுக்கமுடியாது. இந்தியாவில் ஜனங்களின் பெரும்பாலாருக்கு கல்வியைப்பற்றி கருத்தே கிடையாது. அவர்களுக்கு கல்வியின் ஊக்கத்தை உண்டாக்கவும், மற்ற காரியங்களைச் செய்யும் டிஸ்திரிக்ட் எடுகேஷனல் கவுன்சில் மாத்திரம் போதாது.

ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு கவுன்சில் இருக்கவேண்டும். இவ்வாறு செய்தால் ஒவ்வொருவருக்கும் கல்வியைப்பற்றி யொரு பற்றுதலுண்டாகும். அவரவர்களும் தங்களாலியன்றதையுதவுவதற்கு முந்துவார்கள். தாலுகா எடுகேஷனல் கவுன்சில்கள் ஏற்படுத்துவதால் ஜனங்களுக்கு ஒரு ஊக்கம் உண்டாகி, கல்விசம்மந்தமானவைகளையெல்லாம் கவனிப்பார்கள். எல்லாரும் எளிதிற் கல்விபெறுமாறு ஜனங்களிடத்திலிருந்து சிறு வரி வசூல் செய்துகொள்ளக்கூடும். தற்காலத்தில் ஜில்லா எடுகேஷனல் கௌன்சிலை ஒரு தபாலாபீசென்றே கூறலாம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் எவ்வளவு கிராண்டு தொகை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை, அந்தந்த பள்ளிக்கூடத்து தலைவருக்கு அறிவிப்பதுதான், அக்கௌன்சிலில் இப்பொழுது நடக்கும் முக்கியவேலை. டிபார்ட்மெண்டார் கொடுக்கும் பணத்தைத் தவிர்த்து வேறு பணம் அக்கௌன்சிலுக்குக் கிடையாது. தங்கள் விசாரணையில் இருக்கும் இடங்களில் கல்வியை முற்றும் பரப்புவதற்கும், பாட ஒழுங்குகளை அந்தந்த இடத்திற்கேற்ப சீர்ப்படுத்தவும், முழுசுதந்தரம் கௌன்சிலுக்குக் கிடையாது. மாகாண முழுவதிற்கும் பாட ஒழுங்கு ஒரே தன்மையாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஜில்லாவின் நிலைக்கேற்ப அப்பாட ஒழுங்கைத் திருத்திக்கொள்வதற்கோ, மாற்றிக்கொள்வதற்கோ மார்க்கமில்லை. ஆனால் சீர்திருத்தங்கள் வந்து அதிககாலமாகவில்லை. போகப்போக மிகுந்த சுதந்தரத்தையும், முன்னேற்றத்தையும் பெறுவதற்கிடமுண்டு.

தாலூகா கௌன்சில் ஏற்படுத்துவதோடு மற்றொரு சீர்திருத்தமும் வரவேண்டும். அச்சீர்திருத்தத்தால் தாலூகா போர்டு பள்ளிக்கூடங்களையும் ஏனைய பள்ளிக்கூடங்களையும் இக்

கௌன்சில் விசாரணையின்கீழ் அமைத்தல்வேண்டும். தங்கள் நேர் கவனிப்பின்கீழ் பள்ளிக்கூட பரிசோதகர்கள் பலரை நியமித்துக்கொள்ளும் உரிமையும் இருத்தல் அவசியம். வைத்திய இலாகாவைப்போன்று, இப்பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர்கள் மாகாண ஊழியக்காரராய் இருக்கலாம். ஆனால் அவர்களை அந்தந்த ஜில்லா கௌன்சிலின்கீழ் வேலைசெய்துவரும்படி அரசாங்கத்தார் அனுமதி தரல் அவசியமாகும். அப்பொழுது பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு, தாங்கள் வேலைசெய்யும் இடத்தைப்பற்றி நன்றாய்த் தெரியும். அவர்கள் செய்யும் வேலையையும் ஜனங்கள் ஆவலோடு கவனித்து வருவார்கள். ஜனங்களும் இவர்கள் வேலையில் கருத்துடையவர்களாகி, இவர்களிடமிருந்து அதிக உதவியைப் பெறுவார்கள். மாகாண கல்வி இலாகா ஏற்படுத்தும் ஒரே மாதிரியான பாட ஒழுங்கை எல்லா ஜில்லாக்களிலும் கைக்கொள்ளவேண்டிய அவசியமிராது. அந்தந்த இடத்திற்கேற்றவாறு பள்ளிக்கூடங்களை யமைத்துக்கொள்ளலாம். அங்கங்கே உள்ள ஜனங்களின் ஜாதி, தொழில், பழக்க வழக்கங்களுக்கேற்ப, படிக்கும் விஷயங்களையும் படிக்கும் கால அளவையும் மாற்றிக்கொள்ளலாம். இவைகளையெல்லாம் எப்பொழுதாவது நிறைவேறுமா?

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஜீவனத்திற்குபயோகமாகும் படிப்பை (Vocational training) எவ்வாறு போதிக்கலாம் என்ற விஷயத்தை இப்பொழுது ஆராய விரும்புகிறேன். இவ்விஷயம் எல்லாருடைய எண்ணத்திலும் உலவி வருகிறது. கைத்தொழில் விஷயமாய்க் கண்மூடிக்கிடந்த இந்திய நாடு, இப்பொழுது தூக்கந் தெளிந்து, கண் திறந்துவிட்டது. இதற்குச் சின்னங்கள் பல தோன்றுகின்றன. இந்தியர்களும், புறநாட்டார்களும் தங்கள் பெருமுதலைக்கொண்டு, இந்தியாவில் கிடைக்கும் பொருளைக் கொண்டு தொழில்முறையை முன்னுக்குக் கொண்டுவர முயலுகிறார்கள். கதர்விஷயமாய் மகாத்மா காந்தி வெளியிட்ட வேண்டுகோள் வீணான வார்த்தைகளல்ல. எதிர்பாராதபடி நூல்நூற்கும் யந்திரங்கள் எங்கும் பரவுகின்றன. சுதேசிய துணியையணிந்துகொள்ள மக்கள் நாட்டங்கொள்ளுகிறார்கள். இத்துடனில்லாது பலவகையான கைத்தொழில்களிலும் விர்த்தியடைய வேண்டும். இது மக்கள் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் அதிக உதவியாயிருக்கும். ஜீவனத்திற்கு வேண்டியவைகளைத் தேடிக்கொள்ளுவதற்கு ஏற்றவாறு பிள்ளைகளைப் பயிற்றவேண்டும். இதுமாத்திரம் போதாது. தங்கள்



ஜீவியத்தை ஒழுங்காய் நடத்தும்படியாயும் கற்றுக்கொடுத்தல் வேண்டும். கேவலம் வெறும் படிப்பினால் இவைகள் கைகூடாது. ஜீவனோபாய முறையைக் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களினால்தான் இவைகள் கைகூடும். அப்பள்ளிக்கூடங்களில் கற்கும் ஒவ்வொரு சிறுவரும் பெருந்தொழிலாளியாகலாம். நம்முடைய ஜில்லாவில் 16 ஹையர் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் உண்டு. இங்கே 8-வது வகுப்பு வரையிலுமுண்டு. நெசவு, தச்சு, பாய்பின்னுதல் முதலிய தொழிற்குப் புகுமுன் நாட்டு மொழியை நலமுறக் கற்றுக்கொள்வதற்காகத்தான் இப்பள்ளிக்கூடங்களை முதல் முதல் ஆரம்பித்தார்கள். நம்முடைய ஜில்லாவில் இத்தகைய பள்ளிக்கூடங்கள் பதினாறு உண்டு. இப்பள்ளிக்கூடங்கள் கைத்தொழிலைப் போதிப்பதற்கு ஏற்ற சாதனங்களையெல்லாம் பெற்றிருத்தல் வேண்டும். இங்கு கற்கும் கல்வியானது, பிரைமரி பள்ளிகளிலும் ஹைஸ்கூல்களிலும் கற்கும் கல்வியைப்போன்றிராது வேறுபட்டிருக்கவேண்டும். மிடில் ஸ்கூல்களிலும், ஹையர் பிரைமரி ஸ்கூல்களிலும் கற்றுக்கொள்ளக்கூடிய கல்வியை இங்கு கற்றுக்கொள்ளத் தடையிருத்தலாகாது. பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காய்ப் போகும் சாதாரண அறிவுள்ள ஒரு சிறுவன், கிராமாந்திரப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, ஜீவனோபாய முறையோடு போதிக்கும் மிடில் ஸ்கூலுக்குப் பதினோருவது வயதில் போய்ச்சேரலாம். அங்கு பதினாறுவது வயதிற்குள் படித்துமுடிக்கலாம்.

எல்லாப் பாடங்களையும் 4, 5, 6, 7, 8 என்னும் ஐந்து வகுப்புக்குள்ளேயே முடித்தல் வேண்டும். நாட்டு மொழியிலேயே பாடங்களைச் சொல்லித்தரலவசியம். பாடமுறையில் கைத்தொழிற் கல்வி முக்கியமாயிருத்தல் வேண்டும். மாணாக்கர்களுக்கு எப்படிப்பில் அதிக விருப்பமிருக்கிறதோ அதற்கேற்றவாறு வகுப்புகளையமைத்தல் நலம். இவ்வாறு அமைத்தல் அவர்களின் பிற்காலத்திய வாழ்க்கையை அநுசரித்துமிருத்தலவசியம். ஐந்தாவது, ஆறாவது வகுப்புகளில் கற்கும் நேரத்தைக் கைத்தொழிலுக்குப் பாதியாகவும், மற்றைய படிப்புக்குப் பாதியாகவும் பகிர்ந்திடலாம். கைத்தொழிலுக்குரிய நேரத்தை வெளியிடங்களிலும், பட்டறைகளிலும், கல்விக்குரிய நேரத்தை வகுப்பு அறைகளிலும் செலவிடல் சிறப்பாகும். இடத்திற்கேற்றவாறு கைத்தொழிலைக் கற்றுக்கொடுத்தலவசியம். அடியிற்கண்ட நிபந்தனைகள் பொருந்தியிருப்பின் அப்பள்ளிக்கூடங்கள் சீக்கிரத்தில் முன்னேற்றமடையும்.

1. அந்தந்த இடங்களில் விளையும் பொருளுக்கும் அங்குள்ள ஜனங்களின் பரம்பரை சுபாவத்திற்கும் பொருத்தமாயிருத்தல் வேண்டும்.

2. செய்யும் பொருட்களை யுடனுக்குடன் விலையாக்கக் கூடிய வசதிகளிருக்கவேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களுக்குப் போதிய பயிற்சி உண்டாகும்.

3. மாணவர் தொழிலைக் கற்றுக்கொண்டவுடன் அவர்கள் சென்று வேலை செய்வதற்கு அநேக இடங்கள் இருத்தலவசியம். நம்முடைய ஜில்லாவில் உள்ள நாட்டு மொழியைப் போதிக்கும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில், கைத்தொழில் சம்மந்தமாய் ஒன்றுங் கற்றுக்கொடாமல், ஹைஸ்கூல் படிப்பையே யெதிர்நோக்கி, அவைகளுக்குச் சாதனங்களாகவே, பாடங்களைக் கற்பிக்கப்படுதலாலும், கைத்தொழிற் கல்வி நம் நாட்டு பிற்காலத்திய வாழ்க்கைக்கு அதிக அவசியமாயிருப்பதாலும், இதைப்பற்றிச் சிறிது விரித்துப் பேச நேர்ந்தேன்.

பள்ளிக்கூடக் கட்டிடங்களைப்பற்றி அடுத்துப்பேச எண்ணுகிறேன். சில இடங்களில் கட்டிடங்கள் நன்றாயிருக்கும். மற்ற இடங்களில் உள்ளவைகளைப்பற்றி கூறவேண்டியதில்லை. வாடகைக் கட்டிடங்களும் அப்படித்தான். டிபார்ட்மெண்டார் அங்கீகரித்துள்ள சில மூன் மாதிரிப் பிளான்களுக்கேற்ப தாலூகா போர்டார் பள்ளிக்கூடங்களை அமைக்க விரும்பியிருப்பார்கள். பணமின்மையால் அம்மூன்மாதிரியை முற்றும் அனுசரிப்பதற்கில்லை. ஆதலால் ஒரு பக்கத்தில் தாழ்வாரம் இருக்கும், மற்றொரு பக்கத்தில் இருக்காது. ஜன்னல் இருக்கும் கதவிருக்காது. கட்டிடத்தின் நீளத்திற்கேற்ற அகலமிராது. இம்மாதிரியான கட்டிடங்களைக் கட்டுவதற்குக் காரணம் பொருளின்மையே. இவைகளைப் பார்த்தால் தலையில்லா முண்டம்போலும், கை காலில்லா நொண்டி முடம்போலும் விகாரமாயும் ஒழுங்கீனமாயுமிருக்கும். இத்தகைய தடுமாற்றங்களொழியவேண்டும். கட்டினால் கட்டிடங்களை ஒழுங்காய்க் கட்டவேண்டும். இல்லையேல் கட்டலாகாது. இம்மாதிரியான ஒழுங்கீனமான கட்டிடங்களிலிருந்து கற்பதைவிட, பண்டை நாள்போல் மரத்தடியில் ஆசான் முன்னிலையிலிருந்து கற்கலாம். இக்காலத்திலும் அம்மாதிரியான பள்ளிக்கூடங்கள் இல்லாமற் போகவில்லை. ஹரித்துவாரில் அமைந்துள்ள ஆரியசமாஜ குருகுலமும், போல்பூரில் கனம் ரபீந்திர



நாத டாகூர் ஏற்படுத்தியுள்ள சாந்திநிகேதனமும் அத்தகைய பள்ளிக்கூடங்களே. நம்முடைய பள்ளிக்கூடங்கள், முன்னைய ஆசாரங்களையும் பின்னைய ஆசாரங்களையும் தழுவியிருத்தல்வேண்டும். பிள்ளைகளுக்கு நலமும் பலமும் தருமாறு மிகுந்த காற்றோட்டமுடையதாயும், சுகாதாரத்திற்கு ஏற்றதாயும், கட்டடங்கள் இருத்தல் அவசியம். மிகப் பணச் செலவுள்ளதாயும் கண்ணுக்கு அழகாயும் அமைத்தல் அவசியமன்று.

பெண்கல்வி, சமயபோதனை, பெற்றோர்கள் கூட்டுறவு, ஒழுக்கப் பயிற்சி முதலிய பலவிஷயங்களைப்பற்றிச் சிறிதேனும் இத்தருணம் எனக்குப் பேச விருப்பம். ஒழுக்கப்பயிற்சிக்கு உபாத்தியாயர், உபாத்தியாயரின் ஒழுக்கமே. உங்கள் முன் உட்கார்ந்திருக்கும் குழந்தைகள் ஒவ்வொரு நிமிஷமும் உங்களையே கண்கொட்டாது கவனித்துக்கொண்டிருக்கும். உங்கள் கையையும் காலையும், கண்ணையும் கருத்தாய்க் கவனிக்கும். உங்கள் பாட்டையும் பாடத்தையும் கேட்கும். உங்கள் நடையுடை பாவனைகளையெல்லாம் பசுமரத்தாணிபோல் பதியவைத்துக்கொள்ளும். எள்ளளவில் நடையும், கள்ளமில் ஒழுக்கமும் உங்களிடத்தில் காணப்படுவதே உங்கள் மாணாக்கர்கள் உட்கொள்ளும் உயர் போதனை. நான் சொல்ல விரும்பும் மற்றொரு விஷயமும் உண்டு. அதாவது பிரைமரி உபாத்தியாயர்களுக்கு இன்னம் அதிகத் தகுதி வேண்டுமென்பதாம். கல்வித்துறையில் ஒரு உபாத்தியாயரே மானேஜராக இருத்தலாகாதென்பது என் கருத்து. ஒன்று உபாத்தியாயராயிருத்தல் பொருந்தும் அல்லது மானேஜராயிருத்தல் பொருந்தும். பாலர்களைப்பயிற்றும் ஆசிரியர் குறைந்தது மிடில் ஸ்கூல் பரீட்சையிலாவது அல்லது மூன்றும் பாரம் பரீட்சையிலாவது தேறியிருத்தல் நன்று. பல பொருள்களைப்பற்றியும் ஆராய்ந்து அறிந்திருத்தலவசியம். பையனைவிட அறிவிலும் ஆராய்ச்சியிலும் சிறிது மேம்பட்டிருத்தல் ஆசிரியருக்குப் போதாது. செஷன்ஸ்கூல் செய்ததெல்லாம் போதும். இனி அவைகள் அவ்வளவு வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். குறைந்தது ஹையர் எலிமெண்டரி டீச்சர் சர்டிபிகேட் பெற்றவர்கள்தான் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் வேலைக்கு அருகராவர். குறைந்த படிப்புடைய ஆசிரியர்கள் சிற்சில சமயங்களில் பிள்ளைகளுக்குப் பொய்யும் புறட்டையும், தப்பும் தவறையுமே சொல்லிக்கொடுத்து விடுவார்கள். அற்ப அறிவு அதிக துன்பத்திற்கு இடமாகும். குறைந்த படிப்புடையோர் எத்தனையோபேர் எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளார்கள். அவர்கள் நெஞ்சைப் புண்படுத்தும்பொருட்டு

நான் இவைகளைக் கூறினேனில்லை. நம்முடைய தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானாலும், உண்மை அறிவாளிகளும், தேசத் தொண்டர்களும் வெளிவர வேண்டுமானாலும் அஸ்திவாரத்தை ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிடவேண்டும். அப்படிப்பட்ட அஸ்திவாரம் போடுவதற்கு உரியவர்கள் அறிவிலும், கல்வியிலும் உயர்ந்தவர்களாயிருத்தல் வேண்டுமென்று கூறவும் வேண்டுமோ? உயர் தொழிலாகிய உபாத்திமைத் தொழிலை நடாத்தும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய சில உட்கோள்களை இங்குக் கூறுதலவசியம். உங்களுக்கு வருவாயோ வெறுவாய். மதிப்போ அவமதிப்பு. வாழ்வோ தாழ்வு. உங்கள் நாட்டின் முன்னேற்றத்தை எண்ணுவீர்களாயின், நேரும் இடரைக் களைய திடமுண்டாகும். கஷ்டங்களையெல்லாம் இஷ்டத்தோடு பொறுப்பீர்கள். கல்விக் கொடியைக் கரத்திலேந்தி 'ஜே' என்ற ஆரவாரத்தோடு எங்குங்கொண்டு செல்வீர்கள்.

ஆசிரியர் மாண்டிஸோரி அம்மையின் பெயரை இங்கு மறத்தலாகாது. இவர்கள் இத்தாலியா தேசத்துப் பெண்மணி. இவர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் நுண்ணிய முறையைக் கண்டு உலகமெல்லாம் உவந்து போற்றும். ஆரம்ப ஆசிரியருக்கு முன்மாதிரியாக இருக்கத்தக்க ஆசிரியர் அவர்கள். மாண்டிஸோரி என்னும்போதே, அவர் மாணாக்கர்களுக்கு ஒரு சக்தி தோன்றும். அவர் திருவுருவம் பெருமகிழ்ச்சியை ஊட்டும். அவர் போதனைக்கெல்லாம் அடிப்படையாயிருப்பது சுயேச்சையேயாகும். சுதந்தரமில்லாதவன் சுகமுற வியலாதென்பது அவர் கொள்கை. இந்திய ஆசிரியர்களோ அப்படியில்லை. பிள்ளைகளின் காரியங்களில் பிரவேசிப்பது சகஜம். அவர்கள் இயற்கைப் பழக்க வழக்கங்களைத் தடுப்பதிலும் தாராளம். அந்த அம்மாளின் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு அடித்தல், அறைதல், கிள்ளுதல் பிசைதல் முதலிய தண்டனைகள் கிடையாது. பிரம்புக்கு இடமே கிடையாது. அடியும், அறையும் இருக்கும் இடத்தில், அவ்வம்மாள் பள்ளிக்கூடத்தில் அன்பும் ஆர்வமும் இருக்கும். பிள்ளைகளை வழிப்படுத்தலும், அவர்கள் செய்யும் வேலையைக் கண்காணித்தலும்தான் அந்த அம்மாளின் வேலை. பிள்ளைகளின் காரியத்தில் தலையிடுதலும், அவர்களைக் கண்டிப்பதும் அம்மாது சிரோன்மணியின் வேலையல்ல. உங்களில் எத்தனைபேர் உங்கள் மாணாக்கர்களிடத்தில் ஈவு, இரக்கஞ் சிறிதுங் காட்டாமல், தண்டு கொண்டு புடைத்து விலங்கினங்களைப்போல் நடத்துகிறார்கள். தளர்ந்த காலத்தில் தாங்குவீர்களென்றும், ஓய்ந்த காலத்தில்



உதவுவீர்களென்றும் உங்களைப்பற்றி உங்கள் மாணாக்கர் மனத்தில் கொள்ளும்படி நடந்து காட்டுங்கள். உங்களுக்கு அவர்களிடத்தில் அன்பும், ஆர்வமுமுண்டென்று உணர்த்துங்கள். "அன்பே, அன்பை ஈனும்." இவ்வாறிருந்தால், அப்பிள்ளைகள் தங்கள் உள்ளமாகிய கோவிலில் உங்களை உவப்புடனிருத்தி, தெய்வமாகப் போற்றி யடிபணிவார்கள். சுருங்கச் சொல்லின் நீங்கள் ஒவ்வொருவரும் மாண்டிஸோரி அம்மாளைப்போன்றிருங்கள். பின்பு பாருங்கள். கற்போர் கல்வியில் கருத்தூன்றிக் கற்பார். ஆரவாரம் அடியோடொழியும். உபாத்திமைத் தொழிலில் அவ்வம்மையின் உட்கோளே உங்கள் உட்கோளாகுக. நம்முடைய தேசத்தின் முதாதைகளின் உட்கோளாகிய அன்பும், பொறையுமே அவ்வம்மையின் உயர்கொள்கைகளாகும். ஆசான் சீடனிடத்தில் அருளொடு ஒழுகினான். சீடனும் ஆசானை யடிபணிந்து போற்றினான்.

இன்று குந்திப்படிக்கும் குழந்தைகளே நாளை இந்தியாவின் குடிமக்கள். இன்று பள்ளியில் பாங்காய்ப் படிப்போரே நாளை பரதகண்டத்தைப் பாதுகாப்போராவர். இவர்களை வழிப்படுத்தும் நல்ல சமயமும், பெரும் பொறுப்பும் ஆசிரியர்பால் அமைந்துள்ளது. கல்வியை வளர்க்கு முறையைப்பற்றி பல கட்சிகளும் பிரதி கட்சிகளும் உண்டாகலாம். இது நல்லது அது நல்லதென்று பல வாக்குவாதங்கள் நேரலாம். எது எவ்வாறாயினும் ஆகுக. ஒரு புதிய முறை உண்டாகுக. அது முற்போதைய முறையும் தற்போதைய முறையுங் கலந்து, அறிவிக்கும், அநுபவத்திற்கும் ஏற்றதாயிருப்பதாகுக. இன்னும் சில வார்த்தைகளோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். நீங்கள் இதுகாறும் பொறுமையோடு இருந்து கேட்டதற்கு மிகவும் வந்தனம். உங்கள் மகாநாடு வெற்றியுறுவதாக. உங்கள் தீர்மானங்கள் நிதானமாய் யோசித்ததாயும், ஆழ்ந்த கருத்துகளைக்கொண்டதாயும், அநுபவத்திற்கு வரக்கூடியதாயுமிருத்தல்வேண்டும். உங்கள் பதவியை உயர்த்திக்கொள்ளச் செய்யும் முயற்சியும், போதனாமுறையைச் சீர்திருத்தச் செய்யும் முயற்சியும் தற்போது நிறைவேறாவிட்டாலும், எடுத்த முயற்சி ஒருபொழுதும் வீண்போகாது.

'தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி
மெய்வருந்தக் கூலிதரும்'—என்பது பொய்யா மொழியன்றோ?

மரம் நட்டவன் பழத்தை யறுக்காவிட்டாலும் அவன் சந்ததியாராவது அறுப்பார்கள். அதுபோன்று உங்கள் உழைப்பு

உங்களுக்குப் பயன் தராவிடினும் உங்கள் சந்ததியாருக்குப் பயன் தராமற்போகாது. தனக்கென வாழாமையும், பிறருக்கென வாழ்தலுமே நம்முடைய தொழிலின் முக்கிய கொள்கையாகும். மற்றவர்களுக்காக உழைக்கிறோம். ஏனையோர்களின் எதிர்கால வாழ்வையே யெண்ணுகிறோம். பொது ஜன ஊழியத்தையும், பரோபகாரத்தையுமே கைக்கொள்ளவேண்டுமென்று நூல்கள் வரையறுத்துள்ளன. நமது தாய் நாட்டில் இனிவருஞ் சந்ததியாராவது இன்புறும்பொருட்டு இப்பொழுது நம் சுகத்தை நாடாது அவர்கள் சுகத்தையே நாடி, உள்ளங்கொதித்து வெடித்தாலும், ஒன்று முறையாது அவைகளையெல்லாந் தாங்கியும், உடல் பொருள் ஆவி மூன்றையுந் தத்தஞ்செய்தும், செய்த முயற்சியைச் சிறிதுஞ் சிந்தியாமல் நாம் துன்புற்றும் தூங்காது உழைப்போமென்று ஓரே உறுதியாய்க் கூறுவோமாக.

உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமியருண் டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர் பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே (புறநானூறு).

## அறிவிப்பு.

பூங்கொத்துக்குச் சந்தாதாராய்ச் சேரவிரும்புவோர் பிரதி வருடமும் ஜூலை-மாதம் துவக்கு முந்தியே முன்பணமாக ரூ 1 அனுப்பிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வி. பி. வழியாய்ப் பெறுவதால் சந்தாத்தொகை அதிகரிக்கும். விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தில் இடம் விட்டு ஒரே பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும். பத்திராதிபர் ஏற்றுக்கொண்டாலல்லது ஒரு விஷயமும் பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்படாது.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1922.

Registered No. M. 1534.

J. M. J.

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.

APR 1922



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 11. | ஏப்ரல் 1922. | மலர் 10.

## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது மாகாணத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் கல்விச்சங்கங்கள் (District Educational Councils) ஏற்பட்டு இப்போது ஒரு வருஷம் முடிந்தது. இச்சங்கங்கள் ஆரம்பப்படிப்பு விர்த்திக்கு உதவியா, தடையா? தடையென்று சொல்வதற்கு இடமில்லை. உதவியென்றால் எவ்

விதமான உதவியென்று தீர்மானிப்பதற்கும் காலம்போதாது. இன்னும் கொஞ்சக்காலம் கவனித்தே தீர்மானிக்க வேண்டும்.

* * *

பாடசாலைக் கட்டிடங்களுக்காகச் சர்க்கார் உதவியை எதிர்பார்த்திருப்பவர்கள் புதுக்கட்டளை பிறக்குமட்டும் அந்த உதவியைக் கேட்க வாய்திறக்கக்கூடாதாம். ஏற்கனவே கேட்டவர்களுக்கு மறுமொழி கொடுக்கப்பட்டாலன்றி கட்டிடவேலை துவக்கக்கூடாதாம். மறுமொழி பெற்றுக் கட்டிடவேலை துவக்கினவர்களும் சரியான உதவி கிடைக்குமென்று நினைக்கக்கூடாதாம். இந்தத் தீர்மானங்களுக்கும கல்விச்சங்கங்களுக்கும் யாதொரு சம்மந்தமில்லை. மேலான பதவியிலிருந்து கல்வியின் அபிவிர்த்தியைக் கவனித்துவரும் பெரியோர்கள் செய்த தீர்மானங்கள் இவைகள் !!!

---

## ஆரம்ப ஆசிரியர்.

(106-ம் பக்கத் தொடர்ச்சி)

மகா-ள-ள-ஸ்ரீ S. துப்புசாமி அய்யர் அவர்கள் எழுதியது.

உபாத்தியாயர் சிறுவரின் மனோபாவங்களுக்கேற்றவாறு தம் போதனாமுறையை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று முன்கூறியுள்ளோம். ஓர் நல்ல ஆசிரியன் உபயோகிக்கவேண்டிய போதனா முறையைப்பற்றி இங்கு சற்று ஆராய்வோம்.

சிறுவரின் மனதில் ஊக்கத்தை உண்டுபண்ணி விஷயங்களை நன்றாய் மனதில் பதியவைக்கும் முறையே நல்ல போதனாமுறையாகும். கேவலம் வேடிக்கையான சைகைகள், கதைகள் இவைகளால்மட்டும் பாடத்தில் ஆவலைப் பிறப்பிக்கலாம் என்று பல ஆசிரியர் எண்ணுவதுண்டு. இது பிசகே. பிள்ளைகளுக்குப் பாடங் கற்பிப்பதில் ஆவலை ஊட்டுவதற்கு, வேடிக்கைக் கதைகளும், சைகைகளும் சிற்சில சமயங்களில் கெடுதல்களை உண்டாக்கும். இக்கதைகள் பிள்ளைகளுக்குப் பாடத்தில் சுயமாய் ஏற்பட்டிருக்கும்



அற்ப ஊக்கத்தையும் கவர்ந்துகொண்டுவிடுவதுண்டு. பையன்களுக்கு இயற்கையில் உற்சாகமற்ற பாடங்களைக் கற்பிக்கும்போது அவர்களுக்கு உற்சாகமூட்டும்பொருட்டு ஆசிரியர் சொல்லும் கதைகளை மாத்திரம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து கதை முடிந்தவுடன் பராக்குப் பார்க்க ஆரம்பிப்பதை நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம்.

இப்படியில்லாமல், பாடவிஷயங்களை அறிவதிலேயே பிள்ளைகளுக்கு ஊக்கம் ஏற்பட்டுவிடுமாயின், இம்மாதிரிக் கதைகள் சொல்லி விஷயங்களை விளங்கவைக்கலாம். ஆகையால் கதை கேட்பதில் பையன்களுக்குள்ள உற்சாகம் பாடத்தில் இருப்பதாக ஆசிரியர் தப்பெண்ணங்கொள்ளாமல், பாடத்தைக் கற்பதில் சிறுவருக்கு ஊக்கத்தை ஊட்டவேண்டுவதவசியம். மனிதனுக்கே ஸகஜமாகத் தற்காலத்திலாவது எதிர்காலத்திலாவது அவனுக்குப் பிரயோசனப்படும் என்று தெரிந்த விஷயங்களில் ஊக்கமுண்டாகிறது. ஆனால் சிறுவருக்கு எதிர்காலத்தை நோக்கும் சக்தி கிடையாததலால் தற்சமயம் அவர்களுக்குப் பிரயோஜனமளிக்கும் விஷயங்களையே அவர்கள் மனம் நாடுகின்றது. பின்னால் வருவனவற்றைப்பற்றி அவர்கள் யோசிக்கிறதில்லை. ஆகையால் தற்காலம் பிரயோஜனமின்றிப் பின்னர் உபயோகப்படும் விஷயங்களில் அவர்கள் மனம் வெகுநேரமில்லாது. ஆனதுபற்றியே சிறியமாணவரின் பாடக்காலவரையானது பெரியமாணவரின் காலவரையைவிட மிகக் குறைந்திருக்கவேண்டும். வயதாகவாக இக்காலவரையை அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

இதிலிருந்து பிள்ளைகளுக்கு, ஊக்கத்தை உண்டுபண்ணவேண்டுமானால் பாட விஷயங்கள் அவர்கள் வயதுக்கு ஏற்றதாகவிருக்கவேண்டும் என்றறியலாம். அது மாத்திரமல்ல. அப்பாடங்களை கற்பதினாலுள்ள பிரயோஜனங்கள் அவர்கள் மனதில் புலப்படவேண்டும். இத்கைய பிரயோசனமானது முதல் முதலில், தன் பெயரை எழுதச்சொல்லல், தனக்குத் தெரிந்த பொருள்களின் பெயரை எழுதச் சொல்லல், தனக்குத் தெரிந்த வார்த்தைகளைப் படிக்கச் சொல்லல், இவைபோன்று உடனுக்குடனே பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடியவையாயிருத்தலவசி

யம். நாட்கள் செல்லச்செல்ல சிறிது காலத்திற்கப்பால் வரும் பிரயோசனத்தை உணரச்செய்து அவர்களுக்கு அதில் ஊக்கத்தை உண்டுபண்ணலாம். உதாரணமாக ஸகஜமாய் உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய இலக்கணப் பாடத்திற்கூட இலக்கணங் கற்றால் நல்ல வியாசங்கள் எழுதலாம், என்ற விஷயத்தைப் பிள்ளைகள் உணர்ந்தால் அவர்களுக்கு அதில் ஊக்கமுண்டாகும். இதுவன்றி பாடத்தில் ஊக்கமுண்டாவதற்கு விஷயங்களை நன்றாய் விளக்கிக் காட்டிக் கற்பிக்கவேண்டும். ஒரு புதிய விஷயத்தைக் கற்பிக்கவேண்டுமானால் அதைப்பற்றிச் சிறுவர்களுக்கு என்னென்ன சமாச்சாரங்கள் முன்னமேயே தெரிந்திருக்கும் என்பதை ஊகித்து அவற்றின்வழியாகப் புது விஷயத்தைக் கற்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் புது விஷயம் மனதில் ஏறும். இதைப்பற்றி அதிகம் சொல்லுவது அநாவசியம். ஓர் புதிய வார்த்தை பாடத்தில் வந்தால் பையன்களுக்கு அர்த்தமாகும் வேறு வார்த்தைகளால் அப்புதிய வார்த்தையின் அர்த்தத்தைத் தெரியப்படுத்துவதை இதற்கு உதாரணமாகக் கொடுக்கலாம். உபாத்தியாயர் புதிய வார்த்தையின் பொருளை விளங்கவைக்க உபயோகிக்கும் வார்த்தைகளை பையன்களுக்கு அர்த்தமாகாவிட்டால் அப்புதிய வார்த்தை அவர்களுக்குப் பொருள்படமாட்டாதுபோல, அவர்களுக்குத் தெரியாத விஷயங்களை உபயோகித்துப் புதிய விஷயத்தைப் போதித்தால் அது அவர்கள் மூளையில் ஏறாது என்பது திண்ணம். ஆகையால் ஆசிரியர் புதிய விஷயங்களை ஏற்கனவே தெரிந்த விஷயங்கள் மூலமாகக் கற்பிக்கவேண்டும். உதாரணமாக, யானையைப்பற்றி ஒன்றுமே தெரியாத ஒருவனுக்கு அவன் பார்த்திருக்கும் எருமையைப்பற்றிச் சொல்லிப் பரிமாணம், அவயவங்கள் முதலியவற்றிலுள்ள வித்தியாசங்களைச் சொல்லவேண்டும். யானையின் பரிமாணத்தைப் படத்தில் விளக்கிக்காட்டவேண்டுமானால் பக்கத்தில் அதே ஸ்கேலுக்கு (Scale) எருமையின் படத்தை வரைந்து, உள்ள வித்தியாச மூலமாகக் காட்டலாம். இதுபோலவே பிள்ளைகள் பார்த்திருக்கும் பூபாகங்கள், கிராமங்கள் முதலியவற்றைப் படத்தில் எப்படி எழுதவேண்டும் என்ற விஷயத்தை



அவர்களுக்குக் கற்பித்துப் பிறகுதான், தாலுகா, ஜில்லா, மாகாணம் முதலியவற்றின் படங்களை ஆசிரியர் உபயோகிக்கவேண்டும்.

மேற்கூறியவைகளால் புது விஷயங்களைப் பழைய விஷயங்களைக்கொண்டு விளக்கவேண்டுமென்பது நன்கு விளங்கும். பையன்கள் அநேக விஷயங்களைப்பற்றி ஏற்கனவே அறிந்திருந்தபோதிலும் அவர்களுடைய ஞானம் தெளிவானதன்று. ஆதலால் ஒரு நல்லாசிரியர் பாடத்தைத் தொடங்கும் முன் அவ்விஷயத்தைப்பற்றி அவர்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் ஞானத்தைத் தெளியவைத்து பிறகு இதைக்கொண்டு புதிய விஷயத்தைக் கற்பிக்கவேண்டும். அதுவுமன்றி ஒரு விஷயத்துக்கும் மற்றொரு விஷயத்துக்குமுள்ள சம்பந்தத்தை எடுத்துக் காட்டவேண்டும். முதல் நாள் சொல்லிக்கொடுத்த பாடத்திலிருந்து மறுநாள் பாடத்தைத் தொடங்கவேண்டும். பழைய பாடத்திற்கு ஒட்டியே புதிய பாடத்தைத் துவக்கவேண்டும்.

ஆகவே புதிய பாடத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள் 4. அவை (1) பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்போகும் விஷயத்தைப்பற்றி ஏற்கனவே என்ன தெரியும் என்பதை அறியவேண்டும். (2) அவர்களுக்கு அர்த்தமாகும் வார்த்தைகளையே உபயோகிக்கவேண்டும். (3) முன் சொன்ன விஷயத்தைப் பையன்கள் நன்றாய் மனதில் வாங்கிக்கொண்டார்களா என்பதை நன்கறிந்தே மேல் விஷயத்தைச் சொல்லவேண்டும். (4) உபாத்தியாயர் சிறுவர்களின் ஒற்றுழைப்பை நாடவேண்டும். அதாவது போதிக்கும் விஷயங்களை அறிவதில் பிள்ளைகளுக்கு ஆவலை உண்டுபண்ணவேண்டும். சிறுவர்களுக்கு இத்தகைய ஊக்கமானது, பிள்ளைகளின் இயற்கை குணங்களாகிய, சுறுசுறுப்பாயிருத்தல், பிடியங்களை உற்று நோக்கிப் பிறர் செய்வதைப்போல் நடிக்க ஆசித்தல், புதிது புதிதான விஷயங்களை அறிய அவாக்கொள்ளல் முதலியவற்றை உபயோகிக்க அவகாசம் கொடுப்பதனாலும், விஷயங்களைக் கற்பதனால் உண்டாகப்போகும் பிரயோஜனத்தை விளக்கிக் காட்டுவதனாலும் ஏற்படுகின்றது. மேற்சொன்ன போதனாமுறைகளை உபயோகித்து பேராசிரியர் காரியசித்தி

பெறலாம். ஆசிரியர் இவ்வளவு சிரமப்படுவதுதான் எதற்
காக? சிறுவர்களுக்கு அரிய பல விஷயங்களைக் கற்பித்து,
அவர்கள் வாழ்நாளில் அவற்றை உபயோகிக்கும்படி செய்
யவே. தமிழ் மறையை ஓதிய திருவள்ளுவர் மலர்ந்து
அருளிய, "கற்க கசடறக் கற்பவை—கற்றபின்
நிற்க அதற்குத்தக;"

என்னும் திருக்குறளைச் சிந்திப்போம். ஆகையால்
உபாத்தியாயர் விஷயங்களைப் போதிப்பதோடு நிற்காமல்,
அவர்கள் கற்றபடி உபயோகிக்கவும் செய்யவேண்டும்.
இதற்கு அவ்விஷயங்கள் சிறுவரின் மனதை விட்டு என்று
ம் அகலாமலிருக்கும்படி செய்யவேண்டும். இதைச் சிறு
வரின் ஞாபகச் சக்தியைக்கொண்டு செய்யலாம்.

விஷயங்களை இரண்டு விதமாக ஞாபகத்தில் வைக்க
லாம். ஒன்று குருட்டுப் பாடம். இது அவ்வளவு உபயோக
முள்ளதன்று, மற்றொன்று, குருட்டுப்பாடமாக வார்த்
தைகளை மாத்திரம் ஞாபகத்தில் வைக்காமல் அர்த்தத்தை
ஞாபகத்தில் வைப்பது. சிறுவர்களுக்குக் குருட்டுப்பாடம்
செய்வதில் பிரியமதிகம். அர்த்த பூர்வகமாக விஷயங்களை
ஞாபகம் வைத்துக்கொள்வதிலுள்ள சிரமத்தினாலேயே
குருட்டுப்பாடம் செய்கின்றனர். நல்லாசிரியர் பாடத்தை
அவர்களுக்கு அர்த்தமாகும்படி கற்பித்துப் பிறகே மனப்
பாடம் செய்யச் சொல்லவேண்டும். உதாரணமாக 4×3
=12 என்பதற்கு, நான்கு மூன்றுகளைக் கூட்டினால் பன்னி
ரண்டாகும் (நான்கு மூன்றுகள் சேர்ந்து பன்னிரண்டு)
என்று பொருள் என்பதை முதலில் விளக்கியபிறகே 3-
வது. வாய்ப்பாட்டை மனப்பாடம் செய்யச் சொல்லவேண்
டும். இம்முறையை அநுசரித்துப் புகட்டிய ஞானந்தான்
சிறுவருக்குப் பின்னர் உபயோகப்படும்.

மேற்கூறியவற்றிலிருந்து மனப்பாடம் செய்யச் சொல்
வதையே ஏன் அறவே ஒழித்துவிடக்கூடாது என்ற கேள்வி
பிறக்கலாம். அது நமது நாட்டில் குருட்டுப்பாடம் செய்
வது அதிகமாயிருப்பதைப் பார்த்தே இந்த ஆக்ஷேபனை
ஏற்படுகிறது. குருட்டுப்பாடம் செய்வது பிசகுதான்.
ஆனால் மனப்பாடம் செய்வதே பிசகு என்பது பொருந்
காது. அர்த்தத்துடன் மனப்பாடம் செய்வது அதிகப்



பிரயோசனத்தைத் தரும். 4×3 என்பது எப்படிப்
பன்னிரண்டாகும் என்பதைப் பிள்ளைகள் நன்றாக உணர்
ந்துவிட்டால் அதன் வாயிலாக வாய்ப்பாட்டிலுள்ள ஒவ்
வொரு பெருக்கிவந்த தொகையும் எப்படி வருகிறது என்ப
தைக் கண்டுகொள்வார்கள். பிறகு, 'ஒவ்வொருவருக்கும்
3 பழம் விதம் 7 பேருக்குக் கொடுக்க எத்தனை பழம்
வேண்டும்? என்று கேட்கும்போது, 7 மூன்றுகளைப்போட்
டுக் கூட்டிக் காலதாமதம் செய்யாமல் வாய்ப்பாட்டின் வாயி
லாக 21 என்று உடனே சொல்லிவிடுவார்கள். இதுதான்
மனப்பாடத்தின் லாபம். உபயோகிக்கும் முறையைக் கார
ணங்களோடு அறிந்தவர்களுக்கு மனப்பாடம் நல்லதே.

ஆனால் மனப்பாடம் செய்வதிலும் ஓர் வரம்பு உண்டு.
பாடங்களில் உபயோகமுள்ளவைகளையே மனப்பாடம்
செய்து வைக்கவேண்டும். பாக்கி விஷயங்கள் பிள்ளை
களுக்குத் தெரிந்திருந்தால் போதுமானது. பல உபாத்தி
யாயர்கள் அற்ப விஷயங்களைக் கூட மனப்பாடம் செய்து
வைத்துக் காலத்தை வீண் போக்குகின்றனர். இம்மாதிரி
செய்வது மனதின் தன்மைக்கே விரோதமானது. மனது
இயற்கையாகவே உபயோகமுள்ள விஷயங்களையும், உப
யோகமற்றவைகளையும் ஒருவாறு பகுத்தறிந்துகொண்டு
உபயோகமற்றதை மறந்துவிடுகிறது. ஆகையால் உபயோக
மற்றதை மறந்து உபயோகமுள்ளதை மனதில் இறுத்து
வதே ஞாபகசக்தி நன்றாயிருப்பதற்கு அடையாளம். இவ்
விஷயத்தைச் சிலர் அறியாமல், மனப்பாடம் செய்யச்
செய்ய ஞாபகசக்தி விருத்தியடையும் என்று சொல்லுகின்
றனர். இது அறியாமையே. ஆகையால் முக்கியமான
விஷயங்களையே மனப்பாடம் செய்விக்கவேண்டும்.

சிற்சில சமயங்களில் பையன்களே இவ்வரம்பைக்
கடந்து விடுகின்றனர். விஷயங்களை ஞாபகம் வைத்துக்
கொள்வது சிரமமாயிருப்பதால் குருட்டுப்பாடம் செய்து
ஒப்பித்துவிடுகின்றனர். தேச சரித்திரம், பூகோளசாஸ்தி
ரம் முதலிய பாடங்களில் இதை அநேகந் தடவை உபாத்தி
யாயர் பார்த்திருக்கலாம். இதைத் தடுப்பது உபாத்தி
யாயரின் முதற் கடமையாகும் எந்தப்பாடத்திலும் விஷ
யங்களைக் கிரகிக்காமல் மனப்பாடம் செய்யக்கூடாது.

ஆகையால், ஆசிரியர், விஷயத்தைப் போதிக்கும்போதும், விளங்கவைக்கும்போதும் ஒரே வாக்கியத்தை அடிக்கடி சொல்லாமல் வெவ்வேறு மாதிரியாகச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் உபாத்தியாயர் சொல்லும் வார்த்தைகளையே பையன்கள் மனப்பாடம் செய்துகொள்ள யேதுவிராது. கூடியமட்டும், சிறுவர்களுக்கு, வாசகப் புஸ்தகங்களைத்தவிர இதரப் புத்தகங்கள் ஏற்படுத்தாமலிருக்கவேண்டும். அப்படி ஏற்படுத்தியபோதிலும், போதிக்கும்போது புத்தகத்திலுள்ள வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கக்கூடாது. ஆகக்கூடி நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. **குருட்டுப்பாடம் செய்வதே பிசகு. விஷயமறிந்து மனப்பாடம் செய்வதிலும், உபயோகமற்ற விஷயங்களை மனப்பாடம் செய்வது பிசகு என்றவையே.** (இன்னும் வரும்.)

## சிறுவர்க்கான கதைகள்.

(5)

புல்லடர்ந்த ஓர் காட்டில் மறைவான ஓர் இடத்தில் ஓர் முயல் குட்டிபோட்டிருந்தது. குட்டியின்பேர் கந்தைக்காது; தாய் முயலின் பேர் பஞ்சுவால் அம்மாள். தினந்தோறும் இரை தேடுவதற்காகப் பஞ்சுவால் அம்மாள் வெளியே திரிவது வழக்கம்; வெளியேபோகுமுன் கந்தைக்காதைப்பார்த்து: பிள்ளாய் அசையாமல் படுத்திரு, சத்தம் செய்யவேண்டாம். எதைக் கண்டாலும் எதைக் கேட்டாலும், அசையவே கூடாது. நீ இன்னும் சிறு குழந்தைதான்; நன்றாய்ப் பதுங்கிப் படுத்துக்கொள் என்று எச்சரித்துவிட்டுப் போவாள். கந்தைக்காதும் அப்படியே செய்வதாகத் தலையாட்டும்.

ஒருநாள் பஞ்சுவால் அம்மாள் வெளியே போனபின் கந்தைக்காது அசையாமல் படுத்துக்கொண்டு குழிக்குமேல் உயர்ந்து வளர்ந்திருந்த புற்களின் இடைவழியாய் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது. ஒரு கண்ணை மூடியும் ஒரு கண்ணைத் திறந்தும் புருவத்தைச் சற்று வளைத்தும் பார்த்ததில் வெளியுலகம் சற்றுப் புலப்பட்டது. சில சிறு பட்சிகள் தண்ணீரில் அமிழ்ந்தி எழும்புவதுபோல் ஆகாயத்தில் மேலும் கீழும் அசைந்தாடிக்கொண்டிருப்பதைக் கவனித்தது. ஆனால் கந்தைக்காது தலையையாவது காலையாவது அசைக்கத் துணியவில்லை. அதன் தலைக்குமேல் வளர்ந்திருந்த ஒரு செடியின்மேல் ஓர் பெரிய பறவை வந்து உட்கார்ந்து கிளைகளில் தாவித்தாவிக் கீழே இறங்கினது; கால் தவறி விழுந்தது; திரும்பவும் எழும்பிப் பறந்தது. ஆனால் கந்தைக்காது தலையையாவது காலையாவது அசைக்கத் துணியவில்லை.



இதற்குள் சூரியன் உச்சியில் ஏறி எரிக்கத்துவங்கினது. ஆனால் கந்தைக்காது தலையையாவது காலையாவது அசைக்கத் துணியவில்லை.

திடீரென்று தூரத்திலிருந்து வருவதுபோல் ஏதோ ஓர் புதுமாதிரியான சப்தம்-கந்தைக்காது கேட்டறியாத சப்தம்-அதன் காதில் பட்டது. மெதுவான சப்தம்-இஷ் இஷ் என்ற ஒலி! கந்தைக்காது கேட்டது. விந்தையான சப்தம்; புற்கள் மத்தியிலிருந்து உண்டான தொனி; "இஷ், இஷ், இஷ்."; கந்தைக்காதின் உரோமம் சிலிர்த்தது. ஆனால் கந்தைக்காது தலையையாவது காலையாவது அசைக்கத் துணியவில்லை. சப்தம் கிட்டத்தில் கேட்டது; சற்றுநேரம் அமர்ந்தது; திரும்பவும் கேட்டது; இன்னும் கிட்டத்தில் கேட்டது; "இஷ், இஷ், இஷ்"; ஏதோ வருவதுபோல் தொனித்தது; காலடிச்சத்தமில்லை; காலில்லாமல் என்ன வரும்? மெதுவான சப்தம்; "இஷ், இஷ், இஷ்"; காலடிச்சத்தமில்லை.

கந்தைக்காதுக்குப் பஞ்சுவால் அம்மாள் எச்சரித்ததெல்லாம் மறந்துபோனது; பின்னங்காலை ஊன்றி எழுந்தது. உடனே சப்தமும் நின்றுவிட்டது. கந்தைக்காதுக்கு விந்தைப்பிரியம் மேலிட்டது. "என்ன! நான் இன்னும் குழந்தையா? நான் பிறந்து மூன்று வாரம் ஆகிவிட்டதே; இந்தச் சப்தம் எப்படி உண்டானது என்று கண்டுபிடிப்பேன்" என்று சொல்லிக்கொண்டே தலையைக் குழிக்கு வெளியே நீட்டினது. நீட்டினதும் ஒரு பொல்லாப் பாம்பு படமெடுத்து நிற்பதை நோக்கினது. திடுக்கிட்டுத் திகைத்து "அம்மா! அம்மா!" என்று கத்தினது.

"அம்மா! அம்--" என்று திரும்பக் கத்துமுன் பாம்பின் தலை கந்தைக்காதின் வாயை அடைத்துவிட்டது; பாம்பின் நீண்டு உருண்ட தேகம் கந்தைக்காதின் மெல்லிய தேகத்தைச் சுற்றிச் சுற்றி வளைத்து நசுக்கினது. கந்தைக்காது தன் தாயை நினைத்துக் கூப்பிட எத்தனித்தது. ஆனால் மூச்சுவிட முடியவில்லை.

ஆகிலும் அது முதல்விசை கத்தினதைத் தாய் முயல் கேட்டுவிட்டது. தன் குழந்தையைக் காப்பாற்றும்படி, புல்லென்றும் கல்லென்றும் பாராமல், காற்றுப்போல் பறந்து ஓடிவந்தது. கந்தைக்காதையும் பாம்பையும் கண்ணோக்கியதும், அதற்கு இயல்பான பயமெல்லாம் நீங்கிவிடவே, மகா துணிவோடு குதித்துக் குதித்து தன் பின்னங்காலின் நகங்களால் பாம்பின் முதுகைக் குத்தி அடித்தது. பாம்பு கோபத்தால் சீறினது; அதன் தோல் உரிபட்டது; ஆகிலும் கந்தைக்காதை விட்டுவிடவில்லை.

திரும்பவும் திரும்பவும் தாய் முயல் சர்ப்பத்தை எதிர்த்துக் குதித்துக் குதித்துக் குத்தினது; பாம்பு வலி பொறுக்கமாட்டாமல் சுருண்டது; ஆகிலும் கந்தைக்காதை விட்டுவிடவில்லை.

தாய் முயலும் களைத்துப்போகாமல் மேலும் மேலும் சர்ப்பத்தைத் தனது கூறிய நகங்களால் பீறினது. கடைசியாய் சர்ப்பமும் கந்தைக்காதை விட்டுவிட்டு பஞ்சுவால் அம்மாளை எதிர்த்தது. கந்தைக்காதோ பிழைத்தேன் என்று ஓட ஆரம்பித்தது.

"ஓடு, ஓடு" என்று குழந்தை முயலை உற்சாகப்படுத்திக்கொண்டே தாய் முயல் சர்ப்பத்தோடு சண்டை செய்தது. கந்தைக்காது சற்றுத்தூரம் போனதும் பஞ்சுவாலும் பின்தொடர்ந்தது. சீக்கிரத்தில் அதன்முன் வழி காட்டிக்கொண்டு ஓடினது. வெகுதூரம் சென்றபின், அடர்ந்து வளர்ந்திருந்த புல்மத்தியில் வேறொரு வளை தோண்டி தாய் முயல் குழந்தையைப் படுக்கவைத்தது. இனி பஞ்சுவால் வெளியே போனபின் கந்தைக்காது தலையையாவது காலையாவது அசைக்கத் துணிந்ததா?

---



# சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

---

## I. கதையும் பாட்டும்.

### குடமும் காக்கையும்.

முன்னொரு காலத்தில் பெரும் பஞ்சமுண்டாகி, ஏரி குளம் முதலிய நீர் நிலைகள் எல்லாம் வரண்டுபோய் அருந்த ஜலம் கிடைக்காமல், மிருகங்களும், பக்ஷிகளும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு காக்கை தாகத்தால் நெடுந்தூரம் பறந்துபோய் ஒரு வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு மண் பாத்திரத்தில் கொஞ்சம் ஜலம் இருக்கக் கண்டு சந்தோஷத்தோடு அதைக் குருகி எட்டிப் பார்த்தது. ஜலம் எட்டாமையைக் கண்டு, பக்கத்திலுள்ள கற்களை ஒவ்வொன்றாக எடுத்து குடத்தில் போட்டது. ஜலம் மேல் கிளம்பி வரும்போது தாகத்தைத் தீர்த்துக்கொண்டு பறந்துபோய் விட்டது.

இதனால் (1) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் பழமொழியும் வழங்குகிறது.

(2) தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி
மெய்வருந்த கூலிதரும். (குறள்).

### பாட்டு.

"பரம தயாநிதியாசை" என்னும் மெட்டு.

1. காடதனில் காகமொன்று
   கனவெயிலால் களைத்துவந்து
   கடைசியிலே வீடொன்றிலே
   குடத்தடியில் ஜலத்தைக்கண்டு

2. பாடுபட்டும் நீரெட்டாமல்
   பக்குவமாய் பருகுதற்கு
   பலவிதமாய் யோசனைகள்
   பரபரப்பாய்ச் செய்தது காண்.

3. தரையிலுள்ள கற்களையே
தவறாமல் குடத்திலிட்டு
தண்ணீர் மேல் கிளம்பும்போது
தாகத்தைத் தீர்த்தது காண்.

S. தம்புசாமி உபாத்தியாயர்,
R. C. ஸ்கூல், மேழெருவாய்.

## II. விஷயக் கோத்து.

(1) மனிதர்கள் வருடத்திற்கொருமுறை வெகு கவலையுடன் என்னைத் தேடுகிறார்கள். தேடி, அவ்வருஷம் முழுவதும் என்னை நம்பிப் பாதுகாக்கிறார்கள். ஆனால் வருஷம் முடிந்ததும் "ஓடு சுட்டதோ கைவிட்டதோ" என்னும் பழமொழிபோல் என்னை அப்புறப்படுத்திவிட்டு என்னைப்பற்றியே கவனிக்காகல் போகிறார்கள். நான் யார்? (நன்றாய் யோசித்து விடையையறியவும்.)

(2) அபாயங்களைத் தெரிவிக்க, எப்போதும் சிவப்பு வர்ணமான பொருட்களை உபயோகிப்பதின் காரணம், இந்நிறம் கண்ணுக்கு வெகு தூரத்திலிருந்தே தோன்றுமென்பதினாலேயாம்.

(3) இரு எண்களையுடைய ஓர் தொகையைப் பதினொன்றால் பெருக்கும்போது ஒவ்வொரு எண்களாய் பெருக்குவதற்குப் பதிலாய் பெருக்கப்படும் எண்ணில் உள்ள இரு எண்களையும் கூட்டி வந்த தொகையை இரு எண்களுக்கும் இடையில் போட்டு வாசிக்க சரியான விடை கிடைக்கிறது. (உ-ம்) $54 \times 11 = 594$, இதில் 4-ஐ 11-ஆல் பெருக்கி அதன்பின் 5-ஐப் பெருக்கிச் சாதாரணமாய் விடை எழுதுவதற்குப் பதிலாய் 5-ம் 4-ம் $(5+4)$ 9, இந்த ஒன்பதை பெருக்கப்படும் தொகையாகிய 54-ல் 5-க்கும் 4-க்கும் இடையில் சேர்த்துக்கொள்ளவும். மற்றும் உதாரணங்கள்,

$62 \times 11 =$ (6-ம் 2-ம் 8, இதை 62-ல் உள்ள 6-க்கும் 2-க்கும் இடையில் போட) 682,

$53 \times 11 =$ (5-க்கும் 3-க்கும் இடையில் 8 போட) 583.

$45 \times 11$, $34 \times 11 =$ இவைகளின் விடையை நேயர்களே கணித்துக்கொள்வார்களாக.

குறிப்பு:—பெருக்கப்படும் தொகையில் உள்ள இரு எண்களின் கூட்டுத்தொகையும் ஒன்பதுக்கு உட்பட்டிருந்தால்தான் இவ்வழி பிரயோஜனமானது. ஒன்பதுக்கு மேற்பட்டுப்போனால் என்ன செய்யவேண்டுமென்பது மறுமாதச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.



மேற்கண்ட கணக்கில் இரு எண்களையும் கூட்டிவந்த தொகையை நடுவில் போடுவதினால் எப்படிச் சரியான விடை கிடைக்கிறதென்பதை உபாத்தியாயர்கள் சற்று ஆழ்ந்து யோசிக்குங்கால் இதில் பிரமாதம் ஒன்றுமில்லை என்பதைக் கண்டுபிடிப்பார்கள் என்பது என் துணிபு! ஆதலால் இதற்குக் காரணம் என்னவென்பதை நன்பர்கள் தெரிவிப்பார்களாக.

Adapted from "The scouts"

P. ஆரோக்கியம்,
பழைய மாணவன்,
மாண்டலே.

## III. விசித்திரக் கணிதம்.

எலிமெண்டரி பாடசாலைகளுக்காக கவர்ன்மெண்டாரால் தயாரிக்கப்பட்ட பாடக்கிரமத்தில் கட்டாய பாட ஜாபிதாவில் கணக்குப் பாடத்தை கணக்கு என்று குறிப்பிடாமல் இடத்தையும் எண்களையும் குறித்த வேலை என்கிறார்கள். அதாவது, இங்கிலீஷில் arithmetic என்று சொல்லாமல் space & number work என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் கணக்கு என்பது ஒரு விசேஷ சாஸ்திரம். ஒவ்வொரு விஷயத்திலும் சாஸ்திர ஆராய்ச்சி செய்வதுபோல் கணக்கு என்ற சாஸ்திரத்திலும் புத்திக் கூர்மையுள்ள அநுபோகசாலிகளால் சாஸ்திர ஆராய்ச்சி செய்யப்பட்ட ஒரு நூலுக்கு கணக்கு என்று பேர். நமது பூஞ்கொத்தின் வாயிலாய்ப் பிரசுரமாகிவரும் விசித்திரக் கணிதமும் இக்கணித சாஸ்திரத்தின் ஓர் பாகமே.

பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது என்பதுபோல விசித்திரக் கணிதமானது ஆரம்பப் பாடசாலை மாணவருக்கு அதிக பிரயோஜனத்தைக் கொடுக்காது. ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர் விசித்திரக் கணக்கைப் போதிக்கத் துவக்குவாரானால் சாதாரணமாய்ச் சிறுவர்கள் அறியவேண்டிய கணக்குகளைக் கற்றுக் கொள்ள சாவகாசமில்லாமல்போய்விடும். நாம் வழக்கமாய்க் கற்பிக்கும் கணக்குகள் பிள்ளைகளின் பிற்கால ஜீவியத்திற்கு ஏற்றதாய் இருக்கிறது. ஆனால் தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு என்னும் நாயனார் சொல்லுக்

கிணங்க விசித்திரக் கணிதமானது புத்தியை விர்த்தியாக்குவதோடுகூட கணிதத்தில் நல்ல தேர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது. ஆதலால் சாதாரணமாய்க் கற்றிருக்கவேண்டிய கணக்குகளைத் தெரிந்துகொண்டதும், சாவகாசமுண்டானால் விசித்திரக் கணிதமும் கற்பித்தல் பொன்மலர் நாற்ற முடைத்து என்பதை யொக்குமென்று சொல்லாமலே யாவரும் தெரிந்துகொள்ளலாம். ஆசிரியர்கள் ஒரு விஷயத்தை மாணவருக்குக் கற்பிக்குமுன் தாங்களே அவ்விஷயத்தை ஐயந்திரிபறக் கற்றிருத்தல் அவசியம். ஏனெனில் பனையளவு கற்றிருந்தால் மாத்திரம் தினையளவு போதிக்க முடியுமென்பது கற்றோர் கொள்கை. ஆகவே உபாத்திமைத் தொழிலை நடத்துபவர்கள் விசித்திரக் கணிதங்களையும் கற்றிருத்தல் நல்லது.

சாதாரணக் கணக்குகளை சீக்கிரமாகவும் தப்பிதமில்லாமலும் செய்ய விசித்திரக் கணக்குகள் மிகவும் உதவியாகும். 11-வது கொத்து 3, 5-வது மலர்களில் வெளிவந்திருக்கும் விசித்திரக் கணக்குகள் சதுரங்கத்தின் 3-வது அங்கமாகிய பெருக்கல் கணக்குகளைச் சீக்கிரமாகச் செய்ய உதவியாயிருக்கிறது. உதாரணமாக D என்ற தொகுப்பிலுள்ள கணக்குகளில் எத்தனை ஸ்தானமுள்ள நம்பர்களைப் பெருக்குகிறோமோ அத்தனை நம்பர்கள் வரையில் 1, 2, 3 என்று முறையே தொடர்ச்சியாய் எழுதி அத்தனை ஸ்தானங்களுக்குப் பிறகு ஒன்றுவரையில் முறையே இறக்கிக் கொண்டுபோக பெருக்கலின் விடை சரியாயிருக்கும். எப்படியெனில், 11111 × 11111 என்ற கணக்கில் பெருக்கும் எண்ணும் பெருக்கப்படும் எண்ணும் 5 ஸ்தானங்களாய் இருப்பதால் அதன் விடையானது 123454321 ஆகும். இப்படியே ஒவ்வொரு தொகுப்புகளும் (Group) தனித்தனி முறையை அநுசரித்ததாயிருக்கிறது. இதனால் உபாத்தியாயர் ஷை தொகுப்பிலுள்ள கணக்குகளை சாதாரண பெருக்கலாக மாணவருக்குக் கொடுக்கும்போது வெகு சுளுவாய் விடையைத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் உபாத்தியாயருக்குக் கொஞ்சம் சாவகாசமான நேரம் கிடைக்க உதவியாகிறது. கணிதசாஸ்திரத்தில் புதைந்துகிடக்கும் நூதன கணக்குகள் ஏராளமாயிருக்கின்றன. அவற்றுள் யான் அடியில் குறிப்பிடும் ஒருவகைத் தமிழ்க் கணக்கும் ஒன்று.



அதாவது பதினாறு கட்டங்கள் வரைந்து ஒரு கட்டத்தில் எழுதிய நம்பரை வேறொரு கட்டத்தில் எழுதாமல் சேர்ந்தாப்போலுள்ள எந்த நாலு கட்டத்தை கூட்டினாலும் சொன்ன நம்பர் வரவேண்டும். இப்படி எழுதிக் கட்டம் அடைப்பதை இங்கிலீஷில் (Magic squares) என்று சொல்லுவார்கள். நம் நாட்டு அஷ்டாவதானிகளில் ஒருவர் ஷை கட்டத்தை பாட்டின் உதவியால் பூர்த்தி செய்யும் விதத்தைக் கற்பிக்கிறார்.

“கண்ணூந்தா விண்ணோர்க்குப் பிடுபிரிவிரோ
தண்ணூந்தமேனி தநாவன்றி-மண்ணின்மேல்
ஒன்றுமுதல் எட்டளவும் ஒட்டத்துருவமாம்
என்றார் பகவதனார்வீடு—சொன்னவற்றைப் பாதிசெய்து
அதில் ஒன்றைக் களைந்துவிட்டு மன்னியதிக்குத் தீகீ, பவா, லபா,
கீதீ, யெனவுக்கிதுருவம்பர கோணரு”

| | | | |
|---|---|---|---|
| ப | க | வ | த |
| பா | கா | வா | தா |
| பி | கி | வி | தி |
| பீ | கீ | வீ | தீ |

பகவதனார் வீடு

| | | | |
|---|---|---|---|
| 17 | 1 | 15 | 7 |
| 14 | 8 | 16 | 2 |
| 5 | 13 | 3 | 19 |
| 4 | 18 | 6 | 12 |

ஒன்றுமுதல் எட்டளவும் ஒட்டத்துருவமாம் என்பதால் க, தா, வி, பீ, பி, வீ, த, கா என்று பாட்டில் கோடிட்டுள்ளதும் பகவதனார் வீட்டிலுள்ளதுமாகிய சிறிய சதுரங்களில் முறையே 1, 2, 3, என்று 8 வரை எழுதிக்கொள்ளவேண்டும். சொன்ன எண் 40 ஆக இருக்குமானால் அதில் பாதி 20. அதில் ஒன்றைக் களைந்துவிட மீதமாக நிற்பது 19. உக்கிதுருவம் பரகோணரு என்று முடிப்பதால் தி, கீ, ப, வா, வ, பா, கி, தீ. என்ற ஸ்தானங்களில் முறையே 19, 18, 17, 16, 15, 14, 13, 12. என்று எழுதிக்கொள்ளவேண்டும். சேர்ந்தாப்போலுள்ள எந்த நாலு சதுரத்தைக் கூட்டினாலும் விடை 40 வரும். ஒரு கட்டத்தில் எழுதிய நம்பர் வேறொன்றில் எழுதுவது முறையல்லவாதலால் 34-க்கு மேல் எந்த நம்பரும் சொல்லி பூர்த்திசெய்வதே முறை.

அருணோதயமாகுமுன் அருகம் புல்லின் நுனியில் நிற்கும் சிறியதோர் பனித்துளியானது பனையளவாகவுள்ள பொருள்களனைத்தையும் தினையளவாகத் தன்னுள்ளடக்கிக் காட்டும் தன்மையேபோல, பூங்கொத்தானது சிறியதோர் பத்திரிகையென்றாலும் சாஸ்திரங்களில் நுட்பமான விசித்திரக் கணிதத்தையும் உபாத்திமைத் தொழிலுக்கு அவசியமானவைகளையும் தன்னுள்ளடக்கி வெளியிட்டு வருவதால் இதின் மலர்கள் யாவருடைய மனதையும் கவர்ந்திழுப்பதாக! "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்னும் முதுமொழியை உய்த்துணர்ந்து, தோஷம் நீக்கிக் குணத்தைக் கொள்வார்களாக.

இங்ஙனம்,
M. மரியசிலுவை முதலியார்.
பழைய மாணவர்.

## IV. ஓர் விஞ்ஞாபனம்.

நமது போதனாமுறைப் பாடசாலையில் மாதந்தோறும் மலர்ந்துவரும் 'பூங்கொத்தானது' வாடாமல் வதங்காமல் நமக்கு என்ஞான்றும் நறும் வாசனையைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. ஆயினும் இவ்வாசனையை நுகர்வோர் மிக்க சொற்பப் பெயராகவே காணப்படுகின்றது. ஆகையால் இத்திவ்ய வாசனையை அறிந்த சகலரும் தம்மில் பிறர்சிநேகம்பூண்டு மற்ற ஏனையோரும் இப்பூங்கொத்தை அனுகிவரச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

விசேஷமாய் இப்பள்ளியில் பயின்றவர்கள் தங்கள் தாய் கொடுக்கும் அழகிய மலர்களாலாகிய இக்கொத்தை வாங்குவதுடன் இக்கொத்தின், மகிமை எங்கும் பிரசித்தமாகும்படி முயல்வார்களென நம்புகிறேன்.

இவ்வரிய விஷயத்தைப் பலர் கேட்டிருந்தபோதிலும், அதை உத்தமப்படுத்துமாறு, திரும்பவும் எழுதியுளன்.

இங்ஙனம்
பாடசாலை சங்கத் தலைவன்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1922.

Registered No. M. 1534.

J. M. J

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

| | | |
|---|---|---|
| கொத்து 11. | மே 1922. | மலர் 11. |

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்னை ஆரம்பப் படிப்புச் சட்டத்திற்கிசைய, நமது மாகாணத்தில் ஆரம்பப்படிப்பைக் கட்டாயப்படிப்பாக ஏற்படுத்தும்படி கொஞ்சங் கொஞ்சமாய்த் துவக்குகிறார்

கள். கல்வி இலாகா மந்திரியும் அவருடைய காரியதரிசியும் இதற்காகப் பற்பல ஜில்லாக்களில் சுற்றித் திரிகிறார்கள். ஆனால் சிற்சில இடங்களில் மாத்திரம் அவர்களுடைய எண்ணம் பலிக்கிறது. கட்டாயப்படிப்பென்றால் இலவசமாய்ப் பிள்ளைகள் படிப்பிக்கப்படவேண்டும்; தங்கள் பிள்ளைகளால் தங்களுக்கு வருமென்று கருதப்படும் ஊதியத்தை இழப்பதோடு அவர்களைப் படிப்பிப்பதற்காக விசேஷ செலவு செய்யவும் சகல பெற்றோர்களையும் கட்டாயப்படுத்துவது சரியாகாததலால், கட்டாயப்படிப்பு இலவசமாகவேயிருக்கவேண்டும். இலவசப்படிப்பென்றால் அதற்கான செலவு செய்வதற்கு எங்கிருந்து பணம் வரும்? ஆங்காங்கு சில தர்மிஷ்டர்கள் உதவி செய்யலாம்; ஆனால் பெருந்தொகை பொதுப்பணத்திலிருந்தே வரவேண்டும். பொதுப்பணமோ இந்தச் செலவு செய்வதற்குப் பற்றாதாம். ஆகையால் என்னசெய்வது? பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தைக் குறைக்கலாம்; அல்லது குடிகளுடைய வரியை உயர்த்தலாம். குடிகளுடைய வரியை உயர்த்துவதே உசிதமென்று பெரிய உத்தியோகஸ்தர்களின் தீர்மானம். இதனால்தான் குடிகள் உத்தியோகஸ்தர்களின் பொதுநல எண்ணத்துக்கு இடம் கொடுக்கப் பின்வாங்கி நிற்கிறார்கள். அவ்வெண்ணத்துக்குக் குடிகள் இடங்கொடுத்தாலும் கட்டாயப்படிப்புக்கு வேறு தடைகள் ஏற்படலாம். ஆனால் புதுவரி கொடுக்கவேண்டும் என்றிருக்குமட்டும், ஆரம்பப் படிப்பைக் கட்டாயப்படிப்பாய் ஏற்படுத்துவதற்கு அநேகர் உடன்படமாட்டார்கள்.

* * * * * * * * * * * *

ஆரம்பப் படிப்புக்கான செலவைப் பொதுப்பணத்திலிருந்து செய்தே தீரவேண்டும். ஆனால் அந்தச் செலவைக் குறைப்பதற்கு வழிவகைகளில்லையா? பொதுநலப்பிரியரான பல தர்மிஷ்டர்கள் உபாத்திமார்களாகவோ, மானேஜர்களாகவோ, முன்வந்து உழைக்கச்செய்வது ஓர் வழி. அப்படி அநேகர் முன்வரவேண்டுமானால் பொதுநலப் பிரியர்களுக்குச் சகாயப் பணமாக தாராள உதவி செய்யவேண்டும். இப்படிச் செய்வது பாடசாலைகளுக்



கான முழுச்செலவையும் பொதுப்பணத்திலிருந்தே செய்வதைவிட பாடசாலைகளை அதிகப்படுத்துவதற்கும் திறமையாய் நடத்துவதற்கும் தகுந்ததும் நயமுமான வழியன்றோ? ஆகவே, சகாயப்பணத்தைப் படிப்படியாய்க் குறைத்து சகல பாடசாலைகளையும் பொதுப்பணத்திலிருந்தே முழுதும் நடத்தவேண்டுமென்னும் கொள்கைகொண்டிருப்போரின் விமரிசையும் தேசாபிமானமும் எத்தன்மையது??

---

31 MAY 1922

## ஆரம்ப ஆசிரியர்.

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

மகா-௱-௱-ஸ்ரீ S. துப்புசாமி அய்யர் அவர்கள் எழுதியது.

இதுகாறும், நல்லாசிரியர் பிள்ளைகளுக்கு எப்படி ஞானத்தை ஊட்டவேண்டுமென்பதைப்பற்றி ஒருவாறு ஆராய்ந்தோம். ஆனாலும், ஞானத்தை ஊட்டுவது மாத்திரம் போதாது. இதைக்காட்டிலும் பன்மடங்கு கடினமானதும் முக்கியமானதுமான வேலைகள் ஆசிரியருக்குப் பாக்கியிருக்கின்றன. நல்லாசிரியர் சிறுவர்களின் மனதைப் பயிற்றுவித்து அவர்களையும் யோக்கியராகச் செய்யவேண்டும். மனப்பயிற்சியைப்பற்றி முதலில் ஆராய்வோம். வெகுவாக உபாத்தியாயர் இதைப்பற்றிக் கவனிப்பதேயில்லை. கிட்டி முட்டி யாராவது, பிள்ளைகளுக்கு மனப்பயிற்சி செய்விக்கிறீர்களாவென்று கேட்டால், அவர்கள் கற்கும் பாடங்களே மனப்பயிற்சி செய்வித்துவிடும், நாம் சிரமப்படுவானேன் என்று சொல்லுகிறார். இது மனோதர்ம சாஸ்திரத்தை அறியாததால் விளைந்த தவறு. உதாரணமாக, நெட்டுருச் செய்யச் செய்ய ஞாபகசக்தி விருத்தியடையும் என்று பலர் கருதுவதுண்டு. இது தப்பென்று அநுபவத்தில் விளங்குமென்று முன்னமே கூறியுள்ளோம். புதிதாய் ஓர் விஷயத்தை மனப்பாடம்

செய்வதில், ஏற்கனவே வேறு விஷயங்களை மனப்பாடம் செய்தவனுக்கும், அப்படிச் செய்யாதவனுக்கும் உள்ள சிரமம் ஒன்றே. ஆகையால், ஆசிரியர் சிரமம் எடுத்துக் கொண்டு மனப்பயிற்சி செய்வித்தல்வேண்டும். மனப்பயிற்சியென்பது மனதிற்கு ஏற்கனவே வாய்ந்திருக்கும் உற்றுநோக்கும் சக்தி, யோசனைசக்தி, ஞாபகசக்தி, அநுபவசக்தி முதலிய சக்திகளை விருத்தி செய்வதே. இவற்றில் ஞாபக சக்தியையும், யோசனை சக்தி (Reasoning power) யையும் விருத்தி செய்தால் பாக்கி தானாகவே விருத்தியடையும்.

முதலில் ஞாபக சக்தியை எடுத்துக்கொள்வோம். ஞாபகம் என்பது யாதெனில், நாம் முன்பு அநுபவித்த விஷயம் அதோடு போய்விடாமல் மீண்டும் நினைவிற்கு வருவதே. இம்மாதிரி அது மீண்டும் நினைவிற்கு வருவானேன்? இது 'சம்பந்தத் (Association) தினால் ஏற்படுகிறது.' உதாரணமாக, 'ஒன்று' என்று ஒருவன் சொன்னால் 'இரண்டு' என்பது அதற்கடுத்தாற்போல் வருவதால் அது நம் ஞாபகத்தில் வருகிறது. நாம் ஒருவனைப் பார்க்கும்போது அவர் முகம் நம் நண்பன் முகம்போலிருந்தால் நம் சிநேகிதனுடைய ஞாபகம் வருகிறது. கோயில் மணியோசை காதிற் பட்டவுடன் தெய்வத்தின் ஞாபகம் வருகிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியதென்ன? நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயத்தை வேறு விஷயங்களோடு சம்பந்தப்படுத்தினால் அது வெகுநாள் நம் ஞாபகத்திலிருக்கும். இது காரணம்பற்றியே பள்ளியில் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் வெவ்வேறு பாடங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தமிருப்பது (Correlation) நல்லதென்று இத்துறையில் உழைத்தவர் அபிப்பிராயப்படுகின்றனர். இதை ஆசிரியர் அநுசரிப்பதுடன் நில்லாமல் பையன்களையும் உபயோகிக்கும்படி செய்யவேண்டும். இதுதான் ஞாபகப்பயிற்சியெனப்படும்.

இதுபோலவே, யோசனை செய்யும் சக்தியையும் பயிற்சிக்கவேண்டும். இச்சக்தி சிறுவனுக்குச் சுபாவமாக வாய்ந்தது. இதனாலேயே சிறுவன் விஷயங்களை ஆலோசித்துச் சரியான முடிவுக்கு வருகிறான். சிறுவன் என்ன ஆலோசனை



செய்யப்போகிறான் என்று எண்ணக்கூடாது. ஓர் கன்றுக்குட்டியைப் பார்த்து 'இது கன்றுக்குட்டிதான், பன்றிக்குட்டியல்ல' என்று நிச்சயம் செய்வது நமக்கு எவ்வளவு சுலபமாகத் தோன்றினும் ஓர் பாலனுக்கு அது கஷ்டமானதே. சிறுவர் அடைந்திருக்கும் ஞானத்தின் பெரும்பாகம் ஆலோசனை செய்து தானாகவே தெரிந்துகொண்டதேயாகும். தான் யோசித்துத் தெரிந்துகொண்டதே அவனுக்கு நம்பிக்கை. பாக்கியில் அவ்வளவு நம்பிக்கை கிடையாது.

உபாத்தியாயர், ஆலோசனைசெய்து, சரியான முடிவுக்குவரும் மார்க்கத்தைப் பையன்களுக்கு உணர்த்தவேண்டும். இதற்காக 'இம்மாதிரி செய்' 'அம்மாதிரி செய்' என்று நாம் சொல்லவேண்டுவதில்லை. நாம் கற்பிக்கும் மாதிரியிலிருந்தே இதை உணர்த்தலாம். பொதுவாக, பையன்கள் தாமாகத் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயத்தை நாம் நம் வாயால் சொல்லாமல், அவர்களுடைய ஞானத்தை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு, தகுந்த கேள்விகள் கேட்டுக்கொண்டே போய்க் கடைசியில் அவர்களாகவே விஷயத்தை அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். (Heuristic method) இம்மாதிரி விஷயங்களை அறிந்துகொள்வதில் பிள்ளைகளுக்கு விருப்பமதிகம். இம்மாதிரி பயிலப் பயிலச் சிறுவர்களுக்கு காரியகாரண சம்பந்தம் நன்கு விளங்கும். இக்காரியகாரண சம்பந்த ஞானத்தின் உதவியாலேயே, பெரியோர்கள் எதிர்காலத்தில் சம்பவிக்கப்போகும் விஷயங்களை முன்னமேயே அறிந்து சொல்கிறார்களென்பது தெரிந்தவிஷயமே.

இக்காரிய காரண சம்பந்தம் நன்றாய் விளங்குவதற்காகவே, பாடம் ஆரம்பிக்குமுன் பாடத்தின் நோக்கத்தைச் சுருக்கமாய்க் கூறிவிடுவது நல்லது. சிலர் நோக்கத்தை மறைத்துவைத்தால் பிள்ளைகளுக்கு ஆவல் அதிகரிக்கும் என்பர். அது சரியேயாயினும், அப்படி மறைத்துவைப்பதினால், அவர்களுக்குக் காரியகாரண சம்பந்த ஞானம் ஏற்படாமல் சிறிது நேரத்திற்கெல்லாம் அசிரத்தையுண்டாய் விடுவதுண்டு. ஆகையால் நோக்கத்தை-

முன்பே தெரிவித்துவிடுவது நலம். ஆனால், பலர் 'உங்களுக்கு வகுத்தல் சொல்லி கொடுக்கப்போகிறேன்' என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிப்பதுண்டு. 'வகுத்தல்' என்னும் பதத்துக்குப் பொருள் தெரியாமலிருக்க, இம்மாதிரியாகத் தெரிவிப்பதும் தெரிவிக்காமலிருப்பதும் ஒன்றே. அப்படியன்றி, 'என்னிடம் 10 மாம்பழங்களிருக்கின்றன. நீங்கள் ஐந்து பேர் இருக்கிறீர்கள். இதை உங்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தால் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பழம் கிடைக்கும்' என்று கேட்டு 'இதைக்கண்டு பிடிக்கும் வழியை உங்களுக்குக் காட்டப்போகிறேன்' என்றால் உடனே, பிள்ளைகளுக்கு ஊக்கம் உண்டாகிறது. தன் மனதை உபயோகித்து ஆசிரியருடன் ஒத்துழைக்கச் சித்தமாயிருக்கிறார்கள். இவ்வழியைப் பிள்ளைகள் தெரிந்து கொண்ட பிறகு 'இம்மாதிரி செய்வதற்கு வகுத்தலெனப் பெயர்' என்று போதிக்கவேண்டும்.

மனப்பயிற்சியைப்பற்றிச் சிறிது பேசியாயிற்று. இனி குணப்பயிற்சியைப்பற்றிச் சிறிதாராய்வோம். மாணவர் பிறரிடத்தில் சரியானபடி நடந்துகொள்ளக் கற்பதே குணப்பயிற்சி யென்னலாம்.

தெய்வபக்தி, பொய் பேசாதிருத்தல், களவாணாதிருத்தல், பிராணிகளிடம் அன்பாயிருத்தல், பிறர்சிநேகம், பெரியோரைப் பேணுதல், தாய்நாட்டில் பக்திகாட்டல், சுத்தமாயிருத்தல் முதலியவை நல்ல குணங்கள்.

இக்குணங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படவேண்டுமாயின், உபாத்தியாயரே இக்குணங்கள் வாய்ந்தவராயிருக்கவேண்டும். இக்குணங்கள் வாய்ந்த நல்லாசிரியரோடு பழகப் பழக, அவ்வாசிரியரின் குணங்களே பிள்ளைகளுக்குத் தங்களையறியாமலே ஏற்படுமென்பது திண்ணம். "தாயைப் போல பிள்ளை" "குருவைப்போல சிஷன்" என்பவை இவ்விஷயத்தில்தான் வாஸ்தவம். பையன்கள் மணியடிக்குமுன் பள்ளிக்கு வரவேண்டுமானால் ஆசிரியரும் அவ்வழக்கத்தை அநுசரிக்கவேண்டும். இல்லாவிடில் "வாத்தியாரே லேட்டாய் வருகிறார் நமக்கென்ன?" என்று



பிள்ளைகள் இருந்துவிடுவார்கள். "நல்லோரைக் காண்பதுவும் நன்றே" என்ற செய்யுளின் கருத்தும் இதுவேயாம்.

ஆகையால், பிள்ளைகள் அயோக்கியர்களாயிருக்கிறார்கள் என்னும் உபாத்தியாயர்கள், பொதுவாகத் தங்களையே நொந்துகொள்ளவேண்டியதுதான். சிற்சில சமயங்களில் பிரம்பை உபயோகிக்கவேண்டிவரினும் வரும். அதைச் சமயமறிந்து சரியானபடி பிரயோகிப்பது நல்லதே. ஆயினும் பொதுவாக "அடியாத மாடு படியாது" "அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்" என்றவை அபத்தமே.

உபாத்தியாயர்கள் தங்களுடைய ஹிதோபதேசங்களாலும் பிள்ளைகளைக் குணவந்தர்களாக்கலாம். உபதேசம் என்றால் "அறஞ்செயவிரும்பு" "ஆறுவதுசினம்" முதலிய சூத்திரங்களைக் குருட்டுப் பாடம் செய்விப்பதன்று. அதனால் ஒரு பயனும் விளையாது. எத்தனையோ உபாத்தியாயர்கள் "ஆறுவதுசினம்" "ஆறுவதுசினம்" என்று சொல்லிக்கொண்டே, பையன்களை கண் தலை தெரியாமல் அடிக்கிறதைப் பார்க்கிறோம். இதைக் கற்றறிந்த வயது சென்ற குருவினிடத்திலேயே சினம் ஆறாமலிருக்கச், சிறுவர்களிடத்தில் கேட்பானேன்? ஆகையால், ஆசிரியர் "அறஞ்செயவிரும்பு" முதலிய நல்லுபதேசங்களை அருத்தத்துடன் போதிப்பதுமல்லாமல், அவ்வுபதேசங்களைப் பிள்ளைகள் நம்பி அவற்றின்படி நடக்கப் பிரியப்படும்படியும் செய்யவேண்டும். அதாவது, பிள்ளைகள் சற்குருவின் உபதேசத்துக் கீடுபட்டு அறம் செய்ய விரும்பவேண்டும். இம்மாதிரி விரும்பச்செய்வதே உபதேசத்தின் பயனும். இதற்கு அநேக வழிகளுண்டு. ஒருவன் ஒரு நல்ல காரியம் செய்ய உபாத்தியாயர் அதைக் கண்டு சந்தோஷித்தால் அவனுக்கு அந்நல்ல காரியத்தைச் செய்ய ஆசையதிகரிக்கும். மற்றவர்களும் அம்மாதிரியே செய்யப் பிரியப்படுவார்கள். அதுவன்றி நல்லவர்களுடைய சரித்திரங்களைச் சொல்லி அவர்கள் அடையும் லாபத்தையும் புகழையும்

எடுத்துக்காட்டலாம். அந்தந்த மதத்திலுள்ள பிள்ளைகளுக்கு அந்தந்த மதத்தில் தோன்றிய சமயாச்சாரியார்களின் சரித்திரத்தைக் கேட்டமாத்திரத்தில், தெய்வபக்தி வேரூன்றும் என்பதில் ஐயமுண்டோ! அயோக்கியர் அடையும் தீமையையும் விளக்கிக்காட்டலாம். ஆனால் இவ்விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஒரு கதையை வாசிக்கும்பொழுது நம்மையறியாமலே நமக்குக் கதாநாயகன்பேரில் அன்பு ஏற்பட்டுவிடும். அயோக்கியரைப்பற்றிய கதைகளில், அயோக்கியர் கதாநாயர்களாயிருப்பதால், பிள்ளைகளுக்கு அவர்கள்மேல் பிரியம் ஏற்படாவண்ணம் உபாத்தியாயர் வெறுப்பை உண்டுபண்ணவேண்டும். இது சுலபமானதன்று. ஆகையால் கெட்டவர்களின் கதைகளை மிகச் சிறுவர்களுக்குச் சொல்லாமலிருப்பதே நல்லதென்று மனோதர்ம சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

சில ஆசிரியர், கதை சொல்லி முடிந்தவுடன், "இக்கதையிலிருந்து நீ என்ன தெரிந்துகொண்டாய்?" என்று கேட்பது வழக்கம். கடைசியில் சிரமப்பட்டு, "ஆகையால் நாம் திருடவேகூடாது," "நாம் மெய்யே பேசவேண்டும்" என்று முடிப்பது வழக்கம். இதனால்கெடுதலில்லையாயினும், நன்மை அதிகம் உண்டாகமாட்டாது. நல்ல கதைகளைக் கேட்பதாலும், படிப்பதாலும், தாமாகவே கதாநாயகர்களைப்போல் இருக்கப் பிரியப்பட்டு, தங்களை அறியாமலே உபாத்தியாயருடைய குணங்கள் பிடிபடுவது போல், கதாநாயகர்களுடைய குணங்களும் பையன்களுக்குப் பிடிபட்டுவிடும். "ஆகையால் யோக்கியனாயிருக்க வேண்டும்" என்று யோக்கியனாயிருப்பதைவிட, தன்னையறியாமலே யோக்கியனாயிருத்தல் நல்லதன்றோ? இவ்விஷயங்களை ஆசிரியர்கள் நன்றாய் ஆலோசித்தறிந்து சித்திபெறுவார்களாக!



## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

### I. பால போதன முறை.

1. பால போதன முறைப்படி குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதில் உள்ள பிரயோசனம்:—

(a) இரண்டுவருஷகாலம் கிண்டர்கார்ட்டனை குழந்தைகளுக்கு ஒழுங்காயும் சீராயும் அப்பியசிக்கும்படி செய்தால் அவர்களின் பிந்திய பள்ளிக்கூடத்துப் படிப்புக்கு அநுகூலமாவதும் தவிர வேலையினால் கைவிரல்கள் வலுவடைவதோடு சரீரத்திலுள்ள நரம்புகள் பெலப்பட்டு மனப்பயிற்சி விர்த்தியடைந்து ஒழுங்கான பழக்கத்தை ஸ்தாபித்து பக்ஷம், கீழ்ப்படிதல், மதாசார அபிமானம், பெற்றோர்களிடத்தில் அன்பு முதலிய ஒழுங்கான பழக்கங்களும் உண்டாகிறது.

(b) அநேகம் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுவதால் பொதுப்பழக்கமும் மற்றவர்களிடத்தில் மரியாதையாய் இருப்பதும், தன்னை அன்னியர்கள் மரியாதையோடு அங்கீகாரம்பண்ணப் பிரியப்படுவதும்; இன்பத்தோடு சின்ன வேலைகளைச் செய்த பழக்கத்தால் பெரிய காரியத்தையும் அலக்ஷியமின்றிச் செய்யப் பிரயத்தனமும்; காணாத பொருள்களின் உருவம், குணம் முதலியவைகளை விவரிக்கும் சக்தியும் உண்டாவதோடு, உபாத்தியாயர் அல்லது பெற்றோர்களால் காதுக்கு இனிமையாயும் சிறு வார்த்தைகளினாலும் சொல்லப்படும் கதை பாட்டு முதலியவைகளை கேட்கும் பழக்கத்தால் அநேகம் பொருள்களின் பெயரும், அநேகம்

வார்த்தைகளின் அர்த்தமும், அனேக சாமான்களின் குணங்களும், உபயோகங்களும் சிறுவர்கள் அறிகிறுர்கள்.

(c) பாலர்களுக்கு கிண்டர்கார்ட்டன் தெரிவதால் சின்ன வார்த்தைகளடங்கிய வாசக பாடம், எழுத்துப் பாடம், கணக்கு, பூகோளம், சித்திரம் எழுதல், பாட்டுப் பாடுதல் முதலியவைகள் பள்ளிக்கூடப் பயிற்சியில்லாமலே அறிந்துகொள்ளுவார்கள்.

2. பால போதனு முறை நடத்தும் உபாத்தியாயருக்கு முக்கிய குறிப்புகள் :—

(a) பொறுமையும், நியாயவாதமும் உபாத்தியாயருக்கு அத்தியாவசியமானது. காலையில் கடினமான பாடமும் பிறகு இலகுவான பாடமும் சொல்லிவைத்து, சாயங்காலம் காலையில் நடந்தபாடத்தைப்பற்றி பரீக்ஷிக்கவேண்டும்.

(b) ஒரு வகுப்பிலிருந்து மற்ரெரு வகுப்பிற்கு குழந்தைகளை அடிக்கடி மாற்றக்கூடாது. வாயினுல் சொல்லி குழந்தைகளை செய்யச்சொல்வதைவிட குறிப்பினுலேயே பிள்ளைகள் தெரிந்துகொள்ளும்படி பழக்கவேண்டும்.

(c) ஏராளமான பாடங்களை ஏககாலத்தில் சொல்லிவைக்கப் பிரயத்தனப்படாமல், சுவல்ப பாடங்களிலிருந்து ஜாஸ்தியான விஷயங்களை அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும்.

(d) வீடு, வெளி, ஜீவபிராணிகள், உலகப்பொருள், அறிவு இவைகள் சம்பந்தமாய் பிள்ளைகளின் தன்மையைக்கொண்டு அடிக்கடி பேதா பேதங்களை விவரித்துக் காட்டுவதில் ரொம்ப சிரத்தை உள்ளவராய் இருக்கவேண்டும்.

(e) கிண்டர்கார்ட்டன் சொல்லிக்கொடுக்கும் இடம் சுத்தமாயும், பிள்ளைகளுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடியதாயும் இருக்கவேண்டும்.

(f) கிண்டர்கார்ட்டன் சம்மந்தமான சாமான்களைப் பத்திரமாய் வைப்பதிலும், பிள்ளைகளிடம் கொடுத்து வாங்கிக்கொள்வதிலும் கவனம் அவசியம்.

T. R. பாலசுப்ரமணிய அய்யர்,
Govt. Training School,
Trichinopoly.



## II. வாசகப்பாடத்தை நடித்தல்.

ஆழியில் அலைக்கழிக்கப்பட்ட ஒரு அற்ப துரும்புபோல், கல்வியென்ற பெரிய கடலில் அமிழ்த்தப்பட்டு கரைசேரமுடியாமல் பரிதவிக்கும் நம்மிடத்தில், மாசில்லாப் பளிங்கத்தைப்போன்ற மனத்தையுடைய பல குழவிகளை ஒப்படைத்திருப்பதால், அவர்களின்மனதில் ஏற்றவாறு நற்போதகத்தையும், ஜீவனேபாயத்திற்கின்றியமையாததாகிய கல்வியையும் பதியச்செய்யவேண்டியது நமது கடன். அக்கல்வியைச் சார்ந்ததாகிய பல கோர்ட்டு விஷயங்களையும் அறிவிப்பதவசியமே. ஏனெனில் அவ்விஷயத்தையறியாத பாலர்கள், தங்கள் ஜீவியகாலத்தில் யாதாமொரு விஷயத்தை விசாரித்தொழுங்குசெய்யவும், கோர்ட்டார்க்கு அறிவிக்கவும் வகையற்று, அவ்வொழுங்கு தெரிந்த பலரைத் தஞ்சமெனத் தேடியடைகின்றனர்.

அவ்வாறின்றியே, பாலர்கள் சிறுபோதே தாங்கள் கற்கும் கல்விசாலையில் அவ்வொழுங்குகளை யறியும்படி அநேக வாசகபுஸ்தகங்களில் ஆங்காங்கு ஏதாவதொரு வியாஜ்ஜியத்தை மாஜிஸ்டிரேட்டிடம் விசாரிப்பதுபோல் கவிஞர் பலர் பிரசுரம் செய்திருக்கின்றனர். அவற்றை ஆசிரியர்களாகிய நாம் அலட்சியமாகக் கருதி, பையன்கள் அவற்றை வாசித்து அவைகளின் பொருளின்னதென நன்கறியாமுன்னமே வாசகத்தை முடித்துவிடுகிறேம். அவ்வாறின்றி சம்பாஷணையாக எழுதப்பட்டவைகளை, நமது மாணவர்களைக்கொண்டே, வாசகநேரத்தில் நடித்துக் காட்டச்செய்வதால், அவர்களின் மனதில் அவ்விஷயங்கள் பசுமரத்தாணிபோல் பதியுமென உணருகின்றனன். ஆனல் அதை எவ்வாறு நடத்துவது? அம்மாதிரியைக் காட்டியிருந்தால் நலமெனக் கருதும் என தன்பார்ந்த நேயர்களுக்கு ஆதாரமாக என் அற்ப அறிவுக் கெட்டியவண்ணம் "மூவரும் வந்தால் முடிப்பைவரும்" என்ற சம்பாஷணைப்பாடத்தில், வழிப்போக்கர் பிரியாது கொடுத்ததிலிருந்து நடத்திக்காட்ட முன்வந்தனன்.

### I. நடிப்பவர்களை நியமித்தல்.

1. உபாத்தியாயர் வகுப்புப் பிள்ளைகளில் இரண்டு, மூன்று புத்தி சாதுரியமான பையன்களைத் தெரிந்தெடுத்து முனிஸீப்பாக

நியமித்தல்; அல்லது பையன்களைக்கொண்டே உங்களில் யாரை ஷை உத்தியோகஸ்தனாக நியமிக்கலாமெனக் கேட்டு ஒழுங்கு படுத்தல்.

2. குமாஸ்தா. இவர் முனிஸீப்புக்கருகிருப்பவர் (இவனை யும் முன்போலவே தெரிந்தெடுத்தல்.)

3. பிரியாது எழுதுபவர். இவர் கோர்ட்டிற்கு வெளியில் அதாவது பள்ளிக்கூட அறைக்குவெளியில் இருத்தல். (மைக்கூடும் பேனாவும் தேவை.)

4. வாசற்படியில் நிற்கும் சேவகன். இவன் பள்ளிக்கூட மணியுடன் இருப்பதோடு இராகத்துடன் பெரும் சத்தம்போடக் கூடியவனாயும் இருத்தல் வேண்டும்.

5. செட்டியார். இவ்வேஷம்போடும்பையன் பெரிய தலைப் பாகையும் வயிற்றில் துணி அதிகமாக வைத்துக்கட்டிய தொந்தி யுடையவனாகவும், பூணூல் தரித்துள்ளவனாயும் இருத்தல் வேண் டும். இவன் அசைந்து அசைந்து நடத்தலவசியம். (இவர் பெயர் வைத்தியலிங்கச் செட்டி.)

6. வழிப்போக்கர்கள். இவர்களிருவரும் வெளியிலிருந்து கோர்ட்டுக்கு வருபவர்கள்போல் ஒருவரோடு ஒருவர் தங்கள் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு வரவேண்டும்.

7. சாட்சியாள். (இவன்பெயர் இரங்கநாதப்பிள்ளை.)

## II. கதை நடித்தல்.

1. வழிப்போக்கர்களிருவரும் பிரியாது எழுதுபவரிடம் சென்று, சுவாமி தெண்டம், அபயம், அபயம், அபயம் என்று காலில் விழுதல்.

2. பிரியாது எழுதுபவர்:—நீங்கள் யாரப்பா? உங்கள் பேரென்ன? ஏன் இவ்விதம் அயரப்படுகிறீர்கள்? என்னிடம் உள்ளவிஷயத்தைச் சொல்லுங்கள்; நான் அதற்குத் தக்கவழி தேடுகிறேன்.

3. வழிப்போக்கர்கள்:—ஐயா சுவாமி (துயரத்துடன்) நாங்கள் இன்று காலை ஓர் பணமூட்டையை இந்த திண்டி நகரி லிருக்கும் வைத்தியலிங்கச் செட்டியாரிடம் கொடுத்துவிட்டு எங்



களுடன் கூடவந்த இரங்கனும், நாங்களும் மூவரும் வந்தால் முடிப்பைக் கொடும் என்று சொல்லிச் சாப்பிட ஏகினோம். பின்பு ஷை செட்டியாரிடம் வெற்றிலை வாங்கிவர இரங்கனை அனுப்பினோம். பணமூட்டையை செட்டியார் அவனிடம் கொடுத்துவிட அவன் தெரியாமல் எங்கேயோ ஏகிவிட்டான். நாங்கள் செட்டியாரைக் கேட்க அவர் மூட்டை இல்லையென்கிறார். இதுதான் சுவாமி எங்கள் பிரியாது, என்று இருகரங்களையும் முன் நீட்டிக் கெஞ்சுவதுபோல் செய்தல். (இவையாவும் வேஷம் போடும் பையனிடமிருந்தே வரவழைத்தல் வேண்டும்.)

4. பிரியாது எழுதுபவன் முன்னதாக உபாத்தியாயரால் எழுதப்பட்ட பிரியாதை வழிப்போக்கர்களிடம் கொடுத்தல்; அல்லது அச்சமயத்திலேயே பையன், அடியிற்காட்டியவாறு அரைக்கடுதாசியில் எழுதல் நலம். (இது பையனின் கல்வி அபி விர்த்தியைப் பொருத்தது.)

### பிரியாது நகல்.

மகா-௱-௱-ஸ்ரீ திண்டிவனம் (இஷ்டமானஊர்) தாலுக்கா, ஸிவில் கோர்ட்டார் அவர்கட்கு:

ஷை தாலூகா திருப்பாப்புலியூர் (இஷ்டமான ஊர்) கிராமத் திலிருக்கும் அடியிற்கண்ட 1, 2-வது வாதிகள் மிகுந்த வணக்க மாய் எழுதிக்கொள்ளும் பிரியாது:

| வாதி. | பிரதிவாதி. |
|---|---|
| 1. ஜெயபாலநைனார் | வைத்தியலிங்கச்செட்டியார் |
| 2. ரேணுகோபால் | |

சாக்ஷி

இரங்கநாதபிள்ளை

குற்றம் நடந்தது: 1-2-22.

ஐயா, வாதியாகிய நாங்களிருவரும் பிரதிவாதியிடத்தில் எங் கள் பணமூட்டையைக் கொடுத்து, பிறகு மூவரும் வந்தால் கொடும் என்று சொல்லிச் சாப்பிடச்சென்றோம். அதன்பின் எங்களில் இரங்கன் என்பவனை வெற்றிலை வாங்கிவர ஏவினோம்.

அவனிடம் பிரதிவாதியென்பவர் மூட்டையைக் கொடுத்துவிட அவன் காணுமல் ஓடிவிட்டான். பிரதிவாதியைக் கேட்டதற்கு இல்லையெனச் சொல்லுகிருர். ஆகையால் தர்ம எஜமானவர்கள் தயவு செய்து எங்கள் சாட்சியை விசாரித்துத் தக்க நியாய மளிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம்.

வேணும் அநேக சலாம்,

இப்படிக்கு,

1, 2-வது பிரதிவாதிகள்.

கோர்ட் சுமார் $10\frac{1}{2}$-க்கு துவக்குமென உபாத்தியாயர் அறிவித்தல். இந்த நேரத்தில் வாசற்படிச் சேவகன் மணி அடித்து விட்டு "பிரியாது விண்ணப்பம்" என மூன்று தடவை உரத்த சத்தமாய் இராகத்துடன் கூப்பிடுதல்.

5. வழிப்போக்கர் அதிவிரைவுடன் ஓடி, பிரியாது விண்ணப்பத்தைச் சேவகனிடம் கொடுத்தல் (தெண்டம் செய்தல் வேண்டும்.)

6. குமாஸ்தா ஷை விண்ணப்பத்தை நாற்காலியில் வீற்றிருக்கும் முனிஸீப்புக்கு வாசித்தல் (எழுந்து நின்றுகொண்டு.)

7. முனிஸீப் வாதிகளைக் கூப்பிடச் சேவகனுக்கு அதிகாரம் கொடுப்பது.

8. சேவகன் :—"வாதி ஜெயபாலனைஞர், வாதி ரோணு கோபால்" என்று முறையே மூன்றுதடவை உரத்த சத்தமாய் இராகத்துடன் வாசற்படியில் கூப்பிடுதல்.

9. 1, 2-வது வாதிகள் அதிவிரைவாய் கோர்ட்டினுள் நுழைந்து சுவாமி தெண்டம் என்று காலில் விழுதல்.

10. குமாஸ்தா :—1, 2-வது வாதிகளைப் பார்த்து : சர்வசக்தியுள்ள கடவுளுக்கு முன்பாக நான் சொல்லப்போகிறது நிஜம், நிஜமொழிய வேறில்லையென்ச் சொல்லச் செய்தல்.



11. குமாஸ்தா :—1, 2-வது வாதிகளின் வாக்குமூலத்தைக் கேட்டல் வேண்டும். (பிரியாது நகலுக்குச் சரியாய் இருக்கிறதா வென்று கவனிக்கவும்.)

12. சேவகன் "பிரதிவாதி வைத்யலிங்கச் செட்டி" என்று 8-ம் நெம்பரில் கண்ட முறைப்படி கூப்பிடுதல்.

13. செட்டியார் தொந்தியை ஆட்டிக்கொண்டு கையில் தடியுடன் அசைந்து, அசைந்து ஓடி முனிஸீப்பைக் கண்டு குனியமுடியாமல் தெண்டம் செய்வதுபோல் செய்யவேண்டும் (சிரித்தல்.)

14. குமாஸ்தா : 10-வது நெம்பரில் கண்டபிரகாரம் சொல்லச்செய்து வாக்குமூலம் கேட்டல் வேண்டும்.

15. சாட்சியை சேவகன் கூப்பிட, குமாஸ்தா முன் மாதிரியே செய்தல்வேண்டும்.

16. சாட்சி ஆள் :—ஓடிவந்து முனிஸீப்பைப் பார்த்து வழிப்போக்கர்கள் மூட்டையைச் செட்டியாரிடம் கொடுத்தது உண்மையென்றும், பண மூட்டையை, அவர்கள் சொன்னதற்கு விரோதமாய், வேறொருவனிடம் கொடுத்துவிட்டு இல்லையென்றலும் உண்மைதான் என்றும் சொல்லுதல்.

17. முனிஸீப் :—வாதிகளைப் பார்த்து, பணம் கொடுக்கும போது என்ன சொல்லிக் கொடுத்தீர்கள் என்று கேட்டல்.

18. வழிப்போக்கர் :—மூவரும் வந்தால் கொடும் என்று சொன்னேம் என்றல்.

19. முனிஸீப் :—செட்டியாரோ, வெற்றிலை வாங்கவந்தவன் உம்மிடம் என்ன கேட்டான்? அத்தருணத்தில், வாதிகளிருவரும் என்ன சொன்னார்கள்?

20. செட்டியார் :—பண மூட்டையை கேட்க நான் கொடுக்காமல் இருந்தேன். தூரத்திலிருந்தே வாதிகள் கொடும் கொடும் என்று சொன்னார்கள். நான் கொடுத்துவிட்டேன்.

21. முனிஸீப் :—(வாதிகளைப்பார்த்து) செட்டியாரிடம் பணம் கொடுத்தபோது மூவரும் வந்தால் முடிப்பைக் கொடும்

என்று சொன்னீர்கள், நீங்கள் அனுப்பினவன் பணத்தைக் கேட்க அவர் கொடுக்காமலிருக்கும்போது, வெற்றிலைக்கு வந்தவன் என்ன கேட்கிறானென நீங்கள் அறியாமல், கொடும், கொடும், என்று சொன்னதால் செட்டியார் கொடுத்துவிட்டார். ஆகையால் அவர்மேல் குற்றமில்லை. பணப்பை தேவையானால் நீங்கள் சொன்ன வார்த்தையின்படி மூவரும் வந்தால் கொடுக்கப்படும், என்று கூறி, கேஸ் தள்ளப்பட்டதெனத் தீர்மானம் செய்ய வேண்டும்.

22. வழிப்போக்கர் :—மிகவும் துயரப்பட்டுப் போதல்.

*N. B.*—முனிஸீப் வேஷம்போடும் பையன் வாக்குமூலம் கேட்கும்போது நன்றாய்க் கவனித்தால் தீர்மானம் எளிதில் சொல்லலாம். இல்லாவிடில் உபாத்தியாயர் விடை வருவிப்பாராக.

[இதிலனேக பிழை இருப்பினும் கல்விமான்கள் தயவுசெய்து மன்னிக்குமாறு கேட்டுள்ளேன்.]

இப்படிக்கு
S. அந்தோனிசாமி,
ஹெட்மாஸ்டர், R. C. ஆரம்பப் பாடசாலை,
அணிலாடி.—(Gingee Taluk.)

## சந்தாதார்க்கு அறிவிப்பு.

ஜூன்மாத முடிவுக்குள் சந்தாப் பணத்தை அனுப்பிக் கொள்ளாதவர்களுக்கு ஜூலைமாதப் பத்திரிகை V. P. வழியாய் அனுப்பப்படும்.

சந்தா நேயர்கள் இன்னும் சில புதுச் சந்தாதார்கள் சேர்த்து ஜூன்மாத முடிவுக்குள் நமக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1922 ஜூலைமுதல் 1923 ஜூன்முடிய சந்தாப்பணம் ரூ. 1.

*Headmaster,*
*R. C. Trg. School, Trichy.*

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY

1128

Registered No. M. 1534.

J. M. J

R. C. BOARDING & TRAINING INSTITUTION, TRICHY.



திருச்சினாப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

# போதனா விஷயப் பூங்கொத்து

மாதமோருமுறை மலரும் : வருஷ சந்தா ரூபாய் 1.

| | | |
|---|---|---|
| கொத்து 11. | ஜூன் 1922. | மலர் 12. |


## பத்திராதிபர் குறிப்புகள்.

ஒரு தேசத்திலுள்ள ஆண் பெண் சகலரும் ஆரம்பப் படிப்பாவது படித்திருந்தாலல்லது அத்தேசம் முன்னேற்றமடைய வழியில்லையென்பது சொல்லாமலே விளங்கும். அப்படியே சகலரும் ஆரம்பப் படிப்பாவது படிப்

பதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்தினாலன்றி எல்லாரும் படிக்கமாட்டார்களென்பதையும் சந்தேகிக்க இடமில்லை. ஆனால் கட்டாயப்படுத்துமுன் கவனிக்கவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. இலவசமாய்ப் படித்துக்கொடுப்பதும் அதற்காக சம்பளத்தைத் தவிர்த்து வேறு வழியாய்ப் பணம் சேர்ப்பதும் அவசியமே. ஆகிலும் இது முக்கியமாயும் முதலாவதாயும் கவனிக்கவேண்டிய காரியமன்று. எத்தனையோ பெற்றோர்கள் சம்பளங் கொடுக்கக் கூடியவர்களாயிருந்தும் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதில்லை; வேறு சிலருடைய பிள்ளைகளுக்கு இலவசமாய்ப் படித்துக்கொடுக்க ஏற்றுக்கொண்டாலும் அப்பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பப் பின்வாங்குகிறார்கள். ஆகவே ஆண் பெண் சகலரும் படியாததற்குச் சம்பளமே முக்கியமானதும் முதலாவதுமான தடையென்று சொல்லக்கூடாது. வேறு என்ன தடை?

* * *

நமது மாகாணத்துக்கு வடக்கேயுள்ள ஐதராபாத்தில் ஆரம்பப் படிப்பு இலவசப் படிப்பாயிருக்கவேண்டுமென்பது சட்டம்; ஆனால் கட்டாயப் படிப்பாயிருக்கவேண்டுமென்று சட்டம் ஏற்படவில்லை. இதனால் ஆரம்பப்படிப்பு எவ்வளவு பரம்புமென்று பார்க்கவேண்டியிருக்கிறது.

* * *

நமது மாகாணத்தில் பொதுவாய் ஆரம்பப்படிப்பு இலவசமுமில்லை, கட்டாயமுமில்லை. ஆனால் ஆரம்பப்படிப்பு விர்த்திக்காக உழைப்பு மெத்த. 1920-21-ம் வருஷத்தில் ஆரம்பப் பாடசாலைகள் 30,889-இலிருந்து 32,482 ஆகவும், அவைகளில் படிக்கும் மாணவரின் தொகை 12,69,013-இருந்து 13,26,539 ஆகவும் ஜாஸ்தியாகியிருக்கிறதாம். இந்த விர்த்தி உழைப்புக்குத் தகுந்த விர்த்தியா?

* * *

கல்விச்சாலைகளில் தொழிற்படிப்பு கற்பிக்கப்படவேண்டுமாம். கல்வியோடு கற்கவேண்டிய தொழில்



இன்னதென்று சரியாய்த் தீர்மானித்தால், கல்விச்சாலைகளில் தொழிற்படிப்பு கற்பிப்பது சரிதான். ஆனால் கல்விச்சாலையை தொழிற்சாலையாய் மாற்றுவது உசிதமில்லை. கல்விச்சாலைகளில் கற்பிக்கவேண்டிய தொழிற்படிப்பு கல்விக்கு உதவியாயும் தொழிலுக்கு ஆதாரமுமான பற்பல கைவேலைகள்தான். இதை மறந்துபோய் கல்விச்சாலைகளை வேலைக்காரரைப் பழக்கும் தொழிற்சாலைகளாய்க் கருதினால் கல்விக்கும் மோசம், தொழிலுக்கும் மோசம். ஏன்?

* * *

தொழிலினால் வரும் லாபத்தையே கருதி கல்வியினால் அடையவேண்டிய பிரயோசனத்தை மறந்துவிடுவது சரியன்று. இக்காலத்துத் தொழிலாளர்கள் உண்மை, நன்மை முதலிய உன்னத கருத்துகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கைவிடுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துகளே மனுக்குலத்தின் உன்னத பதவிக்கு என்றென்றும் முக்கியமாய் இன்றும் ஆதாரமாயிருக்கவேண்டியவை.

* * *

பள்ளிக்கூடப் பாடங்களில் பாஷைப் பாடங்கள் வேறு, விஷயப் பாடங்கள் வேறு. ஆகிலும் இவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவையென்றும், ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கவேண்டியவை யென்றும் சொல்லாமலே விளங்கும். விஷயப்பாடங்களில் கற்றவைகளைப்பற்றிப் பாஷைப் பாடங்களில் பேசி, எழுதிப் பழகவேண்டும். பாஷைப்பாடங்களில் படித்தபடி விஷயங்களைத் திருத்தமாயும் தெளிவாயும் வெளியிடவேண்டும். ஆகிலும் அந்தந்தப் பாடங்களை நடத்தும்போது அந்தந்தப் பாடங்களின் முக்கிய நோக்கத்தை உபாத்தியாயர் மனதில் வைத்து நடத்தினால்தான், குழப்பமில்லாமல் பாஷாஞானமோ விஷய அறிவோ ஏற்படும்.

## பின்னங் கற்பிப்பதற்கு அஸ்திவாரப் பாடங்கள்.

(88-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (2)

எளிதான பின்னங்களைப் பற்பலவிதமான கணக்குகளில் முன் சொன்னபடி உபயோகிக்கப் பழகின பிள்ளைகளுக்குப் பின்னம் என்றால் இன்னதென்றும் அதைக் குறிப்பது எப்படியென்றும் கற்றுக்கொடுக்கலாம்.

அரை அடி, கால் படி, முக்கால் நாள் என்றால் இன்னதென்று பிள்ளைகள் வாயால் சொல்லக்கூடாத போதிலும் இன்னதுதானென்று ஏற்கனவே உணர்ந்திருப்பார்கள். இப்போது, ஒரு வடையை இரண்டு பேருக்குச் சரியாய்ப் பங்கிடுவதற்கு என்ன செய்யவேண்டும்? அதை இரு பாகங்களாகப் பிரிக்கவேண்டும். பாகங்கள் எப்படியிருந்தாலும் சரிதானா? இல்லை; இரண்டு பாகங்களும் ஓரே அளவாயிருக்கவேண்டும். இப்படி சமமான இரண்டு பாகங்களில் ஒவ்வொன்றுக்கும என்ன பேர்? பாதி அல்லது அரை. பாதி வடையென்றால் அல்லது அரை வடையென்றால் என்ன? ஒரு முழு வடையை இரு சம பாகம் செய்தால் ஒவ்வொரு பாகததுக்கும் பாதி வடை அல்லது அரை வடை யென்று பேர். இதிலிருந்து பொதுவாய் பாதி அல்லது அரை யென்றால் இன்னதென்று பிள்ளைகள் உணரவும் சொல்லவும் செய்யலாம்.

பாதி வடையை இரு சம பங்கு செய்தால் ஒவ்வொன்றும் முழு வடையில் என்ன பாகம்? நாலில் ஒரு பாகம் அதாவது கால் பாகம். மூன்று கால் பங்குகள் முழு வடையில் என்ன பாகம்? நாலில் மூன்று பாகம் அல்லது முக்கால் பாகம். இவ்விதமாய் கால், முக்கால் என்றால் இன்னதென்று பிள்ளைகள் பொதுவாய் அறியச் செய்யலாம்.

இனி, வேறு பின்னங்களைப்பற்றிப் போதிக்கத் துவக்கலாம். ஒரு வடையை மூன்று பங்கு செய்தால் ஒவ்வொரு பங்கும் முழு வடையில் என்ன பாகம்? மூன்றில்



ஒரு பாகம். அப்படியே ஐந்தில் ஒரு பாகம், ஆறில் ஒரு பாகம், ஏழில் ஒரு பாகம் முதலிய எந்தப் பின்னமும் இன்னதென்று கற்றுக்கொடுக்கலாம்.

அதன்பின், ஒரு வடையை மூன்று பங்கு வைத்து இரண்டு பங்கு எடுத்தால் இந்த இரண்டு பங்குகளும் சேர்ந்து முழு வடையில் என்ன பாகம்? மூன்றில் இரண்டு பாகம். அப்படியே, ஐந்தில மூன்று பாகம், ஏழில் நாலு பாகம் முதலிய எந்தப் பின்னமும் இன்னதென்று படிப்பிக்கலாம்.

பின்னம் என்பதின் அபிப்பிராயத்தைத் தெளிவாய் விவரித்தபிற்பாடு, பின்னங்களைக் குறிக்கும் விதத்தை விளக்கலாம்.

2 அங்குல நீளமும், 1 அங்குல அகலமுமுள்ள ஒரு நீண்ட சதுரம் வரைந்து, அதை இரு சம பாகங்களாகப் பிரித்து ஒரு பாகத்தைக் குறுக்குக் கோடுகளால் நிரப்பு; குறுக்குக் கோடிட்ட பாகம், முழுச் சதுரத்தில் இரண்டில் ஒரு பாகமல்லவா? அதை லக்கத்தால் குறிக்கவேண்டுமானால் $\frac{1}{2}$ என்று குறிப்பது வழக்கம்.

ஷை சதுரத்தை நாலு சம பங்காகப் பிரித்தால் ஒரு பாகத்தை $\frac{1}{4}$ என்று குறிப்பார்கள். அப்படியானால் அதை மூன்று சம பங்காகப் பிரித்தால் ஒவ்வொரு பாகத்தையும் எப்படி குறிக்கலாம்?—ஐந்து சம பங்காகப் பிரித்தால்?—ஒன்பது சமபங்காகப் பிரித்தால்?

ஷை சதுரத்தை நாலு சமபங்காகப் பிரித்து அதில் இரண்டு பாகத்தைச் சேர்த்துக் குறிக்கவேண்டுமானால், $\frac{2}{4}$ என்று குறிப்பார்கள். மூன்று பாகத்தையோ, $\frac{3}{4}$ என்று குறிப்பார்கள். அப்படியானால், அதை மூன்று சம பங்காகப் பிரித்து இரண்டு பாகத்தைச் சேர்த்துக் குறிக்க வேண்டுமானால் எப்படி குறிக்கலாம? ஐந்து சம பங்கில் மூன்று பங்கை எப்படி குறிக்கலாம—ஒன்பது சம பாகத்தில் ஏழு பாகத்தையோ?

இவ்விதமாய் எந்தப் பின்னத்தையும் பொதுவாய்க் குறிக்கும் வழி இன்னதென்று பிள்ளைகள் சுளுவாயும் தெளிவாயும் அறிவார்கள். பகுதி, தொகுதி என்கிற பேர்களைக் கற்றுக்கொடுக்க அவசரமில்லை.

(3)

பின்னங்களைப்பற்றிய அறிவை எண்கள் விஷயமாய் உபயோகிப்பது எளிதே. 12 அங்குலத்தில் நாலில் ஒரு பாகம் என்ன? 12 அங்குல நீளமுள்ள ஒரு கோடு வரைக. ஒவ்வொரு அங்குலத்தையும் சிறு செங்குத்துக் கோடுகளால் பிரித்துக்காட்ட. முழுக் கோட்டை முதலில் இரு சம பாகங்களாகவும், ஒவ்வொரு பாகத்தையும் இன்னும் இரு சம பாகங்களாகவும் பிரித்தால், முழுக் கோடு நாலு சம பாகங்களாகவும பிரிக்கப்படும். ஒவ்வொரு சம பாகத்திலும் எத்தனை அங்குலங்கள் அடங்கியுள்ளன? அப்படியானல் 12 அங்குலங்களில் நாலில் ஒரு பாகமென்ன?

அதுபோல், 15 புளியங்கொட்டைகளில் மூன்றில் ஒரு பாகம் என்ன? 15 கொட்டைகளையும் வரிசையால் அடுக்க. முழு வரிசையை மூன்று சம பாகங்களாகப் பிரிக்க. ஒவ்வொரு பாகத்திலும் எத்தனை கொட்டைகள் அடங்கியுள்ளன? அப்படியானல், 15 கொட்டைகளில் மூன்றில் ஒரு பாகம் என்ன?

இவ்விதமாக, எந்த எண்ணின் பின்ன பாகங்களையும் பிள்ளைகள் அறியச் செய்யலாம். முதலில் பொருள்களை உபயோகித்தும், அதன்பின் உருவப்படம் வரைந்தும், கடைசியாய் பொருளும் படமுமின்றி வெறும் வகுத்தல் மூலமாயும் எண்களின் பின்னபாகங்களைக் கற்பிக்கத்தகும்.

கொடுக்கப்பட்ட எண்ணின் ஐந்தில் ஒரு பாகம் இன்னதென்று கண்டுபிடிக்கத் தெரிந்த பிள்ளை ஐந்தில் இரண்டு அல்லது மூன்று பாகம் கண்டுபிடிப்பது வருத்தமாகாது. வெறும் வகுத்தலும் பெருக்கலும் எண்களின் பின்னபாகங்கள் கண்டுபிடிப்பதற்கு உதவுவதைப் பிள்ளைகள் தாங்களாகவே உணர்ந்துகொள்ளுவார்கள்.

இந்த அறிவை நாணயக் கணக்குகளிலும் வேறெந்த அளவையொட்டிய கணக்குகளிலும் பிள்ளைகள் சாதாரணமாய்ப் பிரயோகிப்பதற்கு இனிமேல் தடையொன்றும் இராது.



(4)

இதெல்லாம் நன்கறிந்த பிள்ளைகளுக்குப் பின்னக் கூட்டலும் கழித்தலும் கற்பிக்கத் துவக்கலாம். எளிதும் அளந்து கண்டுபிடிக்கக்கூடியதுமான கணக்குகளை ஏற்கனவே பிள்ளைகள் செய்திருப்பார்கள். இப்பேர்ப்பட்ட கணக்குகளுக்கு உதாரணங்கள் டிசம்பர் மாதப் பூங்கொத்து 88-ம் பக்கத்தில் காண்க. இவைகளைவிடச் சற்று வருத்தமான கணக்குகள் பின்வருமாறு:

$$5\frac{3}{4} \text{ அங்.} + 3\frac{1}{2} \text{ அங்.} = 9\frac{1}{4} \text{ அங்.}$$

இக்கணக்கைச் செய்வதற்கு அடிக்கோலை உபயோகப்படுத்தலாம். அதன்பின் அடிக்கோலில்லாமலே, $5\frac{3}{4}$ அங். $+ 3$ அங். $= 8\frac{3}{4}$ அங்.; $8\frac{3}{4}$ அங். $+ \frac{1}{4}$ அங். $= 9$ அங்.; $9$ அங். $+ \frac{1}{4}$ அங். $= 9\frac{1}{4}$ அங். என்று செய்யும்படி பிள்ளைகளைப் பழக்கலாம்.

இவ்விதமாகவே கற்பிக்கக்கூடிய கணக்குகள்:

$$3\frac{3}{4} \text{ அங்.} + 3\frac{3}{4} \text{ அங்.} = 7\frac{1}{2} \text{ அங்.}$$
$$7\frac{1}{2} \text{ அங்.} + 2\frac{3}{4} \text{ அங்.} = 10\frac{1}{4} \text{ அங்.}$$
$$3 \text{ அங்.} + 5\frac{3}{4} \text{ அங்.} + 1\frac{1}{4} \text{ அங்.} = 10 \text{ அங்.}$$
$$4\frac{3}{4} \text{ அங்.} + 1\frac{3}{4} \text{ அங்.} + 1\frac{1}{2} \text{ அங்.} = 8 \text{ அங்.}$$

முதலியன.

இப்படியே கழித்தலும் கற்பிக்கலாம்:

$$4 \text{ அங்.} - 2\frac{1}{2} \text{ அங்.} = 1\frac{1}{2} \text{ அங்.} \text{ அதாவது:}$$
$$4 \text{ அங்.} - 2 \text{ அங்.} = 2 \text{ அங்.}; 2 \text{ அங்.} - \frac{1}{2} \text{ அங்.} = 1\frac{1}{2} \text{ அங்.}$$

இதைப்போலவே கற்பிக்கக்கூடிய கணக்குகள்:

$$7\frac{1}{4} \text{ அங்.} - 2\frac{1}{2} \text{ அங்.} = 4\frac{3}{4} \text{ அங்.}$$
$$10\frac{1}{4} \text{ அங்.} - 4\frac{3}{4} \text{ அங்.} = 5\frac{1}{2} \text{ அங்.}$$
$$5 \text{ அங்.} - 2\frac{3}{4} \text{ அங்.} = 2\frac{1}{4} \text{ அங்.}$$
$$8\frac{1}{4} \text{ அங்.} - 3\frac{3}{4} \text{ அங்.} = 4\frac{1}{2} \text{ அங்.}$$

முதலியன.

கூட்டலிலாவது, கழித்தலிலாவது வரும் ஒவ்வொரு 12 அங்குலங்களையும் 1 அடியென்று மாற்றிக்கொள்ளும்படி முன்னமே கற்பித்திருக்கவேண்டும்; அப்படியே

3 அடி = 1 கெஜம் என்றும் பிள்ளைகள் அறிந்திருப்பார்கள்.

பெருக்கல் கணக்குகளைத் துவக்கத்தில் கூட்டலைப் போலவே செய்யலாம். உதாரணமாக, ஒவ்வொன்று $3\frac{1}{4}$ அங். நீளமான 4 குச்சிகளின் நீளமென்ன? இந்தக் கணக்கை, $3\frac{1}{4}$ அங். + $3\frac{1}{4}$ அங். = $6\frac{1}{2}$ அங்; $6\frac{1}{2}$ அங். + $3\frac{1}{4}$ அங். = $9\frac{3}{4}$ அங்.; $9\frac{3}{4}$ அங். + $3\frac{1}{4}$ அங். = 13 அங். = 1 அடி 1 அங். என்று செய்யலாம்.

அல்லது, 4 விசை 3 அங். = 12 அங்.
4 விசை $\frac{1}{4}$ அங். = 1 அங்.
மொத்தம் = 13 அங். = 1 அடி 1 அங். என்று செய்யலாம்.

இப்படியே செய்யக்கூடிய வேறு சில கணக்குகள் :—

1. ஒரு செடி ஒவ்வொரு மாதமும் $3\frac{1}{2}$ அங். வளர்ந்தது. நாலு மாதத்தில் எவ்வளவு உயரம் இருந்தது?

2. ஒரு பையனுக்கு $2\frac{3}{4}$ கெஜம் வீதம் ஐந்து பையன்களுக்கு எவ்வளவு நீளத்துணி வேண்டும்?

3. ஒரு பெண் $3\frac{1}{4}$ கெஜம் நாடா வாங்கினாள்; அப்படியே 4 பெண்கள் எவ்வளவு வாங்கியிருப்பார்கள்?

4. ஒரு பையன் ஒரு அடி எடுத்துவைக்கும்போது $\frac{3}{4}$ கெஜம் தூரம் போகிறான்; ஏழு அடி எடுத்து வைத்தால், எவ்வளவு தூரம் போவான்?

5. ஒரு சக்கரம் ஒரு விசை சுழலும்போது $1\frac{1}{2}$ கெஜம் போகிறது; பத்து விசை சுழன்றால், எவ்வளவு தூரம் போகும்?

வகுத்தல் கணக்குகள் வெகு சுலபமாகவேயிருக்க வேண்டும்; கேள்வியிலாவது விடையிலாவது $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ என்னும் பின்னங்கள் மாத்திரம் வரும்படி பார்க்கவேண்டும்.

உதாரணம்: 5 இன் $\frac{1}{2}$ = $2\frac{1}{2}$.
5 இன் $\frac{1}{4}$ = ?

இந்தக் கணக்கைச் சிறுவர்கள் செய்வதற்கு முதலில் 5 இன் $\frac{1}{2}$ கண்டுபிடித்து, அதன்பின் அந்த $2\frac{1}{2}$ இன் $\frac{1}{2}$ கண்டுபிடிக்க; இப்படியாக $1\frac{1}{4}$ விடை வரும்.



$6\frac{3}{4}$ இன் $\frac{1}{3}$ = ?

இந்தக் கணக்கைச் சிறுவர்கள் செய்யக்கூடிய வழி:
6 இன் $\frac{1}{3}$ = 2; $\frac{3}{4}$ இன் $\frac{1}{3}$ = $\frac{1}{4}$; $6\frac{3}{4}$ இன் $\frac{1}{3}$ = $2\frac{1}{4}$.

இந்த மாதிரி சுலபமான கணக்குகளை சுலபமான வழியாய் சிறுவர்கள் செய்யப்பழகுவதுதான் பிற்பாடு பின்னக் கணக்குகளை யுக்தியோடு தாங்கள் செய்வது இன்னதென்று அறிந்து செய்வதற்கு அஸ்திவாரம். இப்பேர்ப்பட்ட சிறிய கணக்குகளைச் சிறுவர்கள் பிரியத்தோடு செய்ய வேண்டுமானால், அவர்கள் அநுபவத்தையொட்டிய வினாக் கணக்குகள் அநேகம் கொடுக்கவேண்டும். மேற்காட்டிய உதாரணங்களில் நீட்டலளவை சம்மந்தமான கணக்குகள் மாத்திரம் கொடுத்திருக்கிறது. அவைகளை மாதிரியாகக் கொண்டு நிறுத்தலளவை, முகத்தலளவை, காலஅளவை சம்மந்தமான சாதாரண கணக்குகள் சிறுவர்களுக்குக் கொடுத்தால், பிரியத்தோடு செய்வார்கள். இந்தப் பிரியத்தோடுகூட பின்னங்களின் அபிப்பிராயமும் அவர்கள் மனதில் புகுந்துவிடும். இனி, பின்னக் கணக்குகளை அவர்கள் அறியச் செய்வது வருத்தமில்லை.

## சிறுவர்க்கான விளையாட்டுகள்.

### (6)

### குள்ளநரியும் வேட்டைநாயும்.

ஆட்டமாடுகிறவர்கள் ஓரே வரிசையாய்க் கைகளைக் கோர்த்துக்கொண்டு நிற்க ஒரு பக்கத்தில் குள்ள நரியும் மறு பக்கத்தில் வேட்டை நாயும் எதிரெதிராய் நிற்க. வேட்டைநாய் குள்ளநரியைப் பிடிக்கவேண்டும். ஆனால் வரிசையிலுள்ளவர்கள் மத்தியில் கைகோர்க்காமல் திறந்த வெளியிருந்தால்மட்டும் ஒருபக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குப் போகலாம். அப்படி திறந்த வெளி உண்டாகும்படியாக சமயத்துக்குச் சமயம் யாதொரு அடையாளம் கொடுத்தவுடன் வரிசையிலுள்ளவர்கள் கைகளைப் பிரித்து எதிர்ப்பக்கம் திரும்பி மறுபடியும் கைகளைக் கோர்க்க வேண்டும். வேட்டைநாய் கெட்டிக்கார நாயாயிருந்தால் அதற்குள் நரியைப் பிடிக்கப் பார்க்கவேண்டும். அடிக்கடி

மாற்றி மாற்றிக் கைகோர்க்கச் செய்யவும். விளையாடுகிறவர்கள் ஜாஸ்தியாயிருந்தால் ஒன்றுக்கதிகமான காயும் கரியும் வைத்துக்கொள்ளலாம்.

### (7)

### கட்சிப் பந்தயம்.

பையன்களை இரு கட்சிகளாகப் பிரித்து ஒருவனுக்குப்பின் ஒருவனாய் இரண்டு வரிசையாக உட்காரச்செய்க. யாதொரு அடையாளம் கொடுத்தவுடனே ஒவ்வொரு வரிசையிலுமுள்ள முதல் பையன் எழும்பி, வலதுபக்கமாய்த் திரும்பி தன் வரிசையைச் சுற்றிக்கொண்டு வந்து தன் இடத்தில் உட்கார. அவன் உட்கார்ந்தவுடனே அடுத்த பையன் அப்படியே சுற்றிப்போய் தன் இடத்தில் வந்து உட்கார. இப்படியாய் எந்தக் கட்சியிலுள்ள பையன்கள் முதலில் சுற்றி முடிகிறார்களோ அந்தக் கட்சிக்கே ஜெயம்.

---

## சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தில் இடதுபக்கம் கொஞ்சம் இடம் விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

### I. புஷ்பங்களைப்பற்றி ஓர் வியாசம்.

(R. C. போதனா பாடசாலைச்சங்கப் பொதுக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.)

தாவரங்களில் விளங்கும் புஷ்பத்தைப்போல இலைகளாகிய இக்கூட்டத்தின் நடுவே துலங்கும், கனம் சபாநாயகரவர்கட்கும், மற்றும் என் ஆசிரியரவர்கட்கும், அங்கத்தவர்கட்கும் தலை வளைத்தனன்,



முடவன் கடலைத்தாண்ட நினைப்பதுபோல, நான் ஏற்றுக்கொண்ட இச்சிறு வியாசத்தின் நோக்கம்: புஷ்பம், பழம், விதை முதலியவைகளைப் பற்றினதாகும்.

தாவரங்கள் அழிந்துபோகாமல் மரமாகி விதையுண்டாகுவதற்கென்றே, தாவரங்களில் காலக்கிரமத்தில் தனிமையாய் சில அங்கங்கள் ஏற்படுகின்றன. இந்த உறுப்புகளைத்தான் நாம் புஷ்பங்கள் என்கிறோம். புஷ்பங்களெல்லாம் இலைகளின் மாறுபாடுகளே. இலைகளைப்போலவே, புஷ்பங்களுக்கும் காம்புண்டு. ஒரு காம்பில் பல இலைகளிருப்பதுபோல ஒரு காம்பில் பல புஷ்பங்களிருக்கின்றன. முதன் முதல் இலைகள் சிறு மொட்டாய்த் தோன்றுவதுபோல் புஷ்பங்களும் சிறு மொட்டாய்த் தோன்றுகின்றன. மொட்டுகள் மலர்ந்தபின் தோன்றுவனவாகிய, புறவிதழ்கள் பூவிதழ்கள் பெரும்பாலும் இலைகளை ஒத்திருக்கின்றன. இருந்தாலும் இவைகளை இலையென்று சொல்லாமல் பூவிதழ் என்பது முறை.

கிழங்கு, கன்று, கிளை முதலியவற்றாலும் தாவரவர்க்கம் விர்த்தியாகும். இதற்கு (Sexual reproduction) செக்ஸுவல் ரெப்ரடக்ஷன் என்று சொல்லுவார்கள். சாதாரணமாய் இவைகள் செயற்கையால் நடைபெறும்.

புஷ்பங்கள், தாவரங்களின் வர்க்க விர்த்திக்கான பாகமென்று மேலே சொல்லப்பட்டது. தாவரங்கள் அனேகமாய் வசந்தகாலத்தில் புஷ்பிக்கின்றன. சவந்தி போன்றவை பனிக்காலத்திலும், மல்லிகை போன்றவை மழைக்காலத்திலும், காட்டு விருக்ஷாதிகள் கோடையிலும், மரமல்லிகை பூவரசு போன்றவை எக்காலங்களிலும் புஷ்பிக்கின்றன. பொதுவாக சில இரவிலும், சில காலையிலும், சில மாலையிலும் புஷ்பிக்கும்.

புஷ்பங்கள் மிகவும் மிருதுவானவை. “கமல பதம்” என்று புஷ்பங்களை உபமானமாகக் கூறுவது இக்காரணத்தினாலேயே. புஷ்பங்களில் தாமரை போன்றவை பெரியவையாயும், மல்லிகை போன்றவை சிறியவையாயுமிருக்கின்றன. தவிர, செந்தாமரை, முருக்குபோன்றவை சிவப்பாகவும், பூசணி, பூவரசுபோன்றவை மஞ்சளாயும், மல்லிகை, நந்தியாவட்டை போன்றவை தூயவெண்மையாயும், விஷ்ணுகாந்தி போன்றவை நீலமாயுமிருக்கின்றன.

மற்றும் ஒவ்வொரினமும் வெவ்வேறான சுகந்தங்களையும் வீசுகின்றன. புஷ்பங்கள் இந்நிறம் வாசனை முதலியவைகளைக்கொண்டு எறும்பு முதல் சில பூச்சிகளையும், மனிதர்களையும் ஆகர்ஷிக்கின்றன. தாவரத்தில் புஷ்பங்கள் மா, வேம்பு போன்றவை குலை குலையாகவும், பூவரசு, கத்திரி போன்றவை தனித்தனியாகவும் காணப்படுகின்றன. தாவரத்தில் இலைக்கும் தண்டுக்கும் மத்தியிலாவது அல்லது கிளையின் நுனியிலாவது புஷ்பங்கள் குலையாகவும், தனிமையாகவும் காணப்படுகின்றன.

புஷ்பக் குலைகளை இரண்டு பெரும் பிரிவினைகளுக் குட்படுத்தலாம். ரசிமோஸ் ஓர் வகை, சைமோஸ் மற்றோர் வகை.

ரசிமோஸ் வகையில் புஷ்பக் கொத்தின் பிரதான தண்டு நீண்டுகொண்டே போகும். அப்போது அதில் சிறு கிளைத் தண்டுகள் உண்டாகி புஷ்பித்துவிடும். பிரதான தண்டின் நுனியில் புஷ்பங்கள் கடைசியில் மலர்கின்றன. இவ்வகையில் எல்லா புஷ்பங்களும் ஏக காலத்தில் புஷ்பிக்கிறதில்லை. இதனால் இவ்வகைக் கொத்துகளில் உள்ள புஷ்பங்களை குறிப்பாய் வரையறுக்கமுடியாது. உதாரணம்:—கடுகு, அவுரி போன்றவை. ஆனால் நாயுருவி போன்றவைகளில் பிரதான தண்டின் பக்கங்களில் அமைந்துள்ள புஷ்பங்களுக்குக் காம்பில்லை. கடுகு போன்றவைகளில் பிரதான தண்டின் அடிமுதல் நுனி வரையில் காம்புகளையுடைய புஷ்பங்கள் அமைந்திருக்கின்றன. சூரியகாந்திபோன்றவை பிரதான தண்டின் நுனியில் காம்பில்லாதனவாய் அமைந்திருக்கின்றன.

சைமோஸ் வகையில் பிரதான தண்டு குட்டையாயும், இரண்டு அல்லது மூன்று கிளைத் தண்டுகள் உடையதாயுமிருக்கும். நுனியிலுள்ள புஷ்பங்கள் முதலிலும் பக்க புஷ்பங்கள் பிறகும் மலர்கின்றன. இவை, மல்லிகை, அலரி போன்றவைகளில் தெளிவாய்த் தெரியும்.

ரசிமோஸ் வகையில் புஷ்பங்கள் மையத்தை நோக்கியும், சைமோஸ் வகையில் பக்கத்தை நோக்கியும் மலர்கின்றன. வேம்பு போன்றவைகளில் ஒரே தாவரத்தில் இவ்விரண்டு அமைப்புகளும் சேர்ந்து காணப்படும். சைமோஸ் வகையில், பழங்கள்



முதலில் பிரதான தண்டில் உண்டாவதால், கிளைத்தண்டுகளிலுள்ள புஷ்பங்கள் அவற்றை மறைத்துக்கொள்ளுகின்றன. தவிர, பிரதான தண்டிற்குக் கெடுதி நேரிட்டாலும், பக்கத் தண்டுகள் விருத்தியாவதால், புஷ்ப விருத்திக்கு அவ்வளவாய் தடை ஏற்படாது. ஆகையால் ரசிமோஸ் அமைப்பைவிட சைமோஸ் அமைப்பே மேலானது.

பெர்ன்ஸ் (Ferns), காளான், ஒருவகைப் பாசி இவ்வகைத் தாவரங்களில் புஷ்பங்களைக் காணமுடியாது.

புஷ்பங்கள் தந்நயங்கருதாது தன் வர்க்க விருத்திக்காக மாத்திரம் உழைத்து நசிக்கின்றனவென்பதைக் கவனிப்போம். இதற்கு புஷ்பங்களின் பாகங்கள் ஒவ்வொன்றையும் பிரித்துக் கொண்டு, ஒவ்வொன்றின் அமைப்பு வேலை முதலியவைகளைக் கவனிக்கவேண்டியதவசியம்.

புஷ்பத்தின் பாகங்கள்:—1. காம்பு. இது புஷ்பத்தை பிரகாண்டத்துடன் சம்பந்தப்படுத்தும் ஓர் பாகம். முந்திரி போன்றவைகளில் காம்புகள் சதைப்பற்றுள்ளதாக இருக்கும். தனித்த புஷ்பங்களின் காம்புகளுக்கு பெடிஸெல் (Pedicel) என்றும், மஞ்சரி அல்லது பூங்கொத்துகளிலுள்ள காம்புகளுக்கு பெடங்கிள் (Peduncle) என்றும் சொல்வார்கள்.

2. (Bract) ப்ராக்ட்:—இதை பூக்காம்பிலையென்றும் சொல்வதுண்டு. இவை கிண்ணத்திற்கு வெளிப்புறத்திலும், காம்பின் உச்சியிலும் சிறிய இலைபோல் காணப்படும். பூவரசு, பருத்தி, வாழை, தென்னை முதலியவைகளில் இவை நன்றாய்ப் புலப்படும். இவைகளை புஷ்பப் புச்சமென்றும் சொல்வார்கள்.

3. கிண்ணம்:—இது காம்பின் முனையிலும் புஷ்பத்தின் அடியிலுமிருக்கும். முதலில் இது பூமொட்டை மூடிக்கொண்டிருக்கும். மொட்டு அல்லது முகை வளர வளர கிண்ண ரூபத்தையடையும். இதை பூவரசில் பார்க்கலாம். ஊமத்தைபோன்றதில் நீண்டிருக்கும். சூர்யகாந்தி போன்றவைகளுக்கு இக்கிண்ணம் இருப்பதில்லை.

4. புறவிதழ்:—இவை கிண்ணங்களின் பிரிவினைகளே, இவைகளுக்கு ஸீப்பல்ஸ் (Sepals) என்று பெயர். இவை புஷ்பங்களின் அடிப்பாகத்தில் பச்சை நிறமாகவிருக்கும்.

5. பூவிதழ் அல்லது கொரோலா (Corolla):—இவை இரட்சக பத்திரம் அல்லது புறவிதழ்களுக்கு உட்பக்கமிருக்கும் பூவின் பாகம். இதன் பிரிவினைகள் ஒவ்வொன்றையும் பூவிதழ் அல்லது புஷ்பதளம் என்போம். பூவிதழ்களெல்லாம், பரங்கி, ஊமத்தை, மரமல்லிகை போன்றவைகளில் சேர்ந்தும்; பூவரசு, ரோஜா, தாமரைபோன்றவைகளில் தனித்தும் காணப்படுகின்றன. ஆனால் வெண்டை, பூவரசுபோன்றவைகளில், புஷ்பதளங்கள் ஒன்றையொன்று தழுவி நிற்கும். இத்தளங்கள் சேர்ந்து அல்லது பிரிந்திருந்தாலும், புகையிலை, உமத்தை, மல்லிகைபோன்றவை குழாய்போலவும், சூரியகாந்திபோன்றவை நாக்குப்போலவும், அவரை அகத்திபோன்றவை வண்ணாத்திப்பூச்சிபோலவும், மற்றும் சில வேறு பொருள்களைப்போலவும், பற்பல நிறம் பரிமாணம்பெற்றுமிருக்கின்றன.

6. பூந்தாள், அல்லது கேசரக்குழாய்:—புஷ்பத்தில் புஷ்ப தளங்களை விலக்கிப் பார்த்தால், சிறு கம்பிகள்போல் நீண்டு, தலையில் அல்லது உச்சியில் ஏதோ சிற்சிறு மூட்டைகளைச் சுமந்து நிற்பதுபோலக் காணப்படும். இவைகளை வெண்டை, பூவரசுபோன்றவைகளில் தெளிவாய்க் காணமுடியாது. இப்பூந்தாள் கல்வாழை போன்றதில் ஒன்றும், மல்லிகை போன்றதில் இரண்டும், புற்களில் மூன்றும், ஆடாதொடை போன்றதில் நான்கும், எருக்கு போன்றதில் ஐந்தும், தென்னை போன்றதில் ஆறும், அகத்திபோன்றதில் பத்தும், சதுர கள்ளிப்ரம்ம தண்டு போன்றவைகளில் பலவுமிருக்கும். அன்றியும் நெரிஞ்சி தாமரைபோன்றவைகளில் இப்பூந்தாள்கள் தனித்தும், அகத்தி போன்றதில் இரு பிளவாகவும், கிச்சிலிபோன்றவைகளில் பல பிரிவாகவுமிருக்கும். சாதாரணமாய் ஒற்றை இலைப்பருப்புத் தாவரங்களில் மூன்று அல்லது அதன் மடங்குகளாகவும், இரட்டை இலைப்பருப்புத் தாவரங்களில் நான்கு, ஐந்து அல்லது அதன் மடங்குகளாகவுமிருக்கும். அலரி எருக்கு போன்றவைகளில், புறவிதழ் பூவிதழ், பூந்தாள் முதலியவை ஒரே எண்ணிக்கையாக இருக்கும்.

7. மகரந்தப் பெட்டி, அல்லது பராகப்பை:—இவை பூந்தாள்களின் நுனியில் சிறு சிறு முடிச்சுகள்போல் காணப்படும்.



இந்தப் பைகளுக்குள் ஒவ்வொன்றிலும், மகரந்தப்பொடி அல்லது பூந்தாதணுக்கள், ஏராளமாயிருக்கின்றன. தாழம்பூவைத் தட்டினால் புகைவதுபோலிருக்கும். அது இப்பூந்தாதணுக்களாலேயே. இவ்வணுக்களைத் தொட்டால் கையில் ஒட்டிக்கொள்ளும். இவ்வணுக்கள் ஒவ்வொன்றும் அதி நுட்பமானவை. ஒவ்வோரணுவிலும் ஜீவப்பரம அணு அடங்கியிருக்கிறது. இவ்வணுக்களை, சூட்சம பீஜங்கள், அல்லது சூட்சம விதைகள் என்றும் சொல்வார்கள். இந்த சூட்சம பீஜங்களே புஷ்பத்தில் ஆண்பாகமாகும். பருத்தி ஊமத்தை, வேம்புபோன்ற தாவரங்களில், ஒரே புஷ்பத்தில் ஆண்பாகமும், பெண்பாகமும் சேர்ந்து காணப்படும். அதாவது, பூவின் எல்லாப் பாகங்களும் ஒரே தாவரத்தில் அல்லது ஒரே புஷ்பத்தில் காணப்படும். பரங்கி, சேம்பு, மக்காச்சோளம், ஆமணக்கு போன்ற தாவரங்களில் ஆண்பாகம் ஓர் புஷ்பத்திலும், பெண்பாகம் அதே தாவரத்தில் வேறோர் புஷ்பத்திலுமிருக்கும். பனை, பப்பாளி, கோவை, மிளகு போன்றவற்றில் ஆண்பூக்கள் ஓர் தாவரத்திலும், பெண் பூக்கள் அதேயினத்தில் மற்றோர் தாவரத்திலுமிருக்கும். ஆண்பாகம் மாத்திரமிருக்கும் தாவரங்கள் காய்ப்பதில்லை. பனை, பப்பாளி போன்ற தாவரங்களில் ஆண், பெண் இவ்விரண்டு பாகங்களும் ஒரே தாவரத்தில் சேர்ந்திராமல் தனித்துக் காணப்படுவதால் இவைகளை ஏகலிங்க தாவரங்களென்றும், பரங்கி, தென்னை, மக்காச்சோளம், ஆமணக்கு, சேம்புபோன்ற தாவரங்களில் ஒரே தாவரத்தில் (தனித்தனியாய்) ஆண், பெண் இரண்டு பாகங்களும் காணப்படுவதால் இவைகளை துவிலிங்க தாவரங்களென்றும் சொல்வார்கள்.

கர்ப்பகோசம் அல்லது அண்டகோசமென்பது, புஷ்பத்தின் நடுவிலிருக்கும் பாகம். ஒவ்வொன்றும் அண்டாசயம், கீலம், கீலாக்கரமென மூன்று பாகங்களையுடையன.

8. அண்டாசயம்:—கர்ப்பகோசத்தில் செம்புபோல் பருத்த அடிப்பாகத்திற்கு அண்டாசயம் என்று பெயர். அண்டாசயம் ஆவாரை, பூவரசு, வேளை முதலியவைகளைப்போல புஷ்பத்தின்மேலிருந்தால் மேல் அண்டாசயம் அல்லது அண்டாசயம் உச்சம் என்றும், பரங்கி, மாதுளை, சப்பாத்தி முதலியவைகளைப்

போல அண்டாசயம் புஷ்பத்தின் கீழிருந்தால் கீழ் அண்டாசயம் அல்லது அண்டாசயம் நீசம் என்றும் சொல்லப்படும். எருக்கு போன்றவற்றில் அண்டகோசம் இரண்டிருக்கும்.

9. அண்டம்.—இது அண்டாசயத்தினுள் மாபோன்றதில் ஒன்றும், எலுமிச்சைபோன்றதில் பலவுமிருக்கும்.

10. கீலம்:—இது அண்டாசயத்திலிருந்து உருண்டு நீண்டிருக்கும். சூர்யகாந்தியில் இருபிளவாகவும், எருக்கில் தனித்தனியாக இரண்டும் இருக்கும். ஆனால், நெல் சோளம் முதலியவைகளில் இக்கீலம் இரண்டாய்ப் பிரிந்து ஒவ்வொன்றும் பட்சிகளின் இறகுகளை ஒத்திருக்கும்.

11. கீலாக்கரம்:—இது கீலத்தின் நுனியிலுள்ளது. வெண்டை, பூவரசில் தெளிவாய்க் காணலாம். ஆமணக்கு சோளம் [illegible]களில் இப்படி தெளிவாய்க் காணமுடியாது.

S. அருள்தாஸ்.

## 11. விஷயக்கோத்து.

1. கடந்த [illegible] மாதத்திய பூங்கொத்து பக்கம் 156-ல் "விஷயக்கொத்து" என்னும் தலைப்பின் கீழுள்ள முதல் இலக்கத்திற்கண்ட கேள்விக்கு விடை "காலண்டர்" (Calendar) என்று சொல்லப்படும் தேதி காட்டும் குறிப்பாம்.

2. தூங்கும்போதுகூட பூனைக்கு வாசனையறியும் சக்தியுண்டாம்.

3. பட்சிகளில், பறக்கும்போதே பாடக்கூடியது "வானம்படி" ஒன்றேயாம்.

4. எறும்பு ஓடும்போது எவ்வளவு விரைவாய்க் கால் எடுத்துவைக்கிறதோ, அவ்வளவு திட்டமான வேகமாய் (அவைகள் எடுத்து வைப்பதுபோல் சீக்கிரமாய்) மனிதனும் கால் வீசி நடப்பானாகில் மணிக்கு 800 மைல் நடக்கக்கூடுமாம்.

5. சாதாரணமாய் 100-க்குப் பத்து மனிதர்களுக்குத்தான் கால்கள் இரண்டும் சகல விதத்திலும் ஒரே அளவுடையனவைகளாய் இருக்கின்றனவாம்.

P. AROKIAM,
*Teacher, St. Xavier's School,*
Mandalay.

161280

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.